# பகுதி III

## பகுதி III

# ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச்சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள்

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், சுற்றிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்கள்


| தொடர்பு எண் | | பக்கம் |
|---|---|---|
| | **வங்கி மேற்பார்வை** | |
| 1 | 2018இன் 01ஆம் இலக்க சுற்றறிக்கை: நாணயக் கடித வசதிகளின் வழங்கல் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் | 1 |
| 2 | 2018இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | 1 |
| 3 | 2018இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளை: வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை | 2 |
| 4 | 2018இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமித்தல் | 3 |
| 5 | 2018இன் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 10 |
| 6 | 2018இன் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிச்சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் | 10 |
| 7 | 2018இன் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 15 |
| 8 | 2018இன் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் | 15 |
| 9 | 2018இன் 02ஆம் இலக்க சுற்றிக்கை: ஏற்பு ஆவண நியதிகளின் மீதான இறக்குமதிகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | 16 |
| 10 | 2018இன் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் | 17 |
| 11 | 2018இன் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானங்கள்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம் | 17 |
| 12 | 2018இன் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிகர நிலையான நிதியிடல் விகிதம் | 18 |
| 13 | 2018இன் 09ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 18 |
| 14 | 2018இன் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமிப்பது தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 20 |
| 15 | 2018இன் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளை: வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை | 21 |
| 16 | 2018இன் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் : உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் | 21 |
| 17 | 2018இன் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: பாசல் IIIஇன் கீழ், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வய்ந்த வங்கிகளுக்கான முடுக்கி விகிதம் | 24 |

| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| 18 | 2018இன் 03ஆம் இலக்க சுற்றறிக்கை: தேசிய சேமிப்பு வங்கிக்காக பாசல் IIIஇன் கீழ் முடுக்கி விகிதத்தினை கணித்தல் | | 25 |
| 19 | 2018இன் 04ஆம் இலக்க சுற்றறிக்கை: இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது மீதான உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வழிகாட்டல்கள் | | 25 |
| | **உள்நாட்டுத் தொழிற்பாடுகள்** | | |
| 20 | “மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளர்” தொடர்பான அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 35/03/019/0026/001 | 33 |
| 21 | 2061/7ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது - 2018 மாச்சு மாதம் 05ஆந் திகதி திங்கட்கிழமை | இல. 2061/7 | 35 |
| 22 | லங்காசெட்டில் மீதான பத்திரங்களற்ற அரசாங்கப் பிணையங்களுக்கெதிரான நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி ஏற்பாட்டுடன் தொடர்புடைய தொழிற்படுத்தல் அறிவுறுத்தல் | 35/01/005/0006/36 | 47 |
| 23 | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தை நடவடிக்கைகள் | 35/03/021/0013/001 | 49 |
| 24 | மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் | 35/01/005/0010/20 | 49 |
| 25 | ஒதுக்குத் தேவைப்பாடுகள் | 35/01/005/0007/10 | 50 |
| 26 | உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் | 35/01/005/0010/21 | 51 |
| 27 | ஒதுக்குத் தேவைப்பாடுகள் | 35/01/005/0007/11 | 52 |
| 28 | ஒதுக்குத் தேவைப்பாடுகள் | 35/01/005/0007/12 | 53 |
| 29 | ஒதுக்குத் தேவைப்பாடுகள் | 35/01/005/0007/13 | 54 |
| 30 | உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | 35/01/005/0010/22 | 56 |
| 31 | அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளுக்கான நன்நடத்தைக் கோவை | | 56 |
| | **வெளிநாட்டுச் செலாவணி** | | |
| 32 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ்: 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க முற்பணக் கொடுப்பனவு நியதிகளில் (காசாக முற்பணம்) இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுவிக்கப்பட்ட பணிப்புரைகள் | | 60 |
| 33 | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ்: 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க உள்முக முதலீட்டுக் கணக்குகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள் | | 60 |
| 34 | 2063/12ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது - 2018ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19ஆந் திகதி திங்கட்கிழமை | இல. 2063/12 | 61 |
| | **நிதியியல் உளவறிதல்** | | |
| 35 | வழிகாட்டல் இல. 01/18: நிதியியல் நிறுவனங்களுக்கான பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான வழிகாட்டல்கள் | 037/05/002/0018/017 | 61 |
| 36 | வழிகாட்டல் இல. 02/2018: கசினோ மற்றும் சூதாட்ட இல்லங்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் இணங்குவிப்பு கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள் | 037/08/001/0005/017 | 69 |
| 37 | வழிகாட்டல் இல. 03/2018: உண்மைச் சொத்து, பெறுமதிமிக்க உலோகங்கள், பெறுமதிமிக்க மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்பு கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள் | 037/08/001/0006/018 | 78 |
| 38 | வழிகாட்டல் இல. 04/2018: நிதியியல் நிறுவனங்களுக்கான பயன்பெறும் சொத்துரிமையினை அடையாளம் காணுதல் மீதான வழிகாட்டல்கள் | 037/07/006/0004/018 | 89 |
| 39 | சுற்றறிக்கை இல. 01/18: இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களை நடத்துவதற்கான நடவடிக்கை முறை | 037/06/001/0001/016 | 99 |
| 40 | வழிகாட்டல் இல. 05/2018: 2017ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் (கொரிய சனநாயக மக்கள் குடியரசுடன் தொடர்பான தடைகள்) ஒழுங்குவிதிகளை நடைமுறைக்கிடுவது மீதான 2018ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வழிகாட்டல்கள் | 037/04/010/0002/017 | 99 |
| 41 | வழிகாட்டல் இல. 06/2018: 2018ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் மீதான நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள் | 037/03/011/0001/018 | 102 |

| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| 42 | வழிகாட்டல் இல. 07/18: 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் (ஈரான் மீதான தடைகள்) ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தல் மீதான 2018ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வழிகாட்டல்கள் | 037/04/010/0003/017 | 113 |


கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்


| | | |
|---|---|---|
| 43 | பணிப்புரை இல. 01/2018: பணி வழங்குனர்களூடாக இலத்திரனியல் வர்த்தக கொடுக்கல்வாங்கல்களை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு அட்டையைக் கையேற்றல் தொடர்பான பணிப்புரை | 116 |
| 44 | வழிகாட்டல் இல: 01/2018: செல்லிடத் தொலைபேசி பிரயோகங்கள் தொடர்பான கொடுப்பனவுக்காக குறைந்தபட்ச இணங்குவிப்பு நியமங்கள் மீதான வழிகாட்டல்கள் | 117 |
| 45 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 01/2018: 2018 ஏப்பிறல் 20ஆம் நாளன்று லங்காசெட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் | 122 |
| 46 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 02/2018: லங்கா முறைமை 2018 யூன் 13 மற்றும் 14ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | 122 |
| 47 | 2018இன் 1ஆம் இலக்க பொதுவான பணிப்புரை: பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொழிற்பாடுகள் | 123 |
| 48 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 03/2018: லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைத் திருத்தம் | 126 |
| 49 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 04/2018: 2018 செத்தெம்பர் 02 நாளன்று நேரடி சோதனை ஒன்றினை நடாத்துவதற்கு லங்காசெட்டில் முறைமையைத் திறத்தல் | 128 |
| 50 | பொதுவான பணிப்புரை 2018இன் 2ஆம் இலக்கம்: பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள் | 128 |
| 51 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 05/2018: லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளரொருவராக வரையறுக்கப்பட்ட சீன வங்கியினை நியமித்தல் | 131 |
| 52 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 06/2018: உள்நாட்டு நாணய கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுதல் | 131 |
| 53 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 07/2018: பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி மற்றும் லங்காபே பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியிலுள்ள பொறுப்பு முகாமையாளர் வரையறைகள் | 133 |
| 54 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 08/2018: 2018 நவெம்பர் 07ஆம் நாளன்று மு.ப. 07.30 மணிக்கு லங்கா செட்டில் முறைமையிலுள்ள வணிகத்திற்காக திறந்துவிடுதல் | 134 |
| 55 | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 09/2018: லங்கா செட்டில் முறைமை 2018 நவெம்பர் 28, 29, மற்றும் 30ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | 134 |


பிரதேச அபிவிருத்தி


| | | |
|---|---|---|
| 56 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்.: ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01: சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகாலம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 135 |
| 57 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எவ்/2018/01: சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகாலம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 148 |
| 58 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 (திருத்தம் - 01): சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4 பங்குடமை மூலதனம், 4 பங்குடமை பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலான திருத்தங்கள் | 160 |
| 59 | தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எப்/2018/01 (திருத்தம் - 01): சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய கடன் திட்டம், சுழலும் நிதிய பருவகால கடன் திட்டம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலான திருத்தங்கள் | 161 |

| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|

**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை**


| | | |
|---|---|---|
| 60 | 2018இன் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு | 163 |
| 61 | 2018இன் 02ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | 169 |
| 62 | 2018இன் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: மூலதன போதுமை தேவைப்பாடுகள் | 170 |
| 63 | 2018இன் 04ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு | 171 |
| 64 | 2018இன் 05ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 173 |
| 65 | 2018இன் 06ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 174 |
| 66 | 2018இன் 07ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல் | 174 |
| 67 | 2018இன் 08ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரை மீதான பணிப்புரைக்களுக்கான திருத்தம் | 178 |
| 68 | 2018இன் 09ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் | 179 |
| 69 | 2018இன் 10ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் | 179 |
| 70 | 2018இன் 01ஆம் இலக்க சுற்றறிக்கை: கொடுகடன் தரமிடல் | 180 |
| 71 | 2018இன் 01ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டப் பணிப்புரைகள்: நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு | 180 |
| 72 | 2018இன் 02ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | 186 |
| 73 | 2018இன் 03ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள்: மூலதன போதுமை தேவைப்பாடுகள் | 188 |
| 74 | 2018இன் 04ஆம் இலக்க: நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள்: அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு | 189 |
| 75 | 2018இன் 05ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 191 |
| 76 | 2018இன் 06ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 192 |
| 77 | 2018இன் 07ஆம் இலக்க நிதிகுத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் | 192 |
| 78 | 2018இன் 08ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்: நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் | 193 |

**எமது தொடர்பு: 02/17/500/0590/001** 2018 சனவரி 08

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**நாணயக் கடித வசதிகளின் வழங்கல் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்**

நிதி மற்றும் பொதுமக்கள் ஊடக அமைச்சின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், அனைத்து நிதியியல் நிறுவனங்களும், 2018இற்கான வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு 2018.01.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக நாணயக் கடித வசதிகளை வழங்குவதனை தவிர்த்துக் கொள்ளல் வேண்டுமென இலங்கை மத்திய வங்கிக்கு அறிவித்திருப்பது பற்றி தங்களின் கவனத்தினை ஈர்த்துக் கொள்வதற்காக இதனை எழுதுகின்றோம்.

**பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

பிரதிகள்:

1. பணிப்பாளர் நாயகம், வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், நிதி மற்றும் பொதுமக்கள் ஊடக அமைச்சு
2. கட்டுப்பாட்டாளர் நாயகம், இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
3. பணிப்பாளர் நாயகம், சுங்கத் திணைக்களம்
4 ஆணையாளர் நாயகம், உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களம்

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 01ஆம் இலக்கம்** 2018 பெப்புருவரி 8

**உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் கீழ் விடுவிக்கப்படுகின்றன.

கொள்வனவு நோக்கத்திற்காக அல்லது உந்து ஊர்திகளின் பயன்பாட்டிற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழான அதிகாரமளிப்பு

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) என்பனவற்றின் நியதிகளில் வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, நாணயச் சபைக்கு, அத்தகைய வங்கிகள் எந்தவொரு வியாபார அம்சங்கள் தொடர்பிலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதம்

2.1 2018 சனவரி 01ஆம் நாள் தொடக்கம், கொள்வனவு அல்லது ஊர்திகளின் பயன்பாட்டு நோக்கத்திற்காக ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(i) முதல் பதவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற பதிவுசெய்யப்படாத ஊர்திகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளைப் பொறுத்தவரையில்

| அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம் | | | |
|---|---|---|---|
| **ஊர்தி வகை** | **உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு** | **மின்னியல் ஊர்திகள்** | **ஏனையவை** |
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஇ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகு பாரவண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 70% | |

(ii) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

| | | |
|---|---|---|
| 3. உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விதிவிலக்கல்கள் | 3.1 | பணிப்புரை 2இன் வரையறைகள், சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிக்கு அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்காகக் கொள்வனவு செய்யப்படும் ஊர்தித் தொகுதிகளின் கொடுகடன் வசதிகளுக்கு பிரயோகிக்கப்படக்கூடாது. எது எப்படியிருப்பினும், அத்தகைய ஊர்திகளுக்கான நிதியிடல் முதல் பதிவுத் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் எந்தவொரு ஆளுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் மாற்றல் செய்யப்படக்கூடாது. |
| | 3.2 | இவ்வகையான ஊர்திகளுக்குக் கொடுகடன் வசதிகளை வழங்குகையில் உரிமம்பெற்ற வங்கிகள் உள்ளக வரையறைகளைக் கொண்டிருக்க வேண்டியதுடன் போதுமானளவு இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும். |
| 4. ஊர்திகளுக்கான ஏனைய கொடுகடன் வசதிகள் | 4.1 | மேலேயுள்ள பணிப்புரைகள் 2 மற்றும் 3 இற்கிணங்க வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தவிர உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக கொடுகடன் வசதிகளை உரிமம் பெற்ற வங்கியொன்று வழங்கக்கூடாது. |
| 5. விளக்கங்கள் | 5.1 | கொடுகடன் வசதிகள் என்பது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகள் மற்றும் ஊர்திகளின் கொள்வனவு அல்லது ஊர்திகளின் பயன்பாட்டிற்காக இறுதிப் பாவனையாளருக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் எனப் பொருள்படும். |
| | 5.2 | ஊர்தியின் பெறுமதியானது சந்தைப் பெறுமதியாகவிருத்தல் வேண்டும். ஊர்திகளின் விலை மதிப்பீட்டு நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வங்கிகள் பின்வருவனவற்றை பயன்படுத்தலாம்.<br>(i) புத்தம் புதிய ஊர்திகள் - அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களால் வழங்கப்படும் பெறுமதி<br>(ii) மறுசீரமைப்புச் செய்யப்பட்ட ஊர்திகள் - சுங்கத்தில் பரிசீலனையில் கொள்ளப்பட்ட பெறுமதி அல்லது விநியோகத்தரினால் வழங்கப்படும் விலைப்பட்டியல்<br>(iii) பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் - தொழில்சார் விலை மதிப்பீட்டாளர் ஒருவரினால் வழங்கப்படும் பெறுமதி |
| | 5.3 | விலை மதிப்பீடானது கடன் வசதி வழங்கப்படுகின்ற நேரத்தில் பெறப்பட்டுள்ளது என்பதனையும் அது உண்மையானதும் நியாயமானதுமான பெறுமதியினைத் தருகிறது என்பதனையும் உரிமம் பெற்ற வங்கிகள் உறுதி செய்தல் வேண்டும். |
| | 5.4 | 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊர்தித் தொகுதிகள் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊர்திகள் எனப்பொருள்படுதல் வேண்டும். |
| | 5.5 | 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது சுற்றுலாத் துறைக்கான பணியினை வழங்குவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் அல்லது ஏதேனும் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனி எனப் பொருள்படுதல் வேண்டும். |
| | 5.6 | 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது பொருள் அல்லது பணிகள் போக்குவரத்து தொழில் நோக்கத்திற்காக ஏதேனும் அரச அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் தொழில் நிறுவனம் எனப் பொருள்படுதல் வேண்டும். |
| 6. முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல் | 6.1 | பின்வரும் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.<br>(i) 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்.<br>(ii) 2017ஆம் ஆண்டின் 02ஆம் மற்றும் 04ஆம் இலக்க உந்து ஊர்திகள் மீதான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள். |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டக் கட்டளை 2018இன் 01ஆம் இலக்கம்** 2018 மாச்சு 14

**வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23, 25 மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ் அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை.

| | |
|---|---|
| 1. எடுத்துக்காட்டல் | இக்கட்டளையானது 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளையென எடுத்துக்காட்டப்படலாம். |

2. 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 07ஆம் திகதி விடுக்கப்பட்ட வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) 2000ஆம் ஆண்டுக் கட்டளையின் கிளைவாசகம் 5இற்கான திருத்தம்

2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 7ஆம் திகதியிடப்பட்ட வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) 2000ஆம் ஆண்டுக் கட்டளையின் கிளை வாசகம் 5 இற்கு பதிலீடாக பின்வரும் புதிய கிளைவாசகம் புகுத்தப்படுகிறது.

**வதிவற்றோர் கணக்கொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்கள்**

5. கரைகடந்த வங்கித்தொழில் பிரிவொன்றில் வதிவற்றோரினால் பேணப்படும் கணக்கொன்றில் எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும் பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்:

(அ) உள்முகப் பணவனுப்பல்களை வரவு வைத்தல்; அத்துடன்

(ஆ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுடன் விடயத்தினைப் பொறுத்து வரவு வைக்கலாம் அல்லது பற்று வைக்கலாம்.

3. இரத்துச் செய்தல்

பின்வருவன இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன:

(i) 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை.

(ii) 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 02ஆம் இலக்கம்** 2018 மே 24

**உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமித்தல்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76(ஜே)(1) என்பனவற்றினால் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், நாணயச் சபை, காத்திரமான முகவர் மேற்பார்வை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்துகின்ற குறிக்கோள்களுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் முகவர்களை நியமிப்பதற்காகப் பின்வரும் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

1. அதிகாரமளிப்பு

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) மற்றும் 76(ஜே)(1) என்பனவற்றின் நியதிகளில் வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, நாணயச் சபைக்கு, அத்தகைய வங்கிகள் எந்தவொரு வியாபார அம்சங்கள் தொடர்பிலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 12(1)(அ) மற்றும் 76(டி)(4)இன் நியதிகள் மற்றும் 76ஜே(1) பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் ஆகியவற்றிற்கிணங்க முகவர்களைத் திறப்பதற்கு/ மூடுவதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள வியாபாரத் தலங்களின் அமைவிடங்களை மாற்றுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கும் நாணயச் சபையின் ஒப்புதல் தேவைப்படுத்தப்பட்டிருக்கிறது.

2. வரைவிலக்கணங்கள்

2.1 உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கியென குறிப்பீடு செய்யப்படும்.

2.2 முகவர்/ துணை முகவர் என்பது உரிமம் பெற்ற வங்கியொன்றினால் அதன் உள்ளகக் கொள்கைகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாக இருப்பதுடன், இப்பணிப்புரைகளின் கீழ் உரிமம்பெற்ற வங்கியின் சார்பில் மட்டுப்படுத்தப்பட்டளவிலான வங்கித்தொழில் வியாபாரத்தினை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் வழங்கப்பட்டதொன்றுமாகும்.

2.3 முகவர்/ துணை முகவர் வங்கித்தொழில் வியாபாரம் என்பது இப்பணிப்புரைகளின் 6ஆவது பணிப்புரையின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறான மட்டுப்படுத்தப்பட்ட வங்கித்தொழில் வியாபாரமாக காணப்படுவதுடன் உரிமம்பெற்ற வங்கியின் சார்பில் முகவரொருவரினால்/ துணை முகவரொருவரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2.4 முகவர்/ துணை முகவர் “முகவர்” எனக் குறிப்பீடு செய்யப்படுவதுடன் முகவர்/ துணை முகவர் வங்கித்தொழில் வியாபாரமானது வேறு ஏதேனும் விதத்தில் குறிப்பிடப்பட்டாலொழிய “முகவர் வங்கித்தொழில் வியாபாரம்” எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

3. இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதல்

3.1 முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், உரிமம்பெற்ற வங்கியொன்று ஒப்புதலுக்கான கோரிக்கையினை மதிப்பிடுவதற்காக பின்வரும் தகவல்களை உள்ளடக்கிய கோரிக்கையொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையின் ஒப்புதல்.

(ii) முகவர் வங்கித்தொழில் வியாபாரம் தொடர்பான பின்வரும் கொள்கைகள்/ நடைமுறைகள் என்பன நடைமுறைக்கிடப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபையிடமிருந்தான உறுதிப்படுத்தலொன்று.

(அ) சபை ஒப்புதலளித்த முகவர் தெரிவுசெய்யும் கொள்கை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு

(ஆ) நுகர்வோர் பாதுகாப்பு பொறிமுறை

(இ) முகவர் முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு பொறிமுறை; அத்துடன்

(ஈ) தொழிற்பாட்டு நடைமுறைப்படுத்தல் மற்றும் கைநூல்.

(iii) முகவர்களின் நியமனம், உரிமம்பெற்ற வங்கியின் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முகவர் தெரிவுக் கொள்கை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட முகவர்களின் நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மை என்பனவற்றிற்கிணங்க இடம்பெற்றமையினை உறுதிப்படுத்தும் முதன்மை நிறைவேற்று அலுவலரின் சான்றுபடுத்தல்கள்.

(iv) முகவர்களின் விபரங்கள் (குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்):

(அ) முகவரின் பெயர்;

(ஆ) முன்மொழியப்பட்டுள்ள முகவர் வங்கித்தொழில் வியாபாரம்

(இ) வியாபார பதிவு இலக்கம்

(ஈ) பதிவுசெய்யப்பட்ட முகவரி மற்றும் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் (பதிவுசெய்யப்பட்ட முகவரியிலிருந்தும் அஞ்சல் முகவரி வேறுபட்டிருப்பின் அது உட்பட)

(உ) மைய வியாபார நடவடிக்கை

(ஊ) ஏனைய வியாபார நடவடிக்கைகள்

(எ) முகவரொருவருக்கான/ வாடிக்கையாளரொருவருக்கான/ நாளொன்றுக்கான வரையறை

(ஏ) பெயர்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் உட்பட (துணை முகவருக்கு ஏற்புடைத்தாகாது) பணிப்பாளர் சபை/ பங்காளர்கள் சொந்தக்காரரின் விபரங்கள்; அத்துடன்

(ஐ) இலங்கை மத்திய வங்கியினால் கேட்டுக் கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் தகவல்கள்.

3.2 உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பின்வருவனவற்றிற்கு (i) முகவர்களின் ஏதேனும் புதிய நியமனங்கள் (ii) எவரேனும் ஒப்புதலளிக்கப்பட்ட முகவர்களை இடைநிறுத்துதல் (iii) ஒப்புதலளிக்கப்பட்ட முகவரின் கிளைகளில் மேலதிக அதிகரிப்பு (iv) ஒப்புதலளிக்கப்பட்ட முகவரின் அமைவிடத்தில் மாற்றம் (v) ஒப்புதலளிக்கப்பட்ட முகவரின் வங்கித்தொழில் வியாபாரத்திற்கு ஏதேனும் திருத்தங்கள் என்பனவற்றிற்கு முன்னொப்புதல் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. நியாயமான காரணங்களுக்காக விதி விலக்கான சூழ்நிலைகளில், இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுக்காக விண்ணப்பித்த பின்பு உரிமம் பெற்ற வங்கியொன்று அதன் ஏதாவது முகவரை தற்காலிகமாக இடைநிறுத்த முடியும்; அவ்வாறான வேளைகளில் இலங்கை மத்திய வங்கியால் இடைநிறுத்த ஒப்புதலளிக்கப்பட்டிருக்கும்.

3.3 உரிமம்பெற்ற வங்கியொன்று முகவர்களின் நியமனம் தொடர்பில் ஒப்புதலுக்கான அதன் கோரிக்கையினை காலாண்டின் முதல் பத்து வேலைநாட்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. உரிமம்பெற்ற வங்கியின் பொறுப்புக்கள்

4.1 உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபை:

(i) முகவர்/ துணை முகவர் வங்கித்தொழில் வியாபாரங்கள் இரண்டின் தொடர்பிலும் இப்பணிப்புரைகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்தல்;

(ii) உரிமம் பெற்ற வங்கிகளினால் முகவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள அவசியமான ஏற்பாடுகளையும் இப்பணிப்புரைகளின் இணங்குவிப்பிற்காக முகவரினால் துணை முகவருடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையினையும் உறுதிப்படுத்துதல்;

(iii) முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை நடத்துவது தொடர்பில் கொள்கைகள் நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை வடிவமைத்தல்;

(iv) முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு முகவர்கள் போதுமான வளங்களையும் நிபுணத்துவத்தையும் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தல்;

(v) முகவர் வங்கித்தொழில் வியாபாரத்துடன் இணைந்து காணப்படும் அனைத்து இடர்நேர்வுகளும் அடையாளம் காணப்படுகின்றன, ஆவணப்படுத்தப்பட்டுள்ளன, தணிக்கப்பட்டுள்ளன, முகாமைப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்;

(vi) நுகர்வோரைப் பாதுகாப்பதற்கான முறைமைகளையும் முறையீட்டு வழிமுறைகளையும் முகவர் வங்கித்தொழில் வியாபாரத்திற்கான நிவாரணப் பொறிமுறைகளையும் நிறுவுதல்;

(vii) உரிமம் பெற்ற வங்கிகளின் சார்பில் கடமையாற்றும் முகவர்களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளினது முகவர்களின் அனைத்து நடவடிக்கைகள் மற்றும் விலக்கல்களுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல்; அத்துடன்

(viii) உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனியுங்கள் விதிகள், பணம் தூயதாக்கலை ஒழித்தல் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடலை ஒழித்தல் மீதான விதிகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கியின் இது தொடர்பான உள்ளக விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

4.2 மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, உரிமம்பெற்ற வங்கிகள்:

(i) அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு முகவர் வங்கித்தொழில் வியாபார ஏற்பாடுகளுக்கு முகவர்களைப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பில் வெளிப்படையான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட ஆவணப்படுத்தப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்;

(ii) ஆண்டிற்கு இரு தடவை முகவர்களின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை மதிப்பீடு செய்து கொள்ள வேண்டியதுடன் முகவர்களைத் தொடர்வது பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களையும் எடுத்தல் வேண்டும்;

(iii) தேவையானவாறு தொழிற்பாட்டு கைநூல்களை முகவர்களுக்கு வழங்க வேண்டியதுடன் வாடிக்கையாளர்களுக்கு வங்கித்தொழில் முகவர் வியாபாரங்களைச் சரியான முறையில் வழங்குவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

(iv) நியமிக்கப்பட்ட முகவர்களின் இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலை/ முகவர்களின் தரவுத் தளத்தினை குறைந்தபட்சம் கீழே தரப்பட்டுள்ளவை உட்பட தொடர்பான அனைத்து விபரங்களையும் பேண வேண்டியதுடன் அவ்விபரங்களை உரிமம்பெற்ற வங்கியின் வெப்தளத்திலும் வெளியிடுதல் வேண்டும்:

(அ) முகவரின் பெயர்;

(ஆ) வியாபாரப் பதிவு இலக்கம்;

(இ) பௌதீக ரீதியான அமைவிடம்/ முகவரின் முகவரி;

(ஈ) முகவரின் தொடர்பு இலக்கம்; அத்துடன்

(உ) உரிமம்பெற்ற வங்கியின் சார்பில் வழங்கப்பட்ட முகவர் வங்கித்தொழில் வியாபாரம்.

5. இடர்நேர்வு முகாமைத்துவம்

5.1 உரிமம்பெற்ற வங்கிகள்:

(i) கொடுகடன் இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வு, சட்ட இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, புகழினைப் பாதிப்பது தொடர்பான இடர்நேர்வு, தொழில்நுட்ப இடர்நேர்வு மற்றும் இணங்குவிப்பு இடர்நேர்வு என்பன உள்ளிட்ட அனைத்து இடர்நேர்வுகளையும் முகாமைப்படுத்தல்;

(ii) முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை தற்பொழுது இடம்பெற்றுவரும் அடிப்படையில் போதுமானளவிற்குத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகளுக்கு முகவர்கள் இணங்கியொழுகாமையினை உடனடியாகக் கட்டுப்படுத்தும் விதத்தில் மேற்பார்வை செய்வதற்கும் ஏற்றவிதத்தில் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் முறைமைகளையும் ஆளணியினரையும் நடைமுறைக்கிடுதல்;

(iii) உள்ளகக் கணக்காய்வுகளை நடத்துவதன் மூலமும் வெளிவாரி கணக்காய்வுகளினூடாகவும் கட்டுப்பாடுகளின் போதுமைத்தன்மையை மதிப்பிடல்;

(iv) உள்ளக மற்றும் வெளிப்புற அச்சுறுத்தல்களிலிருந்தான தகவல்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முகவர்கள் பொருத்தமான பாதுகாப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தல்;

(v) உரிமம் பெற்ற வங்கியின் சேமிப்பி/ முறைமை/ பணிமனை தவிர்ந்த ஏதேனும் சேமிப்பி/ முறைமை/ பணிமனைகளில் வாடிக்கையாளர் தொடர்பான உணர்வுபூர்வமான ஏதேனும் தரவுகள் சேமிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தல்; உணர்வுபூர்வமான தரவுகள் வாடிக்கையாளர் பெயர், கணக்கு விபரங்கள், பற்று/ வரவு அட்டை விபரங்கள் மற்றும் ஏனைய அனைத்து இரகசியமான தரவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன; எனினும் இவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை;

(vi) மேலேயுள்ள (v) இனை உறுதிப்படுத்தாமைக்கான நியாயமான காரணங்களுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காய்வாளரிடமிருந்து முகவர் வங்கித்தொழில் வியாபாரம் தொடர்பாக முகவரின் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பில் பெற்றுக்கொண்ட சான்றுபடுத்தலுடன் விதிவிலக்கான சூழ்நிலையொன்றில் (முகவர்களுக்கு மாத்திரமே ஏற்புடைத்தாகும் துணை முகவர்களுக்கல்ல) மத்திய வங்கியின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல் மேலும் தெரிவுசெய்யப்பட்ட தரப்பினிடமிருந்து உணர்வுபூர்வமான தரவினைப் பாதுகாப்பதற்கு குறிப்பிட்ட தரப்பினருடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு முன்னதாக வாடிக்கையாளர்களிடமிருந்து அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல்;

(vii) முகவர்களின் கொடுகடன் நம்பகத்தன்மை பற்றிய உரிய மதிப்பீடுகளை மேற்கொள்வதுடன் மதிப்பீடுகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் முகவர் வங்கித்தொழில் வியாபாரத்திற்கான வரையறை அமைப்புக்களையும் (நாள் வரையறைகள், வாடிக்கையாளர் வரையறைகள், முகவர் வரையறைகள்) நிர்ணயித்தல்; அத்துடன்

(viii) வாடிக்கையாளர்களுக்கு தடங்கலற்ற முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு தடங்கலற்ற வியாபாரத் திட்டமொன்றினை அபிவிருத்தி செய்தல்.

6. அனுமதிக்கப்பட்ட வங்கித்தொழில் வியாபாரம்

6.1 முகவர்கள் பின்வரும் வங்கித்தொழில் சாதனங்கள்/ பணிகளை உரிமம் பெற்ற வங்கியின் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே வழங்குதல் வேண்டும்.

(i) வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(ii) வைப்புக்களை மீளப்பெறல்;

(iii) கடன் மீள்செலுத்தல்களைப் பெறுதல்;

(iv) கொடுகடன் அட்டைக் கொடுப்பனவுகளைப் பெறல்;

(v) பொதுவசதிகள் பட்டியல் கொடுப்பனவுகளை வசதிப்படுத்தல்;

(vi) கணக்கு மீதிக் கோரிக்கைகள்;

(vii) அதே உரிமம்பெற்ற வங்கிகளுக்குள் நிதிகளை மாற்றல் செய்தல்;

(viii) உள்ளக பணவனுப்பல்களைப் பகிர்ந்தளித்தல் (பணிப்புரை 9.1(vii) பிரயோகிக்கப்படக்கூடாது; அத்துடன்

(ix) இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான வேறேதேனும் நடவடிக்கை.

6.2 உரிமம்பெற்ற வங்கியின் சார்பில் மூன்றாந்தரப்பினரால் காசு விநியோக நடவடிக்கைகள் கையாளப்படுகையில், அத்தகைய மூன்றாந்தரப்பினர் காசினைச் சேகரிப்பதற்கு அல்லது காசினை விநியோகிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கியின் வாடிக்கையாளரைச் சந்திப்பது பணிப்புரை 6.1(ix)இன் கீழேயே நடைபெற வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள் அனைத்தையுமுள்ளடக்கிய காப்புறுதிக் கொள்கையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் உரிமம்பெற்ற வங்கி காசு சேகரிப்பு/ விநியோகம் மற்றும் மூன்றாந்தரப்பின் நிலவறையிலுள்ள களஞ்சியம் ஆகிய முழுச் செயன்முறைகளையும் உள்ளடக்கிய ஏதேனும் இடர்நேர்வுகள் மீதான காப்புறுதியினை கோரக்கூடியதாக இருத்தல் வேண்டும். பணிப்புரை 9.1(vii) அத்தகைய நடவடிக்கைகளுக்காக பிரயோகிக்கப்படக்கூடாது.

7. முகவர்களைத் தெரிவுசெய்தல்

7.1 உரிமம்பெற்ற வங்கி முகவர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்வதற்கு முன்னதாக முகவர்களின் பொருத்தமான தன்மை பற்றித் தீர்மானிப்பதற்கு பொறுப்புடையதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் குறைந்தபட்சம் பணிப்புரை 7.2இல் உள்ள தெரிவுப் பிரமாணத்தினையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

7.2 உரிமம்பெற்ற வங்கி பின்வருவன உட்பட, மதிப்பீடுகளையும் நெருக்கமான கவனிப்பினையும் (உங்கள் முகவரைத் தெரிந்து கொள்ளுங்கள்) மேற்கொள்ளுதல் வேண்டும்:

(i) அதன் வியாபார நடத்தையில் நேர்மையான தன்மையினையும் தொழில்சார் நிபுணத்துவ நியமங்களையும் எடுத்துக்காட்டுதல்;

(ii) பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் வழிமுறைகளை ஒழித்தல், பதிவேடுகளைப் பேணுதல், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு வழிமுறைகள் என்பனவற்றைக் காத்திரமான விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு உதவியளிக்கும் விதத்தில் போதுமான மூலவளங்களை உடமையில் வைத்திருத்தல்;

(iii) முகவர்கள் ஏதேனும் சட்டத்திற்கு மாறாக/ ஒழுக்கவியலற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தல்;

(iv) உயர் தரத்திலான முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்குரிய அறிவினையும் தகுதியினையும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(v) முகவர் வங்கித்தொழில் வியாபாரத்துடன் தொடர்பான அனைத்து இடர்நேர்வுகளையும் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலை எடுத்துக்காட்டுதல்.

7.3 உரிமம்பெற்ற வங்கிகள், வியாபாரப் பதிவு, நிரந்தர வியாபார பணிமனை மற்றும் நிறுவப்பட்ட மைய வியாபாரம் என்பனவற்றைக் கொண்டுள்ள முகவர்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

7.4 பல் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு முகவர்கள் முகவர் வங்கித்தொழில் வியாபாரங்களை வழங்கலாம் என்பதுடன் வேறுபட்ட வங்கிகளுடனான கொடுக்கல்வாங்கல்களை முகாமைப்படுத்துவதற்கான இயலாற்றலை முகவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியுடனும் தனித்தனியான ஒப்பந்தங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.5 முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு இன்னொரு உரிமம்பெற்ற வங்கியுடன் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கும் முகவருடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள எதிர்பார்க்கும் உரிமம்பெற்ற வங்கி வேறுபட்ட வங்கிகளுடனான கொடுக்கல்வாங்கல்களை முகாமைப்படுத்துவதற்கான இயலாற்றலை முகவர்கள் கொண்டிருக்கின்றார்களா என்பதனை மதிப்பிடுதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கி, ஒப்புதலளிக்கும் நேரத்தில் தெரிவுசெய்யப்பட்ட முகவர்களின் குவிந்த இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்யும்.

7.6 முகவர்களுடனான உடன்படிக்கை, குறிப்பாக முகவர்கள், உரிமம்பெற்ற வங்கிகளின் சார்பில் அவர்களினால் வழங்கப்பட்ட முகவர் வங்கித்தொழில் வியாபாரத்திற்காக வாடிக்கையாளர்களிடமிருந்து ஏதேனும் கட்டணத்தினை விதிப்பதிலிருந்தும் தடை செய்வதாக இருத்தல் வேண்டும்.

8. மேற்பார்வை

8.1 இலங்கை மத்திய வங்கி, உரிமம்பெற்ற வங்கி இப்பணிப்புரைகளுக்கும் பின்வருவனவற்றிற்கும் இணங்கியொழுகுவதனைக் கண்காணிக்கும்.

(i) அவசியமானவை எனக் கருதப்படக்கூடிய ஏதேனும் முகவருடன் தொடர்பான ஏதேனும் தகவல்களை உரிமம்பெற்ற வங்கியிடமிருந்து கோருவதற்கு

(ii) தேவையேற்படுமிடத்து, முகவர்களின் ஏடுகளையும் பணிமனைகளையும் பரிசோதிப்பதற்கு

(iii) அவசியமானவை எனக் கருதுமிடத்து முகவர் ஒப்பந்தத்தினை முடிவுறுத்தப் பணிப்பதற்கு

(iv) பொருத்தமானவிடத்து முகவர்களுக்கெதிராக அல்லது அவர்களுக்குச் பகுதியாக ஏதேனும் நடவடிக்கைகளை அல்லது வழிமுறைகளை எடுப்பதற்கு உரிமம்பெற்ற வங்கியினைப் பணிப்பதற்கு

(v) முகவர்களின் நடத்தையிலிருந்து தோன்றக்கூடுமெனக் கருதப்படும் நடவடிக்கைகளுக்கு ஏதேனும் நிவாரண நடவடிக்கைகள் பொருத்தமானது எனக் காணுகின்றவிடத்து நடவடிக்கை எடுப்பதற்கு உரிமம்பெற்ற வங்கியினைப் பணிப்பதற்கு

9. நுகர்வோர் பாதுகாப்பு

9.1 உரிமம்பெற்ற வங்கி பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

(i) முகவரினால் வாடிக்கையாளரின் தகவல்கள் இரகசியமான முறையில் பாதுகாக்கப்படுவதனை;

(ii) முகவர்களின் தற்போதைய பட்டியல் மற்றும் முகவர்களினூடாக வழங்கப்படும் முகவர் வங்கித்தொழிலையும் சரியான விதத்தில் வாடிக்கையாளர் அடையாளம் காணும் வகையில் பொறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையினையும்;

(iii) சாதனங்களின் தன்மை மற்றும் அதன் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதாயும்;

(iv) மும்மொழிகளான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வாடிக்கையாளர் விரும்பும் மொழியில் முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை வழங்குவதனையும்;

(v) கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு முன்னதாக, ஏற்புடைத்தானவிடத்து வாடிக்கையாளர் தரவினை மைய வங்கித்தொழில் முறைமைத் தரவுடன் செல்லுபடியாக்குவதனையும்;

(vi) முகவர்களின் சாதனங்கள்/ பணிகளை வாங்குமாறு வாடிக்கையாளர்கள் முறையற்ற விதத்தில் தூண்டப்படவில்லை என்பதனையும்;

(vii) முகவரின் பணிமனையில் பின்வருவன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்:

(அ) இது பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமம்பெற்ற வங்கியின் பெயரும் வங்கியின் இலட்சினையும்;

(ஆ) முகவரினால் வழங்கப்படும் வங்கித்தொழில் வியாபாரத்தின் பட்டியல்;

(இ) உரிமம்பெற்ற வங்கியின் முறைப்பாடுகளைக் கையாளும் பொறுப்பு வாய்ந்த அலுவலரை வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளக்கூடிய பிரத்தியேக தொலைபேசி; அத்துடன்

(ஈ) முகவர் அவரின் வங்கித்தொழில் வியாபாரம் பற்றி அறிக்கையளிக்க வேண்டிய உரிமம்பெற்ற வங்கியின் பெயர், தொலைபேசி இலக்கம் மற்றும் அமைவிடத்தினையும்;

(viii) கணக்கொன்றிற்கு அல்லது கணக்கிலிருந்தான பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளுடன் தொடர்பான அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் அதேநேரத்தில் இடம்பெறுவதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும். அதேநேரத்திற்குப் புறம்பாகக் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், நேரம் தாமதமாவது பற்றி வாடிக்கையாளருக்கு அறிவித்தல் வேண்டும்;

(ix) முகவர்களினூடாக மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் அச்சிடப்பட்ட/ டிஜிட்டல் பற்றுச்சீட்டுக்கள்/ குறுஞ்செய்திப் பணிகளை வழங்குதல்; அத்துடன்

(x) உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் தொடர்பான (இணைப்பு I) 2011ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை 5இற்கு இணங்கியொழுகுதல்.

| | | | |
|---|---|---|---|
| 10. | முறையீட்டு வழிமுறைகளும் நிவாரணப் பொறிமுறையும் | 10.1 | உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனத்தின் (இணைப்பு II) மீதான 2011ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 6ஆவது பணிப்புரையின் நியதிகளின்படி உரிமம்பெற்ற வங்கி முறையீட்டு வழிமுறைகளையும் நிவாரணப் பொறிமுறையினையும் நிறுவுதல் வேண்டுமென்பதுடன் இப்பொறிமுறை வாடிக்கையாளர்களுக்குச் சரியான முறையில் தொடர்பூட்டப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| | | 10.2 | முறையீடுகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மாத்திரமே அறிவிக்கப்பட்டு அவ்வங்கியிலேயே பேணப்பட வேண்டுமென்பதுடன் முகவர்கள் உரிமம்பெற்ற வங்கிகளின் சார்பில் ஏதேனும் முறையீடுகளைக் கையாள அனுமதிக்கப்படமாட்டா. |
| | | 10.3 | உரிமம்பெற்ற வங்கி அதன் வாடிக்கையாளர்கள் முறையீடுகளைத் தெரிவிப்பதற்கு வசதியாகப் பிரத்தியேகமான தொலைபேசி இணைப்புக்களை வழங்குதல் வேண்டும். முகவர்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் அடையாளம் காணவும் இதன் பௌதீக அமைவிடம் மற்றும் முகவர் வங்கித்தொழிலின் வியாபாரத்தின் செல்லுபடியாகும்தன்மை என்பனவற்றை உரிமம்பெற்ற வங்கிகளுடன் சரிபார்த்துக் கொள்வதற்காக வாடிக்கையாளர்கள் இத்தொலைபேசி இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். |
| | | 10.4 | முகவர்களினூடாக முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை நிறைவேற்றுகையில் தேவையேற்படுமிடத்து, நியாயமான காரணங்களின் கீழ் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை இரத்துச் செய்கின்ற அளவிற்கு வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்கள் பாதுகாக்கப்படுவதனை உரிமம் பெற்ற வங்கி உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |
| 11. | இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடல் | 11.1 | உரிமம்பெற்ற வங்கி, முகவர் வங்கித்தொழில் வியாபாரம் மீதான அறிக்கையொன்றினைக் காலாண்டு அடிப்படையில் இணைப்பு III இல் உள்ளவாறு தயாரித்தல் வேண்டும். |
| | | 11.2 | மத்திய வங்கிக்கு அறிக்கையிடுவதற்காக அத்தகைய விபரங்கள் கோரிக்கையின் அடிப்படையில் எந்த நேரத்திலும் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும். |
| 12. | பணிப்புரைக்கு இணங்கியொழுகுதல் | 12.1 | உரிமம்பெற்ற வங்கி ஒப்புதல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் இலங்கை மத்திய வங்கி ஒப்புதலளித்த முகவரினூடாக வங்கித்தொழில் வியாபாரத்தினை ஆரம்பித்தல் வேண்டும். ஒப்புதலளிக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்குப் பின்னர் முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை ஆரம்பிக்க எந்தவொரு முகவரும் அனுமதிக்கப்படமாட்டார். |
| | | 12.2 | முகவர்களின் நியமனம் தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. ஏற்கனவே இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட முகவர்கள் இப்பணிப்புரைகள் நடைமுறைக்கிடப்பட்டதிலிருந்து 6 மாதங்களுக்குள் இணங்கியொழுக வேண்டுமென்பதுடன் இணங்குவிப்பு தொடர்பில் மத்திய வங்கிக்கு அறிவிக்கவும் வேண்டும். |
| | | 12.3 | மேலே பணிப்புரை 6.2இல் குறித்துரைக்கப்பட்ட காசு விநியோக ஒழுங்குகளில் தற்போது ஈடுபட்டுள்ள உரிமம்பெற்ற வங்கிகள் இப்பணிப்புரையின் கீழ் 6 மாதங்களுக்குள் இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இக்காசு விநியோக ஒழுங்குமுறைகள் வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் முறையின் கீழ் உள்ளடக்கப்படவில்லை. |
| | | 12.4 | அவற்றின் குழுமக் கம்பனிகளை முகவர்களாக நியமிக்கின்ற உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் குழுமக் கம்பனிகள் இப்பணிப்புரையினைப் பின்பற்றுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**இணைப்பு I**

**உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் தொடர்பான 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை**

**முகவர்களிடமிருந்தான பாதுகாப்பு**

**"முகவர்கள் பின்வருவனவற்றுள் எதனை மேற்கொள்வதிலிருந்தும் விலகியிருத்தல் வேண்டும்:**

(அ) வாடிக்கையாளர்களைத் தொந்தரவு செய்தல்.

(ஆ) அவமரியாதையான படுகடன் சேகரிப்பு நடைமுறைகளைப் பயன்படுத்தல்.

(இ) வாடிக்கையாளரின் தகவல்களை ஏனையோருக்கு வெளிப்படுத்தல்.

(ஈ) சாதனம்/ பணிகள் பற்றி பிழையான அல்லது தவறாக வழிநடத்துகின்ற தகவல்களை வழங்குதல்.

(உ) வங்கியின் சாதனங்கள்/ பணிகளை வாடிக்கையாளர் அல்லது பொதுமக்கள் வாங்குவதற்கு அல்லது அவற்றில் மக்கள் ஈடுபாடு கொள்வதற்கு முறையற்ற விதத்தில் செல்வாக்குச் செலுத்துதல்.

(ஊ) வங்கிக்கு வெளியே ஏதாவதொரு பாதுகாப்பு ஆவணத்தில் கையொப்பத்தைப் பெறுவதில் ஈடுபடுதல்."

**இணைப்பு II**

**உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் தொடர்பான 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை**

**முறையீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிவாரணம்**

"வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை வெளிப்படையாகவும் வினைத்திறனுடனும் தீர்த்து வைக்கப்படுவதற்கு உரிமை கொண்டுள்ளார்கள். இதன் பிரகாரம் உரிமம் பெற்ற வங்கிகள்:

(அ) வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையிலிருக்கும் முரண்பாட்டினை விரைவில் நிவர்த்தி செய்வதற்கும், குறுங்காலத்திற்குள் முறைப்பாடுகளை கையாளுவதற்கும், வாடிக்கையாளர்கள் திருப்தியாகாதவிடத்தில் முறைப்பாடுகளை முன்னெடுத்து வழிநடத்துவதற்கும் மற்றும் தவறாக ஏதாவது கட்டணம் அறவிடப்பட்டிருப்பின் மீளச் செலுத்தவும் விரைவானதும், வினைத்திறன் கொண்டதுமான தீர்வினை அமுல்படுத்தல் வேண்டும்;

(ஆ) முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக எழுத்து மூலமான முறைமையை வைத்திருப்பதுடன் அம் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்;

(இ) நியாயமான குறுகிய காலத்திற்குள் முறையீடு பெற்றுக் கொள்ளப்பட்டமையினை எழுத்து மூலமாக தெரியப்படுத்துவதுடன், முறையீடு தொடர்பாக கையாளப்படும் தீர்வு முறை மற்றும் முறையீட்டை கையாளும் அலுவலர்/அலுவலர்களின் தொடர்பு விபரங்களையும் முறையீட்டாளர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்;

(ஈ) வாய்மூலம் அல்லது எழுத்துமூலம் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுப்பதுடன் கட்டாயமாக எழுத்துமூலம் மட்டும்தான் முறைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்தலாகாது;

(உ) செயற்பாட்டு இடர்நேர்வுகளுடன் தொடர்புபட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் கடமையின் ஒரு பகுதியாக முறைப்பாடுகள் மற்றும் தீர்வுச் செயற்பாடுகள் தொடர்பாக முகாமைத்துவ தகவல் முறைமையை நிறுவுதல் வேண்டும்;

(ஊ) முறைப்பாடானது திருப்தியாக தீர்வு காணப்படாதவிடத்தில் "நிதிசார் குறைகேள் அதிகாரி" அல்லது நீதிமன்றங்கள் ஊடான கட்டுப்படியான மற்றும் தகுதியான போக்கிடத்தை நாடுவதற்கு வாடிக்கையாளருக்கு ஆலோசனை கூறுதல் வேண்டும்."

**இணைப்பு III**

**உரிமம்பெற்ற வங்கியினால் மேற்கொள்ளப்படும் முகவர் வங்கித்தொழில் மீதான அறிக்கை**

1. **வங்கியின் பெயர்:**
2. **முகவர்கள்/ துணை முகவர்களின் விபரங்கள்**

| | காலாண்டுப் பகுதியில் | | காலாண்டு இறுதியிலுள்ளவாறு | |
|---|---|---|---|---|
| | முகவர்கள் | துணை முகவர்கள் | முகவர்கள் | துணை முகவர்கள் |
| வழங்கப்பட்ட ஒப்புதல்களின் எண்ணிக்கை | | | | |
| இ.ம.வங்கியின் ஒப்புதல் திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை தொடங்கிய முகவர்களின் எண்ணிக்கை | | | | |
| இ.ம.வங்கியின் ஒப்புதல் திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை தொடங்குவதற்குத் தவறிய முகவர்களின் எண்ணிக்கை | | | | |
| இ.ம.வங்கியின் ஒப்புதல் காலம் கடப்பதற்கு முன்னதாக முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கு எஞ்சியுள்ள முகவர்களின் எண்ணிக்கை | | | | |
| இடைநிறுத்திக் கொண்ட முகவர்களின் எண்ணிக்கை | | | | |

3. **காலாண்டு இறுதியிலுள்ளவாறு முகவர்கள்/ துணை முகவர்களின் தொழிற்பாடு தொடர்பான விபரங்கள்**
   - பெயர்
   - வியாபாரப் பதிவு எண்
   - பௌதீக அமைவிடம்/ முகவரி
   - தொடர்பு இலக்கம்
   - வழங்கப்பட்ட முகவர் வங்கித்தொழில் வியாபாரம்
4. **செயலாற்ற மீளாய்வு**

| வகை | கொடுக்கல்வாங்கல்கள் (காலாண்டுப் பகுதியில்) | |
|---|---|---|
| | கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ.) |
| (i) வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் | | |
| (ii) வைப்புக்களை மீளப்பெறுதல் | | |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கடன் மீள்கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் | | |
| (iv) | கொடுகடன் அட்டைக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் | | |
| (v) | பொதுப் பயன்பாட்டு பட்டியல் கொடுப்பனவுகள் | | |
| (vi) | கணக்கு மீதி விசாரணைகள் | | |
| (vii) | நிதியினை மாற்றல் செய்தல் (ஒரே வங்கிக்குள்) | | |
| (viii) | உள்முகப் பணவனுப்பல்களைப் பகிர்ந்தளித்தல் | | |
| (ix) | ஏனையவை | | |
| | - காசு விநியோக நடவடிக்கைகள் | | |
| | - வேறு ஏதேனும் (குறித்துரைக்கவும்) | | |

*(வங்கி, ஒவ்வொரு முகவர்/ துணை முகவருக்காகவும் வங்கி செயலாற்ற மீளாய்வினைப் பேணுதல் வேண்டும்)*

**5. எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகள்**

(i) பிரச்சனைகளின் எண்ணிக்கை மற்றும் பிரச்சனைகளைக் குறித்துரைக்கவும்

(ii) பிரச்சனைக்கான காரணங்கள்

(iii) எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் (குறித்துரைக்கவும்)

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 03ஆம் இலக்கம்** 2018 யூன் 05

**உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையானது பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது.

3. பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விலக்கல்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள் பின்வருவனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது.

(i) சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனி அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு, எது எவ்வாறிருப்பினும் அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது; அத்துடன்

(ii) நிதி மற்றும் ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதிக் குத்தகை முறையின் கீழ் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்கு.

3.2 உரிமம்பெற்ற வங்கியொன்று அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்கும் பொழுது உள்ளக வரையறைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 04ஆம் இலக்கம்** 2018 ஓகத்து 21

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிச்சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள்**

நாணயச் சபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிச்சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழான அதிகாரமளிப்பு

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) மற்றும் 76(ஜே)(1)ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கமைய, வங்கித்தொழில் முறைமையின் ஆற்றலினை உறுதிப்படுத்தும் பொருட்டு, அத்தகைய வங்கிகளின் வியாபாரத்தினை ஏதேனும் அம்சம் கொண்டு நடத்தப்பட வேண்டிய விதம் தொடர்பில் முறையே அனைத்து அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்குப் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2. ஏற்புடைத்தன்மை

2.1 இப்பணிப்புரைகள், இலங்கைச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய, பெறுதிச் சாதனக் கொடுக்கல்வாங்கல்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வெளிநாட்டு நாணயத்திலான அத்தகைய பெறுதிச்சாதன கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகிறது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் இதனகத்துப் பின்னர் தகைமையுடைய வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்.

2.2 இப்பணிப்புரைகள் தகைமையுடைய வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுக்கும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுக்கும் ஏற்புடைத்தானவையாகும்

3. பெறுமதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்களை ஆரம்பித்தல்

3.1 நிதியியல் பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட எண்ணம் கொண்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல்களைத் தொடங்குவதற்கு முன்னதாக அதன் ஈடுபாட்டினை, இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கான பிரதியுடன் அறிவித்தல் வேண்டும்.

3.2 உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகள் 5.2இல் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பெறுதிச்சாதனத்திலும் ஈடுபடுவதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் எழுத்து மூலமான ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. சபை ஒப்புதலளித்த கொள்கைகளும் நடைமுறைகளும்

4.1 தகைமையுடைய வங்கிகள் பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்களில் வெளிப்படுத்துகைகளை அடையாளம் காணவும் கணிக்கவும் மதிப்பிடவும் இடர்நேர்வினை முகாமைப்படுத்தவும் பெறுதிச்சாதனங்களின் கொடுக்கல்வாங்கலுடன் தொடர்பான செயலாற்றங்களைக் கண்காணிப்பதற்குமாக பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் மீதும் சபை ஒப்புதலளித்த கொள்கைகளையும் நடைமுறைகளையும் செயற்பாட்டில் கொண்டிருத்தல் வேண்டும்.

4.2 தகைமை பெற்ற வங்கிகள், நிதியியல் பெறுதிச்சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான நிபுணத்துவத்தினையும் இயலாற்றலையும் கட்டியெழுப்பியிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

5. பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

5.1 பெறுதிச்சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் பின்வரும் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படலாம்.

(அ) **இறுதிப் பயன்படுத்துநர் வணிகம்:** தகைமை வாய்ந்த வங்கிகளின் சொந்தச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் (ஒப்படைக்கப்பட்ட மூலதனம்/ பிடித்தவைக்கப்பட்ட வருவாய்கள் தவிர) பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் காலத்திற்குக் காலம் அவசியமானதாக இருக்கக்கூடிய அவர்களது சொந்த இடர்நேர்வுத் தோற்றப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காகவும் ஆனால் ஊக நோக்கங்களுக்கல்லாத கொடுக்கல்வாங்கல்கள்.

(ஆ) **சந்தை உருவாக்க வணிகமல்லாதவை:** தகைமையுடைய வங்கிகளினால் அவற்றின் வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் அதாவது ஏதேனும் தரப்பினர் தகைமை பெற்ற வங்கிகள் தவிர அல்லது மற்றொரு தகைமையுடைய வங்கியுடன் கொடுக்கல்வாங்கல்களைப் பரவச்செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுவது. இக்கொடுக்கல்வாங்கல்களில் தகைமையுடைய வங்கிகள் அவற்றின் சொந்தப் பதிவேட்டில் எந்தவொரு சந்தை இடர்நேர்வினையும் பதியாததுடன் கொடுக்கல்வாங்கல்களை அதே நாளன்று ஒன்றுக்கொன்று துணையான அடிப்படையில் இலங்கையிலுள்ள வேறொரு தகைமையுடைய வங்கியுடனோ அல்லது கரைகடந்த இணைப்புத்தரப்புடனோ உள்ளடக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) **பெறுதிச்சாதனச் சந்தை உருவாக்க வணிகம்:** தகைமையுடைய வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களுடன் அல்லது மற்றொரு தகைமையுடைய வங்கியுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற வேளையில் சந்தை இடர்நேர்வினை அதன் சொந்தப் பதிவேட்டில் பதிய வேண்டும்.

5.2 இப்பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட பெறுதிச்சாதனங்கள் வருமாறு:

(அ) ஒன்றுக்கொன்று பரஸ்பர பரிமாற்றல்கள்

(ஆ) விருப்பத்தேர்வுகள்

(இ) முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள்

(ஈ) முன்னோக்கிய ஒப்பந்தங்கள்

(உ) பரிமாற்றல் தேர்வுகள்

(ஊ) காலத்திற்குக் காலம் நாணயச் சபையினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு ஏதேனும் சாதனங்கள்

5.3 தகைமையுடைய வங்கிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

(அ) வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்துப் பெறுதிச்சாதனங்களும் செல்லுபடியாகக்கூடிய அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், இது, நடைமுறைக் கணக்குக் கொடுக்கல்வாங்கல்களையும் அனுமதிக்கப்பட்ட மூலதனக் கணக்குக் கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்கும்.

(ஆ) பெறுமதிச்சாதனத்தின் ஏதேனும் முடுக்கியை உள்ளடக்கிய கோட்பாட்டு ரீதியிலான முதல் தொகையானது அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின்/ சொத்து அல்லது பொறுப்பின் அல்லது அடிப்படை வெளிப்படுத்துகையினை விஞ்சக்கூடாது.

(இ) மேலேயுள்ள பணிப்புரை 5.3 (அ) மற்றும் (ஆ) இனை வங்கிகளுக்கிடையிலான பெறுதிச் சாதனங்களுக்குப் பிரயோகிக்கப்படக்கூடாது.

5.4 தகைமையுடைய வங்கிகள் வெளிநாட்டுத் தரப்பினருடன் ஒன்றுக்கொன்று துணையான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு மேலே 5.2இல் பட்டியலிடப்பட்டுள்ள சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

5.5 தகைமையுடைய வங்கிகள் எதிர்பாராத வெளிப்படுத்துகைகளிலிருந்து அல்லது அவர்களது வாடிக்கையாளர்களின் ஐந்தொகை வெளிப்படுத்தல்களிலிருந்து தோன்றுகின்ற அத்தகைய இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றன.

5.6 தகைமையுடைய வங்கிகள், இறக்குமதியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் மதிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தங்கள் உட்பட அவர்களது வெளிப்படுத்துகைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள அனுமதிக்கலாம். மதிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் பெறுமதியானது அவற்றின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியலின் அடிப்படையில் அல்லது முற்போந்த மூன்று ஒப்பந்த பெறுமதியின் சராசரியின் அல்லது உடனடியாக முற்போந்த ஒப்பந்தத்தின் பெறுமதிகளின் அடிப்படையில் தகைமையுடைய வங்கியின் உறுதிப்படுத்தலுக்குட்பட்டு இதில் எது உயர்வானதோ அதுவெனத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

5.7 தரப்பினர்கள் பெறுதிச்சாதனங்கள் இனிமேல் தேவையில்லை எனக் கருதுவார்களேயாயின் அவர்கள் பெறுதிச் சாதனங்களைப் பின்வருமாறு பகுதியளவில் அல்லது முழுமையாக நிறுத்தலாம் அல்லது மீண்டும் விற்றுவிடலாம்.

(அ) முடிவுறுத்தப்பட்ட அனைத்துப் பெறுதிச்சாதன ஒப்பந்தங்களும் இப்பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட நியமங்களுக்குட்பட்டு மீளப் பதியப்படுவதற்கு தகைமையுடையனவாகும்.

(ஆ) அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள் இன்னமும் செல்லுபடியாகக் கூடியதாகவுள்ள வேளையில், எவரேனும் வாடிக்கையாளர் பெறுதிச்சாதன உடன்படிக்கையினை முதிர்ச்சிக்கு முன்னதாக முடிவுறுத்த விரும்புமிடத்து அத்தகைய வாடிக்கையாளரிடமிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு நட்டங்களை அறவிடலாம்.

(இ) சந்தை மீள்மதிப்பீட்டு இலாபத்தினை (நிதியியல் இலாபம்) வாடிக்கையாளருக்குச் செலுத்தக்கூடாது.

(ஈ) நாணய மாற்று வீத நன்மைகள், ஏதுமிருப்பின் மீளப்பதியும் நேரத்தில் வாடிக்கையாளருக்கு அதனை வழங்கலாம்.

5.8 வதிவற்ற வாடிக்கையாளர் பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல் செலவினை வெளிநாட்டிற்கு அனுப்பப்படத்தக்க நிதியிலிருந்து அத்துடன் அல்லது வழமையான வங்கித்தொழில் வழித்தடங்களினூடான உள்முகப் பணவனுப்பல்களிலிருந்து செலுத்துதல் வேண்டும்.

5.9 2009 ஓகத்து 01ஆம் நாள் விடுக்கப்பட்ட (தொடர்பு எண்: 33/03/001/0029/002) நிதியியல் பெறுதிச்சாதனங்கள் மீதான பணிப்புரைகள் மற்றும் 2010 மாச்சு 11ஆம் நாள் விடுக்கப்பட்ட (தொடர்பு எண் 06/04/02/2010) வெளிநாட்டு நாணயங்களிலான முன்னோக்கிய ஒப்பந்தங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள் என்பனவற்றின் கீழ் தகைமையுடைய வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பெறுதிச்சாதனங்களையும் முன்னர் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க, குறிப்பிட்ட கெடுக்கல்வாங்கல்கள் முதிர்ச்சியடையும் வரை தொடர முடியும். முன்னைய பணிப்புரைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முடிவுறுத்தப்படாத பெறுதிச்சாதன ஒப்பந்தங்களைப் புதிய பணிப்புரைகளின் நியதிகளின் கீழ் மாத்திரமே மீள்பதிவை மேற்கொள்ளமுடியும்.

5.10 ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலும் குறிப்பிடப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஆவணச்சான்றுகளை வழங்கும் பட்சத்தில் இன்னொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் நிறுவப்பட்ட குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களை வைத்திருக்கும் வாடிக்கையாளர் ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியும்.

6. தடை செய்யப்பட்ட நடவடிக்கைகள்

6.1 வதியும் வாடிக்கையாளர், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவரின் குறித்துரைக்கப்பட்ட ஒப்புதலைப் பெற்றிருந்தாலொழிய, எவரேனும் வெளிநாட்டு இணைத்தரப்பினரின் சார்பில் வதியும் வாடிக்கையாளருடன் தகைமை பெற்ற வங்கிகள் பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

6.2 தகைமை பெற்ற வங்கிகள் வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகைகள் அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகள் அல்லது வெளிநாட்டில் வைத்திருக்கப்படும் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்கள் தொடர்பில் பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளக்கூடாது.

| | | | |
|---|---|---|---|
| | | 6.3 | தகைமை பெற்ற வங்கிகளினால் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் நாணயத்தில், விருப்பத்தேர்வுக் கட்டணம் தவிர்ந்த முன்கூட்டிய கொடுப்பனவொன்றினை வழங்குகின்றமையுடன் தொடர்பான பெறுதிச்சாதனங்கள் அனுமதிக்கப்படமாட்டா. |
| 7. | பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச்சாதனச் சங்கம் | 7.1 | இரண்டு தரப்பினரும் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச்சாதனச் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதிலிருந்து விலகியிருந்தாலொழிய, பெறுமதிச்சாதனங்களுக்காக தகைமையுடைய வங்கிகள் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச்சாதன ஒப்பந்தத்தில் கையெழுத்திடல் வேண்டும். |
| | | 7.2 | பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச்சாதனச் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் இருப்பதற்கு இணைத்தரப்பினர் இணங்குமிடத்து தகைமையுடைய வங்கிகள் எழுத்து மூலமான சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஓராண்டு அல்லது அதற்கும் குறைவான ஒப்பந்த ரீதியான முதிர்ச்சியுடன் கூடிய பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கான எழுத்து மூலமான சம்மதத்தினை தகைமைபெற்ற வங்கிகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை. |
| | | 7.3 | தகைமை பெற்ற வங்கிகள் கொடுக்கல்வாங்கல்களைக் குறித்துரைக்கும் உடன்படிக்கைகளையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும். |
| 8. | வாடிக்கையாளர் விழிப்புணர்வு | 8.1 | தகைமை பெற்ற வங்கிகள் பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்களின் இடர்நேர்வு பற்றி வாடிக்கையாளர் தெளிவான முறையில் விளங்கிக் கொண்டுள்ளனர் என்பதனையும் மேற்கொள்வதற்கு உத்தேசித்திருக்கின்ற கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளைக் கண்காணிக்கவும் முகாமைப்படுத்தவும் போதுமான வழிமுறைகளை நிறுவியிருக்கிறார்கள் என்பதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும். |
| | | 8.2 | தகைமை பெற்ற வங்கிகள் கொடுக்கல்வாங்கல்கள் மீது குறிப்பாக, விடயங்களைப் பொறுத்து, தொடர்பான அடித்தள அளவுக் குறியீடு, வட்டி வீதங்களை நிர்ணயித்தல், நிகழ்வு விலைகள் மற்றும் வட்டம் என்பனவற்றைக் குறித்துக்காட்டுகின்ற சாதனங்களுக்குள்ளே கூட்டிணைக்கப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் கிளை வாசகங்கள் தொடர்பாகப் போதுமான தகவல்களையும் உயர்ந்த மட்ட வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக விபரமான இடர்நேர்வுச் சூழ்நிலை ஆய்வுகளையும் வழங்குதல் வேண்டும். |
| | | 8.3 | பெறுதிச்சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்களைத் தொடங்குவதற்கு முன்னர், வாடிக்கையாளர் சாதனத்தின் தன்மையினையும் அவற்றுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளையும் விளங்கிக் கொண்டுள்ளனர் என்பதற்கு அவரிடமிருந்து எழுத்து மூலமான உறுதிப்பாட்டினை தகைமை பெற்ற வங்கிகள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| | | 8.4 | தகைமை பெற்ற வங்கிகள் வாடிக்கையாளர்களது அனைத்து தகைமை பெற்ற வங்கிகளுடனுமான அவர்களது பெறுதிச்சாதனங்களின் மொத்தப் பெறுமதி வெளிப்படுத்துகையினை அல்லது குறிப்பிட்ட அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதியினை விஞ்சக்கூடாது என்பதற்கு அவர்களிடமிருந்து எழுத்து மூலமான உத்தரவாதமொன்றினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| | | 8.5 | தகைமை பெற்ற வங்கிகள் அத்தகைய உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னதாக, நிறுவன ரீதியான இயலாற்றலின் தொழில்சார்நிபுணத்துவப் பகுப்பாய்வு தொடர்பிலும் வாடிக்கையாளரின் ஒட்டுமொத்த பொருத்தமான தன்மை பற்றியும் தாமாகவே திருப்திப்பட்டுக் கொள்ளுதல் வேண்டும். |
| | | 8.6 | ஓராண்டு அல்லது அதற்கும் குறைவான ஒப்பந்த ரீதியான முதிர்ச்சியுடன் கூடிய வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய மற்றும் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி சிறியதாக இருக்கும் பட்சத்தில் தகைமை பெற்ற வங்கிகள், குறைந்த மட்டத்தில் வாடிக்கையாளர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அடிப்படைத் தகவல்களையும் நிபந்தனைகளையும் வழங்கும். இந்நோக்கத்திற்காக, தகைமை பெற்ற வங்கிகள் இடர்நேர்வின் தாங்கக்கூடிய அளவு மற்றும் வர்த்தகப்படுத்தல் அளவு என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு சிறிய பெறுமதியிலான வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய மற்றும் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் மட்டத்தினை உள்ளக ரீதியாகத் தீர்மானித்தல் வேண்டும். |
| 9. | தகைமையுடைய நாணயங்கள் | 9.1 | தகைமை பெற்ற வங்கிகள் வாடிக்கையாளரின் கோரிக்கையின் படியும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகளுக்கு இணங்கவும் குறித்துரைக்கப்பட்ட நாணயங்களில்[1] பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்றன. |
| 10. | காலம் | 10.1 | தகைமையுடைய வங்கிகள் பெறுதிச்சாதன ஒப்பந்தங்களின் முதிர்ச்சித் திகதி அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் முதிர்ச்சித் திகதியுடன் தொடர்பானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், எந்தவொரு சூழ்நிலைகளின் கீழும் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலின் திகதிக்கு அப்பால் நீடிக்கப்படக்கூடாது என்பதுடன் பெறுதிச்சாதனத்தின் கொடுக்கல்வாங்கலின் உயர்ந்தபட்ச முதிர்ச்சிக் காலம் பத்து (10) ஆண்டுகளை விஞ்சவும்கூடாது. |
| 11. | தொடர்பு/ மதிப்பீட்டு அடித்தள அளவுக்குறியீடு | 11.1 | தொடர்புபட்ட தரப்பினர்கள் பரஸ்பர உடன்படிக்கை தொடர்பில் தொடர்பு மற்றும் மதிப்பீட்டு நோக்கத்திற்காக, போதுமான வெளிப்படைத்தன்மையுடன் எந்தவொரு அடித்தள அளவுக்குறியீட்டினையும் பயன்படுத்த சுதந்திரமுடையவராவர். |

12. அறிக்கையிடல்

12.1 தகைமை பெற்ற வங்கிகள், இணைப்பு 1இல் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் கூற்றை மாத இறுதியிலிருந்து 15 நாட்களுக்குள் மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

12.2 ஓராண்டு அல்லது அதற்கும் குறைவான ஒப்பந்த முதிர்ச்சியைக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய மற்றும் பரஸ்பரபரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கு மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகள் ஏற்புடைத்தாகாது. தகைமையுடைய வங்கிகள் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான தகவல்களை வாடிக்கையாளருடன் பேண வேண்டும்.

13. வரைவிலக்கணம்

இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காகப் பின்வரும் வரைவிலக்கணங்கள் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

13.1 **பெறுதிச்சாதனங்கள்**

பெறுதிச்சாதனம் என்பது இலங்கை கணக்கீட்டு நியமங்களினால் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு நிதியியல் சாதனம் அல்லது ஒப்பந்தமொன்றாகும்.

13.2 **வெளிநாட்டு இணைத்தரப்பு**

வெளிநாட்டு இணைத்தரப்பு என்பதன் கருத்து:

(அ) இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கி

(ஆ) பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பெறுதிச்சாதனப் பரிமாற்றம்

13.3 **அனுமதிக்கப்பட்ட பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்கள்**

(அ) பரஸ்பரபரிமாற்றல்கள்

பரஸ்பரபரிமாற்றல் என்பது கொடுக்கல்வாங்கலில் இணைக்கப்பட்ட காலப்பகுதியில் (முதிர்ச்சி அல்லது காலம்) குறித்துரைக்கப்பட்ட கால இடைவெளியில் (கொடுப்பனவுத் திகதிகள்) செலாவணிக் காசுப்பாய்ச்சலுக்கான இருபுடை உடன்படிக்கையொன்றாகும். பரஸ்பரபரிமாற்றல்களைத் தொடங்குவது உண்மையில் கட்டணக் கொடுப்பனவினைத் தேவைப்படுத்தாது. இப்பணிப்புரையின் கீழ் தகைமை பெற்ற வங்கிகள் வட்டி வீதம் குறுக்கு நாணயம் மற்றும் பண்ட பரிமாற்றம் என்பனவற்றை மேற்கொள்ளத் தகுதியுடையனவாகும்.

(ஆ) விருப்பார்வம்

விருப்பார்வம் என்பது கட்டணத்தினைச் (வட்டம்) செலுத்தும் வாங்குநருக்கு அங்கீகரிக்கப்பட்ட விலையொன்றில் (நிகழ்வு விலை அல்லது நடைமுறை விலை) அடிப்படைச் சொத்தொன்றின் குறித்துரைக்கப்பட்ட தொகையினை அன்று அல்லது உடன்படிக்கை காலாவதியாகும் வரை (முடிவடையும் திகதி) வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான உரிமையாகும். ஆனால் கடப்பாடல்ல. அழைப்பு விருப்பார்வம் என்பது குறிப்பிட்ட சொத்தினை வாங்குகின்ற விருப்பார்வமாக விளங்குகையில் விற்பதற்கான விருப்பார்வமென்பது குறிப்பிட்ட சொத்தினை விற்பதற்கான விருப்பார்வமாகும். இப்பணிப்புரையின் கீழ் தகைமை பெற்ற வங்கிகள் அடிப்படை வட்டி வீதங்கள் நாணயம் மற்றும் பண்டங்களை அடிப்படையாகக் கொண்ட விருப்பார்வங்களை வழங்கத் தகுதியுடையனவாகும்.

(இ) முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள்

முன்னோக்கிய வீத உடன்படிக்கை என்பது இரு தரப்பினருக்கிடையிலான வட்டி வீத ஒப்பந்தமாகும். இது வட்டி வீதச் சந்தையில் நுழைவதற்கான தகுதியினை வழங்குகின்றது. முன்னோக்கிய வட்டி வீத ஒப்பந்தமென்பது நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீதக் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக ஒரு தரப்பினரை அழைக்கையில் மற்றைய தரப்பினர் கோட்பாடு ரீதியான முதல் தொகையினை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தம் காலாவதியாகுகையில் நிர்ணயிக்கப்படும் வட்டியில், வட்டி வீதக் கொடுப்பனவுகளைச் செய்கிறார்கள். தீர்ப்பனவு நாளன்று கொடுக்கல்வாங்கல்கள் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

(ஈ) முன்னோக்கிய ஒப்பந்தம்

முன்னோக்கிய ஒப்பந்தத்தில், ஒப்பந்தத்தினை வைத்திருப்போர் குறித்துரைக்கப்பட்ட விலையில், குறித்துரைக்கப்பட்ட அளவிலும் குறித்துரைக்கப்பட்ட எதிர்காலத் திகதியிலும் நாணயத்தினை/ பண்டத்தினை வாங்க அல்லது விற்கக் கடமைப்பட்டவர்களாவர்.

(உ) பரஸ்பர பரிமாற்றல்கள்

பரஸ்பர பரிமாற்றத்திற்குள் நுழைவதற்கான விருப்பார்வமாகும். விருப்பார்வ கட்டணமொன்றிற்கான பரிவர்த்தனையின் போது குறித்துரைக்கப்பட்ட எதிர்காலத் திகதியில் வழங்குநருடன் குறித்துரைக்கப்பட்ட பரஸ்பரபரிமாற்றல் உடன்படிக்கையொன்றை மேற்கொள்வதற்கான கடப்பாட்டினையன்றி உரிமையினை வாங்குநருக்கு வழங்குகிறது. இப்பணிப்புரையின் கீழ் தகைமை பெற்ற வங்கிகள் வட்டி வீதம், நாணயம் மற்றும் பண்டம் போன்ற அடிப்படைக் கொடுக்கல்வாங்கலொன்றினை அடிப்படையாகக் கொண்ட பரஸ்பரபரிமாற்றலை வழங்கத் தகைமையுடையனவாகும்.

(ஊ) வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பரபரிமாற்றல்

வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பரபரிமாற்றல் என்பது இரு வேறுபட்ட பெறுமதித் திகதிகளுடன் ஒரு நாணயத்தின் ஒரு மாதிரியான தொகையினை மற்றொரு நாணயத்திற்கு சமகாலத்தில் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது நேர்மாறான விதத்தில் மேற்கொள்ளுதல்.

14. இரத்துச் செய்தல்

14.1 பின்வரும் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன:

(அ) 2017 நவெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிச்சாதனங்கள் மீதான பணிப்புரை;

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டாளர் மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட 2009 ஓகத்து 01ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு இலக்கம் 33/03/001/0029/002 கொண்ட நிதியியல் பெறுதிச்சாதனங்கள் மீதான பணிப்புரைகள்; அத்துடன்

(இ) செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் விடுக்கப்பட்ட 2013 சனவரி 02ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு இலக்கம் 06/04/04/2013 கொண்ட வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனை மற்றும் கொள்வனவு மீதான அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை.

15. நடைமுறைப்படுத்தல்

15.1 இப்பணிப்புரைகள், பணிப்புரைகளில் காணப்படும் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இந்தப் பணிப்புரையின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Direction_No_4_of_2018.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 05ஆம் இலக்கம்** 2018 ஓகத்து 23

### உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையானது பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது.

3. பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விலக்கல்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள் பின்வருவனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது.

(i) சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனி அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு, எது எவ்வாறிருப்பினும் அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது;

(ii) நிதி மற்றும் ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதிக் குத்தகைவிடும் முறையின் கீழ் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்கு; அத்துடன்

(iii) அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தேச சலுகை அடிப்படையிலான குத்தகை வசதியின் கீழ் அரச பணியிலுள்ள கள அலுவலர்களுக்கும் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் உந்து ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு.

3.2 அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்கும் பொழுது உரிமம்பெற்ற வங்கிகள் உள்ளக வரையறைகளையும் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 06ஆம் இலக்கம்** 2018 செத்தெம்பர் 28

### உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) என்பனவற்றின் கீழ் விடுக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி இறக்குமதியினையும் அதன் விளைவாகச் செலாவணி வீதத்தின் மீது தோன்றும் மோசமான தாக்கத்தினையும் கட்டுப்படுத்தும் நோக்குடன், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் 2018 ஒத்தோபர் 1 இலிருந்து

நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டது.

1. பின்வருவன உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 2.1 இற்குப் பதிலீடாக அமையும்.

   உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மறுஅறிவித்தல் வரை அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

   (i) முதற்பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதிக்கு இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத ஊர்திகளைப் பொறுத்தவரை;

அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம்

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
|---|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஈ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகு பாரவண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், வான்கள் மற்றும் கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% | |

   (ii) முதற்பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலம் இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

2. இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சலுகை ரீதியான நியதிகளின் மீது உந்து ஊர்திகள் அனுமதிப்பத்திரத்தினை வழங்குகின்ற திட்டத்தின் கீழ் உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களைத் திறப்பதிலிருந்து மறுஅறிவித்தல் வரை விலகியிருக்கவும்.

முனைவர் பி என் வீரசிங்க
**முதன்மை நிறைவேற்று அலுவலர் /**
**இலங்கை மத்திய வங்கியின் மூத்த பிரதி ஆளுநர்**

**சுற்றிக்கை 2018இன் 02ஆம் இலக்கம்** 2018 ஒத்தோபர் 11

**ஏற்பு ஆவண நியதிகளின் மீதான இறக்குமதிகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இலங்கை மத்திய வங்கி, இறக்குமதிகளையும் செலாவணி வீதத்தின் மீதான மோசமான தாக்கத்தினையும் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஏற்பு ஆவண நியதிகளின் கீழான இறக்குமதிகள் மீது பின்வரும் வழிமுறைகளை உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் பின்பற்றுமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்கிறது.

1. இணைப்பு I இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுக்கான ஏற்பு ஆவண நியதிகளின் கீழ் இறக்குமதியாளரினால் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரத்தில் இறக்குமதிகளின் விலைப்பட்டியல் பெறுமதியின் மீது 100 சதவீத காசு அளவு இறக்குமதியாளரால் ஆவணங்களை விடுவிக்கும் வங்கியில் பேணப்படுதல் வேண்டும்.
2. அதே விலைப்பட்டியல் அளவுத் தேவைப்பாட்டிற்கு உட்படாத விடயங்களையும் உள்ளடக்கியிருக்கின்றன என்பதனை பொருட்படுத்தாமல், விலைப்பட்டியலின் மொத்தப் பெறுமதியிலும் 100 சதவீத காசு அளவுத் தேவைப்பாடு பேணப்படுதல் வேண்டும்.
3. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், அளவு வைப்பு பெறப்பட்டிருக்கிறது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் விலைக்குறிப்புப் பட்டியலை புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.
4. அளவு வைப்பினை, ஆவணச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதன் மீது அல்லது இலங்கையிலுள்ள வங்கித்தொழில் வழிப்படுத்தல்களின் மூலமான கொடுப்பனவுகள் மற்றும் இறக்குமதிகள் தொடர்பான சுங்க இசைவு ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் விடுவிக்கப்படுதல் வேண்டும்.
5. இவ்விறக்குமதிகள் தொடர்பில் இறக்குமதியாளர்கள் அளவு வைப்புக்களை மேற்கொள்வதற்கு இறக்குமதியாளர்களை இயலச்செய்யும் விதத்தில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் கடன் வசதிகள் எதனையும் வழங்கக்கூடாது.

ஏ. ஏ. எம். தாசிம்
**பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

இந்தச் சுற்றறிக்கையின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_circular_no_02_of_2018.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 07ஆம் இலக்கம்** 2018 ஒத்தோபர் 12

**உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76(ஜே)(1) மற்றும் அதன் துணைப்பிரிவு (3) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவுகளின் கீழ் விடுக்கப்பட்டது.

நாணயச் சபை, இறக்குமதிகளையும் செலாவணி வீதத்தின் மீதான மோசமான தாக்கத்தினையும் கட்டுப்படுத்தும் நோக்குடன், உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதனவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளுக்கு வசதியளிப்பது தொடர்பில் தேசிய சேமிப்பு வங்கிக்குப் பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழான அதிகாரமளிப்பு — வங்கித்தொழில் சட்டத்தின் துணைப்பிரிவு (3) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவுகள் 76(ஜே)(1)இன் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு, சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஏதேனும் வகைக்கு அல்லது ஏதேனும் குறிப்பிட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கு அத்தகைய வங்கிகளின் வியாபாரத்தின் எந்தவொரு விடயத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.
2. இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதிலிருந்து விலகியிருத்தல் — அட்டவணை 'அ' இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தவிர்ந்த உந்து ஊர்திகளினதும் அட்டவணை 'ஆ' இல் குறித்துரைக்கப்பட்ட இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களினதும் இறக்குமதிகளுக்கு நாணயக் கடிதம் அல்லது ஏனைய ஏதேனும் கொடுப்பனவு முறைமைகளினூடாக வசதயளிப்பதிலிருந்தும் தேசிய சேமிப்பு வங்கி மறுஅறிவித்தல் வரை விலகியிருத்தல் வேண்டும்.
3. இரத்துச்செய்தல் — உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடு மீது 2018 செத்தெம்பர் 28ஆம் திகதி விடுக்கப்பட்ட கடிதம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.
4. நடைமுறைப்படுத்தல் — இப்பணிப்புரையானது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

சி. ஜே. பி. சிறிவர்த்தன
**முதன்மை நிறைவேற்று அலுவலர்/**
**இலங்கை மத்திய வங்கியின் மூத்த பிரதி ஆளுநர்**

இந்தப் பணிப்புரையின் அட்டவணை அ மற்றும் ஆ இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Direction_No_7_of_2018.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.

**வங்கித்தொழில் சட்டத் தீர்மானங்கள் 2018இன் 1ஆம் இலக்கம்** 2018 ஒத்தோபர் 18

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 76ஈ(6)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8(1) மற்றும் 76ஈ(6)இன் நியதிகளில் நாணயச் சபை, ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் 2019 மற்றும் 2020 கலண்டர் ஆண்டுகள் தொடர்பான உரிமக் கட்டணத்தினை ஒவ்வொரு ஆண்டும் சனவரி 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கடந்த ஆண்டு இறுதியிலுள்ளவாறான அத்தகைய வங்கிகளின் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு செலுத்த வேண்டும் எனத் தீர்மானித்திருக்கிறது.

| 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த உரிமக் கட்டணம் | |
|---|---|
| கடந்த ஆண்டு இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்.) | உரிமக் கட்டணம் (ரூ. மில்.) |
| 1000 இற்கு மேல் | 33 |
| 750 இற்கு மேல் 1000 வரை | 32 |
| 500 இற்கு மேல் 750 வரை | 26 |
| 200 இற்கு மேல் 500 வரை | 23 |
| 125 இற்கு மேல் 200 வரை | 17 |
| 75 இற்கு மேல் 125 வரை | 11.6 |
| 25 இற்கு மேல் 75 வரை | 6 |
| 25 இற்குக் குறைவானவை | 3 |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 08ஆம் இலக்கம்** 2018 நவெம்பர் 21

**பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிகர நிலையான நிதியிடல் விகிதம்**

சொத்துக்களின் உள்ளமைப்பு மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான நடவடிக்கைகள் தொடர்பில் நிலையான நிதியிடல் தோற்றப்பாட்டினை உறுதிப்படுத்துகின்ற குறிக்கோள்களுடன் 2014 ஒத்தோபரில் வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் விடுக்கப்பட்ட "பாசல் III: நிகர நிலையான நிதியிடல் விகிதம்" இற்கிணங்க உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிகர நிலையான நிதியிடல் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) பிரிவுகளினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் நாணயச் சபை இப்பணிப்புரைகளை விடுக்கிறது.

1. அதிகாரமளிப்பு

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76(ஜே)(1) என்பனவற்றின் நியதிகளில் வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு முறையே உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அவற்றின் வியாபாரத்தின் ஒவ்வொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி அனைத்து வங்கிகளுக்கும் அல்லது ஏதாவதொரு வங்கிக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. ஏற்புடைத்தன்மையின் செயற்பரப்பு

2.1 இப்பணிப்புரைகள் (ை) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அத்துடன் (ை) இலங்கைக்கு வெளியே தனியானதொரு அடிப்படையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட வங்கிகளின் கிளைகளுக்கும் ஏற்புடைத்தானவையாக இருத்தல் வேண்டும்.

3. குறைந்தபட்சத் நிகர நிலையான நிதியிடல் விகிதம்

3.1 2019 சனவரி 01ஆம் நாள் தொடக்கம் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் அனைத்து நேரங்களிலும் நிகர நிலையான நிதியிடல் விகிதத்தினைக் கீழே காட்டப்பட்டவாறு பேணுதல் வேண்டும்:

| நடைமுறைக்குவரும் திகதி | 01.01.2019 | 01.07.2019 |
|---|---|---|
| குறைந்தபட்சத் தேவைப்பாடு | 90% | 100% |

4. வெளிப்படுத்துகைத் தேவைப்பாடு

4.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் நிகர நிலையான நிதியிடல் விகிதத்தினைப் பின்வருமாறு வெளிப்படுத்துதல் வேண்டும்:

(i) அறிக்கையிடும் காலப்பகுதிக்கும் முன்னைய அறிக்கையிடும் காலப்பகுதிக்குமான நிகர நிலையான நிதியிடல் விகிதமும் குறைந்தபட்சத் தேவைப்பாடும்:

(அ) செய்தித்தாள்களிலும் வெப்தளத்திலும் காலாண்டு ரீதியில்

(ஆ) ஆண்டுதோறும் செய்தித்தாள்களில், ஆண்டறிக்கை மற்றும் வெப்தளத்திலும்.

(ii) பின்வரும் முக்கிய கூறுகளின் தகவல்களுடன் சேர்த்து அறிக்கையிடும் காலப்பகுதிக்கும் முன்னைய அறிக்கையிடும் காலப்பகுதிக்குமான அட்டவணை Iஇன் பின்னிணைப்பு Iஇன் பகுதி Iஇல் அறிக்கையிடப்பட்ட தகவல்கள்:

(அ) வெப்தளத்தில் காலாண்டு ரீதியில்; அத்துடன்

(ஆ) வெப்தளம் மற்றும் ஆண்டறிக்கைகளில் ஆண்டுதோறும்.

5. ஒழுங்குமுறைப்படுத்தலை அறிக்கையிடுதல்

5.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நிகர நிலையான வங்கியும் ஒவ்வொரு காலாண்டினதும் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறு நிகர நிலையான நிதியிடல் விகிதமானது வெப்பினை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறைமையூடாக கூற்று மூலம் (BSD-QF-32-1A, BSD-QF-32-2A, BSD-QF-32-3A மற்றும் BSD-QF-32-3B) ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்திற்குள் இங்கேயுள்ள அட்டவணை I இல் உள்ளவாறு அறிவித்தல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இந்தப் பணிப்புரையின் பின்னிணைப்பு Iஇனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Direction_No_8_of_2018.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 09ஆம் இலக்கம்** 2018 நவெம்பர் 21

**பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதம் மீதான 2015ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 4 தொடர்பான இணைப்பு ஐ இற்கான பின்னிணைப்பு I மற்றும் II பின்வருமாறு திருத்தப்படுகிறது:

1. திருத்தங்கள்

1.1 பின்னிணைப்பு I இன் 19.3.1.1.2.0, 19.3.4.1.1.0 மற்றும் 19.4.3.1.0.0 ஆகிய கூற்றுக் குறியீடுகள் இங்கே பின்னிணைப்பு I இல் உள்ளவாறு திருத்தப்படுகிறது.

1.2 பின்னிணைப்பு II இன் 19.2.1.1.3.1, 19.2.1.1.3.2, 19.2.2.1.1.1, 19.3.1.1.2.0, 19.3.4.1.1.0, 19.4.3.1.0.0 மற்றும் 19.3.2.0.0.0 ஆகிய வெப்பினை அடிப்படையாகக கொண்ட கூற்றுக் குறியீடுகள் இங்கே பின்னிணைப்பு II இல் உள்ளவாறு திருத்தப்படுகின்றன.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**பின்னிணைப்பு I**

**ரூபா திரவத்தன்மை தேவைப்பாட்டுக்கான அறிக்கையிடல் படிவங்கள் (பீஎஸ்டி-எம்எவ்-19-ஆர்ஆர்)**

**அனைத்து நாணயத் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளுக்கான அறிக்கையிடல் படிவங்கள் (பீஎஸ்டி-எம்எவ்-19-ஏஆர்)**

**மாதாந்த நிதியியல் கூற்று (ரூ.'000)**

**பகுதி III - மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்களினுடைய கணிப்பீடு**

| வெப் - அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் | தொகை | காரணி | நிறையேற்றப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 19.3.1.1.2.0 | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் | | 10% | |
| 19.3.4.1.1.0 | சில்லறை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான எடுப்பனவு செய்யப்படாத கடப்பாட்டுக் கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள் | | 5% | |

**பகுதி IV - மொத்தக் காசு உட்பாய்ச்சல்களுக்கான கணிப்பீடு**

| வெப் - அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் | தொகை | காரணி | நிறையேற்றப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 19.4.3.1.0.0 | சில்லறை மற்றும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் | | 50% | |

பின்னிணைப்பு II

**திரவத்தன்மைப் பாதுகாப்பு விகிதத்தினுடைய கணிப்பீட்டிற்கான வழிகாட்டல்கள்**

| வெப் - அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் |
|---|---|
| 19.2.1.1.3.1 | **ஆட்சியாளர்களால் உத்தரவாதமளிக்கப்பட்டது**<br>இலங்கை அரசாங்கம் - ரூபா கோருதல். வெளிநாட்டு ஆட்சியாளர் - AAA இற்கும் AA- இற்குமிடையில் வெளிக் கடன் விகிதம் ஒன்று இருக்கும் போது ஆட்சியாளர்கள் கவரப்படுகின்றார்கள். |
| 19.2.1.1.3.2 | **ஆட்சியாளர்களால் உத்தரவாதமளிக்கப்பட்டது**<br>இலங்கை அரசாங்கம் - ரூபா கோருதல். வெளிநாட்டு ஆட்சியாளர் - AAA இற்கும் AA- இற்குமிடையில் வெளிக் கடன் விகிதம் ஒன்று இருக்கும் போது ஆட்சியாளர்கள் கவரப்படுகின்றார்கள். |
| 19.2.2.1.1.1 | **ஆட்சியாளர்களால் வெளியிடப்பட்டது அல்லது உத்தரவாதமளிக்கப்பட்டது**<br>இலங்கை அரசாங்கம் - செலாவணி கோருதல். வெளிநாட்டு ஆட்சியாளர்கள் - A+ இற்கும் A- இற்குமிடையில் வெளிக் கடன் விகிதம் ஒன்று இருக்கும் போது ஆட்சியாளர்கள் கவரப்படுகின்றார்கள். |
| 19.3.1.1.2.0 | **சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள்**<br>சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களால் வங்கியொன்றில் வைத்திருக்கும் வைப்புக்கள் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களினால் வங்கியொன்றில் பேணப்படும் வைப்புக்களது மொத்தப் பெறுமதி 250 மில்லியனை விஞ்சக்கூடாது.<br>சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களாக வகைப்படுத்த காணப்பட வேண்டிய தகுதிகள் பின்வருமாறு:<br>(i) வைப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் அல்லது வசதிகளை வழங்கும் நேரத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களினுடைய ஆண்டின் மொத்தப் புரள்வானது ரூ.75 மில்லியனுக்கு அதிகரிக்கக்கூடாது;<br>(ii) ஆண்டின் மொத்தப் புரள்வானது அண்மைக் காலத்தில் கிடைக்கக்கூடியதாகவுள்ள கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் அடிப்படையில் அல்லது பட்டயக் கணக்காளர் ஒருவரால் அல்லது உள்நாட்டு இறை வரித் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வரைவு நிதியியல் அறிக்கைகளாகக் காணப்படுமிடத்து மொத்தப் புரள்வு பட்டயக் கணக்காளர் அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட வேண்டும் மற்றும் குறித்த ஆண்டிற்குள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும்; |

| | |
|---|---|
| | (iii) (ரூ.50 மில்லியனிற்குச் சமமாக அல்லது கூடுதலாக) சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களால் வங்கியில் வைக்கப்பட்ட வைப்புக்களின் மொத்தப் பெறுமதி அல்லது மொத்த வெளிப்படுத்துகைகள் (ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் உள்ளடங்கலாக) சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிடம் 50 மில்லியனுக்குச் சமமாக அல்லது கூடுதலாக இருக்குமானால் மேலே தரப்பட்ட (ை) இன் அடிப்படைப் பொருத்தப்பாடு உடையதாக இருக்கும். அல்லாவிடின், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களினுடைய வருடாந்த மொத்தப் புரள்வைச் சரிபார்ப்பதற்கு வங்கியானது அவர்களுடைய சொந்த உள்ளகப் பொறிமுறையைப் பின்பற்றலாம். |
| 19.3.4.1.1.0 | **சில்லறை வியாபாரம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்கு வரையப்படாத உறுதிக்கடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள்**<br>சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனம் தொடர்பில், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்கு வங்கிகளினால் வழங்கப்படும் உயர்ந்தபட்ச வெளிப்படுத்துகை (ஐந்தொகையில் காட்டப்படாத வெளிப்படுத்துகைகள் உள்ளடங்கல்களாக) ரூ.250 மில்லியனுக்கு அதிகமாகக்கூடாது. |
| 19.4.3.1.0.0 | **சில்லறை வியாபாரம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்கள்**<br>செயற்படுத்தப்படும் வசதிகள் மீது சில்லறை வாடிக்கையாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களிடமிருந்தான அனைத்துக் கொடுப்பனவுகள் (வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் தவணைக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக) 30 நாட்களுக்குள் கொடுக்க வேண்டிய ஒப்பந்தமாக இருக்கின்றது. சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்கள் தொடர்பில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வங்கியினால் வழங்கப்படும் ஆகக்கூடிய வெளிப்படுத்துகை (ஐந்தொகையில் காட்டப்படாத வெளிப்படுத்துகை உள்ளடங்கல்களாக) 260 மில்லியனுக்கு அதிகரிக்கக்கூடாது. |
| 19.3.2.0.0.0 | **பாதுகாப்பற்ற மொத்த வியாபார நிதியிடல்**<br>மொத்த வியாபார வைப்புக்கள் மற்றும் ஏனைய பொதுவான பொறுப்புக்கள் என்பவை சட்ட ரீதியான நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்றன. மொத்த வியாபார வைப்புக்களானது செயலற்ற வைப்புக்கள், கடன்வழங்கல்களுக்கெதிராக பிணையுறுதியுடைய வாடிக்கையாளர் வைப்புக்கள், எல்லை வைப்புக்கள் மற்றும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழான பாதுகாப்பு வைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்குகிறது. ஏனைய பொதுவான கடமைகள் சார்பாக, அவர்கள் வங்குரோத்து, கடன் தீர்க்கமுடியாத நிலை, கலைப்பு அல்லது தீர்மானங்கள் தொடர்பில் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குச் சொந்தமான விசேடமாக வடிவமைக்கப்பட்ட சொத்துக்களுக்கு சட்ட ரீதியான உரிமையால் இணைந்திருக்க முடியாது. பெறுதி உடன்படிக்கைகள் தொடர்பான கடமைகள் இந்த வரைவிலக்கணத்திலிருந்து வெளிப்படையாக விலக்கப்பட்டுள்ளன. |

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 10ஆம் இலக்கம்** 2018 நவெம்பர் 30

**உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமிப்பது தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2018 மே 24ஆம் திகதியிடப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமிப்பது தொடர்பான 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்குப் பதிலீடு செய்யும் விதத்தில் பின்வரும் இப்புதிய பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

6. அனுமதிக்கப்பட்ட முகவர் வங்கித்தொழில் வியாபாரம்

6.1 முகவர்கள், உரிமம்பெற்ற வங்கியின் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே பின்வரும் வங்கித்தொழில் சாதனங்களை வழங்குதல் வேண்டும்:

(i) வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(ii) வைப்புக்களை எடுப்பனவு செய்தல்;

(iii) கடன் மீள்கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுதல்;

(iv) கொடுகடன் அட்டைக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுதல்;

(v) பொது வசதிகள் பட்டியல் கொடுப்பனவுகளுக்கு வசதியளித்தல்;

(vi) கணக்கு மீதிகளுக்கான கோரிக்கை;

(vii) அதே உரிமம்பெற்ற வங்கிகளிடையே நிதிகளை மாற்றல் செய்தல்; அத்துடன்

(viii) இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான வேறு ஏதேனும் நடவடிக்கை.

6.2 உரிமம்பெற்ற வங்கிகளின் சார்பில் மூன்றாந்தரப்பினரால் காசு விநியோக நடவடிக்கைகள் கையாளப்படுகையில் அத்தகைய மூன்றாந்தரப்பினர் காசினைச் சேகரிப்பதற்கு அல்லது விநியோகிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர்களைச் சந்திப்பது பணிப்புரை 6.1(viii) இன் கீழ் இடம்பெறுதல் வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள், அனைத்தையுமுள்ளடக்கிய காப்புறுதி பூட்கையினால் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உரிமம்பெற்ற வங்கி காசு சேகரிப்பு/ வழங்கல் மற்றும் மூன்றாந்தரப்பினரின் நிலவறையில் செய்யப்படும் சேமிப்பு என்பனவற்றின் முழுச் செயன்முறைகளையும் உள்ளடக்கிய ஏதேனும் இடர்நேர்வுகள் மீதான காப்புறுதியினைக் கோரக்கூடியனவாகவும் இருத்தல் வேண்டும். பணிப்புரை 9.1(vii) அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஏற்புடைத்தாகாது.

6.3 முகவர்கள் உள்முகப் பணவனுப்பல்களை பகிர்ந்தளிக்கும் பணிகளையும் வழங்கலாம்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டக் கட்டளை 2018இன் 02ஆம் இலக்கம்** 2018 நவெம்பர் 30

**வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23, 25 மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ், அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை.

1. இக்கட்டளையானது 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளையென எடுத்துக்காட்டப்படலாம்.
2. பின்வரும் கிளை வாசகங்கள் 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 7ஆம் திகதியிடப்பட்ட வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) 2000ஆம் ஆண்டுக் கட்டளையின் கிளை வாசகம் 2(2) மற்றும் 4(3) கிளை வாசகங்களை உடனடுத்து உட்புகுத்தப்படுவதுடன் அவை முறையே கிளைவாசகம் 2(3) மற்றும் 4(4) ஆகப் பயனுறுதலும் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 2.1 | அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரம் | 2(3) | வங்கித்தொழில் சட்டத்தின் 25(ஆ) பிரிவின் கீழ் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள், உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான 2018 நவெம்பர் 30ஆம் திகதியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| 2.2 | வதிவோருடனான அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரம் | 4(4) | கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான 2018ஆம் ஆண்டு நவெம்பர் 30ஆம் திகதியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு 4(1)ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட வதிவோருடனான கடன்பாடுகளில் ஈடுபடலாம் |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 11ஆம் இலக்கம்** 2018 நவெம்பர் 30

**உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்**

வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் வங்கிகளுக்கான முக்கிய நிதியிடல் மூலமாக விளங்குகின்றன. எனினும், மிகையானதும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாததுமான வெளிநாட்டு மூலதனப்பாய்ச்சல்கள் நாடொன்றின் பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டில் தேவையற்ற கரிசனைகளுக்குக் காரணமாகிவிடும்.

நாணயச் சபையானது உரிமம்பெற்ற வங்கிகள் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளில் பெருமளவிற்குத் தங்கியிருப்பதனையும் அதன் மூலம் அவ்வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் வெளிநாட்டு நாணயத்திலான பாரிய கடன்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற நாட்டின் ஒதுக்கு மற்றும் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினைக் குறைக்கும் நோக்கத்துடனும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கான கொள்கைக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கமைய, நாணயச் சபையானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது:

| | | | |
|---|---|---|---|
| 1. | வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல் | 1.1 | 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, முறையே உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அனைத்திற்கும் அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கும் அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கும் அத்தகைய வங்கி அல்லது வங்கிகளின் வியாபார விடயத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அவர்களுக்குப் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. |
| 2. | ஏற்புடைத்தன்மை | 2.1 | இப்பணிப்புரைகள், இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும் உள்நாட்டு வங்கித்தொழில் கூறுகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் கூறுகள் என்பனவற்றை உள்ளடக்கிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் பெறப்பட்ட அனைத்து வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கும் ஏற்புடைத்தாகும். |
| 3. | காலம் | 3.1 | வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பான முதிர்ச்சிக்காலம்:<br>(i) 1 ஆண்டு அல்லது அதற்கும் குறைவான முதிர்ச்சிக்காலம் குறுங்காலக் கடன்பாடுகள் எனக் கருதப்படும்; அத்துடன்<br>(ii) 1 ஆண்டிற்கும் கூடுதலான காலம் நீண்ட காலக் கடன்பாடுகள் எனக் கருதப்படும். |
| 4. | வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான வரையறை | 4.1 | உரிமம்பெற்ற வங்கியொன்றினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் உயர்ந்தபட்ச வெளிநின்ற தொகை பிந்திய ஆண்டு கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின்படி அல்லது உரிமம்பெற்ற வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட இடைக்காலக் கணக்குகளின் அடிப்படையில் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும். |
| | | 4.2 | உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் சதவீதம் கீழேயுள்ள அட்டவணைகள் 1 மற்றும் 2இல் தரப்பட்டுள்ளவாறு வங்கிகளின் வெளிநாட்டு நீண்டகாலக் கொடுகடன் தரமிடல் மற்றும் மொத்த மூலதன விகிதம் என்பனவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கிகளுக்குமாக வழங்கப்பட்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். |

| அட்டவணை 1 - புள்ளிகளின் கணிப்பு | | |
|---|---|---|
| வங்கிகளின் கொடுகடன் தரமிடல் | வங்கியின் மொத்த மூலதன விகிதம் | ஒவ்வொரு கூட்டிற்கும் வழங்கப்பட்ட புள்ளி |
| AAA இலிருந்து AA- அல்லது சமமானவை | >14.0% | 3 |
| A+ இலிருந்து A- அல்லது சமமானவை | 13.6% - 14.0% | 2 |
| BBB+ இலிருந்து BBB- அல்லது சமமானவை | 12.5% - 13.5% | 1 |
| BBB- இற்குக் கீழே | <12.5% | 0 |

| அட்டவணை 2 - மொத்தச் சொத்துக்களின் சதவீதமாகக் கடன்பாடுகளின் வரையறை | | |
|---|---|---|
| புள்ளிகளின் கூட்டுத்தொகை | குறுங்காலம் | மொத்தம் |
| 1 - 2 | 1.5% | 5.0% |
| 3 - 4 | 2.0% | 7.5% |
| 5 - 6 | 2.5% | 10.0% |

5. நாணயச் சபையின் ஒப்புதல்

5.1 மேலேயுள்ள பணிப்புரை 4இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறையினை விஞ்சுகின்ற ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கு, தேசிய நலவுரித்துக்களின் விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் நாணயச் சபையின் எழுத்து மூலமான முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.2 நாணயச் சபையானது, பேரண்ட முன்மதியுடைய அம்சங்கள் மற்றும் ஏற்பாடுகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு, அது பொருத்தமானது எனக்கருதும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒவ்வொரு விடயமாக உரிமம்பெற்ற வங்கிகளின் சொத்துக்களின் 5 சதவீதமளவினால் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் ஏற்புடைத்தான வரையறையினை விஞ்சுவதற்கு அனுமதி வழங்கலாம்.

5.3 பணிப்புரை 5.2இன் கீழ் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்பாடுகளை நாணயச் சபையின் ஒப்புதல் திகதியிலிருந்து 3 மாத காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்

6.1 (i) உரிமம்பெற்ற வங்கியின் அனைத்து வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளும் வங்கியின் பணிப்பாளர் சபையின் அல்லது வெளிநாட்டு வங்கிகளின் பணிப்பாளர் சபையின் சிறப்பு அதிகாரசபையின் கீழ் தொழிற்படுகின்ற முகாமைத்துவக் குழுவின் ஒப்புதலைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பணிப்பாளர் சபை அல்லது மேலே குறிப்பிடப்பட்டவாறான தொடர்பான அதிகாரசபையினர், ஒவ்வொரு கடன்பாட்டிற்கும் ஒப்புதலளிப்பதற்கான மாற்று ஏற்பாடொன்றாக வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்காக முன்னொப்புதலளிக்கப்பட்ட வரையறையினை நிறுவ முடியும்.

6.2 உரிமம்பெற்ற வங்கிகள் பாசல் IIIஇன் கீழான குறைந்தபட்ச மூலதனம், நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம், திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் மற்றும் தேறிய திறந்த நிலைமை என்பன உள்ளடங்கலாக, ஆனாலும் இவற்றிற்கு மட்டும் வரையறுக்கப்படாமல், அனைத்து முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் அனைத்து நேரங்களிலும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

6.3 உரிமம்பெற்ற வங்கிகள் வட்டி வீதம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளுக்கான காப்பிடலைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளினால் தோன்றுகின்ற முதிர்ச்சிப் பொருத்தப்பாட்டின்மையையும் முகாமை செய்தல் வேண்டும்.

6.4 கடன்பட்ட வெளிநாட்டு நாணயத்தினை மற்றொரு வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றல் செய்யுமிடத்து வெளிநாட்டு இணைத்தரப்பினரொருவருடனான காப்பிடல் ஊக்குவிக்கப்படும்.

6.5 உரிமம்பெற்ற வங்கிகள், பொருத்தமான வெளிநாட்டு நாணய முதிர்ச்சிப் பொருத்தப்பாடின்மை வரையறைகளுடன் சேர்த்து வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முகாமைப்படுத்தலுக்காகப் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கையினையும் நடைமுறைகளையும் நடைமுறைக்கிடல் வேண்டும்.

6.6 உரிமம்பெற்ற வங்கிகள் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளைச் சரியான நேரத்தில் மீளச்செலுத்துவதற்கான தமது இயலாற்றலை நிரூபித்தல் வேண்டும்.

7. தகைமையுடைய வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்

7.1 கடன் வழங்குநர் உறுதியான நிதியியல் நிறுவனம் என்பதற்கான சிறந்த பதிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சாத்தியமான கடன் வழங்குநர்களாக:

(i) பல்புடை அபிவிருத்தி வங்கிகள்,

(ii) பன்னாட்டு புகழ்பெற்ற வங்கிகளாகவுள்ள கடன்வழங்கல் நிறுவனங்கள்,

(iii) வெளிநாட்டு அரசுகளுக்குச் சொந்தமான அல்லது இணைந்த முகவர்கள்,

(iv) வெளிநாட்டு வங்கிகளின் தலைமை அலுவலகம் மற்றும் கிளைகள்,

(v) இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகள் என்பன காணப்படுகின்றன.

7.2 கடன்பாடுகளின் வட்டி வீதங்கள் (அனைத்துத் தொடர்பான செலவுகள் உட்பட) போட்டித் தன்மையுடையனவாக இருத்தல் வேண்டும்.

7.3 கடன் உடன்படிக்கை விரைவுபடுத்தப்பட்ட முற்கொடுப்பனவுப் பொறிமுறையினைக் கொண்டிருந்தாலொழிய கடன்பாடுகள் ஆரம்பத்தில் குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பனவுத் திகதிக்கு முன்னதாக தீர்ப்பனவு செய்யப்படக்கூடாது.

7.4 உரிமம்பெற்ற வங்கிகள் மீள்கொடுப்பனவிலிருந்து ஒரே நேரத்தில் பெருமளவு தொகையினைச் செலுத்தும் தாக்கம் ஏற்படுவதனைத் தணித்தல் வேண்டும்.

7.5 கடன்பாடுகள் மிகையான கொடுகடன் வளர்ச்சியை ஏற்பத்தக்கூடாது.

8. நீண்ட கால வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் பயன்பாடு

8.1 நீண்டகால வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளை நாட்டிலுள்ள பின்வரும் கடன் வழங்கல்/ முதலீட்டு நோக்கங்களுக்குப் பயன்படுத்தலாம்:

(i) ஏற்றுமதிகள், இறக்குமதிப் பதிலீடுகள், உட்கட்டமைப்பு, அரச அபிவருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதியிடல்;

(ii) வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பனவு செய்தல் அல்லது இளைப்பாற்றுதல்;

(iii) இலங்கை அரசாங்கத்தின் நாட்டிற்கான படுகடன் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளில் முதலீடு செய்தல்;

(iv) உள்நாட்டுக் கம்பனிகளின் நிதியியல் ஆற்றல்வாய்ந்த வெளிநாட்டு வியாபாரங்கள்; அத்துடன்

(v) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள நிதியியல் ஆற்றல்வாய்ந்த செயற்றிட்டங்கள் அல்லது வியாபாரங்கள்.

9. சமர்ப்பிக்கப்படவேண்டிய விண்ணப்பம்

9.1 மேலேயுள்ள பணிப்புரை 5இன் கீழ், நாணயச் சபையின் ஒப்புதலைப் பெறுவதற்கு உரிமம் பெற்ற வங்கிகள் பின்வரும் விபரங்களுடன் எழுத்து மூலமான கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

(i) கடன் வழங்குநரின் தோற்றப்பாடு;

(ii) கடனின் பண்புகள்;

(iii) இலக்குகளுடன் கூடிய குறிப்பிடப்பட்ட நோக்கம்/ குறிக்கோள்கள்;

(iv) தற்போதுள்ள வெளிநாட்டு நாணயக் கடன்களின் செயலாற்ற நிலைமை;

(v) உத்தேச இடர்நேர்வு முகாமைத்துவப் பொறிமுறை.

10. உயர்ந்தபட்ச வரையறைகளிலிருந்து விதிவிலக்கு

10.1 தலைமை அலுவலகத்திலிருந்து அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் இலங்கைக்கு வெளியே தொழிற்படுகின்ற ஏதேனும் கிளையிலிருந்து பெறப்படும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள், அவை பெறப்பட்ட திட்டமிட்ட நோக்கத்திற்காக அத்தொகைகள் பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, மேலேயுள்ள பணிப்புப்புரை 4இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளிலிருந்து விலக்களிக்கப்படும்.

10.2 இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பிணையங்களில் முதலீடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கடன்பாடுகள்.

11. விளக்கங்கள்

11.1 மொத்தச் சொத்துக்கள், இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் அல்லது உரிமம்பெற்ற வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தொகையாக இருத்தல் வேண்டும்.

11.2 வெளிநாட்டு நாணயம் என்பது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயமாகவிருத்தல் வேண்டும் எனப் பொருள்படும்.

12. நடைமுறைப்படுத்தல்

12.1 இப்பணிப்புரைகள் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்குவருதல் வேண்டும்

13. இடைக்கால ஒழுங்கு

13.1 மேலேயுள்ள பணிப்புரை 4இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச வரையறைகளை விஞ்சும் விதத்தில் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளை பெற்றிருக்கின்ற ஏதேனும் உரிமம் பெற்ற வங்கியானது வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வெளிநின்ற தொகை உயர்ந்தபட்ச வரையறைக்குக் கீழே வீழ்ச்சியடையும் காலம் வரை மேலும் கடன்பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டா.

14. இரத்துச்செய்தல்

14.1 பின்வரும் பணிப்புரையும் சுற்றறிக்கையும்

(i) உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான 2017ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை.

(ii) முதன்மைக் கணக்காளரினால் 1997 சனவரி 13ஆம் திகதியிடப்பட்டு விடுக்கப்பட்ட சுற்றறிக்கை எண் பிடி/எவ்எக்ஸ்/196 என்பன இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 12ஆம் இலக்கம்** 28 திசெம்பர் 2018

**பாசல் IIIஇன் கீழ், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்**
**உரிமம்பெற்ற சிறப்பியல்பு வய்ந்த வங்கிகளுக்கான முடுக்கி விகிதம்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) ஆகிய பிரிவுகளினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கமைய நாணயச் சபை, பாசல் IIIஇன் கீழ், முடுக்கி வீதத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக, 2017 திசெம்பரில் வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் விடுக்கப்பட்ட "பாசல் III: நெருக்கடிக்குப் பின்னரான சீர்திருத்தங்களை இறுதிப்படுத்தல்" இற்கு அமைவாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) இப்பணிப்புரையை விடுக்கிறது. இப்பணிப்புரைகளின் நோக்கம் யாதெனில், வங்கித்தொழில் துறையில் முடுக்கி கட்டியெழுப்பப்படுவதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு இடர்நேர்வினை அடிப்படையகக் கொண்ட மூலதன தேவைப்பாட்டினை அளப்பதற்கான நம்பகத்தன்மை கொண்ட துணை நிரப்பியாக செயற்படுவதற்காக எளிமையான, வெளிப்படையான இடர்நேர்வற்ற தன்மையினை அடிப்படையாகக் கொண்ட முடுக்கி விகிதத்தினை அறிமுகப்படுத்துவதும் பரந்தளவு நிதியியல் முறைமைக்கு பொருளாதாரத்திற்கும் சேதங்களை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் சீர்குலைவுகளை ஏற்படுத்தும் முடுக்கிக்கெதிரான செயன்முறைகளைத் தவிர்ப்பதற்கு உதவுவதும் எளிமையான, இடர்நேர்வற்றவற்றை அடிப்படையாகக் கொண்ட "முன்னெச்சரிக்கை" வழிமுறை என்பனவற்றுடன் கூடிய இடர்நேர்வினை அடிப்படையாகக்கொண்ட தேவைப்பாடுகளை வலியுறுத்துவதுமேயாகும்.

1. வலுவூட்டல்

1.1 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கித் தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) பிரிவுகளின் நியதிகளில், அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் வியாபாரத்தின் எந்தவொரு செயற்பாடும் நடத்தப்படவேண்டிய தன்மை பற்றி அனைத்து அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற வங்கிக்கும் பணிப்புரைகளை விதிப்பதற்கான அதிகாரம் நாணயச் சபைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

2. பிரயோகத்தின் நோக்கம்

2.1 இப்பணிப்புரைகள் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

அ. தனியான விதத்தில் மற்றும் ஒன்று சேர்க்கப்பட்ட விதத்தில் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவை அத்துடன்

ஆ. தனியானதொரு அடிப்படையில் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட வங்கிகளின் கிளைகள்

3. முடுக்கி விகிதத்தினைக் கணித்தல்

3.1 2019 சனவரி தொடக்கம் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான குறைந்தபட்ச முடுக்கி விகிதம் 3 சதவீதமாக இருத்தல் வேண்டும்.

3.2 முடுக்கி விகிதம் கீழே விபரிக்கப்பட்டவாறு கணிக்கப்படுதல் வேண்டும்.

$$\text{முடுக்கி விகிதம்} = \frac{\text{மூலதன அளவிடல்}}{\text{வெளிப்படுத்துகை அளவிடல்}}$$

3.3 முடுக்கி விகிதம் காலாண்டு அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்

4. மூலதன அளவுமுறை

4.1 முடுக்கி விகித கணிப்பிற்கான மூலதன அளவாக பாசல் IIIஇன் கீழ், மூலதன தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு உரிமம்பெற்ற வங்கிகள் அடுக்கு 1 மூலதனத்தினை (கழிவுகளின் பின்னர்) பயன்படுத்துதல் வேண்டும்.

5. வெளிப்படுத்துகை அளவுமுறை

5.1 வெளிப்படுத்துகை அளவுமுறை பின்வருமாறு கணிக்கப்படுகின்றது. வெளிப்படுத்துகை அளவுமுறை = ஐந்தொகையிலுள்ள வெளிப்படுத்துகை (ஐந்தொகையிலுள்ள பெறுதிகள் மற்றும் பிணையங்கள் நிதியிடல் கொடுக்கல்வாங்கல் வெளிப்படுத்துகை நீங்கலாக) + பெறுதி வெளிப்படுத்துகை + பிணையங்களின் நிதியிடல் கொடுக்கல்வாங்கல் வெளிப்படுத்துகைகள் + ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை

5.2 உரிமம்பெற்ற வங்கிகள் வெளிப்படுத்துகை அளவுமுறைகளை கணிப்பிடும்பொழுது, பௌதீக ரீதியிலான அல்லது நிதியியல் பிணையுறுதிகளை உத்தரவாதங்களை அல்லது ஏனைய கொடுகடன் இடர்நேர்வு தணிப்பு நுணுக்கங்களை கணக்கில் எடுக்கக்கூடாது.

5.3 தொடர்ச்சியான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, பாசல் III கட்டமைப்பின்படி அடுக்கு 1 மூலதனத்திலிருந்து கழிக்கப்பட்ட ஏதேனும் விடயங்களும் பொறுப்புக்களுடன் தொடர்பான விடயங்கள் நீங்கலாக ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்களும் வெளிப்படுத்துகை அளவுகளிலிருந்து கழிக்கப்படல் வேண்டும்.

5.4 வெளிப்படுத்துகை அளவு முறையின் கணிப்பு மீதான வழிகாட்டல்கள் இங்கேயுள்ள பின்னிணைப்பு அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளன.

6. இணக்குவிப்புக்களைப் பாதுகாப்பதற்கான படிமுறைகள்

6.1 உரிமம்பெற்ற வங்கியானது குறைந்தபட்ச முடுக்கி விகிதத்திற்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அத்தகைய வங்கி அத்தகைய இணக்குவிப்புக்களை நிறைவேற்றறுவதனை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் உறுதிப்படுத்தும் வரை பங்கிலாபங்களை செலுத்தவோ அல்லது இலாபத்தினை வெளியில் அனுப்பவோ அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நிலைமையினை மேலும் மோசமடையச்செய்யும் விதத்தில் வேறு ஏதேனும் நடவடிக்கையினை மேற்கொள்ளவோ கூடாது.

| | | | |
|---|---|---|---|
| 7. | வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள் | 7.1 | பாசல் III இன் கீழ் மூலதன தேவைப்பாடுகள் தொடா்பில் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரைகளில் விபரிக்கப்பட்ட வெளிப்படுத்துகை தேவைப்பாடுகள் முடுக்கி விகிதம் தொடா்பிலும் ஏற்புடைத்தாக இருத்தல் வேண்டும். |
| 8. | ஒழுங்கு முறைப்படுத்தல் அறிக்கையிடல் | 8.1 | ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் ஒவ்வொரு காலாண்டின் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறு முடுக்கி விகிதத்தினை ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த பின்னா் ஒரு வாரத்திற்குள் காலாண்டு கூற்றுக்களினூடாக (BSD-QF-36-LR மற்றும் BSD-QF-36-EM) வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறைமையினூடாக அறிக்கையிடல் வேண்டும். |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இந்தப் பணிப்புரையின் அட்டவணை அ மற்றும் ஆ இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Direction_No_12_of_2018.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.

**சுற்றறிக்கை 2018இன் 03ஆம் இலக்கம்** 28 திசெம்பா் 2018

**சேரல்: தேசிய சேமிப்பு வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலா்**

**தேசிய சேமிப்பு வங்கிக்காக பாசல் IIIஇன் கீழ் முடுக்கி விகிதத்தினை கணித்தல்**

உரிமம்பெற்ற வா்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பாசல் IIIஇன் கீழான முடுக்கி விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டப் பணிப்புரைகள் தொடா்பில் நாம் பின்வரும் விடயங்களைத் தங்களுக்கு அறியத்தருகின்றோம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | முடுக்கி விகித வெளிப்படுத்துகை அளவினைக் கணித்தல் | 1.1 | இலங்கை மத்திய வங்கி, முடுக்கி விகிதத்தினை கணிக்கின்ற போது வெளிப்படுத்துகை அளவு முறையிலிருந்து வங்கியின் சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட பணத்தில் அறுபது சதவீதத்தினை பிரசன்னப்படுத்தும் அரச பிணையங்களிலுள்ள முதலீடுகளை நீக்குவதற்கு தேசிய சேமிப்பு வங்கியினை அனுமதிப்பதற்கு தீா்மானித்திருக்கிறது. |
| | | 1.2 | 1.1இல் குறிப்பிடப்பட்ட தொகையானது டீளுனுஸ்ரீஞகு-36-நுஆ இன் காலாண்டுக் கூற்றிலுள்ள கூற்றுக் குறியீடு 36.2.1.1.1.0இனை அடிப்படையாகக் கொண்ட வெப்தளத்திலிருந்து கழிக்கப்படல் வேண்டும். |

ஏ.ஏ.எம். தாசிம்
**பணிப்பாளா்**
**வங்கி மேற்பாா்வைத் திணைக்களம்**

**சுற்றறிக்கை 2018இன் 04ஆம் இலக்கம்** 31 திசெம்பா் 2018

**இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது மீதான உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வழிகாட்டல்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமம் - இலங்கை நி.அ. நியமம் 9: நிதியியல் சாதனங்கள் என்பதனை இலங்கை உரிமம்பெற்ற வங்கிகள் பின்பற்றுவது தொடா்பில் நிலையானதும் முன்மதியுடையதுமான நடைமுறைகளை நிறுவும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி மேற்குறிப்பிட்டவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு உரிமம்பெற்ற வங்கிகளுக்கான இவ்வழிகாட்டல்களை இணைத்திருக்கிறது.

ஏ.ஏ.எம். தாசிம்
**பணிப்பாளா்**
**வங்கி மேற்பாா்வைத் திணைக்களம்**

**இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ. நியமம் 9: நிதியியல் சாதனங்கள் இதனைப் பின்பற்றுவது தொடா்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வழிகாட்டல்கள்**

1. அறிமுகம்

1.1 இலங்கையின் புதிய கணக்கீட்டு நியமமான “இ.நி.அ. நியமம் 9: நிதியியல் சாதனங்கள்” இனை 2018.01.01 அன்று அல்லது அதற்குப் பின்னா் தொடா்ந்துவருகின்ற நிதியியல் அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பிரயோகித்தல் வேண்டும் என்பதுடன் இ.நி.அ நியமம் 9இன் பின்பற்றுதலானது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மீது குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினையும் கொண்டிருக்கும்.

1.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடைத்தான விதத்தில் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், சமாப்பித்தல் மற்றும் வெளிப்படுத்தல் என்பவற்றின் பொறுப்பு உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளா் சபையிடமும் மூத்த முகாமைத்துவத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில், இலங்கை மத்திய வங்கி, வங்கித்தொழில் துறையில் இ.நி.அ நியமம் 9 இனை தொடா்ச்சியாகவும் முன்மதியுடனும் பிரயோகிப்பதனை ஊக்குவித்து வருகின்றது.

1.3 இது தொடா்பில், இ.நி.அ. நியமம் 9 இனை பின்பற்றுவது தொடா்பில் உரிமம்பெற்ற வங்கிகளின் கரிசனைகளை விளங்கிக் கொள்வதற்காக இலங்கை பட்டயக் கணக்காளா் நிறுவகம், கணக்காய்வாளா் குழுமம், மற்றும் வங்கித் தொழிற்துறை என்பனவற்றுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

1.4 இவ்வழிகாட்டல்கள், வங்கித்தொழில் மேற்பார்வை தொடர்பில் 2015 திசெம்பரில் பாசல் குழுவினால் விடுக்கப்பட்ட "கொடுகடன் இடர்நேர்வு மற்றும் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகளுக்கான கணக்கீடு" பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான நாணய அறிவுறுத்தல்கள்.'. ஒழுங்கு முறைப்படுத்துனர்களினால் விடுக்கப்பட்ட சிறந்த நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டும் பட்டயக் கணக்காளர் இலங்கை கணக்காய்வாளர் குழுமம் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகள் என்பனவற்றிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களைப் பரிசீலனையில் கொண்டும் தயாரிக்கப்பட்டன.

1.5 இவ்வழிகாட்டல்கள் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் தேவைப்பாடுகளுக்குட்பட்டு பின்பற்றப்படுதல் வேண்டும்.

**2. இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இனை பின்பற்றுவது தொடர்பில் வழிகாட்டல்களை விடுப்பதன் குறிக்கோள்கள்**

2.1 இலங்கை மத்திய வங்கி, இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகள் இ.நி.அ. நியமம் 9இனை பின்பற்றுவது தொடர்ச்சியானதும் முன்மதியுடையதுமான நடைமுறைகளை உருவாக்குவதற்கு எதிர்பார்கின்றது.

2.2 இதன்படி, நிதியியல் கூற்றுக்களை தயாரித்து, சமர்ப்பித்து, வெளியிடும் போது உரிமம்பெற்ற வங்கிகள் குறைந்த பட்சமாக பின்வரும் வழிகாட்டல்களை (தற்பொழுது ஏற்புடைத்தாகவுள்ள ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக) பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் கொடுகடன் இடர்நேர்வினை முகாமைப்படுத்தல், நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பு, பிணையுறுதிகளின் மதிப்பீடு, உள்ளக கணக்காய்வுகளின் வகிபாகம் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அறிக்கையிடலின் தேவைப்பாடுகள் என்பனவே அவை.

**3. நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்**

**3.1 நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்**

அ. நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலுக்கு வசதியளிப்பதற்காக பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வியாபார மாதிரிகளை (இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகளைப் பொறுத்தவரையில் மேற்பார்வை அதிகாரி) நடைமுறைப்படுத்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, குறிக்கோள்கள், வரைவிலக்கணங்கள், பண்புசார்ந்த நிலைமைகள், பிரமாணங்கள் மற்றும் தற்போது இடம்பெற்றுவருகின்ற அடிப்படை வியாபார மாதிரிகளை மதிப்பிடுவதற்கான போதுமான நடைமுறைகள் மற்றும் முறைமைகளுடன் சேர்ந்த தொழிற்பாட்டு கொள்கைகள் என்பனவும் நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

ஆ. அத்தகைய தொழிற்பாட்டுக் கொள்கைகள் குறைந்தபட்சம் வியாபார மாதிரி தீர்மானங்களுக்காக தீர்மானங்களை எடுக்கும் அதிகாரிகள், அடிக்கடி இடம்பெறாத போதுமானதற்றவை என கருதப்படக்கூடிய விற்பனை மட்டங்கள், வர்த்தக நோக்கங்களுக்காக அண்மிய காலவிற்பனை காலப்பகுதியினை பரிசீலனையில் கொள்ளுதல், இலாபம் அல்லது இழப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் ஊடாக சாதனங்களுக்கான சந்தைப்படுத்தும் பெறுமதி தேர்வுகளின் தெரிவு என்பவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

இ. இ.நி.அ. நியமம் 9இன் நியதிகளில், படுகடன் சாதனங்கள் முதல் மற்றும் வட்டியின் தனியான கொடுப்பனவுப் பரீட்சிப்பில் சித்தியடைய வேண்டும் (முதல் மற்றும் வட்டியின் தனியான கொடுப்பனவுகளை ஈடுசெய்வதற்கான ஒப்பந்த ரீதியான காசுப் பாய்ச்சல்) என்பதுடன் அவ்வாறிருக்குமிடத்து அத்தகைய சாதனங்கள் வியாபார மாதிரிப் பரீட்சிப்பின் அடிப்படையில் "கடன் தீர்ப்பனவுச் செலவில் நிதியியல் சொத்துக்கள்" என அல்லது "அனைத்தையுமுள்ளடக்கிய ஏனைய வருமானத்தினூடாக சந்தைப்பெறுமதியில் நிதியியல் சொத்துக்கள்" என வகைப்படுத்தப்படல் வேண்டும்.

ஈ. உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் உற்பத்திகள் மற்றும் ஒப்பந்தங்களின் முதல் மற்றும் வட்டியின் தனியான கொடுப்பனவுகளின் பண்புகளை மதிப்பிடுவதற்கும் அடையாளம் காண்பதற்குமாக அவை நியமப்படுத்தப்பட்ட செயன்முறைகள் விபரமான பரிசோதனைப் பட்டியல்கள் மற்றும் தீர்மான விடயங்களைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

உ. இதன்படி, நிதியியல் சொத்துக்களின் பரந்த ரீதியான வகைப்படுத்தலும் அதன் பின்னரான அளவிடலும் கீழேயுள்ள அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 1 நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலும் அளவிடலும்

| வியாபார மாதிரி | முக்கியமான பண்புகள் | வகைப்படுத்தலும் அதன் பின்னரான அளவிடலும் |
|---|---|---|
| | படுகடன் சாதனங்கள்[1] | |
| சேகரிப்பிற்காக வைத்திருக்கப்படுபவை | - ஒப்பந்த ரீதியான காசுப் பாய்ச்சல் கடனை சேகரிப்பதற்காக வைத்திருக்கப்படும் சொத்துக்கள்<br>- முதல் மற்றும் வட்டியின் தனியான கொடுப்பனவுகளை ஈடு செய்வதற்கான பரீட்சிப்பு<br>- குறைந்தளவான கால அளவும் குறைவான பிணையும் | கடன் தீர்ப்பனவுச் செலவு |
| சேகரிப்பு மற்றும் விற்பனை இரண்டிற்குமாக வைத்திருக்கப்படுபவை | - ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல் சேகரிப்பு மற்றும் விற்பனை இரண்டும்<br>- கூடியளவு கால இடைவெளி மற்றும் குறிப்பிடத்தக்களவு விற்பனைகள் | ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சந்தைப் பெறுமதி |

1. இம்முக்கிய பண்புகளுக்குப் புறம்பாக, உற்பத்தி, முகாமைத்துவ இழப்பீடுகள், இடர்நேர்வு முகாமைத்துவம், நோக்கங்கள், கால இடைவெளி மற்றும் குறிப்பிடத்தக்க விற்பனைகள் போன்ற மற்றைய பண்புகளையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பின்வருவன உட்பட ஏனைய வியாபார மாதிரிகள்<br>- வர்த்தகப்படுத்தல்<br>- சந்தைப் பெறுமதி அடிப்படையின் மீது சொத்துக்களை முறைப்படுத்தல்<br>- விற்பனையூடாக காசுப் பாய்ச்சலை உறுதிப்படுத்தல் | - சேகரிப்பின் ஆவணங்கள் அல்லது சேகரிப்பு மற்றும் விற்பனைகளுக்காக வைத்திருக்கப்படாதவை<br>- ஒப்பந்த ரீதியான காசுப் பாய்ச்சலின் சேகரிப்பு தற்செயலானது. | இலாபம் அல்லது நட்டமூடாக சந்தப்பெறுமதி |
| **பங்குரிமை மூலதனம் மற்றும் பெறுதிச் சாதனங்கள்** | | |
| பங்குரிமை மூலதன சாதனங்கள் | - வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்டவை | இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தைப்பெறுமதி |
| | - வர்த்தகப்படுத்தலுக்கானதல்ல என்பதுடன் மாற்றமுடியாத ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத் தேர்வு தெரிவு செய்யப்படாதவை | இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தைப்பெறுமதி |
| | - வர்த்தகப்படுத்தலுக்கானதல்ல என்பதுடன் மாற்ற முடியாத ஏனைய அனைத்தையுமுள்ளடக்கும் வருமான தேர்விற்கு தெரிவுசெய்யப்பட்டவை | ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சந்தைப் பெறுமதி |
| பெறுதிச் சாதனங்கள் | | இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தைப்பெறுமதி |

**3.2 நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்**

அ) நிதியியல் பொறுப்புக்களின் பரந்த ரீதியிலான வகைப்படுத்தலும் அளவிடலும் கீழேயுள்ள அட்டவணை 2இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2 நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அதன்பின்னரான அளவிடல்**

| வியாபார மாதிரி | முக்கியமான பண்புகள் | வகைப்படுத்தலும் அதன் பின்னரான அளவிடலும் |
|---|---|---|
| **படுகடன் சாதனங்கள்** | | |
| வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் பொறுப்புக்கள் | சந்தைப் பெறுமதி | இலாபம் அல்லது இழப்பினூடாக |
| சந்தைப்பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் பொறுப்புக்கள் | சந்தைப் பெறுமதி | பொறுப்புக்களில் கொடுகடன் இடர்நேர்வில் சந்தைப் பெறுமதியின் மாற்றத்தினால் ஏற்படும் மாற்றங்கள் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திலும்[2] ஏனைய தொகை வருமானக்கூற்றிலும் காட்டுதல் வேண்டும்.<br>வருமானம் மற்றும் எஞ்சிய தொகை வருமானக்கூற்றில் காட்டப்படல் வேண்டும். |
| கடன் தீர்ப்பனவுச் செலவில் ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் | கடன் தீர்ப்பனவுச் செலவு | - |

ஆ) உரிமம்பெற்ற வங்கியொன்று அதன் நிதியியல் பொறுப்புக்களை இலாபம் அல்லது இழப்பினூடாக குறித்துரைக்கப்பட்டவாறு கணக்கீடு செய்யுமாயின் சொந்த கொடுகடன் இடர்நேர்வுகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக அத்தகைய பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுவதுடன் மேலே குறிப்பிடப்பட்டவாறு, ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக வகை கூறப்படுதலும் வேண்டும். இந்நோக்கங்களிற்காக உரிமம்பெற்ற வங்கிகள் உள்ளக வழிகாட்டல்களையும் பிரமாணங்களையும் வடிவமைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**3.3 மீள் வகைப்படுத்தல்**

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் நிதியியல் சொத்துக்களின் மாற்றங்களுக்கான வியாபார மாதிரிகளது குறிக்கோள் மற்றும் அதன் முன்னைய மாதிரி மதிப்பீடு என்பன இனிவரும் காலங்களில் பிரயோகிக்க முடியாதிருக்குமாயின் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் ஏற்பாடுகளின் கீழ் நிதியியல் சொத்துக்களுக்கிடையில் மீள்வகைப்படுத்தல் தேவைப்படுத்தப்படுகின்றது.

2. அத்தகைய செயன்முறையானது இலாபம் அல்லது இழப்பில் கணக்கீட்டு பொருத்தப்பாடின்மையினை உருவாக்குமிடத்து அல்லது பெரிதாக்குமிடத்து நிறுவனமொன்று அப்பொறுப்பின் இலாபம் அல்லது இழப்புக்களின் மீது (அப்பொறுப்பின் கொடுகடன் இடர்நேர்வில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கம் உள்ளடங்கலாக) அனைத்து இலாபங்கள் அல்லது இழப்புக்களைக் காட்டுதல் வேண்டும்.

(ஆ) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், வியாபார மாதிரிகளில் காணப்படும் அத்தகைய மாற்றங்களும் மீள் வகைப்படுத்தல்களும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதுபற்றி அத்தகைய ஒப்புதல் திகதியிலிருந்து 7 வேலைநாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

**3.4 சந்தைப் பெறுமதியில் அளவிடல்**

நிதியியல் சாதனங்கள் பின்னர் சந்தைப் பெறுமதியில் அளவிடப்படும் பொழுது உரிமம்பெற்ற வங்கிகள் “இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ. நியமம் 13: சந்தைப் பெறுமதி அளவிடல்” இல் தரப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக வேண்டும் என்பதுடன் பின்வருவனவற்றை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(அ) போதுமான தகவல்கள் கிடைக்கத்தக்கதாக இருக்கையில் பொருத்தமான மதிப்பீட்டு நுணுக்கத்தினைப் பயன்படுத்துவது

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டு நுணுக்கங்களைத் தொடர்ச்சியாகப் பிரயோகிப்பது

(இ) பொருத்தமான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளின் பயன்பாட்டினை உச்சப்படுத்தல் அசாதாரணமான சூழ்நிலைகளில், அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளையும் பயன்படுத்தலாம்.

(ஈ) உரிய மதிப்பீட்டு உத்தியில் படிநிலையில் 3ஆம் மட்டத்திற்குக் கீழான உள்ளீடுகள் பயன்படுத்தப்படுமாயின் முதன்மை இடர்நேர்வு அலுவலர் அல்லது இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்யும் மிக மூத்த அலுவலர் பொருத்தமான தன்மையினையும் அத்தகைய உள்ளீடுகளின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**4. ஆற்றல் வாய்ந்த கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான கோட்பாடுகள்**

4.1 உரிமம்பெற்ற வங்கிகளின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்புடைத்தன்மை மற்றும் தொடர்பான மேற்பார்வை வழிகாட்டல் என்பனவற்றிற்கிணங்க, போதுமான பெறுமதியிழப்புப் படிகளைத் தொடர்ச்சியாக நிர்ணயிப்பதற்காக உரிமம்பெற்ற வங்கிகள் உள்ளகக் கட்டுப்பாடுகளின் காத்திரமான முறைமையொன்று உட்பட, பொருத்தமான கொடுகடன் இடர்நேர்வு நடைமுறைகளை கொண்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் பொறுப்புடையனவாகும்.

4.2 உரிமம்பெற்ற வங்கிகள், அனைத்து நிதியியல் சொத்துக்களின் மீதுமான இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கும் அளவிடுவதற்குமான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை வலியுறுத்தும் ஆற்றல் வாய்ந்த முறையியல்களை ஆவணப்படுத்துவதுடன் பின்பற்றுதலும் வேண்டும். பெறுமதி இழத்தல் படிகளின் அளவிடல் வலுவான முறையியல்கள் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதுடன் இதன் விளைவாக ஏற்புடையதான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க, எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் பொருத்தமானதும் சரியான நேரத்திலும் இனங்காணப்பட வேண்டும்.

4.3 உரிமம்பெற்ற வங்கிகளின் பெறுமதி இழத்தல் படிகளின் கூட்டுத்தொகையினைப் பொறுத்தவரை, படிகளின் கூறுகள் ஒன்றில் ஒன்றுசேர்ந்த அடிப்படையிலால் அல்லது தனிப்பட்ட அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன என்பதனை கருத்திற்கொள்ளாது, இலங்கை கணக்கீட்டு நியமக் குறிக்கோள்களுடன் இசைந்து செல்வதாகவும் போதுமானதாகவும் காணப்பட வேண்டும்.

4.4 எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடுவதற்கும் அளவிடுவதற்குமாக பயன்படுத்தப்படும் மாதிரிகளைப் பரிசோதிக்க உரிமம்பெற்ற வங்கிகள் கொள்கைகளையும் நடைமுறைகளையும் நடைமுறையில் வைத்திருத்தல் வேண்டும்.

4.5 எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களை அளவிடுவதற்கு பேரண்டப் பொருளாதார காரணிகள் உட்பட குறிப்பாக நியாயமானதும் ஆதரவுமிக்கதுமான முன்னோக்கிய தகவல்களை வலுவாகக் கருத்தில் கொண்டும் அனுபவம் நிறைந்த கொடுகடனின் நியாயபூர்வத் தன்மையினை உரிமம்பெற்ற வங்கிகள் பயன்படுத்தல் வேண்டும்.

4.6 உரிமம்பெற்ற வங்கிகள் கொடுகடன் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களை கணக்கிடவும் போதுமான முறைமைகள் கருவிகள் மற்றும் தரவுகளின் ஆதரவுடன் கூடிய ஆற்றல்வாய்ந்த கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடுகளையும் அளவிடல் செயன்முறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

4.7 உரிமம்பெற்ற வங்கியின் பொதுமக்களுக்கான வெளிப்படுத்துகைகள் உரிய நேரத்தில் அவை தொடர்பான பயன்மிக்க தகவலை வழங்குவதன் மூலம் வெளிப்படைத் தன்மையும் ஒப்பீட்டுத் தன்மையும் மேம்படுத்தப்படல் வேண்டும்.

**5. நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

**5.1 எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களைக் கணித்தல்**

உரிமம்பெற்ற வங்கிகள் பின்வருவனவற்றிற்காக எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களைக் கணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் தீர்ப்பனவுச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள்.

(ஆ) ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சந்தைப் பெறுமதியில் நிதியியல் சொத்துக்களில் கட்டாயமாக அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள்.

(இ) கொடுகடனை அதிகரிப்பதற்கான கடப்பாடொன்று காணப்படும் பொழுது (இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டவை நீங்கலாக) கடன் கடப்பாடுகள்.

(ஈ) நிதியியல் உத்தரவாத உடன்படிக்கைகள் (இலாபம் அல்லது இழப்புகளுக்கு சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டவை நீங்கலாக)

(உ) இ.க.நியமம் 17இன் செயற்பரப்பிற்குள் பெறத்தக்க: குத்தகை, குத்தகைகள்

(ஊ) இ.நி.அ. நியமம் 15 செயற்பரப்பிற்குள் ஒப்பந்தச் சொத்துக்கள்: வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

**5.2 ஆயுள்காலம் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களும் 12 மாத எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களும்**

(அ) ஒவ்வொரு அறிக்கையிடும் நாளிலும் ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட பின்னர் (கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவான கொடுகடன் பெறுமதி இழக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்கானவை தவிர) நிதியியல் சாதனங்களின் கொடுகடன் இடர்நேர்வு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்திருக்குமாயின் உரிமம்பெற்ற வங்கிகள் ஆயுள்காலம் எதிர்பார்க்கப்படுகின்ற இழப்புக்களுக்கு சமமான தொகையொன்றில் நிதியியல் சாதனங்களுக்கான இழப்புப் படியினை அளவிடல் வேண்டும்.

(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட கொடுகடன் பெறுமதியிழக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்காக ஆயுள்காலம் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்கள் அளவிடுதல் வேண்டும்.

(இ) கோட்பாட்டு ரீதியாக, ஆயுள்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களும் கொடுகடன் பெறுமதி இழக்கப்பட்ட கடன்களும் தனிப்பட்ட அடிப்படையில் வழங்கப்படுகின்றன. எனினும், கடன்பாட்டாளரை குறிப்பாகக் கொண்ட தகவல்கள் போதுமானதாக இல்லாமையின் காரணமாக, உரிமம்பெற்ற வங்கிகள் சேகரிப்பு அடிப்படையில் பொருத்தமான குழுமங்களின் மீது அல்லது சொத்துப்பட்டியல் மதிப்பீட்டின்படி செயற்படலாம்.

(ஈ) அறிக்கையிடும் நாளன்று நிதியியல் சாதனங்களின் கொடுகடன் இடர்நேர்வு, ஆரம்ப இனங்காணலின் பின்னர் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்திருக்காதவிடத்து, உரிமம்பெற்ற வங்கிகள், நிதியியல் சாதனங்களுக்கான இழப்புப்படிகளை 12 மாத எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்பிற்குச் சமமான தொகையில் அளவிடுதல் வேண்டும்.

**5.3 பொருளாதாரக் காரணிச் சீராக்கம்**

(அ) உரிமம்பெற்ற வங்கிகள் இலங்கை மத்திய வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் அத்துடன்/ அல்லது உலக வங்கி என்பவற்றினால் வெளியிடப்பட்ட எதிர்வுகள் மற்றும் எதிர்வு கூறல்களை அத்தகைய எதிர்வுகூறல்கள் கிடைக்கத்தக்கதாக இருக்குமிடத்து பொருளாதார நிலைமைகளையும் எதிர்வுகூறல்களையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் கொடுகடன் ஏற்பாட்டு மாதிரிகளை சீராக்கும் பொழுது எல்லா சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்துதல் வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட மூலங்களினூடாக தேவையான தகவல்கள் கிடைக்காதிருக்குமாயின், உரிமம்பெற்ற வங்கிகளை நம்பகமான மாற்று மூலங்களை பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் ஆவணச் சான்றுகளைப் பேணுதலும் வேண்டும்.

(இ) பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகளை பயன்படுத்தப்பட வேண்டிய மூலங்களை குறித்துரைப்பதற்கு பயன்படுத்தமுடியும் என்பதுடன் உரிமம்பெற்ற வங்கிகள் அவர்களுக்குச் சாதகமான விதத்திலான சிறந்த வளங்களைப் பெறக்கூடாது.

**5.4 கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு**

ஆயுள்காலம் எதிர்பார்க்கப்படுகின்ற இழப்புக்களை கணிப்பிடும் நோக்கிற்காக, பின்வரும் காரணிகள்/ நிபந்தனைகளில் குறைந்தபட்சமாக ஒன்று அல்லது அதற்குக் கூடுதலானவை பூர்த்திசெய்யப்பட்டிருக்குமாயின் அது கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பாகக் கருதப்படும்:

(அ) வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்த ரீதியான கொடுப்பனவுகள் 30[3] நாட்களுக்கும் கூடுதலாகச் செலுத்தப்படாதிருக்கும் பொழுது (இ.நி.அ. நியமம் 9இலுள்ள மறுக்கத்தக்க ஊகங்களுக்கு உட்பட்டு)

(ஆ) வாடிக்கையாளரின் கொடுகடன் தரமிடல் அல்லது சாதனமொன்று வெளிவாரி கொடுகடன் தரமிடல் முகவரினால் டீ இற்குக் குறைவாக தரமிடப்படும்பொழுது அத்துடன்/ அல்லது வங்கிகளின் உள்ளகத் தரமிடல் முறைமையில் இரண்டு புள்ளி தரக்குறைப்பு காணப்படும் பொழுது, வெளிவாரி கொடுகடன் தரமிடல் கிடைக்காத சந்தர்ப்பத்தில் உரிமம்பெற்ற வங்கிகள் வெளிவாரி கொடுகடன் மதிப்பிடல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தரமிடலுடன் அவர்களது உள்ளகக் கொடுகடன் இடர்நேர்வு தரமிடலினைச் சேர்த்து திட்டமிடுமாறும் இந்நோக்கங்களிற்காக உரிமம்பெற்ற வங்கிகள், பாசல் III இலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றிற்கான மூலதன தேவைப்பாடுகள் தொடர்பாக 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரையில் வழங்கப்பட்டுள்ள வெளிவாரி கொடுகடன் தரமிடல் திட்டத்தினைப் பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றதுடன்

(இ) எதிர்காலப் பொருளாதார நிலைமைகளின் நியாயமானதும் ஆதரவளிக்கத்தக்கதுமான எதிர்வுகூறல்கள் வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர் குழுமம், சொத்துப்பட்டியல் அல்லது சாதனங்களின் செயலாற்றத்தினை நேரடியாகப் பாதிக்கும் பொழுது

(ஈ) வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர் குழுமத்தின் அல்லது சாதனமொன்றின் செயலாற்றத்தினை நேரடியாகப் பாதிக்கின்ற விதத்தில் புவியியல் ரீதியான அமைவிடத்தில் அல்லது இயற்கையிலான பெரும் பாதிப்புக்களால் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும் பொழுது

(உ) பிணையுறுதியின் பெறுமதி குறிப்பிடத்தக்களவில் குறைவடையும் பொழுது அத்துடன்/ அல்லது பிணையுறுதியின் நம்பகத் தன்மை ஐயத்திற்குரியதாக இருக்கும் பொழுது. வரையறைகள் தீர்மானிக்கப்பட்டு உரிமம்பெற்ற வங்கிகளால் அவை ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

(ஊ) வாடிக்கையாளர் வழக்காடல்களுக்கு உட்பட்டிருப்பதன் காரணமாக அது கொடுகடன் வசதியின் செயலாற்றத்தினை குறிப்பிடத்தக்களவிற்கு பாதிக்கும் பொழுது

(எ) நிறுவன ரீதியான வாடிக்கையாளரொருவரின் மூத்த முகாமைத்துவத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள்

(ஏ) ஆரம்பத்தில் இணங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டுகளுக்கும் கூடுதலான காலமாக வியாபாரத் தொடர்பாடுகள்/ செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதில் காணப்பட்ட தாமதம்

(ஐ) கொடுப்பனவுகளின் நீடிப்பு மற்றும் பிற்போடுதல், ஒப்பந்தங்களின் தளர்த்தல் என்பன உள்ளிட்ட சலுகைகள் காரணமாக நியதிகளை மாற்றியமைத்தல்

(ஒ) வாடிக்கையாளர் மரணமடையுமிடத்து/ வங்குரோத்துத் தன்மையினை அடையும் பொழுது

(ஓ) வங்கி, வாடிக்கையாளரை தொடர்புகொள்ள அல்லது கண்டுபிடிக்க இயலாமல் இருக்கும்பொழுது

(ஔ) முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வாடிக்கையாளரின் வரிக்கு முன்னரான சொத்துப் புரள்வில் அத்துடன் அல்லது இலாபத்தில் 50 சதவீதம் அல்லது கூடுதலான வீழ்ச்சி அத்துடன்

(க) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய பெறுமதியில் 25 சதவீதத்திற்கும் கூடுதலான தேய்வு.

**5.5 எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களைக் கணிப்பதற்கான மாதிரிகள்**

(அ) உரிமம்பெற்ற வங்கிகள் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடும் பொழுது அனைத்துக் கிடைக்கத்தக்கதும்

3. நிலுவையிலுள்ள நாட்களை கொடுப்பனவுகளுக்கான ஒப்பந்த ரீதியான திகதியிலிருந்து கணித்தல் வேண்டும்.

தொடர்பானதுமான உள்ளக மற்றும் வெளிவாரி தரவுகளைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் மதிப்பீடுகள் வலுவான, பக்கச்சார்பற்றவைகளாகவும் தற்போதைய வெளிப்படுத்துகையினைப் பிரதிபலிப்பதாக இருப்பதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள் இ.நி.அ. நியமம் 9இன் கீழ் எதிர்பாபர்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களைத் தீர்மானிப்பதற்கு வலுவான மாதிரிகள் அபிவிருத்தி செய்தல் வேண்டும். அத்தகைய மாதிரிகளை வங்கியின் இடர்நேர்வு தோற்றப்பாட்டினை பிரதிபலிக்கின்ற விதத்தில் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

(இ) உரிமம்பெற்ற வங்கிகள் அவர்களினால் இந்நோக்கத்திற்காக பின்பற்றப்படுகின்ற மாதிரிகளை விளங்கிக் கொள்ளும் விதத்தில் தொடர்பான அலுவலர்கள் சிறந்த பயிற்சியையும் தகுதியும் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) மாதிரி அபிவிருத்தி தொடர்பில், வெளிவாரி விற்பனையாளர்கள்/ ஆலோசனையாளர்களின் உதவியினைப் பெறும்பொழுது கடுமையான ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(உ) வேறுபட்ட சொத்துப்பட்டியலுக்கும் சாதனங்களுக்கும் வேறுபட்ட மாதிரிகள் பயன்படுத்தப்படுவதாயின், உரிமம்பெற்ற வங்கிகள் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் ஏன் பொருத்தமானவை என்பதற்கான காரணங்களை ஆவணப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் அனைத்துக் கொடுகடன் மாதிரிகளும் குறைந்தபட்சம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

(ஊ) கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடும் அளவீட்டு மாதிரிகளும் தொடர்ச்சியாகத் துல்லியமான தன்மை, சீரான தன்மை மற்றும் பாரபட்சமற்ற உள்ளக மதிப்பீடுகள் என்பனவற்றை இயலச் செய்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் காத்திரமான மாதிரி உறுதிப்படுத்தல் செயன்முறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

(எ) உரிமம்பெற்ற வங்கிகள் இலாபத்தினை சுமூகப்படுத்தும் நோக்கத்திற்காக பயன்படுத்துகின்ற மாறிகள், உள்ளீடுகள் மற்றும் அனுமானங்களில் மாற்றங்கள் செய்வதனை நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. எதிர்பார்க்கப்படும் இழப்பு மாதிரியில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணம் மற்றும் நியாயப்படுத்தலிற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் முதன்மை இடர்நேர்வு அலுவலரினால் நியாயப்படுத்தப்பட்டு பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும்.

(ஏ) கடன்பாட்டாளரின் மீள்கொள்வனவு இயலாற்றல் தொடர்பில் பொதுவான பொருளாதார அபிவிருத்திகளில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கத்தினை கரிசனையில் கொண்டு அனுமானங்களை போதுமான முன்மதியுடன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஐ) இலங்கையைப் பொறுத்தவரையில் கொடுகடன் மாதிரிகளின் பொருத்தமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளைப் பொறுத்தவரையில் தலைமை அலுவலகத்தில் அல்லது பிராந்திய அலுவலகங்களினால் விருத்தி செய்யப்பட்ட மாதிரிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் உள்நாட்டு நடைமுறைப்படுத்தல் குழு பொருத்தமான செல்லுபடியாகும் நடைமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**5.6 மேலும், நிதியியல் சாதனங்களின் பெறுமதி இழப்புத் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் இணைப்பு 1இல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.**

**5.7 இவ்வழிகாட்டல்கள் வங்கித்தொழில் துறைக்குள்ளாக சந்தை அபிவிருத்திகள், தரவின் தரம், மாதிரி அபிவிருத்திகள் மற்றும் இயலளவு என்பனவற்றைக் கவனத்தில் கொண்டு இவ்வழிகாட்டல்களை எதிர்காலத்தில் மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**

**6. பிணையுறுதி மதிப்பீடு**

6.1 பிணையுறுதி தேறல்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற காசுப் பாய்ச்சலானது அவதானிக்கப்பட்ட நம்பகமான சந்தை மதிப்பீடுகளின் அடிப்படையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் இடர்பாட்டிலுள்ள சொத்தினை விற்பதில் இணைந்து காணப்படும் இயல்பான நிச்சயமற்ற தன்மையினையும் பொருத்தமான விதத்தில் பிரதிபலித்தல் வேண்டும். (அத்தகைய தேறலுக்காக எடுக்கப்பட்ட நேரம் உட்பட)

6.2 மதிப்பீட்டில் காணப்படும் ஏதேனும் அதிகரிப்பு, அத்தகைய அதிகரிப்புக்கள் நிலையாக இருப்பதற்கான உறுதிப்படுத்தப்பட்ட வலுவான சான்றுகள் மூலம் நிரூபிக்கப்படுதலும் வேண்டும்.

**7. உள்ளகக் கணக்காய்வின் வகிபாகம்**

7.1 உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் உரிமம்பெற்ற வங்கிகளின் கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடு, முறைமைகளின் அளவீடு மற்றும் செயன்முறைகளின் காத்திரமான தன்மையினை சுயாதீனமாக மதிப்பிடல் வேண்டும் என்பதுடன் கொடுகடனின் நியாயபூர்வமான தன்மை ஏற்றுக்கொள்ளப்படுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

7.2 உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் அனைத்து இடர்நேர்வு மதிப்பிடல் மாதிரிகளையும் உள்ளீடுகளையும், ஏதேனும் தரவு சுமூகப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள் ஏதேனும் இருப்பின் அதனையும் மதிப்பிடுதல் வேண்டும்.

7.3 முக்கியமான தூண்டுநர்கள் அவதானத்திலெடுக்கப்பட்டு துல்லியமான முறையில் பயன்படுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்தும் பொருட்டு உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு பின்புலப் பரீட்சிப்பின் போதுமான தன்மை மற்றும் காத்திரமான தன்மை என்பன தொடர்பில் உத்தரவாதத்தினை வழங்குதல் வேண்டும்.

**8. ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்**

8.1 பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், இலங்கை மத்திய வங்கி சொத்துக்களின் வகைப்படுத்தல், அளவிடல் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பாக தற்போதுள்ள முன்மதியுடைய ஒழுங்குவிதிகளைத் தொடர்ந்தும் நடைமுறைக்கிட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருக்கின்றது.

8.2 இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் தற்போது நடைமுறையிலுள்ள கட்டளைகள், தீர்மானங்கள், பணிப்புரைகள், வழிகாட்டல்கள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பனவற்றிற்கிணங்க, இலங்கை மத்திய வங்கி வெப்தள நியதிச்சட்டக் கூற்றுக்கள் உட்பட அனைத்து காலாந்தர தகவல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.3 உரிமம்பெற்ற வங்கிகள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு என்பனவற்றின் கீழ் அடையாளம் காணவும் சரிசெய்யவும் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்காகவும் தேவையான தரவுகள்/ பதிவேடுகளைத் தனித்தனியாகப் பேணுதல் வேண்டும்.

8.4 எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடுகள் மீதான தாக்கமானது உரிமம்பெற்ற வங்கிகளின் மூலதனத் திட்டமிடல் மற்றும் அழுத்தப் பரீட்சிப்பு செயன்முறைகளைத் தயாரிக்கும் பொழுது உள்ளடக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

8.5 மூலதனம் மீதான அழுத்தத்தினைத் தவிர்க்கும் பொருட்டும் வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுடன் இசைந்து செல்லும் விதத்திலும் உரிமம்பெற்ற வங்கிகள் இ.நி.அ.நியமம் 9 இனைப் பின்பற்றிய முதல் நாளிலுள்ளவாறு, இ.க.நியமம் 39இன் கீழ் கொடுகடன் இழப்பு எற்பாடுகளுடன் ஒப்பிடும்பொழுது இ.நி.அ. நியமம் 09இலிருந்து தோன்றுகின்ற கணக்காய்வு செய்யப்பட்ட மேலதிக கொடுகடன் இழப்பு ஏற்பாடுகளை பாசல் ஐஐஐஇன் கீழ் மூலதன தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டப் பணிப்புரைகளின் கீழ் மூலதன போதுமை விகிதத்தினை கணிக்கின்ற நோக்கிற்காக கீழே தரப்பட்டுள்ளவாறு நான்கு ஆண்டுகளையும் கொண்ட நிலைமாற்றுக் காலம் முழுவதும் பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் மற்றும் தேறிய விளைவுகள் வரி நீங்கலான தாக்கம் என்பனவற்றிற்கான முதல்நாள் தாக்கம் மீதான ஏதேனும் மற்றைய சீராக்கங்கள் தவிர்ந்தவற்றை படிப்படியாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

**அட்டவணை 3 - மூலதனப் போதுமை விகித கணிப்பிற்கான முதல்நாள் தாக்கத்தின் படிப்படியான தன்மை**

| முதல்நாள் தாக்கத்தினது ஈர்ப்பின் ஒன்றுசேர்ந்த சதவீதம் | | | | |
|---|---|---|---|---|
| 01.01.2018 | 31.12.2018 | 31.12.2019 | 31.12.2020 | 31.12.2021 |
| 12.5 | 25 | 50 | 75 | 100 |

**9. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்துகைகள்**

9.1 உரிமம்பெற்ற வங்கிகள் இ.நி.அ. நியமம் 9இனைப் பின்பற்றுவதனால் தோன்றுகின்ற முதல்நாள் தாக்கத்தின் மொத்த தொகையினையும் மேலே 8.5இல் குறித்துரைக்கப்பட்டவாறு நிதியியல் கூற்றிலுள்ள நிலைமாற்றுக் காலம் முழுவதும் மூலதன போதுமை விகிதத்திற்கான இதன் தாக்கத்தினையும் வெளிப்படுத்தல் வேண்டும்.

9.2 எனினும், இ.நி.அ. நியமம் 9 பின்பற்றப்படுகின்ற முதல் நாளன்றுள்ள நிதியியல் கூற்றுக்களிலுள்ள முதல்நாள் தாக்கம் முழுமையாக சீராக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

9.3 கீழேயுள்ள அட்டவணைகள் 4 மற்றும் 5ல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் 2018.12.31 தொடக்கம் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து 30 நாட்களுக்கிடையில் bsd@cbsl.lk ஊடாக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை 4 - தவணைதவறும் நிகழ்தகவு மற்றும் இழப்புக்களைத் தருகின்ற தவணைதவறுதல்கள்**

**......... இல் உள்ளவாறு ஒன்றுசேர்ந்த பெறுமதி இழத்தல்**

| வியாபாரப் பிரிவு/ உற்பத்தி/ வகை அல்லது வேறு ஏதேனும் அடிப்படை | தவணை தவறும் நிகழ்தகவு | | | இழப்புக்களைத் தருகின்ற தவணை தவறுதல்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**அட்டவணை 5 - ........... இல் முடிவடையும் காலாண்டிற்கான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை கணிப்பதற்காக கொடுகடன் வசதிகளை/ வெளிப்படுத்துகைகளை தரமுயர்த்தல்**

| | |
|---|---|
| தரமுயர்த்தப்பட்ட வசதிகளின் எண்ணிக்கை<br>கட்டம் 2இலிருந்து கட்டம் 1இற்கு<br>கட்டம் 3இலிருந்து கட்டம் 1இற்கு<br>கட்டம் 3இலிருந்து கட்டம் 2இற்கு | |
| தரமுயர்த்தப்பட்ட மொத்த வசதிகளின் பெறுமதி<br>கட்டம் 2இலிருந்து கட்டம் 1இற்கு (ரூ.மில்)<br>கட்டம் 3இலிருந்து கட்டம் 1இற்கு (ரூ.மில்)<br>கட்டம் 3இலிருந்து கட்டம் 2இற்கு (ரூ.மில்) | |
| கட்டம் 2 மற்றும் 1இற்கு தரமுயர்த்தப்பட்டமை மீதான வருமானக் கூற்றிற்கு மீள அங்கீகரிக்கப்பட்ட வட்டி வருமானத்தின் மொத்தம் (ரூ.மில்.) | |

**இணைப்பு I**

**நிதியியல் சாதனங்களின் பெறுமதி இழத்தல் மீதான மேலதிக வழிகாட்டல்கள்**

இ.நி.அ.நியமம் 9இன் கீழ் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களைக் கணிக்கும்பொழுது வங்கித்தொழில் துறைக்குள் நிலையான பிரயோகங்களையும் ஒப்பீட்டுத் தன்மையினையும் மேம்படுத்தும் நோக்குடன் பின்வரும் வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

1. **எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களைக் கணிப்பதற்காக கொடுகடன் வசதிகள்/ வெளிப்படுத்துகைகளை வகைப்படுத்துவதற்காக அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினாலும் பூர்த்தி செய்யப்படவேண்டிய குறைந்தபட்ச பிரமாணங்கள் மீதான வழிகாட்டல்கள் பின்வருமாறு:**

1.1 கட்டம் 1

கட்டம் 2 அல்லது கட்டம் 3இன் கீழ் வகைப்படுத்தப்படாத அனைத்துக் கொடுகடன் வசதிகளும்

1.2 கட்டம் 2

(அ) கீழே கட்டம் 3இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகள் தவிர, இ.நி.அ. நியமம் 9இல் குறிப்பிடப்பட்டவாறு மறுக்கத்தக்க ஊகங்களுக்கு உட்பட்டு வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்த ரீதியான கொடுப்பனவுகள் 30 நாட்களுக்கும் கூடுதலாக நிலுவையிலிருக்குமிடத்து, கொடுகடன் வசதிகள்

(ஆ) கீழே 3.2இல் குறித்துரைக்கப்பட்ட கொடுகடன் வசதிகள்/ வெளிப்படுத்துகைகள் தவிர, இரண்டு தடவைகள் வரை மீளமைக்கப்பட்ட அனைத்து மீளமைக்கப்பட்ட கடன்கள்[1]

(இ) “இ.நி.அ. நியமம் 9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வழிகாட்டல்கள்”இன் பந்தி 5.4இல் அடையாளம் காணப்பட்டவாறு குறைந்த செயலாற்றத்தினைக் கொண்ட கொடுகடன் வசதிகள்/ வெளிப்படுத்துகைகள்.

1.3 கட்டம் 3

(அ) இ.நி.அ. நியமம் 9இல் குறிப்பிடப்பட்டவாறு, மறுக்கத்தக்க ஊகங்களுக்குட்பட்டு, வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்த ரீதியான கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கும் கூடுதலாக நிலுவையிலிருக்குமிடத்து, கொடுகடன் வசதிகள்

(ஆ) கீழே 3.2இல் குறித்துரைக்கப்பட்ட கொடுகடன் வசதிகள்/ வெளிப்படுத்துகைகள்: தவிர, இரண்டு தடவைகளுக்கும் மேலாக மீளமைக்கப்பட்ட அனைத்து மீள்வகைப்படுத்தப்பட்ட கடன்களும்

(இ) கீழே 3.2இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுகடன் வசதிகளை/ வெளிப்படுத்துகைகள் தவிர்ந்த, அனைத்து மீளமைக்கப்பட்ட கடன்களும்[2]

(ஈ) இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளின்படி, செயற்படாதனவாக வகைப்படுத்தப்பட்ட அனைத்துக் கொடுகடன் வசதிகள்/ வாடிக்கையாளர்கள்.

(உ) “இ.நி.அ. நியமம் 9: நிதியியல் சாதனங்கள்” இனைப் பின்பற்றுவது தொடர்பில் வர்த்தக வங்கிகளுக்கான வழிகாட்டல்கள்” இன் பந்தி 5.4இல் அடையாளம் காணப்பட்டவாறான செயற்படாத கொடுகடன் வசதிகள்/ வாடிக்கையாளர்கள்.

2. **எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களின் கணிப்பிற்காக குறைந்தபட்சம் பயன்படுத்தப்பட வேண்டிய தவணை தவறும் நிகழ்தகவு மற்றும் இழப்பினை வழங்கிய தவணை தவறல் என்பவற்றைக் கணிப்பதற்கான வழிகாட்டல்**

2.1 உரிமம்பெற்ற வங்கிகள் தவணை தவறும் நிகழ்தகவுளைக் கணிக்கும்பொழுது குறைந்தபட்சம் ஐந்தாண்டு தரவுகளைப் பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் தரவுகளை அல்லது உள்ளீடுகளை ஏதேனும் விதத்தில் சுமுகப்படுத்துவதனை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2.2 உரிமம்பெற்ற வங்கிகள், 5 ஆண்டுகளுக்கும் குறைவான போதுமானதற்ற கொடுகடன் வரலாற்றைக் கொண்டனவாக புதிதாகக் கட்டியெழுப்பப்பட்ட வங்கியொன்றாக இருந்தாலன்றி, தவணை தவறும் நிகழ்தகவுகளையும் இழப்புக்களை வழங்கிய தவணை தவறுகளையும் கணிப்பதற்கு பதிலிகளைப் பயன்படுத்தக்கூடாது.

2.3 போதுமான தரவுகள் அல்லது உள்ளீடுகள் இல்லாமையின் காரணமாக உரிமம்பெற்ற வங்கி இழப்புக்களை ஏற்படுத்திய தவணைத் தவறுகளைக் கணிக்க முடியாமல் இருக்கும் பொழுது அத்தகைய வங்கிகள் அத்தகைய வெளிப்படுத்துகைகளுக்காக இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகைகளில் குறைந்தபட்சம் 45 சதவீதத்தினைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

2.4 உரிமம்பெற்ற வங்கிகள், கடன்கள் மற்றும் முற்பணங்கள் வருமான இனங்காணல் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான 2008ஆம் ஆண்டின் 3ஆம் மற்றும் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் பிரிவு 4 (2)இன் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கு உட்பட்டு, 10 சதவீத உச்ச எல்லையுடன் அதே நாணய வகையில் குறித்துரைக்கப்பட்ட காசினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட கடன்களுக்கான 0 சதவீதம் கொண்ட இழப்புக்களை ஏற்படுத்திய தவணைத் தவறுகையொன்றினைப் பயன்படுத்தல் வேண்டும்.

2.5 வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட இறைமையினால் வழங்கப்பட்ட வெளிப்படுத்துகை தொடர்பில் பின்வருவனவற்றை பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) உரிமம்பெற்ற வங்கிகள், வெளிவாரி கொடுகடன் தரமிடல் அளவுகளுடன் இணைக்கப்பட்ட நாட்டிற்கான தவணை தவறிய நிகழ்தகவுகளை பயன்படுத்துவதன் மூலம் தவணை தவறிய நிகழ்தகவுகளை கணித்தல் வேண்டும்.

(ஆ) எதிர்பார்க்கப்பட்ட இழப்புக்களை கணிக்கும்பொழுது இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகைகளில் 20 சதவீதத்தினை குறைந்தபட்சமாக பிரயோகிக்கலாம்.

2.6 இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகைகளுக்காக இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறியவற்றினை கணிக்கும்பொழுது:

(அ) உத்தரவாதமானது வட்டி உட்பட முழுமையாக உள்ளடக்கப்பட்டு அரசாங்கத்தின் பொறுப்புக்களாக அறிக்கையிடப்பட்டிருக்குமிடத்து, பூஜ்யத்தினை, இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகைகளை வெளிப்படுத்துகைகளுக்கு பிரயோகிக்க முடியும்.

(ஆ) மேலேயுள்ள விடயம் 2.6 (அ) தவிர்ந்த, வேறேதேனும் வடிவத்திலான மற்றைய உத்தரவாதங்களுக்கான இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறியவைகளை பூச்சிய இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறியவைகளைப் பயன்படுத்தாமல் கணிக்க வேண்டும்.

(இ) குறைந்தபட்சம் 20 சதவீதம் கொண்ட இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறியவைகளை வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட அரச உத்தரவாதங்களுக்காக பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

3. **ஏனைய வழிகாட்டல்கள்**

3.1 **ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள்:** எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக் கணிப்புக்களுக்காக ஐந்தொகைக்கு

1 கொடுகடன் தரம் மோசமடைந்தமையின் காரணமாக மூல மீள்கொடுப்பனவு நியதிகளை திருத்தியமைக்கப்பட்டிருக்குமிடத்து மீளமைக்கப்பட்ட வசதிகள் காணப்படுகின்ற வேளையில் தொடர்பான கொடுகடன் வசதி இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரையின்படி செயற்படும் கடன்களாகவும் முற்பணங்களாகவும் காணப்படுகின்றன.

2 இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரையின்படி செயற்படாக் கடன்களாகவும் முற்பணங்களாகவும் காணப்படும் கொடுகடன் வசதிகளின் மூல மீள்கொடுப்பனவு நியதிகள் மாற்றப்படுவது மீளமைக்கப்பட்ட வசதிகளாகக் கருதப்படும்.

வெளியிலான வெளிப்படுத்துகைகளை மாற்றுகின்றபொழுது, உரிமம்பெற்ற வங்கிகள், வரலாற்று தரவுகள் கிடைக்காதவிடத்து 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பாசல் IIIஇன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான வங்கித் தொழில் சட்டப் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறு கொடுகடன் மாற்றல் காரணங்களின்படி பெறுமானங்களைப் பயன்படுத்த முடியும்.

3.2 **கொடுகடன் வசதிகளை தரமுயர்த்தல்:** கொடுகடன் வசதிகளை உயர்ந்த கட்டத்திலிருந்து தாழ்ந்த கட்டத்திற்கு (அதாவது கட்டம் 3 இலிருந்தும் கட்டம் 2இற்கு) தரமுயர்த்தும் பொழுது

(அ) கொடுகடன் வசதிகளைத் தரமுயர்த்தல் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அது கடன் மீளாய்வு பொறிமுறையிலிருந்தும் சுயாதீனமாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய தரமுயர்த்தலானது பணிப்பாளர் சபையின் ஒப்புதலளிக்கப்பட்டதொன்றாக பகுத்தறிவுத்தன்மை மற்றும் போதுமான ஆவணப்படுத்தல் என்பனவற்றின் மூலம் ஆதரவளிக்கப்படலும் வேண்டும் அத்துடன்

(இ) மீளமைக்கப்பட்ட வசதிகளைத் தரமுயர்த்தும் பொழுது, மீளவமைப்பிற்குப் பின்னரான 1ஆவது மூலதனம் அத்துடன்/ அல்லது வட்டி செலுத்தப்படவேண்டிய உரிய திகதியினைத் தொடர்ந்து, குறைந்தபட்சம் 90 நாட்களைக் கொண்ட திருப்திகரமான செயலாற்றக் காலப்பகுதி பரிசீலனையில் கொள்ளப்படுதல் வேண்டும். மீள அட்டவணையிடப்பட்ட வசதிகளை தரமுயர்த்துவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள், கடன்கள் மற்றும் முற்பணங்களை வகைப்படுத்தல் வருமான இனங்காணல் மற்றும் ஒதுக்கங்கள் தொடர்பான 2008ஆம் ஆண்டின் 3ஆம் மற்றும் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

3.3 **கொடுகடன் தரமிடலை அப்படையாகக் கொண்ட உள்ளகத் தரமிடல்:** உரிமம்பெற்ற வங்கியொன்று, பின்வருவனவற்றிற்கு இணங்கிஒழுகாமல் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களைக் கணிப்பதற்கு உள்ளக தரமிடல் அடிப்படை கொடுகடன் தகவல்களைப் பயன்படுத்தக்கூடாது.

(அ) உள்ளகத் தரமிடல் அடிப்படைத் தகவலுடன் விலையிடல் பொறிமுறை இணைக்கப்பட வேண்டும்.

(ஆ) 3.3 (அ) இற்கு உட்பட்டு குறைந்தபட்சம் ஐந்தாண்டு உள்ளகத் தரமிடல் அடிப்படையைக் கொண்ட வரலாற்றுத் தரவினை கொண்டிருத்தல் மற்றும்

(இ) பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் நடைமுறையிலிருத்தல் வேண்டும் என்பதுடன் உள்ளகத் தரமிடல் அடிப்படையிலான உள்ளீடுகளும் தேவையான மாதிரிகளும் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினால் சுயாதீனமாக மீளாய்வு செய்யப்படுவதும் அவசியமாகும்.

**சுற்றறிக்கை எண் 35/03/019/0026/001**

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்**

**“மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளர்” தொடர்பான அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

1. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2018 மாச்சு 01ஆம் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். 2006 சனவரி 6 மற்றும் 2006 செத்தெம்பர் 8ஆம் திகதியிடப்பட்ட மற்றும் கணனி வழி ‘அதேநேர பணச் சந்தை கண்காணிப்பு முறைமை’ என்ற தலைப்பின் கீழான கடிதங்களுட்பட, கணனி வழி அதேநேர பணச் சந்தை கண்காணிப்பு முறைமை மற்றும் திரவத்தன்மை கண்காணிப்பு முறைமை தொடர்பாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் விடுக்கப்பட்ட முன்னைய எந்தவொரு தொடர்பூட்டலும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் நோக்கத்திற்காக, பங்கேற்கின்ற நிறுவனங்கள் என்பது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினையும் முதனிலை வணிகர்களையும் கருதுதல் வேண்டும்.

2. **அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

2.1. **அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகரொருவரினால் தரகு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்கானவை (இதனகத்துப்பின்னர் நேரடியான வணிகங்களெனக் குறிப்பிடப்படும்.)**

(i) அனைத்துப் பங்கேற்கும் நிறுவனங்களும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்புக்களினூடாக பங்கேற்கும் நிறுவனமொன்றுடன் மேற்கொள்கின்ற அனைத்து மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில், கடன் வழங்குகின்ற பங்கேற்கும் நிறுவனங்களை (கடன் வழங்குனர்) பொறுத்தவரை கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து 15 நிமிடங்களுக்கிடையில் தேவையான விபரங்களைப் பதிவுசெய்துகொள்ள வேண்டுமெனவும் கடன்படுகின்ற பங்கேற்கும் நிறுவனங்களை (கடன்பெறுனர்) பொறுத்தவரை கடன் வழங்குநரால் அத்தகைய பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து 15 நிமிடங்களுக்கிடையில் அதனை அங்கீகரிப்பதன் மூலமாக இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(ii) அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பினூடாக வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பண சந்தை கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரை கடன் வழங்குகின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (கடன் வழங்குநர்) கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டதிலிருந்து 15 நிமிடங்களுக்குள் தேவையான விபரங்களை பதிவுசெய்ய வேண்டுமெனவும் கடன்படுகின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (கடன்பாட்டாளர்) கடன் வழங்குனரினால் செய்யப்பட்ட அத்தகைய பதிவுசெய்தல் நேரத்திலிருந்து 15 நிமிடங்களுக்கும் அங்கீகாரமளிப்பதன் மூலம் அதனை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

2.2. **அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகரொருவரினால் தரகு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரை**

(i) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகரொருவரினால் தரகு செய்யப்பட்ட அனைத்து அழைப்பு மற்றும் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களும் ஆரம்பத்தில் தொடர்பான அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களினால் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளர்களிடம் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(ii) கடன் வழங்கியவரா அல்லது கடன்பட்டவரா என்பதனைக் கருத்திற்கொள்ளாது அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களினால் பதியப்பட்ட அனைத்து கொடுக்கல்வாங்கல்களையும் அதிகாரமளிக்கப்பட்ட

பணத்தரகர்களினால் அது அறிவிக்கப்பட்டதிலிருந்து 30 நிமிடங்களுக்குள் மத்திய ஒருக்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரூடாக இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(iii) கடன் வழங்கியவரா அல்லது கடன்பாட்டாளரா என்பதனைக் கருத்திற் கொள்ளாது அனைத்து முதனிலை வணிகர்களும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களினால் பதியப்பட்ட அனைத்துக் கொடுக்கல்வாங்களையும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகரினால் அது அறிவிக்கப்பட்டதிலிருந்து 30 நிமிடங்களுக்குள் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரூடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

**3. திரவத் தன்மை மதிப்பீடுகளை அறிக்கையிடுதல்**

ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் முதனிலை வணிகரும் ஒவ்வொரு வேலை நாளன்றும் 0830 மணிக்கு முன்னதாக மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரூடாக குறித்துரைக்கப்பட்ட படிவத்திலுள்ளவாறு அதன் மதிப்பிடப்பட்ட நாளாந்த திரவத்தன்மை நிலைமைகளை அறிவித்தல் வேண்டும். அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் திரவத்தன்மை மதிப்பீடு தொடர்பில் அனைத்து நேரங்களிலும் உயர்ந்தமட்ட துல்லியத்தன்மை பேணப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும். மேலும் ஒவ்வொரு வேலைநாளினதும் உண்மையான திரவத்தன்மை நிலைமைகளின் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் தேவையான இடைமுகம் கிடைக்கச்செய்யப்பட்டதும் அடுத்துவரும் வேலை நாளன்று வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**4. புளும்பேர்க் மற்றும் தோம்சன் ரொயிட்டர்கள் வர்த்தகப்படுத்தல் தளங்களினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல்**

மேலேயுள்ள பிரிவு 2.1இல் காட்டப்பட்டுள்ள நடவடிக்கை முறைகள் புளும்பேர்க் மற்றும் தோம்சன் ரொயிட்டர்களூடாக நிறைவேற்றப்பட்ட அனைத்து அழைப்பு மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஏற்புடைத்தாகும். மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளருக்கு அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் அத்தகைய நேரம்வரை தோம்சன் ரொயிட்டரினாலும் புளும்பேர்க்கினாலும் உறுதிப்படுத்தப்படும்.

5. அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அழைப்பு மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களினதும் கூற்றுக்கள் இணைப்பு 1இற்கிணங்க ஒவ்வொரு நாளும் பி.ப. 3.00 மணிக்கு முன்னதாக பங்கேற்கும் நிறுவனங்களினால் ெழனளூஉடிளட.டம என்ற மின்னஞ்சலூடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**6. தவறுகளைத் திருத்துதல்**

6.1 ரொயிட்டர்ஸ், புளும்பேர்க், பணத்தரகர்களூடாக அல்லது நேரடியாக மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களில் காணப்படும் தவறுகளை ஒவ்வொருநாளும் பி.ப. 3.30 மணிக்கு முன்னர் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பில் திருத்துவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

6.2 எனினும், தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டதும் சாத்தியமானதற்கு விரைவாக கொடுக்கல்வாங்கல்களை ஆரம்பத்தில் பதிவுசெய்த தரப்பினரால் திருத்துவதற்கான கோரிக்கையொன்று உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு மின்னஞ்சல் செய்யப்படல் வேண்டும். (திருத்துவதற்கான கோரிக்கையினை மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரூடாக தன்னியக்கமாக சமர்ப்பிக்கப்படும் வசதி திருத்தத்திற்கான கோரிக்கைகளுக்கான காரணங்களைப் பதிவுசெய்வதற்கான குறிப்புக்களுடன் கிடைக்கச் செய்யப்படும்).

6.3 அனைத்து தவறுகளும் திருத்தங்களும் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களித்தினால் மிக நெருக்கமாக கண்காணிக்கப்படும்.

**7. மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரூடாக அறிக்கையிடுவதற்கான ஆளுகைக் கோட்பாடுகள்**

**7.1 சபையின் வகிபாகமும் பொறுப்புக்களும்**

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களின் பணிப்பாளர் சபை தொடர்பான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளுக்கு ஒப்புதளித்தல் வேண்டுமென்பதுடன் அனைத்து திறைசேரி தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றும் சரியான விதத்தில் முகாமைப்படுத்தப்படுகின்றன என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**7.2 முதன்மை நிறைவேற்று அலுவலரின் வகிபாகமும் பொறுப்புக்களும்**

*i* *அறிக்கையிடுகின்ற செயன்முறை தொடர்பில் தெளிவான உள்ளக கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.*

அ. தரவினைப் பதிவதற்குப் பொறுப்பான அலுவலர்களும் அதற்கு ஒப்புதலளிப்பதற்குப் பொறுப்பான ஆளும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆ. மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரூடாக அறிக்கையிடப்படும் செயன்முறைக்கான சபையின் ஒப்புதல்

இ. ஏதேனும் முரண்பாடுகள், மோசடி அல்லது தவறான நடத்தை இடம்பெறும் சந்தர்ப்பத்தில் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக மூத்த அலுவலர்களுக்கு உரிய நேரத்தில் அறிக்கையிடுவதனை இயலுமைப்படுத்தும் விதத்தில் நிறுவப்படவுள்ள தரவு சமர்ப்பிப்புடன்கூடிய அறிக்கையிடல் அமைப்பு.

ஈ. அறிக்கையிடலின் துல்லியத்தன்மையினை மீள் பரிசோதிப்பதற்காக அறிமுகப்படுத் தப்படுவதற்கு அவசியமான பொருத்தமான முறைமையொன்று.

*ii* *கண்காணிப்பு நடவடிக்கைகள்*

அ. மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரூடான அறிக்கையிடல் தொடர்பான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களின் உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்விற்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

ஆ. இத்தொழிற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவற்காக நிறுவப்பட வுள்ள பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று

இ. அறிக்கையிடும் செயன்முறையில் காணப்படும் ஏதேனும் தவறான நடத்தை அல்லது ஒழுங்கீனங்களை நேரகாலத்துடன் கண்டறிவதற்காக அறிமுகப்படுத்தப்படவுள்ள காத்திரமான கொள்கையொன்று.

8. இத்தொழிற்பாட்டு அறிவித்தல்கள் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு (1) மாத்திற்குள் அறிக்கையிடல் கட்டமைப்பிற்காக உள்ளக வழிகாட்டலொன்று உருவாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட கட்டமைப்பிற்கு ஏதேனும் மாற்றங்கள் செய்யப்படின் அதுபற்றி அத்தகைய மாற்றத்தின் திகதியிலிருந்து ஒரு (1) வாரத்திற்குள் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படுவது அவசியமாகும்.

9. கொடுக்கல்வாங்கல் தொடர்பான அனைத்து ஆவணங்கள் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் தொடர்பான செயன்முறைகள் என்பன ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் திகதியிலிருந்தும் அல்லது கொள்கைகள் மற்றும் விடயத்தினைப் பொறுத்து அத்தகைய கொள்கைகள் மற்றும் செயன்முறைகளின் ஒப்புதல் திகதியிலிருந்து குறைந்தபட்சம் 6 ஆண்டு காலப்பகுதிக்கு வைத்திருக்கப்படல் வேண்டும்.

10. **இணங்கி நடந்துகொள்ளாமையின் விளைவுகள்**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஏற்பாடுகளுக்கிணங்கிக் கொள்ளத் தவறுவது அத்துடன் அல்லது தவறான அல்லது பிழையான தகவல்களை சமர்ப்பிப்பது அல்லது ஏதேனும் தகவல்களை தவிர்ப்பது விசாரணைகளின் பின்னர் நடவடிக்கைகளை எடுப்பதற்கு வழிவகுக்கும். அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

அ. தவறிழைத்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அல்லது முதனிலை வணிகர்களுக்கு எச்சரிக்கையொன்றினை விடுத்தல் அத்துடன் அல்லது

ஆ. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கு இணங்கியொழுகத் தவறும் ஏதேனும் சந்தர்ப் பத்திற்காக ரூ.500,000 கொண்ட கொடுப்பனவினைச் செலுத்துதல் அத்துடன்/ அல்லது

இ. ஏதேனும் தவறான அல்லது பிழையான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு அல்லது ஏதேனும் தகவல்களை தவிர்த்தமைக்காக ரூ.500,000 கொண்ட கொடுப்பனவினைச் செலுத்துதல்.

பி.டப்ளியூ.டி.என்.ஆர். றொட்றிகோ
**பணிப்பாளர்/உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**இணைப்பு 1**

**வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தை கொடுக்கல்வாங்கல்கள் மீதான அறிக்கை**

**அறிக்கையிடுகின்ற இணைத்தரப்பின் பெயர்:**

**திகதி:**

**ரூ. மில்லியன்**

| இணைத் தரப்பு | கடன் வழங்கல் தொகை | கடன்பட்ட தொகை | வீதம் | கொடுக்கல் வாங்கலின் வகை (அழைப்பு/ மீள்கொள்வனவு | பணத்தரகர் (வணிகத்தினூடான தரகர்களுக்காக) | தீர்ப்பனவுத் திகதி | முதிர்ச்சித் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

2061/7ஆம் இலக்க - 2018 மாச்சு மாதம் 05ஆந் திகதி திங்கட்கிழமை

(அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) பொது

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்**

**இலங்கை மத்திய வங்கியினால் செய்யப்படும் அறிவித்தல்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 10 (இ) ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி,
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2018 மாச்சு 5

**பணத் தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள்**

எடுத்துக்காட்டலும் நடைமுறைக்கு வரும் திகதியும்

1. இவ்வொழுங்குவிதிகள், 2016 யூன் 01ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இல.1969/17இல் வெளியிடப்பட்ட 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத் தரகர் ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான 2013 பெப்புருவரி 08ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இல.1796/21இல் வெளியிடப்பட்ட 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணத் தரகுத் தொழில் ஒழுங்குவிதிகளை நீக்கி அதற்குப் பதிலீடாக விளங்கும் என்பதுடன் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகளென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் இது 2018 மாச்சு 5ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

**அதிகாரச் சான்றிதழ்**

2. இலங்கை மத்திய வங்கியின் (இதனகத்துப் பின்னர் மத்திய வங்கி என அழைக்கப்படும்) நாணயச் சபையினால் வழங்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் சபை என அழைக்கப்படும்) "அதிகாரச் சான்றிதழ்" இல்லாமல் பணத் தரகுத் தொழிலில் எந்தவொரு ஆளும் ஈடுபடவோ அல்லது இன்னுமொரு ஆளை ஈடுபடுத்தவோ கூடாது.

**விண்ணப்பிப்பதற்கான தகுதி**

3. 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்று குறைந்தபட்சம் ரூ. பத்து மில்லியனுக்குச் (ரூ.10,000,000/-) சமமான கூறப்பட்ட மூலதனத்தினை அல்லது சபையினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் அத்தகைய வேறு மூலதனத்தினைக் கொண்டிருக்கின்றவிடத்து மாத்திரமே மேலேயுள்ள (2) ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட அதிகாரச் சான்றிதழுக்காக விண்ணப்பிக்க தகுதியுடையதாகும்.

**விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல்**

4. அதிகாரச் சான்றிதழை வழங்குவதற்கான பரிசீலனையின் பொருட்டு விண்ணப்பதாரக் கம்பனி: "அதிகாரச் சான்றிதழுக்கான" விண்ணப்பமொன்றினை இவ்வொழுங்குவிதியில் விபரிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பம் செய்து ஒழுங்குவிதிகளில் (5) இல் விபரிக்கப்பட்டுள்ள அத்தகைய ஏனைய ஆவணங்களுடன் சேர்த்து இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளரிடம், சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

5. வேறு விதமாக குறிப்பிடப்பட்டாலன்றி உள்நாட்டுத் தொழிற்பாடுகள் பணிப்பாளரினால் விபரிக்கப்பட்ட படிவத்தில் "அதிகாரச் சான்றிதழுக்கான" விண்ணப்பத்தினை பின்வரும் ஆவணங்கள்/ தகவல்களுடன் சேர்த்து விண்ணப்பத்தாரக் கம்பனி சமர்பித்தல் வேண்டும்:

(அ) கம்பனியின் அகவிதியின் பிரதி மற்றும் கம்பனிப் பதிவாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் படிவம் 20;

(ஆ) சாத்தியவள அறிக்கையின் பிரதி;

(இ) முதன்மை நிறைவேற்று அலுவலர் உட்பட அனைத்து பணிப்பாளர்கள், முக்கிய பங்குடமையாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக நியமிக்கப்பட்டுள்ள அனைவரினதும் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள்/ அத்துடன் அல்லது மற்றும் கடவுச்சீட்டு இலக்கங்கள், பதவிகள், முகவரிகள் மற்றும் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பான விபரங்கள்;

(ஈ) படிவம் டிஓடி/எம்பீ/002 (அட்டவணை 1 மற்றும் 11) இலுள்ளவாறு முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் முக்கிய பங்குடமையாளர்களினதும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக நியமிக்கப்பட்டவர்களினதும் சத்தியக் கடதாசிகள்;

(உ) மேலே ஒழுங்கு விதி 4இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் அத்துடன் பணத் தரகுத் தொழிலில் ஈடுபடுவது பற்றி கம்பனியின் அகவிதியில் குறிப்பிடப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் கம்பனி அதன் தொழிலாக பணத் தரகுத் தொழிலில் ஈடுபடுவதற்கு விண்ணப்பதாரக் கம்பனிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதனைக் குறிப்பிடும் சபையின் தீர்மானம்;

(ஊ) கம்பனி குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்துள்ளது என்பதனை நிரூபிக்கின்ற ஆவண ரீதியிலான சான்று;

(எ) தடங்கலற்ற தொழிற்திட்டத்தின் பிரதியொன்று; அத்துடன்

(ஏ) பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் குறித்துரைக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் தகவல்கள்.

**சரியான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்**

6. அதிகாரச் சான்றிதழுக்கான விண்ணப்பத்திலுள்ள ஏதேனும் தகவல்கள் அல்லது அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மற்றைய ஆவணங்களில் அல்லது இவ்வொழுங்கு விதிகளின் கீழ் அதிகாரச் சான்றிதழ் வழங்குவதற்கான விண்ணப்பதாரியின் பொருத்தப்பாடு பற்றிக் கண்டறிவதற்காக நடத்தப்பட்ட ஏதேனும் விசாரணை அல்லது புலனாய்வுகளின் போது அவை பொய்யானவையாக அல்லது பூர்த்தி செய்யப்படாதவையாக அல்லது பிழையானவையாக இருக்குமிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும், அதிகாரச் சான்றிதழ் இரத்துச் செய்யப்படும் அல்லது விண்ணப்பதாரி/ அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி, சபை பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய ஏதேனும் வழிமுறைகளுக்கு உட்பட வேண்டியிருக்கும்.

**ஆண்டுச் சான்றிதழ் கட்டணம்**

7 (அ) ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியும் மத்திய வங்கிக்கு ஆண்டுச் சான்றிதழ் கட்டணத்தினையும் சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடிய வேறு ஏதேனும் கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) செலுத்தப்படத்தக்க கட்டணங்களும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான ஏனைய அறிவித்தல்களும் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் விடுக்கப்படும் சுற்றறிக்கைகள் மூலம் அறிவிக்கப்படும்.

**பணத் தரகுத் தொழிலை முடிவுறுத்துதல்**

8. (அ) அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்று தொழிலினை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்குமிடத்து அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி தொழிலை முடிவுறுத்துவதற்கு குறைந்தபட்சம் மூன்று (3) மாதங்களுக்கு முன்னதாக அவ்வாறு முடிவுறுத்துவதற்கான தீமானம் பற்றி பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதிகாரச் சான்றிதழினை தொழிலினை முடிவுறுத்தியதன் பின்னர் மூன்று (3) வேலை நாட்களுக்குப் பிந்தாத விதத்தில் கையளித்தல் வேண்டும்.

**அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகள்**

9. அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்றின் அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(அ) முகவரொருவராக பணத் தரகுத் தொழில், வெளிநாட்டுச் செலாவணித் தரகுத் தொழில், வங்கிகளுக்கிடையிலான பணத் தரகுகளில் ஈடுபடுதல், இலங்கையிலும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டுச் சந்தைகளிலுமுள்ள பணம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் வாடிக்கையாளர்களுடனான நிதியியல் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரையில் ஏற்பாட்டாளராக அல்லது இடையீட்டாளராகவும் விளங்குதல்:

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி ஈடுபடுவதற்கென சபையினால் காலத்திற்குக் காலம் அதிகாரமளிக்கப்படக் கூடிய வேறு ஏதேனும் பணத் தரகுத் தொழிலுடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

**தரகுப் பணம் மற்றும் கட்டணங்கள்**

10. பணத் தரகுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்று அத்தகைய வழங்கப்பட்ட பணிக்காக தரகுப்பணம் அல்லது கட்டணங்களைப் பெறுவதற்கு உரித்துடையதாக இருத்தல் வேண்டும்.

**தொழிற்பாட்டு ஒழுங்குகள்**

11. அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்று:

(அ) முதன்மையாளராகவன்றி, கொடுக்கல்வாங்கல்களுக்கான தரகுகளை மேற்கொள்வதில் தரகரொருவராக, முகவராக, ஏற்பாட்டாளராக அல்லது இடையீட்டாளராக மாத்திரம் தொழிற்படுவதாகவும்:

(ஆ) ஒழுக்காற்றுக் கோவை வழிகாட்டலாக பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஒழுக்கக் கோவையினைப் பின்பற்றுதல் அல்லது பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட அத்தகைய ஒழுக்கக் கோவை இல்லாதவிடத்து அசோசியேசன் கம்பிஸ்ட் இன்ரநஷனல் (ஏசிஐ) மாதிரிக் கோவையினைப் பின்பற்றுகின்றதாகவும்:

(இ) உள்வரும் கட்டளைகளுக்கான குவிவு மையமாகவும், தொடர்பான நிதியியல் சாதனங்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கண்காணிப்பவராகவும் நிலுவையிலுள்ளதும் நிறைவேற்றப்படாததுமான கொடுக்கல்வாங்கல்களைப் பேணுகின்றதாகவும்;

(ஈ) கொடுக்கல்வாங்கல்களின் ஆரம்பப் பேச்சுவார்த்தைகளின் போதும் அது நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாகவும் கொடுக்கல்வாங்கல்களுக்கான அடிப்படையான (உ-ம்: பொருத்தமான வணிகத்திற்காக இணைத்தரப்பினரைக் கண்டறிதல்) தகைமை பெறுவதற்கான நிபந்தனைகளைத் தெளிவாகக் குறிப்பிடுவதாகவும்;

(உ) எல்லா நேரங்களிலும் தொழில்சார் நிபுணத்துவத்துடன் நடந்து கொள்ள வேண்டியதுடன் தெளிவானதும் பிழையான அர்த்தங்கள் கொள்ளப்படாததுமான சொற்பதங்களைப் பயன்படுத்துவதாகவும்;

(ஊ) தனித்தனியான கணக்குகளைக் கொண்ட, முழுமையானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான பதிவேடுகளைப் பேணுகின்றதாகவும்;

(எ) கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கான தமது உண்மையான விருப்பத்தினை இரு தரப்பினரும் வெளிப்படுத்தும் வரை முதன்மையாளரின் பெயர்களை வெளியிடாமலும்;

(ஏ) கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஏதேனும் பணத் தரகுக் கம்பனி அத்துடன்/ அல்லது வேறு எவரேனும் தரப்பினர் தவறான நடத்தைகள் அல்லது முறையற்ற விதங்களில் நடப்பதற்கான அறிகுறிகள்/ சான்றுகள் இருக்குமாயின், அத்தகைய அறிகுறிகள் அல்லது சான்றுகள் தெரிய வருமாயின் அதனை பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கு அறிவித்தலும்;

(ஐ) தொடர்பான நிதியியல் சாதனங்கள் பற்றிய அறிவில் நிபுணத்துவம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் நிதியியல் சாதனங்கள் தொடர்பான கேள்வி மற்றும் நிரம்பல் நியமங்கள் மற்றும் நியதிகள் மற்றும் அவை தொடர்பான சந்தைத் தகவல்கள் பற்றி முழுமையாக கலந்துரையாடக் கூடியவர்களாகவும் அறிவு பெற்றவர்களாகவும்;

(ஒ) இணைத்தரப்பினர்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் போது மத்திய வங்கியினால் வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மீது வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான விடயங்களுக்கு இணங்கி நடப்பவர்களாகவும்;

(ஓ) உணர்வு பூர்வமான தகவல்களை அடையாளம் கண்டு அவற்றைக் கையாளத் தேவையான தேர்ச்சியையும் கவனிப்பையும் பெறத்தக்க விதத்தில் போதுமான பயிற்சியை தொழிற்பாட்டு அலுவலர்களுக்கு வழங்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

**முதன்மை அலுவலர்களுக்குத் தேவையான தகுதி மற்றும் பொருத்தம்**

12. (அ) அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளிலுள்ள முதன்மை நிறைவேற்று அலுவலர், பணிப்பாளர் அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் உள்ளிட்ட குறிப்பிட்ட பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஆட்கள் அவர்/ அவர்களுக்குப் பொறுப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தக்க தகுதியும் பொருத்தமும் உடையவராகவும் தேவைப்படுத்தப்பட்ட அனுபவம், தகைமைகள் மற்றும் தகுதியைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடும் பொழுது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்**

(ஆ) ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனியும் மேலே 12(அ)இல் குறிப்பிடப்பட்டவாறு தொடர்பான அலுவலர்களிடமிருந்தும் முக்கிய பங்குடமையாளர்களிடமிருந்தும் அட்டவணை I, II மற்றும் III இல் உள்ளவாறான சத்தியக்கடதாசியையும் பிரகடனங்களையும் பெற்று பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**முதன்மை நிறைவேற்று அலுவலருக்கான முக்கிய பங்குடமையாளர் களுக்கான முக்கிய முகாமைத்துவ ஆள் மற்றும் பணிப்பாளர்களுக்கான பொருத்தம் மற்றும் தகுதி தேவைப்பாடுகள்**

(இ) பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பீடு செய்த பின்னர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளரினால் ஒப்புதல் வழங்கப்பட்டாலொழிய ஆளெவரும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனியின் பணிப்பாளர் சபையின் கூட்டங்களில் பணிப்பாளராக கலந்து கொள்ளவோ முதன்மை முகாமைத்துவ ஆளாக அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராகத் தொழிற்படவோ அல்லது முக்கிய பங்குடமையாளராக தொழிற்படவோகூடாது.

**முக்கிய பங்குடமையாளர்கள்**

(ஈ) இந்நோக்கத்திற்காக எவரேனும் ஆளுடன் அவரின்/ அவளின் தொடர்பான தரப்பினர், அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனியின் 20 சதவீதம் அல்லது அதற்கும் கூடுதலான பங்குடமையினைக் கொண்டிருக்குமிடத்து அவர்கள் முக்கிய பங்குடமையாளர்கள் எனக் கருதப்படுகின்றனர். அத்தகைய பங்குடமையாளர்/கள் முக்கிய பங்குடமையாளர்களாக மாறும் பொழுது, அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனியானது கம்பனியின் அத்தகைய பங்குடமையாளர்/களின் பெயரினை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(உ) மேலே 12 (ஈ) இல் குறிப்பிடப்பட்ட தொடர்பான தரப்பினர்கள் தனிப்பட்ட ஒருவராக, பங்குடமையாக, அல்லது நிறுவனமாக, ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அல்லது நியமனத்தரூடாக அல்லது வேறு எவரேனும் ஆட்களுடன் சேர்ந்து கூட்டாக பங்குடமையாக அல்லது நிறுவனமொன்றாக கையேற்றுக் கொண்ட அனைத்துப் பங்குடமைகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

**முக்கிய அலுவலர்களினதும் முக்கிய பங்குடமை யாளர்களினதும் அனுமதி**

(ஊ) உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளர் 13ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பற்றி கவனத்திற் கொண்டு முதன்மை நிறைவேற்று அலுவலர், பணிப்பாளர், முக்கிய முகாமைத்துவ ஆள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனியின் முக்கிய பங்குடமையாளர் ஆகிய ஆட்கள் தொடர்பிலான உத்தேச நியமனங்களுக்கு (அல்லது அவர்களைப் பதவியில் தொடர்ந்து நீடித்தல் தொடர்பில்) ஒப்புதலளிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம் என்பதுடன், தேவையான ஆவணங்கள் பெறப்பட்டு முப்பது நாட்களின் பின்னர் அத்தகைய ஒப்புதல்கள் அல்லது நிராகரிப்புப் பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிக்கு அறிவிக்கப்படும்.

(எ) உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அத்தகைய ஒப்புதல் அல்லது நிராகரிப்புப் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனிக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் மேலே 12 (ஊ) குறிப்பிடப்பட்ட அத்தகைய அறிவித்தலைக் குறிப்பிட்ட முதன்மை நிறைவேற்று அலுவலர், பணிப்பாளர், முதன்மை முகாமைத்துவ ஆள் அல்லது முக்கிய பங்குடமையாளருக்கு கம்பனி அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அதனை நடைமுறைக்கிடுதலும் வேண்டும்.

**பின்னர் ஏற்படும் தகைமையீனங்களை அறிவித்தல்**

(ஏ) ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனியும் தொடர்பான முதன்மை நிறைவேற்று அலுவலர், பணிப்பாளர், முதன்மை முகாமைத்துவ ஆள் அல்லது முக்கிய பங்குடமையாளர் எவரேனும் ஆட்கள் பதவி வகுப்பிற்குப் பொருத்தமும் தகுதியுமற்றவர் என நியாயமான காரணங்களைக் கொண்டிருக்குமிடத்து அல்லது கண்டறியுமிடத்து அதனை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்கு அத்தகைய சந்தேகங்கள் அறிய வந்த அல்லது கண்டுபிடிக்கப்பட்ட உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(ஐ) சூழ்நிலைகள் வேறுபட்டு, மாற்றமடைந்து, திகதி செல்லுபடியற்றதாகி, அவை ஏற்புடைத்தற்றதாகுமிடத்து அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலர், பணிப்பாளர், முக்கிய முகாமைத்துவ ஆள் அல்லது முக்கிய பங்குடமையாளர் போன்றவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசி அல்லது பிரகடனங்கள் பிழையான தகவல்களைக் கொண்டிருக்குமிடத்து, அது பற்றி உடனடியாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

**நாணயச் சபைக்கான மேன்முறையீடு**

(ஒ) மேலேயுள்ள 12(ஊ)ஆம் ஒழுங்குவிதியின் கீழ் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளரின் நிராகரிப்பு அல்லது தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட ஆளொருவர் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனியினால் அது பற்றி அறிவிக்கப்பட்ட பதின்னான்கு நாட்களுக்கிடையில் காரணங்களைக் குறிப்பிட்டு நாணயச் சபைக்கு மேன்முறையீடொன்றினை மேற்கொள்ள முடியும்.

(ஓ) நாணயச் சபை, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட காரணங்களையும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் ஆட்சேபங்களையும் பரிசீலனையில் கொண்ட பின்னர் பணிப்பாளரினால் செய்யப்பட்ட நிராகரிப்பினை உறுதிப்படுத்தலாம் அல்லது நிராகரிக்கலாம்.

**முதன்மை அலுவலர்கள் மற்றும் கணிசமான பங்குடமை யாளர்களாக நியமிக்கப்படு வதற்குத் தடையாகவுள்ள தகைமையீனங்கள்**

13\. ஆளொருவர் பின்வருமாறிருப்பின் அத்தகைய ஆள் விடயத்திற்கேற்ப அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்றின் பணிப்பாளராகவோ, முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினராகவோ நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுப்பதற்கு, அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்:

(அ) பணத் தரகு, நிதி, சட்டம், வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது ஏதேனும் தொடர்பான துறையில் கல்வியியல் அல்லது தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள் அல்லது காத்திரமான அனுபவத்தினைக் கொண்டிராதவிடத்து;

(ஆ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள நீதிமன்றத்தினால் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(இ) ஒழுக்கக்கேட்டை உறுதிப்படுத்துகின்ற தவறொன்றுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஈ) எந்தவொரு நீதிமன்றத்தினதும் ஏதேனும் தீர்ப்பினை அல்லது கட்டளையைத் திருப்தி செய்வதற்கு, அல்லது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியிருப்பின்;

(உ) இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பொலிசாரினால் ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் உயர் தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாய சபையினால் உருவாக்கப்பட்ட வேறேதேனும் குழுவினால் மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியல் செயல் தொடர்பில் ஏதேனும் புலனாய்விற்கு அல்லது விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்குமிடத்து;

(ஊ) அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நேர் முன்னரான கடந்த பதினைந்து ஆண்டு காலப்பகுதியின் எவ்வேளையிலும் மோசம், ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியல் செயல் என்பன தொடர்பில் இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால், உயர் தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால் நியாய சபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் குழுவினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பின்;

(எ) இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் கம்பனிச் சபையில் பணிப்பாளரொருவராக, பிரதான நிறைவேற்று அல்லது வேறு அலுவலராகச் செயலாற்றுவதிலிருந்து ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அகற்றப்பட்டிருப்பின் அல்லது இடைநிறுத்தப்பட்டிருப்பின்;

(ஏ) ஒரு மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியல் செயல் என்பனவற்றை உட்படுத்துகின்ற தவறொன்றிற்காக நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்கு அமைந்தவராயிருப்பின்;

(ஐ) சித்த சுவாதீனமற்றவரென தகுதி வாய்ந்த நியாயதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(ஒ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் அத்துடன்/ அல்லது ஏதேனும் முதனிலை வணிகரொன்றில் முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது பணிப்பாளராக அல்லது வேறு ஏதேனும் அதிகார பதவியை வகிப்பவராக இருக்குமிடத்து.

**பணத் தரகு வியாபாரத்தினைக் கட்டுப்படுத்துவதன் மீதான கட்டுப்பாடுகள்**

14. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று அத்துடன்/ அல்லது முதனிலை வணிகர் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியின் பங்குகளை வைத்திருக்கவோ பங்கு மூலதன பங்கேற்பைக் கொண்டிருக்கவோ அல்லது அந்நிறுவனத்தின் பணிப்பாளர்கள் அல்லது முதன்மை அலுவலர்களின் மீது கட்டுப்பாடுகளையோ கொண்டிருக்கக்கூடாது.

**உள்ளகக் கட்டுப் பாடுகளின் நோக்கம்**

15. பின்வரும் குறிக்கோள்களை உறுதி செய்யும் விதத்தில் ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியும் ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) வினைத்திறனும் காத்திரமான தன்மையும் கொண்ட தொழிற்பாடுகள் (தொழிற்பாட்டு குறிக்கோள்கள்);

(ஆ) நம்பகத்தன்மையும் பூரணத்துவம் வாய்ந்ததுமான நிதியியல் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் (தகவல் குறிக்கோள்கள்); அத்துடன்

(இ) ஏற்புடைத்தான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் (இணங்கியொழுகும் குறிக்கோள்):

**உள்ளகக் கட்டுப்பாடுகள்**

16. ஒழுங்குவிதியில் (15) குறிப்பிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(அ) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படல் வேண்டும் அத்துடன்/ அல்லது இற்றைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் தொழிற்பாட்டு அலுவலர் அனைவரும் சிறந்த அறிவினைக் கொண்டவர்களாகவும் இணங்கியொழுகுபவர்களாகவும் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) அனைத்துக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகவும் தெளிவான ஆவணச்சான்றுகளுடன் இலத்திரனியல் ரீதியாக அல்லது வேறு ஏதேனும் விதத்தில், ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கங்களுக்காக குறைந்தபட்சம் ஆறு (6) ஆண்டுகளுக்குச் சரியான முறையில் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்;

(இ) (9) ஆவது ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பணிகளை மட்டும் மேற்கொள்வதனைக் கடுமையாகப் பின்பற்றுதல் வேண்டும்;

(ஈ) மேலே 16(இ) ஆவது ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட தொலைபேசி உரையாடல் பதிவுகளை (குரல்பதிவுகள்) பேணுதலும் அத்தகைய தொலைபேசி பதிவுகளைத் தொலைபேசிக் கலந்துரையாடல் இடம்பெற்றதிலிருந்து ஆறு வருடங்களுக்கு (6) குறையாததொரு காலப்பகுதிக்கு வைத்திருத்தல் வேண்டும்;

(உ) தொலைபேசிக் கலந்துரையாடல் பதிவேடுகளை ஆட்கள் அணுகுவதனைக் கட்டுப்படுத்துகின்ற முறைமைகள் கடுமையாகப் பேணப்படுதல் வேண்டும்;

(ஊ) தொழிற்பாட்டுத் தளத்தினுள்ளே ஊழியர்கள் தனிப்பட்ட செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்படக்கூடாது;

தரகர் உறுதிப்படுத்தல்

17. (அ) அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி கொடுக்கல்வாங்கல் இடம்பெற்று பதினைந்து (15) நிமிடங்களுக்கிடையில் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் உறுதிப்படுத்த வேண்டும், என்பதுடன் அத்தகைய உறுதிப்படுத்தல் குறைந்தபட்சம் பின்வரும் தகவல்களை உள்ளடக்கியதாகவும் இருத்தல் வேண்டும்;

(i) கொடுக்கல்வாங்கல் திகதி மற்றும் செல்லுபடியாகும் திகதி;

(ii) இணைத்தரப்பினர்களின் பெயர்;

(iii) தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள்; *அத்துடன்*

(iv) பொருத்தமானவிடத்து பணத் தரகர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட தரகு உட்பட எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களுடனும் தொடர்பான அனைத்து விபரங்கள்.

(ஆ) தரகர் உறுதிப்படுத்தலை அதன் துல்லியத் தன்மையினை, தொடர்பான வணிகத்தினை தொடங்கியவர் எவரோ அவர்களின் கட்டுப்பாடுகளெதுவுமின்றி மிக நுணுக்கமாக ஆராய்ந்ததன் பின்னர் பின்னரங்க அலுவலகத்திலிருந்து அனுப்புதல் வேண்டும்.

அறிக்கையிடும் தேவைப்பாடுகள்

18. (அ) அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனியானது இலங்கை மத்திய வங்கியினால் அத்தகைய பணத் தரகுத் தொழில் கம்பனிகளுக்கு வழங்கிய கணனி வழி அதேநேர இடைமுகமான மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு ஊடாக பின்வருவன தொடர்பான தகவல்களை தரவேற்றம் செய்து கொள்ளல் வேண்டும்.

(i) கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் தரப்பினரால் ஒவ்வொரு 15 நிமிடமும் வழங்கப்படும் ஒவ்வொரு குறியீடு/ விலைக்குறிப்பீடு (அல்லது அத்தகைய குறியீடு/ விலைக்குறியீடு குறித்துரைக்கப்பட்ட அறிக்கையிடும் நேரமான 15 நிமிடத்திற்குள் வழங்கப்படவில்லையாயின் "குறிப்பீடு இல்லை" எனக் குறிப்பிடவும்): அத்துடன்

(ii) ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்ற 15 நிமிடத்திற்குப் பிந்தாமல் பணத் தரகுத் தொழில் கம்பனியினூடாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பணத்தரகுக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலா் அத்துடன்/ அல்லது வணிக அறைக்கு பொறுப்பான அலுவலா் இதில் கூறப்பட்ட குறித்துரைக்கப்பட்ட தகவல்களைக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் தரவேற்றுவதற்கு பொறுப்புடையவராகயிருத்தல் வேண்டும்.

(இ) தொலைநகல்கள் மூலம் அனுப்பப்படுகின்ற விலைக்குறிப்பீடுகள்/ குறியீடுகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய தகவல்கள் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்பு செயலலிழக்கும் சந்தா்ப்பத்தில் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். எனினும் அத்தகைய தகவல்கள் முறைமை சீர்செய்யப்பட்ட பின் முறைமையினுள் தரவேற்றம் செய்யப்படவேண்டும்.

(ஈ) மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு மீதான கண்காணித்தல் நடவடிக்கைகளாவன:

(i) மத்திய ஒருங்கிணைப்பட்ட சந்தை கண்காணிப்பு ஊடான அறிக்கயிடலானது தொடர்புடைய அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுக் கம்பனிகளின் உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வொன்றுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(ii) இவ்வெழுங்கு விதிகளினூடான இணக்கத்தினை உறுதிசெய்வதற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று நிறுவப்படுதல்.

(iii) அறிக்கையிடும் செயன்முறைகளின் ஏதேனும் தவறான நடத்தைகளை அல்லது ஒழுங்கீனங்களை முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்காக காத்திரமான கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படல்

(உ) இவ்வொழுங்கு விதி திகதியிலிருந்து ஒருமாதத்தினுள் மத்திய ஒருங்கிணைக்கப்ட்ட சந்தை கண்காணிப்பு அறிக்கையிடல் கட்டமைப்பிற்கான உள்ளக வழிகாட்டலொன்று வகுக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாட்டு திணைக்கள பணிப்பாளருக்கு சமா்ப்பிக்கப்படல் வேண்டும். சொல்லப்பட்ட கட்டமைப்பிற்கான ஏதேனும் மாற்றங்கள் அத்தகைய மாற்றல் திகதியிலிருந்து ஒரு (1) வாரத்தினுள் உள்நாட்டு தொழிற்பாடுகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(ஊ) அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி செயலாற்ற அறிக்கையினை மாதாந்த அடிப்படையில் இங்கே "அட்டவணை IV" இல் இணைக்கப்பட்டுள்ள விபரிக்கப்பட்ட படிவத்தில் அடுத்துவரும் மாதத்தின் ஐந்து (5) வேலை நாட்களுக்குப் பிந்தாமல் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்புதல் வேண்டும். அனைத்து காலாண்டு நிதியியல் கூற்றுகள் (காசுப்பாய்ச்சல் கூற்று அனைத்தையும் உள்ளடக்குகின்ற வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று) மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகள் தொடர்புடைய காலப்பகுதியில் தொடா்ந்துவருகின்ற ஒரு மாதத்திற்கு முன்னர் உள்நாட்டு தொழிற்பாட்டுகள் திணைக்களப் பணிப்பாளருக்கு சமா்ப்பிக்கப்படல் வேண்டும். மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பில் வசதிகள் வழங்கப்படும் வரை அனைத்து ஆவணங்களும் மின்னஞ்சல் ஊடாக உள்நாட்டு தொழிற்பாடுகள் பணிப்பாளருக்கு சமா்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைக்கோரல்களை தொடர்பூட்டுகின்றமை

19. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் விலைக்கோரல்களை (விலைகள்/ வீதங்கள்) தெரியப்படுத்துகின்ற போது அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியானது.

(அ) செலாவணி வீதங்களில் பிறழ்வுகளை ஏற்படுத்தும் நோக்குடன் விலைக்கோரல்களை தெரியப்படுத்தவோ கூடாது;

(ஆ) முதன்மையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு விலைக்கோரலைக் கௌரவப்படுத்தும் நோக்கமெதுவும் இல்லாதவிடத்து, மற்றைய சந்தைப் பங்கேற்பாளர்களைத் தவறாக வழிநடத்துவதற்காக மாத்திரம் விலைக்கோரல்களை தெரியப்படுத்தவோ கூடாது;

(இ) நடைமுறையில் நிலவுகின்ற சந்தை வீதங்கள் மற்றும் வங்கிகளுக்கிடையிலான தவணைக் கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் தொடர்பான வீதங்களை அறிவிக்க வேண்டும்.

ஏடுகளைப் பரீட்சித்தல்

20. (அ) எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியினதும் கணக்கேடுகளையும் ஏனைய பதிவேடுகள்/ நடவடிக்கைகளையும் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் எந்தவொரு நேரத்திலும் பரீட்சிக்கலாம் அல்லது அவரின் திணைக்களத்திலுள்ள எவரேனும் அலுவலர்களுக்கு அவற்றைப் பரீட்சிக்க அனுமதியளிக்கலாம். அத்தகைய பரீட்சிப்புக்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளும் துல்லியமான மேற்பார்வைத் தகவல்களை அல்லது அத்தகைய வேறு ஏதேனும் தகவல்களை பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் அல்லது அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு, எல்லா நேரத்திலும் வழங்குதல் வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளரின் பரீட்சிப்பிற்குப் புறம்பாக, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளரும் அவற்றைப் பரீட்சிக்கலாம் அல்லது அவரின் திணைக்களத்திலுள்ள எவரேனும் அலுவலர்களுக்கு ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனிகளினதும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் தொடர்பான பதிவேடுகளையும்/ நடவடிக்கைகளையும் தேவையான நேரத்தில் பரீட்சிக்க அனுமதியளிக்கலாம். அத்தகைய பரீட்சிப்புக்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத் தொழில் கம்பனி பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளரினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு அல்லது பன்னாட்டுத் தொழிற்பாடுகளின் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்டவாறான அத்தகைய அலுவலருக்கு எந்தவொரு தகவலையும் வழங்குதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களுக்கு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட அறிவுத்தல்களுக்குப் புறம்பாக, வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கை மூலமாக காலத்திற்குக் காலம் தொடர்பூட்டப்படும்.

இவ்வொழுங்கு விதிகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல்

21. இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து அத்துடன்/ அல்லது பொய்யான அல்லது பிழையான தகவல்களை வழங்குதல் அல்லது குறிப்பிடத்தக்களவு பொருண்மியமான தகவல்களை வழங்கத் தவறுதல் என்பன சபையானது விசாரணைகளின் பின்னர் பின்வருவன உட்பட அது தேவையானது எனக் கருதும் ஏதேனும் ஒரு நடவடிக்கையினை எடுப்பதற்கு வழிவகுக்கும்:

(அ) அத்தகைய தவறிழைத்த அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிக்கு எச்சரிக்கையினை விடுத்தல்;

(ஆ) 17ஆம் மற்றும் 18ஆம் ஒழுங்குவிதியுடன் இணங்கியொழுக தவறுகின்ற ஏதேனும் நிகழ்வுக்கெதிராக ரூ.500,000 கொடுப்பனவு;

(இ) பொய்யான அல்லது பிழையான தகவல்களை வழங்குவதற்கு அல்லது ஏதேனும் தகவல்களை வழங்காமைக்கு எதிராக ரூ.500,000 கொடுப்பனவொன்று;

(ஈ) தவறிழைத்த பணத் தரகுக் கம்பனியினை 9 ஆவது விதியில் குறிப்பிடப்பட்ட சில பணத் தரகு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்து தகைமையிழக்கச் செய்தல்;

(உ) சபையினால் வழங்கப்பட்ட அதிகாரச் சான்றிதழை இரத்துச் செய்தல்;

(ஊ) இலங்கை மத்திய வங்கியினால் பொருத்தமானது எனக் கருதப்படுகின்ற வேறு ஏதேனும் நடவடிக்கைகள்;

விதிகளுக்கான ஏற்பாடுகள்

22. இங்கு நீக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்பட்ட∴ கொண்டு நடாத்தப்பட்ட எவையேனும் பணிப்புரைகள், வழிகாட்டல்கள், நடவடிக்கைகள் அல்லது விசாரணைகள் இவ்வொழுங்கு விதியின் கீழும் வழங்கப்பட்டவாறு∴ கொண்டு நடாத்தப்பட்டவாறு செல்லுபடியானதாகவும் அமுலிலும் இருத்தல் வேண்டும்.

வரைவிலக்கணங்கள்

23. சூழ்நிலைகள் வேறு விதத்தில் தேவைப்படுத்தினாலன்றி இவ்வொழுங்கு விதிகளில் -

(அ) “ஏசிஐ மாதிரிக் குறியீடு” என்பது அசோசியேசன் கம்பிஸ்ட் இன்ரநஷனல் அல்லது நிதியியல் சந்தை அமைப்பினால் பின்பற்றப்படும் சுய ஆளுகை மாதிரிக் குறியீடு எனப் பொருள்படும்;

(ஆ) “அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி” என்பது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட அதிகாரச் சான்றிதழை வைத்திருக்கும் ஏதேனும் கம்பனி எனப் பொருள்படும்;

(இ) “சபை” என்பது நாணய விதிச் சட்டத்தின் கீழ் (அத்தியாயம் 422) நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை எனப் பொருள்படும்;

(ஈ) “அதிகாரச் சான்றிதழ்” என்பது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் பணத் தரகர் தொழிலில் ஈடுபடுவதற்கு கம்பனியொன்றிற்குச் சபையினால் வழங்கப்பட்ட அங்கீகாரம் எனப் பொருள்படும்;

(உ) “வாடிக்கையாளர்” என்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தில் ஈடுபட இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட மற்றைய ஏதேனும் நிறுவனம், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், முதனிலை வணிகர்கள், நிதி முகாமைத்துவக் கம்பனிகள், ஓய்வூதிய நிதியம், கூறுநம்பிக்கைக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், கம்பனித் திறைசேரிகள், அரச நிறுவனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட ஏனைய நிதியியல் நிறுவனங்கள் எனப் பொருள்படும்;

(ஊ) “கம்பனி” என்பது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு தனியார் அல்லது பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனி எனப் பொருள்படும்;

(எ) “பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகள்” என்பது நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும்;

(ஏ) “பணிப்பாளர், பன்னாட்டு தொழிற்பாடுகள்” என்பது நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும்;

(ஐ) “நிதியியல் சாதனங்கள்” என்பது மொத்த விற்பனை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணய வங்கி வைப்புக்கள், உடன் மற்றும் முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி (இலங்கை ரூபாவிற்கெதிரான ஏதேனும் நாணயம் மற்றும் உடனடி மற்றும் பரஸ்பர பரிமாற்றல் குறுக்கு நாணயங்கள்) வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள், வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல்கள், நாணய விருப்பத்தேர்வுகள் மற்றும் எதிர்வுகள், அரச மற்றும் கம்பனி முறிகள் உட்பட நிலையான வருமானப் பிணையங்கள், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள், அழைப்புப் பணம் மற்றும் தவணைப் பணம், தொகுதிக் கடன்கள், வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ் பிணையமயப்படுத்தல்கள் அல்லது சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிதியியல் சாதனங்கள் எனப் பொருள்படும்;

(ஒ) “உலகளாவிய வெளிநாட்டுக் குறியீடு” என்பது மொத்த வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் ஒருங்கிணைப்பினையும் காத்திரமான தொழிற்படுதலினையும் ஊக்குவிக்கின்ற பொது வழிகாட்டல் தொகுதியொன்றினை வழங்குவதற்கு உருவாக்கப்பட்டு வருகின்ற வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் திறந்த நடத்தைகளின் உலகளாவிய கோட்பாடுகள் தொகுதியொன்று (உலகளாவிய குறியீடு) எனப்பொருள்படும். இது உத்வேகமான, நியாயமான, திரவத்தன்மை வாய்ந்த, திறந்த மற்றும் பொருத்தமானவாறு வெளிப்படையான சந்தையினை ஊக்குவிக்க முனைகிறது. இங்கு மீளெழுச்சிமிக்க உட்கட்டமைப்பினால் துணையளிக்கப்பட்ட வெவ்வேறான சந்தை பங்கேற்பாளர் தொகுதியொன்று ஏற்றுக்கொள்ளத்தக்க நடத்தை நியமங்களை உறுதிசெய்கின்ற விதமொன்றில் சந்தைத் தகவல் கிடைக்கப்பெறுவதனை பிரதிபலிக்கின்ற போட்டியான விலைகளில் இரகசியமாகவும் காத்திரமாக கொடுக்கல்வாங்கல் இயலுமாகவிருக்கின்றது.

(ஓ) “உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை” என்பது கம்பனியின் தொழிலினை ஒழுங்காகவும் வினைத்திறனுடைய முறையிலும் கொண்டு நடத்துவதற்கும் முகாமைத்துவக் கொள்கைகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் பதிவேடுகளினை சாத்தியமானளவிற்கு பூரணமாகவும் துல்லியமான தன்மையுடன் பாதுகாப்பதற்கும் என முகாமைத்துவத்தினால் நிறுவப்பட்டுள்ள நிதி மற்றும் வேறுவிதமான விடயங்களையும் கட்டுப்படுத்துகின்ற முழுமையான முறைமை எனப் பொருள்படும்;

(ஔ) “முக்கியமான முகாமைத்துவ ஆள் ஆளணியினர்” என்பது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அந்நிறுவனத்தின் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும் பணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரமும் பொறுப்புடமையும் கொண்ட அத்தகைய நிறுவனத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட (நிறைவேற்று அல்லது வேறு வகையான) ஆளொருவர் எனப் பொருள்படும்;

(க) “பணத் தரகுத் தொழில்” என்பது செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவுள்ள தரகுகள் அல்லது தரகுக் கட்டணங்களினைப் பரிசீலனையில் கொண்டு இடையேற்பாட்டாளராக செயற்படுகின்ற தரகர்களுடனான பணம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் வாங்குநர்களுக்கும் விற்பனையாளர்களுக்குமிடையில் கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்கு செய்கின்ற வியாபாரம் எனப் பொருள்படும்;

(ங) “தொழிற்பாட்டு அலுவலர்” என்பது ஒழுங்குவிதி (9) இல் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளின் ஊழியர்களை உள்ளடக்கும் எனப் பொருள்படும்;

(ச) “முதன்மையாளர்” என்பது ஒன்றில் வாங்குநராகவோ அல்லது விற்பனையாளராகவோ தொழிற்படுகின்ற கொடுக்கல்வாங்கலின் பிரதான தரப்பினர் எனப் பொருள்படும். முதன்மையாளர் ஒருவர் தனது சொந்தக் கணக்கில் இடர்நேர்வுகளுக்கு தானே பொறுப்பு என்ற அடிப்படையில் வாங்கும் விற்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்;

(ஞ) “முதனிலை வணிகர்” என்பது 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்;

(ட) “பிணையங்கள்” என்பது படுகடன் பிணையங்கள், பெறுதி உடன்படிக்கைகள் என்பன உள்ளிட்ட நிதியியல் பெறுமதிகளைக் காட்டுகின்ற கைமாற்றத்தக்க நிதியியல் சாதனங்கள் எனப் பொருள்படும்;

(ண) “கூறப்பட்ட மூலதனம்” என்பது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் தரப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்;

(த) “இணைப்பு வழி” என்பது அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளுக்கும் தொடர்பான முதன்மையாளருக்குமிடையில் விரிவாக்கப்பட்ட பிரத்தியேகமான தொடர்பூட்டல்கள் எனப் பொருள்படும்.

**அட்டவணை I**

படிவம்: டிஓடி/எம்பீ/002

**விண்ணப்பதாரக் கம்பனி/ அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியிலுள்ள பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர், முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் கணிசமான பங்குடமையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக்கடதாசி**

**விண்ணப்பதாரக் கம்பனியின் பெயர்/ அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியின் பெயர்: ..........................................................................................**

**சத்தியக்கடதாசி**

............................... எனும் முகவரியில் வசிப்பவரும் ................................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டைக் என்பவற்றைக் கொண்டவருமாகிய ..................................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு பௌத்த/ இந்து/ முஸ்லிம் சமயத்தவர் என்ற வகையில் உண்மையாகவும் பயபக்தியுடனும் விசுவாசமாகவும் பிரகடனம் செய்கிறேன்/ உறுதிப்படுத்துகிறேன்/ கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர் என்ற வகையில் சத்தியம் செய்து பின்வருவனவற்றை தெரிவித்துக் கொள்கின்றேன்[1].

1. மேற்கூறப்பட்ட (உறுதிப்படுத்தியவர்/ வாக்குமூலம்) அளிப்பவரும் நான்தான் என்பதுடன் .................................. இல் (கம்பனியின் பெயர்) ........................ .............................................. பதவியினை வகிப்பவருமாவேன்.

2. நான் பின்வரும் கல்விசார் தகைமையையும்/ தகைமைகளையும் தொழில்சார் நிபுணத்துவ தகைமையையும்/ தகைமைகளையும் கொண்டுள்ளேன் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்.

3. பணத்தரகு, நிதி, வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது இவை தொடர்பான துறைகளில் நான் காத்திரமான தகைமைகளை கொண்டிருக்கிறேன் என்பதனையும் பயன்படுத்தக்கூடிய அனுபவங்கள் பின்வருமாறு இருக்கும் எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்.

4. நான் இங்கே இணைக்கப்பட்டுள்ள இச்சத்தியக்கடதாசியின் இன்றியமையாத கூறான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள தகைமையீனங்களுக்கு நான் உள்ளாகவில்லை என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவிக்கின்றேன்.

இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப்பிரதிக்ஞை செய்பவருக்கு (உறுதிப்படுத்துபவர்/ தெரிவிப்பவர்) வாசித்து விளங்கப்படுத்திய பிற்பாடு அதனை விளங்கிக் கொண்டு அதனை உண்மை எனவும் ஏற்றுக் கொண்டும் உறுதிப்படுத்துகின்றார்.

சத்தியம் செய்து தனது கையெழுத்தினை ................... ஆகிய திகதியில் ....................... வைக்கின்றார்.

முத்திரை பதிக்கவும்

என் முன்னிலையில்
சமாதான நீதிவான்

**அட்டவணை II**

**2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணத் தரகு ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி (13)இன் கீழ் தகைமையிழத்தல்**

ஆளொருவர் பின்வரும் தன்மைகளைக் கொண்டிருப்பாராயின் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்றின் பணிப்பாளராக, முதன்மை நிறைவேற்று அலுவலராக, முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக அல்லது கணிசமான பங்குடமையாளராகத் தெரிவுசெய்யப்படவோ அத்துடன்/ அல்லது நியமிக்கப்படவோ அல்லது அத்தகைய பதவிகளை வகிக்கவோ தகைமையற்றவராவார்.

(அ) கல்வியியல் தகைமை அல்லது தொழில்சார் தகைமையை அல்லது பணத்தரகு, நிதிச் சட்டம், வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது மற்றைய ஏதேனும் தொடர்பான துறைகளில் காத்திரமான அனுபவங்களைக் கொண்டிராதவர்.

ஆ) இலங்கையிலோ அல்லது வெளிநாடொன்றிலோ உள்ள நீதிமன்றமொன்றினால் கடன் தீராற்றலற்றவர் அல்லது வங்குரோத்துக்காரர் என பிரகடனப்படுத்தப்பட்ட ஒருவர்.

(இ) தீயநடத்தைகள் தொடர்பான குற்றமொன்றிற்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டவர்

(ஈ) ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பினை அல்லது கட்டளையினை நிறைவேற்றத் தவறியவர் அல்லது கடனை மீளச் செலுத்தத் தவறியவர்

(உ) மோசடி, ஏமாற்றுதல், நேர்மையற்றதன்மை அல்லது இவற்றையொத்த வேறு ஏதேனும் குற்ற நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ சட்டத்தினால் உருவாக்கப்பட்ட பொலிசாரினால், ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவச் சங்கத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நாணயச் சபையினால் அல்லது ஏதேனும் சபையினால் நடத்தப்படும் விசாரணைக்கு அல்லது புலனாய்விற்குட்பட்டிருக்குமொருவர்

1 ஏற்புடைத்தற்ற சொற்களை நீக்கிவிடவும் பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் மற்றும் ஏனைய மதங்களைப் பின்பற்றுபவர்களும் பிரகடனம் செய்து உறுதிப்படுத்துதல் வேண்டும். கிறிஸ்தவர்களும் கத்தோலிகர்களும் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டு தெரிவித்தல் வேண்டும்.

(ஊ) மோசடி, ஏமாற்றுதல், நேர்மையற்றதன்மை அல்லது இவற்றையொத்த வேறு ஏதேனும் குற்ற நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ சட்டத்தினால் ஆக்கப்பட்ட எந்தவொரு ஒழுங்குபடுத்தல் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழு அல்லது நாணயச் சபையினால் அல்லது வேறு ஏதேனும் அமைப்பினால் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர்.

(எ) ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள ஏதேனும் கம்பனியொன்றில் பணிப்பாளர், முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது வேறு ஏதேனும் அலுவலர் பணியிலிருந்து அகற்றப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட ஒருவர்.

(ஏ) மோசடி, ஏமாற்று, நேர்மையற்றதன்மை அல்லது இவற்றையொத்த வேறு ஏதேனும் குற்றவியல் நடவடிக்கை தொடர்பான குற்றமொன்றிற்காக நீதிமன்ற வழக்காடலுக்குட்பட்டிருக்குமொருவர்.

(ஐ) தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவர் என பிரகடனப்படுத்தப்பட்ட ஒருவர்.

(ஒ) ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் அத்துடன்/ அல்லது ஏதேனும் முதனிலை வணிகராக, முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது பணிப்பாளராக அல்லது அதிகாரம்மிக்க வேறு ஏதேனும் பதவியிலுள்ள ஒருவர்.

அட்டவணை III

**பணிப்பாளர்கள்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முக்கிய ஆளணியினால் மற்றும்**
**கணிசமான பங்குடமையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்**
**(..........................................................இற்கு ஏற்புடைத்தான ஆவணங்களுடன்)**

அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுக் கம்பனி/ விண்ணப்பதாரக் கம்பனியின் பெயர்: ..........................................................................................

**1. தனிப்பட்ட விபரங்கள்**

1.1 முழுப் பெயர் : ..........................................................................................
1.2 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................
1.3 கடவுச்சீட்டு இலக்கம் : ..........................................................................................
1.4 பிறந்த திகதி : ..........................................................................................
1.5 நிரந்தர முகவரி : ..........................................................................................
1.6 தற்போதைய முகவரி : ..........................................................................................

**2. நியமனம் - பணிப்பளார்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முக்கிய முகாமைத்துவ ஆள்**

2.1 சபைக்கு/ தற்போதைய பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : ..........................................................................................
(நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற அலுவலர் ஒருவராக இருக்குமிடத்து தயவுசெய்து நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும்) : ..........................................................................................
2.2 பதவி : ..........................................................................................
2.3 உள்நாடு அல்லது வெளிநாடு : ..........................................................................................
2.4 வருடாந்த ஊதியம் (விபரமாக) : ..........................................................................................

**3. கணிசமான பங்குடமையின் விபரங்கள்**

3.1 கணிசமான பங்குடமையாளராக மாறிய திகதி : ..........................................................................................
3.2 கம்பனியின் பணிப்பாளராக நீர் கடமையாற்றுகிறீரா : ..........................................................................................
3.3 கம்பனியில் நீர் நிறைவேற்றுப் பதவியொன்றைக் கொண்டிருக்கிறீரா : ..........................................................................................
3.4 கம்பனியின் நாளாந்தத் தொழிற்பாடுகளில் பங்கேற்கின்றீரா : ..........................................................................................
3.5 கம்பனியின் முக்கிய தீர்மானங்களுக்கு பங்களிக்கின்றீரா : ..........................................................................................

**4. உறவினர்களின் தனிப்பட்ட விபரங்கள் (வாழ்க்கைத் துணைவர், பிள்ளைகள் போன்றவர்கள்)**

| *முழுப் பெயர்* | *உறவு முறை* | *தே.அ.அ இல./ கடவுச்சீட்டு இல.* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

**5. பின்னணி, நிதி மற்றும் நிதியல்லா நிறுவனங்களுடனான அனுபவம்**

| | *நிறுவனத்தின் பெயர்* | *அலுவலகக் காலம்* | *பதவி* |
|---|---|---|---|
| *அ* | *நிதியியல் நிறுவனங்கள் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், நிதியியல் கம்பனிகள், முதனிலை வணிகர்கள்)* | | |
| *ஆ* | *நிதியல்லா நிறுவனங்கள்* | | |

**6. நிதியியல் நிறுவனங்களிலும் அவை தொடர்பான நிறுவனங்களிலுமுள்ள பங்குடமைகள்**

| நிறுவனத்தின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | பங்குடமையின் சதவீதம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

நிதியியல் கம்பனிகள் அவற்றின் துணை மற்றும் இணைக் கம்பனிகளில் தற்பொழுது வைத்திருக்கப்படும் பங்குடமைகள், ஏதேனும் இருப்பின்.

**7. உறவினர்களின் நியமனங்கள், பங்குடமைகள் மற்றும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்**

7.1 ஏதேனும் நிதிக் கம்பனியில் பணிப்பாளராக, முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக தற்பொழுது தொழில்புரியும் எவரேனும் உறவினர்

| | நிதியியல் நிறுவனத்தின் பெயர் | உறவினரின் முழுப் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|---|
| 1. | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| 2. | உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | | |
| 3. | உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகள் | | |
| 4. | சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் | | |
| 5. | முதனிலை வணிகர்கள் | | |
| 6. | ஏனையவை | | |

7.2 நிதியியல் நிறுவனங்களிலுள்ள நேரடியான அல்லது மறைமுகமான கணிசமான பங்குகளை தற்பொழுது வைத்திருக்கும் எவரேனும் உறவினர்.

| உறவினரின் முழுப் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | பங்குடமையின் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | நேரடியான | மறைமுகமான | நேரடியான | மறைமுகமான |
| | | | | |
| | | | | |

7.3 அதிகாரம்பெற்ற பணத்தரகுக் கம்பனியுடன் தற்பொழுது தொடர்புகளைக் கொண்டுள்ள உறவினர்களின் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள், ஏதுமிருப்பின்

| உறவினரின் முழுப் பெயர் | வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல்களின் திகதி | ............ உள்ளவாறு வரையறை (ரூ.மில்.) | ............ உள்ளவாறு வெளிநின்ற தொகை (ரூ.மில்.) | பிணையுறுதியின் வகை மற்றும் பெறுமதி (ரூ.மில்.) | அதிகாரம்பெற்ற பணத்தரகு நிறுவனங்களின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**பிரகடனம் :**

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் மேலேயுள்ள தகவல்கள் சரியானவையும் பூரணமானவையுமென நம்புகிறேன். மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பாக இனிமேல் இடம்பெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளையும் சாத்தியமானளவிற்கு விரைவாக அதிகாரம் பெற்ற பணத்தரகுக் கம்பனிக்கும் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கும் சரியான தகவல்களை வழங்குவேன் எனவும் உறுதியளிக்கின்றேன். மேற்குறிப்பிட்ட பதவிக்கு நான் நியமிக்கப்படுவதனை எந்தவொரு சட்டமும் தடை செய்யவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி : ..........................

.........................................................................

பணிப்பாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முகாமைத்துவ ஆள் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட தரகுக் கம்பனியின் கணிசமான
பங்குடமையாளரின் கையொப்பம்

**பணிப்பாளர் அல்லது முதன்மை முகாமைத்துவ ஆள் தொடர்பில் முதன்மை நிறைவேற்று அலுவலரினால் நிரப்பப்பட வேண்டியது**

மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பான வேறு ஏதேனும் மேலதிக விளக்கங்கள்/ தகவல்களும் அதிகாரம்பெற்ற பணத்தரகுக் கம்பனியின் பணிப்பாளர் அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதுடன் தொடர்பானது எனக் கருதப்படுகின்ற வேறு தகவல்களும்

திகதி : .......................... ........................................................................

முதன்மை நிறைவேற்று அலுவலரின் கையொப்பமும்

அலுவலக முத்திரையும்

**முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது கணிசமான பங்குடமையாளர் தொடர்பில் பணிப்பாளர் சபையின் தலைவரினால் நிரப்பப்பட வேண்டியது**

மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பான வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்களும் அதிகாரம்பெற்ற பணத்தரகுக் கம்பனியின் முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது கணிசமான பங்குடமையாளரின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதுடன் தொடர்பானது எனக் கருதப்படுகின்ற வேறு தகவல்களும்

திகதி : .......................... ........................................................................

பணிப்பாளர் சபைத் தலைவரின் கையொப்பம்

**அட்டவணை IV**

**மாதாந்தச் செயலாற்ற அறிக்கை**

அதிகாரம்பெற்ற பணத்தரகுக் கம்பனியின் பெயர்: ..........................................................................................

மாதம்: ..........................................................................................

| | | கொடுக்கல்வாங்கல் பெறுமதி* (முகப்புப் பெறுமதி) | | வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஐ.அ.டொலருக்குச் சமனானவை | இலங்கை ரூபா | ஐ.அ.டொலருக்குச் சமனானவை | இலங்கை ரூபா |
| (1) | வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் | | | | |
| | ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா நேரடி | | | | |
| | முன்னோக்கியவை | | | | |
| | சுவப்ஸ் | | | | |
| | குறுக்கு நாணயம் | | | | |
| | வைப்புக்கள் | | | | |
| (2) | வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் | | | | |
| | அழைப்புப் பணம் | | | | |
| | தவணைப் பணம் | | | | |
| (3) | அரச பிணையங்கள் | | | | |
| | உடனடி | | | | |
| | மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு | | | | |
| (4) | ஏனைய நிதியியல் சாதனங்கள் | | | | |
| | வர்த்தகப் பத்திரங்கள் | | | | |
| | தொகுதிக் கடன்கள் | | | | |
| (5) | ஏனைய பணிகள் (தயவுசெய்து குறிப்பிடுக) | | | | |

**தயவுசெய்து ஒரு பக்கக் கொடுக்கல்வாங்கல்களை மாத்திரம் கவனத்தில் எடுக்கவும் - வாங்கல் அல்லது விற்றல்*

**ஏனைய தகவல்கள்:**

| | | |
|---|---|---|
| அ. | மூலதன ஒதுக்குகள் | |
| ஆ. | வரிக்குப் பின்னரான இலாபம் | |
| இ. | ஊழியர்களின் எண்ணிக்கை | |

| | | |
|---|---|---|
| ஈ. | முக்கிய முகாமைத்துவ ஆளணி | 1. |
| | | 2. |
| | | 3. |
| | | 4. |
| | | 5. |
| உ. | பணிப்பாளர் சபை | 1. |
| | | 2. |
| | | 3. |
| | | 4. |
| | | 5. |
| ஊ. | ஒவ்வொரு கணிசமான பங்குடமையாளர்களும் கொண்டிருக்கும் பங்குடமைகளின் சதவீதம் | 1. |
| | | 2. |
| | | 3. |
| | | 4. |
| | | 5. |

**சுற்றறிக்கை இல: 35/01/005/0006/36** 2018 ஏப்பிறல் 12

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்**

**லங்காசெட்டில் மீதான பத்திரங்களற்ற அரசாங்கப் பிணையங்களுக்கெதிரான நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி ஏற்பாட்டுடன் தொடர்புடைய தொழிற்படுத்தல் அறிவுறுத்தல்**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2018 ஏப்பிறல் 12ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவருதல் வேண்டும் என்பதுடன் பங்கேற்கின்ற நிறுவனங்களுக்கு நியாயமான காலத்திலான அறிவித்தலொன்றுடன் காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் திருத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

லங்காசெட்டில் முறைமை விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியானது அதன் தந்துணிவின் பேரில், உண்மை நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் சீரான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தும் நோக்குடன், லங்காசெட்டில் முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் நிதியங்களை வழங்கலாம்.

1. பொதுவாக, பதவி குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக் குறிப்பீட்டாளர்கள் தவிர லங்காசெட்டில் மீதான அனைத்து வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினைப் பயன்படுத்துவதற்கு தகைமை பெற்றவர்களாவர். இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல் நோக்குகளுக்காக
   i. லங்காசெட்டில் முறைமை விதிகள் (இதனகத்துப் பின்னர் முறைமை விதிகள் என குறிப்பீடு செய்யப்படும்) என்பது காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படக்கூடியன நாணய விதிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய லங்காசெட்டில் முறைமையின் தொழிற்பாடுகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் விதிகளாகும்.
   ii. பங்கேற்கின்ற நிறுவனங்கள் என்பது முறைமை விதிகளின் பொது ஏற்பாடுகளின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான பங்கேற்பாளர்களாகும். நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினை பயன்படுத்துவதற்கு தகைமைபெறும் பொருட்டு பங்கேற்கின்ற நிறுவனங்கள், முறைமை விதிகளின் 2ஆம் தொகுதியின் 7.1ஆம் விதியில் தேவைப்படுத்தப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இலங்கையுடன் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட வேண்டும் அத்துடன்
   iii. தகைமையுடைய பிணையங்கள், முறைமை வதிகளின் 2ஆம் தொகுதியின் 7.2ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு அதே பொருளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
2. நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினைப் பயன்படுத்திக் கொள்வதற்கான பிணைய உறுதியாக தமக்கு உரித்தல்லாத அல்லது மூன்றாம் தரப்பினரொருவருக்குச் சொந்தமான பிணையொன்றினைப் பயன்படுத்தப்படலாகாது. பங்கேற்கின்ற நிறுவனமொன்று அத்தகைய பிணையமொன்றினைப் பயன்படுத்தியுள்ளது என்பது கண்டுபிடிக்கப்படும் சந்தர்ப்பத்தில், முறைமை விதிகளின் 3ஆம் தொகுதியின் 11.3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயன்படுத்தலுக்கு ஏற்புடைய கொடுப்பனவுகள் விதிக்கப்படும்.
3. நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநின்ற தொகையினை முறைமை விதிகளின் நாளாந்த தொழிற்படுத்தல் அட்டவணையிலுள்ள அத்தகைய தொகையின் மீள்கொடுப்பனவுக்காக குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் மீள்கொடுப்பனவு செய்வதன் மூலம் சொல்லப்பட்ட பிணையங்கள் பங்கேற்கின்ற நிறுவனங்கள் மூலம் மீள்கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையின் மீது இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கமைவாக பங்கேற்கின்ற நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு தகைமையுடைய பிணையங்களை மாற்றல் செய்வதன் மீது நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் நிதிவசதி வட்டியின்றி வழங்கப்படுகின்றது.
4. நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகளிற்கான பிணைய உறுதியாக வழங்கப்பட்ட பிணைங்களை பிரதியிடுதல் அனுமதிக்கப்படலாகாது.

**நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் கடன் நிதியங்களைப் பெறுவதற்கான நடைமுறை**

5. இலங்கை மத்திய வங்கியானது கொடுக்கப்பட்ட நேரத்தில் பங்கேற்கின்ற நிறுவனங்களின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக் கணக்கில் கிடைக்கப்பெறுகின்ற தகைமையுடைய பிணையங்களின் பெறுமதியின் அடிப்படையில் மாத்திரம் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின்

கீழ் நிதியங்களை வழங்கும். அத்தகைய நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ விலைகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகின்ற தகைமையுடைய பிணையங்களின் பெறுமதியானது உண்மைநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் ஒவ்வொரு பங்கேற்கின்ற நிறுவனங்களினதும் தீர்ப்பனவுக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

6. முந்திய தொழில்நாளின் இறுதியில் பங்கேற்கின்ற நிறுவனங்களின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக் கணக்கில் கிடைக்கப்பெறுகின்ற தகைமையுள்ள பிணையங்கள் தொழிலுக்காக முறைமை தொடக்கப்படுகின்ற நேரத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாளுக்குள்ளான கணக்கிற்கு தன்னியக்கமாக மாற்றல் செய்யப்படும்.

7. நாளுக்குள்ளான திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் தோன்றுகின்ற போதும் தோன்றுகின்றவாறும் முறைமை ஊடாக கோரிக்கையொன்றினை ஏற்படுத்துவதன் மூலம் பங்கேற்கின்ற நிறுவனங்கள் தொழில் நாளொன்றினுள் தமது தற்றுணிவின் பேரில் பல எண்ணிக்கையான நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிதியங்களுக்கான பெற்றக்கொள்ளவும் மீள்கொடுப்பனவு செய்யவும் முடியும்.

**பிணையங்களின் உத்தியோகபூர்வ விலைகள்**

8. தகைமையுடைய பிணையங்களின் உத்தியோகபூர்வ விலைகள் நடப்புச் சந்தையில் பிந்திக் கிடைக்கக்கூடியதாகவுள்ள விலைகள் மற்றும் சந்தை அபிவிருத்திகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு, நாளாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். பிணையத்தினதும் மீள்கொடுப்பனவுக் காலத்தினதும் வகையினைச் சார்ந்து உத்தியோகபூர்வ விலையினைத் தீர்மானிப்பதில் உச்சவரம்பொன்று பிரயோகிக்கப்படுகின்றது. அத்தகைய உத்தியோகபூர்வ விலைகள் லங்காசெக்குயர் முறைமையிலும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் இணையத்தளமூடான இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையிலும் பதிவுசெய்யப்படும்.

**நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் பெற்றுக்கொண்ட நிதியங்களை தொழில்நாளின் இறுதியில் தீர்ப்பனவு செய்தல்**

9. பங்கேற்கின்ற நிறுவனங்கள், நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் கடன் பெற்ற நிதியங்களை முறைமை விதிகளின் நியதிகளுக்கமைவாக வழங்கப்பட்ட நாளாந்த தொழிற்படுத்தல் அட்டவணையில் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் பெற்றுக்கொண்ட நிதியங்களின் மீள்கொடுப்பனவிற்காக குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு முன்னர் முழுமையான அல்லது பகுதியாகவோ திரும்பச் செலுத்தி பிணைய உறுதியாக பயன்படுத்தப்பட்ட மொத்த பிணையங்களின் பகுதியினை மீளப்பெறலாம்.

10. அனைத்து வெளிநிற்கும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளும் முறைமை விதியின் நியதிகளுக்கமைய வழங்கப்படும் நாளாந்த தொழிற்படுத்தல் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு தொழில் முடிவிற்கு முன்னர் பங்கேற்கின்ற நிறுவனங்களினால் தீர்ப்பனவு செய்யப்படவேண்டும். இந்நோக்கத்திற்காக, வெளிநிற்கின்ற ஏதேனும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளை இலங்கை மத்திய வங்கி மீள்அறவிடுவதனை இயலச்செய்வதற்கு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளின் நேர்மாற்று நேரத்தில் உண்மைநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள தமது தீர்ப்பனவுக் கணக்குகளில் போதிய நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்றன என்பதனை பங்கேற்கின்ற நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும்.

11. வெளிநிற்கின்ற நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளை மீள அறவிடும் செயன்முறையானது லங்காசெட்டில் முறை விதிகளின் நியதிகளுக்கமைய வழங்கப்பட்ட நாளாந்த தொழிற்படுத்தல் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அதேநேரத்தில் முறைமையின் ஊடாக ஆரம்பிக்கப்படுகின்றது. வழங்கல் எதிர் கொடுப்பனவு நியதிகளின் அடிப்படையில் உண்மைநேர மொத்த தீர்ப்பனவு முறைமை கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும் அது தொடர்புடைய உண்மைநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கில் நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்றமைக்குட்பட்டு இலங்கை மத்திய வங்கியின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக் கணக்கிலிருந்து பங்கேற்கின்ற நிறுவனங்களின் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிக் கணக்கிற்கு பிணையங்களை மாற்றல் செய்யும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி நிலுவைகளின் நேர்மாற்றலானது மூல விலையிலும் மூலக் கொடுக்கல்வாங்கல் பெறுமதியிலும் மேற்கொள்ளப்படும்.

**நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் கடன் பெற்ற நிதியங்களுக்கான தவணை தவறுதல்**

12. மேலே 10ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் கீழ் நிலுவையாகவுள்ள தொகையினை இலங்கை மத்திய வங்கியிற்கு முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு எதுவாயினும் ஏதேனும் காரணத்திற்கு பங்கேற்கின்ற நிறுவனங்கள் தவறுமிடத்து, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவ்வாறு நிலுவையாகவுள்ள மொத்தத் தொகைக்கு தவணை தவறியதாக கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், கீழே 16ஆம் வாசகத்தில் எடுத்துரைக்கப்பட்டவாறு தவணை தவறுதலுக்கான வட்டியினைக் கொடுப்பனவு செய்வதற்கு பொறுப்புடையதாதல் வேண்டும். அத்தகைய தவணை தவறுதலுக்கான வட்டியானது அடுத்த தொழில் நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்கின்ற நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

13. மேலே எடுத்துரைக்கப்பட்டவாறு, பங்கேற்கின்ற நிறுவனங்கள் தவணை தவறியுள்ளதாக கருதப்படுமிடத்து, அத்தகைய பங்கேற்கின்ற நிறுவனங்கள், அடுத்த தொழில் நாளன்று தொழில் மூடப்படுவதற்கு முன்னர் தவணை தவறிய, அத்துடன் தவணை தவறியதற்கான வட்டித் தொகையினை முழுமையாக மீளச்செலுத்தல் வேண்டும்.

14. இலங்கை மத்திய வங்கியின் கட்டுக்காப்பிலுள்ள பிணையங்களை முறைமையானது, மீள் விலைமதிப்பீடு செய்யும் என்பதுடன் அடுத்த தொழில் நாளுக்கு தொடர்புடைய உத்தியோகபூர்வ விலைகளின் அடிப்படையிலமைந்த அடுத்த தொழில்நாள் மீதான நேர்மாற்றுக் கொடுப்பனவுத் தொகையினை உருவாக்கும். மீள்விலைமதிப்பிட்ட தொகையானது தவணை தவறிய அத்துடன் தவணை தவறியமைக்கான வட்டியின் மொத்தத் தொகையினை விட உயர்வாகவிருப்பின், இலங்கை மத்திய வங்கியானது உண்மைநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்கின்ற நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கின் வரவிற்கு மிகையான தொகையினை மீளச் செலுத்தும். மீள் விலை மதிப்பிடப்பட்ட தொகையானது தவணை தவறிய தொகை அத்துடன் தவணை தவறியமைக்கான வட்டி என்பவற்றின் மொத்தத் தொகையினை விட குறைவாகவிருப்பின் இலங்கை மத்திய வங்கியானது உண்மைநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்கின்ற நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்குகளில் பற்று வைப்பதன் மூலம் வேறுபாட்டினை அறவிடும்.

15. தவணை தவறிய மற்றும் தவணை தவறியமைக்கான வட்டி என்பவற்றின் மீள் மதிப்பீட்டுத் தொகையினை அடுத்த தொழில் நாளன்று தொழில் முடிவின்போது அல்லது அதற்கு முன்னர் மீளச்செலுத்துவதற்கான உண்மைநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள அதன் தீர்ப்பனவுக் கணக்கில் போதிய நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்றமையினை பங்கேற்கின்ற நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும். மேலே எடுத்துரைக்கப்பட்ட தொகையினை அடுத்த தொழில் நாளன்று தொழில் முடிவடைவதற்கு முன்னர் தீர்ப்பனவு செய்வதற்கு பங்கேற்கின்ற நிறுவனங்கள் தவறுகின்ற சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கியானது, அத்தகைய நிதியங்கள் வழங்கப்பட்டமைக்கெதிரான பிணையங்களைப் பிடித்துவைத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கி பொருத்தமானது என கருதுகின்ற நடவடிக்கைகளை

எடுத்தல் வேண்டும்.

16. முதற்தடவை நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி தவணை தவறுதலின் மீது, பங்கேற்கின்ற நிறுவனமொன்றிடம் மாதமொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு 5 சதவீத தவணை தவறியமைக்கான வட்டி அறவிடப்பட வேண்டும். ஒரு பஞ்சாங்க ஆண்டின் போது அதனைத் தொடர்கின்ற ஒவ்வொரு தவணை தவறுகின்ற நிகழ்வின்போதும் அத்தகைய தவணை தவறியமைக்கான வட்டி வீதமானது 100 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், அத்தகைய தவணை தவறுதலானது முன்னுறுகின்ற தவணை தவறுதலிலிருந்து, 30 நாட்களுக்குள் ஒன்றுக்கு மேலதிகமாக திகழ்கின்றவிடத்து, இவ்வாசகத்தில் விதந்துரைக்கப்பட்டவாறு தவணை தவறியமைக்கான வட்டியினை அறவிடுவதற்கான உரிமைக்கு மேலதிகமாக, நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி வழங்கப்படுதற்கு எதிராக வைக்கப்பட்ட பிணையங்களின் பிடித்துவைப்பதற்கான உரிமையினையும் இலங்கை மத்திய வங்கி பொருத்தமானது எனக் கருதுகின்றது நடவடிக்கை எடுப்பதற்கான உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும். மீண்டும் மீண்டும் தவணை தவறுகின்ற நிகழ்வின் போது, இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்ற காலப்பகுதியொன்றுக்கு பங்கேற்கின்ற நிறுவனங்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினை இலங்கை மத்திய வங்கி புறக்கீடு செய்யலாம்.

17. நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி உடன்படிக்கையானது அல்லது தொழிற்படுத்தல் அறிவுறுத்தல்களினது வேறு ஏற்பாடுகள் எவ்வாறிப்பினும் அத்துடன் முன்னுறுகின்ற 30 நாள் காலப்பகுதியினுள் ஒன்றுக்கு மேற்பட்ட தவணை தவறுதல் ஏற்பட்டிருக்கவில்லை என்ற உண்மை எவ்வாறிருப்பினும், இலங்கை மத்திய வங்கியானது அதன் பிரத்தியேகமான தற்றுணிவின் பேரில் தவணை தவறுகையொன்றின் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, பிணையங்களைப் பிடித்துவைப்பதற்கும், பொருத்தமானது என இலங்கை மத்திய வங்கி கருதுகின்றவாறு நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கலாம்.

18. மேலே 2ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினைப் பயன்படுத்துவதற்காக பங்கேற்கின்ற நிறுவனமொன்று 3ஆம் தரப்புப் பிணையங்களைப் பயன்படுத்தியுள்ளமை கண்டுபிடிக்கப்படுமெனில் அத்தகைய பங்கேற்கின்ற நிறுவனமானது முறைமை விதிகளையும் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் மீறியுள்ளதாகக் கருதப்படும். அத்தகைய மீறுகைகளுக்காக சொல்லப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்பட்ட பின்வரும் கொடுப்பனவுகள் விதிக்கப்படுதல் வேண்டும்.

| அட்டவணை 1: நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியுடன் தொடர்புடைய விதிகளின் மீறுகைக்கான கொடுப்பனவு | |
|---|---|
| 3ஆம் தரப்பினர் பிணையங்களுக்கெதிராக கடன்பட்ட தொகை (ரூ. மில்லியன்) | நாளொன்றுக்கு விதிக்கப்படும் வீதங்கள் (%) |
| 1,000 வரை | 2.0 |
| 1,000க்கு மேல் | 2.5 |

19. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஏனைய ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தவணை தவறுதலொன்றின் அல்லது மூன்றாம் தரப்புப் பிணையங்களை பயன்படுத்துகின்ற சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கியானது அதன் பிரத்தியோக தத்துணிவின் பேரில், பங்கேற்கின்ற நிறுவனமொன்றிற்காக நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி கிடைக்கப்பெறுவதனை நிரந்தரமாக அல்லது இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும் காலப்பகுதியொன்றுக்காக புறக்கீடு செய்யலாம்.

20. 2004 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0006/5, 2004 மே 03ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0006/07 ஆம் இலக்க, 2015 மாச்சு 24ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0006/29 ஆம் இலக்கங்களைக் கொண்ட "லங்காசெட்டில் மீதான பத்திரங்களற்ற அரசாங்கப் பிணையங்களுக்கெதிராக நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி ஏற்பாடு மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்" என்ற தலைப்பிலான சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

21. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி உடன்படிக்கை என்பவற்றுக்கிடையிலான ஏதேனும் முரண்பாடு தோன்றும் பட்சத்தில் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி உடன்படிக்கை மேலோங்கி நிற்கும்.

ஒப்பம்/ பி. டபிள்யு. என். ஆர் றொட்றிக்கோ

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**சுற்றறிக்கை இல: 35/03/021/0013/001** 2018 ஓகத்து 23

**சேரல்: அனைத்து தனியான முதனிலை வணிகர்களுக்கும்**

**இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தை நடவடிக்கைகள்**

இலங்கை மத்திய வங்கியானது அதன் திறந்த சந்தை நடவடிக்கைகளின் கீழான கொடுக்கல்வாங்கல்களை 2018 செத்தெம்பர் 25ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் மாத்திரம் மேற்கொள்ளும்.

எவ்வாறாயினும், தனியான முதனிலை வணிகர்களுக்கான துணைநில் வசதிகளுக்கான அணுகுவழி தொடர்ந்தும் மாற்றமடையாதிருக்கும்.

**பதில் பணிப்பாளர்/உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**சுற்றறிக்கை இல: 35/01/005/0010/20** 2018 செத்தெம்பர் 19

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்**

அத்தகைய நாணயக் கடிதங்கள் திறக்கப்படும் நேரத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட இறக்குமதிப் பெறுமதியில் குறைந்தபட்ச 100 சதவீத காசு எல்லையொன்றினை அத்தகைய நாணயக் கடிதங்கள் உள்ளடக்கியிருந்தாலன்றி அட்டவணை அ (இணைக்கப்பட்டுள்ளது) இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களைத் தவிர, உந்து ஊர்திகள் இறக்குமதிக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதங்கள் திறக்கப்படலாகாது என்பதனை உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படும் உந்து ஊர்திகளுக்காக பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

1. உந்து ஊர்திகள் இறக்குமதியினை உள்ளடக்குகின்ற தற்போது காணப்படுகின்ற நாணயக் கடிதங்கள் தொடர்பில், மேலே பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மீதானவை தவிர அத்தகைய நாணயக் கடிதங்களின் பெறுமதியில் ஏதேனும் அதிகரிப்பெதுவும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அனுமதிக்கப்படலாகாது.
2. இச்சுற்றறிக்கையினால் விதிக்கப்படும் குறைந்தபட்ச எல்லைத் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு அத்தகைய வாடிக்கையாளர்களை இயலச்செய்யும் நோக்கத்திற்காக தமது இறக்குமதி வாடிக்கையாளர்களுக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஏதேனும் முற்பணங்களை வழங்கலாகாது.
3. இச்சுற்றறிக்கைக்கிணங்க எல்லை வைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கு வங்கிகள் தொடர்புடைய விலைப் பட்டியல்களில் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர்/உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

இந்தப் பணிப்புரையின் அட்டவணை அ இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/DOD_Circular_No_35_01_005_0010_20_e.pdf

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0007/10** 2018 செத்தெம்பர் 19

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்க அமுலாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு 2018 செத்தெம்பர் 19ஆம் திகதிய 2089/28ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி "ஈ" மூலம் திருத்தப்பட்டவாறான அறிவித்தலின்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

அ. குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்,

(i.) "மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்" மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையில், குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான வைத்திருக்கப்படும் எல்லையின் நூறு (100%) சதவீத, அத்துடன்

(ii.) இலங்கை ரூபாவில் மாற்றப்பட்ட மொத்த ஏனைய வைப்பு ஒதுக்குகளின் ஏழு தசம் ஐந்து சதவீதம் (7.5%) தொகையுடைய குறைந்தபட்ச ஒதுக்கினை அவை பேணவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆ. 2013 ஏப்பிறல் 22ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/06ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அட்டவணை அ, இணைக்கப்பட்டுள்ள "அட்டவணை அ" மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட திருத்தங்கள் 2018 ஒத்தோபர் 16ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2013 ஏப்பிறல் 22ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/06 மற்றும் 35/01/005/007/07 ஆம் இலக்கங்கள் கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடையதானவாக இருக்கும்.

சி.ஏ. அபயசிங்க

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**அட்டவணை அ**

அறிக்கைப் படிவம்

**நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை**

வங்கியின் பெயர் ..............................................................................................................................................

(..............................................) தொடக்கம் (............................................) வரையான காலத்திற்கானது

திகதி திகதி

சேரல்: பணிப்பாளர்,

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்,

இலங்கை மத்திய வங்கி,

கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு வேலை நாள் முடிவிலும் வங்கிகளின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i) கேள்வி வைப்புக்கள் | (ii) தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | (iii) நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள் | (iv) அனைத்து ஏனைய வைப்புப் பொறுப்புக்கள்[1] |
|---|---|---|---|
| | | | |
| 1 வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும். | | | |

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

..................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லைகளின் 100 சதவீதம். | |
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 7.5 சதவீதம். | |
| 3. மேலே (1) மற்றும் (2)இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களுக்கு மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 4 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தில் பேணப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட மொத்த ஒதுக்குகள் (1+2-3) | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/ சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :..............................

.............................................

உத்தியோகபூர்வ கையொப்பம்

குறிப்பு -

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.

**சுற்றறிக்கை இல: 35/01/005/0010/21** 2018 செத்தெம்பர் 29

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்**

2018 ஒத்தோபர் 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பின்வருவன தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. அத்தகைய நாணயக் கடிதங்கள் திறக்கப்படுகின்ற நேரத்தில் நாணயக் கடிதத்தினைத் திறக்கின்ற உரிமம்பெற்ற வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட இறக்குமதிப் பெறுமதியின் குறைந்தபட்சம் 200 சதவீத காசு எல்லையினை அத்தகைய நாணயக்கடிதங்கள் உள்ளடக்கியிருந்தாலன்றி, அட்டவணை “அ” இல் குறித்துக்கைப்பட்ட பொருட்கள் தவிர (இணைக்கப்பட்டுள்ளது) உந்து ஊர்திகள் இறக்குமதிக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதங்கள் திறக்கப்படலாகாது.
2. அத்தகைய நாணயக் கடிதங்கள் திறக்கப்படுகின்ற நேரத்தில் நாணயக் கடிதத்தினைத் திறக்கின்ற உரிமம்பெற்ற வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட இறக்குமதிப் பெறுமதியின் குறைந்தபட்சம் 100 சதவீத காசு எல்லையினை அத்தகைய நாணயக்கடிதங்கள் உள்ளடக்கியிருந்தாலன்றி, அட்டவணை “ஆ” இல் குறித்துக்கைப்பட்ட பொருட்கள் இறக்குமதிக்காக (இணைக்கப்பட்டுள்ளது) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதங்கள் திறக்கப்படலாகாது.

இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படும் பொருட்களுக்கு பின்வரும் நிபந்தனைகளும் ஏற்புடையதாகும்.

3. மேற்குறித்த பொருட்கள் இறக்குமதியினை உள்ளடக்குகின்ற நடைமுறையிலுள்ள நாணயக் கடிதங்கள் தொடர்பில் பொருட்கள் மேலே 1 மற்றும் 2இல் விதந்துரைக்கப்பட்ட நியதிகள் மீதானவை தவிர அத்தகைய நாணயக் கடிதங்களின் பெறுமதியில் அதிகரித்தலெதுவும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அனுமதிக்கப்படலாகாது.
4. இச்சுற்றறிக்கையின் மூலம் விதிக்கப்படும் குறைந்தபட்ச எல்லைத் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு அத்தகைய வாடிக்கையாளர்களை இயலச்செய்கின்ற நோக்கத்திற்காக எவையேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தமது இறக்குமதி வாடிக்கையாளர்களுக்கான முற்பணங்களை வழங்கலாகாது.
5. இச்சுற்றறிக்கைக்கு அமைவாக எல்லைத் தேவைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதற்கு தொடர்புடைய விலைப் பட்டியலை வங்கிகள் புறக்குறிப்பீடு செய்ய வேண்டும்.

மேலதிக அறிவித்தல் கிடைக்கும் வரை இப்பணிப்புரையுடன் இணங்கியொழுகுமாறு வங்கிகள் வேண்டப்படுகின்றன. உந்து ஊர்திகள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கை இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

சி.ஏ. அபயசிங்க

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

இந்தப் பணிப்புரையின் அட்டவணை அ இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/DOD_Circular_No_35_01_005_0010_21_e.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0007/11** 2018 ஒத்தோபர் 01

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்க அமுலாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு 2018 ஒத்தோபர் 01ஆம் திகதிய 2091/2ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி “ஈ” மூலம் திருத்தப்பட்டவாறான அறிவித்தலின் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

அ. குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்,

i. “மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்” மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையில், அல்லது

ii. “மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்” மீதான 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 சுற்றறிக்கையில்,

குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகளின் நூறு (100%) சதவீதத் தொகையுடைய குறைந்தபட்ச ஒதுக்கினை அவை பேணவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆ. 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/10ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அட்டவணை அ, இணைக்கப்பட்டுள்ள “அட்டவணை அ” மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட திருத்தங்கள் 2018 ஒத்தோபர் 16ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2013 ஏப்பிறல் 22ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/06 மற்றும் 35/01/005/007/07 ஆம் இலக்கங்கள் கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஏனைய அனைத்து அறிவித்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடையதானவாக இருக்கும்.

சி.ஏ. அபயசிங்க

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**அட்டவணை அ**

அறிக்கைப் படிவம்

**நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை**

வங்கியின் பெயர் ..............................................................................................................................................

(..............................................) தொடக்கம் (............................................) வரையான காலத்திற்கானது

திகதி திகதி

சேரல்: பணிப்பாளர்

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு வேலை நாள் முடிவிலும் வங்கிகளின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i) கேள்வி வைப்புக்கள் | (ii) தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | (iii) நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள் | (iv) அனைத்து ஏனைய வைப்புப் பொறுப்புக்கள்[1] |
|---|---|---|---|
| | | | |
| 1 வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும். | | | |

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

..................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. விடயத்திற்கு ஏற்றவாறு | |
| (i) ‘மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்’ மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அல்லது | |
| (ii) ‘மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்’ மீதான 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லைகளின் 100 சதவீதம். | |

| | |
|---|---|
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 7.5 சதவீதம். | |
| 3. மேலே 1 மற்றும் 2இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 4 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தில் பேணப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட மொத்த ஒதுக்குகள். (1+2-3) | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/ சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :.............................. .............................................

உத்தியோகபூர்வ கையொப்பம்

குறிப்பு -

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0007/12** 2018 ஒத்தோபர் 12

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்க அமுலாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு 2018 ஒத்தோபர் 12ஆம் திகதிய 2092/62ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி "ஈ" மூலம் திருத்தப்பட்டவாறான அறிவித்தலின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

அ. குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

அ. விடயத்திற்கு ஏற்றவாறு

(i.) 'மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அல்லது

(ii.) 'மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 சுற்றறிக்கையில், அத்துடன்

ஆ. விடயத்திற்கேற்றவாறு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 2018 ஒத்தோபர் 11ஆம் திகதிய 2018இன் 02ஆம் இலக்க சுற்றறிக்கையின் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுகொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகள்

என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகளின் நூறு (100%) சதவீதத் தொகையுடைய குறைந்தபட்ச ஒதுக்கினை அவை பேணவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆ. 2018 ஒத்தோபர் 01ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/11ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அட்டவணை அ இணைக்கப்பட்டுள்ள "அட்டவணை அ" மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட திருத்தங்கள், 2018 ஒத்தோபர் 16ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2013 ஏப்பிறல் 22ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/06 மற்றும் 35/01/005/007/07 ஆம் இலக்கங்கள் கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஏனைய அனைத்து அறிவித்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடையதானவாக இருக்கும்.

சி.ஏ. அபயசிங்க

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**அட்டவணை அ**

அறிக்கைப் படிவம்

**நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை**

வங்கியின் பெயர் ..............................................................................................................................

(.............................................) தொடக்கம் (...........................................) வரையான காலத்திற்கானது

திகதி திகதி

சேரல்: பணிப்பாளர்,

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்,

இலங்கை மத்திய வங்கி,

கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு வேலை நாள் முடிவிலும் வங்கிகளின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i) கேள்வி வைப்புக்கள் | (ii) தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | (iii) நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள் | (iv) அனைத்து ஏனைய வைப்புப் பொறுப்புக்கள்[1] |
|---|---|---|---|
| | | | |
| 1 வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும். | | | |

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

...................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1 அ விடயத்திற்கு ஏற்றவாறு<br>(i) 'மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அல்லது<br>(ii) 'மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 சுற்றறிக்கையில்<br>அத்துடன்<br>ஆ 2018 ஒத்தோபர் 11ஆம் திகதியிடப்பட்ட 02ஆம் இலக்க அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகள்<br>என்பனவற்றின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லை வைப்புக்களின் 100 சதவீதம். | |
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 7.5 சதவீதம். | |
| 3. மேலே 1 மற்றும் 2இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 4 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தில் பேணப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட மொத்த ஒதுக்குகள். (1+2-3) | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :.............................. ................................................................

உத்தியோகபூர்வ கையொப்பம்

குறிப்பு -

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.

**சுற்றறிக்கை இல: 35/01/005/0007/13** 2018 நவெம்பர் 14

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்க அமுலாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு 2018 நவெம்பர் 14ஆம் திகதிய 2097/15ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி "ஈ" மூலம் திருத்தப்பட்டவாறான அறிவித்தலின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் இலங்கை ரூபாவில் மாற்றப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக, அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தின் ஆறு சதவீதத்திற்கு (6.00 சதவீதம்) சமமான தொகையினை ஒதுக்குகளாகப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

3. 2018 ஒத்தோபர் 12ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/12ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அட்டவணை அ இணைக்கப்பட்டுள்ள

“அட்டவணை அ“ மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது.

4. மேற்குறிப்பிட்ட திருத்தம் 2018 நவெம்பர் 16ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2013 ஏப்பிறல் 22ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 35/01/005/007/06 மற்றும் 35/01/005/007/07 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஏனைய அனைத்து அறிவுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடையதானவாக இருக்கும்.

சி. ஏ. அபயசிங்க

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**அட்டவணை அ**

அறிக்கைப் படிவம்

**நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை**

வங்கியின் பெயர் ...........................................................................................................................................

(.............................................) தொடக்கம் (...........................................) வரையான காலத்திற்கானது

திகதி திகதி

சேரல்: பணிப்பாளர்,

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்,

இலங்கை மத்திய வங்கி,

கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு வேலை நாள் முடிவிலும் வங்கிகளின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i) கேள்வி வைப்புக்கள் | (ii) தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | (iii) நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள் | (iv) அனைத்து ஏனைய வைப்புப் பொறுப்புக்கள்[1] |
|---|---|---|---|
| | | | |

1 வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும்.

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

..................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1 அ விடயத்திற்கு ஏற்றவாறு<br>(i) ‘மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்’ மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அல்லது<br>(ii) ‘மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்’ மீதான 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 சுற்றறிக்கையில்<br>அத்துடன் | |
| ஆ 2018 ஒத்தோபர் 11ஆம் திகதியிடப்பட்ட 2018இன் 2ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுகொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் நியதிகள் மீதான இறக்குமதி இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லை வைப்புக்களின் 100 சதவீதம். | |
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 6 சதவீதம். | |
| 3. மேலே 1 மற்றும் 2இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 4 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தின் (1+2-3) மீது பேணப்படுவதற்கு வேண்டப்படும் மொத்த ஒதுக்குகள். | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/ சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :..............................

.............................................

உத்தியோகபூர்வ கையொப்பம்

குறிப்பு -

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.

**சுற்றறிக்கை எண் 35/01/005/0010/22** 2018 நவெம்பர் 26

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 இலக்க சுற்றறிக்கை தொடர்பானது.

உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகளுக்காக வெளிநாட்டு நாணயத்தினூடாக நாணயக் கடிதத்தினை திறப்பதற்கு ஏற்புடைத்தான குறைந்தபட்ச காசு அளவு 100 சதவீதமாக இருக்கும் என்பது பற்றி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் மேலும் அறிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு நாணயத்தினூடாக நாணயக்கடிதத்தினை திறக்கின்ற நேரத்தில் பின்வரும் நிபந்தனைகளும் ஏற்புடைத்தாக இருக்கும்.

1. இறக்குமதி உண்டியல், வங்கியுடன் பேணப்படும் அளவு வைப்புக்களில் பயன்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு நாணயங்களில் தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.
2. நாணயக் கடிதத்தினைத் திறக்கும்பொழுது குறைத்து மதிப்பிடப்பட்ட பொருட்பட்டியல் இருக்கக்கூடாது.
3. 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/001/005/0010/21 இலக்க கொண்ட சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள்

வங்கிகள் 2018 நவெம்பர் 26ஆம் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை இச்சுற்றறிக்கைக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**பணிப்பாளர்/உள்நாட்டு தொழிற்பாடுகள்**

**அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளுக்கான நன்நடத்தைக் கோவை**

**அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களுக்கான சந்தை நடத்தை மற்றும் நடைமுறைகள்**

**1.0 நன்னடத்தைக் கோவையின் செயற்பரப்பு**

1.1 அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் சந்தை நடத்தைகளையும் நடைமுறைகளையும் மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு நிகரான விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் தொழிற்பாடுகள் உயர்தர மேன்மையுடனும் தொழில்சார் நிபுணத்துவத்துடனும் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக நன்னடத்தைக் கோவையொன்றினை (இதனகத்துப் பின்னர், கோவை என குறிப்பிடப்படும்) விடுப்பதற்கு எண்ணியது. இவ்வழிமுறைகள் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத்தொழில் கம்பனிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்குமிடையில் அதிகரித்தளவிலான பரஸ்பர நம்பிக்கைப் பொறுப்பினையும் நம்பகத் தன்மையினையும் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1.2 இது, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 10 (இ) இன் கீழ் விடுக்கப்படுகிறது. இந்நன்னடத்தைக் கோவைக்கும் 2018ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகளுக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகளே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1.3 உத்தேச கட்டமைப்பானது, பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகளின் 2ஆவது ஒழுங்குவிதியின் கீழ் நாணயச் சபையினால் அதிகாரச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கும் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளுக்கும் ஏற்புடைத்தானதாக இருக்கும். மேலும், அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் ஏசிஐ மாதிரிக் கோவை மற்றும் உலகளாவிய வெளிநாட்டுச் செலாவணிக் கோவை என்பனவற்றினாலும் பிணிக்கப்படுத்தல் வேண்டும்.

1.4 கோவையினை மீறுதலும் அதனை முறித்தலும் பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகளின் கீழ் 21ஆவது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தீர்மானத்திற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

1.5 கோவை நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் தேவையான கண்காணிப்புப் பொறிமுறையொன்றின் கீழ் வைக்கப்படும்.

**2.0 கோவையின் கோட்பாடுகள்**

அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் காத்திரமான தொழிற்பாடுகளையும் சிறந்த நடைமுறைகளையும் ஊக்குவிப்பதற்காக வழிகாட்டல்களின் பொதுவான தொகுதியொன்றினை வழங்குவதற்காக கோவைகளின் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. கோவையானது நான்கு முக்கிய கோட்பாடுகளான ஒழுக்கவியல் மற்றும் நன்நடத்தைகளின் தரம், பொதுவான வணிகக் கோட்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவக் கோட்பாடுகள் மற்றும் நியமங்களின் மட்டம் என்பனவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

2.1 ஒழுக்கவியல் மற்றும் நன்நடத்தைகளின் நியமம்

- (i) சந்தை நடத்தை
- (ii) இரகசியத் தன்மை
- (iii) தனிப்பட்ட (சொந்த) கணக்கிற்கான வணிகம்
- (iv) பொழுது போக்கு அம்சங்கள், பரிசுகள் மற்றும் உபகாரம்
- (v) பந்தயங்கள் மற்றும் சூதாட்டங்கள்

2.2 பொதுவான வணிகப்படுத்தல் கோட்பாடுகள்

- (i) வணிக சம்பாஷணைகளைப் பதிவுசெய்தல்

(ii) பணி நேரங்களுக்குப் பின்னர் மற்றும் பணிமனைகளுக்கு வெளியேயான வணிகம்

(iii) வணிகத்தினை இரத்துச் செய்தல்

(iv) அனைத்து பணத்தரகுத் தொழில் நடவடிக்கைகளினதும் பதிவேடுகளைப் பேணுதல்

(v) தடங்கலற்ற தொடர்ச்சியான வியாபாரத்தினை பேணுதல்

2.3 இடர்நேர்வு முகாமைத்துவக் கோட்பாடுகள்

(i) கடமைகளை வெவ்வேறாகப் பிரித்தல்

(ii) உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகள்

2.4 நியமங்களின் மட்டம்

(i) தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் அறிவு மட்டம்

(ii) தேவைப்படும் தகைமைகள்

**3.0 ஒழுக்கவியலும் நடத்தையின் நியமங்களும்**

3.1 சந்தை நடத்தை

(i) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் அவர்களின் நடத்தையில் ஆளணியினரின் உயர்தர நியதிகளையும் தொழில்சார் நிபுணத்துவத்தின் மேன்மையினையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் சந்தையின் தவறான நடத்தை மற்றும் முகாமைத்துவத்தின் அனைத்து வடிவங்களையும் தடைசெய்கின்ற உள்ளகக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் நடைமுறைக்கிடல் வேண்டும் என்பதுடன் இதனை அனைத்து நேரங்களிலும் அவதானித்தலும் வேண்டும்.

(iii) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் தேர்ச்சி, கவனிப்பு மற்றும் பொருட்களை கண்காணிப்பு என்பனவற்றினை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் பணத்தரகுத் தொழில் நடவடிக்கைகளில் சிறந்த நம்பிக்கையுடன் செயல்புரிதலும் வேண்டும்.

(iv) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் வேண்டுமென்றே சிருஷ்டிக்கப்பட்ட அல்லது ஏமாற்றுகின்ற நடத்தைகளில் ஈடுபடவோ அல்லது சந்தையின் மற்றைய பயன்படுத்துநர்களுக்கு அல்லது ஒழுங்கு முறைப்படுத்துநர்களுக்கு விலைகள், விளைவு வீதங்கள், நிரம்பல் அல்லது கேள்வி என்பன உள்ளிட்ட ஆனால் அவற்றிற்கு மட்டுமே மட்டுப்படுத்தாத விதத்தில் நிலவுகின்ற சந்தை நிலைமைகள் தொடர்பில் பிழையான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய அபிப்பிராயத்தினை தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் வடிவத்திலமைந்த நடத்தைகளிலோ ஈடுபடக்கூடாது.

(v) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் பகிரங்கப்படுத்தப்படாத விலை உணர்திறன் கொண்ட தகவல்களை வைத்திருக்கும் பொழுது மிகுந்த கவனத்துடன் செயற்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தகவல்களின் அடிப்படையில் அவர்களது சொந்தக் கணக்குகளில் பணிகளில் ஈடுபடவோ அல்லது அத்தகைய வணிகத்தில் ஈடுபடவோ இல்லை என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(vi) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் வேண்டுமென்றே வதந்திகளையோ அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களைப் பரப்பவோ அல்லது தவறான பயன்பாடு அல்லது சிருஷ்டிக்கப்பட்ட விலைகண்டறிதல் நெறிமுறைகளையோ பயன்படுத்தக்கூடாது.

(vii) சபையின் உறுப்பினர் அல்லது தொடர்பான கம்பனிகளின் பங்குடமையாளர் ஒருவருக்கு கிடைக்கத்தக்கதாக இருக்கும் பகிரங்கப்படுத்தப்படாத சந்தைத் தகவல்களின் அடிப்படையில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுமாறு அத்தகைய தரப்பினர்களிடமிருந்து ஏதேனும் நியாயமற்ற செல்வாக்கு பிரயோகிக்கப்படுமாயின் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரத் தொழில் கம்பனிகள் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கு.'. பணிப்பாளர் பன்னாட்டுத் தொழிற்பாடுகளுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(viii) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் சந்தை அபிவிருத்தி தொடர்பான எந்தவொரு எந்தவொரு தகவல்களையும் அநாபதேயமான விதத்தில் ஊடகங்களுக்கு வழங்கக்கூடாது என்பதுடன் அத்தகைய அறிக்கையுடன் அவர்களது அடையாளமும் வெளிப்படுத்தல் வேண்டும்.

(ix) வேறு ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளினால் அத்துடன்.'. அல்லது கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள வேறு ஏதேனும் தரப்பினரால் தவறான நடைமுறைகள் மற்றும் தவறான நடத்தைகளுக்கான ஏதேனும் அறிகுறிகள்.'. சான்றுகள் இடம்பெற்று அத்தகைய அறிகுறிகள்.'. சான்றுகள் அறியவரும் பொழுது அது பற்றி உள்நாட்டுத் தொழிற்பாடுகள் பணிப்பாளருக்கு.'. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

3.2 இரகசியத்தன்மை

(i) பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதியின் 11(எ) இல் குறித்துரைக்கப்பட்டவாறு, அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள், பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதியினால் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் தவிர மற்றைய தரப்பினருடன் வணிகம் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தக்கூடாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் இணைத்தரப்பினரின் வணிகத் தகவல் உட்பட, அனைத்து விடயங்களிலும் இரகசியத் தன்மையினை பேணவேண்டுமென்பதுடன் அவ்வாறு பேணுவதற்கு உதவுதலும் வேண்டும். அவர்கள் இரகசியத் தன்மையினை சரியான முறையில் பேணுவதனூடாக சந்தையில் ஒருங்கினைப்பினை பேணுவதில் அவர்கள் சமமான பொறுப்பாண்மையினை பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

(iii) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளை இணைத்தரப்பினரின் பகிரங்கப்படுத்தப்படாத உணர்வுபூர்வமான தகவல்களை அடையாளம் காணவும் அவற்றைக் கையாளவும் அவற்றின் அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் வேண்டும் என்பதுடன் இரகசியமான விடயங்களை உரிய முறையில் கையாளுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பொருத்தமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் நிறுவுதலும் வேண்டும்.

(iv) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் இணைத்தரப்பினரின் பகிரங்கப்படாத உணர்வுபூர்வமான தகவல்களை தமது நன்மைகளுக்காகவோ அல்லது அவர்களது பிரதிநிதிகளின் நன்மைகளுக்காகவோ அல்லது தெரிந்த தரப்பினருக்காகவோ அல்லது அத்தகைய பகிரங்கப்படாத தகவல்களின் அடிப்படையில் மற்றொரு தரப்பினர் செயலாற்றுவதற்கு தூண்டுதலளிக்கவோ பயன்படுத்தக்கூடாது.

(v) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் இணைத்தரப்பினர்கள் பற்றிய அலுவல்களை பொது இடங்களில் செல்லிடத் தொலைபேசிகள் ஊடாக அல்லது வேறுஏதேனும் ஊடகங்கள் உட்பட பொது இடங்களில் கலந்துரையாடக்கூடாது என்பதில் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும் என்பதுடன் இரகசியத் தகவல்களைக் கொண்டுள்ள ஏதேனும் ஆவணங்களையோ, இலத்திரனியல் ஊடகத்தினையோ அல்லது தனியாள் கணனிகளையோ பொது இடங்களில் விட்டுச் செல்லலாகாது.

(vi) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் இரகசியத்தினை வெளிப்படுத்துவதற்கு எந்தவொரு வழியிலும் தூ ண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி அல்லது தவறான முறைமையில் எவர் மீதும் அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடாது. இதேபோன்று, அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் இரகசியத் தகவல்களை வெளிப்படுத்துமாறு அவர்களது இணைத்தரப்பினர்களிடமிருந்து வரும் கோரிக்கைகளை நிராகரித்துவிட வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சம்பவங்கள் நிகழுமாயின் அதுபற்றி அவர்களது முகாமைத்துவத்திற்கும் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கும் பணிப்பாளர் பன்னாட்டு தொழிற்பாடுகளுக்கும் அறிவித்தல் வேண்டும்.

3.3 தனிப்பட்ட (சொந்த) கணக்கிற்கான வணிகம்

(i) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் ஊழியரொருவர் வாடிக்கையாளரொருவருக்கான இணைத்தரப்பினரொருவராக அல்லது பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதியின் 9 ஆவது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறான நிதியியல் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்களுடனான முதல்வராக இருக்கக்கூடாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனியொன்றில் ஊழியரொருவர் பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதியின் 9ஆவது ஒழுங்குவிதியில் குறித்துக்காட்டப்பட்ட எந்தவொரு சாதனம் தொடர்பிலும் உடனடியாக குடும்ப அல்லது நண்பர்கள் அல்லது தொடர்பான தரப்பினர்களுடன் வணிகத்தினை∴ வர்த்தகத்தினை மேற்கொள்ள அனுமதிக்கக்கூடாது.

(iii) ஊழியர்கள் தனிப்பட்ட நிதியியல் கரிசனைகளின் காரணமாக தடுமாற்றங்களுக்கு உள்ளாகாமல் தமது பணத்தரகுத் தொழிலில் முழுமையான கவனத்தினைச் செலுத்துவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் முழுமையான வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படைத் தன்மை காணப்படுதல் வேண்டும்.

(iv) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் விட்டுக்கொடுக்கக்கூடிய அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் ஒழுக்கவியல் சார்ந்த அல்லது தொழில்சார் நிபுணத்துவ நியாயத்தினை விட்டுக்கொடுப்பதற்காக பார்க்கப்படக்கூடிய உண்மையான மற்றும் சாத்தியமான அக்கறைகளில் முரண்பாட்டினை அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் அடையாளம் காணுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் அத்தகைய முரண்பாடுகளை வெளிப்படுத்தி அவற்றினைத் தவிர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

3.4 பொழுது போக்குகள், பரிசுகள் மற்றும் உபகாரங்கள்

i) பரிசுகள் மற்றும் பொழுதுபோக்குகள் வியாபாரம் மேற்கொள்ளப்படும் காலப்பகுதியில் வழங்கப்படுகின்றனவாக இருக்கின்றபோது, வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு ஊழியர்களுக்கோ அல்லது மற்றைய நிறுவனங்களின் ஊழியர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கோ முறையற்ற தூண்டுதல்களை ஒருபோதும் வழங்கக்கூடாது.

(ii) முகாமைத்துவம் ஊழியர்கள் பெறுகின்ற பொழுதுபோக்குகள்∴ பரிசுகளின் வடிவம் கால இடைவெளி மற்றும் செலவுகளைக் கண்காணித்தல் வேண்டும் என்பதுடன், வழங்குகின்றமை∴ பெறுகின்றமை தொடர்பில் மிகத் தெளிவான கொள்கையினைக் கொண்டிருந்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கொள்கை சரியான முறையில் அவதானிக்கப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iii) முகாமைத்துவம் மிகையானதாக இருக்கக்கூடும் என நியாயப்படுத்தப்பட்ட பரிசுகளைக் கையாளக்கூடிய நடைமுறைகளை உருவாக்க வேண்டுமென்பதுடன் குற்றங்களுக்கான முகாந்திரமின்றி அதனை நிராகரிக்க முடியாது. என்பதுடன் பெறப்பட்ட∴ வழங்கப்பட்ட அனைத்து பொழுது போக்குகளினதும் வெளிப்படைத் தன்மையினையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(iv) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் தமது குடும்பத்தினர், உறவினர் அல்லது தெரிந்த தரப்பினர்களுக்காக நியாயமற்ற உபகாரங்களெதனையும் அத்தகைய உபகாரங்கள் நியாயமானதும் நேர்மையானதுமான பாரம்பரிய நியமங்களுக்கு முரணானதாக இருக்குமாயின், கேட்டுப் பெற்றுக்கொள்ளப்படக்கூடாது.

3.5 பந்தயங்கள் மற்றும் சூதாட்டங்கள்

i) சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையேயான சூதாட்டங்கள் அல்லது பந்தயங்கள் வெளிப்படையாகவே அபாயம் நிறைந்தவையென்பதனால் அவை கட்டாயமாக தடைசெய்யப்படுதல் வேண்டும்.

**4.0 பொதுவான வணிகப்படுத்தல் கோட்பாடுகள்**

4.1 வணிக சம்பாஷனைகளை பதிவுசெய்தல்

(i) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் குரல் பதிவு முறைமை பதிவு செய்தலுக்கான இயலாற்றலைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வணிக சம்பாஷனையும் பதிவுசெய்யப்பட்டு தொடர் இலக்கங்களும் இடப்பட்டு தொலைபேசி இலக்கம், சம்பாஷிக்கப்பட்ட திகதி, நேரம் என்பனவற்றுடன் சேமிக்கப்படுதல் வேண்டும்.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் தாங்கள் பொருத்தமான தரவு மற்றும் ஒலிப்பதிவு நாடாவில் பதிவுகளை மேற்கொள்ளும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு நிகரான உள்ளகக் கொள்கைகளை வடிவமைத்தல் வேண்டும்.

(iii) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் தொலைபேசி சம்பாஷனை பதிவுகள் அலுவலகப் பணிமனையிலிருந்து

வேறாக சுயாதீனமானதொரு இடத்தில் சேமிக்கப்பட்டிருப்பதனையும் அத்தகைய பதிவேடுகளை ஒன்றில் பயன்படுத்துவதற்கு அல்லது சேமிப்பதற்கு அணுகுவது கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டதாக இருப்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் அவற்றைப் பழுதடையாமல் பாதுகாக்க முடியும்.

(iv) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் பதிவுசெய்தல் முறைமை சரியான முறையில் தொழிற்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக பதிவுசெய்தல் முறைமையை காலத்திற்குக் காலம் பரீட்சித்துக் கொள்ளுதல் வேண்டும்.

(v) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் வெளித்தரப்பினர்களிடமிருந்து குரல் பதிவுக் கருவி மற்றும் ஏனைய பணிகளை பெற்றுக்கொள்வதற்காக உடன்படிக்கைகளை பேணுதல் வேண்டும்.

4.2 அலுவலகப் பணி நேரத்திற்குப் பின்னரும் பணிமனைக்கு வெளியேயுமான வணிகப்படுத்தல்

(i) பணிமனைக்கு வெளியே மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் அனுமதிக்கப்பட முடியாதவை என்பதுடன் பணி நேரத்திற்குப் பின்னர் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் பட்டியலை முகாமைத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சரியான பதிவுகளை மேற்கொள்வதற்கு அத்தகைய கொடுக்கல்வாங்கலைப் பதிவுசெய்வதற்குமான குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) அறிக்கையிடல் எழுத்துப் படிவத்தில் சமா்ப்பிக்கப்படுதல் வேண்டும். குரல் மூலமான அறிக்கையிடலைப் பொறுத்த வரையில் குரல் பதிவுச் சாதனங்கள் நிறுவப்பட்டு அறிக்கையிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சரியாயின் ஒப்புதல் இல்லாமல் அதன்பின்னர் அழிக்கப்படாத விதத்தில் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) சபையானது, வழமையான பணி நேரத்திற்கு அப்பால் அனுமதிக்கப்படக்கூடிய எந்தவொரு வணிகத்தினதும் வரையறை மற்றும் வகை பற்றி ஊழியர்களுக்கு எழுத்து மூலமான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.

4.3 மேற்கொள்ளப்பட்ட வணிகங்களை மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரூடாக இரத்துச் செய்தல்

(i) பதிவிடப்பட்ட வணிகங்களை, வர்த்தகத்திற்கான அனைத்துத் தரப்பினரும் இணங்கிக்கொள்ளுமிடத்து மாத்திரமே அத்தகைய இரத்தொன்றினை மேற்கொள்ள முடியும். அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் அத்தகைய இரத்துச் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் முழுவிபரங்களையும் அத்தகைய இரத்து இடம்பெற்ற திகதியன்று மின்னஞ்சல் ஊடாக இலங்கை மத்திய வங்கியின் பணிப்பாளர், உள்நாட்டு தொழிற்பாடுகள்/ பணிப்பாளர், பன்னாட்டு தொழிற்பாடுகளுக்கு அறிவித்தல் வேண்டும்.

(ii) அதன் பின்னர் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் பிழையான வணிகங்களை மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளரிடத்தில் சரிசெய்துகொள்ள முடியுமா என்பது பற்றி பரிசோதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

4.4 அனைத்து பணித்தரகுத் தொழில் நடவடிக்கைகளினதும் பதிவேடுகளைப் பேணுதல்.

(i) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் இணைத்தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான ஆவணப்படுத்தல் சான்றுகளை இலத்திரனியல் முறையில் அல்லது வேறு ஏதாவதொரு முறையில் பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதியின் 16 ஆவது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறானதொரு காலப்பகுதிக்கு பேணிப் பாதுகாத்தல் வேண்டும் என்பதுடன் கேட்டுக்கொள்ளப்படும் பொழுது ஒழுங்குமுறைப்படுத்துனருக்கு அவ்வாவணங்களை அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள், பணத்தரகுத் தொழில் ஒழுங்கு விதிகளின் 16 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு கணக்கேடுகளையும் ஏனைய பதிவேடுகள்/ நடவடிக்கைகளும் சரியான முறையில் பேணப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் கேட்டுக்கொள்ளப்படும் போது ஒழுங்குமுறைப்படுத்துனருக்கு அத்தகைய ஆவணங்களை வழங்குவதற்கு பொறுப்புடையனவாகும்.

4.5 தடங்கலற்ற வியாபாரநிதித் திட்டமிடலை நடைமுறையில் வைத்திருத்தல்

(i) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் உபாயத்தினை வரைவிலக்கணம் செய்தல் வேண்டும் என்பதுடன் அவர்களது தொழிற்பாட்டு கையேட்டில் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் நடைமுறைகள் குறைந்தபட்சம் ஆண்டுதோறும் இற்றைப்படுத்தப்பட்டு பரீட்சிக்கப்படுதல் வேண்டும்.

**5.0 இடர்நேர்வு முகாமைத்துவக் கோட்பாடுகள்**

5.1 கடமைகளை வெவ்வேறாகப் பிரித்தல்

அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள், பணத்தரகுத் தொழில் நடவடிக்கைகளின் முன்னரங்க மற்றும் பின்னரங்க அலுவலர்களிடையேயான கடமைகள் பௌதீகரீதியாகவும் தொழிற்பாட்டு ரீதியாகவும் சரியான முறையில் வேறாக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.2 உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள்

(i) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள், அவர்களது உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பில் கலாந்தர மீளாய்வுகளை மேற்கொள்வதனை உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் விரித்துரைக்கப்பட்ட செயன்முறையுடன் அவர்களின் ஒருங்கினைப்பு, துல்லியமான தன்மை மற்றும் இணங்குவிப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு அவர்களின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளும் பணத்தரகுத் தொழில் நடவடிக்கைகள் தொடர்பான இடர் முகாமைத்துவச் செயன்முறைகள் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடுகளும் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ii) மீளாய்வுகள் கொடுக்கல்வாங்கல் பதிவுகளின் துல்லியமான தன்மை மற்றும் பூரணமான தன்மை உட்பட பணத்தரகுத் தொழில் நடவடிக்கைகள் மீதான காத்திரமான கட்டுப்பாடுகள், கடமைகளின் காத்திரமான வேறாக்கல்கள், விதிவிலக்குகளின் துல்லியமான பதிவுகள், செயலாற்றத்துடன் இணைக்கப்பட்ட ஊதியக் கொடுப்பனவுகள், நாளாந்த பின்னூட்டல் நடைமுறைகள் மற்றும் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**6.0 நியமங்களின் மட்டம்**

6.1 தொழில்சார் நிபுணத்தும் மற்றும் அறிவு மட்டம்

(i) சந்தையின் பொதுவான தொழில்சார் நிபுணத்துவத்தினை வலுப்படுத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் மிக உயர்ந்த மட்டத்திலான விழிப்புணர்வினையும் சந்தை நடைமுறைகள் மற்றும் நடத்தை தொடர்பான விளக்கங்களையும் தொடர்ச்சியாக பேணிவருதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் உயர்மட்ட விழிப்புணர்வுகளையும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகள் தொடர்பான விளக்கங்களையும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் மற்றும் முறையியல் சார்ந்த இற்றைப்படுத்தல்களையும் பேணிவர வேண்டும் என்பதுடன் அமைப்பியல் பயிற்சி மற்றும் அபிவிருத்திகளூடாக அவர்களது தொழில்சார் நிபுணத்துவ அறிவினையும் இற்றைப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

6.2 தேவைப்படுத்தப்படும் தகைமைகள்

(i) அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகளின் வணிகர்கள் குறைந்தபட்சம் பின்வரும் தகைமையை/ தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) இலங்கை வங்கியாளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பணத்தரகுத் தொழில் சான்றிதழ்.

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மீதான சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்.

(இ) இலங்கை மத்திய வங்கியின் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால்/ பணிப்பாளர், பன்னாட்டுத் தொழிற்பாடுகளினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஏதேனும் வேறு தொடர்பான தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்.

(ஈ) மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச தகைமைகளுக்கு மேலதிகமாக அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகுத் தொழில் கம்பனிகள் தொடர்பான பாடத்துறைகளில் வேறுஏதேனும் மேலதிக தகைமைகள்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ்** 2018 ஒத்தோபர் 10

**2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

**முற்பணக் கொடுப்பனவு நியதிகளில் (காசாக முற்பணம்) இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுவிக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 9(1)இன் நியதிகளில் (சட்டம்), 2018 ஒத்தோபர் 10ஆம் நாளன்று நடைமுறைக்கு வரும் விதத்தில், முற்பணக் கொடுப்பனவு நியதிகளின் கீழ் (காசாக முற்பணம்) இணைப்பு Iஇன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின்* இறக்குமதிக்கான கொடுப்பனவுகளைச் செய்யும் பொருட்டு இலங்கை ரூபாவின் பரிமாற்றத்துடன் தொடர்புடைய வெளிநாட்டுச் செலாவணியை விடுவிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படவில்லையென அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

2. இவ்வறிவித்தலினை வாடிக்கையாளர்களுக்கு (அதாவது பொருட்களின் இறக்குமதியாளர்கள்) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் மறு அறிவித்தல் வரை இப் பணிப்புரைக்கு இணங்கியொழுகுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

* வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் அலுவல்சார் வெப்தளத்தில் இப்பட்டியல் கிடைக்கத்தக்கதாகவுள்ளது.

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ்** 2018 திசெம்பர் 21

**2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

**உள்முக முதலீட்டுக் கணக்குகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளின் கீழ் விடுவிக்கப்பட்ட 2017 நவெம்பர் 20 திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் விடயங்களுக்குட்பட்டு வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் மூலமான முதலீடுகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இதன்மூலம் அனுமதி வழங்கப்படுகிறது.

i. வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர் ஒருவரின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றில் நிதி வரவு வைக்கப்படுதலானது வதிவற்ற இடைத்தரகர் ஒருவரினால் இலங்கையில் பராமரிக்கப்படும் கணக்கொன்றினூடாக பின்வரும் விதத்தில் வழிப்படுத்தப்படல் வேண்டும் என அனுமதிக்கப்படுகிறது.

அ. வதிவற்ற இடைத்தரகர் இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றாகவோ அல்லது இலங்கைக்கு வெளியில் நிறுவப்பட்ட அத்தகைய வங்கியொன்றின் கிளையாகவோ இருக்கின்ற சந்தர்ப்பத்தில், மேலே கூறப்பட்ட கணக்கானது வொஸ்ரோ கணக்கொன்றாகவோ அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கொன்றாகவோ இருத்தல் வேண்டும்.

ஆ. வேறு ஏதேனும் வதிவற்ற இடைத்தரகராக இருக்கும் சந்தர்ப்பத்தில், மேலே கூறப்பட்ட கணக்கானது உள்முக முதலீட்டுக் கணக்காக இருத்தல் வேண்டும்.

ii. மேலே (i)இன் அடிப்படையில் பெறப்பட்ட நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மூலம் பெறப்பட்ட விற்பனை அல்லது முதிர்ச்சி பெறுவனவுகள் மற்றும் வருவாய்கள் முதலீடு வழிப்படுத்தப்பட்ட அதே விதத்தில் வொஸ்ரோ கணக்கு அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக மீளனுப்பப்படலாம்.

iii. வதிவற்ற இடைத்தரகரின் வொஸ்ரோ கணக்கு அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு நிதியிடும் நோக்கத்திற்காக அத்தகைய வதிவற்ற இடைத்தரகர் ஒருவரின் கணக்கினை பேணுவதற்கான எந்தவொரு வசதியினையும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வழங்கக்கூடாது.

iv. வொஸ்ரோ கணக்கு/ உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்ட மேற்கூறப்பட்ட முதலீடுகளுடன் தொடர்புடைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் 2017ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பணிப்புரையின் பந்தி 6இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கமைய வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

v அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஏற்படுகின்ற கொடுத்து தீர்ப்பனவு, இணைத்தரப்பு போன்ற ஏதேனும் இடர்நேர்வுகளை குறைப்பதற்காக பொருத்தமான வழிமுறைகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

2063/12ஆம் இலக்க - 2018ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) பொது

அரசாங்க அறிவித்தல்கள்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

2018ஆம் ஆண்டில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதற்கும் அத்தகைய வழங்கல் தொடர்பிலான கொடுப்பனவுகளை வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு மேற்கொள்வதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க,

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார**

**அலுவல்கள் அமைச்சர்**

கொழும்பு

2018 மாச்சு 16

**தொடர்: 037/05/002/0018/017** 2018 சனவரி 11

**வழிகாட்டல் இல. 01/18**

சேரல்: அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கும்

**2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களுக்கான பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வருதலாதல் வேண்டுமென்பதுடன் 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகள் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலும் வேண்டும்.

இவ்வழிகாட்டலானது, அவர்களது வியாபாரத்திலுள்ள பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றிய இடர்நேர்வினை அடையாளம் காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான குறைந்தபட்ச அறிவுறுத்தல்களாகவும் குறிகாட்டிகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வினைத் தணிப்பதற்குக் காத்தரமான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும். இவ்வழிகாட்டல்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் அனைத்து நிதியியல் நிறுவனங்களும் அவற்றின் சொந்த இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் தணிப்பு அறிக்கையினைத் தயாரித்தல் வேண்டும்.

**பணிப்பாளர்/நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்

**2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களுக்கான பணம் தூயதாக்கறல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான வழிகாட்டல்கள்**

**அறிமுகம்**

1. 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் தொழிற்படுகின்ற இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, 2016ஆம் ஆண்டு சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இல. 1951/13இன் மூலம் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகளை வழங்கியதுடன் இவை விடுக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும். இவ்விதிகள் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு "நிதி வியாபாரத்தில்" ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

2. 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகளின் 3ஆம் விதியின்

கீழ் ஏற்புடைத்தானவாறு, விதிகளின் அறிமுகப்படுத்தலானது, ஒவ்வொரு நிதியியல் நிறுவனமும் மற்றைய விடயங்களுடன் அதன் வாடிக்கையாளர்களினாலும் வியாபார நடவடிக்கைகளினாலும் ஏற்படுத்தப்படக்கூடிய பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை அடையாளங்கண்டு, மதிப்பிட்டு மற்றும் முகாமை செய்யும் நோக்கத்திற்காக அதனகத்து குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வழிமுறைகளை எடுப்பதற்கு விதிகளின் கீழ் அடையாளம் காணப்பட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**இடர்நேர்வு முகாமைத்துவம்**

3. ஒவ்வொரு நிதியியல் நிறுவனமும் நிதியியல் நிறுவனத்திற்குள் காணப்படும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளங்கண்டு பகுப்பாய்வு செய்தல் வேண்டுமென்பதுடன் ஆற்றல்வாய்ந்த பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு ஏற்றவிதத்திலமைந்த கொள்கைகளையும் நடைமுறைகளையும் வடிவமைத்துக் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

4. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்வதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு மதிப்பீடொன்றினை நடத்துவது தொடர்பில் ஒவ்வொரு நிதியியல் நிறுவனமும் அதன் வாடிக்கையாளர் தளம், சாதனங்கள், விநியோக வழிகள் மற்றும் வழங்கப்பட்ட பணிகள் (அபிவிருத்தியின் கீழுள்ள அல்லது மேற்கொள்ளப்படவுள்ள சாதனங்கள் உட்பட) அத்துடன் அதன் வாடிக்கையாளர் வியாபாரம் செய்கின்ற நியாயாதிக்கப் பரப்புக்களில் காணப்படுகின்ற தொடர்பான அனைத்து இடர்நேர்வுக் காரணிகளையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

5. இடர்நேர்வு மதிப்பீடுகள் குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாடுகள், கொடுக்கல்வாங்கல் ரீதியான தரவுகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் சேகரிக்கப்பட்ட உள்ளகத் தகவல்கள் அதேபோன்று இலங்கை மற்றும் நிதியியல் நிறுவனங்கள் வியாபாரத் தொடர்புகளைக் கொண்டிருக்கின்ற வெளிநாட்டு நியாயாதிக்கங்களின் அரச முகவர்கள், ஒன்றில் வாடிக்கையாளர்கள் அல்லது கிளைகள்/ துணை நிறுவனங்களின் வலையமைப்பினால் நடத்தப்பட்ட தேசிய இடர்நேர்வு மதிப்பீடு போன்ற தகவல்கள் வெளிநாட்டு மூலங்கள், நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு - முறையிலமைந்த பணம் தூயதாக்கல் மீதான ஆசிய/ பசுபிக் குழுமம் போன்ற பிராந்திய சபைகளின் நாடுகள் தொடர்பான அறிக்கைகள் ப.நா.நிதியம் மற்றும் உலக வங்கியின் வெளியீடுகள் மற்றும் நம்பகமான வர்த்தக ரீதியான புலனாய்வுகளை வழங்குபவர்களிடமிருந்தான தகவல்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நிதியியல் நிறுவனங்கள் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினைக் கொண்டிருக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றன. கொள்கைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கிய அத்தகைய கட்டமைப்பானது அடையாளம் காணப்பட்டிருக்கக்கூடிய பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் அளவிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் காத்திரமான முறையில் தணிப்பதற்கும் நிதியியல் நிறுவனங்களை இயலுமைப்படுத்தும்.

**இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு**

**கம்பனி ஆளுகை**

7. நிதியியல் உளவறிதல் பிரிவானது, நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் தொழிற்பாடுகளினது அனைத்து அம்சங்களிலும் வெளிப்படையான தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் உயர்ந்த ஒழுக்கவியல் நடத்தை என்பனவற்றை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் உத்வேகம் மிக்க காத்திரமான கம்பனி ஆளுகைக் கட்டமைப்பினை நிறுவிக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறது. நிறுவனமானது அனைத்து ஊழியர்களினதும் உயர்தரம் வாய்ந்த ஒழுக்கவியல் நடத்தையினைத் தொடர்ச்சியாக மேம்படுத்துகின்ற ஒழுக்கவியல் நடத்தையினைப் பின்பற்றுதல் வேண்டும். ஆற்றல்வாய்ந்த கம்பனி ஆளுகைக் கட்டமைப்பானது காத்திரமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தல், கண்காணித்தல், அறிக்கையிடல் பொறிமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை உள்ளடக்குகிறது. தொழிற்பாடுகளைப் பொருத்தமான விதத்தில் வெவ்வேறாகப் பிரிக்கப்படுவதனை அக்கறைகளின் முரண்பாடுகளைத் தவிர்த்தல் என்பனவற்றின் பொருட்டான வழிமுறைகள் என்பன காத்திரமான கம்பனி ஆளுகை அமைப்பொன்றில் இன்றியமையாத உண்மையான அடையாளங்களாக விளங்குகின்றன. பணிப்பாளர் சபையானது கம்பனியின் தொலைநோக்கு உபாயம் மற்றும் வியாபார மாதிரி என்பனவற்றை உருவாக்குவதற்கும் நிறுவனத்தின் ஆளுகைக் கலாச்சாரத்தினை மேற்பார்வை செய்வதற்கும் முழுப் பொறுப்பாக இருப்பதுடன் இக்குறிக்கோளினை எய்துவதற்கான சபைக் குழுக்கள் உள்ளிட்ட பொறிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. கம்பனி ஆளுகைக் கட்டமைப்பின் காத்திரமான தொழிற்பாட்டினை நாளாந்த அடிப்படையில் உறுதிப்படுத்துவதற்கும் மூத்த முகாமைத்துவம் பொறுப்பானதாகும்.

**I. பணிப்பாளர் சபை**

8. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நிறுவனத்தின் வியாபார மாதிரி மற்றும் தொழிற்பாடுகள் பற்றியும் அது தொழிற்படுகின்ற பொதுவான வியாபாரச் சூழல் பற்றியும் சிறந்த விளக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்கள் நிறுவனங்களின் வியாபார மாதிரிகள் மற்றும் தொழிற்பாடுகள் பற்றியும் இவை இலங்கையின் பொதுவான பொருளாதார சமூகச் சூழலுடன் எவ்வாறு தொடர்புற்றிருக்கிறது என்பதனைப் பற்றியும் விளக்கிக் கொள்வதற்குத் தேவையான தகைமையினையும் அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். நிறுவனத்தின் முகாமைத்துவ தொழிற்பாடுகளிலிருந்து சுயாதீனமான விரும்பத்தக்க மட்டமொன்றினை உறுதிப்படுத்தும் விதத்தில் பணிப்பாளர் சபை நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத தரப் பணிப்பாளர்கள் ஆகிய இருபிரிவினரையும் உள்ளக்கியிருத்தல் வேண்டும்.

9. பணிப்பாளர் சபையானது நிறுவனத்தின் பொதுவான இடர்நேர்வுச் சாத்தியங்களைத் தவிர்க்கும் தன்மையினை நிறுவ வேண்டுமென்பதுடன் இடர்நேர்வுகளைக் காத்திரமான முறையில் தணிப்பதற்கேற்ற பொறிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்குப் பொருத்தமான கொள்கைகளும் நடைமுறைகளும் கட்டுப்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட அனைத்து பிரச்சனைகளையும் காத்திரமான முறையில் அறிக்கையிடுவதற்கான ஒழுங்குகளை நடைமுறைக்கிடப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். பணிப்பாளர் சபையானது நிறுவனத்தின் தொழிற்பாடுகள், அது உள்ளாகக்கூடிய இடர்நேர்வின் முகாமைத்துவம் மற்றும் அனைத்துச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் இதன் விடயம் தொடர்பான வழிகாட்டல்கள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

**II. மூத்த முகாமைத்துவம்**

10. பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனியின் தொலைநோக்கு, உபாயம் மற்றும் வியாபார மாதிரியினை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனத்தின் மூத்த முகாமைத்துவம் பொறுப்பானதாகும். மூத்த முகாமைத்துவம் நிறுவனத்தின் வியாபார மாதிரியின் அனைத்து அம்சங்களையும் உறுதியான முறையில் விளங்கிக் கொண்டுள்ளமையினை எடுத்துக்காட்ட வேண்டுமென்பதுடன இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் கூறுகளை அபிவிருத்தி செய்வதற்குப் பொறுப்பாகவும் இருத்தல் வேண்டும். மூத்த முகாமைத்துவம், இடர்நேர்வினை முகாமைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து மூலவளங்களையும் நிறுவனம் கொண்டிருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் பொறுப்புடையதாகும். சிறந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கை முறைகளுக்கு ஆதரவளிப்பதற்கான காத்திரமான தொடர்பூட்டல் மற்றும் அறிக்கையிடல் ஒழுங்குகள் நடைமுறையிலுள்ளமையினை உறுதிப்படுத்துவதற்கும் அவர்கள் பொறுப்புடையவர்களாவர். இது, அனைத்து அலுவலர் உறுப்பினர்களும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புத் தேவைப்பாடுகளையும் அவர்களது குறித்துரைக்கப்பட்ட வகிபாகத்தினையும் பொறுப்பாண்மையினையும் அறிந்து வைத்துள்ளார்கள் என்பதனை உறுதிப்படுத்துகின்றமையினையும் உள்ளடக்குகிறது. மூத்த முகாமைத்துவமானது பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட வேண்டிய அறிக்கைகள் உட்பட உள்ளக அறிக்கையிடல் பொறிமுறைகளைப் உறுதிப்படுத்துவதற்கும் இடர்நேர்வுகளைக் காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவதுடன் தொடர்பான தகவல்களைத் துல்லியமாகவும் உரிய நேரத்திலும் வழங்கும் விதத்தில் அபிவிருத்தி செய்வதற்கும் பொறுப்புடையதாகும்.

**இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு**

11. நிறுவனங்கள் காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடொன்றினை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென நிதியியல் உளவறிதல் பிரிவு எதிர்பார்க்கின்றது. இவ்விடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டு நிறுவனங்கள் இடர்நேர்வுகளைக் காத்திரமான முறையில் அடையாளம் காண்பதற்கும் அறவிடுவதற்கும் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்கும் அவற்றைத் தயாரிப்பதற்கும் பொறுப்புடையனவாகும். நாளாந்தத் தொழிற்பாட்டு நோக்கிலான இடர்நேர்வு முகாமைத்துவம் மூத்த முகாமைத்துவமும் பணிப்பாளர் சபையும் இவ்வழிகாட்டல் குறிப்பில் கலந்துரையாடப்பட்ட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவக் குறிக்கோள்களை எய்துவதற்கு ஆதரவளிக்கும். இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு நிறுவனத்தினது வியாபார மாதிரி மற்றும் தொழிற்பாடுகளின் அளவு, தன்மை மற்றும் சிக்கலானதன்மை என்பனவற்றுடன் ஒத்துச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

**கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்**

12. மூத்த முகாமைத்துவமானது, நிறுவனமொன்றின் தொழிற்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளைக் காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவதற்கான கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென நிதியியல் உளவறிதல் பிரிவு எதிர்பார்க்கிறது. மூத்த முகாமைத்துவத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட கொள்கைகளும் நடைமுறைகளும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும். கொள்கைகளும் நடவடிக்கைகளும் நிறுவனம் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளைக் காத்திரமான முறையில் இனங்காண்பதனையும் அளவிடுவதனையும் கண்காணிப்பதனையும் கட்டுப்படுத்துவதையும் உறுதிப்படுத்தும் விதத்தில் நாளாந்த வழிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும். ஆகவே, அவை நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள் உற்பத்திகள் மற்றும் பணிகள், விநியோக வழிகள் மற்றும் புவியியல் பிராந்தியங்கள் என்பனவற்றில் இடர்நேர்வுகள் உள்ளடக்கியுள்ளமையினைப் பிரதிபலிக்கும் விதத்தில் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். கொள்கைகளும் நடவடிக்கைகளும் அனைத்தையுமுள்ளடக்கிய விதத்தில் ஆவணப்படுத்தப்பட்டு அனைத்து அலுவலர்களுக்கும் தொடர்பூட்டப்படுதல் வேண்டும். அவை நிறுவனத்தின் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான இடர்நேர்வுத் தோற்றப்பாட்டில் ஏற்படுகின்ற மாற்றங்களின் சூழ்நிலையில் அவை பொருத்தமுடையவைதானா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அவை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

13. கொள்கைகளும் நடைமுறைகளும் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டினை நிறைவேற்றுவதற்கான பொறுப்பாண்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பனவற்றிற்கு இயைபான விதத்தில் தெளிவான முறையில் ஏற்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவத்துடன் தொடர்புபட்டு காணப்படும் அனைத்து ஆட்கள் மற்றும் வியாபார அலகுகளுடன் தொடர்பான காத்திரமான அறிக்கையளித்தலையும் உருவாக்குதல் வேண்டும்.

14. காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான இடர்நேர்விற்கான நிறுவனத்தின் கூறப்பட்ட சாத்தியமான பின்னணியினையும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையின் பொதுவான காத்திரமான நடைமுறைப்படுத்தலிலும் வரையறைகளை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக கொள்கைகளும் நடைமுறைகளும் வாடிக்கையாளர்கள், உற்பத்திகள் மற்றும் பணிகள், விநியோக வழிகள் மற்றும் புவியியல் பிராந்தியங்கள் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட வகைகளுக்கான வெளிப்படுத்துகைகளிலிருந்து தோன்றுகின்ற பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுடன் தொடர்பான இடர்நேர்வுகளுக்கு நிறுவனங்கள் உள்ளாகும் தன்மையினை மட்டுப்படுத்துதல் வேண்டும். காத்திரமான பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது நிறுவப்பட்ட வரையறைகள் மீறப்படுகின்ற நிகழ்வுகளை அறிக்கையிடுகின்ற பொறிமுறையினையும் அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறும் கால இடைவெளியினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

**உள்ளகக் கட்டுப்பாடுகள்**

15. உள்ளகக் கட்டுப்பாடுகளின் தற்போது இடம்பெற்று வருகின்ற முறைமை இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பில் இன்றியமையாததொரு கூறாகும். கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அதேபோன்று தொடர்பான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பன நிறுவப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு தற்பொழுது இடம்பெற்றுவரும் அடிப்படையில் வழிமுறைகள் பயன்படுத்தப்படல் வேண்டும்மென நிறுவனங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

16. "நான்கு கண்கள்" என்ற தத்துவம் என அழைக்கப்படும் குறைந்தபட்சம் இரண்டு பேரின் ஒப்புதலை வலுப்படுத்துவதற்கும் அக்கறைகளின் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும் ஒழுங்குகள் நடைமுறைக்கிடப்படுதல் வேண்டும். வழிமுறைகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். உதாரணமாக, முன்னரங்க அலுவலகம் மற்றும் பின்னரங்க அலுவலக நடவடிக்கை போன்ற தொழிற்பாடு சார்ந்த மற்றும் கட்டுப்பாடு சார்ந்த தொழிற்பாடுகளிடையே போதுமான வேறாக்கம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

17. காத்திரமான உள்ளகக் கணக்காய்வு ஒழுங்குகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென நிறுவனங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடானது சபையின் கணக்காய்வுக் குழுவிற்கு நேரடியாக அறிக்கையளிக்கும் வசதியுடன் சுயாதீனமான

தொழிற்பாட்டினைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். உள்ளகக் கண்காய்வுத் தொழிற்பாடுகள் நிறுவனத்தின் பணம் தூயதாங்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினதும் நடைமுறையினதும் காத்திரமான தன்மையினைக் காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்தல் வேண்டும். கொள்கை நடைமுறைகள் மற்றும் வரையறைகள், ஏற்புடைத்தான சட்டங்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பன நிறுவப்படுவதற்கான நிறுவனத்தின் பற்றுறுதியில விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

18. நிறுவனங்கள் அவற்றின் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பும் நடைமுறைகளும் வெளிவாரிக் கணக்காய்வு மீளாய்விற்கு உட்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

**இணங்குவிப்புத் தொழிற்பாடுகள்**

19. நிதியியல் உளவறிதல் பிரிவானது, நிறுவனங்கள் அவற்றின் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான முகாமைத்துவக் கட்டமைப்பின் ஒரு கூறாகக் காத்திரமான இணங்குவிப்புத் தொழிற்பாட்டினை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கின்றது. இணங்குவிப்புத் தொழிற்பாடானது நிறுவனத்தினது வியாபார மாதிரியின் அளவு, தன்மை, சிக்கலான தன்மை மற்றும் தொழிற்பாடு என்பனவற்றுடன் இணங்கிச் செல்வதாக இருத்தல் வேண்டும். இணங்குவிப்புத் தொழிற்பாடானது நிறுவனமொன்றின் நாளாந்தத் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் கூறாக இருப்பதனால் இது உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளிலிருந்தும் வேறாகக் காணப்படுகின்றது. இணங்குவிப்புத் தொழிற்பாடானது ஏற்புடைத்தான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களிலிருந்து தோன்றுகின்ற நிறுவப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வரையறைகள் என்பனவற்றுடன் நிறுவனம் இணங்கிச் செல்லும் அளவினை, அது நடைபெற்றுவரும் அடிப்படையில் மதிப்பிடுதல் வேண்டும். இணங்குவிப்புத் தொழிற்பாடுகளின் பயனுறுதன்மையானது பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளின் முகாமைத்துவம் தொடர்பில் முகாமைத்துவத் தகவல் முறைமை உருவாக்குகின்ற துல்லியமானதும் உரிய நேரத்திலுமான அறிக்கைகளின் காத்திரமான தன்மையிலேயே பெருமளவிற்குத் தங்கியிருக்கிறது. இணங்குவிப்பு அலுவலர் போதுமானளவு சிரேஷ்ட தன்மையினையும் அறிவினையும் உடையவராகவும் அண்மைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளில் நாளது வரையான அறிவினை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**இடர்நேர்வினைக் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல்**

20. இடர்நேர்வினைக் காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவதற்கும் தணிப்பதற்கும் நிறுவனங்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளின் அளவு மற்றும் தன்மை மற்றும் தணிக்கப்பட்டு வருகின்ற இடர்நேர்வுகளின் காத்திரமான தன்மை என்பன மீதான நம்பகரமான தரவுகளை வழங்குகின்ற முகாமைத்துவத் தகவல் முறைமையினை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு வரும் முகாமைத்துவ தகவல் முறைமையானது அதன் வியாபார மாதிரி மற்றும் தொழிற்பாடுகளின் அளவு, தன்மை மற்றும் சிக்கலான தன்மை என்பனவற்றுடன் ஒத்துச்செல்வதாக இருத்தல் வேண்டும். அத்தகைய முறைமைகள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகள், அத்தகைய இடர்நேர்வுகளின் தன்மையில் ஏற்படும் மாற்றங்களைத் தொடர்ச்சியாக அளவிடல் வேண்டும் என்பதுடன் இடர்நேர்வினைத் தணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பான அறிக்கையினையும் வழங்குதல் வேண்டும். முறைமையானது, உதாரணமாக, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மீறப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பங்களை அடையாளம் காண்பது மட்டுமன்றி அத்தகைய அனைத்துச் சம்பவங்கள் பற்றிய பதிவேடுகளையும் பேணுதலும் வேண்டும். முறைமையானது, அனைத்து வியாபாரப் பிரிவுகளும் மூத்த முகாமைத்துவமும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கு அவசியமான வழிமுறைகள் தொடர்பில் தீர்மானமொன்றினை மேற்கொள்வதற்கு அவர்களை அனுமதிக்கும் விதத்தில் உரிய நேரத்தில் அறிக்கைகளை வழங்குதல் வேண்டும். நிறுவனமானது எவ்வாறு நல்ல விதத்தில் இடர்நேர்வினை முகாமைப்படுத்துகின்றது என்பதனை எடுத்துக்காட்டுகின்ற இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வரையறைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டுகின்ற மற்றும் ஏற்புடைத்தான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களிலிருந்து எழுகின்ற கடப்பாடுகள் என்பனவற்றைக் காட்டுகின்ற அறிக்கைகளைத் தயாரித்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பயிற்சி

21. நிறுவனங்கள் அவற்றின் பணம் தூயதாக்கல்களுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான அனைத்து விடயங்களிலும் அவர்களது அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதற்குக் காத்திரமான நடவடிக்கைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென நிதியியல் உளவறிதல் பிரிவு எதிர்பார்க்கிறது. அலுவலுர்கள் இயல்பாகவே பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுடன் பின்னிப்பிணைந்திருக்கும் இடர்நேர்வுகள், இவ்விடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் வழிமுறைகளின் தன்மை என்பன பற்றி விளங்கிக் கொள்ளுதல் முக்கியமானதாகும். நிறுவனத்தில் இணைந்ததிலிருந்து அனைத்து அலுவலர்களுக்கும் பயிற்சியளிப்பது கட்டாயமானதாகும் என்பதுடன் அவை தற்பொழுது இடம்பெற்றுவரும் நடவடிக்கைகள் தொடர்பானதாகவும் இருத்தல் வேண்டும். அனைத்து அலுவலர்களுக்கும் பொதுவான பயிற்சி வழங்கப்படுவதற்கும் புறம்பாக, பணம் தூயதாக்கல்" பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளின் பின்னணியில் அவர்களது வேலைகளின் தன்மையினைப் பொறுத்து அலுவலர்களின் குறிப்பிட்ட வகையினருக்காக இலக்கிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும். பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் என்பன தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களுக்கு நடத்தப்படல் வேண்டும்.

**பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடல் - சில வழிகாட்டல்கள்**

22. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இடர்நேர்வுகளின் மதிப்பீட்டினை நடத்துவதற்காக நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் வழிகாட்டித் தொகுதியைக் கொண்ட முறையியல் ஒன்றினை ஏற்படுத்துதல் வேண்டும். இம்முறையியலைப் பின்பற்ற வேண்டுமென்ற கட்டாயமெதுவுமில்லை எனினும் ஒவ்வொரு நிதியியல் நிறுவனமும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான அதன் இடர்நேர்வுகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீடொன்றினை மேற்கொள்ள வேண்டுமெனவும் பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையினை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது.

I. **பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை அடையாளம் காணுதல்**

23. நிதியியல் நிறுவனங்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலினால் பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் வகைகள் உட்பட அவர்களின் வியாபார நடவடிக்கைகளின் அம்சங்களை அடையாளம் காண்பதற்குப்

பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் அவ்வாறு செய்யும் பொழுது இலங்கையின் தேசிய பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல்[1] தொடர்பான மதிப்பீடுகளால் கண்டறியப்பட்டவற்றையும் கணக்கில் கொள்ளுதல் வேண்டும். நிதியியல் நிறுவனங்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலினால் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய அவற்றின் வியாபாரத்தினது இடர்நேர்வுக் காரணிகளை அடையாளம் காணும் பொழுது நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் துறைகளைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

i. வியாபாரத்தின் தன்மை, அளவு மற்றும் சிக்கலான தன்மை

நிதியியல் நிறுவனமொன்றின் அளவு மற்றும் சிக்கலான தன்மை என்பன பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலில் இது எவ்வாறு கவரப்படுகிறது அல்லது பாதிக்கப்படுகிறது என்ற தன்மையினைப் பொறுத்து முக்கியமான வகிபாகத்தினை ஆற்றுகின்றது. உதாரணமாக, பாரிய நிதியியல் கம்பனிகள் பற்றி அதன் வாடிக்கையாளர்களுக்குத் தனிப்பட்ட முறையில் மிகக் குறைந்தளவே தெரிந்திருப்பதுடன் இது சிறிய நிதியியல் நிறுவனங்களிலும் பார்க்க வாடிக்கையாளர்களுக்குக் கூடியளவு அநாமதேயத் தன்மையினை வழங்குவதாக இருக்கிறது. இதேபோன்று பன்னாட்டு நியாயாதிக்கப் பிரதேசம் முழுவதிலும் சிக்கலான கொடுக்கல்வாங்கல்களை நடத்துகின்ற நிதியியல் நிறுவனமொன்று உள்நாட்டு வியாபாரத்தினை மாத்திரம் மேற்கொள்கின்ற நிறுவனத்தினை விட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதில் பெருமளவு வாய்ப்புக்களைக் கொண்டிருக்கிறது.

ii. வியாபாரம் வழங்குகின்ற உற்பத்திகள் மற்றும் பணிகள்

சில உற்பத்திகள் மற்றும் பணிகள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கு மிகக் கவர்ச்சியுடையனவாகும். வியாபாரம் வழங்குகின்ற உற்பத்திகள் மற்றும் பணிகள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கு மிக இலகுவில் பாதிக்கப்படக்கூடியதாக அல்லது கவர்ச்சியுடைதாக இருக்கின்றதா என்பதனைப் பரிசீலனையில் கொள்ளும் பொழுது, பின்வருவன நிதியியல் நிறுவனங்களினால் பொதுவாக வழங்கப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் பணிகளிலிருந்து தோன்றுகின்ற பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை அடையாளம் காணுகின்ற குறிகட்டிகளின் (பூரணமானதல்ல) பட்டியலொன்றாகும்.

- முன்னுரிமையளிக்கப்பட்ட அல்லது சிறப்புரிமை வாய்ந்த வங்கித்தொழில் போன்ற தனிப்பட்ட வங்கித்தொழில் பணிகள்
- கடன்/ பற்று அல்லது மற்றைய மீளநிரப்பப்படத்தக்க அட்டைகள்
- நேருக்குநேர் சந்தித்திராதவர்களின் வியாபாரத் தொடர்பு அல்லது கொடுக்கல்வாங்கல்கள்
- தெரிந்திராத அல்லது தொடர்பற்ற மூன்றாந்தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட கொடுப்பனவுகள்
- ஏதேனும் புதிதாக உருவாக்கப்பட்ட சாதனங்கள் மற்றும் பணிகள்
- நேரடியாக வருகின்ற வாடிக்கையாளர்களுக்கான பணிகள்
- செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில்
- தனியொரு கட்டுப்பணக் காப்புறுதிக் கொள்கை

iii. நிதியியல் நிறுவனங்கள் வணிகங்களை மேற்கொள்கின்ற வாடிக்கையாளர்களின் வகைகள்

கீழே பட்டியலிடப்பட்டவை வாடிக்கையாளர்களிடமிருந்து தோன்றுகின்ற பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கான சில குறிகாட்டிகளாகும் (பூரணமானதொரு பட்டியலல்ல).

பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் உயர்ந்த இடர்நேர்வுகளை ஏற்படுத்துகின்ற வாடிக்கையாளர்களின் வகைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

- பாரிய கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள விரும்புகின்ற புதிய வாடிக்கையாளர்கள்
- நேருக்குநேர் சந்தித்திராத நடைமுறையிலுள்ள வாடிக்கையாளர்
- ஆரம்ப நிலைமைக்கு மேலாக இருந்திட்டொன்றான அல்லது ஒரே தடவையிலான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்கள் (ஒன்றில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகள் அல்லது நிதியியல் நிறுவனங்களின் உள்ளக வரையறைகள்)
- வெளிப்படையான நிதியியல் நன்மைகளைத் தராத சிக்கலான வியாபார அமைப்பினைப் பயன்படுத்துகின்ற வாடிக்கையாளர்கள்
- அதே தனிப்பட்டவர்களுடன் அல்லது குழுவுடன் எண்ணற்ற கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளர் குழு
- அரசியல் ரீதியாக முகம் கொடுக்க வேண்டிய ஆட்களான வாடிக்கையாளர்கள்
- பாரிய காசுத் தொகையுடன் தொடர்புபட்ட வியாபாரங்களைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்கள்
- பரிசோதிப்பதற்கு கடினமான அடையாளங்களைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்
- பயன்படுத்தப்பட்ட பாரிய தொகையினைக் கொண்ட நாணயத் தாள்களையும் அத்துடன்/ அல்லது சிறிய இன நாணயத் தாள்களைக் கொண்டு வருகின்ற வாடிக்கையாளர்
- வழமைக்கு மாறான சூழ்நிலைகளில் வியாபார தொடர்புகளை அல்லது கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற வாடிக்கையாளர்கள். உதாரணம்: நிதியியல் நிறுவனத்திற்கும் வாடிக்கையாளரின் அமைவிடத்திற்குமிடையில் குறிப்பிடத்தக்க, விளங்கிக் கொள்ளப்படாத புவியியல் ரீதியான தூரம், அடிக்கடி விளங்கிக் கொள்ளப்படாத கணக்குகளின் நகர்வுகள், வேறுபட்ட புவியியல் அமைவிடங்களிலுள்ள நிறுவனங்களிடையே அடிக்கடி இடம்பெறும் விளக்கப்படாத நிதிகளின் நகர்வுகள்
- வதியாத வாடிக்கையாளர்கள்
- சொத்துடமை அமைப்பில் வழமைக்கு மாறான தன்மையினையும் மிகையான சிக்கல் தன்மையினையும் கொண்டுள்ள கம்பனி வாடிக்கையாளர்கள்

1 இவ்வறிக்கையின் பிரதியை நிதியியல் உளவறிதல் பிரிவின் வெப்தளத்தில் http://www.fiusrilanka.gov.lk/docs/Other/Sri_Lanka_NRA_on_ML2014_-_Sanitized_Report.pdf பார்வையிட முடியும்.

- செல்வத்தின் மூலம் அத்துடன்/ அல்லது நிதிகளின் மூலத்தினை இலகுவில் சரிபார்த்துக் கொள்ளமுடியாத வாடிக்கையாளர்கள் அல்லது கணக்காய்வுப் பரீட்சிப்புக்கள் முறிவடைந்து போனதாகக் காணப்படுகின்ற அத்துடன்/ அல்லது தேவையற்ற ஒன்றின் மேல் ஒன்றான அடுக்குப்படுத்தல்கள்
- இலாபம் தராத அமைப்புக்களான வாடிக்கையாளர்கள்
- கணக்காளர்கள், சட்ட அறிஞர்கள் அல்லது ஏனைய தொழில்சார்நிபுணர்கள் போன்ற தகவல்களைத் திரட்டி வழங்குபவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்
- தேசிய ரீதியில் அல்லது துறை சார்ந்த இடர்நேர்வு மதிப்பீடுகளில் உயர் இடர்நேர்வினைக் கொண்டதாக அடையாளம் காணப்பட்டுள்ள வகையினரான வாடிக்கையாளர்

iv. நிதியியல் நிறுவனங்கள் தொடர்புகளைக் கொண்டுள்ள நாடுகள்

நிதியியல் நிறுவனங்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பில் உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட குறிகாட்டியாகப் பின்வரும் காரணிகளைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்:

- ஐக்கிய நாடுகளின் தீர்மானத் தடைகள் அல்லது அதே போன்ற வழிமுறைகளுக்குட்பட்டுள்ள ஏதேனும் நாடுகள்
- பணம் தூயதாக்கலுக்கெதிரான அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் முறைமையினை போதுமானளவில் கொண்டிராத நிதியியல் நடவடிக்கைச் செயலணிக்குழு போன்ற நம்பகமான மூலவளங்களினால் அடையாளம் காணப்பட்ட ஏதேனும் நாடு
- ஊழல், வரி ஏய்ப்பு மற்றும் ஏனைய குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்ந்த மட்டத்தினைக் கொண்டுள்ள நம்பகமான மூலங்களினால் அடையாளம் காணப்பட்டுள்ள ஏதேனும் நாடு
- பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கு ஆதரவளிப்பதான நம்பகமான மூலங்களினால் அடையாளம் காணப்பட்டுள்ள ஏதேனும் நாடு
- வரி வாய்ப்புக்களாக நம்பகமான மூலவளங்களினால் அடையாளம் காணப்பட்ட ஏதேனும் நாடு

v. வியாபார விநியோக முறைகள் அல்லது வழிப்படுத்தல்கள்

நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சாதனங்கள் மற்றும் பணிகளை விநியோகிக்கின்ற வழி பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடுதல் தொடர்பான பாதிக்கப்படும் தன்மையினை ஏற்படுத்துகின்றது.

பின்வரும் குறிகாட்டிகள் சில (பூரணமானதொரு பட்டியலல்ல) வியாபார விநியோக முறைகள் அல்லது வழிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுடன் தொடர்பான இடர்நேர்வுகளுக்கு உதவமுடியும்.

- கணக்குடமையாளர்/ வாடிக்கையாளரின் அடையாளத்தினைச் சரிபார்ப்பதில் சவால்களை ஏற்படுத்தும் நேருக்குநேர் சந்தித்திராத வாடிக்கையாளர்கள் (அஞ்சல், தொலைபேசி, இணையத்தளம்)
- வாடிக்கையாளர்களுடனான (இடையீட்டாளர்கள், தகவல்களைத் திரட்டி வழங்குபவர்கள், குழுமப்படுத்தப்பட்ட கணக்குகளூடாக) மறைமுகமான தொடர்புகள்

II. **இடர்நேர்வு மதிப்பிடல்**

24. தொடர்புபட்டுள்ள அடையாளம் காணப்பட்ட அச்சுறுத்தல்களைக் கவனத்தில் கொள்ளும் பொழுது, நிதியியல் நிறுவனங்கள் நேரிடக்கூடியதன்மை (இடர்நேர்வு சந்தர்ப்பங்கள் ஏற்படக்கூடிய தன்மை மற்றும் தாக்கத்தின் (இடர்நேர்வுச் சம்பவம் நிகழுமிடத்து ஏற்படக்கூடிய இழப்பு அல்லது சேதத்தின் தொகை) நியதிகளில் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளின் நியதிகளில் மதிப்பிடப்பட வேண்டும் அல்லது அளவிடப்படுதல் வேண்டும். சம்பவத்துடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வு நிகழ்வானது, ஏற்படக்கூடிய சாத்தியத்தன்மை, இது ஏற்படுத்தக்கூடிய சேதத்தின் தன்மை என்பனவற்றுடன் இணைந்ததொன்றாகவுள்ளது.

**சாத்தியமான அளவு**

25. சாத்தியமான அளவு என்பது குறிப்பிட்ட இடர்நேர்வினை மதிப்பீடு செய்து கொள்கையில் வியாபாரத்தில் ஏற்படுகின்ற பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வொன்றிற்கான சாத்தியத்தினைக் குறிக்கிறது. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வின் மூன்று மட்டங்களிலான சாத்தியத்தன்மை கீழே காட்டப்படுகின்றது. எனினும், நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சூழ்நிலைகளுக்கு அவசியமான முறையில் பல அளவுகளைக் கொண்டிருக்க முடியும்.

i. மிகவும் சாத்தியமானது - பெரும்பாலும் நிச்சயமானது;

ii. சாத்தியமானது - பெருமளவிற்கு நிகழக்கூடியது;

iii. சாத்தியமற்றது - குறைந்தளவு நிகழ்தகவினைக் கொண்டது. ஆனால் சாத்தியமற்றதல்ல.

**தாக்க அளவு**

26. தாக்கம் என்பது பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கு ஏற்படக்கூடிய சேதத்தின் பாரதூரமான தன்மையினைக் குறிக்கிறது. சாத்தியமான தாக்கத்தினை அல்லது விளைவுகளை மதிப்பிடுகையில், வியாபாரம் தொடர்பான நோக்கின் வீச்சிலிருந்தே மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் முழுமையானவையல்ல. நிகழக்கூடிய பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலின் தாக்கம் தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வியாபாரச் சூழ்நிலைகள் என்பனவற்றில் தங்கியிருப்பதுடன் பின்வரும் விடயங்களின் அடிப்படையிலேயே அவை கணிக்கப்பட்டு நோக்கப்படல் வேண்டும்:

i. சந்தை உணர்வுகள் தொடர்பில் (உதாரணமாக முதலீட்டாளர் நம்பிக்கை இழப்பு) மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துநரால் விதிக்கப்பட்ட புகழ்மிக்க அல்லது தண்டம் அல்லது ஏனைய தீர்மானங்கள் (இழப்பு அல்லது வியாபார உரிமங்களை இடைநிறுத்துதல் போன்றவை).

ii. பயங்கரவாதத்திற்கு அல்லது பயங்கரவாத அமைப்பிற்குப் பங்களிப்பதாகக் காணப்படக்கூடிய குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்கள்

பற்றிய இடர்நேர்வு.

iii. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு ஏதேனும் சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படக்கூடிய விதத்திலான குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் இடர்நேர்வு.

iv. சட்டத்திற்கு மாறான நடவடிக்கையொன்றில் உதவியளிக்கப்பட்ட, புலனாய்வு செய்யப்பட்ட, வழக்குத் தொடுக்கப்பட்ட அல்லது வேறு ஏதேனும் விதத்தில் சிக்கலடைந்த தன்மைகள் கண்டறியப்பட்டிருப்பின் நிதி நிறுவனமொன்றின் புகழினை இது எவ்வாறு பாதிக்கக்கூடும். இது முக்கியமான வர்த்தக உறவுகளின் (தொடர்பான கணக்குகள் போன்றவை) இழப்பிற்கு அல்லது வாடிக்கையாளர் சமூகத்தினால் அல்லது பங்குடமையாளர்/ முதலீட்டாளர்களினால் விலக்கப்படுவதற்கு வழிவகுக்கிறது.

27. நிதியியல் நிறுவனங்களுக்கு பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பில் ஏற்படக்கூடிய இடர்நேர்வின் மூன்று மட்டத் தாக்கம் கீழே உதாரணமொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. எனினும், நிதியியல் உளவறிதல் பிரிவு நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுச் செயன்முறைகளை அபிவிருத்தி செய்வதனை ஊக்குவிப்பதற்காகவும் குறிப்பிட்ட வாடிக்கையாளர்கள்/ கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வது தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்காகவும் அவர்களது வியாபார மாதிரி/ நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்குவிக்கின்றது.

i. முக்கியமான - குறிப்பிடத்தக்க விளைவுகளாகக் கணிசமான சேதங்களை விளைவித்தல், நிதியியல் நிறுவனங்களை மூடிவிடுவதற்கான சாத்தியங்களைத் தோற்றுவித்தல், வியாபார நடவடிக்கைகளை நிறுத்துதல், ஒழுங்குமுறைப்படுத்தல் மூலமான தடைகளை விதித்தல் அல்லது நிதியியல் நிறுவனங்கள் அதன் புகழினைப் பாதுகாக்கும் தன்மைகள் என்பன காணப்படுவதுடன் இது வியாபாரம் மற்றும் அதன் புகழினைக் கணிசமாகப் பாதிக்கும் தன்மையுடனும் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

ii. மிதமானவை - மிதமான தாக்கம், வியாபாரம் மற்றும் அதன் புகழுக்குக் கணிசமான சேதங்களை ஏற்படுத்துவதுடன் தொடர்பானது.

iii. சிறியவை - நிதியியல் நிறுவனங்கள் தொடர்பில் சிறிய அல்லது மிகச் சிறிய விளைவுகளை அல்லது தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் தொடர்பானது.

28. நேரிடக்கூடிய மற்றும் தாக்க அளவினை அடிப்படையாகக் கொண்டது. நிதியியல் நிறுவனங்கள் ஒட்டுமொத்த இடர்நேர்வுப் புள்ளியினை மதிப்பிடல் வேண்டும். இடர்நேர்வுத் தரமிடல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவியாகப் பயன்படுத்த முடியும் என்பதுடன் ஒட்டுமொத்த இடர்நேர்வினைக் கருத்திற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கும் உதவும். மாதிரி இடர்நேர்வுத் தரமிடல் பெறுமதியினை இடர்நேர்வு அளவையியலில் (இணைப்பு 1) காணலாம். எனினும் நிறுவனங்கள் பணம் தூ யதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடவும் அடையாளம் காணவும் கணியப்படுத்தவும் அவற்றின் சொந்த அணுகுமுறைகளைப் பின்பற்றுமாறு ஊக்குவிக்கப்பட்டன. பின்பற்றப்பட்ட முறையியலைக் கருத்திற் கொள்ளாமல், நிதியியல் உளவறிதல் பிரிவு நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் விதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு நிறுவனங்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுளைக் காத்திரமான முறையில் அடையாளம் காணவும் அளவிடவும் கட்டுப்படுத்தவும் தணிப்பதற்குமான ஏற்ற கட்டமைப்பினை உருவாக்க நடவடிக்கை முறைகளை நடைமுறைக்கிடுமாறு கேட்டுக் கொண்டது.

i. பாரதூரமான இடர்நேர்வு - நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் நிலைமை மற்றும் புகழ் என்பன உட்பட நிதியியல் நிறுவனம் மீது பெரும்பாலும் நிச்சயமாக ஏற்படக்கூடிய அத்துடன்/ அல்லது மிகக் கடுமையான விளைவுகளைக் கொண்டிருக்கக்கூடியவை.

பதிலிறுப்பு: நிகழ்தக்க/ அல்லது வாடிக்கையாளர் உறவுமுறைகளை உருவாக்கத்தக்க விதத்தில் அல்லது அதிகரித்த உரிய விழிப்புக்க கவனம் போன்ற இடர்நேர்வு தணிப்பு ஊடாக ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்திற்கு இடர்நேர்வுகளைக் குறைத்தல்.

ii. உயர் - இடர்நேர்வு நிகழத்தக்க சாத்தியம் அத்துடன்/ அல்லது பாரதூரமான விளைவுகளைக் கொண்டிருத்தல்.

பதிலிறுப்பு: அதிகரித்த நெருக்கமான கவனிப்பு போன்ற இடர்நேர்வுத் தணிப்பினூடாக இடர்நேர்வுகள் குறைக்கப்படும் வரை கொடுக்கல்வாங்கல்களை/ வாடிக்கையாளர் உறவுமுறைகள் நிறுவப்படுவதனை அனுமதிக்கக்கூடாது.

iii. இடைநிலை - இது நிகழத்தக்க சாத்தியம் அத்துடன்/ அல்லது மிதமான விளைவுகளைக் கொண்டிருத்தல்.

பதிலிறுப்பு: தணிக்கப்பட்ட இடர்நேர்வு; வழமையான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் மற்றும் ஏனைய பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடுகள்.

iv. குறைந்தவை - ஏற்படுவதற்கு சாத்தியமற்றவை அத்துடன்/ அல்லது சிறிய அல்லது மிகச் சிறிய விளைவுகள்.

பதிலிறுப்பு: தணிக்கப்பட்ட இடர்நேர்வு: இலகுபடுத்தப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் அத்துடன் ஏனைய பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடுகள்.

## III. இடர்நேர்வுத் தணிப்பு

29. நிதியியல் நிறுவனமொன்று தனிப்பட்ட வாடிக்கையாளரொருவரின் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், உற்பத்தி/ பணிகள், விநியோக வழிப்படுத்தல் மற்றும் புவியியல் பிராந்தியங்கள் தொடர்பிலான இடர்நேர்வினை மதிப்பிட்டதும் இடர்நேர்வினை முகாமைப்படுத்துவதற்கும் தணிப்பதற்குமான உபாயக் கொள்கைகளையும் நடைமுறை ஒழுங்குகளையும் அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

இடர்நேர்வினைக் குறைக்கின்ற அல்லது தணிக்கின்ற உதாரணங்கள் வருமாறு:

i. உயர் இடர்நேர்வுச் சாதனங்களுக்கு அல்லது விநியோக வழிப்படுத்தல்களுக்காக கொடுக்கல்வாங்கல் வரையறைகளை ஏற்படுத்துதல்.

ii. உயர் இடர்நேர்வினைக் கொண்ட வாடிக்கையாளர்கள், சாதனங்கள், பணிகள் அல்லது விநியோக வழிப்படுத்தல்களுக்காக முகாமைத்துவத்தின் ஒப்புதல் செயன்முறையினைக் கொண்டிருத்தல்.

iii. இடர்நேர்வினைத் தரமிடுகின்ற வாடிக்கையாளர்கள் மற்றும் வேறுபட்ட அடையாளப்படுத்தல் மற்றும் சரிபார்ப்பு முறைகளைப் பிரயோகித்தல் உட்பட உயர்ந்த அல்லது தாழ்ந்த இடர்நேர்வு வாடிக்கையாளர்களுக்காக வேறுபட்ட தேவைப்பாடுகளைப் பிரயோகித்தல்.

iv. நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஒப்புதலளித்த வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளல் கொள்கையினை அடிப்படையாகக்

கொண்ட உயர் இடர்நேர்வைக் கொண்டவையெனக் கருதப்படுகின்ற உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட நாடுகளுடன் அல்லது வாடிக்கையாளர்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள விரும்புகின்ற வாடிக்கையாளர்களை ஏற்றுக்கொள்ளாதிருத்தல்.

**இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்கள்**

30. நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயத்தின் பகுதியொன்றாக மற்றைய விடயங்களுடன் பின்வரும் கூறுகளையும் பின்பற்றுதல் வேண்டும்:

i. நிதியியல் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் மூத்த முகாமைத்துவ மட்டத்தில் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவ குறிக்கோளினை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தல் மற்றும் குறிக்கோள்களின் நடைமுறைப்படுத்தலில் காணப்படும் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல்.

ii. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட முகாமைத்துவப் பொறுப்பாண்மைகளையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் நடைமுறைப்படுத்தல்.

iii. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவத்துடன் இணைந்த தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்குப் போதுமான அலுவலர் வளங்களை வழங்குதல்.

iv. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவ மட்டத்திலிருந்து பணிப்பாளர் சபை அல்லது மூத்த முகாமைத்துவத்திற்கு, சபை உறுப்பினர் அல்லது முறைமையினை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பான மூத்த முகாமையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கான வழிகளுடன் அலுவலர் அறிக்கையிடல் வழிகளை அறிமுகப்படுத்தல்.

v. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் காரணமாக பாதிக்கப்படக்கூடியது என அடையாளம் காணப்பட்டிருக்கும் குறிப்பிட்ட பணிகள் மற்றும் சாதனங்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் விநியோக வழிப்படுத்தல்கள் தொடர்பில் நடைமுறைக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

vi. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான முகாமைத்துவக் கொள்கைகள் அனைத்தையும் ஆவணப்படுத்துவதுடன் இவை நாளது வரை இற்றைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதுடன் நிறுவனத்தின் செயற்பரப்பு மற்றும் இயல்பான தன்மை இரண்டையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் நடவடிக்கைகளையும் அதிகாரிகளினால் நடத்தப்பட்ட இடர்நேர்வு மதிப்பீடுகளில் கண்டறியப்பட்டவற்றையும் மீளாய்வு செய்தல். அத்தகைய கொள்கைகள் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறில் பிரிவிற்கு அறிக்கையிடுவது உட்பட, இணங்குவிக்காதவற்றுடன் தொடர்பான செயன்முறைகளையும் அடையாளம் காணுதல் வேண்டும்.

vii. சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவது உட்பட, நிதியியல் நிறுவனங்கள் முழுவதிலுமுள்ள பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பது பற்றிய நிபுணத்துவத்தினை அபிவிருத்தி செய்வதற்காக அலுவலர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளை வழங்குதல்.

viii. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் விபரமான மற்றும் துல்லியமான நிதியியல், தொழிற்பாட்டு மற்றும் இணங்குவிப்புத் தரவுகளை வழங்குகின்ற காத்திரமான தகவல் முகாமைத்துவ முறைமையொன்றினை அபிவிருத்தி செய்தல்.

**உரிய விழிப்புக் கவன வழிமுறைகளை அதிகரித்தல் மற்றும் இலகுபடுத்தல்**

31. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகள் உயர்வாக இருக்கின்ற சூழ்நிலைகளில் அதிகரித்தளவு வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் வழிமுறைகள் எடுக்கப்படுதல் வேண்டும். பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு குறைவாக இருக்குமிடத்து இலகுபடுத்தப்பட்ட வாடிக்கையாளரை உரிய விழிப்புக் கவன வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். இவ்வதிகரிக்கப்பட்ட மற்றும் இலகுபடுத்தப்பட்ட வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன:

**உயர் இடர்நேர்வு வாடிக்கையாளர்/ கொடுக்கல்வாங்கல்களுக்கான அதிகரிக்கப்பட்ட உரிய விழிப்புக் கவன வழிமுறைகள்**

32. ஒவ்வொரு நிதி நிறுவனமும் எந்தளவிற்கு நியாயமானதோ அந்தளவிற்கு சாத்தியமான விதத்தில் ஆவணங்களைப் பரீட்சித்து ஆவணப்படுத்தல் வேண்டும். பின்னணி மற்றும் அனைத்துச் சிக்கலான தன்மைகளினதும் நோக்கம், வழமைக்கு மாறான பாரிய கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிப்படையான பொருளாதார அல்லது சட்ட ரீதியான நோக்கமெதனையும் கொண்டிராத அனைத்தும் வழமைக்கு மாறான மாதிரிக் கொடுக்கல்வாங்கல்கள் என்பனவற்றைப் பரீட்சித்து ஆவணப்படுத்தல் வேண்டும். பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு உயர்வானதாக இருக்குமிடத்து, நிதியியல் நிறுவனங்கள் உயர் இடர்நேர்வு வியாபார உறவுமுறைகளுக்காக அதிகரிக்கப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளை மேற்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படல் வேண்டும். இவை பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

i. வாடிக்கையாளர் மீதான (தொழில், சொத்துக்களின் அளவு, பொதுமக்கள் தரவுத்தளமூடாகக் கிடைக்கத்தக்க தகவல்கள், இணையத்தள தேடல் போன்றன) மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் சரிபார்த்தல்.

ii. வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர் ஆகியோரின் அடையாளம் காணும் தரவுத்தளத்தினை மிகக் கிரமமாக இற்றைப்படுத்தல்.

iii. வியாபார உறவு முறைகளின் நிச்சயிக்கப்பட்ட தன்மை மீதான மேலதிகத் தகவல்களைப் பெறுதல் மற்றும் சரிபார்த்தல்.

iv. வாடிக்கையாளரின் நிதியத்தின் மூலம் அல்லது செல்வத்தின் மூலம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் சரிபார்த்தல்.

v. கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள அல்லது நிறைவேற்றுவதற்கான காரணங்கள் மீதான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் சரிபார்த்தல்.

vi. வியாபார உறவுமுறைகளைத் தொடங்குவதற்கு அல்லது தொடர்வதற்கு மூத்த முகாமையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சரிபார்த்தல்.

vii. பிரயோகிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் தடவைகளை அதிகரிப்பதன் மூலமும் மேலும் பரீட்சிப்புக்கள் தேவைப்படும் கொடுக்கல்வாங்கல்களின் மாதிரியினைத் தெரிவுசெய்தல் என்பன மூலம் வியாபார உறவுமுறைகளின் அதிகரிக்கப்பட்ட

கண்காணிப்பினை மேற்கொள்ளுதல்.

viii. வங்கியொன்றிலுள்ள வாடிக்கையாளர் பெயரிலுள்ள கணக்கொன்றினூடாக மேற்கொள்ளப்படவிருக்கும் முதலாவது கொடுப்பனவினை, இதையொத்த வாடிக்கையாளரை உரிய விழிப்புக் கவன நியமங்களுக்குட்பட்டு மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுதல்.

**குறைந்த இடர்நேர்வு வாடிக்கையாளர்/ கொடுக்கல்வாங்கல்களுக்கான இலகுபடுத்தப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகள்**

33. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகள் குறைவாக இருக்குமிடத்து, ஒழுங்குவிதிகளுக்குட்பட்டுள்ள நிதியியல் நிறுவனங்கள் இலகுபடுத்தப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டன. இவை குறைந்த இடர்நேர்வின் தன்மையினைக் கவனத்தில் கொண்டிருத்தல் வேண்டும். இலகுபடுத்தப்பட்ட வழிமுறைகள் குறைந்த இடர்நேர்வுக் காரணிகளுக்கு ஈடானதாக இருத்தல் வேண்டும் (உ-ம்: இலகுபடுத்தப்பட்ட வழிமுறைகள் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்ற வழிமுறைகளாக அல்லது தற்பொழுது இடம்பெற்று வருகின்ற கண்காணிப்பின் அம்சங்களுடன் தொடர்பானதாக இருத்தல் வேண்டும்).

சாத்தியமான வழிமுறைகளின் உதாரணங்கள் வருமாறு:

i. வியாபார உறவுமுறைகளை நிறுவியதன் பின்னர் வாடிக்கையாளரினதும் நன்மைகளின் உரித்தாளரினதும் அடையாளத்தினைச் சரிபார்த்தல் (தாமதமான சரிபார்ப்பு).

ii. வாடிக்கையாளர் அடையாளப்படுத்தல் தொடர்பான இற்றைப்படுத்தலின் கால இடைவெளியினைக் குறைத்தல்.

iii. நியாயமான நாணய ரீதியான நன்மைகளினை அடிப்படையாகக் கொண்டு தற்பொழுது இடம்பெற்றுவரும் கண்காணிப்பினதும் கொடுக்கல்வாங்கல்களின் பரிசோதனைகளினதும் அளவினைக் குறைத்தல்.

iv. வியாபார உறவுமுறைகளின் நோக்கம் மற்றும் திட்டமிடப்பட்ட தன்மை என்பனவற்றை விளங்கிக் கொள்வதற்காகக் குறிப்பிட்ட தகவல்களைச் சேகரிக்காமல் விடுதல், அல்லது, குறிப்பிட்ட வழிமுறைகளை மேற்கொள்ளாமல் விடுகின்றதெனினும் கொடுக்கல்வாங்கல்களின் வகை அல்லது நிறுவப்பட்ட வியாபார உறவுமுறைகளிலிருந்தான நோக்கம் மற்றும் தன்மையினை ஊகித்தல்.

34. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பில் சந்தேகம் காணப்படும் வேளையில் அல்லது குறிப்பிட்ட உயர் இடர்நேர்வுச் சூழல் ஏற்புடைத்தாக இருக்குமிடத்து இலகுபடுத்தப்படட வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**இணைப்பு 1**

**ஒட்டுமொத்த பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இடர்நேர்வு**

| | | | | |
|---|---|---|---|---|
| சாத்தியமானவை | மிகவும் சாத்தியமானவை | நடுத்தரம் | உயர் | கடுமையானவை |
| | சாத்தியமானவை | கீழ் | நடுத்தரம் | உயர் |
| | சாத்தியமற்றவை | கீழ் | கீழ் | நடுத்தரம் |
| | | சிறிய | மிதமானவை | உயர்ந்த |
| | | | தாக்கம் | |

**தொடர்: 037/08/001/0005/017** 2018 ஏப்பிறல் 18

**வழிகாட்டல் இல. 02/2018**

சேரல்: முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

**2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கசினோ மற்றும் சூதாட்ட இல்லங்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் இணங்குவிப்பு கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபார (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகள் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலாதலும் வேண்டும்.

**பணிப்பாளர்/நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்

**2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கசினோ மற்றும் சூதாட்ட இல்லங்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான வழிகாட்டல்கள்**

**பகுதி I**

**அறிமுகம்**

1. 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் தொழிற்படுகின்ற இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு (இதனகத்துப் பின்னர் நி.கொ.வா.அ.சட்டம் என அழைக்கப்படும்), 2018.01.10

திகதியிடப்பட்ட இல. 2053/20 கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகளை (இதனகத்துப் பின்னர் வா.உ.வி.க. விதிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) வெளியிட்டது. இது நிதியல்லா வியாபாரங்களை மேற்கொள்கின்ற நிறுவனங்களுக்கும் தொழில்முறைசார்ந்தவர்களுக்கும் ஏற்புடைத்தாகும்.

2. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளில் விபரிக்கப்பட்டவாறு இவ்வழிகாட்டல்கள் இணையத்தளமூடாக அத்தகைய வியாபாரத்தினைக் கொண்டு நடத்துகின்ற ஆளொருவர் உட்பட, கசினோக்கள், சூதாட்ட இல்லங்கள் அல்லது லொத்தரை நடத்துதல் என்பனவற்றிற்கு நிதியியல் கொடுக்கல்வாங்கல்களில் அவர்களது வாடிக்கையாளர் ஈடுபடும் போது பிரயோகித்தல் வேண்டும் (இதனகத்துப் பின்னர் நிறுவனங்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்).

3. இவ்வழிகாட்டல்கள், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், மதிப்பிடல் மற்றும் முகாமைப்படுத்தல் நோக்கங்களுக்காக வழங்கப்படுகின்றன.

4. சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி இவ்வழிகாட்டல்களின் நோக்கத்திற்காக:

**ப.தூ.எதிரான/ ப.நி. ஒழித்தல்** என்பதன் கருத்து நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டவாறு பணம் தூயதாக்கலுக்கெதிரான அத்துடன் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் என்பதாகும்.

**வா.ப.உ.வி. கவனம்** என்பதன் கருத்து வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனம் என்பதாகும்.

**இ.நி. மாற்றல்** என்பதன் கருத்து இலத்திரனியல் நிதிய மாற்றல் என்பதாகும்.

**நி.ந.செ.குழு** என்பதன் கருத்து நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழு என்பதாகும். பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான உலகளாவிய கொள்கை அமைப்பொன்றாகும்.

**நி.உ.பிரிவு** என்பதன் கருத்து நிதியியல் உளவறிதல் பிரிவு என்பதாகும். இது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நோக்கங்களுக்காக பெயர் குறித்துரைக்கப்பட்டதாகவே இருப்பதுடன் (2006.03.23ஆம் திகதியிடப்பட்ட இல.1437/24 கொண்ட அதிவிசேட வர்த்தமானி) குறிப்பிட்ட சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் மற்றும் நிருவகிக்கின்ற பொறுப்பு இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**ப. தூயதாக்கல்** என்பதன் கருத்து பணம் தூயதாக்கல் தொடர்பான குற்றம் என்பதாகும். இது 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடை செய்கின்ற சட்டத்தின் 3ஆம் பிரிவின் நியதிகளில் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது.

**ப. தூயதாக்கல்/ ப.நி.** என்பதன் கருத்து பணம் தூயதாக்கல் மற்றும் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பதாகும்.

**அ.ரீ.மு.கொ.வே. ஆள்** என்பதன் கருத்து அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆள் என்பதாகும். இவர் ஒன்றில் உள்நாட்டு ரீதியில் அல்லது ஒரு வெளிநாட்டினால் அல்லது ஒரு பன்னாட்டு ஒழுங்கமைப்பில் பிரபல்யமான பொதுப் பணிகள் பொறுப்பிக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும். உதாரணமாக ஓர் அரசின் அல்லது அரசாங்கத்தின் தலைவரையும் அரசியல் வாதிகளையும் ஒரு மூத்த அரசாங்க அலுவலரையும் நிதிமுறை அலுவலர் அல்லது இராணுவ அலுவலரையும் அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனத்தின் மூத்த நிறைவேற்று அலுவலரையும் முக்கியமான அரசியல் கட்சி அலுவலரையும் உள்ளடக்கும். தொடர்பான அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆளுடன் தொடர்புபட்ட புகழுடன் இணைந்த இடர்நேர்வுடன் தொடர்பான வியாபார உறவுமுறைமைகளின் அடிப்படையில் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆளுடன் நெருக்கமான ஆட்களும் அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டியவர் எனக் கருதப்படுகின்றார். இது முன்சொல்லப்பட்ட வகையிலுள்ள நடுத்தர பதவி வரிசையிலுள்ள அல்லது மிகக் கனிஷ்ட பதவி வரிசையிலுள்ளவர்களை உள்ளடக்காது.

**ச.கொ.வா.அறிக்கையிடல்** என்பதன் கருத்து 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளில் கோப்பிடப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் எனப் பொருள்படும்

**ப.நிதியளித்தல்** என்பதன் கருத்து பயங்கரவாத நிதியளித்தலின் குற்றமொன்று என்பதாகும். இது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளித்தலினை ஒழித்தல் மீதான சமவாயச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் நியதிகளில் தண்டனைக்குஉரியதொன்றாக்கப்ப ட்டுள்ளது.

**ஐ.நா.பா.ச.தீர்மானம்** என்பதன் கருத்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள் எனப் பொருள்படும்.

## பகுதி II

## இணங்குவிப்பு

### இணங்குவிப்பு அலுவலர்

5. ஒவ்வொரு நிறுவனமும் இணங்குவிப்பு அலுவலரொருவரை நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. நியமிக்கப்படும் அலுவலர் நிறுவனத்தின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் அவரது அல்லது அவளது பொறுப்புக்களைக் காத்திரமான முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான அதிகாரங்களையும் வளங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

6. நிறுவனத்தின் முகாமைத்துவ அமைப்பின்படி, இணங்குவிப்பு அலுவலர் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கோ அல்லது மூத்த முகாமைத்துவத்திற்கோ அல்லது உரிமையாளர் அல்லது நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அலுவலருக்கோ கிரமமான அடிப்படையில் அறிக்கையளித்தல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் மூத்த முகாமைத்துவ மட்டத்தினைக் கொண்டவராகவும் உயர் முகாமைத்துவத்தினை அல்லது பணிப்பாளர் சபையின் நேரடியாக அணுகக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

7. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளுடன் தொடர்ச்சியானது நடைபெற்றுவரும் அடிப்படையில் கவனத்தினைச் செலுத்துவதற்காகவும் இணங்குவிப்பு அலுவலர் நிறுவனத்தின் மற்றைய ஊழியர்களுக்குக் குறிப்பிட்ட கடமைகளைக் கையளிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். எனினும், அத்தகைய கையளிப்புக்கள் மேற்கொள்ளப்படுகையில் இணங்குவிப்பு அலுவலர் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புத்

தேவைப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ந்தும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

**பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்**

8. ஒவ்வொரு நிறுவனமும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்காக எழுத்து மூலமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் உருவாக்குதல் வேண்டும். இணங்குவிக்காமையைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் நிவாரண நடவடிக்கைகளுக்குமாக இக்கொள்கைகளும் நடைமுறைகளும் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இக்கொள்கைகளும் நடைமுறைகளும் நிறுவனத்திற்குள் தொடர்பூட்டப்பட்டு, விளங்கிக் கொள்ளப்பட்டு சரியான நேரத்தில் பின்பற்றப்படுதல் வேண்டும். இக்கொள்கைகளும் நடைமுறைகளும் வாடிக்கையாளர் செயற்பாடுகளுடன் தொடர்பான துறைகளில் பணிபுரிபவர்களுக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

9. ஒவ்வொரு நிறுவனத்தினதும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளில் மதிப்பீடொன்றினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். மதிப்பீடானது நிறுவனத்தினது வியாபாரத்தின் தன்மைக்குப் பொருத்தமான விதத்தில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இப்பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு மதிப்படானது, ஏற்கனவேயுள்ள கொள்கைகள் நடைமுறைகளுடன் சேர்த்து வாடிக்கையாளரை அடையாளம் காணுதல், பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

10. ஒவ்வொரு நிறுவனத்தினதும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் அளவு மற்றும் மட்டங்களின் விபரங்கள் நிறுவனத்தின் குறித்துரைக்கப்பட்ட தேவைகள் மற்றும் சிக்கலான தன்மைகள் அதேபோன்று நிறுவனத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகள் என்பனவற்றின் மீது தங்கியிருக்கும்.

11. நிறுவனமொன்றின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் நிறுவனத்தின் மூத்த முகாமைத்துவத்தினாலும் அத்துடன்/ அல்லது பணிப்பாளர் சபையினாலும் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும். பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் குறைந்தபட்சம் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு மதிப்பீட்டினையும் இடர்நேர்வுத் தயாரிப்பு வழிமுறைகளையும் வாடிக்கையாளர் அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல், பதிவேடுகளைப் பேணுதல், கட்டாயமான அறிக்கைகளை நிதியியல் பிரிவிற்குச் சமர்ப்பித்தல் மற்றும் நிறுவனத்தின் இணங்குவிப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் சுயாதீனமான கணக்காய்வினை உறுதிப்படுத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உதாரணமாக:

   (அ) பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றிய ஏதேனும் சந்தேகங்கள் தொடர்பிலான அறிக்கையிடல் கடப்பாடுகளைப் பொறுத்தவரையில் நிறுவனத்தின் இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானங்கள் மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவின் (http://fiusrilanka.gov.lk) வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மற்றைய பட்டியல்கள் மற்றும் வேறு எங்கேனுமுள்ள பட்டியல்களுக்கெதிரான வாடிக்கையாளரின் விபரங்கள் முன்னாய்வு முறையில் ஆராயப்படுவதனை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

   (ஆ) நிறுவனங்கள், பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்கின்ற விதத்தில் போதுமான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளை இன்னமும் உருவாக்கியிராத நாடுகளுடனும் பிராந்தியங்களுடனும் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது அதிகளவிலான கவனத்தினைப் பிரயோகித்தல் வேண்டும். இத்தகவல்களுக்காக நிறுவனங்கள் நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் வெப்தளம் (http://fatf-gafi.org) மற்றும் மூலங்களையும் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

12. பணிப்பாளர் சபை மற்றும் அலுவலர் மற்றும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக்கள் மீதான நியதிச் சட்ட ரீதியான கடமைகளை விளங்கிக் கொள்ளுமாறு பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. மூத்த முகாமைத்துவமும் பணிப்பாளர் சபையும் வியாபாரத்திலுள்ள பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளைத் தணித்து முகாமைப்படுத்துகின்ற கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இறுதியில் பொறுப்புடையவர்களாவர்.

13. ஊழியர்களை பணிக்கு அமர்த்தும் பொழுது அவ்வூழியர்கள் உயர்ந்த தரங்களைக் கொண்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனம் கொள்கையினை முன்னாய்விற்குட்படுத்தல் வேண்டும்.

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களுடனான இணங்குவிப்பு**

14. பயங்கரவாதம், பயங்கரவாதிக்கு நிதியளித்தல் மற்றும் பாரிய சேதங்களை விளைவிக்கும் ஆயுதப்பெருக்கம் மற்றும் அதன் நிதியிடல் (ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள் 1267, 1373, 1718, 1540) மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த ஏதேனும் தீர்மானங்கள் தொடர்பிலான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் மீதான ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பட்டியல் தொடர்பில் 1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டத்துடன் இணங்கியொழுகும் விதத்தில் விடுக்கப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் எவரேனும் வாடிக்கையாளர் அல்லது நன்மைபெறுநர் காணப்படுகின்றாரா என்பதனை நிறுவனம் வேறு விதத்தில் பரிசோதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

15. தனிப்பட்ட ஆள்/ நிறுவனம் பயங்கரவாதம், பயங்கரவாதிக்கு நிதியளித்தல் மற்றும் பெருமளவு சேதங்களை ஏற்படுத்தும் பாரிய ஆயுதப் பெருக்கம் மற்றும் அவற்றிற்கு நிதியளித்தல் என்பனவற்றின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலங்களை உடனடியாக முடக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது. நிறுவனமானது அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை அடையாளம் கண்டு உடனடியாக முடக்குவதற்கான வழிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

16. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களினை முடக்குதல் அல்லது அத்தகைய நிதிகளின் முடக்கத்தினை நீக்குதல் தொடர்பில் அல்லது குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர் அல்லது நிறுவனங்களினால் எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் நிகழ்வுகளைப் பொறுத்தவரை, நிறுவனங்கள்

அத்தகைய வாடிக்கையாளரைக் கண்டறிந்ததிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் நிதிசார் உளவறிதல் பிரிவிற்கான பிரதியொன்றுடன் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

17. நிறுவனம், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது அவற்றின் நன்மைபெறுநர்களின் நன்மைக்காக நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் கிடைக்கச் செய்யப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை**

18. அடையாளம் காணப்பட்ட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான கட்டுப்பாடுகளை உருவாக்குவதற்கும் அக்கட்டுப்பாடுகளின் கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்கும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு மதிப்பிடுவதற்கு நிறுவனத்தினை அனுமதிக்கின்ற செயன்முறையே இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையாகும். ஒவ்வொரு நிறுவனமும் அவற்றின் குறிப்பிட்ட நிறுவன அமைப்பு, அமைப்பியல் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காகப் பொருத்தமான இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு அவற்றில் சொந்தத் தீர்மானத்தினையும் அறிவையும் நிபுணத்துவத்தினையும் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

19. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலின் பின்னணியில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை என்பது பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கும் செயன்முறையொன்றாகும்.

(அ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை அடையாளம் காணுதல்;

(ஆ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடல்;

(இ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் தணிப்பதற்குமான கட்டுப்பாடுகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல்;

(ஈ) இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகளின் காத்திரமான தொழிற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல்.

**(அ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை அடையாளம் காணுதல்**

20. வியாபார நடவடிக்கைகளுடன் இயல்பாகவே பிணைந்து காணப்படும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகள் பற்றி நிறுவனம் கட்டாயம் அறிந்திருத்தல் வேண்டும். இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் முதல் நடவடிக்கையாக, நிறுவனம் வாடிக்கையாளர் நாடுகள் மற்றும் புவியியல் பிரதேசங்கள் மற்றும் உற்பத்திகள், பணிகள், கொடுக்கல்வாங்கல்கள் அல்லது விநியோக வழிப்படுத்தல்கள் அதேபோன்று அதன் உத்தேச புத்தாக்கங்கள் என்பனவற்றிலிருந்து தோன்றக்கூடிய பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பிலான இடர்நேர்வினை அடையாளம் கண்டுகொள்ளுதல் வேண்டும். இரண்டாவது கட்டம், வாடிக்கையாளர்களினால் பயன்படுத்தப்படும் நிதிகளுக்கான அனைத்து உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் மையங்களை அடையாளம் காண்பதாக இருக்கும். அத்தகைய உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் மையங்கள் பணம் தூயதாக்கல் செயன்முறையில் வைப்பிடல் மற்றும் ஒருங்கிணைந்த சட்டங்களின் போது பணம் தூய்மைப்படுத்துநருக்கு சாத்தியமானளவிற்கு பயன்மிக்கதாக இருக்கும்.

21. ஒவ்வொரு நிறுவனமும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கான அவற்றின் பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் சாதனங்களுடன் இணைந்து காணப்படக்கூடிய பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை அடையாளம் காணுதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, ஏதேனும் நிதிய வடிவத்தினை அல்லது நிதியத்தின் சொத்துடமையினை மாற்றுகின்றமை நிறுவனமொன்றினால் வழங்கப்படும் ஏதேனும் நிதியியல் பணி ரூ.1,000,000 இற்கான சிப்புக்களுக்காக பரிமாற்றிய ஆளொருவர் இன்னொரு ஆளுக்கு சிப்புக்களை மாற்றுவதன் மூலம் மற்றொரு ஆளுக்கு சொத்துடமையினைக் காத்திரமாக மாற்றல் செய்வது போன்ற அடுக்கடுக்கான கட்டம் கட்டமான பணம் தூயதாக்கல் செயன்முறையின் போது அது பணம் தூயதாக்குபவருக்கு உள்ளார்ந்த பயன்மிக்கதொன்றாக அமையும். பின்னர் அந்த ஆள் காசினோ காசோலைக்காக சிப்பினை பரிமாற்றல் செய்வராயின் வடிவமும் மாற்றல் செய்யப்படுகின்றது.

**(ஆ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வினை மதிப்பிடல்**

22. இடர்நேர்வு மதிப்பீடு என்பது நிறுவனம் முகம் கொடுக்கின்ற பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலின் சாத்தியமான அச்சுறுத்தல்களையும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளையும் பகுப்பாய்வு செய்யுமொன்றாகும். மதிப்பீட்டின் சிக்கலான தன்மையானது தன்மை, அளவு மற்றும் நிறுவனத்தினால் எதிர்நோக்கப்படும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளின் தன்மை என்பனவற்றின் மீது தங்கியிருக்கிறது.

23. இடர்நேர்வு மதிப்பீட்டினை மேற்கொள்ளும் பொழுது நிறுவனமானது பின்வரும் காரணிகளைப் பரிசீலனையில் கொண்டு ஆவணப்படுத்தல் வேண்டும்.

(அ) வாடிக்கையாளரின் வகை மற்றும் வாடிக்கையாளரின் உறவுமுறைகள்;

(ஆ) உற்பத்திகள் மற்றும் பணிகளின் வகை மற்றும் அவை விநியோகிக்கப்பட்ட வழிகள்;

(இ) புவியியல் ரீதியாக தோற்றம் பெற்ற இடம் மற்றும் வாடிக்கையாளர்களின் அமைவிடம்;

(ஈ) நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகளுடன் தொடர்பான ஏனைய காரணிகள்;

(உ) ஏதேனும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களில் குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் வாடிக்கையாளரின் பெயர் காணப்படுகின்றதா என்ற விபரங்கள்.

24. இடர்நேர்வு மதிப்பீடானது வியாபார (தொழிற்பாடுகளின் விபரமான அறிவினையும் மதிப்பீட்டாளர்களினால் நடைமுறைப்படுத்தப்படும் ஆற்றல்வாய்ந்த தீர்மானத்தினையும் தேவைப்படுத்துவதன் மூலம் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகள் ஒவ்வொரு தனிப்பட்ட காரணங்களினதும் அதேபோன்று இணைந்த காரணிகளினதும் தீர்மானங்களின்படி தீர்மானிக்கப்பட முடியும். இடர்நேர்வு மதிப்பீடுகள் பல்வேறுபட்ட இடர்நேர்வுக் காரணிகளின் பரிணாம வளர்ச்சியுடன் தொடர்புபட்டிருப்பதனால் காலத்திற்குக் காலம் தொடர்ச்சியாக மாற்றமடைந்து வருகின்றன.

**(இ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் தணிப்பதற்குமான கட்டுப்பாடுகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்துதல்**

25. இடர்நேர்வுத் தணிப்பு என்பது இடர்நேர்வின் மூலங்களாக விளங்கும் (அதாவது அச்சுறுத்தல்கள், பாதிக்கப்படக்கூடிய தன்மை) இடர்நேர்வுக் காரணிகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கட்டுப்பாடுகளை உரிய நிறுவனத்தினால் தாங்கக்கூடிய விதத்தில் நேரக் கட்டமைப்பொன்றிற்குள் நடைமுறைப்படுத்துவதனைப் பற்றியதாகும். கட்டுப்பாடுகள் எழுதப்பட்ட கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் வடிவில் இருத்தல் வேண்டும்.

26. நிறுவனத்தின் இணங்குவிப்புக் கொள்கைகள், நடவடிக்கைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றினூடாகப் பின்வரும் வேறுபட்ட வகைகளிலான தணிப்பு வழிமுறைகளை நிறுவனம் அபிவிருத்தி செய்து நடைமுறைக்கிட முடியும்:

(அ) இடர்நேர்வுகளைக் குறைத்தல் அல்லது தவிர்த்தல்; உதாரணமாக கசினோ நாடுகளை தந்திவழி மாற்றல்கள் ஏற்றுக்கொள்ள முடியாத இடர்நேர்வுத் தன்மையினைக் கொண்டிருப்பதாக அடையாளம் கண்டு காத்திரமற்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பில் காத்திரமற்ற தன்மைகளைக் கொண்ட கட்டுப்பாடுகளை அல்லது உயர்மட்ட ஊழலைக் கொண்டிருப்பவை என அறியப்படுகின்ற நாடுகள் என மதிப்பிடுமிடத்து தனிப்பட்ட வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரையில் அளவின் மீதும் அத்தகைய மாற்றல்களின் கால இடைவெளியின் மீதும் வரையறைகளை விதிப்பதன் மீது இடர்நேர்வினைக் குறைக்க முடியும் அல்லது அத்தகைய மாற்றல்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதன் மூலம் இடர்நேர்வினை இல்லாமல் செய்யமுடியும்.

(ஆ) இடர்நேர்வினைக் கட்டுப்படுத்துதல்; உதாரணமாக தந்தி மாற்றல்களை அதிகரித்தல், கசினோ நிதியத்தின் சட்ட ரீதியான மூலத்தினை சரிபார்ப்பதற்காக அதிகரித்தளவிலான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினைப் பிரயோகிக்க முடியும். அத்துடன்/ அல்லது மூல தந்தி மாற்றல் எங்கு பெறப்பட்டதோ அதிலிருந்து கணக்கிற்கு தந்தி மாற்றலூடாகப் பிரத்திகேமான முறையில் வாடிக்கையாளருக்கு ஏதேனும் வெற்றிப் பணத்தினை காசுக் கொடுப்பனவுகளைத் திருப்பியளிக்குமாறு கேட்டுக் கொள்ளுதலை (பின்னிணைப்பு 1 மாதிரி இலத்திரனியல் நிதியமாற்றல் கட்டுப்பாடுகள்) உள்ளடக்கியுள்ளது. கசினோ பணம் தூயதாக்கல் குறிகாட்டிகள் இல்லாமையினை உறுதிப்படுத்துவதற்காக வாடிக்கையாளர்களின் சூதாட்ட நடவடிக்கைகளுக்கு அதிகரித்தளவிலான கண்காணிப்பினைப் பிரயோகிக்க முடியும்.

(இ) இடர்நேர்வுகளை மாற்றல் செய்தல்; உதாரணாக மீண்டும் தந்தி மாற்றல் உதாரணத்தினை உருவாக்குதல். சில நாடுகளில் நிதியிடல் கணக்குகளின் இடர்நேர்வு சிலநேரங்களில் உரிமம் பெற்ற சிறிய தொழிற்பாட்டாளர்களுக்கு மாற்றல் செய்யப்படுகிறது. இது அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு நிதிய மாற்றல் பணிகளை வழங்குவதுடன் சரியான கட்டுப்பாடுகளுக்குட்பட்டு கசினோக்கள் இவர்களுடன் உறவுகளை அபிவிருத்தி செய்து கொள்ளமுடியும்.

**(ஈ) இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகளின் காத்திரமான தொழிற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல்**

27. இடர்நேர்வின் காத்திரமான முகாமைத்துவம் என்பது தொடர்ச்சியானதும் இயக்கவாற்றல் மிக்கதுமான ஒரு செயன்முறையாகும். நிறுவனமானது பணம் துயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை முகாமைப்படுத்துகின்ற செயன்முறை கிரமமான ஆய்விற்குட்பட்டிருக்கின்றது என்பதனையும் புதிய அல்லது தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகள் புதியனவாக அடையாளம் காணப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன. தொழிற்பாடுகளின் அளவு அல்லது தன்மை, புதிய சாதனங்கள், புதிய பணிகள், புதிய வாடிக்கையாளர் வகைகள் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக ஏற்படுகின்றனவா என்பது பற்றியும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் அபிவிருத்தி**

28. நிறுவனமானது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக்கள் மீதான பயிற்சியினை பணிப்பாளர் சபை மூத்த முகாமைத்துவம், ஊழியர்கள், முகவர்கள் அல்லது நிறுவனத்தின் சார்பில் தொழிற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் தனிப்பட்டவர்களுக்கு பயிற்சிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

29. அத்தகைய பயிற்சியானது பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுப்பதற்கான உள்ளகக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளின் உரிய விழிப்புக் கவனம் அதிகரிப்பதனை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நிறுவனத்தின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகள், நடவடிக்கைகள் மற்றும் தொடர்பான தனிப்பட்டவர்களின் பொறுப்புக்கள் பற்றிய தெளிவான விளக்கங்களை வழங்க வேண்டும்.

## பகுதி III

### வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்

**வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொத்துரிமையாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல்**

30. ஒவ்வொரு நிறுவனமும் இடைக்கிடையான வாடிக்கையாளர் மற்றும் இருந்திட்டொன்றான வாடிக்கையாளர்கள் உட்பட வாடிக்கையாளர்கள் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர் மீது அவர்கள் தனியொரு வியாபார நாளன்று ஐ.அ.டொலர் 3,000 இற்குச் சமமான அல்லது அதற்குக் கூடுதலான தொகையினைக் கொண்ட உள்முக மற்றும் வெளிமுகக் கொடுக்கல்வாங்கலை (கொடுக்கல்வாங்கல்களை) மேற்கொள்கின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்ற பொழுது கொடுக்கல்வாங்கல்களின் உண்மையான நாணயத்தினைக் கருத்திற்கொள்ளாது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இந்நோக்கத்திற்காக "வியாபார நாள்" என்பது நிறுவனமொன்று அதன் வியாபார ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணுவதற்காக நிறுவனமொன்று பயன்படுத்துகின்ற தொடர்ச்சியான 24 மணித்தியால காலப்பகுதியென வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. நிறுவனங்கள் "வியாபார நாள்" தொடர்பில் ஒரு வரைவிலக்கணத்தினை மாத்திரம் பயன்படுத்தலாம் என்பதுடன் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாடுகளைத் தீர்மானிப்பதற்குக் கொடுக்கல்வாங்கல்களைக் கூட்டுகின்ற பொழுது அனைத்து வாடிக்கையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர் நடவடிக்கைகளின் அனைத்து வரைவிலக்கணங்களும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, "நிதியியல் கொடுக்கல்வாங்கல்" என்பது வாடிக்கையாளர்களிடமிருந்து நிறுவனங்களுக்குக் கிடைக்கும் நிதியங்களின் அனைத்து உள்முக மாற்றல்களையும் நிறுவனங்களிலிருந்து வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் அனைத்து வெளிமுக மாற்றல்களையும் உள்ளடக்குகிறது. அத்தகைய மாற்றல்கள் சூதாட்ட சிப்புக்களில் கொள்வனவு அல்லது விற்பனை, அல்லது வேறு ஏதேனும் சூதாட்டக் கருவிகள், கசினோ காசோலைகளின் கொள்வனவு அல்லது மீட்சி, உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் தந்தி மாற்றல்கள் அனுமதிச்சீட்டு உள்ளே/ அனுமதிச்சீட்டு வெளியே ஆவணத்தின் கொள்வனவு மற்றும் மீட்சி ஆவணம் உள்ளடக்குகிறது. எனினும், அது அதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. உதாரணமாக, காசினோ பொறுப்பாளர்

இலங்கை ரூபாவினைப் பயன்படுத்தி ஐ.அ.டொலர் 1,000 இற்குச் சமனான தொகையினைக் கசினோ சிப்பில் வாங்கியதனைத் தொடர்ந்து இலங்கை ரூபாவிற்காக கசினோ சிப்பில் ஐ.அ.டொலர் 4,000 இற்குச் சமனான தொகையினை மீட்டெடுத்துக் கொள்கின்ற வாடிக்கையாளர் கொள்வனவினை நிறைவு செய்வதற்கு முன்னர் வாடிக்கையாளர் அடையாளம் காண வேண்டிய தேவை இருக்காது. எனினும், இங்கே விதந்துரைக்கப்பட்ட இவ்வழிகாட்டல்களுக்கு இணங்கி மீட்பினை பூரணப்படுத்துவதற்கு முன்னர் வாடிக்கையாளரை அடையாளம் காணுமாறு தேவைப்படுத்தப்படுகிறது. அதேபோன்று, வாடிக்கையாளர் ஐ.அ.டொலர் 3,000 இற்குச் சமனான தொகையினை கசினோ சிப்பில் வாடிக்கையாளர் கொள்வனவு செய்கையில் கொள்வனவினை நிறைவு செய்யுமுன் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு நிறுவனம் தேவைப்படுத்தப்படுகின்றது.

31. வியாபார நாளன்று வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதியினைக் கூட்டுவதில் காணப்படும் இயல்பான இடர்ப்பாடுகளின் காரணமாக, நிறுவனமொன்று, அனைத்து வாடிக்கையாளர்களையும் நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகளின் நிபந்தனையொன்றாக அடையாளம் காண விரும்பக்கூடும் (பெரும்பாலும் விளையாட்டு வீரர்/ உறுப்புரிமை அட்டைகளின் வழங்கலினூடாக)

32. நிறுவனம் வாடிக்கையாளர் அத்துடன் அல்லது பயன்பெறும் சொந்தக்காரர் தொடர்பில் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளைத் திருப்திகரமான முறையில் பிரயோகிக்க முடியாதுவிடின் நிறுவனமானது அவ்வாடிக்கையாளர் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளக்கூடாது. மேலும், நிறுவனமானது நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான அறிக்கையினைச் சமர்ப்பிப்பது பற்றியும் ஆராயலாம்.

33. வாடிக்கையாளரின் நடவடிக்கை வாடிக்கையாளர் தொடர்பிலான உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாடுகளை வேண்டுமென்றே தவிர்க்கும் விதத்தில் அமைந்துள்ளதாக தோன்றுமிடத்து நிறுவனம் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடலை நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பிப்பது பற்றி பரிசீலித்தல் வேண்டும். உதாரணமாக வியாபார நாள் முடிவடைவதற்கு சற்று முன்னதாக ஐ.அ.டொலர் 2,000 இற்குச் சமனான தொகையினை சிப்பில் கொள்வனவு செய்த வாடிக்கையாளரொருவர் புதிய வியாபார நாள் தொடங்கியதன் சற்று பின்னர் அதே தொகையினை இடைப்பட்ட காலத்தில் காரணமெதுவும் தெரிவிக்காமல் கொள்வனவு செய்வது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாட்டினை தவிர்க்கின்ற விதத்திலான கொடுக்கல்வாங்கலாக இருக்கக்கூடும்.

34. உயர் இடர்நேர்வாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள வாடிக்கையாளர்களும் பயன்பெறும் சொந்தக்காரரும் மேலதிக முன்னாய்வு மற்றும் தகவல்களையும் நிதியங்களின் மூலங்களையும் அடையாளம் காணுவதனை சரிபார்த்தல் போன்ற அதிகரித்தளவிலான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**உயர் இடர்நேர்வு வாடிக்கையாளர்கள்/ கொடுக்கல்வாங்கல்கள்**

35. வாடிக்கையாளர்கள்/ கொடுக்கல்வாங்கல்களின் வகை/ சாதனங்கள் என்பன உயர்ந்த பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை நிறுவனத்திற்கு ஏற்படுத்தலாம். அத்தகையதொரு சூழ்நிலையில் நிறுவனமானது மேலதிக வழிமுறைகளை எடுக்கும் தேவை காணப்படுகிறது.

உதாரணமாக:

(அ) நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினைக் கொண்டிராத அல்லது அதன் விதந்துரைப்புக்களுடன் போதுமானளவிற்கு இணங்கி நடக்காத நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ள எவரேனும் வாடிக்கையாளர் உயர்ந்த இடர்நேர்வு மற்றும் ஒத்துழைப்பில்லாத நாடுகளைப் பொறுத்தவரை தயவுசெய்து நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் வெப்தளமான (http://fatf-gafi.org) இனைப் பார்க்கவும்;

(ஆ) தேசிய அதிகாரிகளினால் போதைப்பொருள் கடத்தல், ஆட்களைக் கடத்தல், பணம் தூயதாக்கல், பயங்கரவாதம் அல்லது சட்டத்திற்கு மாறான நிதியிடல்கள் போன்ற நாடுகள் எனக் கரிசனை கொண்டுள்ள நாடொன்றுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ள எவரேனும் வாடிக்கையாளர்;

(இ) புகழ்மிக்க நிறுவனமொன்றினால் உயர்மட்ட பொது ஊழல்களைக் கொண்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டிருக்கும் ஏதேனும் நாடு;

(ஈ) சிக்கலான அல்லது வழமைக்கு மாறான கொடுக்கல்வாங்கல்களை (ஒன்றில் முடிவடைந்தாலும் சரி இல்லாவிடினும் சரி), வாடிக்கையாளர் தோற்றப்பாட்டிற்கான கொடுக்கல்வாங்கல்களின் வழமைக்கு மாறான தன்மை, சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளுடன் இணைந்த மாதிரிகளுடன் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிப்படையான சட்டபூர்வமான நோக்கங்களைக் கொண்டிராத கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற எவரேனும் வாடிக்கையாளர்கள்;

(உ) அரசியல் ரீதியாக முகம் கொடுக்கின்றவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்களை உள்ளடக்கும் விதத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் ரீதியாக முகம் கொடுப்பவர்கள்;

(ஊ) வியாபாரத்திற்கு உயர் இடர்நேர்வினை ஏற்படுத்துமென நிறுவனம் அடையாளம் கண்டுள்ள சாதனங்கள் வகையினதான எவரேனும் வாடிக்கையாளர் அல்லது கொடுக்கல்வாங்கல்கள். உதாரணமாக, வாடிக்கையாளர்கள் எதிர்பக்க பந்தயத்திற்கு விளையாடுவதற்கு அனுமதிக்கின்ற (உ-ம்: சுழலும் சக்கத்திலுள்ள ஒற்றை எதிர் இரட்டை எண்கள்) சூதாட்ட விளையாட்டுக்கள் தேறிய பந்தயங்கள் மிகக் குறைந்த இடர்நேர்வினைக் கொண்டிருப்பதுடன் சூதாட்டத்தினை உண்மையான நோக்கமாகக் கொண்டிராதவைகள் பணம் தூயதாக்கல் உயர் இடர்நேர்வினைக் கொண்டனவாகவுள்ளன. இவ்விடயத்தினைப் பொறுத்தவரை வழமைக்கு மாறாக விளையாட்டில் தாழ்ந்த "சதவீதத்தினைக் கொண்டுள்ளவை" சிறிய அல்லது இடர்நேர்வினைக் கொண்டிராத நிதியத்தினை வைப்பிலிடுவதனை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கையின் குறிகாட்டிகளாக இருக்கக்கூடும்;

(எ) சடுதியான, விளக்கமுடியாத அதிகரிப்பினை அவர்களது சூதாட்ட நடவடிக்கையில் அல்லது அவர்களது சூதாட்ட நடவடிக்கையின் நிதியிடல் முறைமையினைக் கொண்டிருக்கின்ற வாடிக்கையாளர்கள் உயர் இடர்நேர்வினைக் கொண்டவர்களாவர்.

**குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாடுகள்**

***கசினோக்கள்***

36. பின்வருவன உட்பட நிதியம் உள்ளே வருகின்ற அல்லது வெளியே செல்கின்ற அனைத்து மையங்களிலும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) சூதாட்ட மேசைகளில் வாடிக்கையாளர்கள் சூதாட்ட சிப்புக்கள் அத்துடன்/ அல்லது விளையாடுகின்ற சிப்புக்களில்

வாடிக்கையாளர்கள் காசினைப் பரிமாற்றும் பொழுது;

(ஆ) காசாளர் கருமபீடங்களில் தேவைப்படும் சிப்புக்களுக்காக காசு மற்றும் அத்துடன்/ அல்லது பற்றுச்சீட்டுக்களை வாடிக்கையாளர் மாற்றும் பொழுது);

(இ) வெற்றி பெற்ற தொகையின் அத்துடன்/ அல்லது மூலதனத்தின் கொடுப்பனவிற்காக காசோலைகளை அல்லது தந்தி மாற்றல்களை வாடிக்கையாளர் கேட்டுக் கொள்ளும் பொழுது; அல்லது

(ஈ) காசாளர் கருமபீடங்களில் அல்லது காசினை வழங்கும் பொறியில் அல்லது சூதாட்ட மேசைகளில் காசினை வழங்கும் வசதிகள் தொடர்பில் வாடிக்கையாளர் அவர்களது உறுப்புரிமை அட்டைகளை அல்லது தற்காலிக அல்லது அமைய அட்டைகளை (ஏதுமிருப்பின்) பயன்படுத்தும் பொழுது.

37. வங்கி இடையேற்பாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில், வாடிக்கையாளர் நிதிகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட முன்னர் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

38. சிறிய தொழிற்பாட்டாளர்கள் மற்றும் அதன் வாடிக்கையாளர் மீது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு கசினோக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

*சூதாட்ட இல்லங்கள்*

39. சூதாட்ட இல்லங்கள் பின்வரும் தகவல்களைப் பெற்று அவற்றின் துல்லியத்தன்மையினைப் பரிசோதித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன;

அ) சீட்டு இலக்கம்;

ஆ) வெற்றிபெற்ற சீட்டு எங்கு கொள்வனவு செய்யப்பட்டதோ அந்நிலையத்தின் பதிவு இலக்கம் மற்றும் முகவரி; அத்துடன்

இ) வெற்றி பெற்ற தொகை.

40. வெற்றிபெற்றவர் மூன்றாந்தரப்பினரின் கணக்கிற்கு கொடுப்பனவுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளும் பொழுது சூதாட்ட இல்லங்கள் வாடிக்கையாளர் தொடர்பான உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

**மூன்றாந்தரப்பினர்களை அடையாளம் காணுதல்**

41. வாடிக்கையாளர், நன்மைபெறுநராகவுள்ள மூன்றாந்தரப்பினரின் முகவராகவும் கொடுக்கல்வாங்கல்களுக்கான நிதியினை வழங்குபவராகவும் இருக்குமிடத்து வாடிக்கையாளர் மூன்றாந்தரப்பினரின் சார்பில் செயற்படுகின்றாரா என்பதனைத் தீர்மானிப்பதற்கு நிறுவனம் நியாயமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். மூன்றாந்தரப்பினர் ஈடுபாடு கொண்டிருக்கின்ற விடயங்களைப் பொறுத்தவரை, நிறுவனம் வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன நோக்கங்களுக்காக, மூன்றாந்தரப்பினரின் அடையாளம் மற்றும் வாடிக்கையாளருடன் உள்ள அவர்களது உறவுமுறைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## பகுதி IV

### அறிக்கையிடல்

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற கடமை**

42. சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் மீதான அறிக்கையினைச் சமர்ப்பிப்பது தொடர்பான பொறுப்பினை மேற்கொள்கையில், நிறுவனமொன்று **பின்னிணைப்பு II**இல் குறிப்பிடப்பட்டவாறு சிவப்புத் துண்டுக் கவனஈர்ப்புப் பட்டியலைப் பார்த்தல் வேண்டும். சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் நிறைவு பெற்றுவிட்டனவா அல்லது எத்தனிக்கப்பட்டுள்ளனவா என்பதனைச் சிறந்த முறையில் அறிந்து கொள்வதற்கு கைத்தொழில் - குறித்துரைக்கப்பட்ட குறிகாட்டிகளும் நிறுவனத்திற்கு உதவக்கூடும். கசினோக்களும் சூதாட்ட இல்லங்களும் பயன்படுத்துகின்ற பணம் தூயதாக்கல் பற்றிய சில உதாரணங்கள் **பின்னணிப்பு III**இல் தரப்பட்டுள்ளன.

43. ஒவ்வொரு நிறுவனமும் எத்தனிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும். வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள எத்தனித்து, ஏதேனுமொரு காரணத்தினால் அது நிறைவு பெறாமல் போயிருக்குமாயின், நிறுவனம் எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் சந்தேகத்திற்குரியது எனத் தீர்மானிக்குமாயின் அதனை அந்நிறுவனம் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும்.

44. நிறுவனமானது 2017 ஏப்பிறல் 21ஆம் திகதியிடப்பட்ட இல. 2015/56 கொண்ட வர்த்தமானி (அதிவிசேடம்) யில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் (படிவம்) ஒழுங்குவிதிகளில் விரித்துரைக்கப்பட்ட படிவத்தினைப் பயன்படுத்தி சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும் (அட்டவணை V).

45. இணங்குவிப்பு அலுவலர் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைப் பதிவேடொன்றினைப் பேணுதல் வேண்டும்.

**காசு மற்றும் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல்**

46. ஒவ்வொரு நிறுவனமும் 2008 யூன் 25ஆம் திகதியிடப்பட்ட இல.1555/9 கொண்ட வர்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

## பகுதி V

### அறிக்கைகளைப் பேணுதல்

47. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தினைக் குறித்துரைக்கப்பட்டவாறு நிறுவனம் பதிவேடுகளைப் பேணுவது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதுடன் அதற்கான முறைமையொன்றினையும் பேணுதல் வேண்டும். இது தேவைப்படும் பொழுது அல்லது நிதியியல் உளவறிதல் பிரிவினால் கேட்டுக் கொள்ளப்படும் பொழுது தரவுகளை இலகுவாகவும் விரைவாகவும் சீர்ப்படுத்துவதற்கும் அனுமதிக்கும்.

## பகுதி VI

### இணங்குவிக்காமைக்கான தண்டங்கள்

48. சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுவது தண்டனைகளுக்கு வழிவகுக்கும். மேலும் நிறுவனத்திற்கெதிரான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் ஒழுக்கவியல் வழிமுறைகள் உட்பட மற்றைய நடவடிக்கைகளுக்கும் இட்டுச்செல்லும்.

**2018 ஏப்பிறல் 18ஆம் நாளன்று விடுக்கப்பட்டது**

## பின்னிணைப்பு I

**இலத்திரனியல் நிதிய மாற்றல்களுக்கான மாதிரி கசினோ உள்ளகக் கட்டுப்பாடுகள்**

- நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவினால் உயர் இடர்நேர்வு மற்றும் ஒத்துழைக்காத நியாயாதிக்கம் கொண்டதென அடையாளம் காணப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளமுடியாத நியாயாதிக்க இடர்நேர்வுடன் கூடிய நாடு என நிறுவனத்தினால் நம்பப்படுகின்ற ஏதேனும் நியாயாதிக்கத்திலிருந்து கிடைக்கும் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் (தந்தி மாற்றல்களை உள்ளடக்குவதற்கு) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது அல்லது உடனடியாக திருப்பி அனுப்பப்படும்.
- இலத்திரனியல் நிதியமாற்றல்களை காசிற்கு ஒன்றில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீட்டெடுக்க முடியாது என்பதுடன் வாடிக்கையாளருக்கு கசினோவினால் வழங்கப்பட்ட சூதாட்டம் மற்றும் பொழுதுபோக்கிற்கு நிதியிட மாத்திரமே பயன்படுத்த முடியும்.
- அத்தகைய மாற்றல்களினால் நிதியிடப்பட்ட சூதாட்ட நடவடிக்கைகளிலிருந்தான வெல்லப்பட்ட தொகை உட்பட இலத்திரனியல் நிதிய மாற்றல்களிலிருந்தான பயன்படுத்தாத நிதிய மாற்றல்களின் அளவினை விஞ்சாத விதத்தில் அடையாளம் காணப்பட்ட வழிப்படுத்தல் ஒன்றினூடாக இது எக்கணக்கிலிருந்து பெறப்பட்டதோ அந்த அடையாளம் காணப்பட்ட கணக்கிற்கு திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும். வேறு வகையான மீட்டெடுப்புக்கள் எதுவும் (உ-ம்: காசு, காசோலை மூன்றாந்தரப்பினர் மாற்றல்) அனுமதிக்கப்படக்கூடாது.

## பின்னிணைப்பு II

**கசினோ மற்றும் சூதாட்ட இல்லங்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான சந்தேகக் குறிகாட்டிகள் (சிவப்புத் துண்டு கவனயீர்ப்பு)**

- வாடிக்கையாளர்கள சூதாட்டமற்ற அல்லது குறைந்தபட்ச சூதாட்டத்துடன் சிப்புக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் மீட்டெடுத்தல் அல்லது நிதிகளை வைப்புச் செய்தல் மற்றும் எடுப்பனவு செய்தல்;
- வாடிக்கையாளர் வெற்றிபெற்ற தொகை தொடர்பில் மூன்றாந்தரப்பினரின் கணக்கு பல்வேறு கொடுப்பனவுகளையும் மூலதனத்தையும் கோருதல்;
- ஒரே நன்மைபெறுநருக்கு கொடுப்பனவுகளைச் செய்யுமாறு பல்வேறு தொழிற்பாட்டாளர்களும் கோரிக்கை விடுத்தல்;
- ஒருவர் இன்னொருவருக்காக பந்தயத்தொகையினை எதிரீடு செய்வதன் மூலமாக ஒத்துழைத்துக் கொள்வதாகக் காணப்படுகின்ற சூதாட்டக்காரர்கள்;
- வாடிக்கையாளர் தொடர்பில் உரிய விழிப்புக் கவனத்தினை அல்லது ஏனைய அறிக்கையிடல் தேவைப்பாடுகளை (ஒன்றில் உண்மையான அல்லது உணரப்படுகின்ற) தவிர்க்கின்ற விதத்தில் சிப்புக்களை அல்லது ஏனைய சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அல்லது மீட்டுக் கொள்வதற்கான திட்டம்;
- குறைந்தபட்ச அல்லது உண்மையான சூதாட்டமில்லாத விதத்தில் காசினை ஏற்றுக்கொள்கின்ற மற்றும் காசினை வழங்குகின்ற சூதாட்டக் கருவிகளுக்கான புகுத்தல் நாணயத்தினால் மேற்கொள்ளப்படும் "உட்புகுத்தல் உண்டியல்" (உ-ம்: டிட்டோ சீட்டொன்றினை அல்லது அது போன்ற வேறு சாதனம்);
- வாடிக்கையாளர் சிநேகபூர்வதன்மை/ கசினோ ஊழியர்களுடன் சிநேகபூர்வமாக இருக்க எத்தனித்தல்;
- நன்கு நிறுவப்பட்ட வாடிக்கையாளரொருவருக்கான கொடுக்கல்வாங்கலின் அளவிலும் எண்ணிக்கையிலும் கடுமையான அல்லது விரைவான அதிகரிப்புக் காணப்படல்;
- சூதாடுகின்ற ஆளின் நிதியியல் நிலைமை அத்துடன் அல்லது அவரின் தொழிலுடன் ஒவ்வாததாகக் காணப்படும் சூதாட்ட நடவடிக்கைகள்;
- வெற்றி பெற்ற சீட்டினை சூதாட்டக்காரர்களிடமிருந்து கொள்வனவு செய்தல்;
- ஜக்பொட் வெற்றிக்குரிய அல்லது வெற்றிபெற்ற லொத்தர் சீட்டினை ஆரம்பக் கட்டணமொன்றில் கொள்வனவு செய்தல்;
- சூதாட்டமின்றி பெருந்தொகையான சிறிய இன வங்கித் தாள்களை பெரிய இன நாணயத் தாள்களுக்கு பரிமாற்றிக் கொள்ளுதல்;
- வெற்றிபெற்ற ஜக்பொட் சீட்டுக்களை அடிக்கடி கோருதல்;
- சூதாட்டத்தில் பங்கு பெறாமல் ஆனால் ஜக்பொட் நடைபெறும் இடங்களை அவதானிக்கின்ற/ சுற்றித்திரிகின்ற வாடிக்கையாளர்கள்;
- குறிப்பிடத்தக்க பெறுமதியான சிப்புக்களை அல்லது டிட்டோ சீட்டுக்களை மற்றைய வாடிக்கையாளர்களுக்கு மாற்றுகின்ற வாடிக்கையாளர்கள்;
- கழிவிடப்படுகின்ற நிதியினைக் கொண்ட மீள்கொடுப்பனவுடன் வாடிக்கையாளர்களுக்கு சூதாடுவதற்கு நிதிகளை கடனாக வழங்குதல்;
- குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் குறைந்த இடர்நேர்வில் பெருந்தொகையான பந்தயத்தினைக் கட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டதாகக் காணப்படும் சூதாட்ட மாதிரிகளை சூதாடுவதன் மூலம் காசாக்குவதற்கு முன்னர் ஊகிக்கப்படத்தக்க குறைந்த வீதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல்;

- வாடிக்கையாளர் தொடர்பிலான உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான தகவல்களை வழங்கத் தயங்கும் வாடிக்கையாளர்கள் அல்லது சந்தேகத்திற்குரிய அல்லது உண்மையான அடையாளத் தகவல்களை வழங்குதல் அல்லது வேறுவழியில் நிறுவனத்தின் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனச் செயன்முறைக்கு வேண்டுமென்றே தடைகளை ஏற்படுத்துபவராகக் காணப்படும் வாடிக்கையாளர்.

**பின்னிணைப்பு III**

**கசினோ மற்றும் சூதாட்ட இல்லங்களில் பயன்படுத்தப்படுகின்ற பணம் தூயதாக்கல் உதாரணங்கள்:**

**நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு அறிக்கை - 2010 ஒத்தோபர் - அதிலிருந்து எடுக்கப்பட்ட விடயங்கள்**

**வழக்கு 1 - சிப்புக்களின் கொள்வனவு மற்றும் வெற்றிபெற்றதாகக் கோரப்படும் நிதிகளுக்காகப் பயன்படுத்தப்படும் போதைப்பொருள் கடத்தல் பெறுகைகள்**

குற்றம்: போதைப்பொருள் இறக்குமதி

நியாயாதிக்க இடம்: அவுஸ்திரேலியா

தொழில் நுணுக்கமுறை: சிப் கொள்வனவு மற்றும் காசினைச் செலுத்துதல்

பொறிமுறை: கசினோ

சாதனம்: கசினோ சிப்புக்கள், காசு மாற்றலுக்கான சிப், கசினோ காசோலை

ஏறத்தாழ 3.4 கிலோகிராம் கறுப்பு அபின் போதைப்பொருளைக் கொண்ட சரக்குப் பொதியொன்று ஆளொருவருக்கு முகவரியிடப்பட்டு உள்ளேயுள்ள பொருட்கள் மறைவான முறையில் பொதி செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ஆள் கிரமமான கசினோ வாடிக்கையாளர் என்பதும் ஏறத்தாழ 50 பந்தயக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டிருக்கின்றார் என்பதும் முக்கியமாக சிப் காசு கொடுப்பனவு முறையில் 890,000 அவுஸ்திரேலியா டொலரைப் பெற்றிருக்கின்றார் என்பதும் மேலதிக விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. மிகச் சிறிய அளவிலான சூதாட்ட விளையாட்டுக்கள் அவ்வாளின் பெயரில் பதிவாகியுள்ளதுடன் அவர் முன்னைய இறக்குமதிகளிலிருந்தான பெறுகைகளைப் பயன்படுத்தியே சிப்புக்களைக் கொள்வனவு செய்தும் வெற்றிபெற்றதாக நிதிகளைக் கோரியும் வந்திருப்பதாக அனுமானிக்கப்பட்டிருக்கிறது.

**வழக்கு 2 - குதிரைப் பந்தயம் நடத்துவோரூடாக தூயதாக்கப்பட்ட வங்கி உடமையிலிருந்தான பெறுகைகள்**

குற்றம்: பணம் தூயதாக்கல்

தொழில் நுணுக்கமுறை: குறைந்த இடர்நேர்வுப் பந்தயங்கள், தாழ்ந்த வருமானம் மற்றும் உயர்ந்த வெற்றியுடன் விளையாட்டுக்களை விளையாடுதல், சாதகமான விடயங்களில் பந்தயம் கட்டுதல்

பொறிமுறை: பந்தயம் நடத்துவோர், பல வங்கிக் கணக்குகள்

சாதனம்: காசு, காசோலை

ஆயுதக் கொள்ளைகள் தொடர்பான பொலிஸ் விசாரணைகளின் போது மற்றொரு தனிப்பட்டவர் ஒரேநேரத்தில் பல்வேறு குதிரைப்பந்தயம் நடத்துபவர்களிடத்தில் பெரும் எண்ணிக்கையான பந்தயங்களை மேற்கொண்டமை வெளிச்சத்திற்கு வந்தது. அவர் எப்பொழுதும் பந்தயப்பணம் உயர்வாகவும் மற்றைய விடயங்கள் குறைவாகவும் காணப்படுகின்ற ஒரேவிதமான தன்மையினையே என்றும் பின்பற்றுவார். மறுசொற்களில் கூறுவதாயின், அவர் வெற்றிபெறுவதற்கான சாத்தியங்களைக் கொண்ட “சாதகமான” விடயத்தின் மீதே பந்தயம் கட்டுகின்ற போதும் பந்தயதாரர் அவர் பெற்ற வெற்றி ஒப்பீட்டு ரீதியாக சிறிதாக இருக்குமாயின் அவர் பெற்ற தொகை அத்தொகையினை ஒத்ததாகவே இருக்கும். இதன் விளைவாக, நீண்ட காலத்தில் அவர் 7 சதவீதம் கொண்ட தேறிய இழப்பினை அடைந்தார். இது தொழில்நிலை சூதாட்டக்காரருக்கு உண்மையில் கடுமையான இழப்பினையே ஏற்படுத்தும். அவர் அவரது வெற்றிப் பணத்தினை தனிப்பட்ட முறையில் ஒருபோதும் பெறுவதில்லையெனினும் 10 மூன்றாந்தரப்பினரின் பெயர்களுக்கு மொத்தமாக 14 வேறுபட்ட கணக்குகளுக்கு காசோலைகளை வழங்கியிருக்கிறார். காசோலைகளில் பலவும் ஆயுதக் கொள்ளைக்காரர்களின் பெயர்களிலும் அவர்களது உடனடிக் குடும்பங்களின் பெயர்களிலும் வழங்கப்பட்டுள்ளமை கண்டயறியப்பட்டுள்ளது. பணத்தினை தூயதாக்குகின்றவருக்கும் உண்மையான குற்றப் பணிகளுக்குமிடையிலான தொடர்புகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. முன்னையவர் பணம் தூயதாக்கல் தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்டு 5 ஆண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் முறைமையினூடாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3.3 மில்லியனை தூ ய பணமாக்கியிருந்தார்.

**வழக்கு 3 - வெளிநாட்டுப் பிரசையொருவர் சட்டத்திற்கு முரணான பணப் பெறுகையினைப் பயன்படுத்தி வெற்றிக்கான ஜக்பொட்டினைக் கொள்வனவு செய்தமை**

குற்றம்: போதைப்பொருள் கடத்தல் மற்றும் பணம் தூயதாக்கல்

தொழில் நுணுக்கமுறை: வெற்றி பெறக்கூடிய லொத்தர் சீட்டுக்களை வாங்கியமை

பொறிமுறை: வெற்றி பெறுகின்ற ஜக்பொட்டுக்கள், காசு

குறிகாட்டிகள்: வெற்றி பெறுகின்ற ஜக்பொட்டுக்களைக் கொள்வனவு செய்தல், வெற்றிபெற்ற காசோலைகளை வைப்புச் செய்தமையினைத் தொடர்ந்து உடனடியாக மீளப்பெறல்

வெளிநாட்டுப் பிரசைகள் குழுவொன்று சிட்னியிலுள்ள பல்வறு களரிகளூடாக சட்டபூர்வமாக வெற்றிபெற்றவர்களிடமிருந்து வெற்றிபெற்ற ஜக்பொட்டுக்களை வாங்கியுள்ளமை தொடர்பான விடயங்களைப் பற்றி அவுஸ்திரேலிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு மையம் குறிப்பிடுகின்றது. சந்தேக நபர்கள் ஓராண்டிற்குள் ஏறத்தாழ அவுஸ்திரேலிய டொலர் 1.7 மில்லியனை வெற்றிபெற்ற காசோலையாக வைப்புச் செய்ததுடன் அதன் பின்னர் காசாக உடனடியாக எடுப்பனவு செய்து கொண்டனர். வெற்றிக்குரிய ஜக்பொட்டுக்களை வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட நிதியின் மூலம் சட்டத்திற்கு மாறான விதத்தில் வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இவ்விடயமானது மேலதிக விசாரணைகளுக்கான பங்காளர் முகவர்களிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

*பின்னிணைப்புக்கள் I - III, பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பில் பகிரங்கமாக கிடைக்கத்தக்க உள்ளடக்க விடயங்களை உள்ளடக்குகின்றன.

**தொடர்: 037/08/001/0006/018** 2018 ஏப்பிறல் 18

**வழிகாட்டல் இல. 03/2018**

சேரல்: முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்/ உரிமையாளர்

**2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க உண்மைச் சொத்து, பெறுமதிமிக்க உலோகங்கள், பெறுமதிமிக்க மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்பு கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபார (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகள் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலாதலும் வேண்டும்.

**பணிப்பாளர்/நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்

**2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க உண்மைச் சொத்து, பெறுமதிமிக்க உலோகங்கள், பெறுமதிமிக்க மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக் கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள்**

**பகுதி I**

**அறிமுகம்**

1. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் தொழிற்படுகின்ற இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு (இதனகத்துப் பின்னர் நி.கொ.வா.அ.சட்டம் என அழைக்கப்படும்), 2018.01.10 திகதியிடப்பட்ட இல. 2053/20 கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகளை (இதனகத்துப் பின்னர் வா.உ.வி.க. விதிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) வெளியிட்டது. இது நிதியல்லா வியாபாரங்களை மேற்கொள்கின்ற நிறுவனங்களுக்கும் தொழில்சார்நிபுணர்களுக்கும் ஏற்படைத்தாகும்.

2. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளில் விபரிக்கப்பட்டவாறு, இவ்வழிகாட்டல்கள் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும் [இதனகத்துப் பின்னர் "நிறுவனம் (நிறுவனங்கள்") எனக் குறிப்பீடு செய்யப்படும்].

    - **உண்மைச் சொத்து முகவர்கள்,** உண்மைச் சொத்துக்களின் வாங்குதல் விற்றல் தொடர்பில் அவர்களது வாடிக்கையாளர்களுக்கான கொடுக்கல்வாங்கலில் அவர்கள் ஈடுபடும் பொழுது
    - **பெறுமதிமிக்க உலோகங்களின் வணிகர்கள் மற்றும் பெறுமதிமிக்க மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகர்கள்** உட்பட, ஆனால் 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைச் சட்டத்தினால் உள்ளடக்கப்பட்டுள்ள உலோகங்கள் மற்றும் கற்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாத விதத்தில்.

3. இவ்வழிகாட்டல்கள், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், மதிப்பிடல் மற்றும் முகாமைப்படுத்தல் நோக்கங்களுக்காக வழங்கப்படுகின்றன.

4. சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி இவ்வழிகாட்டல்களின் நோக்கத்திற்காக:

    - **ப.தூ.எதிரான/ ப.நி. ஒழித்தல்** என்பதன் கருத்து நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டவாறு பணம் தூயதாக்கலுக்கெதிரான அத்துடன் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் என்பதாகும்.
    - **வா.ப.உ.வி. கவனம்** என்பதன் கருத்து வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனம் என்பதாகும்.
    - **நி.ந.செ.குழு** என்பதன் கருத்து நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழு என்பதாகும் (பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான உலகளாவிய கொள்கை அமைப்பொன்றாகும்).
    - **நி.உ.பிரிவு** என்பதன் கருத்து நிதியியல் உளவறிதல் பிரிவு என்பதாகும். இது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நோக்கங்களுக்காக பெயர் குறித்துரைக்கப்பட்டதாகவே இருப்பதுடன் (2006.03.23ஆம் திகதியிடப்பட்ட இல.1437/24 கொண்ட அதிவிசேட வர்த்தமானி) குறிப்பிட்ட சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் மற்றும் நிருவகிக்கின்ற பொறுப்பு இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
    - **ப. தூயதாக்கல்** என்பதன் கருத்து பணம் தூயதாக்கல் தொடர்பான குற்றம் என்பதாகும். இது 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடை செய்கின்ற சட்டத்தின் 3ஆம் பிரிவின் நியதிகளில் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது.
    - **ப. தூயதாக்கல்/ ப.நி.** என்பதன் கருத்து பணம் தூயதாக்கல் மற்றும் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பதாகும்.
    - **அ.ரீ.மு.கொ.வே. ஆள்** என்பதன் கருத்து அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆள் என்பதாகும். இவர் ஒன்றில் உள்நாட்டு ரீதியில் அல்லது ஒரு வெளிநாட்டினால் அல்லது ஒரு பன்னாட்டு ஒழுங்கமைப்பில் பிரபல்யமான பொதுப் பணிகள் பொறுப்பிக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும். உதாரணமாக ஓர் அரசின் அல்லது அரசாங்கத்தின் தலைவரையும் அரசியல்வாதிகளையும் ஒரு மூத்த அரசாங்க அலுவலரையும் நிதிமுறை அலுவலர் அல்லது இராணுவ அலுவலரையும் அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனத்தின் மூத்த நிறைவேற்று அலுவலரையும் முக்கியமான அரசியல் கட்சி அலுவலரையும் உள்ளடக்கும். தொடர்பான அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆளுடன் தொடர்புபட்ட புகழுடன் இணைந்த இடர்நேர்வுடன் தொடர்பான வியாபார உறவுமுறைமைகளின் அடிப்படையில் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய

ஆளுடன் நெருக்கமான ஆட்களும் அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டியவர் எனக் கருதப்படுகின்றார். இது முன்சொல்லப்பட்ட வகையிலுள்ள நடுத்தர பதவி வரிசையிலுள்ள அல்லது மிகக் கனிஷ்ட பதவி வரிசையிலுள்ளவர்களை உள்ளடக்காது.

- **ச.கொ.வா.அறிக்கையிடல்** என்பதன் கருத்து 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளில் கோப்பிடப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் எனப் பொருள்படும்
- **ப.நிதியளித்தல்** என்பதன் கருத்து பயங்கரவாத நிதியிடலின் குற்றமொன்று என்பதாகும். இது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒழித்தல் மீதான சமவாயச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் நியதிகளில் தண்டனைக்கு உரியதொன்றாக்கப்பட்டுள்ளது.
- **ஐ.நா.பா.ச. தீர்மானம்** என்பதன் கருத்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள் எனப் பொருள்படும்.

## பகுதி II

## இணங்குவிப்பு

### இணங்குவிப்பு அலுவலர்

5. ஒவ்வொரு நிறுவனமும் இணங்குவிப்பு அலுவலரொருவரை நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. நியமிக்கப்படும் அலுவலர் நிறுவனத்தின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் அவரது அல்லது அவளது பொறுப்புக்களைக் காத்திரமான முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான அதிகாரங்களையும் வளங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

6. நிறுவனத்தின் முகாமைத்துவ அமைப்பின்படி, இணங்குவிப்பு அலுவலர் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கோ அல்லது மூத்த முகாமைத்துவத்திற்கோ அல்லது உரிமையாளர் அல்லது நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அலுவலருக்கோ கிரமமான அடிப்படையில் அறிக்கையளித்தல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் மூத்த முகாமைத்துவ மட்டத்தினைக் கொண்டவராகவும் உயர் முகாமைத்துவத்தினை அல்லது பணிப்பாளர் சபையின் நேரடியாக அணுகக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

7. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளுடன் தொடர்ச்சியானது நடைபெற்றுவரும் அடிப்படையில் கவனத்தினைச் செலுத்துவதற்காகவும் இணங்குவிப்பு அலுவலர் நிறுவனத்தின் மற்றைய ஊழியர்களுக்குக் குறிப்பிட்ட கடமைகளைக் கையளிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். எனினும், அத்தகைய கையளிப்புக்கள் மேற்கொள்ளப்படுகையில் இணங்குவிப்பு அலுவலர் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புத் தேவைப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ந்தும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

### பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

8. ஒவ்வொரு நிறுவனமும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்காக எழுத்து மூலமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் உருவாக்குதல் வேண்டும். இணங்குவிக்காமையைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் நிவாரண நடவடிக்கைகளுக்குமாக இக்கொள்கைகளும் நடைமுறைகளும் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இக்கொள்கைகளும் நடைமுறைகளும் நிறுவனத்திற்குள் தொடர்பூட்டப்பட்டு, விளங்கிக் கொள்ளப்பட்டு சரியான நேரத்தில் பின்பற்றப்படுதல் வேண்டும். இக்கொள்கைகளும் நடைமுறைகளும் வாடிக்கையாளர் செயற்பாடுகளுடன் தொடர்பான துறைகளில் பணிபுரிபவர்களுக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

9. ஒவ்வொரு நிறுவனத்தினதும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளில் மதிப்பீடொன்றினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். மதிப்பீடானது நிறுவனத்தினது வியாபாரத்தின் தன்மைக்குப் பொருத்தமான விதத்தில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இப்பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு மதிப்படானது, ஏற்கனவேயுள்ள கொள்கைகள் நடைமுறைகளுடன் சேர்த்து வாடிக்கையாளரை அடையாளம் காணுதல், பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

10. ஒவ்வொரு நிறுவனத்தினதும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் அளவு மற்றும் மட்டங்களின் விபரங்கள் நிறுவனத்தின் குறித்துரைக்கப்பட்ட தேவைகள் மற்றும் சிக்கலான தன்மைகள் அதேபோன்று நிறுவனத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகள் என்பனவற்றின் மீது தங்கியிருக்கும்.

11. நிறுவனமொன்றின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் நிறுவனத்தின் மூத்த முகாமைத்துவத்தினாலும் அத்துடன்/ அல்லது பணிப்பாளர் சபையினாலும் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும். பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் குறைந்தபட்சம் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வு மதிப்பீட்டினையும் இடர்நேர்வுத் தயாரிப்பு வழிமுறைகளையும் வாடிக்கையாளர் அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல், பதிவேடுகளைப் பேணுதல், கட்டாயமான அறிக்கைகளை நிதியியல் பிரிவிற்குச் சமர்ப்பித்தல் மற்றும் நிறுவனத்தின் இணங்குவிப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் சுயாதீனமான கணக்காய்வினை உறுதிப்படுத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உதாரணமாக:

    (அ)பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றிய ஏதேனும் சந்தேகங்கள் தொடர்பிலான அறிக்கையிடல் கடப்பாடுகளைப் பொறுத்தவரையில் நிறுவனத்தின் இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானங்கள் மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவின் (http://fiusrilanka.gov.lk) வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மற்றைய பட்டியல்கள் மற்றும் வேறு எங்கேனுமுள்ள பட்டியல்களுக்கெதிரான வாடிக்கையாளரின் விபரங்கள் முன்னாய்வு முறையில் ஆராயப்படுவதனை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

    (ஆ) நிறுவனங்கள், பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்கின்ற விதத்தில் போதுமான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகளை இன்னமும் உருவாக்கியிராத நாடுகளுடனும் பிராந்தியங்களுடனும்

தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது அதிகளவிலான கவனத்தினைப் பிரயோகித்தல் வேண்டும். இத்தகவல்களுக்காக நிறுவனங்கள் நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் வெப்தளம் (http://fatf-gafi.org) மற்றும் மூலங்களையும் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

12. பணிப்பாளர் சபை மற்றும் அலுவலர் மற்றும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக்கள் மீதான நியதிச் சட்ட ரீதியான கடமைகளை விளங்கிக் கொள்ளுமாறு பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. மூத்த முகாமைத்துவமும் பணிப்பாளர் சபையும் வியாபாரத்திலுள்ள பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளைத் தணித்து முகாமைப்படுத்துகின்ற கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இறுதியில் பொறுப்புடையவர்களாவர்.

13. ஊழியர்களை பணிக்கு அமர்த்தும் பொழுது அவ்வூழியர்கள் உயர்ந்த தரங்களைக் கொண்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனம் கொள்கையினை முன்னாய்விற்குட்படுத்தல் வேண்டும்.

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களுடனான இணங்குவிப்பு**

14. பயங்கரவாதம், பயங்கரவாதிக்கு நிதியளித்தல் மற்றும் பாரிய சேதங்களை விளைவிக்கும் ஆயுதப்பெருக்கம் மற்றும் அதன் நிதியளித்தல் (ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள் 1267, 1373, 1718, 1540) மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த ஏதேனும் தீர்மானங்கள் தொடர்பிலான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் மீதான ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பட்டியல் தொடர்பில் 1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டத்துடன் இணங்கியொழுகும் விதத்தில் விடுக்கப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் எவரேனும் வாடிக்கையாளர் அல்லது நன்மைபெறுநர் காணப்படுகின்றாரா என்பதனை நிறுவனம் வேறு விதத்தில் பரிசோதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

15. தனிப்பட்ட ஆள்/ நிறுவனம் பயங்கரவாதம், பயங்கரவாதிக்கு நிதியளித்தல் மற்றும் பெருமளவு சேதங்களை ஏற்படுத்தும் பாரிய ஆயுதப் பெருக்கம் மற்றும் அவற்றிற்கு நிதியளித்தல் என்பனவற்றின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலங்களை உடனடியாக முடக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது. நிறுவனமானது அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை அடையாளம் கண்டு உடனடியாக முடக்குவதற்கான வழிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

16. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களினை முடக்குதல் அல்லது அத்தகைய நிதிகளின் முடக்கத்தினை நீக்குதல் தொடர்பில் அல்லது குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர் அல்லது நிறுவனங்களினால் எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் நிகழ்வுகளைப் பொறுத்தவரை, நிறுவனங்கள் அத்தகைய வாடிக்கையாளரைக் கண்டறிந்ததிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் நிதிசார் உளவறிதல் பிரிவிற்கான பிரதியொன்றுடன் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

17. நிறுவனம், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது அவற்றின் நன்மைபெறுநர்களின் நன்மைக்காக நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் கிடைக்கச் செய்யப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை**

18. அடையாளம் காணப்பட்ட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான கட்டுப்பாடுகளை உருவாக்குவதற்கும் அக்கட்டுப்பாடுகளின் கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்கும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு மதிப்பிடுவதற்கு நிறுவனத்தினை அனுமதிக்கின்ற செயன்முறையே இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையாகும். ஒவ்வொரு நிறுவனமும் அவற்றின் குறிப்பிட்ட நிறுவன அமைப்பு, அமைப்பியல் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காகப் பொருத்தமான இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு அவற்றில் சொந்தத் தீர்மானத்தினையும் அறிவையும் நிபுணத்துவத்தினையும் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

19. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலின் பின்னணியில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை என்பது பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கும் செயன்முறையொன்றாகும்.

(அ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை அடையாளம் காணுதல்;

(ஆ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடல்;

(இ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் தணிப்பதற்குமான கட்டுப்பாடுகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல்;

(ஈ) இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகளின் காத்திரமான தொழிற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல்.

**(அ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை அடையாளம் காணுதல்**

20. வியாபார நடவடிக்கைகளுடன் இயல்பாகவே பிணைந்து காணப்படும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகள் பற்றி நிறுவனம் கட்டாயம் அறிந்திருத்தல் வேண்டும். இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் முதல் நடவடிக்கையாக, நிறுவனம் வாடிக்கையாளர் நாடுகள் மற்றும் புவியியல் பிரதேசங்கள் மற்றும் உற்பத்திகள், பணிகள், கொடுக்கல்வாங்கல்கள் அல்லது விநியோக வழிப்படுத்தல்கள் அதேபோன்று அதன் உத்தேச புத்தாக்கங்கள் என்பனவற்றிலிருந்து தோன்றக்கூடிய பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பிலான இடர்நேர்வினை அடையாளம் கண்டுகொள்ளுதல் வேண்டும். அவர்களது சொந்த பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வினை அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பிடலுக்கான பரிசோதனைப் பட்டியலுக்கான உதாரணம் பின்னிணைப்பு 1இல் தரப்பட்டுள்ளது. இவ்வுதாரணத்தினை பார்வையிடுவதன் மூலம் நிறுவனங்கள் அவற்றின் சொந்த பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் மதிப்பிடுவதற்குமான பரிசோதனைப் பட்டியலை மதிப்பிட முடியும். இது ஒவ்வொரு நிறுவனத்திலுமுள்ள பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கான மிகச் சரியான சோதனைப் பட்டியலாக இருக்க முடியாது. ஆகவே, நிறுவனம் அதன் வியாபாரத்தின் தன்மைக்கேற்பவும் தேவைப்பாடுகளுக்கேற்பவும் அவர்களது

சொந்த இடர்நேர்வு அடையாளம் காணும் பரிசோதனைப் பட்டியலைத் தயாரிக்க முடியும்.

21. ஒவ்வொரு நிறுவனமும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் சாதனங்களுடன் இணைந்து காணப்படக்கூடிய பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளினால் பாதிக்கப்படும் தன்மை காரணமாக பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை அடையாளம் காணுதல் வேண்டும்.

**(ஆ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை மதிப்பிடல்**

22. இடர்நேர்வு மதிப்பீடு என்பது நிறுவனம் முகம் கொடுக்கின்ற பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலின் சாத்தியமான அச்சுறுத்தல்களையும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளையும் பகுப்பாய்வு செய்யுமொன்றாகும். மதிப்பீட்டின் சிக்கலான தன்மையானது தன்மை, அளவு மற்றும் நிறுவனத்தினால் எதிர்நோக்கப்படும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளின் தன்மை என்பனவற்றின் மீது தங்கியிருக்கிறது.

23. இடர்நேர்வு மதிப்பீட்டினை மேற்கொள்ளும் பொழுது நிறுவனமானது பின்வரும் காரணிகளைப் பரிசீலனையில் கொண்டு ஆவணப்படுத்தல் வேண்டும்.

(அ) வாடிக்கையாளரின் வகை மற்றும் வாடிக்கையாளரின் உறவுமுறைகள்;

(ஆ) உற்பத்திகள் மற்றும் பணிகளின் வகை மற்றும் அவை விநியோகிக்கப்பட்ட வழிகள்;

(இ) புவியியல் ரீதியாக பூர்வீக இடம் மற்றும் வாடிக்கையாளர்களின் அமைவிடங்கள்;

(ஈ) நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகளுடன் தொடர்பான ஏனைய காரணிகள்;

(உ) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களின் குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் வாடிக்கையாளரின் பெயர் காணப்படுகின்றதா என்ற விபரங்கள்.

பின்னிணைப்பு 1 இலுள்ள பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் மதிப்பிடுவதற்கும் வழங்கப்பட்டுள்ள உதாரணத்தினைப் பின்பற்றுவது மதியுடைய செயலாகும். மாதிரி பரிசோதனைப் பட்டியலிலுள்ள அவ்விடயங்களில் எதற்கேனும் உமது விடை "ஆம்" எனில் நிறுவனத்தில் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கான உயர் இடர்நேர்வு காணப்படுவதனைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

24. இடர்நேர்வு மதிப்பீடானது வியாபார தொழிற்பாடுகளின் விபரமான அறிவினையும் மதிப்பீட்டாளர்களினால் நடைமுறைப்படுத்தப்படும் ஆற்றல்வாய்ந்த தீர்மானத்தினையும் தேவைப்படுத்துவதன் மூலம் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகள் ஒவ்வொரு தனிப்பட்ட காரணங்களினதும் அதேபோன்று இணைந்த காரணிகளினதும் தீர்மானங்களின்படி தீர்மானிக்கப்பட முடியும். இடர்நேர்வு மதிப்பீடுகள் பல்வேறுபட்ட இடர்நேர்வுக் காரணிகளின் பரிணாம வளர்ச்சியுடன் தொடர்புபட்டிருப்பதனால் காலத்திற்குக் காலம் தொடர்ச்சியாக மாற்றமடைந்து வருகின்றன.

25. வாடிக்கையாளர்களுடனான நிறுவனத்தின் வணிகம் தனியொரு கொடுக்கல்வாங்கலுக்கு (ஒரே தரத்திலான கொடுக்கல்வாங்கல்) மட்டுப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, இது தற்பொழுது இடம்பெற்று வருகின்ற வியாபார உறவுமுறையாகக் கருதப்படக்கூடாது. எனினும், நிறுவனம் அத்தகைய வாடிக்கையாளரின் இடர்நேர்வு மதிப்பீட்டினைப் பூரணப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படும். கொடுக்கல்வாங்கல்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் குற்றத்துடன் தொடர்பானது எனச் சந்தேகிக்கப்படுமாயின் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களைச் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கலாகக் கருதி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும். மேலதிகத் தகவலுக்கு தயவுசெய்து பகுதி ஐஏ இனைப் பார்க்கவும்.

**(இ) பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் தணிப்பதற்குமான கட்டுப்பாடுகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்துதல்**

26. இடர்நேர்வுத் தணிப்பு என்பது இடர்நேர்வின் மூலங்களாக விளங்கும் (அதாவது அச்சுறுத்தல்கள், பாதிக்கப்படக்கூடிய தன்மை) இடர்நேர்வுக் காரணிகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கட்டுப்பாடுகளை உரிய நிறுவனத்தினால் தாங்கக்கூடிய விதத்தில் நேரக் கட்டமைப்பொன்றிற்குள் நடைமுறைப்படுத்துவதனைப் பற்றியதாகும். கட்டுப்பாடுகள் எழுதப்பட்ட கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் வடிவில் இருத்தல் வேண்டும்.

27. நிறுவனத்தின் இணங்குவிப்புக் கொள்கைகள், நடவடிக்கைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றினூடாகப் பின்வரும் வேறுபட்ட வகைகளிலான தணிப்பு வழிமுறைகளை நிறுவனம் அபிவிருத்தி செய்து நடைமுறைக்கிட முடியும்.

(அ) இணங்குவிப்பு முன்முயற்சிகள் பற்றியும் அடையாளம் காணப்பட்ட இணங்குவிப்புக் குறைபாடுகள் பற்றியும் சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் மூத்த முகாமைத்துவத்திற்கு அறிவித்தல்;

(ஆ) முகாமைத்துவத்தில், ஊழியர்களில் அல்லது வியாபார அமைப்பியலில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக ஏற்படக்கூடிய தடங்கல்களெதுவுமின்றி பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் தொடர்ந்து இடம்பெறுவதனை உறுதிப்படுத்தல்;

(இ) சந்தேகத்திற்குதிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் உட்பட கட்டாயமாகப் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் அறிக்கையிடுகின்ற தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதன் மீது கவனம் செலுத்துவதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல்;

(ஈ) வேலை விபரங்களுடன் பணம் துயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிதல் இணங்குவிப்புக்களை கூட்டிணைத்தல்;

(உ) காசுக் கொடுக்கல்வாங்கல்களைக் கையாளுகின்ற, பணம் துயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளின் கட்டாய அறிக்கைகளைக் கவனிக்கின்ற, சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களில் அல்லது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஒரு பகுதியுடன் தொடர்பான விதத்தில் வேறு ஏதேனும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களைக் கண்காணித்தல்;

(ஊ) வியாபாரத்தில் காணப்படும் உயர் இடர்நேர்வு சூழ்நிலைகள் தொடர்பான விழிப்புணர்வினை அதிகரித்தல்;

(எ) தற்பொழுது இடம்பெற்று வருகின்ற வியாபாரத் தொடர்புகளை மீளாய்வு செய்கின்ற தடவைகளை அதிகரித்தல்; அத்துடன்

**(ஈ) இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகளின் காத்திரமான தொழிற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல்**

28. பணம் துயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வின் காத்திரமான முகாமைத்துவம் என்பது தொடர்ச்சியானதும் இயக்கவாற்றல் மிக்கதுமான ஒரு செயன்முறையாகும். நிறுவனமானது பணம் துயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வினை முகாமைப்படுத்துகின்ற செயன்முறை கிரமமான ஆய்விற்குட்பட்டிருக்கின்றது என்பதனையும் புதிய அல்லது தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகள் புதியனவாக அடையாளம் காணப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன. தொழிற்பாடுகளின் அளவு அல்லது தன்மை, புதிய சாதனங்கள், புதிய பணிகள், புதிய வாடிக்கையாளர் வகைகள் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக ஏற்படுகின்றனவா என்பது பற்றியும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் அபிவிருத்தி**

29. நிறுவனமானது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக்கள் மீதான பயிற்சியினை பணிப்பாளர் சபை மூத்த முகாமைத்துவம், ஊழியர்கள், முகவர்கள் அல்லது நிறுவனத்தின் சார்பில் தொழிற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் தனிப்பட்டவர்களுக்கு பயிற்சிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

30. அத்தகைய பயிற்சியானது பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுப்பதற்கான உள்ளகக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளின் உரிய விழிப்புக் கவனம் அதிகரிப்பதனை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நிறுவனத்தின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்புக் கொள்கைகள், நடவடிக்கைகள் மற்றும் தொடர்பான தனிப்பட்டவர்களின் பொறுப்புக்கள் பற்றிய தெளிவான விளக்கங்களை வழங்க வேண்டும்.

## பகுதி III

### வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்

**வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொத்துரிமையாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல்**

31. ஒவ்வொரு நிறுவனமும் இருந்திட்டொன்றான மற்றும் ஒரே தடவையிலான வாடிக்கையாளர் உட்பட வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர்கள் மீது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

32. வாடிக்கையாளர் அத்துடன்/ அல்லது பயன்பெறும் சொந்தக்காரர் தொடர்பில் நிறுவனம் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளை திருப்திகரமாகப் பிரயோகிக்க முடியாதுவிடின், நிறுவனமானது அவ்வாடிக்கையாளருக்கான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள முடியாது. மேலும், நிறுவனம் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பிப்பது பற்றியும் பரிசீலித்தல் வேண்டும்.

33. வாடிக்கையாளர் ஒருவரின் நடவடிக்கைகள் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாட்டினை வேண்டுமென்றே தவிர்க்கும் விதத்தில் அமையப் பெற்றிருக்குமாயின், நிறுவனம் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பிப்பது பற்றிப் பரிசீலித்தல் வேண்டும்.

34. உயர் இடர்நேர்விற்குட்பட்டவர்களாக அடையாளம் காணப்பட்ட வாடிக்கையாளர்களும் பயன்பெறும் சொந்தக்காரரும் மேலதிக நுணுக்கமான ஆய்வு மற்றும் அடையாளத் தகவல்கள் மற்றும் நிதியங்களின் மூலங்கள் போன்ற அதிகரித்தளவிலான உரிய விழிப்புக் கவன வழிமுறைகளுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**பெறுமதிமிக்க உலோக வணிகர்கள் மற்றும் பெறுமதிமிக்க, ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகர்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகள்**

35. பெறுமதிமிக்க உலோகங்களின் வணிகர்கள் மற்றும் பெறுமதிமிக்க, ஓரளவு பெறுமதிமிக்கக் கற்களின் வணிகர்கள் ஆகியோரைப் பொறுத்தவரை வணிகர்கள் இலங்கை ரூபாவில் ஐக்கிய அமெரிக்க டொலர் 15,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குச் சமனான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் வாடிக்கையாளருடன் ஏதேனும் காசு கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் பொழுது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

36. இக்காசுக் கொடுக்கல்வாங்கல்கள் உள்நாட்டு இரத்தினக்கற்கள்/ ஆபரணங்களின் விற்பனை அல்லது கொள்வனவு, இரத்தினக்கற்கள்/ ஆபரணங்களின் இறக்குமதிகள் அல்லது ஏற்றுமதிகள் அத்துடன், ஏலங்கள்/ பொருட்காட்சிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இரத்தினக்கற்கள்/ ஆபரணங்களின் விற்பனை அல்லது கொள்வனவு என்பனவற்றை உள்ளடக்குகிறது.

37. வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் பொதுவாக குறைந்தபட்சத் தேவைப்பாடாகவே மேற்கொள்ளப்படுகிறது. எனினும், பணம் தூ யதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பில் வாடிக்கையாளர்கள் உயர்ந்த இடர்நேர்வினைக் கொண்டவர்களாக அடையாளம் காணப்படுகின்றதொரு சூழ்நிலையில், நிறுவனம் அதிகளவிலான உரிய விழிப்புக் கவன வழிமுறைகளைப் பிரயோகித்தல் வேண்டும்.

**உண்மைச் சொத்துக் கொடுக்கல்வாங்கல்களிலுள்ள முகவர்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகள்**

38. உண்மைச் சொத்து முகவர்கள் உண்மைச் சொத்து சொத்துடமைகளை வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்களுடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் பொழுது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

39. சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக முன்னணி ஆளொருவரைப் பயன்படுத்துவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதனால் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளும் பொழுது உண்மைச் சொத்து முகவர்கள் வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர்கள் அடையாளம் பற்றி அதேபோன்று இறுதி பயன்பெறும் சொந்தக்காரர் பற்றி மேலதிக எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

40. ஆரம்ப வைப்பின் போது அல்லது சொத்துக்களுக்கான முற்பணங்களைச் செலுத்தும் போது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் பின்பற்றப்படுதல் வேண்டும்.

41. ஒரே சொத்துக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடவுள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பயன்பெறுநர்களுக்கும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும். உ-ம்: விற்பனை உடன்படிக்கையின் மாற்றல் முற்பணம்/ வைப்புக்களைச் செய்த பின்னர் அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவுகளைச் செய்த பின்னர் அல்லது அச்சொத்தினை இன்னொரு வாடிக்கையாளருக்கு அல்லது வாங்குநரொருவருக்கு விற்றல் இடம்பெறுமாயின் சொத்தின் புதிய வாடிக்கையாளர்/ வாங்குநர் போன்று தோன்றுகின்ற புதிய

வாடிக்கையாளர்/வாடிக்கையாளர்கள் அத்துடன் பயன்பெறும் சொந்தக்காரர்/ சொந்தக்காரர்களுக்காக வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளல் வேண்டுமென்பதுடன் இது உறுதி பதிவு செய்யப்படுவதன் மூலம் சொத்து மாற்றல்கள் இறுதிப்படுத்தப்படும் வரை தொடரப்படுதலும் வேண்டும்.

**உயர் இடர்நேர்வு வாடிக்கையாளர்கள்/ கொடுக்கல்வாங்கல்கள்**

42. வாடிக்கையாளர்கள்/ கொடுக்கல்வாங்கல்களின் வகை/ சாதனங்கள் என்பன உயர்ந்த பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை நிறுவனத்திற்கு ஏற்படுத்தலாம். அத்தகையதொரு சூழ்நிலையில் நிறுவனமானது மேலதிக வழிமுறைகளை எடுக்கும் தேவை காணப்படுகிறது. உதாரணமாக:

(அ) நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினைக் கொண்டிராத அல்லது அதன் விதந்துரைப்புக்களுடன் போதுமானளவிற்கு இணங்கியொழுகாத நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ள எவரேனும் வாடிக்கையாளர் உயர்ந்த இடர்நேர்வு மற்றும் ஒத்துழைப்பில்லாத நாடுகளைப் பொறுத்தவரை தயவுசெய்து நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் வெப்தளமான (http://fatf-gafi.org) இனைப் பார்க்கவும்;

(ஆ) தேசிய அதிகாரிகளினால் போதைப்பொருள் கடத்தல், ஆட்களைக் கடத்தல், பணம் தூயதாக்கல், பயங்கரவாதம் அல்லது சட்டத்திற்கு மாறான நிதியளித்தல்கள் போன்ற நாடுகள் எனக் கரிசனை கொண்டுள்ள நாடொன்றுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ள எவரேனும் வாடிக்கையாளர்;

(இ) புகழ்மிக்க நிறுவனமொன்றினால் உயர்மட்ட பொது ஊழல்களைக் கொண்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டிருக்கும் ஏதேனும் நாடு;

(ஈ) சிக்கலான அல்லது வழமைக்கு மாறான கொடுக்கல்வாங்கல்களை (ஒன்றில் முடிவடைந்தாலும் சரி இல்லாவிடினும் சரி), வாடிக்கையாளர் தோற்றப்பாட்டிற்கான கொடுக்கல்வாங்கல்களின் வழமைக்கு மாறான தன்மை, சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளுடன் இணைந்த மாதிரிகளுடன் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிப்படையான சட்டபூர்வமான நோக்கங்களைக் கொண்டிராத கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற எவரேனும் வாடிக்கையாளர்கள்;

(உ) அரசியல் ரீதியாக முகங்கொடுக்கின்றவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்களை உள்ளடக்கும் விதத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் ரீதியாக முகம் கொடுப்பவர்கள்;

(ஊ) வியாபாரத்திற்கு உயர் இடர்நேர்வினை ஏற்படுத்துமென நிறுவனம் அடையாளம் கண்டுள்ள சாதனங்களின் வகை எவரேனும் வாடிக்கையாளர் அல்லது கொடுக்கல்வாங்கல்கள்.

**மூன்றாந்தரப்பினர்களை அடையாளம் காணுதல்**

43. வாடிக்கையாளர், நன்மைபெறுநராகவுள்ள மூன்றாந்தரப்பினரின் முகவராகவும் கொடுக்கல்வாங்கல்களுக்கான நிதியினை வழங்குபவராகவும் இருக்குமிடத்து வாடிக்கையாளர் மூன்றாந்தரப்பினரின் சார்பில் செயற்படுகின்றாரா என்பதனைத் தீர்மானிப்பதற்கு நிறுவனம் நியாயமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். மூன்றாந்தரப்பினர் ஈடுபாடு கொண்டிருக்கின்ற விடயங்களைப் பொறுத்தவரை, நிறுவனம் வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன நோக்கங்களுக்காக, மூன்றாந்தரப்பினரின் அடையாளம் மற்றும் வாடிக்கையாளருடன் உள்ள அவர்களது உறவுமுறைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## பகுதி IV

### அறிக்கையிடல்

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற கடமை**

44. சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் மீதான அறிக்கையினைச் சமர்ப்பிப்பது தொடர்பான பொறுப்பினை மேற்கொள்கையில், நிறுவனமொன்று பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் கற்களின் வணிகர்களுக்கான பின்னிணைப்பு IIIஇல் குறிப்பிடப்பட்டவாறான உண்மைச் சொத்திலுள்ள வணிகர்களுக்கான பின்னிணைப்பு II சிவப்புத் துண்டுக் கவனஈர்ப்பு பட்டியலைப் பார்த்தல் வேண்டும். சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் நிறைவு பெற்றுவிட்டனவா அல்லது எத்தனிக்கப்பட்டுள்ளனவா என்பதனைச் சிறந்த முறையில் அறிந்து கொள்வதற்கு கைத்தொழில் ரீதியாகக் குறித்துரைக்கப்பட்ட குறிகாட்டிகளும் நிறுவனத்திற்கு உதவக்கூடும்.

45. ஒவ்வொரு நிறுவனமும் எத்தனிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும். வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள எத்தனித்து, ஏதேனுமொரு காரணத்தினால் அது நிறைவு பெறாமல் போயிருக்குமாயின், நிறுவனம் எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் சந்தேகத்திற்குரியது எனத் தீர்மானிக்குமாயின் அதனை அந்நிறுவனம் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும்.

46. நிறுவனமானது 2017 ஏப்பிறல் 21ஆம் திகதியிடப்பட்ட இல. 2015/56 கொண்ட வர்த்தமானி (அதிவிசேடம்) யில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் (படிவம்) ஒழுங்குவிதிகளில் விரித்துரைக்கப்பட்ட படிவத்தினைப் பயன்படுத்தி சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும் (அட்டவணை V).

47. இணங்குவிப்பு அலுவலர் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைப் பதிவேடொன்றினைப் பேணுதல் வேண்டும்.

**காசு மற்றும் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல்**

48. ஒவ்வொரு நிறுவனமும் 2008 யூன் 25ஆம் திகதியிடப்பட்ட இல.1555/9 கொண்ட வர்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

## பகுதி V

### அறிக்கைகளைப் பேணுதல்

49. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தினைக் குறித்துரைக்கப்பட்டவாறு நிறுவனம் பதிவேடுகளைப் பேணுவது தொடர்பில்

பொருத்தமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதுடன் அதற்கான முறைமையொன்றினையும் பேணுதல் வேண்டும். இது தேவைப்படும் பொழுது அல்லது நிதியியல் உளவறிதல் பிரிவினால் கேட்டுக் கொள்ளப்படும் பொழுது தரவுகளை இலகுவாகவும் விரைவாகவும் சீர்ப்படுத்துவற்கும் அனுமதிக்கும்.

## பகுதி VI

### இணங்குவிக்காமைக்கான தண்டங்கள்

50. சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுவது தண்டனைகளுக்கு வழிவகுக்கும். மேலும் நிறுவனத்திற்கெதிரான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் ஒழுக்கவியல் வழிமுறைகள் உட்பட மற்றைய நடவடிக்கைகளுக்கும் இட்டுச்செல்லும்.

**2018 ஏப்பிறல் 18ஆம் நாளன்று விடுக்கப்பட்டது**

## பின்னிணைப்பு I

**நிறுவனத்தின் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கான பரிசோதனைப் பட்டியலுக்கான உதாரணமொன்று**

பின்வரும் பரிசோதனைப் பட்டியல் உங்கள் வாடிக்கையாளர்கள், சாதனங்கள், பணிகள், விநியோக வழிப்படுத்தல்கள் மற்றும் புவியியல் அமைவிடங்கள் என்பன எவ்வாறு மதிப்பிட வேண்டுமென்பதற்கான உதாரணத்தினைத் தருவதனை நோக்கமாகக் கொண்டதாகும். இது ஒரு ஆரம்பப் புள்ளி மட்டுமேயாகும் என்பதுடன் உங்கள் நிறுவனம் இப்பட்டியல் உங்கள் வியாபாரத்திற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளுதல் வேண்டும். நீங்கள் ஏற்கனவே இன்னொரு இடர்நேர்வு மதிப்பீட்டுக் கருவியினைப் பயன்படுத்தியிருப்பின் நீங்கள் அதனைத் தொடர்ந்தும் பயன்படுத்தலாம் அல்லது தேவைக்கேற்ப அதனை மெருகூட்டிக் கொள்ளலாம்.

கீழேயுள்ள எந்தவொரு கேள்விக்கும் உங்கள் விடை 'ஆம்' எனில் அது பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலில் உயர்ந்த இடர்நேர்வினைக் கொண்டுள்ளது என நீங்கள் கருதுதல் வேண்டும். பொருத்தமான விதத்தில் இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

| | ஆம் | இல்லை | தணிப்பு வழிமுறைகள் |
|---|---|---|---|
| **வாடிக்கையாளர் இடர்நேர்வு** | | | |
| பின்வருவன தொடர்பான வாடிக்கையாளர்கள் உங்களிடம் உள்ளனரா: | | | |
| காசுச் செறிவுடைய வியாபாரம் தொழிற்படுத்தப்படுகின்றதா? | | | |
| இலங்கைக்கு வெளியே வதிபவரா? | | | |
| குறிப்பிட்ட வாடிக்கையாளரின் அடையாளம் உங்களுக்குத் தெரியப்படுத்தப்படாதவிடத்து, அவ்வாடிக்கையாளர் வசமுள்ள கணக்குகளின் தொழில்சார்நிபுணத்துவம் போன்ற இடையீட்டாளர்களினுடையதா அல்லது "முதன்மை அலுவலர்களினுடையதா"? | | | |
| அறியப்பட்ட உயர் குற்றவீதத்தினைக் கொண்ட பிரதேசத்திலா அமைந்துள்ளது? | | | |
| அவர்களது வியாபாரத்தின் தன்மை உண்மையான சொந்தக்காரர்களை அல்லது கட்டுப்பாட்டாளர்களை அடையாளம் காண்பதனை இடர்ப்பாட்டிற்குள்ளாக்குகிறதா? | | | |
| அரசியல் ரீதியாக முகம் கொடுக்கின்ற ஆட்களா? | | | |
| முகவரி உள்ளதா அல்லது நியாயப்படுத்த முடியாத காரணங்களுக்காக அவர் அநேக முகவரிகளைக் கொண்டுள்ளனரா? | | | |
| குற்றவியல் பதிவேடுகள் இருக்கின்றதா? | | | |
| திட்டமிடப்பட்ட குற்றங்களுடன் தொடர்புகள் உள்ளனவா? | | | |
| **சாதனம்/ பணிகள் இடர்நேர்வு** | | | |
| பின்வரும் சாதனங்கள் அல்லது பணிகளை நீங்கள் வழங்குகிறீர்களா? | | | |
| வாடிக்கையாளர்களை முழுமையாக அடையாளம் காண்பதற்கு இது இடர்ப்பாட்டினை ஏற்படுத்துகின்றதா? | | | |
| கம்பனியை உருவாக்கிக் கொள்வதில் உதவி உள்ளதா? | | | |
| | **ஆம்** | **இல்லை** | **கிடைக்கவில்லை** |
| நீங்கள்: | | | |
| வாடிக்கையாளரின் பயன்பெறும் சொந்தக்காரரை மறைக்கின்ற நோக்கத்திற்காக ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்துள்ளீரா? | | | |
| புலனாகக்கூடிய சட்ட ரீதியான, பொருளாதார ரீதியான அல்லது ஏனைய நியாயப்படுத்தக்கூடிய காரணங்களில்லாமல் வழமைக்கான குறுங்காலமொன்றில் வாடிக்கையாளர்களிடையே உண்மைச் சொத்து பரிமாற்றல் பணிகளை ஆற்றுதல்? | | | |

| | | | |
|---|---|---|---|
| செல் கம்பனி, பெயரளவு சொத்துரிமையிலுள்ள கம்பனியினை நிறுவுதல், தொழிற்படுத்தல் அல்லது முகாமைப்படுத்தலுடன் இணைக்கப்பட்ட பணிகளை வழங்குதல் | | | |
| **விநியோக வழிப்படுத்தல்/ வியாபார உறவுகள் இடர்நேர்வு** | | | |
| நீங்கள் பின்வரும் விதத்தில்: | | | |
| நேருக்குநேர் அல்லாத கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்பவரா? | | | |
| நீங்கள் பின்வரும் வியாபார உறவுகளைக் கொண்டிருக்கிறீர்களா? | | | |
| சிக்கலான நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்டிருக்கின்றீர்களா? | | | |
| மூன்றாந்தரப்பினருக்கான/ அவர்களிடமிருந்தான கொடுப்பனவுகளுடனும் எல்லை கடந்த கொடுப்பனவுகளுடனும் தொடர்புபட்டிருக்கின்றீர்களா? | | | |
| உயர் இடர்நேர்வு உண்மைச் சொத்துக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்டிருக்கின்றீர்களா? | | | |
| காசுக் கொடுப்பனவுடன் தொடர்புபட்டிருக்கின்றீர்களா? | | | |
| **புவியியல் ரீதியான இடர்நேர்வு** | | | |
| நீங்கள் அல்லது உங்கள் வாடிக்கையாளர்கள் பின்வரும் நாடுகளில் தொழிற்பாடுகளை அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனரா? | | | |
| ஐக்கிய நாடுகளினால் விதிக்கப்பட்ட தடைகள் தடை விதிப்புக்கள் அல்லது அவற்றையொத்த ஏதேனும் வழிமுறைகளுக்குட்பட்ட ஏதேனும் நாடுகள்? | | | |
| நிதியியல் இரகசியம் சொர்க்கம் அல்லது நியாயாதிக்கம் கொண்டவையென அடையாளம் காணப்பட்டுள்ளனவா? | | | |
| பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான போருக்கு ஒத்துழைக்காத அல்லது நிதியியல் நடவடிக்கை செயணிக்குழுவின் கூற்றிற்குட்பட்டவையென அடையாளம் காணப்பட்ட ஏதேனும் நாடுகள்? | | | |
| பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பொருத்தமாகவும் போதுமானதாகவும் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி உதவிகளை வழங்குகின்றவையென நம்பகமான மூலங்களினால் அடையாளம் காணப்பட்ட ஏதேனும் நாடு? | | | |
| குறிப்பிடத்தக்களவிற்கு ஊழலை அல்லது மற்றைய குற்றவியல் நடவடிக்கையினைக் கொண்டுள்ளவையென அறியப்பட்ட ஏதேனும் நாடுகள்? | | | |

**பின்னிணைப்பு II**

**இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியளித்தலுக்கெதிரான சந்கேக் குறிகாட்டிகள் (சிவப்புத் துண்டுகள்)**

**வாடிக்கையாளர் மற்றும் வாடிக்கையாளர் நடத்தை:**

i. வாடிக்கையாளரின் வழமையான தோற்றப்பாட்டுடன் ஒவ்வாத விதத்தில் நிறைவேற்றப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்/ கொடுக்கல்வாங்கல்கள்.

ii. பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள் அல்லது ஆபரண உற்பத்திகளை அடிக்கடி வாங்குகின்ற/ விற்கின்ற வாடிக்கையாளரொருவர் அவரது வழமையான நிதியியல் அந்தஸ்து/ தோற்றப்பாட்டிற்கு ஒவ்வாத விதத்தில் மேற்கொள்கின்ற கொடுக்கல்வாங்கல்/ கொடுக்கல்வாங்கல்கள்.

iii. பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள் அல்லது ஆபரண உற்பத்திகளின் பெறுமதி, அளவு, தரம் அத்துடன்/ அல்லது நிறம் பற்றி சரியான கரிசனைகளுடன் காணப்படாத வாடிக்கையாளர்கள்.

iv. வாடிக்கையாளர் பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள் அல்லது ஆபரணங்களின் உற்பத்திகளின் பெறுமதிக்கான கொடுப்பனவுகளை வழமைக்கு மாறான கொடுப்பனவு முறைகளில் மேற்கொள்ளும் தன்மை.

v. எந்தவிதமான பொருளாதார நியாயப்படுத்தலுமின்றி வெளிநாட்டு நாணயங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் பெரியளவில் அல்லது அடிக்கடி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுதல்.

vi. வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்திற்கான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான ஆரம்ப மட்டத்திற்கும் குறைவான அளவில் குறிப்பாக, குறுங்காலப் பகுதியில் அடிக்கடி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுதல் எனினும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் மொத்தத் தொகை கணிசமாக இருத்தல்.

vii. எந்தவிதமான சட்ட ரீதியான வியாபார நோக்கமுமில்லாமல் நிதியின் சொந்தக்காரர்களாக இல்லாத மூன்றாந்தரப்பினரிடமிருந்து பெறுமதிமிக்கக் கற்கள்/ உலோகங்கள் அல்லது ஆபரண உற்பத்தியைக் கொள்வனவு செய்தமைக்காகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள்.

viii. உரிய விழிப்புக் கவனம் மற்றும் பதிவேடுகளைப் பேணும் ஆவணங்களுக்காக போலியான, மோசடியான அல்லது பிழையான அடையாள ஆவணங்களைப் பயன்படுத்துவதாகச் சந்தேகப்படுகின்ற வாடிக்கையாளர்.

ix. வாடிக்கையாளர் வழமைக்கு மாறான கரிசனைகளைக் கொண்டிருத்தல்; அத்துடன்/ அல்லது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகள் மற்றும் உள்ளக இணங்குவிப்புக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் பற்றி விசாரித்தல்.

x. கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அதிகளவு இரகசியத்தன்மையினைப் பேணுவதற்கு வாடிக்கையாளர் முயற்சிப்பது; உதாரணமாக வழமையான வியாபார பதிவேடுகளைப் பேண வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுதல்.

xi. பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள் அல்லது ஆபரண உற்பத்திகளை வாங்குவதற்கான பண மூலங்கள் தொடர்பில் வாடிக்கையாளர் கேள்விக்கு விடையளிப்பதனை தவிர்த்துக் கொள்ளுதல்.

xii. குற்றவியல்/ பயங்கரவாதப் பின்னணி பற்றி வாடிக்கையாளர் அறிந்திருத்தல்

xiii. பணம் து ாயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கையுடன் இணைந்துள்ள நாடு அல்லது நிறுவனமொன்றுடன் தொடர்புபட்ட விதத்தில் வாடிக்கையாளர் காணப்படுதல்.

**வழங்குநர் மற்றும் வழங்குநரின் நடத்தை:**

i. பெறுமதிமிக்க இரத்தினக்கல்/ உலோகத்தின் பெறுமதியிலும் பார்க்கக் குறைந்த/ கூடிய பொருட்பட்டியலைக் கொண்ட வழங்குநர்.

ii. பெறுமதிமிக்க இரத்தினக்கல்/ உலோகங்களுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கு வழங்குநர்கள் மூன்றாந்தரப்பினரைப் பயன்படுத்துதல். உ-ம்: எந்தவொரு சட்ட ரீதியான வியாபார நோக்கமுமின்றி, வழங்குநருடன் தொடர்புபடாத மூன்றாந்தரப்பினருக்கு நிதியினைக் கொடுப்பனவு செய்தல்.

iii. எந்தவொரு சட்ட ரீதியான வியாபார நோக்கமுமின்றி, வழங்குநருடன் தொடர்புபடாத மூன்றாந்தரப்பினிடமிருந்து பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள்/ ஆபரண உற்பத்திகள் விநியோகிக்கப்படுதல்.

iv. உரிய விழிப்புக் கவனம் மற்றும் பதிவேடுகளைப் பேணும் நோக்கத்திற்காக வழங்குநர்கள் தகவல்களை வழங்க முடியாமல் இருத்தல்.

v. உரிய விழிப்புக் கவனம் மற்றும் பதிவேடுகளைப் பேணும் நோக்கங்களுக்காக போலியான, மோசடியான அல்லது பிழையான அடையாளப்படுத்தல் ஆவணங்களைப் பயன்படுத்துவதாக வழங்குநர்கள் சந்தேகிக்கப்படுதல்.

vi. பெறுமதிமிக்க கற்கள்/ உலோகங்கள்/ ஆபரண உற்பத்திகள் என்பனவற்றின் மூலம் போலியானதாகத் தோன்றுகின்ற தன்மை.

vii. வழங்குநர்கள், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேவைப்பாடுகள் பற்றி வழமைகளுக்கும் மாறாக கரிசனைப்படுத்தல்.

viii. வழங்குநர்கள், கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உயர்ந்தளவு இரகசியத்தன்மையினைப் பேணுவதற்கு முயற்சித்தல் மற்றும் வழமையான வியாபாரப் பதிவேடுகளைப் பேண வேண்டாமெனக் கோருதல்.

ix. வழங்குநர்கள், பயன்பெறும் சொந்தக்காரரை அல்லது கட்டுப்படுத்தல் அக்கறைகளை வெளிப்படுத்துவதற்கு விரும்பாமல் இருத்தல்.

ஒ. இரத்தினக்கற்களுக்காக:

(அ) பட்டைத் தீட்டப்படாத வைரங்கள் செல்லுபடியாகக்கூடிய கிம்பேர்ளி செயன்முறை சான்றிதழுக்கோ அல்லது சான்றுபடுத்தலுக்கான பரந்தளவிற்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களுக்குச் சமமான திட்டங்களுடனோ இணைந்திருக்கவில்லை.

(ஆ) உ-ம்: கிம்பேர்ளி செயன்முறையினைக் கொண்ட இரத்தினக்கற்களின் கப்பற்படுத்தலுக்கு கிம்பேர்ளி செயன்முறைச் சான்றதழ் இணைக்கப்படாமை.

(இ) கிம்பேர்ளி சான்றிதழ் போலியானதாக இருத்தல்/ தோன்றுதல்.

xi. வழங்குநர், பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கைகளுடன் அல்லது பயங்கரவாதி எனக் குறித்துரைக்கப்பட்ட ஆளுடன் தொடர்புபட்ட நாடு அல்லது நிறுவனத்துடன் தொடர்பான ஆளாகக் காணப்படுதல்.

xii. பொருளாதார காரணங்களெதும் காணப்படாமல் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கைகளுடன் இணைந்த நாட்டினூடாக வழங்குநர்கள் பெறுமதிமிக்க கற்களை/ உலோகங்களைக் கொண்டு செல்லல்.

**பின்னிணைப்பு III**

**பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் பெறுமதிமிக்க மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகர்களூடான பணம் தூயதாக்கல் மற்றும் பயங்வரவாதத்திற்கு நிதியளித்தல் உதாரணங்களாகவுள்ள விடய ஆய்வுகள்:**

**விடய ஆய்வு 1 - போதைப்பொருள் கடத்தல் பெறுகைகளைச் சட்ட ரீதியாக்குவதற்கான தங்க வர்த்தகப்படுத்தல்**

நாடு A இன் பொலிஸ், போதைப்பொருள் கடத்தலினூடாகப் பெறப்பட்ட சட்டத்திற்கு மாறான பெறுகைகள் போதைப்பொருள் வணிகரினால் “ஆ ஜுவல்லர்ஸ்” இடமிருந்து தங்கத்தினைக் கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்பட்டிருப்பது பற்றி விசாரணைகளை மேற்கொண்டது. இத்தங்க கொள்வனவுகள் குற்றவியல் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டதுடன் போதைப்பொருள் விற்பனையிலிருந்து ஈட்டப்பட்ட சட்டத்திற்கு மாறான பெறுகைகளைப் பயன்படுத்தி பல்வேறுபட்ட இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களிடமிருந்து தங்கத்தினை வாங்கிக் கொண்டிருக்கிறது. அதன் பின்னர் பெறப்பட்ட இத்தங்கம் மற்றைய பல நகைக் கடைகளுக்கும் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

இத்தங்க விற்பனைகளின் பெறுகைகள் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புகளைக் கொண்டுள்ள மூன்றாந்தரப்பு நாடான “நாடு D” இற்கு மாற்றப்பட்டிருக்கின்றன. இந்நிதிகளை மாற்றல் செய்வதன் மூலம் போதைப்பொருள் வணிகர் பணத்தினை வைப்பிலிடல், அடுக்காக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தலில் பணம் தூயதாக்கல் சுழற்சி வட்டத்தினை பூரணப்படுத்தியதன் மூலம் அவரது சட்டத்திற்கு மாறான பெறுகைகளை தூயதாக்கிக் கொண்டிருக்கின்றார்.

**விடய ஆய்வு 2 - பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியிடுவதற்காக இன்னொரு நியாயாதிக்கத்திற்கு இரத்தினக்கற்களை விற்பனை செய்தல்**

நாடு D இல் தொழிற்படுகின்ற “கம்பனி A” உள்ளூர் சந்தையில் நிலவும் விலைகளுக்கும் மேலான விலையில் பெறுமதிமிக்க இரத்தினக்கற்களைக் கொள்வனவு செய்வதற்காக “நாடு M” இற்கு பிரதிநிதியினை அடிக்கடி அனுப்பி வந்திருக்கின்றமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக, பெருமளவிலான நிதிய மாற்றல்கள் நாடு D இலிருந்து நாடு M இற்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இக்கொடுக்கல்வாங்கலின் நோக்கம் இரத்தினக்கற்களின் கொள்வனவு என எடுத்துக்காட்டப்பட்டது. நிதிய மாற்றல்களுக்குப் பின்னர் உடனடியாக ஒன்றில் காசாகவோ அல்லது காசோலை மூலமோ “நாடு M” இல் எடுப்பனவு செய்யப்படுகிறது. பின்னர் இது “நாடு M” இலிருந்து நிதியினை எடுப்பனவு செய்த ஆட்கள் நன்கறியப்பட்ட பயங்கரவாதக் குழுவுடன் தொடர்புபட்டிருந்தமையும் நிதியம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமையும் எடுத்துக்காட்டப்பட்டது.

**பின்னிணைப்பு IV**

**உண்மைச் சொத்து முகவர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் சந்தேகக் குறிகாட்டிகள் (சிவப்புத் துண்டு) (தொடர்பான உருவாக்கங்களிலிருந்து பிரதி எடுக்கப்பட்ட சிவப்புத் துண்டுகள்)**

**விடய ஆய்வு 1 - போதைப்பொருள் கடத்தல் பெறுகைகளைச் சட்ட ரீதியாக்குவதற்கான தங்க வர்த்தகப்படுத்தல்**

(அ) துணையாளர் ஒருவர் அல்லது உறவினர் (வாழ்க்கைத் துணைவர் தவிர்ந்த ஒருவர்) அல்லது பராயமடையாத ஒருவரின் பெயரில் அல்லது இயலாற்றலற்ற ஒருவரின் பெயரில் அல்லது பொருளாதார ரீதியில் அத்தகைய கொள்வனவுகளை மேற்கொள்ள இயலாற்றலற்ற வேறு எவரேனும் ஆட்களின் பெயர் போன்ற நியமனத்தரொருவரின் பெயரில் வாடிக்கையாளர் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்/ வாங்குதல்.

(ஆ) வாடிக்கையாளர்கள் சொத்துக்களுடன் தம்மைத் தொடர்புபடுத்துகின்ற எந்தவொரு ஆவணத்திலும் தமது பெயரைப் பதிவதற்கு விரும்பாமை அல்லது கொள்வனவு செய்வதற்கு விரும்புகின்ற வழங்கல் கடிதத்தில் வேறுபட்ட பெயர்களைச் சமர்ப்பித்தல் அல்லது ஆவணங்களையும் வைப்புப் பற்றுச்சீட்டுக்களையும் மூடிவிடுவது.

(இ) பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தினை மறைப்பதற்கு வாடிக்கையாளர் முயல்தல் அல்லது பயன்பெறுநரின் அடையாளத்தினை மறைக்கும் விதத்தில் கொடுக்கல்வாங்கல்களை உருவாக்கிக் கொள்ளுதல்.

(ஈ) கொள்வனவாளர் செல் கம்பனியாக இருப்பதுடன் கம்பனியின் பிரதிநிதி பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தினை வெளிப்படுத்த விரும்பாமலிருத்தல்.

(உ) வாடிக்கையாளரினால் வழங்கப்பட்ட முகவரி அறியப்படாதிருத்தல், பொய்யானது என நம்பப்படுவது அல்லது தொடர்பு கொள்வதற்கான முகவரி போதுமானதாக இல்லாமலிப்பது.

(ஊ) கொள்வனவுத் தரப்பினரின் பெயரின் இறுதிக் குறிப்பு பதிலீடு பற்றி வாடிக்கையாளர் திருப்திகரமான முறையில் விளக்காமை.

(எ) வாடிக்கையாளர் கணிசமானளவு ஆரம்பத் தொகையினைப் பணமாக செலுத்திய பின் மீதியை வழமைக்கு மாறான மூலத்தின் மூலம் அல்லது கரைகடந்த வங்கி மூலம் செலுத்துதல்.

(ஏ) வாடிக்கையாளர் சொத்தினைப் பரிசோதிக்காமல் கொள்வனவு செய்தல். வாடிக்கையாளர் சொத்தொன்றை வாங்க வேண்டுமென்ற தேவையைக் கொண்டிருப்பதனையும் அதன் அமைவிடம் பற்றியோ அல்லது சொத்து எப்படிப்பட்டதென்றோ கவலைப்படாமையினை இது உணர்த்துவதாகவுள்ளது.

(ஐ) வாடிக்கையாளர் குறுகிய காலத்தில் பல சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் ஒவ்வொரு சொத்தினதும் அமைவிடம் நிலைமைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் திருத்தல் செலவுகள் போன்றன பற்றி அதிகளவிற்கு கவலைப்படாமை.

(ஒ) சொத்து முகாமைத்துவப் பணிகள் வழங்கப்பட்டுள்ள சொத்தொன்றின் மீது, வாடிக்கையாளர் பெருமளவு திருத்தியமைத்தல் அல்லது வீடுகளை மேம்படுத்தும் பொருட்பட்டியல் தொடர்பில் காசாகப் பெருமளவு தொகை செலுத்தப்பட்டுள்ளமையினை வாடிக்கையாளர் அறிந்திருத்தல்.

(ஓ) வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறியப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் வியாபார நடவடிக்கையில் பெருமளவினதாகக் காணப்படாமை.

(ஔ) சொத்தின் உண்மையான அல்லது சந்தைப் பெறுமதியிலிருந்தும் கொடுக்கல்வாங்கலின் பெறுமதியினைக் குறிப்பிடத்தக்களவிற்கு வேறுபட்ட விதத்தில் (மிக உயர்வாக அல்லது மிகக் குறைவாக) பதிதல்.

(க) தொடர்ச்சியான கொடுக்கல்வாங்கல்களாக சொத்து விற்பனை செய்யப்படுதல். ஒவ்வொரு நேரத்திலும் இது அதேதரப்பினருக்கிடையேயும் உயர்ந்த விலையிலும் அமைந்திருத்தல்.

(ங) சொத்தின் பெறுமதியிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக வாங்குநர் கடன் பெற்றிருத்தல்.

(ச) வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களைச் சடுதியாக இரத்துச் செய்தல்/ நீக்கிவிட்டு மீளளிப்பினை அவரின்/ அவளின் அல்லது மூன்றாந்தரப்பினரின் பெயரில் வழங்குமாறு கோருதல்.

(ஞ) குறிப்பாக, அத்தகைய கொள்வனவுகள் பெரியளவில் அல்லது வாடிக்கையாளரின் அறியப்பட்ட தோற்றப்பாட்டுடன் பொருந்தாததாக இருக்குமிடத்து வாடிக்கையாளர் கொள்வனவு முழுவதையும் காசாகச் செலுத்துதல் (இலத்திரனியல் நிதிய மாற்றலை உள்ளடக்கும் விதத்தில்) அத்துடன் குறிப்பாக, கொள்வனவு நிதி கரைகடந்த நியாயாதிக்கத்திலிருந்து மாற்றல் செய்யப்படும் பொழுது.

முக்கிய குறிப்பு: மேற்குறிப்பிட்ட பட்டியல் ஒரு குறிகாட்டியேயன்றி முழுமையான அல்லது நிறைவானதொன்றல்ல.

**பின்னிணைப்பு V**

**விடய ஆய்வு 1 - குற்றவியல் பெறுகைகளின் மூலம் உண்மைச் சொத்து முதலீடுகள்**

பணம் தூயதாக்கல் செயன்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் பணம் தூயதாக்குவோரினால் உண்மைச் சொத்துக் கொடுக்கல்வாங்கல்களைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

பணம் தூயதாக்கல் என்பது வைப்பிலிடல், அடுக்குப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகிய மூன்று கட்டங்களைக் கொண்டதாகும். பின்வரும் விடய ஆய்வு குற்ற நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட பெறுகைகளை உண்மைச் சொத்து நடவடிக்கைகளில் வைப்புச் செய்வதன் மூலம் பணம் தூயதாக்கப்படுவதுடன் தொடர்பானதொன்றாகும். X என அழைக்கப்படும் தனிப்பட்ட ஒருவர் நிறுவனம் A மற்றும் நிறுவனம் B என அழைக்கப்படும் இரண்டு நிறுவனங்களை நாடு C மற்றும் நாடு D என்ற இரு வேறுபட்ட நாடுகளில் உருவாக்குகிறார். இந்நிறுவனங்களில் தனது ஈடுபாட்டினை மறைத்துக் கொள்வதே X இன் உள்நோக்கமாகும். ஆகவே அவர் தனது சொத்துரிமையினை மறைத்துக் கொள்வதற்காக சட்ட ரீதியான பிரதிநிதிகளாகப் பணியாற்றுவதற்காக முன்னணி ஆளாகவும் நம்பிக்கைப் பொறுப்பினராகவும் வேறு ஆட்களைப் பயன்படுத்திக் கொள்கிறார். இந்நிறுவனங்களிலொன்று உண்மைச் சொத்துத் தொழிற்பாடுகளில் காணப்பட்டதுடன் நிறுவனத்தினை வழிநடத்தும் ஆளாக ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இரண்டு நாடுகளுக்கெதிரான நாணயத் தளம்பல்களிலிருந்து பாதுகாப்பினைப் பெறும் பொருட்டு பாதுகாப்பு வசதியை ஒழுங்கு செய்தமையின் மூலம் (இரண்டு புறமும் உத்தரவாதப்படுத்தப்பட்ட கடன்) சட்டத்திற்கு மாறான முறையில் ஈட்டப்பட்ட போதைப்பொருள் பெறுபேறுகளை இவ்வுண்மைச் சொத்து முதலீடுகளில் தொழிற்படுத்துவதற்குப் பயன்படுத்திக் கொண்டார். அத்துடன் கடன் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில், இரண்டு வங்கிகளுக்குமிடையில் வங்கி உத்தரவாதங்களையும் ஒழுங்கு செய்திருந்தார். கடன் வசதிகளுக்கான பிணையுறுதி ஒன்றாக அவரது கம்பனிகளிலொன்றின் வைப்பு வாக்குறுதியினை அடிப்படையாகக் கொண்டு வங்கியினால் வங்கி உத்தரவாதமொன்று வழங்கப்பட்டது. உத்தரவாதத்திற்காக வைப்புச் செய்யப்பட்ட நிதியம் X இனால் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்டது என்பதனை விசாரணைகள் எடுத்துக்காட்டின.

இவ்வாய்வில் அடையாளம் காணப்பட்ட குறிகாட்டிகளும் முறைகளும்:

- கடன்பாட்டாளரும் பிணையுறுதி வழங்கியவரும் தகவல்களை வழங்க விரும்பாமையானது இவ்வாய்வில் முக்கிய சந்தேகத்திற்குரியதாக விளங்கியது.
- கடன் ஒழுங்குகள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்களின் சிக்கலான தன்மைகள் குற்றவியல் பெறுகைகளின் அடுக்குகளை மறைப்பதுடன் தொடர்பானவைகளாகக் காணப்பட்டன.
- நிறுவனத்தின் உண்மைச் சொத்துரிமையினை மறைப்பதற்காக வேறுபட்ட சிக்கலான ஒழுங்குகள்.
- கடன்பாட்டாளரினால் எதிர்பார்க்கப்படாத விதத்தில் கடன் உரிய தவணையில் செலுத்தப்படாதிருப்பது நிதியியல் வசதியின் உண்மைத் தேவைப்பாடுகளின் சந்தேகத்தினை அதிகரிப்பதாக இருந்தது.

**விடய ஆய்வு 2 - நிதியியல் நிறுவனமொன்றிற்கான நன்மைகளை உண்மைச் சொத்து முகவர் தவறாகப் பயன்படுத்துதல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுடன் தொடர்பிருப்பதற்கான சாத்தியம்**

வெளிநாட்டில் உருவாக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பொன்றிற்கான நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர் ஓ நாட்டிலுள்ள சொத்தொன்றினை வாங்குவதற்காக உண்மைச் சொத்து முகவரொருவரை அணுகினார். உண்மைச் சொத்து முகவர் கடனொன்றினை வழங்க முடியுமா என்பது பற்றி கேட்பதற்காக வங்கி ஆ இல் விசாரணைகளை மேற்கொண்டார். நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் நிதியல்லா தொழில்சார்நிபுணத்துவப் பணிகளின் பயன்பெறு சொந்தக்காரர்கள் அல்லது உண்மைச் சொந்தக்காரர்களின் அடையாளத்தினை மறைப்பதற்காக வேண்டுமென்றே செய்யப்பட்டதாக இருந்தமையினால் வங்கி விண்ணப்பத்தினை நிராகரித்துவிட்டது. இச்சந்தேகத்தினை அடிப்படையாகக் கொண்டு வங்கி ஆ சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பித்தது.

விசாரணையின் போது, நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்களிலொருவர் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகளைக் கொண்டிருக்கின்ற வங்கியொன்றுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதாகக் கண்டறியப்பட்டது.

இத்திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட குறிகாட்டிகள் மற்றும் முறைகள்:

- உண்மைச் சொத்துக் கொடுக்கல்வாங்கல்களுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்களைப் பயன்படுத்தல்.
- கடன்/ ஈடுவைத்தல் வசதிகளுக்குக் கட்டாயப்படுத்தல்.
- வங்கி, நம்பிக்கைப் பொறுப்பு, உண்மைச் சொத்து முகவர்கள் போன்றோரை நிறுவன ரீதியான ஏற்பாடுகளாகப் பயன்படுத்த முயற்சித்தல்.

** பின்னிணைப்புக்கள் I-V பகிரங்கமாகக் கிடைக்கத்தக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மூலவளங்களிலிருந்தான உள்ளடக்கத்தினை உள்ளடக்கியுள்ளன.*

**தொடர்: 037/07/006/0004/018** 2018 ஏப்பிறல் 19

**வழிகாட்டல் இல. 04/2018**

சேரல்: அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்

**2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களுக்கான பயன்பெறும் சொத்துரிமையினை அடையாளம் காணுதல் மீதான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் தொடர்பிலான உரிய விழிப்புக் கவனம்) விதிகள் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலாதலும் வேண்டும்.

**பணிப்பாளர்/நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்

**2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க பயன்பெறும் சொந்துரிமையினை அடையாளம் காண்பது மீதான நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள்**

I. **அறிமுகம்**

1. இவ்வழிகாட்டலானது 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 15(1) (ஜே) பிரிவிற்கிணங்க விடுக்கப்படுகிறது.
2. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரவரம்பின் கீழ் தொழிற்படுகின்ற நிதியியல் உளவறிதல் பிரிவு 2016 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட இல.1951/13 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனம்) விடுத்தது. விடுக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்த இவ்விதி நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான "நிதித்தொழிலில்" ஈடுபடுகின்ற நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தாதலும் வேண்டும்.
3. வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகள் 28-31 மற்றும் 48-50 மற்றைய விடயங்களுடன் வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளின் 99ஆவது விதியில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு சட்ட ரீதியான ஆள் அல்லது சட்ட ஏற்பாடுகளைக் கொண்ட வாடிக்கையாளரொருவரின் இறுதிப் "பயன்பெறும் சொந்தக்காரரர்" ஆகவுள்ள இயற்கையான ஆளை (ஆட்களை) அடையாளம் கண்டு அதனைச் சரிபார்ப்பதற்குத் தேவையான பொருத்தமான வழிமுறைகளை எடுக்குமாறு இவ்விதிகளின் கீழ் நிதியியல் நிறுவனங்களின் ஏற்பாடுகள் தேவைப்படுத்துகின்றன.
4. இவ்வழிகாட்டல்கள் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளை பொருள்கோடவும் பிரயோகிப்பதற்குமான உதவியொன்றினை வழங்குகின்றன. இவ்வழிகாட்டல்கள் பூரணமானதொன்றாக இருக்குமென கருதப்படாது என்பதுடன் எந்தவொரு நிதியியல் நிறுவனத்தின் மீதும் சட்ட ரீதியாக பிணிக்கின்ற நடைமுறைகளையும் விதிக்காது என்பதுடன், இது நிதியியல் உளவறிதல் பிரிவிலிருந்தான சட்ட ரீதியான மதியுரைகளையும் உள்ளடக்கியிருக்காது. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகள் அல்லது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் நிதியியல் நிறுவனங்களின் ஏதேனும் கடப்பாடுகளிலிருந்து அவற்றினை விடுவிக்கும் விதத்தில் இவ்வழிகாட்டல் எதனையும் கொண்டிருக்காது என்பதனையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

II. **பின்னணி/ சூழ்நிலை**

**நன்மைபெறும் சொந்தக்காரர் என்றால் யார்?**

5. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளின் 99ஆவது விதியின்படி, சட்ட ரீதியான ஆள் அல்லது சட்ட ரீதியான ஒழுங்கேற்பாட்டின் "பயன்பெறும் சொந்தக்காரர்" ஆக இருப்பதுடன் ஒரு வாடிக்கையாளரை இறுதியாக தமதாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஒரு இயற்கை ஆள் அல்லது எந்த ஆளின் சார்பில் கொடுக்கல்வாங்கலொன்று நடைபெறுகின்றதோ அந்த ஆள் எனப் பொருள்படும். 49ஆவது விதியின்படி, கட்டுப்படுத்துகின்ற சொத்துரிமை அக்கறை என்பது சட்ட ஆளொருவரின் மூலதனத்தில் பத்து சதவீதத்திற்கும் (10%) கூடுதலான வழங்குவதன் மூலம் பொறுப்பேற்கப்பட்ட அக்கறையொன்று என்பதாகும்.
6. இறுதிப் பயன்பெறும் செந்தக்காரர் (சொந்தக்காரர்கள்) ஆகவுள்ள இயற்கை ஆளினை (ஆட்களை)த் தீர்மானிப்பது நிதியிடல் நிறுவனத்தின் கடப்பாடாகும். இறுதிப் பயன்பெறும் சொந்தக்காரர் இயற்கையான ஆளாக இருக்க வேண்டும் என்பதுடன் கம்பனியொன்றாகவோ அமைப்பொன்றாகவோ அல்லது சட்ட ரீதியான ஒழுங்குமுறைப்படுத்தலாகவோ இருக்கமுடியாது. வாடிக்கையாளர்களுடன் இணைந்த பயன்பெறும் சொந்தக்காரர்கள் ஒன்றிற்கு மேற்பட்டவர்களாகவும் இருக்கலாம்.
7. வாடிக்கையாளர் இயற்கையான ஆளாக இருக்குமிடத்து அவ்வாள் இன்னொருவரின் சார்பாக செயற்படுகின்றார் என்பதனைக் காட்டுவதற்கு நியாயமான ஆதாரங்கள் இருந்தாலொழிய அல்லது வாடிக்கையாளரின் சொத்துக்களினது பயன்பெறும் சொந்தக்காரராக இன்னொரு ஆள் இருக்குமிடத்து அவ்வாளைப் பயன்பெறும் சொந்தக்காரராக கருதிக் கொள்ளமுடியும்.

**பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளம் காண்பது ஏன் முக்கியமானது?**

8. கம்பனிகள், நம்பிக்கைப் பொறுப்புக்கள், மாற்றங்கள், பங்குடமைகள் சட்ட ரீதியான ஆட்களின் மற்றைய வகையினர் போன்ற கம்பனி முயற்சிகளும் ஒழுங்குகளும் பரந்தளவிலான பல்வேறு வர்த்தக ரீதியான மற்றும் தொழில்முயற்சியாண்மை நடவடிக்கைகளாகும். எனினும், பொருளாதாரத்தில் கம்பனி தொழில்முயற்சிகள் இன்றியமையாத மற்றும் சட்ட ரீதியான வகிபாகத்தினை ஆற்றிய போதும், குறிப்பிட்ட சில நிபந்தனைகளின் கீழ் பணம் தூயதாக்கல், இலஞ்சம் மற்றும் ஊழல் இரகசியமான உள்ளக வணிகம், வரி மோசடி, பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் ஏனைய சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கிய சட்டத்திற்கு முரணான நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. குற்றவாளிகள் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளைத் தந்திரமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும் கம்பனி முயற்சி சொத்துரிமையினை வேறு பெயர்களில் உருவாக்கிக் கொள்ளவும் சட்டத்திற்கு மாறான மூலத்தினை மறைத்துக் கொள்ளும் விதத்திலும் கவர்ச்சிகர வழிமுறைகளை வழங்கலாம் என்பதற்காகவே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
9. நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழு, உலக வங்கி, போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகம் என்பனவற்றினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட ஆய்வுகளும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத்திற்கு நிதியளித்தல் உட்பட சட்டத்திற்கு மாறான நோக்கங்களுக்காக கம்பனி முயற்சிகளின் தவறான பயன்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றன. பொதுவாக, நன்மைபெறும் சொந்தக்காரர் தொடர்பான தகவல்களைப் போதுமானளவிலும் துல்லியமாகவும் உரிய நேரத்திலும் போதுமானளவில் கிடைக்காமை பின்வருவனவற்றை மறைத்துக் கொள்வதற்கு பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கு வசதியளிக்கின்றது.

   அ) அறிந்த அல்லது சந்தேகத்திற்குரிய குற்றவாளியின் அடையாளம்

   ஆ) கணக்கொன்றில் அல்லது கம்பனி முயற்சிகளின் வசமுள்ள சொத்தின் உண்மையான நோக்கம் அத்துடன்/ அல்லது

   இ) கம்பனி தொழில்முயற்சிகளுடன் இணைந்து காணப்படும் நிதியங்கள் அல்லது சொத்துக்களின் மூலம் அல்லது பயன்பாடு.

**பயன்பெறும் சொந்தக்காரரின் தகவல்களை எந்த வழியில் மறைத்து/ ஒளித்து வைக்க முடியும்**

10. பயன்பெறும் சொத்துரிமைத் தகவல்களைப் பின்வரும் வழிகளினூடாகவும் ஆனால் அதற்கு மட்டுப்படுத்தப்படாத வேறு வழிகளிலும் ஒளித்து வைத்துக் கொள்ளமுடியும்.

அ) செல் கம்பனிகளின்[13] பயன்பாடு (இவற்றினை சொத்துரிமை அமைப்பில் பல்வேறு வடிவங்களில் நிறுவமுடியும்) இவற்றினை வெளிநாட்டுச் சொத்துரிமை எங்கு காணப்படுகிறதோ அங்கு காணலாம். இவை நியாயாதிக்கங்கள் முழுவதிலும் பரந்துபட்டுள்ளன,

ஆ) சிக்கலான சொத்துரிமையும் கட்டுப்பாட்டு அமைப்புக்களும் சொத்துரிமையின் பல்வேறு அடுக்குகள் சில சமயங்களில் மற்றைய சட்ட ரீதியான ஆட்களின் பெயர்கள் மற்றும் சில சமயங்களில் பல்வேறு நியாயதிக்க பிரதேசங்கள் முழுவதிலும் பரந்துபட்டுள்ள சொத்துரிமையின் சங்கிலித் தொடரான பயன்பாடு என்பனவற்றுடன் தொடர்புபட்டிருக்கின்றன,

இ) கொண்டு வருபவர் பங்குகள் மற்றும் கொண்டு வருபவர் பங்கு ஆணைச்சீட்டுக்கள்,

(ஈ) சட்ட ரீதியான ஆட்களைப் பணிப்பாளர்களாகப் பயன்படுத்தல்,

உ) வழமையான நியமனத்தர், பங்குடயைாளர்கள் மற்றும் பணிப்பாளர்களாக இருக்குமிடத்து நியமனத்தரின் அடையாளம் வெளிப்படுத்தப்படாதிருக்கும்,

ஊ) மிக நெருக்கமானவர்கள் மற்றும் குடும்பத்தினர் போன்ற முறைசாராத நியமனத்தர், பங்குடமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள்,

எ) நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் ஏனைய சட்ட ரீதியான ஒழுங்குபடுத்தல்கள். இது சட்ட ரீதியான சொத்துரிமையினையும் சொத்துக்களின் பயன்பெறும் சொத்துரிமைகளையும் வேறாக்குதல்,

ஏ) கணக்காளர்கள், சட்ட அறிஞர்கள், நொத்தாரிசுகள், நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் கம்பனிப் பணிகள் வழங்குவோர் போன்ற தொழில்முறை இடையேற்பாட்டாளர்கள் உட்பட சட்ட ரீதியான ஆட்களை உருவாக்குவதில் இடையேற்பாட்டாளர்களைப் பயன்படுத்தல்.

III. **பயன்பெறும் சொந்தக்காரரை நிறுவுதல்**

**(அ) சட்ட ஆட்களின் பயன்பெறும் சொந்தக்காரர்**

11. வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன விதிகளின் 99ஆவது விதியின்படி, "சட்ட ஆள்" என்பது நிதி நிறுவனத்துடன் நிரந்தர வாடிக்கையாளர் தொடர்பை நிலப்படுத்துவதற்கு இயன்றதாகவுள்ள அல்லது வேறு வகையில் ஆதனத்தினைச் சொந்தமாக வைத்திருக்கின்ற இயற்கை ஆள் தவிர்ந்த வேறு ஏதேனும் உருவாக்கம் என்று பொருளாகும் என்பதுடன் ஒரு கம்பனி கூட்டிணைக்கப்பட்ட குழு மற்றும் பங்காண்மை அல்லது கழகம் என்பனவற்றையும் உள்ளடக்கும்.

12. சட்ட ஆளின் பயன்பெறு சொந்தக்காரரை (சொந்தக்காரர்களை) அடையாளம் காணும் செயன்முறையில், நிதியியல் நிறுவனங்கள் மூன்று முக்கிய கூறுகளைப் பரிசீலனையில் கொள்ள வேண்டும்.

(அ) வாடிக்கையாளர் பங்குரிமை மூலதனத்தில் பத்து சத வீதத்திலும் (10%) கூடுதலான அளவினைச் சொந்தமாகக் கொண்டுள்ள அல்லது கட்டுப்படுத்துகின்ற இயற்கை ஆள் (ஆட்கள்) எவர்?

(ஆ) எந்த இயற்கை ஆள் (ஆட்கள்) சட்ட ரீதியான ஆளின் காத்திரமான கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கின்றார்?

(இ) எந்த இயற்கை ஆளின் (ஆட்களின்) சார்பாக கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படுகின்றது?


13. வாடிக்கையாளரொருவரின் (சட்ட ரீதியான ஆள்) பயன்பெறும் சொந்தக்காரர் (சொந்தக்காரர்கள்) மேலே அடையாளம் காணப்பட்ட மூன்று கூறுகளில் ஒன்று அல்லது கூடுதலானவை பற்றி திருப்திப்படலாம். இதன்படி, பயன்பெறு சொத்துரிமையினை நிர்ணயிப்பதில் சொத்துரிமை மூலத்தினை மாத்திரம் வெறுமனே பிரயோகிப்பது போதுமானதாக இருக்காது.

**சொத்துரிமை**


14. விதிகள் 28 மற்றும் 48இன்படி, வாடிக்கையாளர்கள் இயற்கை ஆளாக இருக்காதவிடத்து அவர்களது வாடிக்கையாளர்களின் சொத்துரிமை மற்றும் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பினைப் புரிந்து கொள்ளுமாறு நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன. 49ஆவது விதியின்படி அக்கறையினைக் கட்டுப்படுத்துவதற்கான விரித்துரைக்கப்பட்ட கீழ்மட்டம் வாடிக்கையாளரின் பத்து (10%) சதவீதத்திற்கும் கூடுதலான சொத்துரிமையாக இருத்தல் வேண்டும் எனப் பொருள் கோடப்படுகிறது. சொத்துரிமையினைக் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு மொத்த சொத்துரிமையூடாக நேரடியாகவும் அதேபோன்று மறைமுகமாகவும் நெறிப்படுத்த முடியும்.

1 செல் கம்பனிகள் என்பது பௌதீக ரீதியான பிரசன்னம் எதுவுமில்லாமல் இருப்பது உட்பட, போதுமான தொழிற்பாடுகளோ அல்லது தொடர்பான சொத்துக்களோ இல்லாமல் கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிகள் என்பதாகும்.


வரைபடம் 1: எளிமையான மறைமுகப் பங்குடமை




வரைபடம் 2: நேர் மற்றும் மறைமுகப் பங்குடமைகள்



வரைபடம் 3: பல்மட்ட மறைமுகப் பங்குடமைகள்




திரு. F, திரு. X மற்றும் திரு. Z ஆகியோர் மறைமுகப் பங்குடமையூடாக கம்பனி ABC இன் பயன்பெறும் சொந்தக்காரராவர்

15. ஒன்றில் நேரடியாக, நியமிக்கப்பட்டவரூடாக அல்லது குடும்ப உறுப்பினர்களூடாக அல்லது நெருங்கிய இணையாளரூடாகப் பெயரளவில் பங்குகளின் சொந்தக்காரராக அல்லது பங்குகளைக் கட்டுப்படுத்துபவராகவுள்ள, பங்குரிமை மூலதன அக்கறையினைக் கட்டுப்படுத்துகின்ற இயற்கையான ஆளினைப் பயன்பெறு சொந்தக்காரர் எனக் கருதமுடியும் (ஒன்றில் வெளிப்படுத்தப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்படாத). பெரும்பான்மையான பங்குடயாளர் அல்லது இயற்கையான ஆட்களுக்கான நியமனத்தர்களாகவுள்ள பங்குடமையாளர்களின் சில இணைப்புக்களினால் உருவாக்கப்பட்ட பெரும்பான்மையான பங்குடமையாளர்களும் பயன்பெறும் சொந்தக்காரர்களேயாவர்.

16. சில வாடிக்கையாளர்களுக்காக, அனைத்துத் தனிப்பட்டவர்களும் பத்து சதவீதத்திற்கும் (10%) குறைவானதையே சொந்தமாகக் கொண்டுள்ளமையினால் சொத்துரிமையானது பெரும் எண்ணிக்கையான தனிப்பட்டவர்களிடையே பரந்துபட்டிருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பத்தில் பத்து சதவீதத்திற்கும் கூடுதலான (10%) சொத்துரிமையினைத் தனிப்பட்டவர்கள் கொண்டிராதமையினால் கீழே மேலோட்டமாகக் குறிப்பிடப்பட்ட காத்திரமான கட்டுப்பாட்டுக் கூறு பயன்படுவது சொந்தக்காரர் (கள்)/ வாடிக்கையாளர் (கள்) தீர்மானிப்பதற்கு மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

**காத்திரமான கட்டுப்பாட்டு**

17. சட்ட ஆளின் காத்திரமான கட்டுப்பாடு பயன்பெறு சொத்துரிமையினை நிர்ணயிக்கின்ற முக்கியமான கூறாகும். அத்தகைய கட்டுப்பாடு நேரடியானதாக அல்லது மறைமுகமானதாக முறைசார்ந்ததாக அல்லது முறைசாராததாக இருக்க முடியும். அத்தகைய இயற்கையான ஆட்களை அடையாளம் காண்பதற்கான உதவியொன்றாக நேரடியானதும் முறைசார்ந்ததுமான மட்டத்தில் வாடிக்கையாளர் ஆளுகைக் கட்டமைப்பினை விளங்கிக் கொள்வதற்கு இது இன்றியமையாததாகும். வாடிக்கையாளர் தொடர்பில் காத்திரமான கட்டுப்பாடுகளை மேற்கொள்கின்றது. வாடிக்கையாளரொருவர் தொடர்பில் காத்திரமான கட்டுப்பாட்டாளரைத் (கட்டுப்பாட்டளார்கள்) தீர்மானிப்பது தொடர்பில் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) இயற்கையான ஆளொருவர் மூத்த முகாமைத்துவ மட்ட உறுப்பினரொருவரை பணிக்கமர்த்தவோ அல்லது முடிவுறுத்தவோ முடியும்;

(ஆ) இயற்கையான ஆளொருவர் பணிப்பாளர்களை நியமிக்கவோ, நீக்கவோ முடியும்;

(இ) சட்ட ரீதியான ஆள்/ ஒழுங்கேற்பாடுகளின் (உ-ம்: முதன்மை நிறைவேற்று அலுவலர், முதன்மை நிதி அலுவலர் அல்லது முகாமைத்துவப் பணிப்பாளர்) நாளாந்த/ கிரமமான தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்ற மூத்த முகாமையாளர்கள்.

18. இயற்கையான ஆள்கள் சட்ட ஆட்களைப் பின்வருவன போன்ற ஏனைய முறைகளினூடாகக் கட்டுப்படுத்த முடியும்:


(அ) நிறைவேற்றுப் பணிப்பாளர்கள்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள் அல்லது சொத்துரிமையினை உடமையில் வைத்திருப்பவர்கள் போன்ற பதவியிலுள்ள ஆட்களுடனான தனிப்பட்ட தொடர்புகள்;

(ஆ) சட்ட ஆளின் நிதியியல் உறவு முறைகள் தொடர்பிலான குறிப்பிடத்தக்க அதிகாரம் (சட்ட ஆளின் சார்பில் கணக்குகளை வைத்திருக்கும் நிதியியல் நிறுவனங்கள் உட்பட) மற்றும் இடம்பெற்றுவரும் சட்ட ஆளின் நிதியியல் அலுவல்கள்;

(இ) தொழில்முயற்சிகளின் நிதியிடலில் பங்கேற்பதன் மூலம் அல்லது நெருங்கிய குடும்ப உறவுகள் வரலாற்று ரீதியான அல்லது ஒப்பந்த ரீதியான சங்கங்கள் மூலமாக அல்லது குறிப்பிட்ட கொடுப்பனவுகளைக் கம்பனிகள் செலுத்தத் தவறியிருப்பதன் காரணமாக சொத்துரிமை இல்லாமல் கட்டுப்படுத்தல்;

(ஈ) கட்டுப்பாடு ஒருபோதும் மேற்கொள்ளப்படாவிட்டாலும் கூட சட்டங்களுக்குச் சொந்தமான சொத்திலிருந்தான அனுபவங்களை அல்லது நன்மைகளைப் பயன்படுத்தல்.

வரைபடம் 4: இலகுவான மறைமுகப் பங்குடமை




திரு. G, ABC வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரொருவராவர். இது கம்பனியின் முக்கிய நிதியிடல் மூலமாகும். அத்தகைய சூழ்நிலையொன்றில், திரு. G கம்பனி A யின் பத்து சதவீதத்திற்கும் குறைவான (10%) உடமைகளைக் கொண்டிருப்பினும் கூட, அவர் ABC வங்கியினூடாக கம்பனி யு இனைக் காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவதுடன் காத்திரமான கட்டுப்பாடுகளினூடாகப் பயன்பெறும் சொத்துரிமையாளராகவும் கருதப்படுதல் வேண்டும்.

**யாரின் சார்பில் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட வருகின்றதோ அந்த ஆள்**

19. பயன்பெறும் சொத்துரிமையின் வரைவிலக்கணத்தின் இன்னொரு அம்சம் யாதெனில் யாருடைய சார்பில் வாங்கல் மேற்கொள்ளப்படுகின்றதோ அந்த ஆள் பற்றியதாகும். இது வாடிக்கையாளரின் அடிப்படைக் கோரலாளரான தனிப்பட்ட ஒருவராகவும் இருக்கமுடியும். உதாரணமாக, நிதியியல் நிறுவனமொன்றிற்கு ஆள் ‘A’ மற்றும் ஆள் ‘B’ இன் சார்பில் இருந்திட்டொன்றான கொடுக்கல்வாங்கலை மேற்கொள்வது தெரியவரின் ஆள் ‘A’ மற்றும் ஆள் ‘B’ அடையாளம் காணப்பட்டு கொடுக்கல்வாங்கலுக்கான தரப்பினராக இருக்கக்கூடிய மற்றைய பயன்பெறும் சொந்தக்காரர்களுடன் சேர்த்து சரிபார்க்கப்படல் வேண்டும்.

20. வாடிக்கையாளரின் சார்பில் செயல்புரிதல் என்பது வாடிக்கையாளரின் சார்பில் கொடுக்கல்வாங்கல்களை அல்லது ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆளொருவர் அதிகாரமளிக்கப்படும் பொழுது இடம்பெறுகிறது. எனினும், “செயற்படுவதற்கான அதிகாரம்” என்பதனை காத்திரமான கட்டுப்பாட்டுடன் சேர்த்து குழப்பிக் கொள்ளக்கூடாது.

21. வாடிக்கையாளரின் சார்பில் ஆட்கள் செயலாற்றுமிடத்து அவர்கள் வாடிக்கையாளரின் பயன்பெறுநர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்பதற்கு உதாரணங்கள் காணப்படுகின்றன.

22. விதி 29இன்படி, வாடிக்கையாளரின் சார்பில் செயலாற்றுகின்ற இயற்கை ஆட்களை நிதியியல் நிறுவனங்கள் அடையாளம் கண்டு அத்தகைய ஆட்களின் அடையாளத்தினை சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளரின் சார்பில் செயலாற்றுவதற்கான அத்தகைய ஆட்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் மாதிரிக் கையொப்பங்கள் உட்பட ஆவணச்சான்றுகளினூடாகச் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

**(ஆ) சட்ட ஒழுங்கேற்பாடுகளின் மூலம் பயன்பெறும் சொந்தக்காரர்**

23. ஒழுங்குவிதி 99இன் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, சட்ட ஒழுங்கேற்பாடென்பது வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பையும் நம்பகமான கணக்குகளை அல்லது நியமனத்தாரையும் உள்ளடக்கும்.

24. அனைத்து நம்பிக்கைப் பொறுப்புக்களும் சட்ட ரீதியான சொத்துரிமை மற்றும் பயன்பெறும் சொத்துரிமை என்பனவற்றிற்கிடையிலான வேறுபடுத்தலுக்கான பொதுவான பண்புக் காரணிகளைக் கொண்டிருக்கின்றன. சட்ட சொத்துரிமை எப்பொழுதும் நம்பிக்கைப் பொறுப்பாளரில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. பயன்பெறும் சொத்துரிமை நம்பிக்கைப் பொறுப்பின் ஆக்குநர் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது பயன்பெறுநர்கள் மீது கூட்டாக அல்லது தனித்தனியாக நம்பிக்கையினைக் கொண்டிருக்க முடியும்.

25. விதி 50இன்படி, நிதியியல் நிறுவனங்கள், நம்பிக்கைப் பொறுப்புக்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பின் ஆக்குநர், நம்பிக்கைப்

பொறுப்பாளர்கள், பயன்பெறும் அல்லது பயன்பெறுநர்களின் வகுப்பு மற்றும் நம்பிக்கைப் பொறுப்பின் மீது இறுதியான பயனுறும் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற வேறெவரேனும் இயற்கை ஆள் ஆகியோர் உட்பட (தொடர்ச்சியான கட்டுப்பாடு அல்லது சொத்துரிமையினூடாகக் கட்டுப்பாடுகளை மேற்கொள்பவர்கள் உட்பட) நம்பிக்கைப் பொறுப்பு பற்றிய தகவல்களை அடையாளம் காண்பதுடன் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

26. நிதியியல் நிறுவனங்கள் நம்பிக்கைப் பொறுப்பு ஆவணங்களை (உ-ம்: நம்பிக்கைப் பொறுப்பு உறுதிகள், நம்பிக்கைப் பொறுப்பின் சாதனங்கள், நம்பிக்கைப் பொறுப்புப் பிரகடனங்கள் போன்றவை) பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் நம்பிக்கைப் பொறுப்பு ஆவணங்களின் ஏற்பாடுகளை ஆளுகின்ற நியாயாதிக்கத்தின் சட்டங்களின் பின்னணியில் அவற்றை முழுமையாக விளங்கிக் கொள்ளுதலும் வேண்டும். நிதியியல் நிறுவனங்கள் சுயாதீனமான வழிமுறைகளினூடாக (உ-ம்: நம்பிக்கைப் பொறுப்பு, பதிவேடுகள் மற்றும் நொத்தரிசு) நம்பிக்கைப் பொறுப்பு ஆவணங்களைச் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

**உதாரணம்:**

ஆள் ‘A’ அவரது பிள்ளையின் பயன்பெறுகைக்கான நம்பிக்கைப் பொறுப்பு ஆக்குநராவர். நம்பிக்கைப் பொறுப்புச் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்கு உதவுவதற்காக நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதியியல் நிறுவனங்களுடன் உறவுகளைத் தாபிப்பதற்கு எதிர்பார்க்கின்றார். நம்பிக்கைப் பொறுப்பாளர் நம்பிக்கைப் பொறுப்பின் சொத்துக்களினது கட்டுப்பாட்டாளராக இருந்த போதும் அவர் இறுதி பயன்பெறும் சொந்தக்காரராக இருக்க முடியாது என்பதுடன் ஆள் ‘A’ உட்பட வாடிக்கையாளர் தொடர்பிலான உரிய விழிப்புக் கவனத்தின் மீது முக்கிய கவனத்தினையும் செலுத்துதல் வேண்டும்.

IV. **பயன்பெறும் சொத்துரிமைத் தகவல்களை அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல்**

27. விதி 30இன்படி, ஒவ்வொரு நிதி நிறுவனமும் பயன்பெறும் சொந்தக்காரர் (சொந்தக்காரர்கள்) யாரென நிதி நிறுவனம் அறிந்துள்ளதெனத் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்கு நிதி நிறுவனத்திற்குப் போதுமானதாக இருக்கும் நம்பமான மூலத்திலிருந்து பெறப்பட்ட தொடர்பான தகவல்களை அல்லது தரவுகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளரின் பயன்பெறு சொந்தக்காரரை (சொந்தக்காரர்களை) அடையாளம் காண்பதற்கான தகவல்களைப் பெறவேண்டும் என்பதுடன் அவரின் அடையாளத்தினைச் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

28. இதன்படி, பயன்பெறும் சொந்தக்காரரை (சொந்தக்காரர்களை) அடையாளம் காணுதல் கட்டாயமானதாகும். நிதியியல் நிறுவனம் வாடிக்கையாளரின் பயன்பெறும் சொந்தக்காரர் யாரென நிதியியல் நிறுவனம் தாபித்தலும் நிதியியல் நிறுவனம் ஒவ்வொரு தனிப்பட்ட பயன்பெறும் சொந்தக்காரர் தொடர்பிலும் குறைந்தபட்சம் பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(அ) முழுப்பெயர்;

(ஆ) அலுவல்சார் ஆளணியினரை அடையாளம் காணுதல் அல்லது வேறு ஏதேனும் அடையாள இலக்கத்தினை அடையாளம் காணுதல்;

(இ) நிரந்தர/ வதிவிட முகவரி.

29. 31ஆவது விதியின்படி, ஒவ்வொரு நிதி நிறுவனமும் இடைக்கிடையேயான வாடிக்கையாளரொருவருடன் தொழில் தொடர்பொன்றைத் தொடங்குவதற்கு முன்னர் அல்லது வியாபார உறவுகளை மேற்கொள்கின்ற காலப்பகுதியில் அல்லது அவருக்காகக் கொடுக்கல்வாங்கலொன்றை நடத்துகின்ற காலப்பகுதியில் பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தினைச் சரிபார்த்துக் கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

30. இதற்கிணங்க, அடையாளம் நிறுவப்பட்டதும், நிதியியல் நிறுவனங்கள் பயன்பெறும் சொந்தக்காரரின் (சொந்தக்காரர்களின்) அடையாளத்தினைச் சரிபார்த்துக் கொள்வதற்கு நியாயமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். சரிபார்ப்பதற்கான நியாயமான வழிமுறைகள் சொத்துரிமையின் இடர்நேர்வு மற்றும் சிக்கல் வாய்ந்த தன்மை மற்றும் சட்ட ஆள் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தலின் கட்டுப்பாட்டு அமைப்பு என்பனவற்றிற்குட்பட்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

31. சட்ட ஆட்களின் பயன்பெறும் சொத்துரிமையினைச் சரிபார்ப்பதற்கு ஏற்கனவே கம்பனி நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பரிவர்த்தனையின் அடிப்படையில் பகிரங்கமாக விற்பனை செய்யப்படும் பங்குகளைக் கொண்ட நிறுவனங்கள் அல்லது இலகுவானதும் உள்நாட்டு ரீதியாக வழங்கப்பட்ட சொத்துரிமை அமைப்பினை அல்லது குறைந்த இடர்நேர்வு கொடுக்கல்வாங்கல்களை நடத்துவதற்கு எதிர்பார்க்கின்ற சட்ட ஆட்கள் போன்ற கம்பனி ஆளுகை மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பான விதிகளுக்குட்பட்டுள்ள இலகுபடுத்தப்பட்ட சரிபார்ப்பு நடவடிக்கை முறைகளை பிரயோகிக்க முடியும்.

32. பயன்பெறு சொத்துரிமையினைச் சரிபார்ப்பது தொடர்பில் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஆவணப்படுத்தலில் தங்கியிருக்க முடியும் (எனினும் அவற்றிற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கக்கூடாது).

(அ) பங்குப் பதிவேடு,

(ஆ) ஆண்டுக் கூற்றுக்கள்,

(இ) நம்பிக்கைப் பொறுப்பு உறுதி,

(ஈ) பங்குடமை உடன்படிக்கை,

(உ) யாப்பு அத்துடன்/ அல்லது கூட்டிணைக்கப்பட்ட துணை நிறுவனமொன்றைப் பொறுத்தவரை கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ்,

(ஊ) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் யாப்பு,

(எ) பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் கூட்டக் குறிப்பு,

(ஏ) திறந்த மூலங்களின் தேடல் அல்லது வர்த்தக ரீதியாகக் கிடைக்கத்தக்க தரவுத் தளங்களூடாகக் கிடைக்கத்தக்க தகவல்கள்.

33. வெளிநாட்டு சட்ட ஆட்கள் மற்றும் ஒழுங்கேற்பாடுகளைப் பொறுத்தவரையில் நிதியியல் நிறுவனங்களின் தாய்க் கம்பனி அல்லது கிளைகள், தொடர்பு நிலை வங்கி, ஏனைய வங்கி முகவர்கள், கம்பனிப் பதிவேடுகள் போன்றவற்றினூடான சரிபார்ப்புக்கள் போன்ற மேலதிக வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும்.

34. வாடிக்கையாளர் தொடர்பான உரிய விழிப்புக் கவன விதிகளின் அட்டவணை 1இன்படி, 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட இலங்கை பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட அல்லது பயன்பெறும் சொத்துரிமையின் போதிய வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துகின்ற வெளிப்படுத்துகைத்

தேவைப்பாடுகளுக்குட்பட்டு வேறேதேனும் பங்குத் தொகுதி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் விடயத்தில் பணிப்பாளர்களையும் பாரிய பங்குடமையாளர்களையும் அடையாளம் காண்பதற்கு நம்பத்தகுந்த மூலங்களிலிருந்து (உ-ம்: பொதுப் பதிவாளர்) கிடைக்கக்கூடியத தகவல்களைப் பயன்படுத்தலாம்.

35. விதி 49(ஈ)இன்படி, வாடிக்கையாளர் பங்குரிமை மூலதனத்தில் பத்து (10%) சதவீதத்திற்கும் கூடுதலான அளவினை எவரும் சொந்தமாகக் கொண்டிராதமையின் காரணமாக அல்லது வாடிக்கையாளர் தொடர்பில் தனிப்பட்ட எவரும் கட்டுப்பாட்டினைச் செலுத்தாதமையின் காரணமாக நிதியியல் நிறுவனம் பயன்பெறும் சொந்தக்காரரைத் தீர்மானிக்க இயலாமல் இருக்கும் பொழுது நிதியியல் நிறுவனம் மூத்த முகாமைத்துவப் பதவிகளை வகிக்கும் இயற்கையான ஆட்களை நன்மைபெறம் சொந்தக்காரர்களாக அடையாளம் காணுதல் வேண்டும்.

**தகவல்களைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல்**

36. விதி 40இன்படி, நிதியியல் நிறுவனங்களின் தகவல்கள் நாளது வரை இற்றைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக பயன்பெறும் சொந்தக்காரர்கள் தொடர்பில் பெறப்பட்ட தகவல்களின் போதுமாந்தன்மையினைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் வேண்டும். மீளாய்விற்குரிய காலப்பகுதியும் அதற்கான நடவடிக்கை முறைகளும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கிணங்கப் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கான நிதியளித்தல் தொடர்பான அதன் உள்ளக விடயங்கள் ஒவ்வொரு நிதியியல் நிறுவனத்தினாலும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

37. வாடிக்கையாளர் சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற ஏதேனும் பொருண்மிய ரீதியான/ குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பயன்பெறும் சொத்துரிமை பற்றிய மீளாய்வினைத் தேவைப்படுத்தலாம். பொருண்மிய ரீதியான/ குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தொடர்பான சில உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

(அ) அரச கம்பனி தனியார் துறையைப் பொறுப்பேற்றல்;

(ஆ) பங்குடமையாளரொருவர் அல்லது பங்குடமையாளர்களைக் கொண்ட குழு வாக்களிக்கும் பங்குகளின் கட்டுப்பாட்டினை எடுத்துக் கொள்ளுதல்;

(இ) புதிய பங்காளரொருவர் சேர்க்கப்படுதல் அல்லது ஏற்கனவேயுள்ள பங்காளரை நீக்குதல்;

(ஈ) முகாமைத்துவப் பதவிகளில் மாற்றம்;

(உ) புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுதல்;

(ஊ) நம்பிக்கைப் பொறுப்பாளர் கலைக்கப்படுதல்;

(எ) அதே வாடிக்கையாளர்களுக்காக புதிய கணக்கொன்றினைத் திறத்தல்;

(ஏ) வாடிக்கையாளர் தோற்றப்பாட்டுக்கு ஒவ்வாத விதத்தில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள எத்தனித்தல்.

**தாமதிக்கப்பட்ட சரிபார்ப்புக்கள்**

38 (அ) வாடிக்கையாளரின் இடர்நேர்வு மட்டம் குறைவாக இருக்குமிடத்தும் தொழில் உறவுகளைத் தொடங்கிக் கொள்ளும் கட்டத்தில் சரிபார்ப்புக்கள் சாத்தியமற்றதாக இருக்குமிடத்து,

(ஆ) பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வு தொடர்புபட்டுள்ளது என்ற சந்தேகம் இல்லாவிடத்தும்,

(இ) தாமதம் வியாபாரத்தின் வழமையான நடத்தைக்குத் தடையாக அமையாதவிடத்து,

விதிகள் 31 மற்றும் 32இற்கிணங்க பின்வரும் சந்தர்ப்பங்களில் நிதியியல் நிறுவனங்கள் பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளங்களைச் சரிபார்ப்பதனைத் தாமதப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டன.

39. விதி 33இன்படி, தாமதிக்கப்பட்ட சரிபார்ப்புக்கள் அனுமதிக்கப்படும் பொழுது, நிதியியல் நிறுவனங்களும் சரிபார்த்தலுக்கு முன்னர் தொழில் தொடர்பினை எந்நிபந்தனைகளின் கீழ் வாடிக்கையாளர் பயன்படுத்தக்கூடுமோ அந்நிபந்தனைகள் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கை முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இந்நடவடிக்கை முறைகள் எண்ணிக்கைகளை மட்டுப்படுத்தல், செயலாற்றப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் வகைகள் அத்துடன்/ அல்லது தொகைகள் மற்றும் அத்தொடர்புகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் வகைகளுக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற பாரியதும் சிக்கல் வாய்ந்ததுமான கொடுக்கலவாங்கல்களைக் கண்காணித்தல் போன்ற வழிமுறைகளின் தொகுதியொன்றினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

40. விதி 36இன்படி, நிதி நிறுவனங்கள் பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தினை சரிபார்ப்பதற்கு முன்னர் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பில் உயர் இடர்நேர்வுகளை ஏற்படுத்தும் வாடிக்கையாளர்களுடன் வியாபார உறவுகளை நிறுவுதலோ அல்லது ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதோ ஆகாது.

41. விதி 35இன்படி, நிதியியல் நிறுவனமொன்று பயன்பெறும் சொத்துடமைத் தகவல்களை அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல் உட்பட வாடிக்கையாளர் தொடர்பான உரிய விழிப்புக் கவன விதிகளில் தேவைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளுக்கு இணங்கியொழுக முடியாமல் இருக்குமிடத்து, நிதியியல் நிறுவனம் புதிய வாடிக்கையாளர்களுடன் வியாபாரத் தொடர்புகளை மேற்கொள்ளவோ அல்லது புதிய வாடிக்கையாளர்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளவோகூடாது என்பதுடன் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுடனான வியாபாரத் தொடர்புகளை முடிவுறுத்தல் வேண்டுமென்பதுடன் வாடிக்கையாளர் தொடர்பில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடலை மேற்கொள்வது பற்றியும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

## V. ஏனைய தேவைப்பாடுகள்

**வாடிக்கையாளரின் பயன்பெறும் சொத்துரிமை பற்றிய பிரகடனம்**

42. நிதியியல் நிறுவனமொன்றில் நியம சான்றுபடுத்தல் படிவத்தின் [சான்றுபடிவம் (இணைப்பு I)] மீது அல்லது வேறு ஏதேனும் விதங்களில் பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளம் தொடர்பில் நிதியியல் நிறுவனங்கள் திருப்திப்படும் விதத்தில் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும்.

43. படிவங்களின் பயன்பாடு விருப்பத்திற்குரியதாக இருப்பதுடன் நிதியியல் நிறுவனம் இப்படிவத்திற்குப் பதிலாக தாள் அல்லது இலத்திரனியல் வடிவில் பொருத்தமான பதிப்பில் பெறப்படக்கூடியதாக இருப்பதுடன் தகவல்கள் எவ்வளவு காலப்பகுதிக்குத் தேவையோ அக்காலப்பகுதி வரை தேவையான தகவல்களைச் சேகரிக்கவும் பாதுகாக்கவும் பேணவும் கோரிக்கையின் பேரில் தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு

கிடைக்கச் செய்யப்படுவதுடன் பதிவேடுகள் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகள் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் என்பனவற்றிற்கு இணங்க பேணப்படுகிறது.

44. நிதியியல் நிறுவனங்கள் சட்ட ஆட்கள் தொடர்பில் பயன்பெறும் சொத்துடமையினை அடையாளம் கண்டு சரிபார்ப்பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகளையும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படட பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலிலுள்ள ஒழுங்கேற்பாடுகளையும் ஆவணப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**பதிவேடுகளைப் பேணுகின்ற கடப்பாடுகள்**

45. வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகள் பகுதி ஏ மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் என்பனவற்றின் கீழ் விபரிக்கப்பட்டவாறு, பயன்பெறும் சொத்துரிமை தொடர்பான தகவல்களை அடையாளம் கண்டு சரிபார்க்கும் பதிவேடுகளைப் பேணுமாறு நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆட்களாகவுள்ள பயன்பெறும் சொந்தக்காரர்**

46. விதி 59இன்படி, பயன்பெறும் சொந்தக்காரர் அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆளொருவராகவுள்ளாரா என்பதனைத் தீர்மானிப்பதற்குப் பொருத்தமான உள்ளகக் கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன. அத்தகைய செயன்முறைகளினூடாக நிதியியல் நிறுவனம் எவரேனும் பயன்பெறும் சொந்தக்காரர் அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆளாக அடையாளம் காணுமிடமத்து தொடர்புகள் உயர் இடர்நேர்வினைக் கொண்டவையாகக் கருதப்பட வேண்டியதுடன் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளில் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு உரிய விழிப்புக் கவனத்தினையும் அதிகரித்தல் வேண்டும்.

**தடைகள்**

47. வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பயன்பெறும் சொத்துரிமைத் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லத் தவறுவது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2(3)இனை மீறுவதாகவும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 19ஆவது பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகவும் இருக்கும்.

## VI. உதாரணங்கள்

**உதாரணம் 1: சட்ட ரீதியான ஆளொருவரின் சொத்துரிமை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பிற்கான பதிவேடு**

ABC கம்பனி லிமிடெட் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட தனியார் பொறுப்புக் கம்பனியாகும். ABC இன் பங்குகளில் திரு.A 25 சதவீதமான பங்குகளைச் சொந்தமாக வைத்திருந்ததுடன் BC கம்பனி லிமிடெட் ABC இன் பங்குகளில் மீதி 75 சதவீதத்தினைச் சொந்தமாகக் கொண்டிருந்தது. திரு.S, ABC கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளராக இருந்ததுடன் பணிப்பாளர் சபையானது அவரின் மனைவி திருமதி.S, ABC இன் முதன்மை நிதியியல் அலுவலர் மற்றும் அவர்களின் மூன்று பிள்ளைகள் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது.

இந்த உதாரணத்தில் நிதியியல் நிறுவனம் பின்வருவனவற்றைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது:

- கம்பனியின் சொத்துரிமை - திரு.A இன் பங்கு (பங்குகளில் 25 சதவீதம்) மற்றும் BC கம்பனி லிமிடெட்டின் பங்கு (பங்கில் 75 சதவீதம்;
- கம்பனியின் சொத்துரிமை அமைப்பு - ABC கம்பனி லிமிடெட் தனிப்பட்ட வர்த்தகத்தினைக் கொண்டதாகும்;
- அவர்கள் செயற்பாட்டுக் கடப்பாட்டினைக் கொண்டிருப்பதால் பணிப்பாளர் சபையின் அனைத்து உறுப்பினர்களையும் (திரு.ளு இன் குடும்பம்) அடையாளப்படுத்தல்;
- திரு.A 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கைச் சொத்துரிமையாகக் கொண்டிருப்பதனால் அவரை அடையாளப்படுத்தல்;
- BC கம்பனி மொத்தப் பங்குகளில் 75 சதவீதத்தினை சொந்தமாகக் கொண்டிருப்பதன் மூலம் அது 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குகளைக் கொண்டிருப்பதனாலும் கட்டுப்பாடுகளைச் செயல்முறைப்படுத்துவதனாலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ சொத்துரிமையை அல்லது கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள தனிப்பட்ட அனைவரினதும் அடையாளப்படுத்தல்கள். எனினும், இது போன்ற விடயங்களில் நிதியியல் நிறுவனம் ABC கம்பனியின் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கினைக் கொண்டிருக்கக்கூடிய விதத்தில் BC கம்பனி லிமிடெட்டின் போதுமானளவு பங்கினை எவரேனும் தனிப்பட்டவர்கள் கொண்டிருக்கின்றார்களா என்பதனைத் தீர்மானிப்பதற்கு மேலும் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் அல்லது நிதி நிறுவனம் அத்தகைய தனிப்பட்டவர்கள் இல்லை என்பதனைத் தீர்மானிக்க வேண்டும்;
- நிதியியல் நிறுவனம் இத்தகவல்களைப் பெற்றுக் கொண்ட விதம்; அத்துடன்
- தகவலின் துல்லியத் தன்மையினைச் சரிபார்ப்பதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்.

**உதாரணம் 2: பங்குடமைகளின் சொத்துரிமையினையும் கட்டுப்பாட்டு அமைப்பினையும் பதிவுசெய்தல்**

றெயின்போ புரொப்பட்டி டெவலப்பர்ஸ் மேல் மாகாணத்திலுள்ள உண்மைச் சொத்துக்களை வாங்கி விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள இரண்டு பங்காளர்களுக்கு (திரு.T மற்றும் திரு.J) சொந்தமானதாகும். திரு.T உம் திரு.J உம் பங்குடமை உடன்படிக்கையில் கையொப்பமிட்டிருக்கின்றனர். இதன்படி திரு.T றெயின்போ புரோப்பட்டி டெவலப்சின் வாடகை வசதிகளுக்காகவும் ஏனைய நிருவாகச் செலவினங்களுக்காகவும் ரூ.5,000,000 இனைப் பங்குடமையில் முதலீடு செய்ய வேண்டுமென்வும் திரு.து கம்பனியின் தொழிற்பாடுகளுக்கு முழுப்பொறுப்பாக இருக்க வேண்டும் எனவும் உடன்படிக்கை குறிப்பிடுகிறது. பங்குடமை தொடர்பான அனைத்துத் தீர்மானங்களும் ஏகமனதானவையாக இருத்தல் வேண்டும். உடன்படாமல் போகுமிடத்து இருவரில் ஒருவர் பங்குடமையினை முடிவிற்குக் கொண்டு வரத் தீர்மானிக்கலாம். திரு.T உம் திரு.J யும் வியாபாரத்திலிருந்து கிடைக்கும் இலாபத்தினை 50/50 என பிரித்துக் கொள்வர். பங்குடமையினை முடிவிற்குக் கொண்டு வர அவர்கள் தீர்மானிக்குமிடத்து திரு.T வியாபாரச் சொத்துக்களின் விற்பனையில் 55 சதவீதத்தினைப் பெற்றுக்கொள்கின்ற வேளையில் திரு.J 45 சதவீதத்தினைப் பெற்றுக்கொள்வார்.

இந்த உதாரணத்தில் நிதியியல் நிறுவனம் பின்வருவனவற்றைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது:

- திரு.T மற்றும் திரு.J இற்கிடையிலான பங்குடமைகளின் விபரங்கள் உட்பட நிறுவனத்தின் சொத்துரிமை அமைப்பு;
- திரு.T மற்றும் திரு.J இருவரும் பங்குடமையினைக் கட்டுப்படுத்துகின்றமையினால் அவர்களின் அடையாளங்கள்;
- இத்தகவல்களை நிதியியல் நிறுவனம் பெற்றுக்கொண்ட விதம்; அத்துடன்

- தகவலின் துல்லியத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்.

  குறிப்பு: பங்குடமையின் சொத்துரிமையும் கட்டுப்பாடும் திரு.வு இற்கும் திரு.J இற்குமிடையில் பகிரப்பட்டுள்ளமையினால் இவ்வுதாரணத்தில் வியாபார அமைப்பு முக்கியமானதாகும். பதிவேடுகளைப் பேணுகின்ற தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் அதேபோன்று பெறப்பட்ட வியாபாரச் சொத்துரிமைத் தகவல்களின் துல்லியமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்குமாக நிதியியல் நிறுவனம் பங்குடமை உடன்படிக்கையின் பிரதியொன்றினை வைத்திருப்பது அவசியமாகும். அத்தகைய உடன்படிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில் திரு.T மற்றும் திரு.J இடையில் காணப்பட்ட பங்குடமை எழுதப்பட்ட உடன்படிக்கையினைக் கொண்டிருந்தது என பதியப்படுதல் வேண்டும்.

2018 ஏப்பிறல் 19ஆம் நாள் விடுக்கப்பட்டது

**பின்னிணைப்பு I - பயன்பெறும் சொத்துரிமைப் படிவம்**

| **பயன்பெறும் சொத்துரிமைப் பிரகடனம்** | |
|---|---|
| *2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2(3) இன் நியதிகளில் விடுக்கப்பட்ட 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகளின் கீழ் இப்படிவம் வழங்கப்படுகிறது. இப்படிவத்தினை அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட இதையொத்த படிவத்தினை சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர்களினால் அவர்களின் சிறந்த அறிவுக்கெட்டிய விதத்தில் நிரப்ப வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது. நிரப்பப்பட்டு கையொப்பமிடப்பட்டு சாட்சியும் கையொப்பமிட்ட இப்படிவத்தின் மூலப்பிரதியினை நிதியியல் நிறுவனம் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் கேட்டுக் கொள்ளுமிடத்து தகுதிகாண் அதிகாரிகளுக்குக் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.* | |
| **வாடிக்கையாளரை அடையாளப்படுத்தல்:** | |
| கணக்கினைத் திறக்கின்ற இயற்கை ஆளின் பெயரும் பதவியும் | |
| கணக்கு திறக்கப்பட்டிருக்கும் சட்ட ஆளின் பெயர், பதிவு இலக்கம் மற்றும் முகவரி | |
| கணக்குத் திறக்கப்பட்டிருக்கும் சட்ட ஒழுங்கு ஏற்பாடுகளின் பெயர் உறுதி இலக்கம், நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் முகவரி | |
| நான் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறேன் நான் : | |
| ☐ | இக்கணக்கிற்கான வாடிக்கையாளரின் ஏக பயன்பெறும் சொந்தக்காரராக[2] இருக்கிறேன். |
| ☐ | இக்கணக்கின் வாடிக்கையாளரது பயன்பெறும் சொந்தக்காரராக[3] நான் இருக்கவில்லை. வாடிக்கையாளரின் பங்குரிமை மூலதனத்தில் 10 சதவீதம் அல்லது அதற்கும் கூடுதலான பங்குரிமை மூலதனத்தினைச் சொந்தமாக அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள, யாருடைய சார்பில் கணக்கு தொழிற்படுத்தப்பட்டு வருகின்றதோ அக்கணக்கின் பயன்பெறும் சொந்தக்காரர்கள் அத்துடன் குறைந்தபட்சம் ஒருவர், அவர் ஏற்கனவே பட்டியலிடப்பட்டிருக்கின்றாரா என்பதனைக் கருத்திற் கொள்ளாது சட்ட ரீதியான நிறுவனத்தினைக் காத்திரமான விதத்தில் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்பவர் ஆகிய அனைத்துப் பயன்பெறும் சொந்தக்காரர்களின் தகவல்களையும் பூரணமாக அடையாளம் காணுதல். |

| பெயர் | தே.அ.அ. அல்லது கடவுச்சீட்டு இலக்கம்/ வழங்கிய நாடு/ பிரசாவுரிமை பெற்றுள்ள நாடு | பிறந்த திகதி | தற்போதைய முகவரி | பயன்பெறும் சொத்துரிமையின் மூலம் (1 = பங்குரிமை மூலதனம் (குறியீடு %) 2 = காத்திரமான கட்டுப்பாடு, 3 = யாரின் சார்பில் கணக்கு தொழிற்படுத்தப்படுகின்றதோ அந்த ஆள்) | அரசியல் ரீதியில் முகம் கொடுக்கின்ற ஆளா என்பதனைப் பரிசோதித்தல் |
|---|---|---|---|---|---|
| | | | | | ☐ |
| | | | | | ☐ |
| | | | | | ☐ |
| | | | | | ☐ |
| | | | | | |

| **வாடிக்கையாளரின் சார்பில் தொழிற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட இயற்கை ஆள் தொடர்பான விபரங்கள்** |
|---|
| பெயர்: |
| தே.அ.அட்டை/ கடவுச்சீட்டு: |
| பிறந்த திகதி: |

2 “பயன்பெறும் சொந்தக்காரர்” என்பது, ஒரு வாடிக்கையாளரை இறுதியாகத் தமதாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஒரு இயற்கை ஆள் அல்லது எந்த ஆளின் சார்பில் கொடுக்கல்வாங்கலொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஆள் என்று பொருளாகுமென்பதுடன், ஆளொருவர் மீது அல்லது சட்ட ஒழுங்கேற்பாட்டின் மீது இறுதிப் பயனுறும் கட்டுபாட்டைப் பிரயோகிக்கின்ற ஆளையும் உள்ளடக்கும்.”

3 “அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆள்” என்பது, ஒன்றில் உள்நாட்டு ரீதியில் அல்லது ஒரு வெளிநாட்டினால், அல்லது ஒரு சர்வதேச ஒழுங்கமைப்பில் பிரபல்யமான பொதுப்பணிகள் பொறுப்பிக்கப்பட்ட ஆள் ஒருவர் என்று பொருளாகும் என்பதுடன், ஓர் அரசின் அல்லது அரசாங்கத்தின் தலைவரையும், ஓர் அரசியல்வாதியையும், ஒரு சிரேட்ட அரசாங்க அலுவலரையும் நீதி முறை அலுவலர் அல்லது இராணுவ அலுவலரையும், அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனம், அரசாங்க அல்லது தன்னாட்சிக்குக் குழு என்பவற்றின் சிரேட்ட நிறைவேற்ற அலுவலரையும் உள்ளடக்கும் ஆனால் நடுத்தரப் பதவி வரிசையிலுள்ள அல்லது கனிஷ்ட பதவி வரிசையிலுள்ள தனியாட்களை உள்ளடக்காது.

| |
|---|
| கையொப்பம்:<br>(இங்கே உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களினதும் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தும் விதத்தில் உமது கையொப்பம்) |
| **பயன்பெறும் சொத்துரிமையினைச் சரிபார்த்தல்** |
| |
| **அதிகாரம்பெற்ற நிதியியல் நிறுவனத்தின் அலுவலர்** |
| பெயர்: |
| பதவி: |
| திகதி: |
| கையொப்பம் மற்றும் முத்திரை:<br>(இப்படிவத்திலுள்ள கையொப்பம் யாருடையதோ அந்த வாடிக்கையாளரை நீர் அடையாளம் கண்டிருக்கிறீர் என்பதனை உறுதிப்படுத்தும் விதத்திலும் குறிப்பிட்ட சாட்சிகளின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தும் விதத்திலும் உங்களின் கையொப்பம்) |

**தொடர்: 037/06/001/0001/016** 2018 ஏப்பிறல் 26

**சுற்றறிக்கை - 01/18**

சேரல்: உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

கனம் ஐயா/ அம்மணி

**இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களை நடத்துவதற்கான நடவடிக்கை முறை**

2015ஆம் ஆண்டின் பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளைச் சரிசெய்யும் பொருட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை நிதியியல் உளவறிதல் பிரிவு எடுத்திருக்கிறது. இதற்கமைய, உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் தலத்திலான பரீட்சிப்புக்கள் 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன) விதிகள் மற்றும் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட பரீட்சிப்புக்கள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(அ) நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர், தொடர்பான நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு, நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 15(1)(உ) இன் நியதிகளில் பரீட்சிப்பு ஒன்றை ஆரம்பிப்பது பற்றி எழுத்து மூலம் அறிவிப்பார்.

(ஆ) தலத்திலான பரீட்சிப்புக்களை நடத்துவதற்காக, நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது/ தெரிவுசெய்யப்பட்ட கிளைகளுக்கு எமது பரீட்சிப்பாளர்கள் விஜயம் செய்வர்.

(இ) மேற்பார்வை தொடர்பில் கரிசனைகள் ஏதுமிருப்பின், பரீட்சிப்புக்கள் முடிவடைந்தமையின் பின்னர் நிதியியல் நிறுவனத்திற்கு அறிவிக்கப்படும்.

(ஈ) நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகள் என்பனவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 19ஆவது பிரிவிற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2017.01.17 அன்று விடுக்கப்பட்ட எண் 01/17 கொண்ட சுற்றறிக்கையானது அதன் கீழ் முன்னர் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு விடயத்திற்கும் பங்கமின்றி இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
**பதில் பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

**பிரதி: அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் இணங்குவிப்பு அலுவலர்களுக்கு**

**தொடர்: 037/04/010/0002/017** 2018 மே 18

**வழிகாட்டல் இல. 05/2018**

சேரல்: அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார்நிபுணத்துவத்தினர்களுக்கு

**2017ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் (கொரிய சனநாயக மக்கள் குடியரசுடன் தொடர்பான தடைகள்) ஒழுங்குவிதிகளை நடைமுறைக்கிடுவது மீதான 2018ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வரவுள்ளதுடன், 2017ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் (கொரிய சனநாயக மக்கள் குடியரசுடன் தொடர்பான தடைகள்) ஒழுங்குவிதிகள், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2(3) இன் கீழ் விடுக்கப்பட்ட 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகள், 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகள் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலாதலும் வேண்டும்.

**பதில் பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்

**2017ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் (கொரிய சனநாயக மக்கள் குடியரசு தொடர்பான தடைகள்) ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல் மீதான 2018ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வழிகாட்டல்கள்**

**அறிமுகம்**

1. 1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு வழங்கப்பட்ட அதிகாரவரம்பின் கீழ் செயற்படுகின்ற அமைச்சரானவர், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு "நிதி வியாபாரம்" மற்றும் "குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம்" என்பனவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு (இதனகத்துப் பின்னர் நிறுவனங்கள் என குறிப்பீடு செய்யப்படும்) ஏற்புடைத்தான விதத்தில் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2017 ஒத்தோபர் 6ஆம் திகதியிடப்பட்ட இல. 2039/32 கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் 2017ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் (கொரிய சனநாயக மக்கள் குடியரசு தொடர்பான தடைகள்) ஒழுங்குவிதிகளை விடுத்தார்.
2. கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதிகள் ஏற்பாட்டுடன் நிதி நிறுவனங்கள் இணங்கிச் செல்வதற்கு வசதியளிப்பதற்காகவும் இதனை இலங்கையில் காத்திரமான முறையில் நடைமுறைக்கிடுவதற்காகவும் நிதியியல் நிறுவனங்களினால் பின்பற்றப்படுவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவினால் தற்போதைய வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.
3. இவ்வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்குவரும் என்பதுடன் இதனை 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் கொரியா சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலும் வேண்டும்.
4. கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதிகள் 'குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியலிலுள்ளவர்களுக்கும்' (இதனகத்துப் பின்னர் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதேபோன்று கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதிகளின் 'தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளின்' கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனத்திற்கும் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களையும் நிதியியல் பணிகளை மேற்கொள்வதிலிருந்து இலங்கையிலுள்ள எவரேனும் தனிப்பட்டவர் அல்லது தொழில்முயற்சிகள் அல்லது இலங்கையின் நியாயாதிக்கத்திற்குள்ளேயோ அல்லது வெளியிலேயோவுள்ள இலங்கையின் தனிப்பட்டவர்களையும் கட்டுப்படுத்துகின்றன.

**குறித்துரைக்கப்பட்ட ஆட்கள், குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்காக கணனித் திரையூடாக நுணுக்கமாக ஆராயும் பொறிமுறையொன்றினை ஏற்படுத்தல்**

5. நிறுவனங்கள் கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதற்கு இரண்டு கட்டங்களிலான அணுகுமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.
   (i) முதலாவது கட்டம் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் சார்பில் தொழிற்படுகின்ற (இயற்கை அல்லது சட்ட ஆள்) எவரேனும் ஆள் திரட்டப்பட்ட பட்டியலுக்கெதிராக அவர்களின் வாடிக்கையாளர்களை நுண்ணாய்வு செய்தல்.
   (ii) இரண்டாவது கட்டம் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள், ஆடம்பரப்பொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் என்பனவற்றுடன் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்களையும் நிதியியல் பணிகளையும் அடையாளம் காணுதல்.
6. கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதி 19(3)இன்படி, தகுதிவாய்ந்த அதிகாரி 2018 ஏப்பிறல் 19ஆம் திகதியிடப்பட்ட இல. 2067/14 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானி மூலம் குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் முதலாவது பட்டியலை வெளியிட்டிருக்கிறார். இது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை மற்றும் 1718 தீர்மானத்தினைத் தொடர்ந்து நிறுவப்பட்ட பாதுகாப்புச் சபைக் குழு (இதனகத்துப் பின்னர் கொரிய சனநாயக மக்கள் குடியரசின் குழு எனக் குறிப்பீடு செய்யப்படும்) என்பனவற்றினால் குறித்துரைக்கப்பட்ட 70 தனிப்பட்டவர்களையும் 54 நிறுவனங்களையும் உள்ளடக்கியிருந்தது. இப்பட்டியலானது கொரிய சனநாயக மக்கள் குடியரசின் குழுவினால் அடிக்கடி இற்றைப்படுத்தப்படுவதுடன் திரட்டப்பட்ட இற்றைப்படுத்தப்பட்ட பட்டியல் கொரிய சனநாயக மக்கள் குடியரசின் குழுவினது வெப்தளமான http://www.un.org/sc/suborg/en/sanctions/1718/materials இல் (PDF, XML அல்லது HTML இல்) கிடைக்கத்தக்கதாகவுள்ளது. கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதி 19(4)இன்படி, நிதியியல் உளவறிதல் பிரிவு திரட்டப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பட்டியலை இற்றைப்படுத்தும் வேளைகளில் அதனை நிறுவனங்களுக்கு மின்னஞ்சல் மூலம் அறிவிக்கும். இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலுக்கான இணைப்பும் நிதியியல் உளவறிதல் பிரிவின் வெப்தளத்தில் 'ஐக்கிய நாடுகள் தடை-> ஆயுதப்பெருக்கத்தின் மீதான தடை' பிரிவில் கிடைக்கத்தக்கதாகவுள்ளது.
7. நுண்ணாய்வினை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனங்கள் முழுமையான துல்லியமான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தரவுத்தளத்தினை இலத்திரனியல் வடிவல் (கணனியை அடிப்படையாகக் கொண்டது) பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

**குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் பட்டியலுக்கெதிராக வாடிக்கையாளர் தளத்தினை நுண்ணாய்வு செய்தல்**

8. குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் பட்டியலை இற்றைப்படுத்துவது மீதான நிதியியல் உளவறிதல் பிரிவினால் அறிவித்தல்கள் வழங்கப்படும் வேளையில் நிறுவனங்கள் இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலை கொரிய சனநாயக மக்கள் குடியரசுக் குழுவின் வெப்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் பட்டியலுக்கெதிராக அவர்களது வாடிக்கையாளர் தளத்தினை முழுமையாக நுண்ணாய்வு செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன. நிறுவனங்கள் ஆய்வுச் செயன்முறைக்காக பெயர், பிறந்த திகதி, தேசிய இனம், கடவுச்சீட்டு/ தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றை இணைந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது. பட்டியல் உள்ளடக்கத்திற்கும் நிறுவனங்களின் தரவுத்தளத்திலுள்ள வாடிக்கையாளர் தரவுகளுக்கிடையில் நுட்பமான வேறுபாடுகளை காணக்கூடுமாகையால் காத்திரமான ஆய்வுகளை மேற்கொள்ள உச்சரிப்பு ரீதியான ஆய்வுகள் விதந்துரைக்கப்படுகின்றன.
9. கொரியா சனநாயக மக்கள் குடியரசுக் குழுவின் வெப்தளத்திலிருந்து இற்றைப்படுத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் பட்டியலை கிரமமாகப் பெற்று அதனை நுண்ணாய்வுச் செயன்முறைக்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. புதிய வாடிக்கையாளரொருவருக்காக புதிய கணக்கொன்று திறக்கப்படுகின்ற வேளையில் அவ்வாடிக்கையாளரின் விபரங்கள் குறித்துரைக்கப்பட்ட பட்டியலுக்கெதிராக நுண்ணாய்வு செய்யப்பட்டு அந்த வாடிக்கையாளர் குறித்துரைக்கப்பட்ட ஆள் அல்லவென்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. அதேபோன்று, எந்தவொரு வாடிக்கையாளருக்காகவும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது நிறுவனங்கள் கொடுக்கல்வாங்கலை அனுப்புபவரையும் பெறுபவரையும் குறித்துரைக்கப்பட்ட பட்டியலுக்கெதிராக நுண்ணாய்விற்குட்பட்ட குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் இதில் தொடர்புபடவில்லை

என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10. நிறுவனங்கள் அவர்களது பயன்பெறுநர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கான செயன்முறையினை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமெனவும் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் நிதியத்தின், கணக்கின் அல்லது ஏனைய சொத்துக்களின் பயன்பெறுநர்களாக இல்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக இவ்வழிகாட்டல்கள் 8 மற்றும் 9இல் விபரிக்கப்பட்ட அதே நடைமுறைகளை பிரயோகிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் பயன்பெறுநர்களை அடையாளம் காணும் விதத்தில் அத்தகைய செயன்முறைகளை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுவதுடன், தேவையானவிடத்து நிதியம், கணக்குகள் அல்லது சொத்துக்களின் பயன்பெறுநர்களை அடையாளம் காண்பதற்கு நிறுவனங்களுக்குள்ளே மேற்கொள்ளப்பட்டிருக்கும் இயலாற்றலிற்குட்பட்டு சிறந்த முயற்சிகளை எடுத்துக்காட்ட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**குறித்துரைக்கப்பட்ட விடயங்கள், ஆடம்பரப்பொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களையும் நிதியியல் பணிகளையும் அடையாளம் காணுதல்**

11. கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதி 4(2)இன்படி, தகுதிவாய்ந்த அதிகாரி 2018 ஏப்பிறல் 19ஆம் திகதியிடப்பட்ட இல. 2067/14 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் ஆடம்பரப்பொருட்களின் முதலாவது பட்டியல் வெளியிடப்பட்டது. குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் பட்டியலைப் போன்று நிதியியல் உளவறிதல் பிரிவு குறித்துரைக்கப்பட்ட மற்றும் ஆடம்பரப்பொருட்களுக்கான இற்றைப்படுத்தலை மின்னஞ்சல் மூலம் அறிவிக்கும். இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலுக்கான இணைப்பும் நிதியியல் உளவறிதல் பிரிவின் வெப்தளத்தின் 'ஐக்கிய நாடுகள்-,ஆயுதப்பொருட்களுக்கான தடைகள்' பிரிவில் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. வர்த்தக கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது, கொரிய சனநாயக மக்கள் குடியரசின் தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள் (கொரிய சனநாயக மக்கள் குடியரசின் அரசாங்கம் உட்பட, அவர்கள் குறித்துரைக்கப்பட்ட ஆட்களா அல்லது இல்லையா என்பதனை கருத்திற் கொள்ளாது) தரப்பினராக அல்லது பயன்பெறுநர்களாக இருக்குமிடத்து வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களோ அல்லது ஆடம்பரப்பொருட்களோ தொடர்புபடவில்லை என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு வர்த்தகம் கொரிய சனநாயக மக்கள் குடியரசிலிருந்து/ அல்லது அதற்கு அல்லது அதன் அயல் நாடுகளுக்கு இடம்பெறுமிடத்து நிறுவனங்கள் கொடுக்கல்வாங்கல்களின் தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் வர்த்தகம் தொடர்பில் கூடுதலான தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

12. நிறுவனங்கள் நிதியியல் பணிகளை வழங்கும் பொழுது அல்லது நிதியியல் சொத்துக்களை அல்லது ஏனைய சொத்துக்களை எவரேனும் ஆட்கள் அல்லது நிறுவனத்திற்கு மாற்றல் செய்யும் பொழுது, இறுதிப் பயன்படுத்துநர் ஒழுங்குவிதி 10 பற்றி கூடுதலான விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் அத்தகைய பணிகள் அல்லது மாற்றல்கள் ஏவுகணைச் செலுத்திகளுடன் தொடர்புபட்டனவாக அல்லது பாரிய சேதங்களை விளைவிக்கும் ஏனைய ஆயுதங்கள் - (இரசாயனம், உயிரின ரீதியான, அணுஆயுதம்) தொடர்பான நடவடிக்கைகள் அல்லது கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதிகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட தடை செய்யப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

13. கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதி 11இன்படி, கொரியா சனநாயக மக்கள் குடியரசின் தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்களுடன் ஏதேனும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவருக்கு (கொரிய சனநாயக மக்கள் குடியரசின் அரசாங்கம் உட்பட குறித்துரைக்கப்பட்டவரா அல்லது இல்லையா என்பதனைக் கருத்திற் கொள்ளாது) அரச மற்றும் தனியார் நிதியியல் உதவிகளை வழங்கக்கூடாது என நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், கொரிய சனநாயக மக்கள் குடியரசின் நிதியியல் நிறுவனங்களுடன் எந்தவொரு தொடர்புநிலை உறவுகளையும் நிறுவிக் கொள்ள வேண்டாம் என நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

**நிதிகள், கணக்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை முடக்குதல்**

14. தகுதிவாய்ந்த அதிகாரி குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் நிதிகள், கணக்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை முடக்குவதற்காக 2018 மே 14ஆம் திகதியிடப்பட்ட இல.2071/03 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் முடக்குகின்ற கட்டளையினை விடுத்தார். இதன்படி, நிறுவனங்கள் அவர்களது வாடிக்கையாளர்களைக் நுண்ணாய்வு செய்யுமாறும் குறித்துரைக்கப்பட்ட ஆட்களை அடையாளம் காணுகின்றமையினைத் தொடர்ந்து நிறுவனங்களுடன் பேணப்படுகின்ற அத்தகைய நிதிகள், கணக்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை உடனடியாக முடக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

15. வாடிக்கையாளர் குறித்துரைக்கப்பட்ட ஆளா என்பதனைக் கண்டறியும் பொருட்டு வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தின் கீழ் பெறப்பட்ட வாடிக்கையாளரை அடையாளம் காணும் தகவல்களையும் அதேபோன்று பகிரங்கமாகக் கிடைக்கும். ஏனைய தகவல்களையும் பயன்படுத்துமாறு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

16. தனிப்பட்ட ஒருவர் அல்லது நிறுவனம் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட பட்டியலிலுள்ள தகவல்கள் போதுமானதாக இல்லாமையின் காரணமாக, வாடிக்கையாளர் குறித்துரைக்கப்பட்ட ஆளா என்பதனைத் தீர்மானிப்பதற்கு நிறுவனங்களினால் முடியாவிட்டால், கூடுதலான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவினைத் தொடர்பு கொள்ளலாம்.

17. குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் நிதியினையும் மற்றைய சொத்துக்களையும் முடக்கிய பின்னர், நிறுவனங்கள் வாடிக்கையாளர் விபரங்கள் மற்றும் நிதியின் தன்மை என்பன உட்பட முடக்கல் நடவடிக்கைகள் பற்றி தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கும் உடனடியாக அறிவிக்க வேண்டுமென நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. அதன் பின்னர், நிறுவனங்கள் சொத்துக்கள் முடக்கப்பட்டமை பற்றி உடனடியாக வாடிக்கையாளர்களுக்கு அறிவிப்பதற்கு நியாயமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

18. நிறுவனங்கள் முடக்கப்பட்ட கணக்குகளுக்கான வைப்புக்களை அனுமதிக்கலாம். எனினும், அத்தகைய வைப்புக்களும் கணக்கில் முடக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டனவாக இருத்தல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரி குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் சொத்துக்கள் மீதான முடக்கத்தினை நீக்குவதற்கான கட்டளையினை விடுக்கலாம் என்பதுடன் நிறுவனங்கள் அக்கட்டளைகளை உடனடியாகப் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

19. சொத்துக்கள் முடக்கப்பட்ட வாடிக்கையாளர், ஒரே மாதிரியான அடையாளத்தின் காரணமாக, தான் குறித்துரைக்கப்பட்ட ஆளெனத் தவறாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக முறையிடுமிடத்து நிறுவனங்கள் அத்தகைய வாடிக்கையாளரைத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கும் அத்தகைய முடக்குதலை நீக்குமாறு கோரிக்கையொன்றினைச் செய்வதற்கு அவரை நெறிப்படுத்துமாறு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

20. கொடுக்கல்வாங்கலில் அல்லது நிதியியல் பணிகளிலுள்ள குறித்துரைக்கப்பட்ட ஆள் நிறுவனங்களின் வாடிக்கையாளரல்லர் என

அடையாளம் காணுமிடத்து (எனவே சொத்துக்கள் முடக்கப்படமாட்டாது) நிறுவனங்கள் கொடுக்கல்வாங்கல்களை அல்லது நிதியியல் பணிகளை மேற்கொள்ள வேண்டாமெனவும் அத்தகைய நடவடிக்கையின் விபரங்களைத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அறிவிக்குமாறும் இது தொடர்பான சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**பல்வகை விடயங்கள்**

21. குறிப்பிட்ட வாடிக்கையாளரொருவர் குறித்துரைக்கப்பட்ட ஆளாக இருப்பாரா என்ற சந்தேகம் நிறுவனத்திற்கு இருக்குமாயின், அதனைக் கண்டறிவதற்காக வாடிக்கையாளரிடமிருந்து மேலதிகத் தகவல்களைக் கோருதல் வேண்டும். நிறுவனங்கள், வாடிக்கையாளரிடமிருந்து அத்தகைய தகவல்களை வாடிக்கையாளருக்கு 'துப்புக்கள் கிடைக்காத' விதத்தில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றன. சொத்துக்கள் வெளிச்செல்வதனைத் தடுப்பதற்கு நிதிகள், கணக்குகள் அல்லது ஏனைய சொத்துக்களை மீட்டுக் கொள்வதற்கான விண்ணப்ப நடைமுறைகளுக்குப் பின்னர் வாடிக்கையாளர்களிடமிருந்து அத்தகைய விசாரணை தேவைப்படுத்தப்படும்.

22. நிறுவனங்கள், மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகள் குறிப்பாக, பாரிய சேதங்களை விளைவிக்கும் ஆயுதப்பெருக்கத்துடன் தொடர்பான வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களை எவ்வாறு அடையாளம் காண்பது என்பது தொடர்பில் அறிந்து கொள்ளச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

23. கொரிய சனநாயக மக்கள் குடியரசின் சொத்துக்களை முடக்குதல் மற்றும் ஏனைய தடை செய்யப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளிலுள்ள ஏற்பாடுகளை மீறும் எவரேனும் ஆள் குற்றமொன்றிற்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன் உயர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டு இரண்டிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதி வரையான சிறைத்தண்டனைக்கும் அத்துடன்/ அல்லது ஒரு மில்லியன் ரூபாவினை விஞ்சாத தண்டத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

24. தகுதிவாய்ந்த அதிகாரி, நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றும் முடக்கப்பட்ட சொத்துக்களின் வாடிக்கையாளர் ஆகியோருக்கு அறிவித்தலை வழங்குவது தொடர்பான கொரிய சனநாயக மக்கள் குடியரசின் ஒழுங்குவிதிகளின் ஏற்பாட்டினை மீறுகின்ற எவரேனும் ஆள் குற்றமொன்றிற்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன் உயர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர் ஓராண்டை விஞ்சாத காலப்பகுதிக்கு சிறைத்தண்டனையையும் அத்துடன் அல்லது ஐந்து இலட்சம் ரூபாவினை விஞ்சாத தண்டத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

**2018 மே 18**

**தொடர்: 037/03/011/0001/018** 2018 ஓகத்து 06

**வழிகாட்டல் இல. 06/2018**

சேரல்: அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்

**2018ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்**

**அறிக்கையிடல் மீதான நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன் 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்துடனும் 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் (படிவம்) ஒழுங்குவிதிகளுடன் சேர்த்து வாசிக்கப்படுதலும் வேண்டும்.

**பணிப்பாளர்**

**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்கள்

**2018ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

**அறிக்கையிடல் மீதான நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள்**

**அறிமுகம்**

1. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 15(1)(ஜே) பிரிவினைப் பின்பற்றும் விதத்தில் விடுக்கப்பட்ட இவ்வழிகாட்டல்கள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு "நிதி வியாபாரத்தில்" ஈடுபட்டுள்ள அல்லது மேற்கொள்கின்ற நிதியியல் நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தானதாகும்.

2. 2017 ஏப்பிறல் 21ஆம் திகதியிடப்பட்ட இல.2015/56 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் (படிவம்) ஒழுங்குவிதிகள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு "நிதியியல் வியாபாரத்தில்" ஈடுபட்டுள்ள அல்லது நடத்துகின்ற நிறுவனங்கள் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும். இவ்வழிகாட்டல்கள் பூரணமானதாக இருக்குமென கருதப்படாததுடன் நிதியியல் உளவறிதல் பிரிவிலிருந்தான சட்ட ஆலோசனைகளையும் கொண்டிருக்கவில்லை. இந்த வழிகாட்டல்களிலுள்ள எந்தவொரு விடயமும் 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் (படிவம்) ஒழுங்குவிதிகள் அல்லது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் நிதியியல் நிறுவனங்களை அவற்றின் ஏதேனும் கடப்பாடுகளிலிருந்து விடுவிக்கும் என பொருள்கோடலாகாது.

3. நிதியியல் உளவறிதல் பிரிவினாலும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் போன்றவற்றுடன் தொடர்பான சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு மற்றும் விசாரணைகளின் தரத்தின் காத்திரமான தன்மையினை அதிகரிப்பதில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடலின் தரம் முக்கியமானதாகும். இது, இலங்கையின் நிதியியல் முறைமைகள் குற்றவாளிகளினாலும் பயங்கரவாதிகளினாலும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதனைத் தடுப்பதற்கு உதவும். இவ்விடயத்தில் தரம் என்பது அறிக்கைகள் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தான பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் பூரணமானதாகவும் துல்லியமானதாகவும் பிந்தியவையாகவும் இருக்க வேண்டுமென்பதேயாகும்.

இவ்வழிகாட்டலின் நோக்கம் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளின் தரத்தினை மேம்படுத்துவதில் நிதியியல் நிறுவனங்களுக்கு உதவுவதேயாகும்.

**சட்டக் கடப்பாடு**

4. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆவது பிரிவு பின்வருவனவற்றைத் தேவைப்படுத்துகிறது.

நிறுவனமொன்று

(அ) ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் ஏதேனும் சட்ட விரோதமான செயற்பாட்டை அல்லது வேறு ஏதேனும் குற்றவியல் தவறைப் புரிதலுடன் தொடர்பானதாக இருக்கக்கூடும் எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணத்தினைக் கொண்டிருக்குமிடத்து; அல்லது

(ஆ) அது

(i) 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தவறொன்றிற்கு ஆயத்தம் செய்கின்றதோர் செயலொன்றிற்கு இயைவுள்ளதென;

(ii) சட்ட விரோதமான செயற்பாடொன்றினை அமைத்துருவாக்கும் செயலொன்றுக்கான புலனாய்வொன்றிற்க அல்லது வேறு வகையில் இச்சட்டத்தினை அல்லது 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடை செய்யும் சட்டத்தினை அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தினை வரவுக்கிடுவதில் உதவக்கூடிய இயைபுள்ளதென சந்தேகத்திற்கு தகவலைக் கொண்டிருக்குமிடத்து,

நிறுவனம் சந்தேகம் உருவாகியுள்ள பின்னர் சாத்தியப்படக் கூடியளவு விரைவில், ஆனால் அதிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குப் பிந்தாமல் கொடுக்கல்வாங்கல் அல்லது தகவலை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

அத்தகைய அறிக்கைகள் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளாக இங்கே குறிப்பிடப்படுகின்றன.

5. மேலே குறிப்பிடப்பட்டவாறு நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின்படி, அனைத்து "நிறுவனங்களும்" சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும். நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 33ஆவது பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு நிறுவனம் என்பதன் கருத்து ஏதேனும் நிதித்தொழிலில் அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதியல்லாத் தொழிலில் அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதியல்லாத் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது அதனைக் கொண்டு நடத்துகின்ற எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு எனப் பொருள்படும்.

6. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 14(1)(ஆ)(iv) இன்படி ஒவ்வொரு நிறுவனமும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் 7ஆம் பிரிவின் கீழ் அறிக்கையிடும் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு நிறுவனமும் நடவடிக்கை முறைகளையும் முறைமைகளையும் உருவாக்கிப் பேணவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. மேலும் பிரிவு 14(1)(ஈ) ஒவ்வொரு நிறுவனமும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிந்து கொள்ளச் செய்வதற்காக அதன் அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் முகவர்களுக்குப் பயிற்சியளித்தல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகிறது.

7. 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களை வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதியின் 15ஆவது விதியின்படி, பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கையைக் கண்டறிதல் மீதான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் வழமைக்கு மாறான மற்றும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை உள்ளக அறிக்கையிடல் நடைமுறைகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுவதற்கான கடப்பாடு என்பனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

**சந்தேகங்களை உருவாக்கிக் கொள்வதற்கான முற்தேவைப்பாடுகள்**

8. காத்திரமான நிறுவன ரீதியான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கான நிதியளித்தலை ஒழித்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றின் தொழிற்பாட்டில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவது மிக முக்கியமான தொழிற்பாடொன்றாகும். பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொழிற்பாடு அர்த்தமுடையதாக இருப்பதற்கு, நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் மீது விடுக்கப்பட்ட அனைத்து விதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் உட்பட நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நிதியியல் நிறுவனங்களின் காத்திரமான நடைமுறைகளிலிருந்தான பெறுபேறுகள் முக்கியமானவையாக இருத்தல் வேண்டும். அத்தகைய காத்திரமான நடைமுறைகளைக் கொண்டிராத நிதியியல் நிறுவனங்கள் ஒன்றில் துல்லியமற்ற, பூரணமில்லாத அல்லது பொருத்தமற்ற சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு அல்லது சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் முழுமையாகப் பிழையாகிப் போவதற்கு வழிவகுக்கின்றன. அத்தகைய தவறுகைகள் ஒழுங்குமுறைப்படுத்தல், புகழ்வாய்ந்த தன்மை, தொழிற்பாட்டுத் தன்மை மற்றும் சட்ட ரீதியான இடர்நேர்வுகள் என்பனவற்றிற்கு நிதியியல் நிறுவனங்களை உள்ளாக்கிவிடும். சில விடயங்களைப் பொறுத்தவரையில் அத்தகைய தவறுகள் இயற்கையான மற்றும் சட்ட ஆட்கள் இருவரையும் குற்றவியல் பொறுப்பிற்குள்ளாக்கிவிடும்.

9. மிக நெருக்கமான வாடிக்கையாளர் உறவுகளுடன் கூடிய அநேகமான எல்லா மிகச் சிறிய நிறுவனங்களும் வாடிக்கையாளர் மற்றும் கொடுக்கல்வாங்கல்களைப் பற்றிய தகவல்களை முறையியல் சார்ந்த விதத்தில் பெற்று அவர்களது இணங்குவிப்பு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைக்குள் கூட்டிணைத்துக் கொள்ளுதல் வேண்டும். பாரிய நிதி நிறுவனங்களைப் பொறுத்தவரையில் இவை பெரும்பாலும் எப்பொழுதும் இலத்திரனியல் தகவல் முறைமையினையே கொண்டிருக்கின்றன. விதிகள், சூழ்நிலைகள் மற்றும் தோற்றப்பாடு என்பனவற்றின் அடிப்படையில் உண்மையில் தொழிற்படும் அத்தகைய முறைமைகள் எதிர்பார்க்கப்பட்ட மாதிரிகளிலிருந்து அவதானிக்கப்பட்ட மாதிரிகளின் பிறழ்வுகளை அளவிடுவதற்கு அல்லது மதிப்பிடுவதற்கு எதிர்பார்க்கிறது அல்லது நிதியியல் முறைமையின் துஷ்பிரயோகத்தில் அறிந்த மாதிரிகளுக்கான அவதானிக்கப்பட்ட மாதிரிகளின் இசைவுத்தன்மையினை அளவிட்டு மதிப்பீடு செய்கிறது. நிதியியல் நிறுவனங்களின் குறித்துரைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட இடர்நேர்வுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அத்தகைய முறைமைகளை மிகக் கவனமாக ஒன்றிணைப்பது அவசியமானதாகும். காத்திரமான தன்மைகளை உச்சப்படுத்துவதற்கு அத்தகைய முறைமைகளைத் தொடர்ச்சியாக மதிப்பிடுவதும் சீராக்குவதும் அவசியமாகவுள்ளதுடன், புதிய தொழிற்பாட்டு மற்றும் மூன்றாந்தரப்புத் தகவல்களுடன் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுவதும் நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வு முகாமைத்துச் செயன்முறையுடன் முழுமையாக ஒருங்கிணைப்பதும் அவசியமாகும். அத்தகைய முறைமைகள் எச்சரிக்கைகளை உருவாக்கும் பொழுது அத்தகைய

எச்சரிக்கைகளை நிதியியல் நிறுவனத்தின் இணங்குவிப்பு அலுவலரினால் மீளாய்வு செய்யப்படுவது முக்கியமானதாகும். அத்தகைய முறையினால் உருவாக்கப்பட்ட எச்சரிக்கைகள் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளுக்குக் காரணமாக இருக்கக்கூடிய வேளையில் இவ்வழிகாட்டல்களுக்கிணங்க அத்தகைய எச்சரிக்கைகள் முழுமையான சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை அவையாகவே உருவாக்கக்கூடியவையாக இருக்காது என்பதுடன் அத்தகைய சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க பதிலீடொன்றாகவும் இருக்காது.

தனியாகத் தொழிற்படும் முறைமைகள் காத்திரமானவையாக இருக்காது. முறைமையொன்று அதற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள தகவலின் அடிப்படையில் மாத்திரமே தொழிற்பட முடியும். முறைமைகள் மனிதனால் உருவான பொதுவான மனவெழுச்சி அல்லது வெறும் அனுமானம் அல்லது மனஉணர்வுகளைக் கொண்ட அடிப்படையில் இயங்குவது ஏற்புடையனவல்ல. அத்தகைய முறைமைகள் மனிதனால் வடிவமைக்கப்பட்ட விதிகள், சூழல்தன்மை மற்றும் தோற்றப்பாடு என்பனவற்றின் அடிப்படையிலேயே தொழிற்படுகின்றன. இக்காரணங்களினால் நிதியியல் நிறுவனங்கள் மனித ஈடுபாடுகளைத் தவிர்த்து முறைமைகளில் மாத்திரம் தங்கியிருக்க முடியாது.

10. வாடிக்கையாளரின் மூலம் மற்றும் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ளும் அறிவு எதுவாக இருப்பினும், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் முறைமையில் தொழில்நுட்ப நவீனத்துவங்கள் எதுவாக இருப்பினும் முறைமையினைத் தொழிற்படுத்துவதற்கு நிறுவன ரீதியான மனவுறுதி தேவையாக இருக்கும். அதாவது, சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களைக் கண்டறிவதற்கான மனவுறுதி இருத்தல் வேண்டும். அவை என்ன மாதிரியானவை, எப்பொழுது கண்டறியப்பட்டன எனப்னவற்றின் பொருட்டு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களைப் போன்ற நல்லெண்ணங்களை அடையாளம் காணுதல் மற்றும் அவை அங்கீகரிக்கப்படும் பொழுது அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் முழுமையானதும் துல்லியமானதுமான அறிக்கைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. அத்தகைய நிறுவன ரீதியான மனவுறுதி நிதியியல் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உட்பட மூத்த முகாமைத்துவத்திலுள்ளவர்களிடமிருந்தான கடப்பாடுகளின் மூலம் மிகக் காத்திரமான முறையில் உருவாக்கப்படுவதுடன் அது நிதியியல் நிறுவனத்தின் அலுவலர்களின் திடமான நடவடிக்கைகள் மற்றும் செயன்முறைகளினூடாக (அதாவது காத்திரமான உள்ளகக் கொள்கைகளின் அபிவிருத்தி; செயன்முறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்; இணங்குவிப்பு கணக்காய்வு; முறைமைகளில் முதலீடு செய்தல்; தொடர்ச்சியான அச்சமற்ற ஒழுக்கவியல்பு வாய்ந்த நியாயபூர்வமான நடவடிக்கைகள்) வளர்த்தெடுக்கப்படுகின்றன.

**சந்தேகம்**

11. சந்தேகத்திற்காக நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்தத் தொழிற்பாட்டு வரைவிலக்கணத்தினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். நிதியியல் நிறுவனமொன்றின் சந்தேகத்தின் தொழிற்படுகின்ற வரைவிலக்கணமானது தீர்க்கப்படாததும் பெறுமானமற்றதும் ஆனால் செயற்பாட்டு அம்சங்களின் குறிக்கோள் பற்றிய சந்கேத்தின் விடாப்பிடியான உணர்வுகள் மற்றும் நடத்தைகள் தொடர்பான சூழ்நிலைகள், தனியொரு கொடுக்கல்வாங்கல், தொடர்ச்சியான கொடுக்கல்வாங்கல்கள், எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்த விடயங்கள் என்பனவற்றின் மூலங்களைக் கூட்டிணைத்ததாக இருத்தல் வேண்டும். சில விடயங்கள் உளதாம் தன்மையிலிருக்கும் என்ற சூழ்நிலைகளின் மொத்தமான அறிவினையும் கருத்திற்கொள்கையில் சில விடயங்கள் இவ்வாறுதான் இருக்குமென எதிர்பார்க்கப்பட்டவாறு அல்லது விளங்கப்பட்டவாறு அமையவில்லை என்ற உணர்வு இருக்கமுடியும். ஒரு வழியில் அல்லது இன்னொரு வழியில் நிரூபணங்கள் கிடைக்காமையினால் சந்தேக உணர்வுகளுக்கு நிவாரணம் காண முடியாதிருக்கும். வரைவிலக்கணமானது உறுதியான ஆதாரங்களை அல்லது நிறைவான தெளிவான தன்மையினைக் கொண்டிராத நம்பிக்கையினை உருவாக்குவதனை அனுமதிப்பதாக இருக்க வேண்டும். அதேநேரம், வரைவிலக்கணமானது கற்பனையாக அல்லது விரைந்து மறைந்துவிடக்கூடிய நம்பிக்கையினை அனுமதிக்கக்கூடாது. நிச்சயமாக, வரைவிலக்கணமானது சந்தேகத்திற்குரிய நடத்தையாளர்களைக் கணக்கிலெடுத்தல் வேண்டும் என்பதுடன் சூழ்நிலைகளின் வழமைக்கு மாறான நடவடிக்கைகளையும் போதுமானதற்ற அல்லது நம்பகமான விதத்தில் விளக்கப்படாத விடயங்களையும் கணக்கிலெடுக்கக்கூடாது.

சந்தேகத்திற்கான தொழிற்பாட்டு வரைவிலக்கணம் நியாயமான தன்மை தொடர்பான பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். வரைவிலக்கணமானது மிகக் குறுகியதாக அல்லது கடுமையானதாக இருக்குமித்து, இது தெரியாத அல்லது எதிர்பார்க்கப்படாத சட்டத்திற்கு மாறான சூழ்நிலைகள் தொடர்பான கரிசனையைத் தோற்றுவிக்கும் அறிக்கைகள் உருவாக்கப்படுவதனை நீக்கிவிடலாம் (அதாவது "பிழையான எதிர்மறைகள்") என்பதுடன் குற்றவாளிகளின் தவிர்த்துக் கொள்ளும் தன்மையினையும் ஏற்படுத்தலாம். மறுபுறத்தில், மிகப் பரந்த அல்லது நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த வரைவிலக்கணம் போதுமானதற்றளவில் பகுப்பாய்வு செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையான அறிக்கைகளை உருவாக்குவதுடன் சட்டத்திற்கு மாறான சூழ்நிலைகளையும் பிரதிபலிப்பதில்லை (அதாவது "பிழையான நேர்க்கணியம்" அல்லது "அளவுக்கதிகமான இணங்குவிப்பு") நிதியியல் நிறுவனங்களைப் பொறுத்தவரையில், இலத்திரனியல் தகவல் முறைமைகள் அவற்றின் செயன்முறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்குமிடத்து தொழிற்பாட்டு வரைவிலக்கணங்கள் நிதியியல் நிறுவனத்தினால் வரைவிலக்கணம் செய்யப்பட்ட தூண்டுவிசைகள், தோற்றப்பாடுகள், சூழ்நிலைகள் மற்றும் சட்டம் என்பனவற்றினால் ஓரளவிற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சந்தேகக் குறிகாட்டிகளும் உருவியமும் அத்தகைய வரைவிலக்கணத்தின் மூலங்களாக இருக்கக்கூடும். நடத்தையின் "வழமைக்கு மாறான" மாதிரிகளும் கொடுக்கல்வாங்கல்களும் கூட இவ்வரைவிலக்கணங்களில் பிரதிபலிக்கப்படுதல் வேண்டும்.

கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நடத்தையாளர்களுக்கான சந்தேகத்திற்குரிய குறிகாட்டிகளின் முழுமையற்ற மற்றும் அலுவல்சார் ரீதியற்ற பட்டியலொன்று பின்னிணைப்பு 1இல் தரப்பட்டுள்ளது. நிதியியல் நிறுவனம், நிதியியல் நிறுவனத்தின் சொந்தக் குறிகாட்டிகளின் மூலம் இப்பட்டியலை முழுமைப்படுத்துதல் வேண்டும். குறிகாட்டிகளைப் பயன்படுத்தும் போது, இக்குறிகாட்டிகள் சரியான முறையில் உருவாக்கப்படவில்லை என்பதனையும் அவை தற்போதைய குற்றமுடைய தன்மையினை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதனையும் ஞாபகத்தில் கொள்ளுதல் வேண்டும். மாறாக, தெரிந்த குறிகாட்டிகள் போதாமல் இருப்பது குற்றமுடைய தன்மை இல்லாமல் இருக்கிறது என்ற கருத்தித் தரவேண்டுமென்ற அவசியமில்லை. ஒரு விதத்தில் குற்றவாளிகள் அத்தகைய குறிகாட்டிகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக அவற்றின் நடத்தையையும் சீராக்கக்கூடியதாக இருந்திருக்கலாம். பதிலாக, குறிகாட்டிகள் மற்றும் குறிப்பாக, குறிகாட்டிகளின் இணைந்த தன்மை சந்தேக உருவாக்கங்களுக்கு வழிவகுக்கக்கூடிய அதிகரித்த நுணுகிய ஆய்வுகளுக்குக் காரணங்களாக அமைதல் வேண்டும்.

12. நிதியியல் நிறுவனங்கள் அளவுக்கதிகமான இணங்குவிப்புக்களை கொண்டிருப்பது அல்லது குரோதமான இணங்குவிப்புக்களைக் கொண்டிருப்பது சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடலில் எதிர்பார்க்கப்பட்ட தரத்தினை உருவாக்கமாட்டாது. அளவுக்கதிகமான இணங்குவிப்புக்களும் குரோதமான இணங்குவிப்புக்களும் கடுமையாக ஊக்கமிழக்கச் செய்யப்படல் வேண்டும்.

நிதியியல் நிறுவனங்கள் பெருமளவான அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவை போதுமானளவிற்குப் பகுப்பாய்வு செய்யப்படாத போது

அல்லது சந்தேகத்தின் நியாயமான நியமத்தினைப் பூர்த்தி செய்யத் தவறும் பொழுது உருவாகிறது. அளவுக்கதிகமான இணங்குவிப்பினை, இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நிதியியல் நிறுவனங்களிலிருந்து நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு மாற்றிவிடுவதற்கானதொரு முயற்சியாக பார்க்க முடியும்.

குரோதமான இணங்குவிப்பு என்பது நிதியியல் நிறுவனமொன்று அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் போது அது சந்தேகத்திற்குரிய சில மேலெழுந்த வாரியான மூலங்களைக் கொண்டிருக்கின்ற போதும் கூட அவை உண்மையில் சந்தேகத்திற்குரிய தன்மையினையுடையனவல்ல என்பதனை நிதியியல் நிறுவனங்கள் தெரிந்து வைத்திருப்பதாகும்.

13. சிறந்த நம்பிக்கையுடன் நிதியியல் நிறுவனத்திற்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த உண்மையான விடயங்கள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் அத்துடன் நிதியியல் நிறுவனங்கள் சந்தேகம் பற்றி தாமாகவே விளங்கிக் கொள்ளும் பின்னணிக்கிடையிலும் மற்றும் நிதியியல் நிறுவனத்திற்கான இடர்நேர்வுகள் பற்றியும் பரிசீலனையில் கொண்டதன் பின்னர், நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தினை முழுமையாக விளங்கிக் கொண்ட பின்னரும் அத்துடன் அதன் விதிகள், ஒழுங்குவிதிகள் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல் என்பன நடைமுறைக்கிடப்பட்ட பின்னரும் கூட நிதியியல் நிறுவனங்கள் ஒன்றில் நடத்தையா அல்லது நடவடிக்கையா சந்தேகத்திற்குரியது என்பது பற்றிய சந்தேகத்தினைக் கொண்டிருக்குமாயின் சிறந்த நடவடிக்கையை அறிக்கையிடுவதாகவே கருதப்படுகின்றது.

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை அறிக்கையிடுதல்**

14. **நிதியியல் நிறுவனங்களுக்கு லங்கா பின் முறைமையினை அணுகுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ள வேளையில்:** அனைத்து அறிக்கைகளும் லங்கா பின் அதேநேர முறைமையினூடாக அல்லது நிதியியல் உளவறிதல் பிரிவினால் குறித்துரைக்கப்பட்ட பதில் முறைமையினூடாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அதனைத் தொடர்ந்து கையொப்பமிடப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் அச்சுப்பிரதி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு விநியோகிக்கப்படவோ அல்லது அஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்படவோ வேண்டும்.

15. **நிதியியல் நிறுவனங்களுக்கு லங்கா பின் முறைமையினை அணுகுவதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருக்காத போது:** கையொப்பமிடப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் அச்சுப்பிரதி விநியோகம் மூலமோ அஞ்சல் மூலமோ நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

16. அவசரமான சூழ்நிலைகளில் நிதியியல் நிறுவனங்கள் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை மின்னஞ்சல், தொலைநகல் அல்லது தொலைபேசி போன்ற ஏனைய வடிவங்களூடாகவும் சமர்ப்பிக்க முடியும். அதனைத் தொடர்ந்து லங்கா பின் ஊடாகவும் அத்துடன்/ அல்லது கையொப்பமிடப்பட்ட அச்சுப்பிரதியைப் பொருத்தமான விதத்தில் இருபத்து நான்கு மணித்தியாலத்திற்குள் சமர்ப்பிக்கலாம்.

**அறிக்கையிடுகின்ற நேரம்**

17. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் சந்தேகத்திற்குரிய அறிக்கைகளை நடைமுறைச் சாத்தியமானளவிற்கு விரைவாக ஆனால் சந்தேகம் உருவானதிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குப் பிந்தாமல் நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என தேவைப்படுத்துகிறது. இதன் கருத்து யாதெனில் சந்தேகத்தின் ஆரம்ப உருவாக்கத்தின் பின்னர் நிதியியல் நிறுவனத்தின் செயன்முறை, நடவடிக்கை முறை மற்றும் நடவடிக்கைகள் என்பனவற்றையெல்லாம் கருத்திற்கொள்ளாது சந்தேகத்தினை அது உள்ளவாறே, நிதியியல் நிறுவனங்களில் செயன்முறை நிறைவடையாத போதும் கூட அறிவித்தல் வேண்டும். நிதியியல் நிறுவனத்தின் சந்தேகத்தினைக் கையாள்வதற்கான செயன்முறையினையும் சந்தேகத்தினை அறிக்கையிடுவதனையும் சமகாலத்தில் மேற்கொள்ள முடியும்.

உதாரணமாக, நிதியியல் நிறுவனமொன்றின் வாடிக்கையாளர் சந்தர்ப்ப சூழ்நிலையொன்றில் பெறுகின்ற தந்தி மாற்றல் சந்தேகத்திற்குரியது என நிதியியல் நிறுவனம் உடனடியாகக் கருதுகின்ற பொழுது நிதியியல் நிறுவனம் கொடுக்கல்வாங்கலின் சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகளை நடைமுறைச் சாத்தியமானளவிற்கு விரைவாக அறிக்கையிடுதல் வேண்டும். எனினும், தந்தி மாற்றலின் உறுதிப்படுத்தலையும் அதன் விபரங்களையும் சரிபார்த்துக் கொள்வதற்கான உள்ளகச் செயன்முறையினை இரண்டு வேலை நாட்களிலும் தொடர்ந்து மேற்கொள்ள முடியும்.

18. அறிக்கையினை அனுப்பிய பின்னரும் கூட, நிதியியல் நிறுவனத்தின் ஆரம்ப சந்தேகத்தினை வலுப்படுத்துவதற்கு உதவியாக அல்லது மறுதலிப்பதற்கான மேலாக உண்மைகளையும் சூழ்நிலைகளையும் நிதியியல் நிறுவனம் கண்டறியுமாயின் நிதியியல் நிறுவனம் அவற்றை நிதியியல் உளவறிதல் பிரிவிற்குப் பொருத்தமான விதத்தில் அறிவித்தல் வேண்டும்.

**அறிக்கையிடலின் உள்ளடக்கம்**

19. **முழுமையான தன்மை:** தனியொரு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கை தனியானதொன்றாக இருத்தல் வேண்டுமென்பதுடன் சந்தேகம் தொடர்பான பூரணமான தகவல்களையும் கொண்டிருத்தல் வேண்டும். சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையொன்று சந்தேகம் பற்றிய முழுமையான தோற்றப்பாட்டினையும் அதேபோன்று பொருண்மியமான உண்மையினையும் சந்தேகம் உருவாவதற்கான சந்தர்ப்ப சூழ்நிலையினையும் அதற்குரிய காரணங்களையும் வழங்குதல் வேண்டும். பல் கொடுக்கல்வாங்கல்கள் அத்துடன்/ அல்லது நடத்தைகள் சந்தேகத்துடன் தொடர்புபட்டதாக இருக்குமிடத்து இவ்வனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய தனி அறிக்கையொன்று கோப்பிடப்படுதல் வேண்டும்.

20. **படிவ விபரணம்:** அறிக்கையின் விபரணப் பிரிவு மிக முக்கியமானதாகும். மற்றைய படிவ விடயங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தகவல்களை மட்டுமே உள்ளடக்கியிருப்பதனால் லங்கா பின் தொடர்பில் இது குறிப்பாக உண்மையானதாகும். இது சந்தேகத்தினை முழுமையாக விபரிப்பதற்கு நிதியியல் நிறுவனத்திற்குள்ள வாய்ப்பாக இருப்பதுடன் நிதியியல் நிறுவனத்தின் சந்தேகம் வலுப் பெறுவதற்கும் அதற்கு உதவியாகவும் பொருண்மிய ரீதியான உண்மைகளும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் அமைகின்றன. நிதியியல் நிறுவனம் லங்கா பின்னூடாக முழுமையான விபரமான விபரணங்களை வழங்க முடியாமல் இருக்கும் ஏதேனும் சந்தர்ப்பத்தில், நிதியியல் நிறுவனம் தனியானதொரு ஆவணத்தில் விபரணங்களை வழங்கி, சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் கையொப்பமிடப்பட்ட அச்சுப்பிரதியுடன் சேர்த்து நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில், நிதியியல் நிறுவனம் லங்கா பின் முறைமையின் விபரணத்தில் சுருக்கமான சாராம்சத்தினைக் குறிப்பிட் வேண்டுமென்பதுடன் முழுமையான விபரணம் அச்சுப்பிரதியுடன் சேர்த்து அனுப்பப்படும் என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விபரணம், என்ன, யார், எப்பொழுது, எங்கே, ஏன் மற்றும் எவ்வாறு என்ற அடிப்படை விபரண வினாக்களுக்கு சாத்தியமானளவிற்கு விடையளிக்க முயற்சித்தல் வேண்டும்.

நிதியியல் நிறுவனம் 'நாடு முழுவதிலுமுள்ள பல கிளைகளிலிருந்தும் பல உயர் பெறுமதி கொண்ட மூன்றாந்தரப்பினரின் வைப்புக்கள்' போன்ற சந்தேகங்களின் தெளிவற்ற விபரங்களை வழங்குவதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பதிலாக நிதியியல் நிறுவனங்கள் தெளிவான கணியம் சார்ந்த மற்றும் தரம் சார்ந்த விதத்தில் "இலங்கை ரூபா 75,000 - 90,000 இடையிலான பெறுமதியினைக் கொண்ட '10 மூன்றாந்தரப்பினரின் வைப்புக்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, மாத்தறை, காலி, கதிர்காமம் மற்றும் பதுளை கிளைகளிலிருந்து 2017 செத்தெம்பர் காலப்பகுதியில் கிடைத்திருக்கின்றன' போன்ற விபரங்களைத் தருதல் வேண்டுமென்பதுடன் அது தொடர்பான ஆதாரப்படுத்தல் ஆவணங்களையும் (உ-ம்: மூன்றாந்தரப்பு வைப்பாளர்கள்/ வைப்புக்களின் விபரங்கள் உட்பட 2017 செத்தெம்பர் மாதத்திற்கான கணக்குக் கூற்று) வழங்குதல் வேண்டும்.

பின்வருவன உட்பட விபரணங்களாகவுள்ள வினாக்கள் சிலவற்றிற்கு, சாத்தியமானவிடத்து விடையளிக்க முயற்சித்தல் வேண்டும்.

- சந்தேகத்தின் தன்மை என்ன?
- இழைக்கப்பட்ட குற்றம் என்னவாக இருக்கும்?
- சந்தேகத்துடன் தொடர்புபட்ட மற்றும் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள், எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள், நடத்தைகள், விடயங்கள், நம்பிக்கை மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் எவை?
- ஈடுபட்டுள்ள இயற்கையான மற்றும் சட்ட ரீதியான ஆட்கள் யார்?
- பயன்பெறு சொந்தக்காரர் யார்?
- பெயர்கள், அடையாள அட்டை இலக்கங்கள், பதிவு இலக்கங்கள் போன்ற அவர்களின் அடையாளங்கள் எவை?
- அவர்களின் முகவரி என்ன?
- அவர்களது தொழில் அல்லது வியாபாரத்தின் தொடர்பு/ வகை என்ன?
- அவர்களது தொழில்தருநர்கள் யார்?
- அவர்கள் அரசியல் ரீதியாக முகம்கொடுக்க வேண்டியவர்களாக இருந்தார்களா, ஏதேனும் இருப்பின்?
- கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் ஒருவருடன் மற்றுவர் எவ்வாறு தொடர்புபட்டிருந்தனர்?
- கொடுக்கல்வாங்கல்களில் அவர்களின் வகிபாகம் என்ன?
- தொடர்புபட்டிருக்கும் சொத்து யாது?
- தொடர்புபட்ட சொத்தின் தன்மை மற்றும் ஏற்பாடு, மதிப்பிடப்பட்ட பெறுமதி யாவை?
- எப்பொழுது எங்கே கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன அல்லது கொடுக்கல்வாங்கல்கள் எத்தனிக்கப்பட்டன அல்லது நடத்தை நிகழ்ந்தது?
- எல்லாவற்றிற்கும் மேலாக, நிதியியல் நிறுவனங்களின் சந்தேகத்திற்கு வழிவகுத்த நேரம் அல்லது அமைவிடம் எவ்வாறு அமைந்தது?
- இவ்விடயங்களும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் சந்தேகத்திற்கு ஏன் உதவியாக அமைந்தன?
- எவ்வாறு சந்தேகம் உருவானது?
- என்ன மாதிரியான தூண்டுவிசைகள் அல்லது குறிகாட்டிகள் தற்பொழுது காணப்படுகின்றன?
- அறிக்கையிடும் நிதியியல் நிறுவனங்களினால் என்ன மாதிரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன?
- நிதியியல் நிறுவனங்களினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் எதனுடன் தொடர்பானது?
- தற்போதைய சிவப்பு எச்சரிக்கைத் துண்டு எதனைக் காட்டுகிறது?
- எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளிலிருந்து இடம்பெற்ற பிறழ்வுகள் எவை?

நிதியியல் நிறுவனங்கள் சந்தேகங்கள் தொடர்பில் நியாயமான காரணங்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் முதற்பெயர்கள் "ஆபிரிக்க நாடுகளிலிருந்தான நிதிகள்" போன்றவற்றிலிருந்து "பெறப்பட முடியாத நியாயமற்ற காரணங்களை எடுத்துக்காட்டுவதிலிருந்தும்" விலகியிருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

விபரணங்கள் தர்க்க ரீதியான விதத்தில் உருவமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அனுப்பப்படுகின்ற தகவல்களை வினைத்திறனுடன் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் சாத்தியமானளவிற்கு பூரணமாகவும் துல்லியமாகவும் மேற்கொள்ளப்படுகிறது. சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் விபரணத்திற்காக அதாவது முன்னுரை, பிரதான பகுதி மற்றும் முடிவுரை ஆகிய பயன்படுத்தக்கூடிய இலகுவான படிவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். பந்திகளை வெவ்வேறாகப் பிரிப்பது விபரணங்களைத் தர்க்க ரீதியான அலகுகளாகப் பிரிப்பதற்கும் வாசிக்கப்படக்கூடிய தன்மையினை அதிகரிப்பதற்கும் பயன்படுத்த முடியும். நேர ஒழுங்குடன் சேர்ந்த விதத்தில் சாத்தியமான எதிர்பாராத இணைப்புக்களை எடுத்துக்காட்டுவதற்கு முயற்சிக்கின்ற வேளையில், பிரதான பகுதிக்கிடையே தகவலை கால ஒழுங்குமுறையில் காட்ட முடியும். நிதியியல் நிறுவனத்தின் உள்ளக புரியாத விடயங்கள் மற்றும் முதல் எழுத்துக்களிலான வர்த்தக நாமம் என்பனவற்றின் பயன்பாட்டினைக் குறைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் உதாரணமாக "மெகா ஆறு மாத பிளாட்டினம், எலைட் பிளஸ் சுப்பர் சேவர் கணக்கு" களிலும் பார்க்க "ஆறு மாத தவணை வைப்புக் கணக்கு" இனைப் பயன்படுத்தல். விபரணத்தின் இலக்குகள் விட்டுக் கொடுக்கப்படக் கூடியனவாக இருப்பதனால் விபரணங்கள் ஆகச் சுருக்கமானவையாக இருக்கக்கூடாது. வசனமொன்றின் கருத்திற்குப் பங்களிக்காதிருக்கும் சொற்களைத் தவிர்ப்பதும் "கொடுக்கல்வாங்கல் மாதிரி வாடிக்கையாளரின் தோற்றப்பாட்டுடன் பொருந்துவதாக இல்லை" போன்ற மிகக் கூடுதலான பொதுவான விபரணங்களைப் பயன்படுத்துவதிலிருந்தும் விலகி இருப்பதும் புத்திசாலித்தனமானவையாக இருக்கும்.

21. **துல்லியமான தன்மை:** அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள உண்மையான தகவல்கள் துல்லியமானவையாக இருத்தல் வேண்டுமென்பது தவிர்க்க முடியாததாகும். குறிப்பாக, பெயர்கள், அடையாள அட்டை இலக்கங்கள், பதிவு இலக்கங்கள் போன்றவை உண்மையானவையாக இருத்தல் வேண்டும். அடையாளம் காணப்பட்டவர்களின் அனைத்து எழுத்துக்களும் உரைகளும் இரு தடவைகள் பரிசோதிக்கப்படல் வேண்டும். கடவுச்சீட்டு இலக்கத்தில் அல்லது தேசிய அடையாள அட்டையில் ஒரு இலக்கம் பிழையாக இருப்பின் அல்லது பெயரில்

ஏதேனும் எழுத்தொன்று இல்லாது போயிருப்பின் அல்லது மாறியிருப்பதானது வெற்றிகரமான மற்றும் வெற்றிகரமான பகுப்பாய்விற்கிடையில் வேறுபாடான தன்மையொன்றினை ஏற்படுத்தும். சட்ட ரீதியான நிறுவனங்களுக்கான அடையாளப்படுத்தல்கள் (உ-ம்: கம்பனி/ வியாபாரப் பதிவு இலக்கம், கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட பெயர்), அலுவல்சார் பதிவு ஆவணங்களில் காணப்பட்ட ஒவ்வொரு அம்சங்களிலும் மிகச் சரியான விதத்தில் ஒரே மாதிரியானவையாக இருத்தல் வேண்டும்.

**ஆதாரப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல்**

22. நிதியியல் நிறுவனங்கள் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையுடன் சேர்த்து தொடர்பான ஆதாரப்படுத்தும் ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. நிதியியல் நிறுவனங்கள் லங்கா பின் ஊடாக ஆதாரப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாமலிருக்குமாயின் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான ஆதாரப்படுத்தும் ஆவணங்களை மின்னஞ்சல் ஊடாக அத்துடன்/ அல்லது கையொப்பமிடப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் அச்சுப்பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் நிதியியல் நிறுவனங்கள் மேலதிகமான ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மின்னஞ்சலினூடாக அல்லது அஞ்சலினூடாகச் சமர்ப்பிக்கப்படும் என்பதனை லங்கா பின் இல் குறிப்பிடுதல் வேண்டும்.

23. ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் விபரணங்கள் உட்பட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் உள்ளடக்கங்களைப் பதிலீடு செய்வதிலும் பார்க்க ஆதாரப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும். ஆதாரப்படுத்தும் ஆவணங்களிலிருந்தான தகவல்களை விபரணத்தில் நேரடியாக உள்ளடக்க முடிகின்ற வேளையில் விபரணத்திலுள்ள ஆதாரப்படுத்தும் ஆவணங்களை மாத்திரம் பார்ப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. உதாரணமாக, சந்தேகம் நாணயக் கடிதத்துடன் தொடர்புபட்டதாக இருப்பின், சந்தேகத்துடன் தொடர்பான நாணயக் கடிதத்திலிருந்தான அனைத்து விபரங்களும் விபரணத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். கடிதத்தின் பிரதியொன்று ஆதாரப்படுத்தும் ஆவணமாக வழங்கப்படல் வேண்டும்.

24. ஒரு குறியீடும் ஆதாரப்படுத்தும் ஆவணங்களின் நிறைவு பெறாத பட்டியலும் தொடர்பான சூழ்நிலைகளுடன் சேர்த்து உசாவுகைகளுக்காகக் கீழே தரப்பட்டுள்ளன.

| சூழ்நிலை | ஆதாரப்படுத்தும் ஆவணங்களின் குறிகாட்டிப்பட்டியல் |
|---|---|
| மூன்றாந்தரப்பினரின் வைப்புக்கள் | வங்கிக் கூற்றுக்கள்<br>மூன்றாந்தரப்பினரின் வைப்புக்களது பட்டியல்<br>மூன்றாந்தரப்பு வைப்பாளர்களின் விபரங்கள் |
| வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்கள் | வங்கிக் கூற்று<br>சுவிப்ற் செய்தியின் பிரதி |
| அடையாளம் போலியானது/ மாற்றப்பட்டது என்பது பற்றிய சந்தேகம் (தே.அ.அட்டை/ கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிமம்) | ஆவணத்தின் பிரதி |
| கம்பனி தொடர்பான சந்தேகம் | பதிவு ஆவணங்கள்<br>பணிப்பாளர்களின் தகவல் |

**பல்வகை விடயங்கள்**

**இரகசியமானது**

25. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 9ஆம் பிரிவின்படி, நிதியியல் நிறுவனங்கள் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் உள்ளடக்கம் பற்றி வாடிக்கையாளர் உட்பட எந்தவொரு ஆளுக்கும் அறிவிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. நிதியியல் நிறுவனம் அத்தகைய அறிக்கையினை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு கோப்பிட்டிருப்பினும் கூட அனுமதிக்கப்படமாட்டாது.

26. 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன) விதிகளின் 46ஆவது விதியின்படி வாடிக்கையாளர் ஒருவர் தொடர்பாக பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியளிப்பு இடர் பற்றிய சந்தேகத்தை நிதி நிறுவனம் கொள்ளுமிடத்தும், வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகள் பற்றிய செய்முறையை நடாத்துதல் வாடிக்கையாளருக்குக் குறிப்பறிவிக்குமென அது நியாயமான முறையில் நம்புகின்றவிடத்தும், அது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளைச் செயற்படுத்துவதனை முடிவுறுத்துதல் வேண்டுமென்பதுடன், கொடுக்கல்வாங்கலை மேற்கொண்டு நடாத்தி உடனடியாகச் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையைக் கோப்பிடுதலும் வேண்டும்.

**இரகசியத்தன்மையினை மீறுதல்**

27. நிதியியல் நிறுவனத்தின் எவரேனும் அலுவலரினால் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் அறிக்கையிடல் பற்றி எவரேனும் வாடிக்கையாளருக்கு இரகசியம் பற்றிய துப்பினை வழங்குவது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 9ஆம் மற்றும் 10ஆம் பிரிவின் கீழ் சட்ட மீறலொன்றாகக் கருதப்படும். இது 'துப்பினை வழங்கும்' குற்றமொன்றாக விபரிக்கப்படுவதுடன் இது ஐந்து இலட்சம் ரூபாவினை விஞ்சாத தண்டத்திற்கு அல்லது ஒன்றில் இரண்டாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கான சிறைத் தண்டனைக்கு அல்லது அத்தகைய தண்டம் மற்றும் சிறை ஆகிய இரண்டிற்கும் ஆளாகும் குற்றமொன்றிற்கும் உள்ளாதல் வேண்டும்.

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை அறிக்கையிடுகின்ற ஆட்களுக்கான பாதுகாப்பு**

28. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 12ஆம் பிரிவின்படி

(அ) அத்தகைய நிறுவனத்திற்கு அல்லது நிறுவனமொன்றின் கணக்காய்வாளருக்கு அல்லது மேற்பார்வை அதிகாரிக்கு; அல்லது

(ஆ) அத்தகைய ஆளினது தொழில் நெறிமுறையின் போது அல்லது நிறுவனமொன்றின் முகவராண்மையின், கணக்காய்வாளர் கழகமொன்றின் அல்லது மேற்பார்வை அதிகாரசபையொன்றின் பணிப்பாளர்கள், பங்காளர்கள், அலுவலரொருவர், ஊழியர் அல்லது முகவராண்மை ஒருவருக்கெதிராக நிறுவனமொன்றினால் கணக்காய்வாளர் நிறுவகத்தினால் அல்லது மேற்பார்வை அதிகாரசபையினால் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் அல்லது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஒழுகும் விதத்தில் அல்லது

நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் நிதியியல் உளவறிதல் பிரிவினால் வழங்கப்பட்ட விதிகள் அல்லது பணிப்புரைகளுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அத்தகைய நிறுவனத்தின் நிறுவகத்தின் அல்லது அதிகாரசபையின் பணிப்பாளர்கள், பங்காளர், அலுவலர், ஊழியர் அல்லது அத்தகைய நிறுவனத்தின் முகவர் ஆகிய ஒருவருக்கெதிராக குடியியல், குற்றவியல் அல்லது ஒழுக்காற்று வழக்கு நடவடிக்கைகள் எதுவுமிருத்தலாகாது.

**சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை அறிக்கையிடத் தவறுவது**

29. கொடுக்கல்வாங்கலானது பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்பானது எனச் சந்தேகப்படுவதற்கு நியாயமான காரணங்கள் காணப்படும் பொழுது, நிதியியல் நிறுவனம் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பிக்கத் தவறுவது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கு இணங்கியொழுகத் தவறுவதாகக் கருதப்படும். நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 19ஆவது பிரிவின்படி அத்தகைய இணங்கியொழுகாமையானது ஒரு மில்லியன் ரூபா (ரூ.1,000,000.00) வரையான தண்டத்திற்கும் அல்லது அதற்குப் பின்னரான அறிக்கையிடல் தவறுகைகளுக்கும் இருமடங்கு பணத் தொகைக்கும் ஆளாதல் வேண்டும்.

**அறிக்கையிடுகின்ற நிறுவனம் யாருடைய சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை அறிக்கையிட்டதோ அந்த வாடிக்கையாளருடன் வியாபாரத் தொடர்புகளைத் தொடர்ந்து நடத்துதல் வேண்டுமா?**

30. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடப்பட்ட வாடிக்கையாளருடனோ அல்லது சந்தேகம் உருவாகியுள்ள வாடிக்கையாளருடனோ நிதியியல் நிறுவனங்கள் வியாபாரத் தொடர்புகளைத் தொடர்வதைத் தடை செய்யவில்லை. குறிப்பாக, வாடிக்கையாளர் தொடர்பிலான நிதியியல் நிறுவனங்களின் நடத்தையானது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 3ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்குட்பட்டு எந்தவிதமான குறிப்பிடத்தக்க தகவல்களையும் வழங்கக்கூடாது.

**வாடிக்கையாளர் தொடர்பிலான சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பித்த நிதியியல் நிறுவனங்களின் கடப்பாடுகளும் வியாபார உறவுமுறைகளைத் தொடர்வதும்**

31. ஆரம்ப சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பிப்பதன் பின்னர் நிதியியல் நிறுவனம் அவ்வாடிக்கையாளருடனான அனைத்து எதிர்காலத் தொடர்புகளிலும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் அனைத்துத் தொடர்பான ஏற்பாடுகளுக்கும் தொடர்ந்தும் இணங்கியொழுகுதல் வேண்டும். இது மேலதிக சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் அடையாளம் காணப்பட்ட மேலதிகச் சந்தேகம் மீதான தகவல்கள்/ மேலதிக அபிவிருத்தி என்பனவற்றைச் சமர்ப்பிப்பதற்கான தேவையினையும் உள்ளடக்கும்.

**மேலதிகத் தகவல்களுக்கான கோரிக்கை**

32. ஏதேனும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கை தொடர்பாக நிதியியல் உளவறிதல் பிரிவு மேலதிகத் தகவல்களைக் கோருமிடத்து, நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய தகவல்களைச் சரியான முறையில் உளவறிதல் பிரிவிற்கு வழங்குவதற்குத் தேவையான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

**பின்னிணைப்பு 1**

**சந்தேகத்திற்குரிய குறிகாட்டிகள்**

இப்பின்னிணைப்பானது வாடிக்கையாளர் நடத்தை மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான குறிகாட்டிகளின் பட்டியலை உள்ளடக்கியுள்ளது. இப்பட்டியலானது பூரணமற்றதாகவும் பூரணப்படுத்தப்படாததாகவும் இருப்பதுடன் ஒவ்வொரு நிதி நிறுவனத்தினாலும் தேவையான விதத்தில் திருத்தியமைக்கப்பட்டு துணைநிரப்புச் செய்யப்பட வேண்டியதொன்றாகக் காணப்படுகிறது. குறிகாட்டிகள் முறைப்படுத்தப்படாதனவாகவும் அவை எப்பொழுதும் குற்றத்தன்மையினை எடுத்துக்காட்டாதனவாகவும் காணப்படுகின்றன. மாறாக, குறிகாட்டிகள் போதுமானளவில் இல்லாமையானது குற்றத்தன்மை இல்லை என்பதனைக் குறிக்காது. **எனினும், குறிகாட்டியொன்றின் பிரசன்னம் மற்றும் விசேடமாக பல் குறிகாட்டிகளின் பிரசன்னமும் நிதியியல் நிறுவனங்களின் அதிகரித்தளவிலான நுண்ணாய்வினை ஏற்படுத்த வெண்டுமென்பதுடன் அத்தகைய நுண்ணாய்வு சந்தேகத்தினை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும்.**

**பொதுவான குறிகாட்டிகள்**

- சூழ்நிலைகளுக்கும் பொருந்தாத ஏதேனும் நடத்தை.
- வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரை வழமைக்கு மாறான ஏதேனும் நடவடிக்கை.
- அதற்கேயான வழமைக்கு மாறான ஏதேனும் நடவடிக்கை.
- சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் தொடர்புபட்டிருக்கலாம் என நம்பப்படும் விதத்தில் நிறுவனத்தினை வழிநடத்தக்கூடிய ஏதேனும் அறிவு.
- வாடிக்கையாளர்கள், அவர்களது கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான சந்தேகங்களின் தீர்க்கப்படாத மற்றும் விடாப்பிடியாகக் காணப்படும் உணர்வுகள்.

**பொதுவான நடத்தை/வாடிக்கையாளர் குறிகாட்டிகள்**

- வதந்தியான விடயமாக இருப்பினும் கூட குற்றவியல் நடவடிக்கைகளுடன் தொடர்பான விடயங்கள் பற்றிய வாடிக்கையாளர் பேச்சுவார்த்தைகள் அல்லது சூசகமான விடயங்கள்.
- வாடிக்கையாளர்கள் வீட்டு முகவரிக்கு கடிதத் தொடர்புகளை அனுப்ப விரும்பாமை.
- வெளிப்படையான காரணங்களெதுவுமின்றி வாடிக்கையாளர் பல்வேறு நிதி நிறுவனங்களில் கணக்குகளை வைத்திருப்பதாகத் தோன்றுதல்.
- வாடிக்கையாளர் அடிக்கடி முகவரியைப் பயன்படுத்தினாலும் தொடர்பான பெயரை அடிக்கடி மாற்றுகின்ற தன்மை.
- வாடிக்கையாளர் மற்றையவர்களுக்கு அணித்தாகவுள்ள முகவரிகளைப் பயன்படுத்துதல்.
- நிதியியல் நிறுவனங்களுக்கு விஜயம் செய்கையில் வாடிக்கையாளர்கள் சேர்ந்து போதல் மற்றும் கவனித்தல்.
- வாடிக்கையாளர் உள்ளக முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகள் பற்ற தெரிந்து கொள்ள வழமைக்கு மாறாக ஆர்வம்

காட்டுகின்றமை.

- வாடிக்கையாளர் வைப்புக்களின் தொகை பற்றி நிச்சயமற்ற அறிவினைக் கொண்டிருத்தல்.
- வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல் பற்றி குழப்பமான அல்லது முரண்பாடான தகவல்களைக் காட்டுதல்.
- வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல் பற்றி அளவுக்கதிகமாக நியாயப்படுத்தல் அல்லது விளக்கமளித்தல்.
- வாடிக்கையாளர் அறிக்கையிடுகின்ற தரவுகளை மாற்றுவதற்கு அல்லது நீக்குவதற்கு நிதி நிறுவனங்களின் அலுவலர்களை இணங்கச் செய்ய முயற்சித்தல்.
- வாடிக்கையாளர் இரகசியத்தன்மை கொண்டவர்களாகவும் நேரடியாகச் சந்திக்கத் தயக்கமுடையவர்களாகவும் இருத்தல்.
- வாடிக்கையாளர் பதட்டமுடையவராகவும் கொடுக்கல்வாங்கலை முறையாகப் பேணாதவராகவும் இருத்தல்.
- வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கலை விரைவாகச் செய்யப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தல்.
- வாடிக்கையாளர் அலுவலர்களுடன் நெருக்கமான தொடர்புகளை அபிவிருத்தி செய்ய முயற்சித்தல்.
- வாடிக்கையாளர் வழங்கப்படும் பணி ஏற்பாடுகளுக்காக பணம், அளவுக்கதிகமான தரகு, பணிக் கொடைகள் அல்லது வழமைக்கு மாறான சகாயங்களை வழங்குதல்.
- வாடிக்கையாளர் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கலை அறிக்கையிடுவது தொடர்பில் சட்டத்தில் வழமைக்கு மாறான அறிவினைக் கொண்டிருத்தல்.
- வாடிக்கையாளர் பணம் தூயதாக்கல் நிதியம் தொடர்பில் தேவையா அல்லது இல்லையா என்பது பற்றி பரிகாசமாக இருத்தல்.
- வாடிக்கையாளர் சமுகத்துடன் வெளிப்படையான தொடர்புகளைக் கொண்டிராமை.
- வாடிக்கையாளர் கிரமமற்ற வேலையினை/பயண மாதிரியினைக் கொண்டிருத்தல்.

**கணக்கினைத் திறத்தல்/ அடையாளக் குறிகாட்டிகள்**

- வாடிக்கையாளர் சந்தேகத்திற்குரிய அல்லது தெளிவற்ற தகவல்களை வழங்குதல்.
- வாடிக்கையாளர் மேம்போக்காகப் பிழையான அடையாளத்தினை வழங்குதல் அல்லது அடையாளங்கள் போலியானவையாக, மாற்றம் செய்யப்பட்டவையாக அல்லது துல்லியமற்றவையாகக் காணப்படல்.
- வாடிக்கையாளர் தனிப்பட்ட அடையாளப்படுத்தல் ஆவணங்களை வழங்க மறுத்தல்.
- வாடிக்கையாளர் தனிப்பட்ட அடையாள ஆவணங்களின் பிரதியை மாத்திரம் வைத்திருத்தல்.
- வாடிக்கையாளர் அவரின் அல்லது அவளின் தனிப்பட்ட அடையாள ஆவணங்களைத் தவிர வேறு எதையாவது பயன்படுத்தி அடையாளத்தினை உறுதிப்படுத்த முயற்சித்தல்.
- வாடிக்கையாளர் ஆதார ஆவணங்கள் குறைந்தளவு முக்கியமான விபரங்களைக் கொண்டிருத்தல்.
- வாடிக்கையாளர் கம்பனி ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில் தேவையற்ற தாமதங்களைக் காட்டுதல்
- சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து அடையாள ஆவணங்களும் வெளிநாட்டு ஆவணங்களாக அல்லது சரிபார்ப்பதற்கு நியாயமற்ற விதத்தில் இடர்ப்பாடுகளாகவும் காணப்படுதல்.
- சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து அடையாள ஆவணங்களும் புதியவையாக அல்லது அண்மைய திகதிகளில் வழங்கப்பட்டவர்களாக இருத்தல்.
- வாடிக்கையாளர் தொழிலற்றவராக அல்லது சுயாதீனமான ஆலோசனையாளராக அல்லது அடிக்கடி வேலை மாறுபவராக இருத்தல்.
- வாடிக்கையாளர் மற்றையவர்களைக் கவரும் விதத்தில் பெருந்தொகையான பணத்தினை வெளிப்படுத்தல்.

**வியாபாரமொன்றிற்கான குறிகாட்டிகள்**

- கிரமமான வியாபார நேரமொன்று இல்லாமை.
- வழமைக்கு மாறான இலாபம் தரும் வியாபாரம்.
- முறிவடைகின்ற கைத்தொழில்களிலுள்ள இலாபம் தரும் வியாபாரம்.
- கைத்தொழில் விதிகளுக்கும் மேலாக வியாபாரப் பெறுகைகள் மற்றும் வருமானங்கள்.
- காசுச் செறிவான வியாபாரங்கள்
- குறைந்த செலவிலான அல்லது மிக வசதியான முறைகள் இருக்கும் பொழுது உயர்ந்த செலவிலான அல்லது வசதியீனமான முறைகளைப் பயன்படுத்தல்.
- அவரின் சொந்த வியாபாரம் அல்லது தொழிலில் ஆழமான அறிவினைப் போதுமானளவில் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிதல்.

**பொதுவான கொடுக்கல்வாங்கல் குறிகாட்டிகள்**

- கொடுக்கல்வாங்கல்கள் வாடிக்கையாளருக்கு வழமைக்கு மாறானதாக இருத்தல்.
- கொடுக்கல்வாங்கல்கள் நாட்டிற்கு வழமைக்கு மாறானதாக இருத்தல்.
- கொடுக்கல்வாங்கல்கள் கைத்தொழிலுக்கு வழமைக்கு மாறானதாக இருத்தல்.
- கொடுக்கல்வாங்கல்கள் வேறு ஏதேனும் காரணங்களுக்காக வழமைக்கு மாறானதாக இருத்தல்.
- கொடுக்கல்வாங்கல்கள் வாடிக்கையாளரின் வெளிப்படையான நிதியியல் நிலைமைகளுடன் அல்லது நடவடிக்கைகளின் வழமையான மாதிரிகளுடன் ஒவ்வாததாக் காணப்படுதல்.
- செல்வநிலையில் விளங்க முடியாத அளவிற்கு திடீர் அதிகரிப்பு.

- கொடுக்கல்வாங்கல்கள் கைத்தொழில் நடைமுறைகளின் வழமையான தன்மைக்கு மாறானதாக அல்லது வாடிக்கையாளருக்குப் பொருளாதார ரீதியில் அநுகூலம் மிக்கதாகக் காணப்படாமை.
- கொடுக்கல்வாங்கல்கள் இயங்கா நிலையிலுள்ள கணக்கு (கணக்குகளை) பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றமை.
- கொடுக்கல்வாங்கல்கள் அதன் கூறப்பட்ட நோக்கங்களுக்காக தேவையற்ற சிக்கலான தன்மையினைக் கொண்டிருத்தல்.
- நடவடிக்கைகள் பிரகடனப்படுத்தப்பட்ட வியாபாரத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்களுடன் ஒவ்வாததாகக் காணப்படல்.
- கொடுக்கல்வாங்கல்கள் இலாபமற்ற அல்லது அறக்கொடை அமைப்புக்களுடன் தொடர்பானதாகவும் தர்க்க ரீதியில் பொருளாதார நோக்கத்தினைக் கொண்டிராததாக அல்லது அமைப்பின் கூறப்பட்ட நடவடிக்கைக்கும் கொடுக்கல்வாங்கலிலுள்ள மற்றைய தரப்பினருக்குமிடையில் தொடர்புகளேதும் இல்லாததாகவும் காணப்படுதல்.

**காசுக் கொடுக்கல்வாங்கல் குறிகாட்டிகள்**

- கடந்த காலத்தில் வாடிக்கையாளரின் வழமையான நடவடிக்கைகளில் காணப்படாத விதத்தில் திடீரென பெரியளவில் காசுக் கொடுக்கல்வாங்கல்களை நடத்துவதற்குத் தொடங்குதல்.
- வாடிக்கையாளர் அடிக்கடி சிறிய உண்டியல்களுக்காக பெரிய தொகையினை மாற்றிக் கொள்ளுதல்.
- வியாபாரத்தின் மாதிரி மிகச் சிறிய அல்லது மிகப் பெரிய இன நாணயத் தாள்களில் காணப்படுகையில் வாடிக்கையாளர், வாடிக்கையாளர்களுக்கு வழமைக்கு மாறானதாகக் காணப்படும் நாணய இனங்களைப் பயன்படுத்துகின்றமை.
- வாடிக்கையாளருக்கு புதிதாகக் காணப்படும் விதத்தில் பொதி செய்யப்பட்ட அல்லது சுற்றப்பட்ட தாள்களை வாடிக்கையாளர் சமர்ப்பித்தல்.
- வாடிக்கையாளர்களின் வைப்புக்களில் பெரும்பாலானவை பாரதூரமான சட்டத்திற்கு முரணானவையாக இருத்தல்.
- வாடிக்கையாளர் தொடர்ச்சியாகக் காசுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதுடன் அதனைப் பெரும் தொகையிலும் மேற்கொள்ளுதல்.
- அறிக்கையிடப்படுகின்ற ஆரம்ப மட்டத்திற்கும் குறைவான தொகையான காசினைத் தொடர்ச்சியாகக் கொடுக்கல்வாங்கல் செய்து வந்த வாடிக்கையாளர் அறிக்கையிடப்பட்ட ஆரம்ப மட்டத் தொகையினைத் தவிர்க்க முயற்சித்தல்.
- அறிவிக்கப்பட்ட ஆரம்பத் தொகைக்கும் குறிப்பிடத்தக்களவிற்குக் கீழே தொடர்ச்சியாக காசுக் கொடுக்கல்வாங்கல்களை வெளிப்படையாக மேற்கொண்டு வந்த வாடிக்கையாளர் அந்த அறிவிக்கப்பட்ட ஆரம்பத் தொகையினைத் தவிர்க்க எத்தனித்தல்.
- வாடிக்கையாளர் கணக்கிடப்படாத நிதியினைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக சமர்ப்பித்தல். கணக்கிடும் போது, கொடுக்கல்வாங்கலானது, அறிக்கையிடுகின்ற தேவைப்பாடுகளை விடுவிக்கக்கூடிய தொகைக்கு சற்றுக் கீழே குறைக்கப்படுகிறது.
- கடந்த காலக் கொடுக்கல்வாங்கல் தொகையுடன் ஒப்பிடுகையில் வாடிக்கையாளர் வழமைக்கு மாறான தொகைக்கு கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுதல்.
- வாடிக்கையாளரின் வழமையான நடவடிக்கைக்குப் புறம்பான விதத்தில், வாடிக்கையாளர் பயணிகள் காசோலை, வெளிநாட்டு நாணய வரைவுகள் அல்லது வேறு கைமாற்றத்தக்க சாதனங்களைக் காசிற்கு கொள்வனவு செய்தல்.
- வாடிக்கையாளர், நிதியியல் நிறுவனத்தினைப் பெரும் தொகையான பணத்தினை அல்லது வேறு சொத்துக்களைப் பிடித்து வைக்குமாறு அல்லது மாற்றல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுதல் இது வாடிக்கையாளரின் வழமைக்கு மாறான நடவடிக்கை வகையாகும்.
- காசுக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கான பகிரப்பட்ட முகவரி குறிப்பாக, முகவரி வியாபார அமைவிடத்திற்கானதாக இருக்கும் பொழுது அல்லது குறிப்பிடப்பட்ட தொழிலுடன் தொடர்புபட்டதாகக் காணப்படாதவிடத்து (உதாரணமாக மாணவர், தொழிலற்றவர், சுயதொழில் வாய்ப்பு போன்றவை).
- வாடிக்கையாளரின் குறிப்பிடப்பட்ட தொழில் நடவடிக்கைகள் குறிப்பிட்டதொரு மட்டத்தில் அல்லது வகையில் காணப்படாமை (உதாரணமாக மாணவரொருவர் அல்லது தொழிலற்ற தனிப்பட்ட ஒருவர் நாளாந்தம் உயர்ந்தபட்ச காசு மீளப்பெறுகைகளைப் பரந்த புவியியற் பிரதேசத்தில் பல்வேறு அமைவிடயங்களிலும் பெறுதல்).
- வாடிக்கையாளர் நிதி சூதாட்ட வெற்றியின் மூலம் கிடைத்ததாக தொடர்ச்சியாகக் கூறுவார். எனினும், இது தொடர்பில் ஏதேனும் இழப்பு ஏற்பட்டமைக்கான சான்றுகள் இருக்காது.

**கடன்களுடன் தொடர்பான குறிகாட்டிகள்**

- கடன்பாட்டாளருடன் தொடர்புகளற்ற மூன்றாந்தரப்பினர் வசமுள்ள சொத்துக்களின் மூலம் பிணையிடப்பட்ட கடன்.
- குறிப்பாக, வெளிப்படையாக தொடர்புகளற்ற மூன்றாந்தரப்பினருக்குச் சொந்தமான, பிணையங்கள் போன்ற வைப்புக்கள் அல்லது உடனடியாகச் சந்தைப்படுத்தத்தக்க சொத்துக்களின் மூலம் பிணையிடப்பட்ட கடன்கள்.
- காசின் மூலம் பிணையிடப்பட்ட கடன்கள் அல்லது உடனடியாகக் காசிற்கு மாற்றப்படக்கூடிய சொத்துக்களினால் பிணையிடப்பட்ட ஏதேனும் கடன்கள் தொடர்பில் செலுத்தத் தவறிய வாடிக்கையாளர்.
- நியாயமான விளக்கங்கள் ஏதுமின்றி மூன்றாந்தரப்பினருக்கு கிடைக்கச் செய்யப்பட்ட அல்லது அவர்களின் சார்பில் வழங்கப்பட்ட கடன்கள்.
- குறிப்பாக, நாணயம் அல்லது பல்வேறு நாணய சாதனங்களினூடாக நிதிகள் வழங்கப்படுகின்ற பொழுது, கடனொன்றைப் பெறுவதற்காக வாடிக்கயைாளர் மூலம் தெரியாத நிதியினைப் பயன்படுத்தி வைப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்தல்.
- சட்ட ரீதியான வியாபார நோக்கங்களற்ற கடன்கள் சிறிதளவு அல்லது இடர்நேர்வுகளற்ற அனுமானங்களுடன் குறிப்பிடத்தக்க கட்டணத்தினை வங்கிக்கு வழங்கல்; அல்லது நிதியின் நகர்வுகள் தொடர்பில் தெளிவற்ற தன்மையினை நாடுதல் (உதாரணமாக கடன்பாட்டாளருக்குக் கடன்களை வழங்குதல் மற்றும் கடன்பாட்டாளருடன் தொடர்பான நிறுவனமொன்றிற்கு உடனடியாக விற்றுவிடுதல்).
- சொத்துக்கள் வேறு பெயரில் இருப்பினும் கூட, வாடிக்கையாளர் பிணைக்காக பயன்படுத்தப்பட்ட சொத்தின் உண்மையான உரிமையினை தன்னுடையது எனக் கோருதல்.

**வர்த்தக நிதியிடல் குறிகாட்டிகள்**

- கப்பற்படுத்தப்பட்ட பொருட்கள் வாடிக்கையாளரின் வியாபாரத் தன்மையுடன் ஒவ்வாதவையாகக் காணப்படல் (உதாரணமாக உருக்குக் கம்பனியாக ஆரம்பிக்கப்பட்ட கம்பனி தாள் உற்பத்தி வணிகத்தினை அல்லது தகவல் தொழில்நுட்பக் கம்பனியாக ஆரம்பித்த கம்பனி மருந்தாக்கல் பொருட்களை வணிகப்படுத்தல்).
- வாடிக்கையாளர் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாதவை என அடையாளம் காணப்பட்ட நாடுகளுக்கூடாக மாற்றி ஏற்றலை மேற்கொள்வது உட்பட உயர் இடர்நேர்வு நியாயாதிக்கங்களூடாகப் பொருட்களைக் கப்பலேற்றுதல்.
- ஏற்றுமதி/ இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்குட்படக்கூடிய நடவடிக்கைகள் உட்பட உயர் இடர்நேர்வு சாத்தியங்களைக் கொண்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்கள்.
- வெளிப்படையான மிகக்கூடிய அல்லது மிகக் குறைந்த விலைகளைக் கொண்ட பொருட்கள் மற்றும் பணிகள்
- இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் அளவு அல்லது வகை வெளிப்படையாகவே தவறான பிரசன்னப்படுத்தல்.
- கொடுக்கல்வாங்கல் அமைப்பு தேவையற்ற விதத்தில் சிக்கல்வாய்ந்ததாகத் தோன்றுவதுடன் கொடுக்கல்வாங்கல்கலின் உண்மையான தன்மை தெளிவற்றதாக இருக்கும் விதத்தில் வடிவமைத்தல்.
- வாடிக்கையாளர் பெறுகைகளின் கொடுப்பனவுகளைத் தொடர்புகளற்ற மூன்றாந்தரப்பினருக்குச் செய்யுமாறு கோரிக்கை விடுத்தல்.
- கப்பற்படுத்தல் அமைவிடங்கள் அல்லது பொருட்களின் விபரணங்கள் நாணயக் கடிதங்களுடன் முரண்பாடுடையனவாகக் காணப்படல்.
- வணிகப்பொருட்களின் அளவு சுங்கத்திற்குப் பிரகடனம் செய்யப்பட்ட அல்லது இறக்குமதியாளரினால் செலுத்தப்பட்டதிலும் பார்க்க உயர்வாக அல்லது தாழ்வான பெறுமதியில் காணப்படுவதனை ஆவணங்கள் காட்டுதல்.
- நியாயமான நியாயப்படுத்தல் அல்லது பயன்பெறுநர் அல்லது கொடுப்பனவு அமைவிடத்தில் மாற்றங்களெதுமின்றி நாணயக் கடிதத்தில் குறிப்பிடத்தக்கவு மாற்றங்களைச் செய்தல்.

**வெளிநாடுகளுடன் அல்லது கரைகடந்த நியாயாதிக்கங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்**

- வாடிக்கையாளரின் அறியப்பட்ட வியாபார மொத்தப் புரள்விற்கு ஒவ்வாத விதத்தில் பெருமளவு மீதிகள் ஒன்றுசேர்த்தல் அதன் பின்னர் வெளிநாடுகளுக்கு அல்லது கரைகடந்த கணக்கிற்கு (கணக்குகளுக்கு) மாற்றல் செய்தல்.
- பயணிகள் காசோலை, வெளிநாட்டு நாணய வரைவுகள் அல்லது கைமாற்றத்தக்க சாதனங்களுக்கு அடிக்கடி கோரிக்கை விடுத்தல்.
- கரைகடந்த வங்கிகளிலிருந்தான கடப்பாடுகளின் மூலம் பிணையிடப்பட்ட கடன்கள்.
- கரைகடந்த கம்பனிகளுக்கான அல்லது அவற்றிலிருந்தான கடன்கள்.
- கரைகடந்த வங்கித்தொழிலொன்றிலிருந்து அல்லது கரைகடந்த வங்கியொன்றின் ஓரளவு உத்தரவாதப்படுத்தப்பட்ட தொகையிலிருந்து அனுப்பப்படுவதற்கான இரகசியமான மூலங்களிலிருந்து பல மில்லியன் பெறுமதியான வைப்புக்களின் வழங்கல்.
- முக்கியமான சட்ட ரீதியான நிறுவனத்தின் பெயரைப் பெருமளவிற்கு ஒத்த பெயரைக் கொண்ட கரைகடந்த வங்கியொன்றுடன் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்கள்.
- வாடிக்கையாளரினால் கரைகடந்த நியாயாதிக்கத்திற்குச் செய்யப்பட்ட அல்லது அங்கிருந்து உள்ளே அல்லது வெளியேயான அடிப்படையில் (சுமத்தப்படுதல்) வாடிக்கையாளரினால் மாற்றல் செய்யப்படுகின்ற விளங்கப்படாத இலத்திரனியல் நிதிய மாற்றல்கள்.
- நாடுகளுக்கிடையில் பணத்தினை நகர்த்துவதற்காக நாணயக் கடிதத்தினையும் வர்த்தக நிதியிடலில் வேறு முறைகளையும் பயன்படுத்தும் போது அத்தகைய வர்த்தகம் வாடிக்கையாளரின் வியாபாரம் அல்லது தேசிய வியாபார மாதிரிகளுடன் ஒவ்வாததாகக் காணப்படல்.
- கரைகடந்த வங்கியினால் வழங்கப்பட்ட கொடுகடன் அட்டையினைப் பயன்படுத்தல்.

**பல் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்டிருக்கும் சந்தேகத்திற்குரிய மாதிரிகள்**

- ஒரு நாட்டிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதியம் வெவ்வேறுபட்ட பிராந்தியங்களினூடாக பெரும்பாலும் அதே இடத்திற்கு வந்து சேருகின்ற ஒரு சுழற்சி முறையான கொடுக்கல்வாங்கல்.
- அறிக்கையிடலைத் தவிர்ப்பதற்காக சிறு சிறு தொகைகளாகப் பிரிக்கப்பட்ட ஒரே தொகையில் அமைந்திருந்த கொடுக்கல்வாங்கல்கள்.
- பல்வேறு கணக்குகள் ஒரு கணக்கிற்குச் சேர்க்கப்பட்ட பங்கீட்டாளர்/ சேகரிப்பவர் கொடுக்கல்வாங்கல்கல்கள் அல்லது ஒரு வழியில் வந்து போதுமான விளக்கங்கள் இல்லாமல் பல்வேறாகப் பிரிக்கப்படுதல். தனியொரு பயன்பெறும் சொந்தக்காரரினால் கணக்குகள் கட்டுப்படுத்தப்படுகையில் இது பிழையானதொரு குறிகாட்டியாகும்.

**பதிலாட்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்கள்**

- இரண்டு அம்சங்கள் பொருந்துகின்ற ஆளொருவரின் கொடுக்கல்வாங்கல்கள் (உ-ம்: பெயர் மற்றும் முகவர்கள் அல்லது பெயர் மற்றும் பிறந்த நாள் அல்லது பிறந்த நாள் மற்றும் முகவரி) இச்சாராமாறிகளில் ஒன்றை மாற்றிக் கொள்வதன் மூலம் பல்வேறு கணக்குகள் பேணப்படுவது போல் தெரிவது.
- ஒரே முகவரியில் பல கணக்குகளுடன் கூடிய கொடுக்கல்வாங்கல்கள்.
- பொதுப் பதிவேடுகளில் இல்லாத முகவர்களுடன் கூடிய கொடுக்கல்வாங்கல்கள்.
- பொதுப் பதிவேடுகளில் இல்லாத பெயருடன் கூடிய கொடுக்கல்வாங்கல்கள்.
- கணக்குடமையாளர் அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆளாக இருக்குமிடத்து இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள்.
- கணக்குடமையாளர் அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆளின் நெருங்கிய உறவினர் அல்லது இணையாளியாக இருக்குமிடத்து இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்கள்.
- அரசியல் ரீதியில் முகம் கொடுக்க வேண்டிய ஆளுடன் பகிரப்பட்ட முகவரியினைக் கொண்ட கணக்குடமையாளரின் கொடுக்கல்வாங்கல்கள்.

- குறிப்பாக, உயர்ந்த செல்வம் படைத்த தனிப்பட்டவர்களினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட குறைந்த வருமானமுடைய தொழிலினைக் கொண்ட மக்களினால் செய்யப்படும் பாரிய கொடுக்கல்வாங்கல்கள்.
- மிக இளம் வயதினரின் பெயரில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்கள்.
- இறந்த மக்களின் பெயரில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்கள்.
- அத்தகைய பெரும் செல்வம் வழமைக்கு மாறானதாகக் காணப்படும் பிரதேசங்களில் வாழும் மக்களின் பெயரிலான கொடுக்கல்வாங்கல்கள்.

**குறித்துரைக்கப்பட்ட துறைகளுக்கான சிவப்புத் துண்டுக் குறிகாட்டிகள்**

**பாதுகாப்புத் துறைகள்**

- செயற்படாதிருந்த கணக்குகள் வாடிக்கையாளரின் வழமையான நிதியியல் நடைமுறைகளுக்கு அல்லது அவர்களின் நிதியியல் இயலாற்றலுக்கு ஒவ்வாத விதத்தில் பெருமளவு முதலீடுகளைக் கொண்டிருத்தல்.
- நன்மைபெறுநர் அல்லது இணைத்தரப்பினரின் அடையாளம் வெளிப்படுத்தப்படாத நிலையில் மூன்றாந்தரப்பினருடன் இடம்பெறும் ஏதேனும் வணிகம்.
- வாடிக்கையாளர் காசின் மூலம் முதலீடுகளைக் கொள்வனவு செய்ய எத்தனித்தல்.
- வாடிக்கையாளர்கள் குறிப்பாக, அறிவிக்கப்பட்ட மட்டத்திற்குச் சிறிதளவு குறைந்த தொகைக்கு காசுக் கட்டளை, பயணிகள் காசோலை, காசாளர் காசோலை, வங்கி வரைவு அல்லது வேறு ஏதேனும் வங்கிச் சாதனங்களின் மூலம் பெரும் எண்ணிக்கையான முதலீடுகளைக் கொள்வனவு செய்ய விரும்புகையில் அக்கொடுக்கல்வாங்கல்கள் வாடிக்கையாளரின் அல்லது அவர்களின் நிதியியல் ஆற்றலில் வழமையான முதலீட்டு நடைமுறையுடன் ஒவ்வாததாகக் காணப்படல்.
- பிணையங்களை வர்த்தகப்படுத்துவதற்காக அல்லது நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கான முற்பேரத்திற்காகப் பயன்படுத்தப்படாத நிதிகளைப் பிடித்துவைக்குமொரு இடமாக பிணையங்கள் அல்லது முற்பேர தரகுக்காகப் பயன்படுத்துதல். அத்தகைய நடவடிக்கை வாடிக்கையாளரின் வழமையான முதலீட்டு நடவடிக்கைகளுடன் அல்லது அவர்களின் நிதியியல் ஆற்றலுடன் ஒவ்வாததாகக் காணப்படுகின்ற தன்மை.
- வாடிக்கையாளர் பங்குகளின் விற்பனை மூலம் பெற்றுக்கொண்ட நிதியினை வர்த்தகப்படுத்தல் அல்லது தரகுப் பணக் கணக்கில் வைப்பிலிடுவதிலும் பார்க்க வங்கிக் கணக்கில் வைப்பிலிட விரும்புகிறார். இது வாடிக்கையாளரின் வழமையான நடைமுறைக்கு மாறானதாகும்.
- வாடிக்கையாளரின் வழமையான நடைமுறைக்கு மாறான விதத்தில் அவர் அடிக்கடி காசு அல்லது காசோலையைப் பயன்படுத்தி குறுகிய காலப்பகுதியொன்றிற்குள் பங்குகள், முறிகள், முதலீட்டு நம்பிக்கைகள் அல்லது ஏனைய பிணையங்களில் பெருமளவு முதலீடுகளை மேற்கொள்ளுதல்.
- வாடிக்கையாளர் பாரிய அல்லது வழமைக்கு மாறாக காசின் மூலம் பிணையங்களைத் தீர்ப்பனவு செய்தல்.
- குறிப்பிட்ட பிணையங்கள் அல்லது எதிர்கால ஒப்பந்தங்களில் வாங்குதல் மற்றும் விற்றலை பொருத்தம் செய்ய ஆரம்பித்தல் (வர்த்தகத்தினை பொருத்தம் செய்தல் என அழைக்கப்படுகிறது) போலித்தன்மை கொண்ட வர்த்தகத்தினை உருவாக்குதல்.
- வாடிக்கையாளர்களுடன் தொடர்புபடுவது தெரியாத விதத்தில் கணக்குகளிடையே நிதியினை அல்லது பிணையங்களை மாற்றல் செய்தல்.
- ஒரே பங்கினை வர்த்தகப்படுத்துவதற்காக குறுகிய காலத்திற்குள் பல வாடிக்கையாளர் கணக்குகளைத் திறத்தல்.
- அடையாளம் காணப்படாத தரப்பினர் சார்பில் பாரிய தடுத்து வைக்கப்பட்ட யூனியன் அல்லது பென்னி இருப்பினை வர்த்தகப்படுத்தும் நிறுவன ரீதியான வர்த்தகராக வாடிக்கையாளர் இருத்தல்.
- தொடர்புகளற்ற வாடிக்கையாளர்கள் அதே கணக்கிற்கு நிதியினை மீளவனுப்புதல்.
- கிரமமற்ற அல்லது பொருத்தமற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்காக கடந்த காலத்தில் நீங்கள் அறிந்த தொழில்முயற்சிகளினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகங்கள் ஒழுங்குமுறைப்படுத்துநர்களினால் தடைசெய்யப்பட்டிருக்கின்றமை.
- மிகப் பெரும் பெறுமதி கொண்ட கொடுக்கல்வாங்கல்கள்.
- அநுகூலமற்ற அல்லது போட்டித்தன்மை கொண்ட வீதங்களில் வைப்புக்களைச் செய்ய அல்லது முதலீடுகளை மேற்கொள்ள வாடிக்கையாளர் விரும்புதல்.
- வாடிக்கையாளரின் அனைத்து முதன்மைக் கம்பனிகளும் இலங்கைக்கு வெளியே இருத்தல்.
- மூன்றாந்தரப்பினரின் பெயரில் சாதனங்களின் மூலம் முதலீடுகளைக் கொள்வனவு செய்ய வாடிக்கையாளர் எத்தனித்தல்.
- கொடுபடத்தக்கவை அல்லது புறக்குறிப்பீடு செய்யப்பட்ட வாடிக்கையாளருக்கான மூன்றாந்தரப்பினரின் காசோலை மூலமான கொடுப்பனவு.
- உங்களின் ஊழியர்களினால் அல்லது உங்களுக்குத் தெரிந்த தொடர்பான ஊழியர்களினால் தெரியாத தரப்பினருக்குச் செய்யப்படும் கொடுக்கல்வாங்கல்கள்.
- மற்றவர்களின் பெயர்களில் மூன்றாந்தரப்பினரால் செய்யப்பட்ட பங்குகளின் கொள்வனவு (அதாவது நியமனத்தினர் கணக்குகள்).
- மூன்றாந்தரப்பினரால் வரையப்படட காசோலைகள் அல்லது மூன்றாந்தரப்பினரிடமிருந்தான பணவனுப்பல்கள் மூலம் வாடிக்கையாளர்களால் செய்யப்படும் தீர்ப்பனவில் செய்யப்படும் கொடுக்கல்வாங்கல்கள்.
- வாடிக்கையாளர்கள் தவிர, தனிப்பட்டவர்களின் பெயர்களில் வழமைக்கு மாறாக பெருந்தொகையான பிணையங்களை அல்லது பங்குச் சான்றிதழ்கள் காணப்படல்.
- வாடிக்கையாளர் கரைகடந்த வங்கித்தொழில் நிலையங்களில் வங்கிக் கணக்குகளையும் பாதுகாவலர் அல்லது பங்குத் தரகுக் கணக்குகளையும் அத்தகைய தொடர்புகளுக்கான நோக்கம் என்ன என்பதனை விளக்காமலேயே பேணுதல்.
- குறிப்பாகக் காத்திரமான பணம் தூயதாக்கலுக்கெதிரான முறைமைகள் இல்லாத நாடுகளிலிருந்து பெறப்படட பன்னாட்டு தந்திக் கொடுப்பனவுகள் மூலம் நிதியிடப்பட்ட உத்தேசக் கொடுக்கல்வாங்கல்கள்.

**பணம்/ நாணய மாற்றுநர்கள்**

- பிற்போடப்பட்ட வீதங்களை விஞ்சிய வீதத்திலான செலாவணி வீதங்களில் கொடுக்கல்வாங்கல்களை வாடிக்கையாளர் கோருதல்.
- வாடிக்கையாளர் நாணயங்களை மாற்றுவதுடன் வெளிநாட்டு நாணயமொன்றில் சாத்தியமானளவிற்குப் பாரிய நாணய இன உண்டியலைக் கோருதல்.
- வாடிக்கையாளர் நாணயத்தின் மூலத்தினை வெளிப்படுத்தத் தயங்குதல்.
- கொடுக்கல்வாங்கலுக்கு ஆதரவாக தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு வாடிக்கையாளரினால் முடியாமலிருத்தல்.
- இன்னொரு வெளிநாட்டு நாணயத்திற்காக பெருந்தொகையான வெளிநாட்டு நாணயத்தினை மாற்றித் தருமாறு வாடிக்கையாளர் கோருதல்.
- செலுத்துபவரின் சார்பில் மூன்றாந்தரப்பினரால் நிதியம் தெரிந்தெடுக்கப்படும் என வாடிக்கையாளர் அறிவுறுத்தல்.

**செல்லிட பண பணிகளை வழங்குபவர்கள்**

- பல்வேறு முகவரிகளை வழங்குவதனை இணைப்பதற்கு வாடிக்கையாளர்கள் பல்வேறு பெயர்கள்/ அடையாளங்களைப் பயன்படுத்துவது வாடிக்கையாளரின் உண்மையான அடையாளத்தினைக் கண்டறிவதனைக் கடினமாக்குகிறது.
- வாடிக்கையாளரின் விஜயங்கள் அடிக்கடி இடம்பெறுவது மிகையானதாக காணப்படுவதுடன் முகவர் அமைவிடங்களின் பயன்பாடு பரந்தளவில் இடம்பெறுவதுடன் தொடர்புபட்டதாகவும் காணப்படுகின்றது.
- கொடுக்கல்வாங்கலின் நோக்கம் மற்றும் நன்மைபெறுநருக்கும் கட்டளையிடும் வாடிக்கையாளருக்குமிடையிலான உறவுமுறை வியாபார ரீதியான உணர்வினைக் கொண்டதாகக் காணப்படவில்லை.
- பல்வேறு அனுப்புநர்கள் தனியொரு தனிப்பட்டவருக்கு நிதிகளை அனுப்புதல்
- பயன்படுத்தப்பட்ட நாணயத் தாள்கள் "பயன்படுத்தப்பட்ட தாள்களாகக்" காணப்படுவதுடன் அத்துடன்/ அல்லது சிறிய இன நாணயத் தாள்கள் ("பயன்படுத்தப்பட்ட நாணயத் தாள்கள்" என்பது கிழிந்த, அழுக்கான, கறைபடிந்த, வழமைக்கு மாறான மணத்தினைக் கொண்ட தாள்கள் போன்றவற்றைக் குறிப்பிடும்).
- வாடிக்கையாளர் தடைசெய்யப்பட்ட பட்டியலிலுள்ளவருக்கு பணத்தினை அனுப்ப எத்தனித்தல்.
- வாடிக்கையாளர் கணக்கினைத் திறந்த நேரத்தில் வாடிக்கையாளரினால் தெரிவிக்கப்பட்ட நோக்கங்களுக்கு முரணாகக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள விரும்புதல்.
- வழமைக்கு மாறான அல்லது சந்தேகத்திற்குரிய அடையாளப்படுத்தும் ஆவணங்களை வாடிக்கையாளர் ஒரு முறை அல்லது பல் முறை பயன்படுத்தவோ வாடிக்கையாளர் எத்தனித்தல்.
- நிதிக்கான சட்ட ரீதியான மூலங்களை அடையாளம் காண்பதற்கு வாடிக்கையாளரினால் வழங்கப்படட தகவல்கள் பொய்யானவையாக, தவறாக வழிநடத்துபவையாக அல்லது கணிசமானளவிற்குப் பிழையானவையாகக் காணப்படும்.
- சட்ட ரீதியான மூலங்களை அடையாளம் காண்பதற்காக வாடிக்கையாளரால் வழங்கப்பட்ட தகவல்களைப் பிழையானவையாக, தவறாக வழிநடத்துவனவாக அல்லது கணிசமானளவிற்குப் பிழையானவையாகக் காணப்படுதல்.
- கோரிக்கையின் பேரில், வாடிக்கையாளர் அவரின் அல்லது அவளின் நிதிக்கான சட்ட ரீதியான ஏதேனும் மூலங்களைக் குறிப்பிடுவதற்கு வாடிக்கையாளர் மறுத்தல் அல்லது தவறுதல்.
- வாடிக்கையாளர் வெளிப்படுத்தப்படாத முதல்வருக்கான முகவராக தொழிற்படுவதாகத் தோன்றுதல். எனினும், சட்ட ரீதியான வர்த்தகக் காரணங்களெதுவுமின்றி நிறுவனம் தொடர்பான ஏமாற்றக்கூடிய தகவல்களை வழங்க வாடிக்கையாளர் மறுத்தல் அல்லது தயங்குதல்.

**தொடர்பு எண்: 037/04/010/0003/017** 2018 செத்தெம்பர் 10

**வழிகாட்டல் இல. 07/18**

சேரல்: அனைத்து நிதியியல் நிறுவனங்கள் பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும்
தொழில்முறைசார் துறைகளின் பிரதம நிறைவேற்று அலுவலர்கள்/பொது முகாமையாளர்கள்

**2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் (ஈரான் மீதான தடைகள்)
ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தல் மீதான 2018ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வழிகாட்டல்கள்**

மேற்குறித்த வழிகாட்டல்கள் உடனடியாக செயற்படும் விதத்தில் நடைமுறைக்கு வரும் என்பதுடன் 2018 இது யூலை 17ஆம் திகதியிடப்பட்ட 2080/34ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் (ஈரான் மீதான தடைகள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2018 ஓகத்து 21ஆம் திகதியிடப்பட்ட 2085/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அதன் திருத்தங்கள், 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிசார் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனம்) விதிகள், மற்றும் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2(3)இன் கீழ் வழங்கப்பட்ட 2008ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபார (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனம்) விதிகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதலும் வேண்டும்.

**பதில் பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்கள்

## 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் (ஈரான் மீதான தடைகள்) ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல் மீதான 2018ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வழிகாட்டல்கள்

### அறிமுகம்

1) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், 1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டத்தின் கீழ் அவருக்கு உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் வரம்பிற்குள் செயற்பட்டு, இலங்கையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 2231 (2015) இனை நடைமுறைப்படுத்துவதற்காக 2018 யூலை 17ஆம் திகதியிடப்பட்ட 2080/34ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் (ஈரான் மீதான தடைகள்) ஒழுங்குவிதிகளையும் 2018 ஓகத்து 21 திகதியிடப்பட்ட 2085/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட அதன் திருத்தங்களையும் (இதனகத்துப்பின்னர் ஈரான் விதிகள் என குறிப்பீடு செய்யப்படும்) வெளியிட்டுள்ளார்.

2) ஈரான் விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்காகவும் இலங்கையில் ஈரான் ஒழுங்குவிதிகளின் காத்திரமான நடைமுறைப்படுத்தலினை வசதிப்படுத்துவதற்காகவும் ஈரான் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான நிதி நிறுவனங்களினால் (இதனகத்துப்பின்னர் நிறுவனங்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடைப்பிடிக்கப்படுவதற்கு இவ்வழிகாட்டல்கள் நிதியியல் உளவறிதல் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளன.

3) ஈரான் ஒழுங்குவிதிகளுக்கென வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், இலங்கையில் சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஒட்டுமொத்த நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய தகுதிவாய்ந்த அதிகாரியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை நியமித்துள்ளார்.

4) இவ்வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் என்பதுடன் இவை ஈரான் ஒழுங்குவிதிகள், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 2(3)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிசார் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவனம்) விதிகள் மற்றும் 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவனம்) என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டுமெனவும் தேவைப்படுத்தப்படுகிறது.

5) ஈரான் ஒழுங்கு விதிகளானவை, இலங்கையிலுள்ள எவரேனும் தனிப்பட்டவர் அல்லது நிறுவனம், அல்லது இலங்கையின் நியாயாதிக்கத்திற்கு வெளியில் அமைந்துள்ள தனிப்பட்ட இலங்கையர் மற்றும் அத்துடன் நிறுவனங்கள் ஈரானில் உள்ள பெயர் குறிக்கப்பட்ட பட்டியலிலுள்ள தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்கள் அதேபோன்று பெயர் குறிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்கள் (இதனகத்துப் பின்னர் பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் அமைப்புக்கள் என குறிப்பீடு செய்யப்படும்) சார்பில் அல்லது பணிப்பின் பேரில் செயலாற்றக்கூடிய எவரேனும் தனிப்பட்டவர்களுக்காக அல்லது நிறுவனங்களுக்காக நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதிலிருந்து/மற்றும் நிதியியல் பணிகளை வழங்குவதிலிருந்து கட்டுப்படுத்துகின்றது.

6) ஈரான் ஒழுங்குவிதிகளுக்கமைவாக இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை பிரயோகிப்பதற்கான தேவைப்பாடானது இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டன்றி விதியினை அடிப்படையாக கொண்டதாகும், இதன் அர்த்தம் யாதெனில் குறித்த வாடிக்கையாளரொருவருடன் அல்லது உற்பத்தியொன்றுடன் இணையப் பெற்ற இடர்நேர்வினை கருத்திற்கொள்ளாது நிறுவனங்கள் தடை நுண்ணாய்வினைக் கொண்டு நடாத்த வேண்டும் என்பதேயாகும்.

7) தடை நுண்ணாய்வு என்பது, முக்கிய அடையாளப்படுத்தல் தரவுகளைப் பொருத்துவதற்கு முயற்சிப்பதன் மூலம் மிக அண்மைய பெயர் குறிக்கப்பட்ட ஆட்களின் பட்டியலுக்கெதிராக வாடிக்கையாளர் அடையாளங்களைப் புலனாய்வு செய்கின்ற, மற்றும் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளொருவரின் மூலம் சொத்துரிமை கொள்ளப்படக்கூடிய, அல்லது அவர் சார்பில் சொத்துக்களை உடமை கொள்ள அல்லது கொடுக்கல்வாங்கல்களை கொண்டு நடாத்தக்கூடிய வாடிக்கையாளர்கள் பற்றிய நுண்ணாய்வுச் செயன்முறையாகும்.

### இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள்

8) இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் என்பது ஒழுங்குவிதிகளில் விபரிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அதிகாரமளிக்கப்பட்டவாறானவை தவிர பெயர் குறிக்கப்பட்ட ஆட்களின் மற்றும் நிறுவனங்களின் நன்மைக்காக, நிதியங்கள் அல்லது வேறு சொத்துக்கள் நேரடியாக அல்லது நேரடியன்றி கிடைக்கப்பெறச் செய்வதனை தடுப்பதற்காக சொத்துக்களை முடக்குதல் மற்றும் தடைசெய்தல் என்ற இரண்டும் என்று பொருளாகும்.

9) ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தலுடன் தொடர்புடைய இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளானவை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் அல்லது பாதுகாப்புச் சபையினால் தாபிக்கப்பட்ட தொடர்புடைய குழுக்களினால் பெயர் குறிக்கப்பட்ட ஆட்களுக்கு அத்துடன்/அல்லது நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகும். பெயர் குறித்தல்/பட்டியற்படுத்தல் பிரமாணங்களானவை

   அ) சட்டத்திற்குப் புறம்பான வழிகள், ஆயுதப் பெருக்க - உணர்வுமிக்க நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக அவற்றில் ஈடுபடுகின்ற அல்லது ஆதரவு வழங்குகின்ற ஆட்கள் அல்லது நிறுவனங்கள்

   ஆ) பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்கள் சார்பில் அல்லது பணிப்பின் பேரில் செயற்படுதல்

   இ) பதவி குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்கள் மூலம் சொந்தம் கொள்ளப்படுதல்/அல்லது கட்டுப்படுத்தப்படுதல் அத்துடன்

   ஈ) தடைகளை தவிர்ப்பதில் அல்லது தீர்மான ஏற்பாடுகளை மீறுவதில் பெயர் குறிக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு உதவுகின்ற ஆட்கள் அல்லது நிறுவனங்கள்.

10) ஈரான் ஒழுங்கு விதிகள் திகதியில் அல்லது அதன்பின்னர் ஏதேனும் நேரத்தில் மேலே வழிகாட்டல் 5இல் குறிப்பிடப்பட்ட ஆட்களினால்/ நிறுவனங்களினால் நேரடியாக அல்லது நேரடியற்ற விதத்தில் சொந்தமாக கொண்டுள்ள அல்லது கட்டுப்படுத்தப்படுகின்ற அவர்களது உடமையில் உள்ள நிதியங்களை, வேறு நிதியியல் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளங்களை உடனடியாக முடக்குவதற்கும் நிதியங்கள் அல்லது வேறு சொத்துக்கள் அத்துடன் பொருளாதார வளங்கள் எதுவும் தகைமைபெற்ற அதிகாரியினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு, அத்துடன் ஐக்கிய நாடுகள் தீர்மானங்களில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் தவிர அத்தகைய ஆட்களுக்கு அத்துடன் நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெயச் செய்யப்படவில்லை என்பதனையும் மேலும் உறுதிசெய்யுமாறு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**நடைமுறைப்படுத்தும் பொறிமுறை**

11) ஈரான் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதற்காக இரண்டு - கட்ட அணுகுமுறையொன்றினை பின்பற்றுமாறு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

i. முதலாம் கட்டம், அத்தகைய ஆட்கள் எவரும் நிறுவனங்களின் வாடிக்கையாளர்களாக வராமலிருப்பதை உறுதி செய்வதற்கு, பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் அமைப்புக்களின் திரட்டிய பட்டியலுக்கெதிராக புதிய வாடிக்கையாளர்களை (வாடிக்கையாளர்கள் ஒருங்கிணைப்புச் செயன்முறைச் சந்தர்ப்பத்தின் போது) நுண்ணாய்வு செய்வதாகும்.

ii. இரண்டாம் கட்டம், நிதியியல் புலனாய்வுப் பிரிவினால் இற்றைப்படுத்தப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டவாறும் வழங்கப்பட்ட போதும் ஒட்டுமொத்த வாடிக்கையாளர் தரவுத் தளத்தினையும் நுண்ணாய்வு செய்தல்.

12) ஈரான் ஒழுங்குவிதிகளின் 8ஆம் ஒழுங்குவிதிகளுக்கமைய, 9ஆம் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட முடக்குதல் நடவடிக்கையானது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் பெயர் குறிக்கப்பட்ட தனிப்பட்ட ஈரானியர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது உடனடியான விளைவினைக் கொண்டிருக்கும். இதன் அர்த்தம் யாதெனில், தகைமைபெற்ற அதிகாரியிடமிருந்து தனியான முடக்குதல் கட்டளைகளையோ அல்லது பெயர் குறிக்கப்பட்ட பட்டியலோ வெளியிடப்படாது என்பதாகும். எனவே, பெயர் குறிக்கப்பட்ட ஆள் எவரும் அத்துடன் நிறுவனங்கள் எதுவும் தங்களின் வாடிக்கையாளர்களாக இருக்கவில்லை என்பதையும் அத்தகைய பெயர் குறிப்பிட்ட ஆட்களுக்கு அல்லது அமைப்புகளுக்கு எவையேனும் நிதியியல் பணிகளும் வழங்கப்படுவதில்லை என்பதையும் உறுதி செய்வது நிறுவனங்களின் பொறுப்பாகும்.

13) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் அல்லது அதன் குழுவினால் வெளியிடப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட ஆட்களின் அல்லது நிறுவனங்களின் (அவர்கள் சொந்தமாக கொண்டுள்ள அல்லது கட்டுப்படுத்துகின்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக) திரட்டிய பட்டியலுக்கெதிராக பெயர்கள், முகவரிகள் மற்றும் ஏனைய விபரங்களை புலனாய்வு செய்வது இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளின் சில அடிப்படைக் கூறுகளுடன் இணங்குவிப்பினை உறுதிசெய்வதற்கு அவசியமானதாகும். எவ்வாறாயினும், பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள், நிறுவனங்கள் சார்பில் அல்லது பணிப்பின் பேரில் செயற்படுகின்ற ஆட்களுக்கு/ நிறுவனங்களுக்கும் இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் ஏற்புடையதாகும் என்பதனால் மேற்குறித்த நுண்ணாய்வுக்கு போதுமானதாகவிராது. எனவே, நியாயமான சாத்தியமான அளவிற்கு தமது வாடிக்கையாளர்களின் பயன்பெறும் சொந்தக்காரர்கள் மற்றும் வேறு இணையப்பெற்ற தரப்பினரை இணங்காணுமாறு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**வாடிக்கையாளர் ஒருங்கிணைப்பு நேரத்திலேயே போது புதிய வாடிக்கையாளர்களை நுண்ணாய்வு செய்தல்**

14) புதிய வாடிக்கையாளரொருவருக்காக புதிய கணக்கொன்று ஆரம்பிக்கப்படுகின்ற போது, பெயர் குறிக்கப்பட்ட விபரங்கள் பட்டியலுக்கெதிராக அவ்வாடிக்கையாளரின் விபரங்கள் நுண்ணாய்வு செய்யப்பட்டவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளதுடன் வாடிக்கையாளருடன் உறவினை ஏற்படுத்துவதற்கு முன்னர் வாடிக்கையாளர் பெயர் குறிக்கப்பட்ட ஆள் அல்லது நிறுவனமல்ல என்பதனை உறுதி செய்வதற்கு நிறுவனங்கள் தேவைப்படுத்தப்பட்டுள்ளன.

15) தமது கணக்குகளின்/ கொடுக்கல்வாங்கல்களின் பயன்பெறுநர்களை அத்துடன்/ அல்லது பயன்பெறு சொந்தக்காரர்களை இனங்காண்பதற்கும் பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள் எவரும் அத்துடன் அமைப்புக்கள் எதுவும் நிதியங்களின் கணக்குகளின் அல்லது வேறு சொந்தங்களின் பயன்பெறுநர்கள் அத்துடன்/ அல்லது பயன்பெறும் சொந்தககாரரல்ல என்பதனை உறுதி செய்வதற்கும் இவ்வழிகாட்டல்களில் 8 முதல் 10 வரை விவரிக்கப்பட்ட அதே நடைமுறைகளை பிரயோகிக்குமாறு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. பயன்பெறுநர்களை அத்துடன் பயன்பெறும் சொந்தக்காரர்களை இனங்காணும் விதத்தில் அத்துடன் சரிபார்க்கும் விதத்தில் அத்தகைய செயன்முறைகள் உருவாக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுவதுடன் நிதியங்களின், கணக்குகளின் அல்லது வேறு சொத்துக்களின் பயன்பெறுநர்களை சரிபார்ப்பதற்கு நியாயமான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு இயலக்கூடியனவாக இருக்க வேண்டுமெனவும் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

**நிதியியல் உளவறிதல் பிரிவின் மூலமான இற்றைப்படுத்தல் அறிவித்தலின் மீது வாடிக்கையாளர் தரவுத் தளத்தை நுண்ணாய்வு செய்தல்**

16) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் 2231 இற்கான இற்றைப்படுத்தல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகளிடமிருந்தான அறிவித்தலொன்று நிதியியல் உளவறிதல் பிரிவிற்குக் கிடைக்கப் பெற்றதன் உடனடியாக, நிதியியல் உளவறிதல் பிரிவானது, அறிக்கையிடும் நிறுவனங்களாக நிதியியல் உளவறிதல் பிரிவுடன் பதிவுசெய்துள்ள நிறுவனங்களுக்கு அறிவித்தல் மின்னஞ்சல்களை அனுப்பும். அத்தகைய அறிவித்தல் நிதியியல் உளவறிதல் பிரிவினால் அனுப்பப்படுகின்ற போதெல்லாம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 2231 (2015)இன் (http://www.un.org.en/sc/2231/list.shtml) என்ற வெப்தளத்திலிருந்து இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலினைப் பெற்றுக் கொள்ளவதற்கும், அத்துடன் பட்டியலுக்கெதிராக தமது வாடிக்கையாளர் தளத்திற்கு முழுமையான நுண்ணாய்வொன்றினை செயலாற்றுவதற்கும் நிறுவனங்கள் வேண்டப்படுகின்றன. பதவி குறிக்கப்பட்ட ஆட்களின் பெயர், பிறந்த திகதி, தேசியம், கடவுச்சீட்டு/தே.அ.அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை உள்ளடக்குகின்ற ஒருங்கிணைக்கப்பட்ட தேடல் மூலப்பிரமாணமொன்றினைப் பயன்படுத்துமாறும் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது, PDF, XML, HTML படிவங்களில் பட்டியல் கிடைக்கப் பெறுகின்றது என்பதனால் தமது நுண்ணாய்வுத் தரவுத் தளங்களினுள் உள்ளீடு செய்யப்படும் பொருட்டு அப்பட்டியல்களிலுள்ள உள்ளடக்கங்களை செயன்முறைப்படுத்துவதற்கான கனணிப் பயன்பாடுகளை நிறுவனங்கள் உருவாக்கமுடியும். பட்டியல் உள்ளடக்கங்கள் மற்றும் நிறுவனங்களின் தரவுத் தளத்திலுள்ள வாடிக்கையாளர் தரவுகள் என்பவற்றுக்கிடையில் சாதுரியமான வேறுபாடுகள் காணப்படலாம் என்பதால் செயல்திறன் மிக்க தேடலுக்காக குரல் சார்ந்த தேடல் உள்ளடங்கலாக பல்திறன் தேடல் நுட்பங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

**ஏனைய வழிமுறைகள்**

17) அத்தகைய சொத்துக்களை முடக்கியதன் பின்னர் முயற்சி எடுக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக, தொடர்புடைய ஒழுங்குவிதிகளின் தடை விதித்தல் தேவைப்படுத்தல்களுக்கிணங்க ஏதேனும் முடக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை நிறுவனங்கள் தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கும் அறிக்கையிட வேண்டும்.

18) விதி விலக்கான நிபந்தனைகளுக்காக, முடக்கப்பட்ட நிதியங்களைப் பயன்படுத்துவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரி அதிகாரம் வழங்குகின்ற போது, அத்தகைய முடக்கப்பட்ட நிதியங்களை தாமதமின்றி விடுவிப்பதற்கு நி'றுவனங்கள் பொறிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

நிதியங்கள் அல்லது வேறு சொத்துக்கள் பெயர் குறிப்பிடப்பட்ட நிதியல்லாத நிறுவனங்களினால் சொந்தமாக கொள்ளப்படுமிடத்து அல்லது வைத்திருக்கப்படுமிடத்து, அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன என்பதை உறுதிசெய்வதற்கு நிறுவனங்கள் பல எண்ணிக்கையான மேலதிக வழிமுறைகளையும் பாதுகாப்புக்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

19) கணக்கு வைத்திருக்காத/அவ்வப்போது வந்து போகும் வாடிக்கையாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு வாடிக்கையாளர்கள் தொடர்புபடுகின்ற (காசோலை பணமாக்குதல், கொடுப்பனவு கட்டளைகள் மற்றும் நாணயப் பரிமாற்றல்கள் போன்ற) கொடுக்கல்வாங்கல்களை கொண்டு நடாத்துவதற்கு முன்னர், நிறுவனங்கள் நுண்ணாய்வினை மேற்கொள்ளுதல வேண்டும். அதற்காக, அத்தகைய வாடிக்கையாளர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு போதிய பொறிமுறைகள் நிறுவப்படவேண்டும். அத்தகைய நுண்ணாய்வின் காரணமாக நிறுவனம் சாத்தியமான பொருத்தமொன்றினை இனங்காணுமிடத்து அப்போது அது செலுத்துநரிடமிருந்து நிதியங்களைச் சேகரித்த பின்னர் கொடுக்கல்வாங்கல் நிதியங்களை முடக்க வேண்டும்.

**பணிப்புரை இல. 01/2018** 2018 சனவரி 18

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற நிதிசார் கொடுப்பனவு அட்டைகளின் கையேற்பாளர்கள்

**பணி வழங்குனர்களூடாக இலத்திரனியல் வர்த்தக கொடுக்கல்வாங்கல்களை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு அட்டையைக் கையேற்றல் தொடர்பான பணிப்புரை**

இந்த பணிப்புரையானது 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளின் ஒழுங்குவிதிகளின் 18ஆம் ஒழுங்கு விதியின் நியதிகளில் விடுக்கப்பட்டு இருக்கின்றதுடன் (ஒழுங்கு விதிகள்) ஒழுங்குவிதிகளின் நியதிகளில் உரிமம்பெற்ற நிதிசார் கொடுப்பனவு அட்டைகளை கையேற்பவர்களும் விண்ணப்பிக்க வேண்டும். (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் எனக்குறிப்பிடப்படுவர்)

இணையம் மூலமான கொடுப்பனவு அட்டையினுடைய நிறுவன ரீதியான வசதியை ஆரம்பிப்பதனூடாக இலத்திரனியல் வர்த்தக கொடுக்கல்வாங்கல்களை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு அட்டையைக் கையேற்பதோடு பொருட்கள் சேவைகளினுடைய கொள்வனவுப் பெறுமதியை மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவு செய்வதற்கும், மீளப் பணத்தினைச் செலுத்துவதற்குமான ஒரு ஊடகமாக கொடுப்பனவு அட்டையை மூன்றாம் தரப்பினர் ஏற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளை உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் செய்ய வேண்டும். (இதனகத்துப் பின்னர் பணிவழங்குவோர் எனக்குறிப்பிடப்படுவர்) உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் குறித்த இணையத்தளக் கொடுப்பனவு அல்லது நுழைவாயிலினூடாக இலத்திரனியல் வர்த்தக கொடுக்கல்வாங்கல்களுக்காக வியாபாரிக்கான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு செய்வதற்குப் பணி வழங்குனருடைய உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

கடன்அட்டை வைத்திருப்பவர்களுடைய வட்டியைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் உரிய நேரத்தில் கொடுப்பனவுகள் வணிகர்களுக்கு செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் பணிவழங்குனரின் ஊடாக இலத்திரனியல் வர்த்தக கொடுக்கல்வாங்கல்கள் அடிப்படையில் கொடுப்பனவு அட்டையைப் பெற்றுக்கொள்வது மீதான நிபந்தனைகளைக் குறித்துரைப்பது இப்பணிப்புரையினை வெளியிட்டதன் நோக்கமாகும். இப்பணிப்புரையானது 2018ஆம் ஆண்டு சனவரி 18ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

2.1 உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் வருங்கால பணி வழங்குனர்களுடைய திறனை மதிப்பிடுவதில் அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

2.2 உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் இணையத்தின் மூலமான பொருட்கள் சேவைகளினுடைய கொள்வனவிற்காக கொடுப்பனவு ஊடகம் ஒன்றாக கொடுப்பனவு அட்டைகளை ஏற்றுக்கொள்வதற்கான வசதிகளை வழங்குவது தொடர்பில் பணிவழங்குனருடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இவ் உடன்படிக்கைகளில் ஒவ்வொரு தரப்பினரினதும் வகிபாகம், பொறுப்புக்கள், உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

2.3 உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் வணிக விண்ணப்பங்களை மீளாய்வு செய்வதுடன் குறித்த இணையத்தை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுத் தளம் அல்லது நுழையும் வழியில் பதிவு செய்வதற்கு வணிகர்களுக்கு ஒப்புதலை வழங்குதலும் வேண்டும். உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் வணிக விண்ணப்பங்களை மீளாய்வு செய்கின்றபோது பணி வழங்குனரினால் வழங்கப்பட்ட கம்பனியின் தோற்றப்பாடு மற்றும் வணிகர்களின் வணிக செயற்பாடுகளினுடைய விபரங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும். உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் அனைத்து பதிவுசெய்யப்பட்ட வணிகர்களினுடைய ஒவ்வொரு இணையத்தை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுத்தளம் அல்லது நுழைவாயிலினுடைய பதிவுகளைப் பேணவேண்டும்.

2.4 உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் அட்டை வைத்திருப்பவரின் தரவினுடைய இரகசியத் தன்மையினைப் பேணவேண்டும் என்பதுடன் அட்டை இல, அட்டைப் பாதுகாப்பு குறியீடு மற்றும் காலாவதியாகும் திகதி போன்ற உணர்வு பூர்வமான தகவல்களைப் பெற்று வைத்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

2.5 உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் குறித்த இணையக் கொடுப்பனவுத் தளம் அல்லது நுழைவாயிலினூடாக கொடுக்கல் வாங்கல்களை எடுத்துச் செல்லும் கொடுப்பனவுகள் தொடர்பில் வசதியளிப்பதற்கு ஒவ்வொரு இணையக் கொடுப்பனவுத் தளம் அல்லது நுழைவாயிலுக்காக உரிமம் பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் சொந்த சிறப்புக்கணக்கு ஒன்றினைப் பேணவேண்டும். முறிவடைந்த அல்லது சர்ச்சைக்குள்ளான கொடுக்கல்வாங்கல்களுக்கான பணமீளளிப்பானது இந்தக் கணக்கினூடாக வழங்க வசதியளிக்கப்பட வேண்டும்.

2.6 வணிகர்கள் நிதியைப் பெற்ற மூன்று நாட்களுக்குள் இறுதித் தீர்ப்பனவுகள் மூன்று வேலை நாட்களுக்கிடையில் இடம்பெறும் என்பதை உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2.7 இணையக் கொடுப்பனவுத் தளம் அல்லது நுழைவாயிலினூடாக செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பிணக்குகளை கையாளுவதற்காக பொருத்தமான கொடுப்பனவு அட்டைத்திட்டத்தினுடைய பிணக்கைத் தீர்ப்பதற்கான வழிகாட்டுதல்களுடன் பிணக்கினைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றினை உரிமம் பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் விருத்திசெய்தல் வேண்டும்.

2.8 இணையக் கொடுப்பனவுத் தளம் அல்லது நுழைவாயிலினுடைய தொழிற்பாடுகளை உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள்

கண்காணிக்க வேண்டும்.

3. இணையக் கொடுப்பனவுத் தளம் அல்லது நுழைவாயில் அட்டைக் கொடுப்பனவிற்கு வசதியளிப்பதற்கு முன்னர், மத்திய வங்கியினுடைய ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்காக உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்களுக்கும் பணி வழங்குனர்களுக்குமிடையில் உடன்படிக்கையொன்றை செய்வதற்காக வரைவு உடன்படிக்கையினுடைய பிரதி ஒன்றினை உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு இணையக் கொடுப்பனவுத் தளம் அல்லது நுழைவாயிலுக்காக பணிவழங்குனர்களுடன் தனியான உடன்படிக்கைகளை உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் வைத்திருக்க வேண்டும்.

4. உரிமம் பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் இணையக் கொடுப்பனவுத் தளம் அல்லது நுழைவாயிலினூடாக இலத்திரனியல் வர்த்தக கொடுக்கல்வாங்கல்களை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு அட்டையைக் கையேற்பதில் அவர்கள் அனைத்து பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை பின்பற்றுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. இலங்கை மத்திய வங்கியினுடைய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்திற்கு காலாண்டு அடிப்படையில் ஒவ்வொரு இணைய கொடுப்பனவுத் தளம் அல்லது நுழைவாயில் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

சி.ஜெ.பி. சிறிவர்த்தன

**துணை ஆளுநர்**

**வழிகாட்டல் இல: 01/2018** 2018 சனவரி 18

**செல்லிடத் தொலைபேசி பிரயோகங்கள் தொடர்பான கொடுப்பனவுக்காக குறைந்தபட்ச இணங்குவிப்பு நியமங்கள் மீதான வழிகாட்டல்கள்**

ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கி, உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி, நிதிக் கம்பனி அல்லது உரிமம்பெற்ற செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமை அல்லது ஏதேனும் நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஆகக்குறைந்த இணக்கத் தரத்தினை வழங்குவதற்காக 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சட்டத்தின் 44ஆம் பிரிவின்படி, இந்த வழிகாட்டலானது வெளியிடப்பட்டது. இவை அனைத்திற்கும் உரிய செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு பணிகளை செயற்படுத்துவதற்காக அல்லது வசதியளிப்பதற்காக அல்லது வழங்குவதற்காக தொழிற்படுகின்றன. (இதனகத்துப் பின்னர் கொடுப்பனவு பணி வழங்குனர் எனக் குறிப்பிடப்படுவர்)

இத்தகைய வழிகாட்டல்களானது செல்லிடத் தொலைபேசி பிரயோகங்கள், வெப் பணிகள், சேமிப்புப்பக்க தரவுத்தளம், சேமிப்பு மற்றும் வலைப்பின்னலூடான தொடர்பூட்டல் உள்ளடங்கலாக ஆனால் மட்டுப்படுத்தப்படாத செல்லிடத் தொலைபேசி பிரயோகச் சூழற்றொகுதி தொடர்பான அனைத்து கொடுப்பனவையும் உள்ளடக்க வேண்டும். கொடுப்பனவு பணி வழங்குனர் அனைத்து கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகங்களுக்காக இலங்கை மத்திய வங்கியிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இந்த வழிகாட்டலானது 2018ஆம் ஆண்டின் சனவரி 18ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருதல் வேண்டும்.

**2. வரைவிலக்கணங்கள்**

கீழே தரப்பட்டுள்ள பதங்கள் இந்த வழிகாட்டல் எங்கு பயன்படுத்தப்படினும் கீழே தரப்பட்டுள்ள கருத்துக்களைக் கொண்டிருக்க வேண்டும்.

**கணக்கிலிருந்து வெளியேறல் :** முன்வரையப்பட்ட எண்ணிக்கையிலான தவறான உள்நுழைதல் முயற்சிகளுக்கு பின்னர் கணக்கினை பூட்டுவதன் மூலம் கடவுச்சொல் குறியீட்டினை ஊகிப்பதனால் ஏற்படும் தாக்கங்களைத் தடுப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற ஒரு முறையாக கணக்கிலிருந்து வெளியேறலானது இருக்கின்றது.

**உறுதிச்சான்றளித்தல் :** கணனிமயப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்பாட்டாளரின் தகுதி மற்றும் பயன்பாட்டாளரை சரியாக இனங்கண்டு கொள்ளல் தொடர்பான செயற்பாடு உறுதிச்சான்றளித்தல் எனப்படும்.

**அதிகாரமளித்தல் :** பயன்பாட்டாளர் அல்லது வாடிக்கையாளர் சிறப்புரிமையை அல்லது முறைமை வலைகள் தொடர்பான அணுகல் மட்டங்களைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பாதுகாப்புப் பொறிமுறை அதிகாரமளித்தல் எனப்படும்.

**கிடைக்கும்தன்மை :** கிடைக்கும்தன்மை என்பது சரியான நேரத்தில் நம்பகமான அணுகும் தன்மைகளையும் தகவல்களின் பயன்பாடுகளையும் உறுதிப்படுத்துவது.

**சான்றிதழ் அதிகாரசபை :** இணையத்தின் மூலம் எண்ணியல் நிறுவனங்களினுடைய அடையாளத்தினை சரிபார்ப்பதற்கு எண்ணியல் சான்றிதழ் வெளியிடுகின்ற நம்பிக்கையான நிறுவனம் சான்றிதழ் அதிகாரசபை எனப்படும்.

**சான்றிதழ் குத்துதல் :** வாடிக்கையாளர் சேவையகத்திற்கு தொடர்பினை ஏற்படுத்தி அதனுடைய பாதுகாப்பு கொள்குழிப்படை சான்றிதழுடன் சேவையகத்தை செயற்பட வைத்தல். சான்றிதழ் அதிகாரசபையினால் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தால் கைத்தொலைபேசி செயலியினால் அது நம்பப்படுகின்றதோடு பின்னர் தொடர்பிற்கு அனுமதிக்கப்படுகின்றது.

**உரிமம்பெற்ற நிதியியல் கையேற்பாளர்கள் :** அட்டை வைத்திருப்பவரால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பணிகளின் பெறுமதியை மூன்றாந்தரப்பினருக்கு கொடுப்பனவு செய்வதற்கும் மீளப் பணத்தினை செலுத்துவதற்குமான ஒரு ஊடகமாக கொடுப்பனவு அட்டையை மூன்றாந்தரப்பினர் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது அட்டை வைத்திருப்பவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத்திற்காக மூன்றாந்தரப்பினருக்குப் பணத்தினை மீளச் செலுத்துவதற்குமான ஒழுங்குகளை செய்வதற்கு 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமம்பெற்ற எவரேனும் ஆள்

**சிறியதாக்குதல் :** அதனுடைய தொழிற்பாடுகளில் மாற்றமின்றி மூலக்குறியீட்டிலிருந்து தேவையற்ற அனைத்துப் பண்புகளையும் நீக்குகின்ற செயற்பாடு சிறியதாக்குதல் எனப்படும்.

**சிக்கலாக்குதல் :** சிக்கலான குறியீட்டினை வேண்டுமென்றே உருவாக்குகின்ற ஒரு செயற்பாடு சிக்கலாக்குதல் எனப்படும். அதாவது மனிதனால் புரிந்துகொள்வதற்கு கடினமான மூலம் அல்லது இயந்திரக் குறியீடு ஆகும்.

**சிறப்புரிமை அதிகரித்தல் :** வழமையான பயன்பாடு அல்லது பயன்பாட்டாளரிடமிருந்து பாதுகாக்கப்படுகின்ற வளங்களின் உயர்ந்தபட்ச அணுகலை அடைந்து கொள்வதற்கு செயற்பாட்டு முறைமை அல்லது மென்பொருள் பயன்பாட்டில் தவறான வடிவமைப்புக்

குறைபாடு அல்லது கட்டமைப்பு மேற்பார்வை மூலம் பயன்படுத்தப்படுகின்ற ஒரு செயற்பாடு சிறப்புரிமை அதிகரிப்பு ஆகும்.

**பரிசோதனைக் கட்டமைப்பு :** பரிசோதனைக் கட்டமைப்பு என்பது தனித்தனியாக நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கான ஒரு பாதுகாப்பு அதிகரித்தல் ஆகும். பரிசோதனை செய்யப்படாத அல்லது நம்பிக்கையில்லாத நிகழ்ச்சிகள் அல்லது குறியீடுகளை இயக்குவதற்கு அடிக்கடி அது பயன்படுத்தப்படுகின்றது.

**உணர்வுபூர்வமான தரவு :** உணர்வுபூர்வமான தரவானது இந்த சூழலில் வாடிக்கையாளர் அறிமுக ஆவணங்கள், வங்கிக் கணக்கு இலக்கம் மற்றும் கொடுப்பனவு அட்டை எண்கள் மற்றும் இவை போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

**குறுகிய ஆயுள்கால அணுகல் அடையாளக்குறி :** பிரதான கணனிப்பொறி வளங்களை முகாமை செய்வதற்கு வாடிக்கையாளரிற்கு அணுகல் அட்டை கிடைக்கும்போது அந்த வாடிக்கையாளர் அங்கீகாரம் உடையவராக இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு சேவையகமானது அடையாளக்குறியிலுள்ள தகவல்களைப் பயன்படுத்தமுடியும். இத்தகைய அடையாளக்குறியீடு குறுகிய ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கும்.

**ஆர்வலர் :** ஆர்வலர் இந்தச் சூழலில் கொடுப்பனவு பணி வழங்குனர், மென்பொருள் விற்பனையாளர்கள், பணி வழங்குனர்கள், பயனடையும் வணிகர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை உள்ளடக்கியிருக்கும்.

**சீரான மூலவள அமைப்பாளரை உருவாக்குதல் :** சீரான மூலவள அமைப்பாளரை உருவாக்குவது என்பது சீரான மூலவள அமைப்பாளரினால் சாராமாறிகளை மாற்றியமைக்கின்ற செயன்முறையாகும்.

## 3. கொள்கை உருவாக்கம்

3.1 வணிக நோக்கங்கள், கட்டளைகள், இணக்கப்பாடு வழிகாட்டல்கள், கட்டுப்பாடுகள், பொறுப்பாண்மைகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்கிய செல்லிடத் தொலைபேசி பிரயோகங்கள் தொடர்பான அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய கொள்கை ஆவணம் ஒன்றினை கொடுப்பனவு பணி வழங்குனர் விருத்தி செய்ய வேண்டும். கொடுப்பனவு பணி வழங்குனர்களின் தேவைப்படும்போதும், வருடந்தோறும் இந்த ஆவணத்தினைத் திருத்தி அமைக்கலாம்.

3.2 செல்லிடத் தொலைபேசி தொடர்பான அனைத்துக் கொடுப்பனவுகளையும் விருத்திசெய்யும் போது இந்தகொள்கை ஆவணமானது ஒரு கட்டமைப்பாக பயன்படுத்துவதோடு அனைத்து அக்கறையுடைய தரப்பினரிற்கும் தெளிவாக தொடர்பூட்டப்பட வேண்டும்.

## 4. ஆவணப்படுத்தல்

4.1 மேலே பிரிவு 3இன் கீழ் உருவாக்கப்பட்ட கொள்கை ஆவணங்களுடன் இணங்கும் வகையில் அனைத்து அக்கறையுடைய தரப்பினரால் கட்டடக்கலை, விளக்கப்படம், கணனி தேவை விவரக் குறிப்பு ஆவணம், தொழில்நுட்ப ஆவணம் மற்றும் ஏனைய பயன்பாட்டாளர் ஆவணம் போன்ற அனைத்து தேவையான ஆவணங்களும் தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றது என்பதை கொடுப்பனவு பணி வழங்குனர் உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும்.

## 5. சாதனங்களைப் பதிவுசெய்தல்

5.1 ஊடகங்களை அணுகும் கட்டுப்பாட்டு முகவரி அல்லது சர்வதேச கையடக்கத் தொலைபேசிக் சாதன அடையாள இலக்கம் உள்ளடங்கலாக கையடக்கத் தொலைபேசி சந்தாதாரர் அடையாளத்தொகுதி இலக்கம் மற்றும் சாதன அடையாளங்காட்டி தகவல்களைப் பயன்படுத்த பயன்பாட்டாளர் கணக்குகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி சாதனங்கள் கொடுப்பனவு பணி வழங்குனருடன் பதிவு செய்யப்படல் வேண்டும்.

5.2 கொடுப்பனவு பணி வழங்குனருடன் பதிவுசெய்யப்பட்டிருக்கின்ற செல்லிடத் தொலைபேசி சாதனங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுவதற்கு செல்லிடத் தொலைபேசி பிரயோக பயன்பாட்டாளர் கணக்கு தொடர்பான கொடுப்பனவு ஒவ்வொன்றும் அனுமதிக்கப்பட வேண்டும்.

5.3 செல்லிடத் தொலைபேசி பிரயோக பயன்பாட்டாளர் கணக்கு தொடர்பான கொடுப்பனவு ஒவ்வொன்றினிடத்தும் உள்நுழைதல் அங்கீகாரம் மற்றும் நிதிப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல் அங்கீகாரம் இருத்தல் வேண்டும்.

## 6. உறுதிச்சான்றளித்தல் மற்றும் கடவுச்சொல் குறியீட்டுக் கொள்கை

சேவையகத்தினிடத்தில் உறுதிச்சான்றளிப்பதற்காக பின்வரும் குறைந்த கட்டுப்பாடுகள் மற்றும் இரகசியக் குறியீட்டுக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

6.1 சேவையகத்தினிடத்தில் மட்டும் உறுதிச்சான்றளித்தல் செயல்முறைப்படுத்தப்படல் வேண்டும்.

6.2 பயன்பாட்டாளர் அறிமுக ஆவணங்களை வழங்காமல் வாடிக்கையாளர் வேண்டுகோள்களை உறுதிச்சான்றளிப்பதற்கு குறுகிய ஆயுற்கால அணுகும் அனுமதி அட்டைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

6.3 செல்லிடத் தொலைபேசி பிரயோக தொடர்பான கொடுப்பனவிற்கு விசேட அடையாளங்காட்டி மற்றும் கையடக்கத் தொலைபேசி சந்தாதாரர் அடையாளத் தொகுதி இலக்கம், சாதன அடையாளங்காட்டி மற்றும் கடவுச்சொல் அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கம் என்பவற்றுடன் பல்பக்க காரணி அங்கீகாரமளித்தல் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

6.4 வடிவமைக்கக்கூடிய உறுதியான கடவுச்சொல் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

6.5 பல தவறான உள்நுழைவு முயற்சிகளுக்குப் பிறகு கட்டமைக்கக்கூடிய கணக்கு வெளியேற்றத் தொழிற்பாட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். அத்தகைய கணக்குகளைத் திறக்க கொடுப்பனவு பணி வழங்கனரினுடைய தரமான பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

6.6 அதேநேர சாத்தியமான தாக்கங்கள் மற்றும் உள்நுழைவு முரண்பாடுகளைக் கண்டுபிடிக்க உறுதிச்சான்றளித்தல் முயற்சிகள் உள்நுழைவும் கண்காணிக்கப்படவும் வேண்டும்.

6.7 எந்த உள்ளக வளங்களையும் அணுகுவதற்கு சரியாக உறுதிச்சான்றளிக்கப்படல் வேண்டும்.

7. **அதிகாரமளித்தல்**

அதிகாரமளித்தலின் மீது பின்வரும் குறைந்தபட்ச கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

7.1 ஆகக்குறைந்த சிறப்புரிமைக் கொள்கை எல்லா நேரத்திலும் பின்பற்றப்பட வேண்டும்.

7.2 சிறப்புரிமை அதிகரிப்புக் கட்டுப்பாடுகள் மற்றும் சீரான மூலவள அமைவிட உருவாக்கத்தினை கையாளுதல் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

8. **அமர்வு கையாளுதல்**

அமர்வு கையாளுதலின் மீது பின்வரும் குறைந்தபட்சக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

8.1 அமர்வு அடையாளம் எழுமாறானதாக இருத்தல் வேண்டும்.

8.2 செல்லிடத் தொலைபேசி தொடர்பான கொடுப்பனவானது ஒரு முறைகேடான செயலற்ற நேரத்திற்குப் பிறகு தொழிற்பாட்டிலிருந்து வெளியேறுவதற்கு தன்னியக்கமான பயன்பாட்டாளரை வைத்திருக்க வேண்டும்.

8.3 பயன்படுத்துவதற்கு இலகுவானதும், துல்லியமாக பார்க்கக் கூடியதான வெளியேறல் முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

8.4 வெளியேறுகின்ற காலப்பகுதியில் அனைத்து பிரயோகங்களும் குறிப்பாக செல்லிடத் தொலைபேசி சாதனத்தினுடைய அனைத்து தற்காலிக மற்றும் நிரந்தர நினைவங்களில் சேமித்து வைத்திருந்த உணர்வுபூர்வமான தரவு அழிக்கப்பட அல்லது காலாவதியாக்கப்பட வேண்டும்.

8.5 தவறிவிடப்பட்டதாக அல்லது திருடப்பட்டதாக முறையிடப்பட்ட சாதனத்திலிருந்து செல்லிடத் தொலைபேசி பிரயோக சேவையகம் தொடர்பான கொடுப்பனவிற்கான அணுகலை மையத்தில் முடக்குவதற்கு நடைமுறை ஒன்று அமுல்படுத்தப்பட வேண்டும். ஒரே நேரத்தில் உள்நுழையும் முயற்சிகளை கண்டு பிடிப்பதற்கும் அதனை பயன்பாட்டாளரிற்கு தொடர்பூட்டுவதற்கும் சேவையகத்தினிடத்தில் நடைமுறை ஒன்று அமுல்படுத்தப்பட வேண்டும்.

9. **தரவினை பதிதல் மற்றும் சேமித்தல்**

9.1 கையடக்கத் தொலைபேசி பிரயோகத்தில் அல்லது உரிமம்பெற்ற நிதிசார் கையேற்பாளர்களின் களத்தில் மட்டுமே கொடுப்பனவு அட்டை தரவு கைப்பற்றல் நடக்க வேண்டும். அவ்விடத்தில் செல்லிடத் தொலைபேசி பிரயோக சூழல் முறைமையானது கொடுப்பனவு விண்ணப்பத் தரவுப் பாதுகாப்புக் கட்டளை மற்றும் கொடுப்பனவு அட்டைதொழில் தரவுக் கட்டளை சான்றுப்படுத்தலாக இருக்கின்றது.

9.2 இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்டதும் மற்றும் கட்டுப்படுத்தப்படுகின்றதுமான சூழல்முறைமை ஒன்றில் கொடுப்பனவு அட்டைத் தரவு தவிர்ந்த கொடுப்பனவு தொடர்பான உணர்வுபூர்வமான தரவினை மட்டுமே கைப்பற்ற அல்லது சேமிக்க முடியும்.

9.3 செல்லிடத் தொலைபேசி சாதனம் ஒன்றில் கணக்கு இலக்கங்கள் மற்றும் வாடிக்கையாளர் அறிமுக ஆவணங்கள் போன்ற உணர்வுபூர்வமான தகவல்களை சேமித்து வைக்கக்கூடாது.

9.4 சாதனத்தின் எழுமாறான அணுகும் நினைவகத்தில் உணர்வுபூர்வமான தகவல்கள் சரியான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

9.5 தரவுத்தளத்தில் பதிவிடுவதற்கு முன்பாக தரவானது சரிபார்க்கப்பட்டு திருத்தப்பட வேண்டும். சேவையக பக்கம் மற்றும் வாடிக்கையாளர் பக்கமாக, கையடக்கத் தொலைபேசி செயலி தரவுத்தளம் தொடர்பான கொடுப்பனவு கடினமாக்கப்பட வேண்டும். சேவையகப் பக்கம் மற்றும் வாடிக்கையாளர் பக்கமாக கையடக்கத் தொலைபேசி பிரயோக தரவுத்தளம் தொடர்பான கொடுப்பனவு கடினமாக்கப்பட வேண்டும்.

10. **தளத்திற்கு வெளியேயான கொடுக்கல்வாங்கல்கள்**

10.1 இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்களுக்காக அல்லது அதன் கொடுப்பனவானது சேமிக்கப்பட்ட பெறுமதி அட்டை ஒன்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தாலன்றி பின்னர் பரிமாற்றம் செய்வதற்காக சாதனத்தில் கொடுக்கல்வாங்கல் தரவினை சேமித்தல் மற்றும் கொடுக்கல்வாங்கல்களினுடைய தளத்திற்கு வெளியேயான அங்கீகாரத்திற்கு செல்லிடத் தொலைபேசி பிரயோகங்கள் தொடர்பான கொடுப்பனவானது அனுமதிக்கப்படக்கூடாது.

11. **மறைகுறியீட்டுத் தகவலியல்**

செல்லிடத் தொலைபேசி பிரயோகம் தொடர்பான கொடுப்பனவில் மறைகுறியீட்டுத் தகவலியல் வழிமுறைகளை வடிவமைக்கும் போதும் பயன்படுத்தும்போதும் பின்வரும் பண்புகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

11.1 நிதியியல் தொழிலினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மறைக்குறியீட்டு தகவலியல் வழிமுறைகள் மற்றும் மறைகுறியீட்டு தகவலியல் மாதிரிகளை கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி செயலியானது பயன்படுத்த வேண்டும்.

11.2 போக்குவரத்து மற்றும் ஓய்வு நேரத்தில் உணர்வுபூர்வமான தரவானது குறியாக்கம் செய்யப்படல் வேண்டும். கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகமானது இரகசியக் குறியீட்டிலிருந்து புலங்களை உருவாக்கும் போது உப்பினைப் பயன்படுத்துதல் வேண்டும்.

11.3 புலமீள் கணக்கிடல் நிதியியல் தொழில்துறை நியமங்களுக்கிணங்க மேற்கொள்ளப்பட வேண்டும்.

11.4 குறியாக்க சாவிகளானது பொருத்தமான பாதுகாப்பு கட்டுப்பாடுகள் இல்லாத செல்லிடத் தொலைபேசி சாதனத்தில் சேமித்து வைக்கப்படக்கூடாது.

12. **கொண்டுசெல் அடுக்குப் பாதுகாப்பு**

12.1 கொண்டுசெல் அடுக்கு குறியாக்கலானது அனைத்து தொடர்பூட்டலுக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

12.2 சான்றுதழ் குறியீடானது சரியான விதிவிலக்கு கையாளலுடன் சரியாக நடைமுறைப்படுத்தப்படவும் பயன்படுத்தப்படவும் வேண்டும்.

12.3 சான்றுதழ் குத்துதலினுடைய புறக்கணிப்பை குறைப்பதற்கான கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

12.4 செக்குவர் சொக்கேற் லேயர் சான்றுப்படுத்தல் தவறுகள் சரியாக குறிக்கப்படும் வரை கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகமானது செயற்பாடுகளை நிறுத்த வேண்டப்படுவதோடு சான்றுப்படுத்தல் தவறுகளை புறக்கணிக்கப்படவும் கூடாது.

12.5 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி செயலியானது நம்பிக்கைப் பொறுப்பு சான்றிதழ் அதிகாரசபை ஒன்றினால்

விநியோகிக்கப்படுகின்ற முறைப்படி அமைந்த செக்குவர் சொக்கேற் லேயர் சான்றிதழ்களைப் பயன்படுத்த வேண்டும்.

12.6 ஒருமுறை கடவுச்சொல் தவிர்ந்த உணர்ச்சிபூர்வமான தரவினை கட்டமைப்பில்லாத துணைப்பணி தரவு, குறுந்தகவல் பணி, பல்லூடக செய்திப் பணி போன்ற மாற்று ஊடகங்களைப் பயன்படுத்தி பரப்பப்படக்கூடாது.

13. மாற்று பொறியியற்படுத்தல் மற்றும் திருத்துதல்

13.1 செயற்பாட்டு நேரத்தின்போது பிரயோகத்தினை திருத்துவதற்கு எந்தவொரு மூன்றாம் நபரையும் கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகம் அனுமதிக்கப்படக் கூடாது.

13.2 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகத்திற்கு சிறியதாக்குதல் மற்றும் மூலக்குறியீட்டு சிக்கல் நுட்பங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

14. கண்டறிவதைத் தடுத்தல்

14.1 வாடிக்கையாளர் பயன்பாடுகளினுடைய ஏதேனும் கையாளுதல்களை தடுப்பதற்கும் சேவையகத்தினிடத்தில் நேர்மையினை சரி பார்ப்பதற்கும் பின்வரும் சரிபார்த்தல்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகத்தின் ஆரம்பத்தில் அல்லது பொருத்தமான நேரத்தில் இத்தகைய சரிபார்த்தல்களானது நிறைவேற்றப்பட வேண்டும். ஏதேனும் இத்தகைய சரிபார்த்தல்களானது தோல்வியடைகின்றபோது கொடுப்பனவு தொடர்பான கையடக்கத் தொலைபேசி பிரயோகம் செயலிழக்கப்படச் செய்தல் வேண்டும்.

14.1.1 அடையாளப் பெறுமதிகள் அல்லது குறியீட்டுத் தொகுதிகள், வகைகள் அல்லது எல்லா நிகழ்ச்சித் திட்டத்தினதும் சரிபார்த்தல்கள்

14.1.2 குறிப்பிட்ட முறைமைக் கோப்புகளினுடைய அளவு அல்லது கோப்பு கையாளலை செல்லுபடியாக்குதல்

14.1.3 செயற்பாட்டு நேரத்தில் கோப்புப் பொதியினுடைய கையெழுத்தினை சரிபார்த்தல்

14.2 வேரூன்றிய அல்லது சிறை உடைப்புச் சாதனங்களின் மீது நிறைவேற்றப்படுவதற்கான கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகங்களை அனுமதிக்கப்படக் கூடாது.

14.3 பிழைதிருத்தி கண்டறிதல் மற்றும் முன்மாதிரி கண்டறிதலை நடைமுறைப்படுத்தப்பட வேண்டப்படுவதுடன் கொடுப்பனவு தொடாபான செல்லிடத் தொலைபேசி பிரயோக திருத்துதல் அல்லது முன்மாதிரி ஒன்றை உட்பக்கத்தில் செயற்படுத்துவதற்கு அனுமதிக்கப்படக்கூடாது.

15. கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோக அனுமதிகள்

15.1 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகமானது சரியாக தொழிற்படுவதற்கு செயலிற்கு தேவையான அனுமதிகள் ஆகக்குறைந்தது ஒரு செயற்பாட்டு முறைமையானது கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

16. பாதுகாப்பான குறியிடல்

கொடுப்பனவு பணி வழங்குனர்கள் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

16.1 தொழிலினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு குறியிடல் நடைமுறைகள் மற்றும் கட்டளைகளை விருத்தியாளர்கள் பின்பற்ற வேண்டும்.

16.2 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகமானது பாதிக்கப்பட்ட அல்லது நீக்கப்பட்ட கூறுகள், நெறிமுறைகள், நூலகங்கள், எழுத்து பல் வடிவம் என்பவற்றை பயன்படுத்துவதில்லை.

16.3 கூறுகள் அல்லது நெறிமுறைகள் அல்லது நூலகங்கள் அல்லது எழுத்து வடிவங்களினுடைய அமுக்கலாக்கமானது ஏதேனும் பாதிப்புகளுக்கு வழிப்படுத்தக் கூடாது.

16.4 ஏதாவது பாதிப்புக்கள் இனங்காணப்பட்டால் கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகமானது சரியாக பொருத்தப்பட வேண்டும்.

16.5 மூலகுறியிடலில் உணர்வுபூர்வமான தகவல்கள் வன்குறியிடப்படக்கூடாது.

17. உள்ளீடு மற்றும் வெளியீட்டு கையாளல்

17.1 சேவையகத்திலும் வாடிக்கையாளரிலும் அனைத்து உள்ளீடு மற்றும் வெளியீட்டு தரவானது சரியாக கத்தீகரிக்கப்படவும் பரிசோதிக்கப்படவும் வேண்டும்.

17.2 தன்னியக்கமாக நிறைவு செய்யப்படும் பண்புகள் உணர்வுபூர்வமான தகவல்களை செயலிழக்கச் செய்யத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

17.3 உணர்வுபூர்வமான தரவிற்காக இடைநிலைப்பலகை அல்லது பிரதி-ஒட்டு தொழிற்பாட்டினை செயலிழக்கச் செய்வதற்கு கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

18. தவறு மற்றும் விதிவிலக்கு கையாளுதல்

18.1 பிரயோகம் முழுவதிலும் பொருத்தமான தவறு கையாளல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

18.2 தவறான அல்லது எச்சரிக்கையான செய்திகள் மற்றும் அறிவிப்புக்களில் உணர்வுபூர்வமான தகவலும் அல்லது குறிப்புக்களும் வெளிப்படுத்தப்படக் கூடாது.

18.3 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகத் தவறுகள் சேவையகத்தில் பதிவிடப்பட வேண்டும்.

19. சேமிப்பிப்பக்க உட்கட்டமைப்பு

19.1 சேமிப்பிகள் மற்றும் இணையத்தள சேமிப்புகளுடன் கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகத் தொடர்பானது சரியாக கடினப்படுத்தப்படல் வேண்டும்.

19.2 சேமிப்பி மட்டத்தில் சேவையக அணுகல் கட்டுப்பாடுகள் மற்றும் ஆய்வு பதிவுகள் பேணப்பட வேண்டும்.

19.3 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகத்தினால் பயன்படுத்தபடாத செய்தித் தொடர்பு முகங்கள் மற்றும் பணிகளைச் செயலிழக்கச் செய்யப்படல் வேண்டும்.

**20. பதிவுகள் மற்றும் தரவுக் கசிவு**

கீழே தரப்பட்டவற்றிற்கு இணங்க விபரமான கொடுக்கல்வாங்கல் பதிவுகள் பேணப்பட வேண்டும்.

20.1 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி முறிவுப் பதிவுகளை செல்லிடத் தொலைபேசி சாதனத்தில் சேமித்து வைக்கப்படக் கூடாது.

20.2 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகப் பதிவுகள் ஏதேனும் உணர்வுபூர்வமான தரவுகளை உள்ளடக்கி இருக்கக்கூடாது.

20.3 பொருத்தமான அணுகல் கட்டுப்பாடுகளுடன் பாதுகாக்கப்பட்டதும் பிரயோக அல்லது தரவுத்தளத்திலிருந்து ஒதுக்கப்பட்டு இருக்கின்றதுமான ஒரு பதிவு சேவையகத்தில் பதிவுகள் சேமித்து வைக்கப்பட வேண்டும்.

20.4 அங்கீகரிக்கப்படாத மாற்றம் அல்லது அழிவிலிருந்து பதிவுகளைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்புக் காப்பமைப்புக்கள் அமுல்படுத்தப்பட வேண்டப்படுவதோடு அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களுக்கு மாத்திரமே பதிவுகளை அணுகும் வசதி வழங்கப்பட வேண்டும்.

20.5 சேவையகம் மற்றும் சூழல்முறைமைப் பதிவுகள் ஆய்விற்காக கிடைக்கப்பட வேண்டும்.

20.6 ஆகக்குறைந்தது ஆறு வருட காலத்திற்கான பதிவுகள் வைத்திருக்கப்பட வேண்டும். ஏதேனும் தவறவிடல் அல்லது அழிவடைதலுக்கு எதிராக கொடுக்கல்வாங்கல் தகவல்களை பாதுகாப்பதற்காக போதுமான அளவீடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**21. கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகத்தின் குறியீட்டு ஒப்பமிடல்**

21.1 மென்பொருள் படைப்பாளர் மற்றும் உத்தரவாதத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசிப் பிரயோக குறியீட்டு ஒப்பமிடல் பயன்படுத்தப்படுகின்றதுடன் குறியீடானது கையெழுத்திடப்பட்டதன் பின்னர் மாற்றப்படவோ அல்லது சிதைக்கப்படவோ இல்லை என்பதை கொடுப்பனவு பணி வழங்குனர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

21.2 குறியீட்டு ஒப்பமிடலிற்காக பயன்படுத்தப்படுகின்ற தனிப்பட்ட சாவியானது கொடுப்பனவு பணி வழங்குனரால் உருவாக்கப்பட்டு பாதுகாப்பாக சேமிக்கப்பட்டு மற்றும் பின்னூட்டல் வேண்டும்.

21.3 உறுதியான தனிப்பட்ட சாவியொன்றுடன் ஒப்பமிடல் சான்றிதழ் தயாரிக்கப்பட வேண்டும்.

**22. மூன்றாந்தரப்பினர் பிரயோக சேமிப்பகங்களின் பயன்பாடும் வியாபார இணையத்தளங்களில் வசதியளித்தலும்**

22.1 கூகுள் பிளே ஸ்ரோர் அப்பிள் ஸ்ரோர் மற்றும் வின்டோஸ் ஸ்ரோர் போன்ற பொருத்தமான தள சேமிப்பில் மட்டும் கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகமானது நிறுவுப்பட வேண்டப்படுவதோடு கொடுப்பனவு பணி வழங்குனர் இணையத்தளம் அல்லது விற்பனையாளர் இணையத்தளம் அல்லது ஏதேனும் மற்றைய மூன்றாம் தரப்பினர் இணையத்தளங்களில் பதிவிறக்கத்திற்காக வசதியளிக்கப்படக்கூடாது.

22.2 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி செய்தியானது மூன்றாம் தரப்பினர் சேமிப்பகங்களில் நிறுவப்படக்கூடாது என கொடுப்பனவு தொடர்பான கையடக்கத் தொலைபேசி பிரயோக உரிமையாளரால் அனைத்து பயன்பாட்டாளர்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது என்பதை கொடுப்பனவு பணி வழங்குனர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**23. தடங்கலற்ற வியாபாரமும் மாறும் முகாமைத்துவமும்**

23.1 மென்பொருள் விருத்தி வாழ்க்கை வட்டம் உள்ளடங்கலாக முறைமையினுடைய விவரங்கள் மாறும் முகாமைத்துவத்துடன் சரியாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

23.2 மூன்றாம் தரப்பினரின் மென்பொருள் பயன்படுத்தப்படுமானால் மூலக் குறியீட்டினுடைய அனைத்து திருத்தப்பட்ட பதிப்புகளுக்காக ஒப்பந்த ஒழுங்கு ஒன்றினை கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோக உரிமையாளர் வைத்திருக்கின்றார் என்பதை கொடுப்பனவு பணி வழங்குனர் உறுதிப்படுத்திக் கொள்வது விரும்பத்தக்கது.

23.3 கொடுப்பனவு தொடர்பான பணி வழங்குனர் பொருத்தமான மிகையாக்கம் மற்றும் அனர்த்த மீட்பு முறைமைகளை பேணவேண்டும்.

23.4 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோக திருத்தக் கட்டுப்பாடுகள் பேணப்படவும் ஆவணப்படுத்தப்படவும் வேண்டும்.

23.5 கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகத்தில் அனைத்து மாற்றங்களுக்காக மாற்றல் கோரிக்கைகள் அல்லது மாறும் முகாமைத்துவ நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

**24. கணக்காய்வு**

24.1 தகவல் முறைமை கணக்காய்விற்காக போதுமான தகைமையயைக் கொண்ட சுதந்திரமாக நன்மதிப்புள்ள மூன்றாம் தரப்பு கணக்காய்வாளர் ஒருவரால் இணையப் பணிகள், சேவையகப்பக்க தரவுத்தளங்களும் சேமிப்புக்களும் மற்றும் வலையமைப்பு தொடர்பாடல் உள்ளடங்களாக அனைத்து கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகசூழல் முறைமைக்காக தகவல் முறைமை கணக்காய்வும் தகவல் பாதுகாப்பு கணக்காய்வும் நடாத்தப்பட வேண்டும்.

24.2 கணக்காய்வு நோக்கமானது நிலையான மற்றும் மாறும் பாதுகாப்பு ஆய்வு, மூலக்குறியீட்டு மீளாய்வு, உற்பத்தி மற்றும் பரிசோதனை சூழல் மீளாய்வுகள், பாதிப்பு மதிப்பீடுகள் மற்றும் ஊடுருவல் மீளாய்வுகள் என்பவற்றை உள்ளடக்கலாம் ஆனால் இது வரையறுக்கப்படவில்லை.

24.3 நேரடி நடைமுறைப்படுத்தலுக்கு முன்பாக கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகத்தினுடைய ஒவ்வொரு வெளியீட்டுக்காக தகவல் பாதுகாப்பு ஆய்வு தேவைப்பாடுகள் மற்றும் இத்தகைய வழிகாட்டலுக்கான இணக்கப்பாடுகளுடன் சந்திக்கப்பட வேண்டப்படுவதோடு அனைத்து பொருத்தமான இணைப்புக்களும் மேம்படுத்தல்களும் உள்ளடக்கப்படவும் வேண்டும்.

24.4 அனைத்து கலப்பு கணக்காய்வு அறிக்கையானது ஒவ்வொரு ஆய்வுக்குழு உறுப்பினருடைய கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் உட்பட ஆய்வுக்குழுவின் அனைத்து உறுப்பினர்களினுடைய தகவல்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

சி.ஜே.பி. சிறிவர்த்தன

**துணை ஆளுநர்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2018 ஏப்பிறல் 9

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 01/2018**

சேரல்: லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**2018 ஏப்பிறல் 20ஆம் நாளன்று லங்காசெட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்**

இலங்கை மத்திய வங்கியானது, சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினம் 2018 ஏப்பிறல் 14ஆம் நாள் சனிக்கிழமை வருவதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதனால் 2018 ஏப்பிறல் 20ஆம் நாளன்று லங்காசெட்டில் முறைமையின் அலுவல் மணித்தியாலங்களை 0800 மணி தொடக்கம் 1500 மணிவரை கட்டுப்படுத்துவதாக தீர்மானித்தனர். 2018 ஏப்பிறல் 20ஆம் நாளன்று லங்காசெட்டிலின் அலுவலக நேரத்தினை 08.00 மணியிலிருந்து 15.00 மணிவரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. அதற்கமைய, 2018 ஏப்பிறல் 20ஆம் நாளிற்கான லங்காசெட்டில் முறைமைகள் தொழிற்பாட்டு அட்டவணையில் நண்பகல் 12.00 பின்னரான நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏல) தீர்ப்பனவு | 12.45 மணி |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (அமர்வு 2) | 13.00 மணி |
| பல்புடைத் தேறிய தீர்ப்பனவுகள் - சீராக்க தீர்ப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் கொடுத்துத் தீர்த்தல் | 14.00 மணி |
| மூன்றாந்தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டுநேரம் | 14.15 மணி |
| பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி (அமர்வு 2) மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி (அமர்வு 2) | 14.15 மணி |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (அமர்வு 3) | கிடைக்கவில்லை |
| துணைநில் வைப்பு வசதித் தீர்ப்பனவு | 14.30 மணி |
| ஒரு நாளுக்குள்ளேயான நேர்மாற்று மற்றும் துணைநில் கடன்வழங்கல் தீர்ப்பனவுகள் | 14.45 மணி |
| அலுவல்களை மூடிவிடுதல் | 15.00 மணி |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | 15.30 மணி |

டி.குமாரதுங்க

**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2018 யூன் 07

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 02/2018**

சேரல்: லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்கா முறைமை 2018 யூன் 13 மற்றும் 14ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்**

இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக லங்காசெட்டில் முறைமை (ஆர்ரிஜிஎஸ் முறைமை மற்றும் லங்காசெகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய முறைமைகளின் தொழிற்பாடுகளை 2018 யூன் 13 மற்றும் 14ஆம் நாட்களில் (புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை) அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள தனியாள் கணனி அனர்த்தமீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே அமைவடிவப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் ஆயத்தநிலையினை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் 2018 யூன் 13ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினைத் தொடர்புகொண்டு இவ்விணைப்புத் தொடர்பாக பரீட்சித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- திரு.வி.கமல்நாத் 011-2477126 (e-mail: kamalnath@cbsl.lk)
- திருமதி. பாக்கியா மல்லாவ 011-2477016 (e-mail:bhagyam@cbsl.lk)

டி.குமாரதுங்க

**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

பிரதிகள் : முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்

செயலாளர் நாயகம் - இலங்கை வங்கியாளர் சங்கம்

தலைவர் - முதனிலை வணிகர்கள் சங்கம்

முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா பினான்சியல் சேர்விஸஸ் பியுறோ லிமிடெட்

**பொதுவான பணிப்புரை 2018இன் 1ஆம் இலக்கம்**

**2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொழிற்பாடுகள்**

**2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம்**

2005ஆம் ஆண்டு 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் பிரிவு 44இன் கீழ் இலங்கை மத்திய வங்கியினுடைய நாணயச் சபையால் ஆக்கப்பட்ட பொதுவான பணிப்புரைகள்

சீ ஜே பி சிறிவர்த்தன

**துணை ஆளுநர்**

**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு

2018 யூலை 25

**2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகள்**

இப்பணிப்புரையானது 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரை-பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொழிற்பாடுகள் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் இந்த வழிகாட்டலானது 2014ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொழிற்பாடுகளுக்கு பதிலிடுவதாகவும் இருத்தல் வேண்டும். இப்பணிப்புரையானது லங்காகிளியர் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும் என்பதுடன் 2018ஆம் ஆண்டு யூலை மாதம் 25இல் நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

**2. வரைவிலக்கணங்கள்**

சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இவ்வழிகாட்டலில்

2.1 **"பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி"** என்பதால் கருதப்படுவது யாதெனில் வரையறுக்கப்பட்ட லங்காகிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினால் செயற்படுத்தப்படுகின்ற ஒரு இலத்திரனியல் முறைமையாவதுடன் உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான அதேநேர நிதிய மாற்றல்களுக்கு வசதியளிப்பதோடு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்களுக்கிடையில் நிதிய மாற்றல்களை மாற்றுதல் மற்றும் தீர்வு செய்தலுக்கான முறைமைகள், செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கியிருக்கும்.

2.2 **"பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய முதன்மை உறுப்பினர் அல்லது இரண்டாம் நிலை உறுப்பினர்.

2.3 **"பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி முறைமை"** என்பதால் கருதப்படுவது யாதெனில் எதுவித கட்டுப்பாடுகளுமின்றி பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தகவல்களை அனுப்புதல், பெற்றுக்கொள்ளுதல், செயற்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான முறைமைகள் உள்ளடங்களாக பொதுவான இலத்திரனியல் நிதியமாற்றல் ஆளிக்காக லங்காகிளியர் கம்பனியால் செயற்படுத்தப்படுகின்றதும் மற்றும் பேணப்படுகின்றதுமான முறைமைகள் மற்றும் செயற்பாடுகள் ஆகும்.

2.4 **"தீர்ப்பனவுச் சுழற்சிவட்டம்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் தேறிய கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவுகளுக்காக இலங்கை மத்திய வங்கியினுடைய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளர் சம்மதத்துடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட கால அளவு ஆகும்.

2.5 **"வாடிக்கையாளர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் கொடுப்பனவு கட்டளையை வெளியிடுகின்ற அல்லது வழிப்படுத்துகின்ற மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் உறுப்பினர் சம்பந்தப்பட்ட கணக்கில் செலவு வைப்பதற்கான அதிகாரங்கள் அல்லது சம்பந்தப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்களிற்கு கொடுப்பனவுக் கட்டளையின் பெறுமதி அளவிற்கு நாணயப் பெறுமதி ஒப்பந்தங்களைச் செய்கின்ற யாதேனும் சட்ட ரீதியான அல்லது சாதாரண நபர் ஆவார்.

2.6 **"தொழிற்பாட்டு நடைமுறைக் கைந்நூல்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய செயற்பாடுகள் குறித்து பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்களுக்கு வழிகாட்டுவதற்காக வரையப்பட்ட நடைமுறைகளை உள்ளடக்கிய லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் தயாரிக்கப்பட்ட ஆவணம் ஆகும்.

2.7 **"முதன்மை உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்குபற்றுனராக இருக்கின்ற மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய அங்கத்தவராவதற்கு மத்திய வங்கி மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் ஒப்புதலளிக்கப்பட்டதுமான யாதேனும் உத்தரவாதமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஆகும்.

2.8 **"அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை"** என்பதால் கருதப்படுவது யாதெனில் இலங்கை மத்திய வங்கியினால் செயற்படுத்தப்படுகின்றதும் அதற்கு உரிமையானதுமான முழுமையான தன்னிச்சையான கொடுப்பனவு முறைமையாக இருக்கின்றதுமான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ஆகும்.

2.9 **"இரண்டாம்நிலை உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினராவதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் லங்காகிளியர் கம்பனியினால் ஒப்புதலளிக்கப்பட்டதும் அத்தகைய முதன்மை உறுப்பினர்களுடைய அதேநேர மொத்தக் கொடுப்பனவுக் கணக்கினூடாக தேறிய நிலுவையைத் தீர்ப்பதற்கு முதன்மை உறுப்பினருடன் ஒழுங்குகளை மேற்கொண்டிருக்கின்றதுமான யாதேனும் சட்டரீதியான நிறுவனம் ஆகும்.

2.10 **"உறுப்பினர் உடன்படிக்கை"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி தொடர்பாக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரால் நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கை ஆகும்.

**3. லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் உறுப்பினர்களுடைய பொறுப்புக்கள்**

3.1 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகள் மற்றும் பங்கேற்றல் தொடர்பில் ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்களும் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் உறுப்புரிமை உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொள்ளுதல் வேண்டும்.

3.2 விதிகள், நடைமுறைகள் என்பன வடிவிலான மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் காலத்திற்குக்காலம் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏனைய ஒழுங்குகள் உட்பட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல்களியினுடைய தொழிற்பாடுகள் தொடர்பில் அவற்றிற்கிடையிலான ஒழுங்குகளை ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

3.3 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் தொழிற்பாட்டு நடவடிக்கைக்காக கைந்நூலில் குறித்துரைக்கப்பட்டவற்றையும் வழிகாட்டல்களையும் பின்பற்ற உடன்பட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

3.4 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிட்டெட்டும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக கட்டணங்கள் ஏதேனும் அறவிடப்பட்டால் இ ல ங் கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வரையறைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**4. லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டின் பொறுப்புக்கள்**

4.1 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய ஏக தொழிற்பாட்டாளராக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இருக்கவேண்டும்.

4.2 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

4.2.1 ஒவ்வொரு நாளும் இருபத்துநான்கு மணி நேரமும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினைத் தொழிற்படுத்தல்.

4.2.2 இலங்கை மத்திய வங்கியினுடைய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தகைமை வாய்ந்த நிறுவனங்களுக்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியில் முதன்மை மற்றும் இரண்டாம்நிலை உறுப்புரிமையை வழங்குதல்.

4.2.3 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தெளிவானதும் விரிவானதுமான முறைமை விதிகளை ஏற்படுத்துதல், லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் விடுவிக்கப்படுகின்ற முறைமை விதிகள் மற்றைய விடயங்களுடன் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினாலும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினதும் உறுப்பினர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், சேருதல், விலகிக் கொள்ளுதல், முடிவுறுத்துதல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன உள்ளிட்ட பங்கேற்பிற்கான நிபந்தனைகள், தொழிற்பாட்டு தேவைப்பாடுகள், பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் மற்றும் தகவல்களின் இரகசியத்தன்மையினைப் பேணுவதற்கான நிபந்தனைகள் என்பவற்றை குறித்துரைத்தல் வேண்டும். லங்காகிளியர் பிறைவேற் லிமிடெட்டானது இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தேவை ஏற்படும் நேரத்தில் முறைமை விதிகளில் திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

4.2.4 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்கின்ற விளக்க விபரங்கள், நியமங்கள், பாதுகாப்பு பண்புகள் மற்றும் கணக்காய்வு இணக்குவிப்புக்கள் என்பவற்றை வரைவிலக்கணம் செய்தல்.

4.2.5 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தில் அல்லது அதற்கு முன்பாக ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினருடைய தேறிய நிலைமையினை நிர்ணயிப்பதற்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிக் கோப்பினை இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்

4.2.6 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகள் தொடர்பான ஏதேனும் பணி வழங்குனருடன் உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்.

4.2.7 கிளைவாசகம் 3.4இல் தரப்பட்டுள்ள விடயங்களுக்கு உட்பட்டு காலத்திற்குக் காலம் லங்காகிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் திருத்தங்கள் செய்யப்படக்கூடிய ஒரே சீரான கட்டணங்கள் மற்றும் தண்டப்பண அமைப்புக்களைப் பின்பற்றுதல்.

4.3 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கியினுடைய அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடத்தல் வேண்டும்.

4.4 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தேவைப்படும்போது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி தொடர்பான பயிற்சி, விழிப்புணர்வு மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை லங்காகிளியர் பிறைவேற் லிமிடெட் நடாத்த வேண்டும்.

**5. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்களுடைய பொறுப்புக்கள்**

5.1 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினரும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியால் செயற்படுத்தப்படும் தீர்வக முறைமை தவிர்ந்த ஏதாவது தேசிய மட்ட வங்கிகளுக்கிடையிலான தீர்வக மாற்றம் தீர்ப்பனவு முறைமையில் ஈடுபடக்கூடாது.

5.2 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினரும்

5.2.1 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் அமைக்கப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய முறைமை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5.2.2 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய சுமுகமான செயற்பாட்டிற்கான ஏனைய தேவைப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5.2.3 அதேநேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினூடாக கொடுக்கல்வாங்கல் நிறைவடைந்தமை அல்லது நிறைவடையாமையைத் தெரிவிப்பதற்கான ஒரு நடைமுறையை அத்துடன் அல்லது பொறிமுறையை நிறுவுதல்.

5.2.4 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதியைத் தீர்ப்பனவு செய்வதற்கு அதனுடைய அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமானளவு நிதி கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தல்.

5.2.5 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை கிரமமான பின்னூட்டல் செய்வதற்கும் மற்றும் முறைமை பழுதடைதல் அல்லது தரவு களவாடப்படல் அல்லது முக்கியமான அமைவிடத்தில் தரவினை இழத்தல் போன்ற நிகழ்வின்போது மீட்பு நடைமுறைகளை நிறுவுதல் மற்றும் பேணுவதற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

5.2.6 நாளாந்த கொடுக்கல்வாங்கல்களின் அறிக்கையினை மீளிணக்கப்படுத்தி தீர்ப்பனவு அறிக்கையைப் பெற்ற 24 மணித்தியாலத்திற்குள் ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் எழுத்தில் வரையறுக்கப்பட்ட லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டுக்கு அறிவித்தல் வேண்டும்.

5.2.7 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினுடைய ஒப்புதலுடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் வரையறைகளைப் பின்பற்றவேண்டும்.

5.2.8 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றம் ஆளியின் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்பான பிணையங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

5.2.9 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை 2006ஆம் ஆண்டு 06ஆம் இலக்க நிதிக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் வெளியிடப்பட்ட ஒழுங்குகளுக்கிணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிட வேண்டும் என்பதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவின் அறிவுறுத்தலிற்கிணங்கி நடத்தலும் வேண்டும்.

## 6. தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்

6.1 எல்லா நேரங்களிலும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய பணிகள் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய தொழிற்பாடுகளுக்காக நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட தடங்கலற்ற வணிகத் திட்டங்களை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்களும் வைத்திருத்தல் வேண்டும்.

6.2 முழுமையாக கருவிமயப்படுத்தப்பட்ட அனர்த்தமீட்பு அமைவிடம் மற்றும் நன்கு பயிற்றப்பட்ட அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தடங்கலற்ற தொழிற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வணிக மீட்புக் குழுக்கள் என்பவற்றை வரையறுக்கப்பட்ட லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்களும் வைத்திருக்க வேண்டும்.

6.3 எந்தவித தடைகளுமின்றி தொழிற்பாடுகள் கொண்டு நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில், எதிர்பாராத சூழ்நிலைகளில் பணிக்கமர்த்தப்படுவதற்காக பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய மையத் தொழிற்பாடுகள் தொடர்பாக தேர்ச்சிபெற்ற மற்றும் பயிற்றப்பட்ட பின்னூட்டல் அலுவலர்களை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி அதன் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்குத் தடையாக விளங்கும் ஏதேனும் தொழில்நுட்ப அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சினைகளை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் உணருமாயின் அத்தகைய பிரச்சினைகள் தெரியவந்தவுடன் உடனடியாக இலங்கை மத்திய வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும். முக்கியமான அமைவிடத்தில் திருத்தமுடியாத பழுதுகள் நிகழ்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் உடனடியாக அதனை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன் நேரடிப் பதிவு முறைமையில் தொழிற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி கோப்பினையும் சமர்ப்பிக்க வேண்டும். பிரதான இடத்திலும், நேரடிப் பதிவு முறைமையிலும் நீண்டகாலம் திருத்த முடியாத பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இது பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன் இறுதித் தீர்ப்பனவு வட்டத்திலிருந்து முறைமை பழுதடைந்த நேரம் வரையிலான காலப்பகுதிக்காக பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவினைப் பெறுவதற்கான மாற்று ஏற்பாட்டு முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அவற்றை இலங்கை மத்திய வங்கிக்கும் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

## 7. இரகசியமானது

லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினரும் தரவு, தகவல் மற்றும் பதிவுகள் தொடர்பான இரகசியத்தன்மையைப் பேண வேண்டுமென்பதுடன் அதனுடைய அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் அல்லது ஏதாவது தகைமையுடன் வேலை செய்கின்ற எந்தவொரு நபரும் எல்லாத் தருணத்திலும் இரகசியத்தன்மையைப் பேணுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

## 8. பொது

8.1 மேற்குறிப்பிட்டவற்றின் பொதுவான தன்மைக்குப் பங்கமின்றியும் மேலதிகமாகவும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்களும் தேவைப்படும் நேரத்தில் காலத்திற்கு காலம் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினுடைய தொழிற்பாடுகள் தொடர்பான அத்தகைய தகவல்களை இலங்கை மத்திய வங்கி வழங்க வேண்டப்படுவதுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அத்தகைய தகவல்களை வழங்கவேண்டும்.

8.2 இப்பணிப்புரையானது மேலதிகமானதொன்றாக விளங்குவதுடன் ஏதேனும் ஏனைய எழுத்து மூலமான சட்டம் மற்றும் விதிகள், ஒழுங்குவிதிகள் பணிப்புரைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் வலுக்களைக் குறைக்காததொன்றாக விளங்கும் என்பதுடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உறுப்பினர்கள் இவற்றிற்கு உட்பட்டவர்களாகவும் அத்துடன் அல்லது காலத்திற்குக் காலம் உட்படும் விதத்திலும் தொழிற்படுதல் வேண்டும்.

8.3 மேற்குறிப்பிட்ட பந்தியினுடைய பொதுப்படைத் தன்மைக்கு பங்கமின்றி, இப்பணிப்புரையானது 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைச் சட்டத்தால் அல்லது ஏதேனும் விதி, ஒழுங்கு விதி, அறிவுறுத்தல், பணிப்பு அல்லது கட்டளை அல்லது யாதேனும் மற்றைய எழுதப்பட்ட சட்டத்தால் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய உறுப்பினர்கள் மீது சுமத்தப்பட்ட யாதேனும் கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்களை மட்டுப்படுத்துகின்ற விதத்தில் பொருள் கோடப்படல்கூடாது.

தொடர்பு எண்: 34/07/029/0001/002 2018 யூலை 25

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 03/2018**

சேரல்: லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைத் திருத்தம்**

1. 2018 ஓகத்து 01ஆம் திகதியிலிருந்து பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி மற்றும் பொது இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி தீர்ப்பனவிற்காக நான்கு (4) தீர்ப்பனவுச் சுற்றுக்கள் நடைமுறைக்கிடப்படவுள்ளன. தீர்ப்பனவுச் சுற்றுக்கள் மற்றும் ஒவ்வொரு தீர்ப்பனவு சுற்றுக்குமான லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் தீர்ப்பனவுச் சுற்றுக்கள் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தீர்ப்பனவு நேரங்களும் பின்வருமாறு இருக்கும்.

| லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் தீர்ப்பனவுச் சுற்று | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு நேரம் பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு நேரம் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி |
|---|---|---|
| சுற்று 1 (14.00 மணி - 0700 மணி அடுத்தநாள் | 0845 மணி | 0900 மணி |
| சுற்று 2 (0700 மணி - 10.00 மணி) | 1100 மணி | 1115 மணி |
| சுற்று 3 (1000 மணி - 1200 மணி) | 1300 மணி | 1315 மணி |
| சுற்று 4 (1200 மணி - 1400 மணி) | 1500 மணி | 1515 மணி |

2. அதற்கமைய, நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை மீதான லங்காசெட்டில் முறைமை விதிகள் பதிப்பு 2.1 2013 ஓகத்து 4 இன் தொகுதி 4இன் வாசகம் 1.2 இலுள்ள அட்டவணையானது **2018 ஓகத்து 01ஆம் நாளியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருமாறு திருத்தப்படும்.**

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|
| 0630 மணி | முறைமை ஆரம்பித்தல் | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை தொடங்குதல் |
| 0730 மணி தொடக்கம் 0800 மணி வரை | நாளாந்தச் செயன்முறைகள் ஆரம்பித்தல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை இற்றைப்படுத்தல், நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகளுக்கான பிணையங்களை குறிப்பிட்டு ஒதுக்குதல் |
| 0800 மணி | வியாபாரத்திற்காக லங்காசெட்டில் முறைமை திறக்கப்படுகிறது | கொடுக்கல்வாங்களை செயற்படுத்துவதற்கு முறைமை திறக்கப்படுகிறது. |
| 0800 மணி | நாளுக்குள்ளான திரவ வசதி/ தன்னியக்கமான நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் வைப்புவசதி | நாளுக்குள்ளான திரவத் தன்மை வசதியை வழங்குதல் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வைப்பு வசதி என்பவற்றின் மீள்கொள்வனவுகளின் இரண்டாம் பிரிவினைத் தீர்த்தல் |
| 0815 மணி | முதிர்ச்சிகள்/ வட்டிக்கொடுப்பனவுகள், நாற்கோவை மற்றும் இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் முதிர்ச்சிகள் ஆரம்பமாகின்றன. | பிணையங்களின் முதிர்ச்சிப் பெறுகைகள்/ நறுக்கு கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல், லங்காசெட்டில் கட்டணங்கள்/தண்டப்பணங்களை விதித்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களின் முதிர்ச்சிகள் |
| 0830 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை சுற்று 1/ காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் பிரதான தீர்ப்பனவு. |
| 0830 மணி | இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் உடனடி விற்பனை/ கொள்வனவு/ நீண்டகால மீள்கொள்வனவு ஏலம் | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் உடனடி விற்பனைகள், கொள்வனவுகள், நீண்டகால இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் ஏலம் மற்றும் நீண்டகால மீள்கொள்வனவு ஏலத்தின் முதலாம் பிரிவு |
| 0845 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி சுற்று 1 |
| 0900 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 1 |
| 1100 மணி | நேர்மாற்று மீள்கொள்வனவுகளை மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி திருப்புதல் | திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பனவற்றின் கீழ் இரண்டாவது பிரிவின் தீர்ப்பனவு |

| | | |
|---|---|---|
| 1100 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 2 |
| 1115 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 2 |
| 1145 மணி | நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1300 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 2 |
| 1300 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 3 |
| 1300 மணி | முதனிலை ஏலத்தீர்ப்பனவு / குறுகிய கால இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் ஏலங்கள் மூடுதல் | முதலாந்தர ஏலங்களின் கீழான பிணையங்களின் தீர்ப்பனவு. குறுங்கால இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் ஏலத் தீர்ப்பனவு |
| 1315 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி சுற்று 3 |
| 1315 மணி | குறுங்கால மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் குறுங்கால மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுகளினுடைய முதலாம் பிரிவு தீர்ப்பனவு |
| 1445 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | கொடுத்துத் தீர்த்தல் மற்றும சீராக்கல் தீர்ப்பனவு |
| 1500 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 3 |
| 1500 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி சுற்று 3 |
| 1500 மணி | மூன்றாந்தரப்பு கொடுக்கல் வாங்கல்களுக்கான முதன்மை வெட்டுநேரம் | வங்கிக்கு வங்கி (MT2XX தொடர்கள்) நீங்கலாக மூன்றாந் தரப்பினரின் சார்பில் புதிய கொடுக்கல் வாங்கல்களுக்காக (ரி+0இற்காக) மூடிவிடுதல். |
| 1515 மணி | லங்காகிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி சுற்று 4 |
| 1545 மணி | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவு உருவாக்கத்தினை முகாமைப்படுத்தும் பங்கேற்பாளர்களுக்கான வெட்டுநேரம் | பங்கேற்பாளர்கள் 1545 மணியிற்குப் பின்னர் ஒரு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொள்வனவுகளை ஆரம்பிக்கக்கூடாது. |
| 1600 மணி | துணைநில் வைப்பு வசதி | துணைநில் வைப்பு வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1615 மணி | துணைநில் கடன் வழங்கல் வசதி | துணை நில் கடன்வழங்கல் வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| 1615 மணி | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி மீள்கொடுப்பனவு | நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் மீள்கொடுப்பனவு |
| 1630 மணி | இறுதிவெட்டு நேரம் வியாபார முறைமையினை மூடிவிடுதல் | மேலும் உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, வியாபாரத்திற்காக முறைமை மூடப்பட்டதுடன் காரணமாக காத்திருத்தல்/ தீர்ப்பனவுச் செயன்முறை முடிவுறுத்தப்படும் அத்துடன் மேலும் காத்திருக்கின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 1630 மணியிலியிருந்து 1700 மணி வரை | நாள்முடிவை செயன்முறைப் படுத்தல் | நாள் முடிவுச் செயன்முறைகள் உ-ம்: அறிக்கைகள்/ பொதுப்பேரேட்டு அறிக்கை (நாள் முடிவு), பேரேட்டு ஏற்றுமதி கோவைகளைத் தயாரித்தல், பட்டியலிடல்/ கூற்று அச்சிடல் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுகை |
| 1700 மணி | முறைமையினை மூடிவிடுதல் | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை/ பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை பிரயோகங்களை மூடுவதை தொடங்குதல், தளத்திற்கு வெளியேயான பின்னூட்டல்களைப் பெறுதல். |

3. பங்கேற்பாளர்கள் இணைய உலாவி பணி நிலையங்களூடாக தமது தீர்ப்பனவுகள் கணக்குகளைக் கண்காணிக்குமாறும் அதேநேரமொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிகளின் தீர்ப்பனவு நேரத்தில் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதியளவு நிதியங்களைப் பேணுவதை உறுதிப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

டி.குமாரதுங்க

**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2018 ஓகத்து 20

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 04/2018**

சேரல்: லங்காசெட்டில் முறைமையினுடைய அனைத்து பங்கேற்பாளர்கள்

**2018 செத்தெம்பர் 02 நாளன்று நேரடி சோதனை ஒன்றினை நடாத்துவதற்கு லங்காசெட்டில் முறைமையைத் திறத்தல்**

நேரடி சூழலில் பிரயோக மென்பொருளினுடைய புதிய பதிப்பினை வரையறுக்கப்பட்ட பரிசோதனை நோக்கத்திற்காக **2018 செத்தெம்பர் 02 (ஞாயிற்றுக்கிழமை)** நாளன்று லங்காசெட்டில் முறைமையானது (அதேநேர மொத்தக் கொடுப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை) திறக்கப்படும் என்பது தங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. எனினும் லங்காசெட்டில் முறைமையினுடைய எவையேனும் தொடர்புடைய இடைமுக பிரயோகங்கள் (திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் போன்றன) ஏதேனும் பரிசோதனைக்காக மேற்கூறிய நாளில் கிடைக்கப்பெறாது.

அதற்கமைய, அத்தகைய கொடுக்கல்வாங்கல் வகைகளின் முறையான தீர்ப்பனவினை சரிபார்த்துக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினுடைய தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தால் குறித்துரைக்கப்பட்ட அனைத்து பரிசோதனை கொடுக்கல்வாங்கல்களையும் பதிவு செய்வதற்கு லங்காசெட்டில் பங்கேற்பாளர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

மேலும் லங்காசெட்டில் பங்கேற்பாளர்கள்

1. அத்தகைய பதிவுகள் நேரடி பரிசோதனையின் முடிவில் முறைமையிலிருந்து அகற்றப்படும் என்பதால் 2018 செத்தெம்பர் 02ஆம் நாளன்று (நேரடி பரிசோதனை நாள்) ஏதேனும் எதிர்காலப் பெறுமதி திகதியிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அனுப்பவேண்டாமெனவும், 2018 செத்தெம்பர் 02ஆம் திகதியிடப்பட்ட அனைத்து கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதியினை புறக்கணிப்பதற்கும் அத்துடன்
2. CBLELKLAXXX, CBCELKLSXXX மற்றும் CBCELKLXXXX மூலம் 2018 செத்தெம்பர் 02ஆம் நாளன்று (நேரடிப் பரிசோதனை நாள்) உருவாக்கப்பட்ட அனைத்து உள்நோக்கிய சுவிப்ற் செய்திகளையும் புறக்கணிப்பதற்கும் வேண்டப்படுகின்றனர்.

நேரடிப் பரிசோதனை 2018 செத்தெம்பர் 02 நாளன்று (ஞாயிற்றுக்கிழமை) மு.ப. 9.00 மணியிலிருந்து மு.ப. 11.30 மணி வரை நடாத்தப்படும்.

பரிசோதனை திட்டமானது பரிசோதனை கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக 2018 ஓகத்து 31 அன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியினுடைய தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தினால் ஒவ்வொரு பங்கேற்பாளருடைய அதிகாரமளிக்கப்பட் அலுவலருக்கும் நேரடியாக மின்னஞ்சல் செய்யப்பட வேண்டும்.

நேரடி பரிசோதனை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதும் லங்காசெட்டில் முறைமையினுடைய புதிய பதிப்பானது **2018 செத்தெம்பர் 03ஆம் திகதியிலிருந்து** பயன்படுத்துவதற்கு கிடைக்கப்படக்கூடியதாக இருக்கும்.

டி. குமாரதுங்க — **பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

எம். இசட். எம். ஆசிம் — **பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்**

**பொதுவான பணிப்புரை 2018இன் 2ஆம் இலக்கம்**

**2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பொதுப் பணிப்புரைகள் - பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள்**

**2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைச் சட்டம்**

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைச் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கின் நாணயச் சபையால் ஆக்கப்பட்ட பொதுவான பணிப்புரைகள்.

முனைவர். இந்திரஜித் குமாரசுவாமி

**நாணயச் சபையின் தலைவரும்**

**இலங்கை மத்திய வங்கியினுடைய ஆளுநரும்**

கொழும்பு

2018 ஓகத்து 24

**2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - ஆளியின் பொதுவான மைய ஆளியின் தொழிற்பாடுகள்**

இப்பணிப்புரையானது 2018ம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுப் பணிப்புரை - பொதுவான விற்பனை மைய ஆளியின் செயற்பாடுகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் பொதுவான விற்பனை மைய ஆளியானதும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினதும் உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தானதாகவும் இருத்தல் வேண்டும். பொதுவான விற்பனை மைய ஆளி என்பது லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் இலத்திரனியல் முறைமையாக இருப்பதுடன் அது வழங்குனரும் பெறுனரும் ஒருவராக இராத அட்டைகளின் விற்பனை மைய ஆளியின்

கொடுக்கல்வாங்கல்களின் ஆளியையும் தீர்ப்பனவினையும் வசதிப்படுத்துவதற்காக அதன் உறுப்பினர்களை விற்பனை மையத்துடன் இணைக்கிறது. இப்பணிப்புரையானது 2018ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

**2. வரைவிலக்கணங்கள்**

சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இப்பணிப்புரையில்

2.1 **"பொதுவான விற்பனைப் புள்ளி ஆளியினுடைய உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவதுயாதெனில் பொதுவான விற்பனைப் புள்ளி ஆளினுடைய முதன்மை உறுப்பினர் அல்லது இரண்டாம்நிலை உறுப்பினர் ஆவர்.

2.2 **"தீர்ப்பனவுச் சுழற்சி"** என்பதால் கருதப்படுவது யாதெனில் இலங்கை மத்திய வங்கியினுடைய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரால் தேறிய கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவிற்காக தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதி ஆகும்.

2.3 **"அட்டையின் வழங்குனரும் கையேற்பவரும் ஒருவராயிராத விற்பனை மைய கொடுக்கல்வாங்கல்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் அடுத்த பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினருடைய வாடிக்கையாளரால் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்களுடைய விற்பனை மைய முனையத்தில் தோற்றிவிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் என்பதாகும்.

2.4 **"செயற்பாட்டு நடவடிக்கை கைநூல்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான விற்பனைப் மைய ஆளியினுடைய செயற்பாடுகள் தொடர்பாக பொதுவான விற்பனை மைய ஆளியின் உறுப்பினர்களுடைய வழிகாட்டலிற்காக வரையப்பட்ட நடைமுறைகளை உள்ளடக்கிய லங்காகிளியர் பிறைவேட் லிமிட்டெட்டினால் தயாரிக்கப்பட்ட ஆவணம் ஆகும்.

2.5 **"முதன்மை உறுப்பினர்"** என்பது யாதெனில் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய உறுப்பினராவதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் ஒப்புதலளிக்கப்பட்டதும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையில் பங்குபற்றுனராக இருக்கின்றதுமான உத்தரவாதமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எனப்பொருள்படும்.

2.6 **"அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை"** என்பதன் கருத்து யாதெனில் இலங்கை மத்திய வங்கிக்கு உரித்தானதும் அதனால் செயற்படுத்தப்படுகின்றதுமான முழுமையான தன்னியக்க கொடுப்பனவு முறைமை அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை

2.7 **"இரண்டாம்நிலை உறுப்பினர்"** என்பதால் கருதப்படுவது யாதெனில் முதன்மை உறுப்பினருடைய தேறிய மீதிகளை அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை கணக்கினூடாக தீர்ப்பனவு செய்வதற்கு முதன்மை உறுப்பினருடன் ஏற்பாடுகளைச் செய்து இருக்கின்றதும் பொதுவான விற்பனைப் மைய ஆளி உறுப்பினராவதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் ஒப்புதலளிக்கப்பட்டதுமான ஏதேனுமொரு சட்ட ரீதியான நிறுவனம் ஆகும்.

2.8 **"உறுப்பினர் உடன்படிக்கை"** என்பதால் கருதப்படுவது யாதெனில் பொதுவான விற்பனை மைய ஆளி தொடர்பாக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டுடன் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர் செய்து கொண்ட ஒப்பந்தம் ஆகும்.

**3. லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினருடைய பொறுப்புக்கள்:**

3.1 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய செயற்பாடுகள் மற்றும் பங்குபற்றுதல் தொடர்பாக உறுப்பினர் உடன்படிக்கையொன்றினைச் செய்தல் வேண்டும்.

3.2 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினரும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் செயற்பாட்டு நடைமுறை கைந்நூலில் குறித்துரைக்கப்பட்டவற்றையும் வழிகாட்டல்களையும் பின்பற்றுவதற்கு இணங்க வேண்டும்.

3.3 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய தொழிற்பாடுகள் தொடர்பாக அவர்களுக்கிடையிலான ஏற்பாடுகள் மற்றும் விதிகள், நடைமுறைகள் வடிவத்தில் உள்ளவைகள் உள்ளடங்களானவற்றையும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் காலத்திற்கு காலம் பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய மற்றைய ஏற்பாடுகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

3.4 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக விதிக்கப்படும் கட்டணங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வரையறைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

**4. லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.**

4.1 பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய ஏக தொழிற்பாட்டாளராக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இருக்கவேண்டும்.

4.2 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாகயிருத்தல் வேண்டும்

4.2.1 ஒவ்வொரு நாளும் இருபத்துநான்கு மணி நேரமும் பொதுவான விற்பனை மைய ஆளியினைத் தொழிற்படுத்தல்

4.2.2 இலங்கை மத்திய வங்கியினுடைய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தகைமை வாய்ந்த நிறுவனங்களுக்கு பொதுவான விற்பனை மைய ஆளியில் முதனிலை மற்றும் இரண்டாம் நிலை உறுப்புரிமையை வழங்குதல்.

4.2.3 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தெளிவானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான முறைமை விதிகளை ஏற்படுத்துதல் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் விடுக்கப்படுகின்ற முறைமை விதிகள் மற்றைய விடயங்களுடன் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியினதும் உறுப்பினர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், சேருதல், விலகிக் கொள்ளுதல், நிறுத்துதல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன உள்ளிட்ட பங்கேற்பிற்கான நிபந்தனைகள், தொழிற்பாட்டு தேவைப்பாடுகள், பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் மற்றும் தகவல்களின் இரகசியத்தன்மையினைப் பேணுவதற்கான நிபந்தனைகள் என்பவற்றை குறித்துரைத்தல் வேண்டும். லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டானது இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தேவை ஏற்பட்டால் முறைமை விதிகளில் திருத்தங்களைச் செய்யவேண்டும்.

4.2.4 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தில் அல்லது அதற்கு முன்பாக, பொதுவான விற்பனை மைய ஆளியின் கொடுக்கல்வாங்கல்களுடைய தீர்ப்பனவிற்காக பொதுவான விற்பனை மைய ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதிக் கோப்பினை இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

4.2.5 பொதுவான விற்பனை மைய ஆளி கொடுக்கல்வாங்கல் தொடர்பாக விதிக்கத்தக்க கட்டணங்கள் ஏதுமிருப்பின் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வரையறைகளுக்குட்பட்டு கட்டணங்கள் மற்றும் அறவீடுகளுக்காக பின்பற்றப்படுகின்ற ஒரே சீரான அமைப்பின் மீது காலத்திற்குக்காலம் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் திருத்தங்கள் செய்யப்படலாம்.

4.3 பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய தொழிற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கியினுடைய அறிக்கையிடும் தேவைப்பாடுகளுடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இணங்கியொழுக வேண்டும்.

5. **பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்களுடைய பொறுப்புக்கள்**

5.1 ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினரும்

5.1.1 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் உருவாக்கப்பட்ட பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய முறைமை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5.1.2 லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் காலத்திற்குக் காலம் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய சுமுகமான தொழிற்பாட்டிற்கான ஏனைய தேவைப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5.1.3 பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்களை கிரமமாக பின்னூட்டல் செய்வதற்கும் மற்றும் முறைமை தோல்வி அடைதல் அல்லது தரவு களவாடப்படல் அல்லது பிரதான அமைவிடத்தில் தரவினை இழத்தல் போன்ற நிகழ்வின்போது மீட்பு நடைமுறைகளை நிறுவுதல் மற்றும் பேணுவதற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

5.1.4 நாளாந்த கொடுக்கல்வாங்கலின் அறிக்கையினைச் மீளிணக்கப்படுத்தல் வேண்டும் என்பதுடன் தீர்ப்பனவு அறிக்கையைப் பெற்ற 24 மணித்தியாலத்திற்குள் ஏதாவது குறைபாடுகள் காணப்படின் எழுத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டுக்கு அறிவித்தலும் வேண்டும்.

5.1.5 பொதுவான விற்பனை மைய ஆளியின் தொழிற்பாடுகள் மற்றும் அவை தொடர்பான விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினுடைய அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

5.2 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பொதுவான விற்பனை மைய ஆளி பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதியை தீர்ப்பனவு செய்வதற்கு அதனுடைய அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமானளவு நிதி கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது என்பதை ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளி முதனிலை உறுப்பினரும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த கிளைவாசகத்துடன் பொதுவான விற்பனை மைய ஆளி முதனிலை உறுப்பினர் இணங்காத சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியானது இலங்கை தீர்ப்பனவு முறைமை விதிகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

6. **தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்**

6.1 எல்லா நேரத்திலும் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய பணிகள் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய தொழிற்பாடுகளுக்காக நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட தடங்கலற்ற வணிகத் திட்டங்களை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய உறுப்பினர்களும் வைத்திருக்க வேண்டும்.

6.2 முழுமையாக கருவி மயப்படுத்தப்பட்ட அனர்த்த மீட்புத் தளங்கள் மற்றும் நன்கு பயிற்றப்பட்ட அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தடங்கலற்ற செயற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வணிக மீட்புக் குழுக்கள் என்பவற்றை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் மற்றும் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்களும் வைத்திருக்க வேண்டும்.

6.3 எந்தவித இடையூறுகளுமில்லாமல் தொழிற்பாடுகள் கொண்டு நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில் எதிர்பாராத சூழ்நிலைகளில் பணிக்கமர்த்தப்படுவதற்காக பொதுவான விற்பனை மைய ஆளி மையத்தொழிற்பாடுகள் தொடர்பாக திறனான மற்றும் பயிற்றப்பட்ட பின்னூட்டல் அலுவலர்களை வரையறுக்கப்பட்ட லங்காகிளியர் கம்பனி கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 பொதுவான விற்பனைப் மைய ஆளி அதன் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்குத் தடையாக விளங்கும் ஏதேனும் தொழில்நுட்ப அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சினைகளை லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் உணருமாயின் அத்தகைய பிரச்சினைகள் தெரியவந்தவுடன் உடனடியாக இலங்கை மத்திய வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும். முக்கியமான அமைவிடத்தில் திருத்தமுடியாத பழுதுகள் நிகழ்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிட்டெட் உடனடியாக அதனை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன் நேரடிப்பதிவு முறைமையில் தொழிற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதுடன் பொதுவான விற்பனை மைய ஆளி பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதிக் கோப்பினையும் சமர்ப்பிக்கவேண்டும். பிரதான அமைவிடத்திலும், நேரடிப்பதிவு முறைமையிலும் நீண்டகாலம் திருத்த முடியாத பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் இது பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன் இறுதித் தீர்ப்பனவு சுழற்சி வட்டத்திலிருந்து முறைமை பழுதடைந்த நேரம் வரையிலான காலப்பகுதிக்காக பொதுவான விற்பனை மைய ஆளிபல்புடை தேறிய தீர்ப்பனவினைப் பெறுவதற்கான மாற்று ஏற்பாட்டு முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அவற்றை இலங்கை மத்திய வங்கிக்கும் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

7. **இரகசியமானது**

லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் ஒவ்வொரு பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய உறுப்பினரும் தரவு, தகவல் மற்றும் பதிவுகள் தொடர்பான இரகசியத் தன்மையைப் பேண வேண்டுவதுடன் அதனுடைய அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் அல்லது ஏதாவது தகைமையுடன் வேலை செய்கின்ற எந்தவொரு நபரும் எல்லாத் தருணத்திலும் இரகசியத்தன்மையைப் பேணுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

8. **பொது**

8.1 மேற்குறிப்பிட்டவற்றின் பொதுவான தன்மைக்குப் பங்கமின்றியும் மேலதிகமாகவும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்களும் தேவைப்படும் நேரத்தில் காலத்திற்கு காலம் பொதுவான விற்பனை மைய மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினுடைய தொழிற்பாடுகள் தொடர்பான அத்தகைய தகவல்களை இலங்கை மத்திய வங்கி வழங்க வேண்டப்படுவதுடன் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அத்தகைய தகவல்களை வழங்கவேண்டும்.

8.2 இப்பணிப்புரையானது மேலதிகமானதொன்றாக விளங்குவதுடன் ஏதேனும் ஏனைய எழுத்து மூலமான சட்டம் மற்றும் விதிகள், ஒழுங்கு விதிகள் வழிகாட்டல்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் வலுக்களைக் குறைக்காததொன்றாக விளங்கும் என்பதுடன் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் பொதுவான விற்பனை மைய ஆளி உறுப்பினர்கள் இவற்றிற்குட்பட்டவர்களாகவும் அத்துடன்/ அல்லது காலத்திற்குக் காலம் உட்படும் விதத்திலும் தொழிற்படுதல் வேண்டும்.

8.3 மேற்குறிப்பிட்ட பந்தியினுடைய பொதுப்படைத் தன்மைக்கு பங்கமின்றி, இப்பணிப்புரையானது 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைச் சட்டத்தால் அல்லது யாதேனும் விதி, ஒழுங்கு விதி, அறிவுறுத்தல், பணிப்பு அல்லது கட்டளை அல்லது ஏதேனும் மற்றைய எழுதப்பட்ட சட்டத்தால் பொதுவான விற்பனை மைய ஆளியினுடைய உறுப்பினர்கள் மீது சுமத்தப்பட்ட யாதேனும் கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்களை மட்டுப்படுத்துகின்ற விதத்தில் பொருள் கோடப்படல்கூடாது.

**தொடர்பு எண் : 34/07/029/0001/002** 2018 செத்தெம்பர் 12

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 05/2018**

சேரல்: லங்கா செட்டில் முறைமையினுடைய அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்

**லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளரொருவராக வரையறுக்கப்பட்ட சீன வங்கியினை நியமித்தல்**

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ், உள்நாட்டு வங்கித்தொழில் வியாபாரம் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் இரண்டினையும் தொடர்வதற்கு இல.40, ஜோர்க் வீதி, கொழும்பு 01இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட சீன வங்கிக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதன்படி, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 62ஆம் பிரிவின் நியதிகளில் (திருத்தப்பட்டவாறு) லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராகவும் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21ஈ மற்றும் 21உ (திருத்தப்பட்டவாறான) மற்றும் 1923ஆம் ஆண்டு 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் பிரிவு 9 மற்றும் 10 இன்படி லங்கா செட்டில் முறைமையின் நேரடி பங்கேற்பாளராகவும் வணிக நேரடி பங்கேற்பாளராகவும் வரையறுக்கப்பட்ட சீன வங்கி அனுமதிக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட சீன வங்கியானது **2018 செப்தெம்பர் 14ஆம்** திகதியிலிருந்து லங்கா செட்டில் முறைமையினுடைய அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கொடுப்பனவு முறைமை மற்றும் லங்கா செக்குயர் முறைமையினுடைய (பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் மத்திய வைப்பக முறைமை) பங்கேற்பாளரொருவராக பதிவு செய்யப்படும்.

வரையறுக்கப்பட்ட சீன வங்கியினுடைய சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை தீர்ப்பனவுக் கணக்கு இலக்கம் மற்றும் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| சுவிப்ற் பயன்படுத்துனர் அடையாள குறியீடு | : | BKCHLFLXXX |
| அதேநேர மொத்த தீர்ப்பனவு கணக்கு | : | BKCHLKLXXXX0100052027 |

**தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்:**

| | | |
|---|---|---|
| நாட்டின் முகாமையாளர் | : | திரு. வாங் சுஅன் |
| தொலைபேசி | : | +94-11-2118888 |
| மின்னஞ்சல் | : | chuawang@bankofchina.com |

லங்கா செட்டில் முறையில் வரையறுக்கப்பட்ட சீன வங்கியினுடைய பங்கேற்புப்பற்றி லங்கா செட்டில் முறைமையினுடைய அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

பி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

ஆர். டி. ரீ. குணசேகர
**பதில் பொதுப் படுகடன் கண்காணிப்பாளர்**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 06/2018** 2018 ஒத்தோபர் 09

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளின், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் மற்றும் செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட இ-பணம் முறைமைகளைத் தொழிற்படுத்துகின்ற உரிமம்பெற்ற தொழிற்படுத்துனரின் பிரதம நிறைவேற்று அலுவலர்கள்

**உள்நாட்டு நாணய கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுதல்**

இச்சுற்றறிக்கையானது, உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவு பதிலிறுத்தல் குறியீட்டு நியமமொன்றை நிறுவி ஊக்குவிப்பதற்காக சட்டத்தின் 4ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் 2005இன் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் (சட்டம்) 44ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைய வெளியிடப்பட்டது. இலங்கை மத்திய வங்கியானது லங்காகியூஆர் (LANKAQR) விபரக்குறிப்புகள் என்ற தலைப்பில் (இணைப்பு I) தேசிய கியூஆர் குறியீட்டு நியமமொன்றினை இத்தால் வழங்குகின்றது.

இச்சுற்றறிக்கையானது, 2018 ஒத்தோபர் 09ஆம் திகதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும் என்பதுடன் கியூஆர் குறியீட்டின் அடிப்படையில் கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்குகின்ற அனைத்து உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், இ-பண முறைமைகளை அடிப்படையாகக் கொண்ட உரிமம்பெற்ற செல்லிடத் தொலைபேசி தொழிற்படுத்துனர்களும் இச்சுற்றறிக்கையின் 6 மாதகாலத்தினுள் இதனுடன் இணங்குதல் வேண்டும்.

**1. வரைவிலக்கணங்கள்**

அனைத்து கருத்துக்கள் மற்றும் நோக்கங்களுக்காக லங்காகியூஆர் குறியீட்டினால் முன்னெடுக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலொன்றிற்கான தரப்பினர்களாக பின்வருவன வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன.

1.1 வழங்குபவர் - கியூஆர் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகளைக் மேற்கொள்ளுவதற்கு பயன்படுத்தக்கூடிய நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள், கடன் அட்டை கணக்குகள், செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பண கணக்குகள் என்பவற்றிலிருந்து கொடுப்பனவுகளை வசதிப்படுத்துகின்ற நிறுவனங்கள்

1.2 கையேற்பாளர் - வணிகர்களை சேர்த்துக்கொள்வதற்கு, வணிகர் அடையாளங்களை குறித்தொதுக்குவதற்கு, வணிகர் பதிவுகளை/ கணக்குகளைப் பேணுவதற்கு மற்றும் வணிகர்களுக்கு தீர்ப்பனவுகளை மேற்கொள்ளுவதற்கு பொறுப்பான நிதியியல் நிறுவனங்கள் அல்லது செல்லிடத் தொலைபேசி அடிப்படையாகக் கொண்ட இ-பண கணக்குகள் தொழிற்படுத்துனர். வணிகர் முன்வைத்த லங்காகியூஆர் குறியீட்டின் உருவாக்கத்தினையும் கையேற்பாளர் வசதிப்படுத்துகின்றார்.

1.3 வலையமைப்பு வசதிப்படுத்துனர் - வழங்குபவர் மற்றும் கையேற்பாளரும் வேறுபட்டவர்களாக இருக்கின்றபோது, வலையமைப்பு

வசதிப்படுத்துனரான லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட், கொடுக்கல்வாங்கலில் ஈடுபட்டுள்ள தொடர்புடைய நிதி நிறுவனங்களுக்கிடையில் கொடுக்கல்வாங்கல்களை வழிப்படுத்துவதற்கு பொறுப்புடையதாக இருக்கும்.

1.4 செல்லிடத் தொலைபேசி செயலி வழங்குனர் - இது லங்காகியூஆர் குறியீட்டினைப் பயன்படுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்காக செல்லிட தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு தீர்வு வழங்குகின்ற தரப்பினர் ஆகும். இது, நிதியியல் நிறுவனமொன்றின் அல்லது கையேற்பாளர் நிறுவனமொன்றின் மூன்றாம் தரப்பு செயலி வழங்குனொருவராக இருக்கலாம்.

1.5 கொடுக்கல்வாங்கல் கையேற்பாளர் - கொடுக்கல்வாங்கல் பெறுபவர் என்பது கொடுக்கல்வாங்கல்களை பெறுவதற்கான செல்லிடத் தொலைபேசி செயலி வழங்குனரை வசதிப்படுத்துகின்ற நிதியியல் நிறுவனம் அல்லது செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பண கணக்குகள் தொழிற்படுத்துனர் ஆகும். லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் அல்லது தொடர்புடைய கொடுப்பனவு வலையமைப்பினூடாக நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை இத்தரப்பு வசதிப்படுத்தும்.

2. கட்டணங்களும் அறவீடுகளும்

2.1 லங்காகிளியர் குறியீடு மூலம் முன்னெடுக்கப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களுக்காக நுகர்வோர் மீது கட்டணமெதுவும் அறவிடப்படலாகாது.

2.2 வணிகர் கழிவு வீதமொன்றின் வடிவில் வணிகர்கள் மீது கட்டணங்கள் அறவிடப்படலாம்.

2.3 இறுதி நுகர்வோரிடமிருந்து வணிகர் கழிவு வீதத்தின் முழுமையான அல்லது பகுதியான செலவினை வணிகர்கள் அறவிடுவதில்லை என்பதனை வணிகர் கையேற்பாளர் உறுதி செய்யவேண்டும் என கண்டிப்பான ஆலோசனை வழங்கப்படுகின்றது.

2.4 வணிக கையேற்பாளர்கள், சந்தையில் லங்காகியூஆர் குறியீட்டின் விரைவான மற்றும் பரந்தளவில் பின்பற்றப்படுவதனை ஊக்குவிக்கும் பொருட்டு சாத்தியமானளவு மிகக் குறைந்த வணிகர் கழிவு வீதங்கள் நிலவுகின்றதனை உறுதிசெய்தல் வேண்டும்.

2.5 ஆரம்பத்தில், இலங்கை மத்திய வங்கியானது வணிகர் கழிவு வீதத்தினை நிர்ணயிப்பதற்கான சந்தை விசைகளை அனுமதிக்கலாம் இது வணிக பெறுபவர்கள்மத்தியில் ஆரோக்கியமான போட்டியொன்றினைத் தோற்றுவிக்கும், அத்துடன் தேவைப்படுமெனில், வணிகர் கழிவு வீதத்தினை ஒழுங்குபடுத்தி நிலைப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி தலையீடு செய்யலாம்.

2.6 கீழேயுள்ள அட்டவணை 1 ஆர்வலர்களான - வணிக கையேற்பாளர்கள், கொடுக்கல்வாங்கல் கையேற்பாளர்கள், வழங்குனர்கள் மற்றும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் ஆகியோரிடையே 1 சதவீத வணிகக் கழிவு வீதத்தின் பகிர்ந்தளிப்பதற்கானதொரு உதாரணமாகும். வணிக கழிவு வீத பெறுமதி வேறுபடக்கூடியதாயினும் கீழே இணங்காணப்பட்டுள்ள ஒவ்வொரு ஆர்வலர்களுக்குமான ஒதுக்கீடு மாற்றமடையாமல் இருக்கலாம். வணிக கழிவு வீதமானது அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு அமைவாக வணிக கையேற்பாளர் மூலம் சேகரிக்கப்பட்டு தொடர்புடைய தரப்பினர்களுக்கு விநியோகிக்கப்படுதல் வேண்டும்.

2.7 கொடுக்கல்வாங்கல்களின் திரும்பலொன்று நிகழும் சந்தர்ப்பத்தில், மொத்த வலையமைப்புக் கட்டணம் (மீளளிக்கமுடியாத லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம்) வணிக கையேற்பாளர்களின் பொறுப்பேற்கப்பட வேண்டும்.

அட்டவணை 1: அனைத்து ஆர்வலர்களுக்குமிடையிலான ஒரு சதவீத வணிகர் கழிவு வீதமொன்றின் பகிர்ந்தளிப்பு பற்றிய உதாரணம்

| கொடுக்கல்வாங்கல் தொகை x ரூபா | லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம் ரூபா | வழங்குபவர் கட்டணம் | கொடுக்கல்வாங்கல் கையேற்பவர் கட்டணம் | வணிக கையேற்பவர் கட்டணம் |
|---|---|---|---|---|
| 10<=x<100 | 0.01 | 0.25% | 0.35% (செல்லிட தொலைபேசி செயலி வழங்குநருடன் பகிர்ந்துகொள்வதற்கு) | 0.40% (சந்தை சக்திகளினால் நிர்ணயிக்கப்பட்டது) லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் கட்டணம் |
| 100<=x<1000 | 0.10 | | | |
| 1000<=x<5000 | 1.00 | | | |
| 5000<x | 3.00 | | | |

3. கொடுக்கல்வாங்கல் வரையறைகள்

3.1 லங்காகியூஆர் குறியீட்டு கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கான குறைந்தபட்ச கொடுக்கல்வாங்கல் வறையரை ரூ.10 ஆகயிருத்தல் வேண்டும்.

3.2 லங்காகியூஆர் குறியீட்டு கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கான அதிகபட்ச கொடுக்கல்வாங்கல் வறையரை தனிப்பட்ட இடர்நேர்வினை தாங்கிக்கொள்ளக்கூடிய தன்மையின் அடிப்படையில் கையேற்பவரினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

4. கொடுக்கல்வாங்கல் அறிவித்தல்கள்

4.1 வழங்குபவர்கள் கொடுக்கல்வாங்கல் நிலைபற்றி அதேநேரத்தில் குறுந்தகவல்களூடாக வாடிக்கையாளர்களுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

4.2 வணிக கையேற்பாளர்கள் கொடுக்கல்வாங்கல் நிலைபற்றி அதேநேரத்தில் வணிகர்களுடன் இணங்கிய பொருத்தமான முறைமையொன்றினூடாக வணிகர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

5. வலையமைப்பு வசதிப்படுத்துனர்

5.1 லங்காகியூஆர் குறியீடு அடிப்படையிலான கொடுப்பனவு செயன்முறைக்கான வசதிப்படுத்துகின்ற பிரதான நிறுவனமொன்றாக லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் பணிப்பாளரினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான தொடர்புடைய தொழிற்படுத்தல் வழிகாட்டல்களையும் வர்த்தக நாமமிடல் வழிகாட்டல்களையும் வழங்குதல் வேண்டும் லங்காகியூஆர் குறியீடு வழங்குநரினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற அனைத்துப் பங்கேற்பாளர்களும் லங்காகிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் வழங்கப்படுகின்ற இவ்வழிகாட்டல்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

டி. குமாரதுங்க

**பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 07/2018** 2018 ஒத்தோபர் 23

சேரல்: பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் லங்கா கிளியர் பிரைவேற் லிமிடெட்டின் அனைத்து முதன்மை உறுப்பினர்களுக்கும்

**பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி மற்றும் லங்காபே பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியிலுள்ள பொறுப்பு முகாமையாளர் வரையறைகள**

லங்காபே பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி மற்றும் லங்காபே பொதுவான இலத்திரனியல் நிதி மாற்றல் ஆளிகளின் அங்கத்துவ நிறுவனங்களால் நிர்ணயிக்கப்பட்ட பற்றாக்குறையான பொறுப்பு முகாமையாளர் வரையறைகளின் காரணமாக ஏற்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் அதிக எண்ணிக்கையிலான நிராகரிப்புக்களை கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது வாடிக்கையாளருக்கு வினைத்திறனான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் சேவைகளை வழங்குவதற்காக பல அடுக்குகளைக் கொண்ட பொறுப்பு முகாமையாளர் வரையறைக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரமளித்திருக்கின்றது. ஆரம்பத்தில், பல அடுக்குகளைக் கொண்ட பொறுப்பு முகாமையாளர் வரையறைக் கட்டமைப்பினை பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய முதன்மை உறுப்பினர்கள் மட்டுமே பிரயோகிக்கலாம்.

2. இதற்கமைய, இணைப்பு 1இல் தரப்பட்ட பட்டியலின்படி முதன்மை உறுப்பினர்கள் மூன்று வகையினராக வகைப்படுத்தப்படுவதோடு கீழே தரப்பட்ட பின்வரும் அட்டவணையின்படி பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் ஒவ்வொரு வகையினருக்காகவும் ஆகக்குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகள் வரையறுக்கப்படும்.

i. **பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளிக்கான ஆகக்குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகள்**

| | வகை அ | வகை ஆ | வகை இ |
|---|---|---|---|
| வகை அ | ரூ.200 மில். | ரூ.150 மில். | ரூ.100 மில். |
| வகை ஆ | ரூ.150 மில். | ரூ.150 மில். | ரூ.100 மில். |
| வகை இ | ரூ.100 மில். | ரூ.100 மில். | ரூ.100 மில். |

ii. **பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினுடைய ஆகக்குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகள்**

| | வகை அ | வகை ஆ | வகை இ |
|---|---|---|---|
| வகை அ | ரூ.250 மில். | ரூ.200 மில். | ரூ.150 மில். |
| வகை ஆ | ரூ.200 மில். | ரூ.200 மில். | ரூ.150 மில். |
| வகை இ | ரூ.150 மில். | ரூ.150 மில். | ரூ.150 மில். |

3. பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி முறைமைகளில் இலங்கை மத்திய வங்கியினால் வரையறுக்கப்பட்ட ஆகக் குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை லங்கா கிளியர் பிரைவேற் லிமிட்டெட் அமுல்படுத்தவும் பேணவும் வேண்டப்படுவதோடு மத்திய வங்கியினால் வரையறுக்கப்பட்ட ஆகக்குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை விட பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை உயர்வாக அமைப்பதற்கு முதன்மை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கோரிக்கைகளை செய்ய வேண்டும்.

4. ஏதேனும் அல்லது அனைத்து வகை/ வகைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்ட ஆகக் குறைந்த பொறுப்பு முகாமைத்துவ வரையறைகள் மற்றும் முதன்மை உறுப்பினர்களின் வகைப்படுத்துதல் என்பனவற்றினை காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கி மீளாய்வு செய்யவும் தேவைப்பட்டால் திருத்தங்கள் செய்யவும் வேண்டும்.

5. முதன்மை உறுப்பினர்கள் ஆகக்குறைந்த பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை வரையறுக்கும் ஒரே நோக்கத்திற்காக இந்த முறையில் வகைப்படுத்தப்பட்டனர் என்பதோடு வேறேதேனும் நோக்கத்திற்காக இதனை பயன்படுத்தப்படக்கூடாது.

6. இந்தச் சுற்றறிக்கையானது 2018 நவெம்பர் 01இலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

டி. குமாரதுங்க

**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**இணைப்பு I**

**பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி அத்துடன்/ அல்லது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் முதனிலை உறுப்பினர்கள்**

- வகை அ

| |
|---|
| மக்கள் வங்கி |
| இலங்கை வங்கி |
| கொமர்ஷல் வங்கி ஒவ் சிலோன் பிஎல்சி |
| சம்பத் வங்கி பிஎல்சி |
| அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி |

- வகை ஆ

| |
|---|
| செலான் வங்கி பிஎல்சி |
| நெஷனல் டெவலப்மன்ட் வங்கி பிஎல்சி |

| |
|---|
| நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி |
| டிஎவ்சிசி வங்கி பிஎல்சி |
| த ஹொங்கொங் அன்ட் சங்காரி பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் |

- வகை இ

| |
|---|
| பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி |
| ஸ்டார்ட் சார்ட்டட் வங்கி |
| யூனியன் வங்கி ஒவ் கொழும்பு பிஎல்சி |
| அமானா வங்கி பிஎல்சி |
| கார்கில்ஸ் வங்கி லிமிடெட் |
| சிட்டி வங்கி என்.ஏ. |
| எம்.சி.பீ. வங்கி லிமிடெட் |
| டியூச் வங்கி ஏ.ஜீ. |
| இந்தியா ஸ்டேட் வங்கி |
| எக்சிஸ் பாங்க் லிமிடெட் |
| இந்தியன் வங்கி |
| ஹபீப் வங்கி லிமிடெட் |
| பப்ளிக் பாங்க் பேஹர்ட் |
| ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி |

**இந்த வகைப்படுத்தலானது பல அடுக்குகளைக் கொண்ட பொறுப்பு முகாமையாளர் வரையறைக் கட்டமைப்பின் தனியான நோக்கத்திற்காக விதிக்கப்பட்டிருக்கின்றதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் இதனைப் பயன்படுத்தக்கூடாது.**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2018 நவெம்பர் 05

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 08/2018**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்

**2018 நவெம்பர் 07ஆம் நாளன்று மு.ப. 07.30 மணிக்கு லங்கா செட்டில் முறைமையிலுள்ள வணிகத்திற்காக திறந்துவிடுதல்**

சுவிப்ற் வாசகம் 7.2இற்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர், ஏதேனும் தொழில்நுட்ப சிக்கல்களை கட்டுப்படுத்தும் நோக்கத்திற்காக 2018 நவெம்பர் 07ஆம் நாளன்று (புதன் கிழமை) மு.ப. 07.30 மணிக்கு லங்கா செட்டில் முறைமையானது (அதேநேர மொத்தக் கொடுப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை) வியாபாரத்திற்காக திறந்துவிடப்படும் என்பதை தங்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

பி. குமாரதுங்க எம். இஷட். எம். ஆசிம்

**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்** **பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2018 நவெம்பர் 21

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல. 09/2018**

**சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்**

**லங்கா செட்டில் முறைமை 2018 நவெம்பர் 28, 29, மற்றும் 30ஆம் நாட்களில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்**

இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக லங்கா செட்டில் முறைமை (ஆர்ரீஜிஎஸ். முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய முறைமைகளின் தொழிற்பாடுகளை 2018 நவெம்பர் 28, 29 மற்றும் 30ஆம் நாட்களன்று (புதன் கிழமை, வியாழக் கிழமை மற்றும் வெள்ளிக் கிழமை) அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள தனியாள் கணனி அனர்த்த மீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், ஆயத்த நிலையினை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் 2018 நவெம்பர் 28ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினைத் தொடர்பு கொண்டு இவ்விணைப்புத் தொடர்பாக பரீசித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- திரு. வி. கமல்நாத் 0112477126 (email: kamalnath@cbsl.lk)
- திருமதி. பாக்கியா மல்லாவ 0112477016 (email: bhagyam@cbsl.lk)

பி. குமாரதுங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

பிரதி: பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பவியல் - இலங்கை மத்திய வங்கி
முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா கிளியர் பிறைவேற் லிமிட்டெட்
செயலாளர் நாயகம் - இலங்கை வங்கியாளர் சங்கம்
தலைவர் - முதனிலை வணிகர்கள் சங்கம்
முதன்மை நிறைவேற்று அலுவலர் - லங்கா பினான்சியல் சேர்விஸஸ் பியுறோ லிமிடெட்

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்.: ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. இல. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2018 ஏப்பிறல் 10

**சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்**

**சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகாலம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

1. **அறிமுகம்**

இலங்கை அரசாங்கமானது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் ஒப்புதலுடன் சனாதிபதி செயலகத்தின் கீழ் தொழிற்படுகின்ற செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சிறுஉடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினை நிறுவுவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. சிறுஉடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்திற்கு வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் இலங்கை அரசாங்கம் இரண்டின் மூலமும் நிதியளிக்கப்படவுள்ள அதேவேளை, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் வழங்கப்படும் கொடுகடனுக்கான கடன் பெறுகைகள் சிறுஉடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்ட கூறு 2: கிராமிய நிதிக்கான அணுகுவழி மற்றும் துணைக்கூறு 2.1: **அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்கள்** என்பவற்றின் நியதிகளுக்கமைவாக அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும். அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் கொடுகடன் கூறுகளை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்தும். அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்கள், சிறுஉடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் பங்கேற்பு நிதி நிறுவனங்களாக குறிப்பீடு செய்யப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் தெரிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளூடாக நடைமுறைப்படுத்தப்படும்.

அதற்கமைய, சிறுஉடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டமானது அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களுக்காக ஐ.அ.டொலர் பதினொரு மில்லியன் எழுநூற்றுத் தொண்ணூராயிரம் (ஐ.அ.டொலர். 11,790,000) ஒதுக்கீடு செய்துள்ளது. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை ஏற்பாட்டின் ஊக்குவிப்புக் கம்பனி, தெரிவுசெய்யப்பட்டு தொடர்புடைய பங்கேற்பு நிதிய நிறுவனத்தின் மூலம் செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவின் ஊடாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு விதந்துரைக்கப்படும்.

2. **அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் குறிக்கோள்**

கடன் திட்டங்களின் முதன்மைக் குறிக்கோள் யாதெனில் வேளாண்மை உற்பத்திகளின் உற்பத்தியாக்கம் மற்றும் தரத்தினை அதிகரிப்பதும் அவ்வுற்பத்திகளின் பெறுமதிகளைக் கூட்டுவதுமேயாகும்.

அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் மற்றைய குறிக்கோள்கள் வருமாறு:

அ. வேளாண்மையாளர்களுக்கான கடனின் கொடுக்கல்வாங்கல் செலவினைக் குறைத்தல்.

ஆ. வேளாண்மையாளர்களின் சமூக நிலைமைகளை மேம்படுத்தல்.

இ. வேளாண்மையாளர்களை முறைசார்ந்த நிதியியல் முறைமைக்குள் கொண்டு வருவதன் மூலம் கிராமிய வேளாண்மையாளர்களிடையே நிதியியல் உள்ளீட்டினை உயர்த்துதல்.

ஈ. கிராமிய வேளாண்மையாளர்களிடையே பெறுமதிச் சங்கிலித் தொடர் சந்தைப்படுத்தலையும் இணைப்புக்களையும் அபிவிருத்தி செய்தல்.

உ. கிராமிய வேளாண்மையாளர்களுக்காக நவீன வேளாண்மை முறைகளின் தேர்ச்சிகளை அறிமுகப்படுத்தல்.

ஊ. வேளாண்மை உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் நாட்டின் மொ.உ.உற்பத்தி வளர்ச்சிக்குப் பங்களிப்பதற்கும் வேளாண்மையாளர்களை ஊக்குவித்தல்.

எ. அரச தனியார், உற்பத்தியாளர் பங்குடமை செயற்றிட்டங்கள் மூலமாக இளைஞர் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.

ஏ. இயலளவைக் கட்டியெழுப்புவதனூடாக கிராமிய இளைஞர்களை ஊக்குவித்தல், திறன் மட்டங்களை உயர்த்துதல்.

ஐ. வேளாண்மையாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தினையும் சிக்கனத்தினையும் தூண்டுதல்.

ஒ. வேளாண்மை உற்பத்திகளையும் பெறுமதிகூட்டல்களையும் அதிகரிப்பதனூடாக வேளாண்மையாளர்களின் வீட்டலகுகளினது வருமானத்தினை அதிகரிப்பதன் வாயிலாக அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துதல்.

3. **தொழிற்பாட்டுப் பிரதேசங்கள்**

நிகழ்ச்சித்திட்டமானது தீவு முழுவதற்கும் நடைமுறைப்படுத்தப்படும்.

4. **தகைமையுடைய நடவடிக்கைகள்**

பொறித்தொகுதிகள் செயற்றிட்ட வேளாண்மையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வெளிப்பயிர்ச்செய்கையாளர் வேளாண்மையின் கீழ், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விதத்தில் பொறிகள், பண்ணைக் கருவிகள் போன்ற மூலதனச் சொத்துக்களின் கொள்வனவிற்கும் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்காகவும் கடன்களை வழங்க முடியும்.

5. **துணைக் கடன் வகைகள்**

கொடுகடனுக்காக கடன்பெறுகைகளிலிருந்து வழங்கப்படுகின்ற துணைக் கடன் வகைகள் பின்வருமாறு:

அ. வேளாண்மையாளர்கள், வேளாண்மை அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் அரச, தனியார், உற்பத்தியாளர்கள் பங்குடமை ஒழுங்குகளின் கீழுள்ள தொழிலாளர்கள் குழுக்கள் என்பனவற்றிற்கான பருவகாலக் கடன்கள்.

ஆ. அரச, தனியார், உற்பத்தியாளர், பங்குடமை ஒழுங்குகளில் ஈடுபட்டுள்ள வேளாண்மையாளர்கள், வேளாண்மை அமைப்புக்கள்/ உற்பத்தயாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண்மைக் குழுக்கள்.

இ. இளைஞர் தொழில்முயற்சியாளர்களுக்கான மூலதனக் கடன்கள்/ தொழிற்படு மூலதனக் கடன்கள்.

6. **பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் அவற்றின் பொறுப்புக்களும்**

அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீவிரமான வகிபாகமொன்றினை ஆற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்:

அ. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துதல்.

ஆ. கொடுகடன்களை வழங்குதல் மற்றும் அறவிடுதல் என்பனவற்றின் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளுதல்.

இ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எந்தவொரு கிளையும் இறுதிக் கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்கும் பொழுது எந்தவொரு சூழ்நிலையிலும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் கீழ் பிரிவு 7.0இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வீதத்திலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் வட்டியை விதிக்கக்கூடாது என்பதனை உறுதிப்படுத்துதல்.

ஈ. ஒவ்வொரு துணைச் செயற்றிட்டமும் சந்தைப்படுத்தல் நியதிகளில் பொருளாதார ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் ஆற்றலும் சாத்தியவளத்தன்மையினையும் கொண்டவை என்பதனையிட்டு திருப்திப்பட்டுக் கொள்ளுதல்.

உ. கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்

- பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றைய விடயங்களுடன் துணைக் கடன் மதிப்பீடுகள், ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் அறவிடல் என்பனவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளையும் பதிவுகளையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.
- கடன்பெறுகைகளின் பயன்படுத்தல் மற்றும் மீள்நிதியிடல் தொழிற்பாடுகளுக்காக தனியான கணக்குகளைப் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.
- பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினதும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினதும் (வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் சார்பில்) பரீட்சிப்பிற்காகவும் மீளாய்விற்காகவும் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் கிடைக்கச் செய்தல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படும் நேரத்தில் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊ. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதிவுசெய்தல் செயன்முறைகளையும் மீள்நிதியிடல் நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

7. **தகைமையுடைய நன்மைபெறுநர்கள்**

கீழே காட்டப்பட்டுள்ள தகைமையுடைய நன்மைபெறுநர்கள் உத்தேசச் செயற்றிட்டங்கள் சாதகமான காசுப்பாய்ச்சல்களையும் போதுமான மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் கொண்டிருக்கின்றமை என்பது தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களைத் திருப்திப்படுத்தக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

அ. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வேளாண்மையாளர்கள்.

ஆ. அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை நிகழ்ச்சித்திட்டங்களை முழுமையாக்குகின்ற பெறுமதிச் சங்கிலிக்கமைவாக உருவாக்கப்படும் பணிகளுக்கான கேள்விக்கு பதிலிறுத்துகின்ற இளைஞர்கள். தமது வியாபாரத் திட்டத்தில் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை செயற்பாட்டாளர்களுடன் வரையறை செய்யப்பட்ட விரிவான வியாபாரத் திட்டம் மற்றும் விற்பனை ஒழுங்குகளை இளைஞர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

8. **அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் முக்கிய பண்புகள்**

அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் முக்கிய பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பண்புகள் | அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம் - மூலதனக் கடன் | அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம் - பருவகாலக் கடன் | இளைஞர் கடன் திட்டம் |
|---|---|---|---|
| உயர்ந்தபட்சக் கடன் வரையறை | - அரச, தனியார், உற்பத்தியாளர் பங்குடமையின் கீழ் மீண்டும் மீண்டும் பயிரிடும் வெளிப்பயிர்ச்செய்கை வேளாண்மையாளர்களுக்கு ரூ.300,000.00<br>- வேளாண்மையாளர் அமைப்புகள்/ உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் வேளாண்மையாளர் குழுக்கள் தொடர்பில் ஒன்றுசேர்ந்த உறுப்பினர்களின் கடன் அல்லது அமைப்புக் கடன் எல்லை ரூ.25 மில்லியனை விஞ்சாதிருக்கவேண்டும். | - அரச, தனியார், உற்பத்தியாளர் பங்குடமையின் கீழ் மீண்டும் மீண்டும் பயிரிடும் வெளிப்பயிர்ச்செய்கை வேளாண்மையாளர்களுக்கு ரூ.300,000.00<br>- வேளாண்மையாளர் அமைப்புகள்/ உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் வேளாண்மையாளர் குழுக்கள் தொடர்பில் ஒன்றுசேர்ந்த உறுப்பினர்களின் கடன் அல்லது அமைப்புக் கடன் எல்லை ரூ.25 மில்லியனை விஞ்சாதிருக்கவேண்டும். | - ரூ.2 மில்லியன் |
| தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்கள் மற்றும் துணைக் கடன் நடவடிக்கைகள் | - வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண்மையாளர் குழுமங்கள்<br>- பண்ணைச் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கும் பண்ணை உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றிற்கும் | - வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண்மையாளர் குழுமங்கள்<br>- விதைத் தயாரிப்பு, வளமாக்கிப் பயன்பாடு, உழுப்பொறிகளை வாடகைக்குப் பெறல், அறுவடை, கிணறுகளின் புனரமைப்பு போன்றவற்றிற்கான தொழிற்படு மூலதனமாகப் பயன்படுத்துவதற்கு | - இளைஞர் தொழில்முயற்சியாளர்கள் மற்றும்/ அல்லது இளைஞர் தொழில்முயற்சியாளர் குழுக்கள்<br>- அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பெறுமதிச் சங்கிலி ஊடாக உருவாக்கப்படும் பணிகளின் கேள்வியினை நிறைவு செய்வதற்கு எந்திரங்கள், வேளாண்மைக் கருவிகள் மற்றும் கொள்வனவு செய்வதற்கு மற்றும் தொழிற்படு மூலதனத்திற்கும் |
| துணைக் கடன்பாட்டாளர் களினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தப்படத்தக்க வட்டி வீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் |
| பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்படத்தக்க வட்டி வீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் |
| சலுகைக் காலம் | செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளைப் பொறுத்து உயர்ந்தபட்சம் ஆறு (6) மாதங்கள் | சலுகைக்காலம் இல்லை | செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளைப் பொறுத்து உயர்ந்தபட்சம் ஆறு (6) மாதங்கள் |
| மீள்கொடுப்பனவுக் காலம் | முப்பத்தாறு (36) மாதங்களை விஞ்சக்கூடாது | பயிர்களின் விளைச்சலைத்தரும் காலம் மற்றும் வேளாண்மையாளர்களின் காசுப்பாய்ச்சல்கள் என்பனவற்றின் அடிப்படையில் 6 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்குமிடையில் வேறுபடலாம் | 60 மாதங்களை விஞ்சக்கூடாது |

| | | | |
|---|---|---|---|
| பிணைகள் | கம்பனிகளுக்கும் வேளாண்மையாளர்களுக்கும் அல்லது இரண்டு தனிப்பட்ட உத்தரவாதிகள் அல்லது வேளாண்மையாளர் குழுமத்திற்கான கம்பனி உத்தரவாதங்களுக்கிடையிலான மீண்டும் வாங்கும் உடன்படிக்கை | கம்பனிகளுக்கும் வேளாண்மையாளர்களுக்கும் அல்லது இரண்டு தனிப்பட்ட உத்தரவாதிகள் அல்லது வேளாண்மையாளர் குழுமத்திற்கான கம்பனி உத்தரவாதங்களுக்கிடையிலான மீண்டும் வாங்கும் உடன்படிக்கை | இக்கடனுக்காக கம்பனி மற்றும் பயன்பெறுநர்/ பயன்பெறுநர்கள் இடையிலான பணி உடன்படிக்கை பதிலீட்டு பிணைய உறுதியாகவிருக்கும் அல்லது கடன்களை வழங்குவதற்கான பிணைய உறுதி வகை பங்கேற்பு நிதி நிறுவனங்களினால் தீர்மானிக்கப்படும் |

**9. கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்**

அ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் கீழே பிரிவு 8இன் (ஆ) மற்றும் (இ) இல் தரப்பட்டவாறான அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களின் கீழ் கடன்களைப் பெற விரும்பும் விண்ணப்பதாரிகளின் விபரங்களை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு 1(அ) மற்றும் 1(ஆ)இல் தரப்பட்டுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆ. தனிப்பட்ட கடன்பாட்டாளர்கள் மற்றும் வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் வேளாண்மையாளர் குழுமம் இரண்டினையும் பொறுத்தவரையில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனம், ஒவ்வொரு கடன்பாட்டாளர்கள் தொடர்பிலும் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் இணைப்பு 1(அ) இனை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

இ. கடன்பாட்டாளர் ஒரு வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் வேளாண்மையாளர் குழுமம் எனின் பங்கேற்கும் நிதியிடல் நிறுவனம், ஒவ்வொரு வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் வேளாண்மை குழுமத்திற்கான இணைப்பு 1(ஆ) இனை தனித்தனியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஈ. செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு தேவையான பின்னணி மதிப்பீடுகளை மேற்கொண்ட பின்னர் விண்ணப்பதாரிகள் அல்லது குழுமத்தின் பட்டியலை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு விதந்துரைக்கும்.

**10. ஆவணங்களின் கட்டுக்காப்பு**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம்/ கிளை, கொடுகடன் தொடரின் [**இணைப்பு 1(அ)**] பூர்த்தி செய்யப்பட்ட பயன்பெறுநரின் விண்ணப்பப் படிவத்தினை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அல்லது செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு கேட்டுக்கொள்ளும் நேரத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம், பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் ஏக தற்றுணிபின்படி, பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொடர்பான ஏனைய ஆவணங்களையும் வைத்திருக்கலாம்.

**11. மீள்நிதியிடல் நடைமுறை**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட்ட அனைத்துத் துணைக் கடன்களுக்கும் இலங்கை மத்திய வங்கி 100 சதவீத மீள்நிதியிடலை வழங்கும்.

அ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியுடனான பதிவினைத் தொடர்ந்து 90 நாட்களுக்குள் பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்களுக்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்களை விடுவித்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஏதேனும் கடன்களைப் பகிர்ந்தளிக்க முடியாவிடின் அது பற்றி ஏதேனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுடன் பதிவுசெய்தல் திகதியிலிருந்து 90 நாள் முடியடைந்ததும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் அறிவித்தல் வேண்டும். செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தாமதத்திற்காக தெரிவிக்கப்பட்ட காரணங்களைப் பரிசீலனையில் கொண்டு பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்கள் தொடர்பில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கடன்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்குத் தவறுமிடத்து அல்லது 90 நாட்களுக்குள் சரியான காரணங்களை வழங்கத் தவறுமிடத்து 90 நாட் காலப்பகுதி கடந்த பின்னர் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் இரத்துச் செய்யப்படுவதற்குட்பட்டதாகும்.

ஆ. துணைக் கடன்களை விடுவித்ததன் பின்னர் சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மீள்நிதியிடலுக்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு மீள்நிதியிடல் விண்ணப்பத்துடனும் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

i. மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் - இணைப்பு II

ii. மீள்நிதியிடலுக்கான பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று விண்ணப்பம் - இணைப்பு III

iii. கோரிக்கையின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ் - இணைப்பு IV

iv. வழங்கல் குறிப்பு - இணைப்பு V

v. இலங்கை மத்திய வங்கிக்கு உத்தரவாதமளிப்பதன் மூலம் வழங்கப்படுகின்ற சாட்டுதல் படிவம் - இணைப்பு VI

vi. பகிர்ந்தளிப்புக் கடிதம் - இணைப்பு VII

இ. மீள்நிதியிடல் விண்ணப்பப் படிவத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டதும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள்நிதியிடல் விண்ணப்பத்திற்கு ஒப்புதலளிப்பதுடன், சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் முதல் வந்தது முதலில் என்ற முறையில் அவை கிடைக்கப் பெற்றதன் ஒழுங்கில், நிதியின் கிடைப்பனவினைப் பொறுத்து மீள்நிதியிடலை விடுவிக்கும்.

ஈ. மீள்நிதியிடல் கோரல்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாகப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

உ. மீள்நிதியிடல் கடன்கள் மீதான மூலதனம் மற்றும் வட்டி கொடுப்பனவுகளைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மீள்கொடுப்பனவு அட்டவணைக்கிணங்க இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

**12. கடன்களை அறவிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மூலதனம் மற்றும் வட்டி என்பன அரையாண்டிற்கொரு முறை ஒவ்வொரு ஆண்டும் அதாவது யூன் 30ஆம் திகதியும் திசெம்பர் 31ஆம் திகதியும் அறவிடப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் சாதன வகைக்கிணங்க மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.

- அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை மூலதனக் கடன் - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் சாதனத்தின் கீழ், உயர்ந்தபட்சம் 36 மாதங்களில் இலங்கை மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.
- அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை பருவக்காலக் கடன் - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் சாதனத்தின் கீழ், உயர்ந்தபட்சம் 12 மாதங்களில் இலங்கை மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.
- இளைஞர் கடன் திட்டம் - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் சாதனத்தின் கீழ், உயர்ந்தபட்சம் 60 மாதங்களில் இலங்கை மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்

**13. அறிக்கையிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இணைப்பு ஏஐஐ இல் உள்ளவாறு கடப்பாடுகள், பகிர்ந்தளித்தல் மற்றும் மீள்நிதியிடல் கடன் விபரங்களை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக, செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கான பிரதியொன்றுடன் மாதாந்த அறிக்கையினை இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இணைப்பு ஐஓ இல் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்பட்ட துணைக் கடன்களின் செயற்படாக் கடன்களின் நிலையினைக் காலாண்டு அடிப்படையில் அறிவித்தல் வேண்டும்.

**14. கணக்குகளை கணக்காய்வு செய்தல்**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர்கள் பங்குடமை கடன் திட்டங்களின் ஆண்டு நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் அத்தகைய நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்காய்வு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியியல் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

தேவையான வேளையில் தேவையானவாறு சுழலும் நிதிய கடன் திட்டங்கள் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் திருத்துகின்ற உரிமையினை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள
திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு I (அ)**

**தனிப்பட்ட நன்மைபெறுநர் விண்ணப்பம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்: இலங்கை மத்திய வங்கி நன்மைபெறுநர் பதிவு இல.: ...

**தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான கடன் பதிவுசெய்தல் விண்ணப்பம் - சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்**

**(.............................................. கடன் திட்டம்)**

கிளையின் பெயர் : மாவட்டம்:

கிளையின் முகவரி :

1. செயற்றிட்டம்/ பங்கேற்கும் கம்பனியின் பெயர் :
2. தொலைபேசி இல./ தொலைநகல் இல. :
3. விண்ணப்பதாரி/ தாரிகளின் அந்தஸ்து : தனிப்பட்டவர் ☐ குழு உறுப்பினர் ☐
4. குழு உறுப்பினரொருவராயின்; குழுவின் பெயர் :
   குழுவின் பதிவிலக்கம் :
5. விண்ணப்பதாரி/ தாரிகளின் பெயர் மற்றும் முகவரி :

| பெயர் | முகவரி | தே.அ.அ./ இலக்கம் | பால் |
|---|---|---|---|
| i. | | | |
| ii. | | | |

6. கடனின் நோக்கம்:

   ..............................................................................................................................................................................................

7. முன்னர் பெறப்பட்ட கடன்கள் அல்லது தற்பொழுது சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயன்முறைப்படுத்தப்பட்டுவரும் கடன்கள் (தேவையாயின் மேலும் நிரல்களை அதிகரித்துக் கொள்ளவும்).

| கடன் திட்டம் | நோக்கம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| அரச, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை மூலதனம் | | |
| அரச, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை பருவகாலம் | | |
| இளைஞர் | | |

8. செயற்றிட்ட இடம் மற்றும் அமைவிடத்தின் முழுமையான முகவரி:

.............................................................................................................................................................................................................

9. வியாபாரத்தின்/ சிறுதொழில்முயற்சிகளின் வகை: ..................................................................................................................................

10. கடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்படவுள்ள வியாபாரம்/ சிறுதொழில்முயற்சிகள் பற்றிய சுருக்கமான விபரணம்: ......................................................

.............................................................................................................................................................................................................

11 செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு: ரூ. ..........................................................................................................................................

12. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை: ரூ. ..................................................................

........................................................................................ ............................................................................

நன்மைபெறுநரின் பெயர் மற்றும் கையொப்பம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம் மற்றும் அலுவலக இறப்பர் முத்திரை

திகதி : ......................................

**இணைப்பு I (ஆ): அரச, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை கடன் திட்டங்கள் - சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமைகள் நிகழ்ச்சித்திட்டம்**

**துணைக் கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்**

(கடன் திட்டத்தின் பெயர்)

விண்ணப்ப இலக்கம்: ......................

சேரல் : இலங்கை மத்திய வங்கி

ஊடாக: சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமைகள் நிகழ்ச்சித்திட்டம் - செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு

பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர் :

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளையின் பெயர் :

| # | விண்ணப்பதாரியின் பெயர் | விண்ணப்பதாரியின் முகவரி மற்றும் தொடர்பு இலக்கம் | பால் | கடன்பெறுநரின் அந்தஸ்து (தனிப்பட்டவர்/ (குழு உறுப்பினர்) | தே.அ. அட்டை | குழுவின் பெயர் மற்றும் பதிவிலக்கம் (குழு உறுப்பினர்களுக்காக | கடன் விபரங்கள் | | | இ.ம.வங்கியின் பதிவு இலக்கம்* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | செயற்றிட்டத்தின் பெயர் | நோக்கம் | தொகை | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் என்னால்/ வங்கியின் கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டன எனவும் அவை சிறுஉடமையாளர் வேளாண் வியாபார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதியிடப்படுவதற்குத் தகைமையுடையன எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

.............................................................. ............................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை) திகதி

* இலங்கை மத்திய வங்கியின் உபயோகத்திற்கு மாத்திரம்

**இணைப்பு II**

**மீள்நிதியிடல் விண்ணப்பம்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ................................................

(............ இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

முகவரி:

திகதி:

**மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் -**

**சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான .......... கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மற்றும் அபிவிருத்தி வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி/ நுண்பாக நிதி நிறுவனங்கள் மற்றும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தப்பட்ட எங்கள் யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் ............................................ .............................................................. (பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) மேற்குறிப்பிட்ட மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூபா......................... ....... (ரூ.......................) கொண்ட கடனைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. .................... இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் **சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின்** அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட மூலதனம், அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டத்தின் கீழ் 2018 ........... ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்கும் எங்களுக்குமிடையிலான துணைக் கடன் உடன்படிக்கைக்கும் இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் எங்களால் வழங்கப்பட்ட கடன்களின் கூற்றினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மீள்நிதியிடல் கடனுக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. பின்வருவன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகிறோம். (i) மேலே பந்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மேற்குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் தகைமையுடைய செயற்றிட்டங்களுக்காகத் தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. (ii) அத்தகைய கடன்கள் தொடர்பான துணைக் கடன்பாட்டாளர்களின் கடன்பாட்டு அதிகாரங்களுக்குள் காணப்படுகின்றன. (iii) அத்தகைய கடன்களின் மீள்கொடுப்பனவிற்காகப் பெறப்பட்ட உத்தரவாதங்களைப் பொறுத்தவரை உத்தரவாதிகள் அத்தகைய உத்தரவாதங்களை வழங்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றனர் என்பன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளோம் என்பது பற்றி இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/(கள்) இன் கையொப்பம் பெயர் மற்றும் பதவி**

**முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு**

**இணைப்பு III**: மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ........................

............................ கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று
(சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்)

சேரல் : இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை
இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு: ..................................
பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : .............................................. கிளை: ........................... மாவட்டம்: ......................

| பதிவு இல. | கடன் பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தே.அ.அ இல. | கடன் வகை | கடனின் நோக்கம்* | துணைக் கடன் தொகை | | பகிர்ந் தளிப்புத் திகதி | மீள்நிதியிடல் எதிர்பார்க்கப்படு பனவற்றிற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை | | சலுகைக் காலம் | மீள்கொடுப்பனவு அட்டவணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கடன் சுழற்சி** | தொகை (ரூ.) | | | | | தவணைகள் | | முதல் தவணைக்குரிய திகதி | இறுதித் தவணைக்கான திகதி |
| | | | | | | | | தவணைகளின் எண். | தொகை (ரூ.) | | எண். | பெறுமதி | | |
| | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | |

இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையிலான மீள்நிதியிடல் உடன்படிக்கையில் இணங்கப்பட்டவாறு, மேலேயுள்ள மீள்கொடுப்பனவு அட்டவணையில் தரப்பட்டுள்ள விதத்தில் வருடாந்தம் இரண்டு தவணைகளில் இலங்கை மத்திய வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனைச் செலுத்த நாம் இத்தால் வாக்குறுதி வழங்குகிறோம்.

...............................................................................
திகதி

.........................................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

* அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டப் பெயருடன் சேர்த்து செயற்றிட்ட நோக்கத்தினைக் குறிப்பிடவும்

** 1ஆவது கடன், 2ஆவது கடன், 3ஆவது கடன் எனக் குறிப்பிடவும்

**இணைப்பு IV: வாக்குறுதிச் சான்றிதழ்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

(2018...... திகதியிடப்பட்ட ....... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ்)

திகதி:

**கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்**

ரூ. .................................................

கோரலின் பேரில் கீழே கையொப்பமிட்டுள்ள ........................................................................................................................................................................................................................................................................................................................................... (பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி) ஆகிய நாங்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு அல்லது கட்டளையின்படி கொழும்பில், பெறப்பட்ட பெறுமதியையும் இங்கே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து ஆண்டொன்றிற்கு .....................% வீதத்திலமைந்த அதற்கான வட்டியையும் சேர்த்து ரூபா .......................................................................................... (ரூ...................) இனைச் செலுத்த இத்தால் உறுதியளிக்கின்றோம்.

...............................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு

தலைமை அலுவலகம்

..............................

(முத்திரை)

1. .......................................................

2. .......................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

சாட்சிகள்:

1. ..........................................

2. ..........................................

**இணைப்பு V: வழங்கல் கடிதம்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

(2018...... திகதியிடப்பட்ட ....... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ்)

திகதி:

**வழங்கல் கடிதம்**

**சேரல்: இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை**

தங்களின் ..................... திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/ ............ இல் குறிப்பிடப்பட்டுள்ள **சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின்** கீழான ............. என்ற பெயரிலான மீள்நிதியிடல் திட்டத்திற்கு எங்களால் மேற்கொள்ளப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்நிதியிடல் நோக்கத்துடன் ரூபா............................................ (ரூ.............) இனை கடன் வழங்க உடன்பட்டுள்ளீர்கள் என்பதனைக் கவனத்தில் கொண்டு இத்தால் நாங்கள் தங்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் அதற்கான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தத்தக்க ரூபா................................................ இற்கான (ரூ..............) வாக்குறுதிச் சான்றிதழை வழங்குகின்றோம்.

கொடுப்பனவிற்கான சமர்ப்பித்தலை நாம் இத்தால் வலியுறுத்தாமல் விடுவதுடன் எமது குறிப்பிட்ட வாக்குறுதிச்சான்றிதழ் தொடர்பில் மறுப்பது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை என நாம் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

...............................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு, தலைமை அலுவலகம்

1. .......................................................

2. .......................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

**இணைப்பு VI**: சாட்டுதல் படிவம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

(.................... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

திகதி:

**நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்***

நாணய விதிச் சட்டத்தின் 88(அ) பிரிவின் நியதிகளில் ..........................................................................................................................................

..................................................................................................................................................................................................................(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி) ஆகிய நாங்கள் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி எமக்கு வழங்கப்பட்டுள்ள படுகடனை மீளச்செலுத்துவதற்கான பிணையாக/ மேலும் பிணையமாக வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட கடனை ஆண்டிற்கு .................... வட்டியுடன் ரூபா..........................................(ரூ..........) கொண்ட கடனை இலங்கை மத்திய வங்கிக்கு மீளச்செலுத்துவதற்கான சாட்டுதலை இத்தால் மேற்கொள்கிறோம்.

அட்டவணை

| படுகடன் தொகை (ரூ.) | கடன்பாட்டாளர் பெயர் மற்றும் முகவரி | திகதி | நொத்தாரிசு |
|---|---|---|---|
| | | | |

..................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு

தலைமை அலுவலகம்

* உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பயன்படுத்தப்படுவதற்கு மட்டும்.

**இணைப்பு** VII

**அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட மூலதனம், அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்கள் - சிறுஉடமையாளர் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் :

ஆண்டு மற்றும் மாதம் :

கடன் திட்டம் :

| அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட செயற்றிட்டத்தின் பெயர் | அந்தஸ்து பதிவு செய்யப்பட்டவை/ பகிர்ந்தளிக்கப்பட்டவை* | நன்மைபெறுநர்களின்/ துணைக் கடன்பாட்டாளர்களின் எண்ணிக்கை | | | மொத்தத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| | | | | | |
| | | | | | |

திகதி:

பதவி மற்றும் கையொப்பம்:

* தயவுசெய்து பதிவுசெய்யப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் தகவல்களைத் தனித்தனியாக அறிக்கையிடவும்

**இணைப்பு** VIII

**பகிர்ந்தளிப்புக் கடிதம்**

(2018......... திகதியிடப்பட்ட ............... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

வங்கியின் பெயர்:

வங்கியின் குறியீட்டு இல:

கிளையின் பெயர்:

கிளையின் குறியீட்டு இல:

கடனின் பதிவு இல:

திகதி:

பகிர்ந்தளிப்பு:

**.................... கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

விசாரணை இலக்கம்:

1. **கடன்பாட்டாளரின் விபரங்கள்** :

    1.1 கடன்பாட்டாளரின் பெயர் :

    1.2 கடன்பாட்டாளரின் முகவரி :

**2. கடனின் விபரங்கள்**

2.1 கடனின் நோக்கம் :

2.2 துணைச் செயற்றிட்டத்தின் அமைவிடம் :

2.3 ஒப்புதலளிக்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை: ஆரம்பத் தொகை ரூ.

அதிகரித்த செலவிற்காக பின்னர் அதிகரிக்கப்பட்ட கடன ரூ.

மொத்தம் ரூ.

2.4 மூலக் கடன் தொகைக்கு ஒப்புதலளித்த திகதி :

கடன் அதிகரிப்பிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திகதி :

2.5 மீள்நிதியிடல் விண்ணப்பிக்கப்பட்ட தவணைப் பணத்திற்கான மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்:

திகதி: தொகை (ரூ.):

2.6 வட்டி வீதம்

**3. கடனின் நிலை**

3.1 முன்னர் வழங்கப்பட்ட தொகை ரூ.

மற்றும் இ.ம. வங்கியிலிருந்து கோரப்பட்ட மீள்நிதியிடல்

3.2 தற்பொழுது வழங்கப்பட்ட தொகை ரூ.

மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற மீள்நிதியிடல்

மொத்தம் ரூ.

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: கிளை முகாமையாளரின் கையொப்பம்

கிளை முகாமையாளரின் பெயர்

பொருத்தமான கூட்டில் புள்ளடி அடையாளத்தினை இடுவதன் மூலம் இது 1ஆவது, 2ஆவது அல்லது எந்தத் தவணைக்குரியது என்பதனை தயவுசெய்து காட்டவும்.

**இணைப்பு IX- செயற்படாக் கடனின் நிலை**

**.............................. கடன் திட்டம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் :

உள்ளவாறு செயலாற்றம் :

(தொகை ரூ. '000)

| மாவட்டம் | .......... இல் உள்ளவாறு மொத்த வெளிநின்ற நிலுவை | | சிறப்பாகக் குறிப்பிடப்படல் | | கீழ்நிலைப் படுத்தப்பட்டது | | ஐயத்திற்குரியது | | இழப்பு | | மொத்த செயற்படாக் கடன் | செயற்படாக் கடன்* (%) | செயற்படாக் கடன்** (%) | செயற்படாக் கடன்*** (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

* இதே திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாகக் குறிப்பிட்ட மத்திய வங்கி கடன் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாகக் குறிப்பிட்ட இலங்கை மத்திய வங்கியின் கடன் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

*** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக வங்கியின் செயற்படாக் கடன்கள்

வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூ.மில்.) : ..............................................................................

வங்கியின் மொத்தச் செயற்படாக் கடன்கள் (ரூ.மில்.) : ..............................................................................

**அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி**

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எவ்/2018/01

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2018 ஏப்பிறல் 10

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

**சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகாலம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

**1. அறிமுகம்**

இலங்கை அரசாங்கம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் சம்மதத்துடன், முன்னர் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட வரண்ட வலய வாழ்வாதார ஆதரவு மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம், சிறுஉடமையாளர் பெருந்தோட்டம் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆகிய தொடர் கொடுகடன்களைப் பயன்படுத்தி, சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், திரட்டப்பட்ட சுழலும் நிதியமொன்றினை உருவாக்குவதற்கான ஒழுங்குகளைச் செய்திருக்கிறது. திரட்டப்பட்ட சுழலும் நிதியமானது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட அனைத்து முன்னைய மற்றும் தற்போதைய செயற்றிட்ட நன்மைபெறுநர்களினது கடன் கோரிக்கைக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும். சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் கூறு 2இன் நியதிகளில்: கிராமிய நிதியினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் துணைக்கூறு 2.1: அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமையின் நிதியிடல், 03 சுழலும் நிதியக் கடன் திட்டங்களான "சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதியம் பருவகால சுழலும் நிதியம் மற்றும் சுழலும் நிதியம் வருமான உருவாக்கத் திட்டம் என்பன திரட்டப்பட்ட சுழலும் நிதியத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சுழலும் நிதிய கடன் திட்டங்களின் கொடுகடன் கூறினை நடைமுறைப்படுத்தவுள்ளவிடத்து, சனாதிபதி செயலகம் தலைமை நிகழ்ச்சித்திட்ட முகவராக விளங்கும். சுழலும் நிதிய கடன் திட்டங்கள் சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களான குறிப்பிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட, தெரிவுசெய்யப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினூடாக நடைமுறைப்படுத்தப்படும். இலங்கை அரசாங்கம் திரட்டப்பட்ட சுழலும் நிதியத்திற்காக ஐ.அ.டொலர் பதினெட்டு மில்லியன் நானூற்று எழுபத்தைந்து ஆயிரம் (ஐ.அ.டொலர் 18,475,000) கொண்ட தொகையினை ஒதுக்கியுள்ளது.

**2. சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் குறிக்கோள்**

சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் முதன்மைக் குறிக்கோள் யாதெனில் வேளாண்மை உற்பத்திகளின் உற்பத்தியாக்கம் மற்றும் தரத்தினை அதிகரிப்பதும் அவ்வுற்பத்திகளின் பெறுமதிகளைக் கூட்டுவதுமேயாகும்.

சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் மற்றைய குறிக்கோள்கள் வருமாறு:

அ. வேளாண்மையாளர்களுக்கான கடனின் கொடுக்கல்வாங்கல் செலவினைக் குறைத்தல்.

ஆ. வேளாண்மையாளர்களின் சமூக நிலைமைகளை மேம்படுத்தல்.

இ. வேளாண்மையாளர்களை முறைசார்ந்த நிதியியல் முறைமைக்குள் கொண்டு வருவதன் மூலம் கிராமிய வேளாண்மையாளர்களிடையே நிதியியல் உள்ளீட்டினை உயர்த்துதல்.

ஈ. கிராமிய வேளாண்மையாளர்களிடையே பெறுமதிச் சங்கிலித் தொடர் சந்தைப்படுத்தலையும் இணைப்புக்களையும் அபிவிருத்தி செய்தல்.

உ. கிராமிய வேளாண்மையாளர்களுக்காக நவீன வேளாண்மை முறைகளின் தேர்ச்சிகளை அறிமுகப்படுத்தல்.

ஊ. வேளாண்மை உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் நாட்டின் மொ.உ.உற்பத்தி வளர்ச்சிக்குப் பங்களிப்பதற்கும் வேளாண்மையாளர்களை ஊக்குவித்தல்.

எ. அரச தனியார், உற்பத்தியாளர் பங்குடமை செயற்றிட்டங்கள் மூலமாக இளைஞர் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.

ஏ. ஏனைய வருமான உருவாக்க நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதன் மூலம் கிராமிய குடித்தொகை பாதிக்கப்படக் கூடியதன்மையினைக் குறைத்தல்.

ஐ. வேளாண்மையாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தினையும் சிக்கனத்தினையும் தூண்டுதல்.

ஒ. வேளாண்மை உற்பத்திகளையும் பெறுமதிகூட்டல்களையும் அதிகரிப்பதனூடாக வேளாண்மையாளர்களின் வீட்டலகுகளினது வருமானத்தினை அதிகரிப்பதன் வாயிலாக அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துதல்.

**3. தொழிற்பாட்டுப் பிரதேசங்கள்**

நிகழ்ச்சித்திட்டமானது தீவு முழுவதற்கும் நடைமுறைப்படுத்தப்படும்.

**4. தகைமையுடைய நடவடிக்கைகள்**

அ. அரச, தனியார் துறை, உற்பத்தியாளர், பங்குடமையின் கீழ் வெளிப்பயிர்ச் செய்கை வேளாண்மையாளர்களுக்காக மீண்டுவரும் பருவகால/ மூலதனக் கடன்கள்.

ஆ. வேளாண்மை, மீன்பிடி, விலங்குவளர்ப்பு, வர்த்தகம் மற்றும் பணிகள் போன்ற வருமான உருவாக்கக் கடன்கள், சிறுகைத்தொழில்கள் மற்றும் ஏனைய இலக்கிடப்பட்ட தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறுஉடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திச் செயற்றிட்டம், வரண்ட வலய நிகழ்ச்சித்திட்டம், பெண்கள், இளைஞர் உட்பட சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம், வேளாண்மை அமைப்புகள்/ உற்பத்திகள் அமைப்புக்கள், அடிமட்ட நிறுவனங்கள், தேயிலைத் தொழிற்சாலைகள், தேயிலை நாற்று மேடைகள் மற்றும் பண்ணை முகாமையாளர்கள் போன்றவற்றை உள்ளடக்கிய வேளாண்மைக் குழுக்கள்.

5. **துணைக் கடன் வகைகள்**

கொடுகடனுக்காக கடன்பெறுகைகளிலிருந்து வழங்கப்படுகின்ற துணைக் கடன் வகைகள் பின்வருமாறு:

அ. வேளாண்மையாளர்கள், வேளாண்மை அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் அரச, தனியார், உற்பத்தியாளர்கள் பங்குடமை ஒழுங்குகளின் கீழுள்ள தொழிலாளர்கள் குழுக்கள் என்பனவற்றிற்கான பருவகாலக் கடன்கள்.

ஆ. அரச, தனியார், உற்பத்தியாளர், பங்குடமை ஒழுங்குகளில் ஈடுபட்டுள்ள வேளாண்மையாளர்கள், வேளாண்மை அமைப்புக்கள்/ உற்பத்தயாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண்மைக் குழுக்கள்.

இ. சுழலும் நிதிய வருமான உருவாக்கத் திட்டங்கள்

6. **பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் அவற்றின் பொறுப்புக்களும்**

சுழலும் நிதியக் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீவிரமான வகிபாகமொன்றினை ஆற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்:

அ. சுழலும் நிதிய கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துதல்.

ஆ. கொடுகடன்களை வழங்குதல் மற்றும் அறவிடுதல் என்பனவற்றின் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளுதல்.

இ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எந்தவொரு கிளையும் இலக்கிடப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்கும் பொழுது எந்தவொரு சூழ்நிலையிலும் சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் கீழ் பிரிவு 7.0இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வீதத்திலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் வட்டியை விதிக்கக்கூடாது என்பதனை உறுதிப்படுத்துதல்.

ஈ. ஒவ்வொரு துணைச் செயற்றிட்டமும் சந்தைப்படுத்தல் நியதிகளில் பொருளாதார ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் ஆற்றலும் சாத்தியவளத்தன்மையினையும் கொண்டவை என்பதனையிட்டு திருப்திப்பட்டுக் கொள்ளுதல்.

உ. கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்

- பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றைய விடயங்களுடன் துணைக் கடன் மதிப்பீடுகள், ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் அறவிடல் என்பனவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளையும் பதிவுகளையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.
- கடன்பெறுகைகளின் பயன்படுத்தல் மற்றும் மீள்நிதியிடல் தொழிற்பாடுகளுக்காக தனியான கணக்குகளைப் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.
- பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினதும் சிறுஉடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினதும் (வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் சார்பில்) பரீட்சிப்பிற்காகவும் மீளாய்விற்காகவும் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் கிடைக்கச் செய்தல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படும் நேரத்தில் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊ. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதிவுசெய்தல் செயன்முறைகளையும் மீள்நிதியிடல் நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

7. **தகைமையுடைய நன்மைபெறுநர்கள்**

கீழே காட்டப்பட்டுள்ள தகைமையுடைய நன்மைபெறுநர்கள் உத்தேசச் செயற்றிட்டங்கள் சாதகமான காசுப்பாய்ச்சல்களையும் போதுமான மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் கொண்டிருக்கின்றமை என்பது தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களைத் திருப்திப்படுத்தக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

அ. தனியார் கம்பனிகளுடன் ஏற்கனவே அரச, தனியார், உற்பத்தியாளர், பங்குடமையுடன் இணைக்கப்பட்டுள்ள அரச, தனியார், உற்பத்தியாளர், பங்குடமையிலுள்ள வேளாண்மையாளர் மற்றும் இளைஞர்கள்.

ஆ. செயற்றிட்டப் பிரதேசங்களில் ஏற்கனவே வியாபாரங்களைக் கொண்டுள்ள மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களினால் நன்மைகளைப் பெற்றுள்ள தனிப்பட்டவர்கள்/ தனிப்பட்டவர்களைக் கொண்ட குழுமங்கள்.

இ. வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மகளிர், இளைஞர், வேளாண்மையாளர் அமைப்புக்கள், உற்பத்தியாளர் அமைப்புக்கள், வேளாண்மையாளர் குழுமங்கள் மற்றும் பண்ணை முகாமையாளர்கள்.

ஈ. சிறுஉடமையாளர் தேயிலை நாற்றுமேடைகள், தேயிலைத் தொழிற்சாலைகள், அடிமட்ட நிறுவனங்கள் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளின்.

8. **சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் முக்கிய பண்புகள்**

சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் முக்கிய பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பண்புகள் | சுழலும் நிதியம் - மூலதனக் கடன் | சுழலும் நிதியம் - பருவகாலக் கடன் | சுழலும் நிதியம் - வருமான உருவாக்கக் கடன்கள் |
|---|---|---|---|
| உயர்ந்தபட்சக் கடன் வரையறை | - அரச, தனியார், உற்பத்தியாளர் பங்குடமையின் கீழ் மீண்டும் மீண்டும் பயிரிடும் வெளிப்பயிர்ச்செய்கை வேளாண்மையாளர்களுக்கு ரூ.300,000.00 | ரூ.300,000.00 | - தனிப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு ரூ.300,000.00<br>- குழுமக் கடன்கள்/ குழும துணைக் கடன்பாட்டாளர்களுக்கு ரூ.25 மில்லியன் |

| | | | |
|---|---|---|---|
| தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்கள் மற்றும் துணைக் கடன் நடவடிக்கைகள் | - வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண்மையாளர் குழுமங்கள்<br>- பண்ணைச் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கும் பண்ணை உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றிற்கும் | - வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் அமைப்புக்கள்/ உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வேளாண்மையாளர் குழுமங்கள்<br>- விதைத் தயாரிப்பு, வளமாக்கிப் பயன்பாடு, உழுப்பொறிகளை வாடகைக்குப் பெறல், அறுவடை, கிணறுகளின் புனரமைப்பு போன்றவற்றிற்கான தொழிற்படு மூலதனமாகப் பயன்படுத்துவதற்கு | - தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறுஉடமையாளர் பெருந்தோட்டம் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், வரண்ட வலய வாழ்வாதார ஆதரவு மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் மற்றும் மகளிர், இளைஞர் உள்ளிட்ட சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமைய நிகழ்ச்சித்திட்டம், அடிமட்ட நிறுவனங்கள், தேயிலை தொழிற்சாலைகள், தேயிலை நாற்றுமேடைகள் மற்றும் பண்ணை முகாமையாளர் உள்ளிட்ட வேளாண்மையாளர் குழுமங்கள் |
| துணைக் கடன்பாட்டாளர் களினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தப்படத்தக்க வட்டி வீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் | ஆண்டிற்கு 6.5 சதவீதம் |
| பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்படத்தக்க வட்டி வீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் | ஆண்டிற்கு 3.0 சதவீதம் |
| சலுகைக் காலம் | செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளைப் பொறுத்து உயர்ந்தபட்சம் ஆறு (6) மாதங்கள் | சலுகைக்காலம் இல்லை | செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளைப் பொறுத்து உயர்ந்தபட்சம் ஆறு (6) மாதங்கள் |
| மீள்கொடுப்பனவுக் காலம் | முப்பத்தாறு (36) மாதங்களை விஞ்சக்கூடாது | பயிர்களின் விளைச்சலைத்தரும் காலம் மற்றும் வேளாண்மையாளர்களின் காசுப்பாய்ச்சல்கள் என்பனவற்றின் அடிப்படையில் 6 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்குமிடையில் வேறுபடலாம் | 36 மாதங்களை விஞ்சக்கூடாது |
| பிணைகள் | கம்பனிகளுக்கும் வேளாண்மையாளர்களுக்கும் அல்லது இரண்டு தனிப்பட்ட உத்தரவாதிகள் அல்லது வேளாண்மையாளர் குழுமத்திற்கான கம்பனி உத்தரவாதங்களுக்கிடையிலான மீண்டும் வாங்கும் உடன்படிக்கை | கம்பனிகளுக்கும் வேளாண்மையாளர்களுக்கும் அல்லது இரண்டு தனிப்பட்ட உத்தரவாதிகள் அல்லது வேளாண்மையாளர் குழுமத்திற்கான கம்பனி உத்தரவாதங்களுக்கிடையிலான மீண்டும் வாங்கும் உடன்படிக்கை | உள்ளக இரண்டு ஏனைய கடன்பாட்டாளர்கள் உத்தரவாதம் அல்லது இரண்டு குடும்ப உறுப்பினர்களின் உத்தரவாதங்கள் |

9. கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்

அ. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் கீழே பிரிவு 8இன் (ஆ) மற்றும் (இ) இல் தரப்பட்டவாறான சுழலும் நிதிய கடன் திட்டங்களின் கீழ் கடன்களைப் பெற விரும்பும் விண்ணப்பதாரிகளின் விபரங்களை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **இணைப்பு 1(அ) மற்றும் 1(ஆ)**இல் தரப்பட்டுள்ளவாறான கடன் பதிவுசெய்தல் படிவத்திலுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆ. தனிப்பட்ட கடன்பாட்டாளர்கள் மற்றும் வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் வேளாண்மையாளர் குழுமம் இரண்டினையும் பொறுத்தவரையில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனம், ஒவ்வொரு கடன்பாட்டாளர்கள் தொடர்பிலும் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் இணைப்பு 1(அ) இனை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

இ கடன்பாட்டாளர்கள், வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமமாக இருக்குமிடத்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் ஒவ்வொரு வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமத்திற்கும் இணைப்பு 1(அ) இனைத் தனித்தனியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஈ. செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு தேவையான பின்னணி மதிப்பீடுகளை மேற்கொண்ட பின்னர் விண்ணப்பதாரிகள் அல்லது குழுமத்தின் பட்டியலை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு விதந்துரைக்கும்.

**10. ஆவணங்களின் கட்டுக்காப்பு**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம்/ கிளை, கொடுகடன் தொடரின் [**இணைப்பு 1(அ)**] பூர்த்தி செய்யப்பட்ட பயன்பெறுநரின் விண்ணப்பப் படிவத்தினை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அல்லது செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு கேட்டுக்கொள்ளும் நேரத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம், பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் ஏக தற்றுணிபின்படி, பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொடர்பான ஏனைய ஆவணங்களையும் வைத்திருக்கலாம்.

**11. மீள்நிதியிடல் நடைமுறை**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட்ட அனைத்துத் துணைக் கடன்களுக்கும் இலங்கை மத்திய வங்கி 100 சதவீத மீள்நிதியிடலை வழங்கும்.

அ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியுடனான பதிவினைத் தொடர்ந்து 90 நாட்களுக்குள் பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்களுக்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்களை விடுவித்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஏதேனும் கடன்களைப் பகிர்ந்தளிக்க முடியாவிடின் அது பற்றி ஏதேனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுடன் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் அறிவித்தல் வேண்டும். செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தாமதத்திற்காக தெரிவிக்கப்பட்ட காரணங்களைப் பரிசீலனையில் கொண்டு பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்கள் தொடர்பில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கடன்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்குத் தவறுமிடத்து அல்லது 90 நாட்களுக்குள் சரியான காரணங்களை வழங்கத் தவறுமிடத்து 90 நாட் காலப்பகுதி கடந்த பின்னர் 14 நாட்களுக்குள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் இரத்துச் செய்யப்படுவதற்குட்பட்டதாகும்.

ஆ. துணைக் கடன்களை விடுவித்ததன் பின்னர் சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மீள்நிதியிடலுக்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு மீள்நிதியிடல் விண்ணப்பத்துடனும் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

i. மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் - இணைப்பு II
ii. மீள்நிதியிடலுக்கான பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று விண்ணப்பம் - இணைப்பு III
iii. கோரிக்கையின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ் - இணைப்பு IV
iv. வழங்கல் குறிப்பு - இணைப்பு V
v. இலங்கை மத்திய வங்கிக்கு உத்தரவாதமளிப்பதன் மூலம் வழங்கப்படுகின்ற சாட்டுதல் படிவம் - இணைப்பு VI
vi. பகிர்ந்தளிப்புக் கடிதம் - இணைப்பு VII

இ. மீள்நிதியிடல் விண்ணப்பப் படிவத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டதும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள்நிதியிடல் விண்ணப்பத்திற்கு ஒப்புதலளிப்பதுடன், சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் முதல் வந்தது முதலில் என்ற முறையில் அவை கிடைக்கப் பெற்றதன் ஒழுங்கில், நிதியின் கிடைப்பனவினைப் பொறுத்து மீள்நிதியிடலை விடுவிக்கும்.

ஈ. மீள்நிதியிடல் கோரல்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாகப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

உ. மீள்நிதியிடல் கடன்கள் மீதான மூலதனம் மற்றும் வட்டி கொடுப்பனவுகளைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மீள்கொடுப்பனவு அட்டவணைக்கிணங்க இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

**12. கடன்களை அறவிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மூலதனம் மற்றும் வட்டி என்பன அரையாண்டிற்கொரு முறை ஒவ்வொரு ஆண்டும் அதாவது யூன் 30ஆம் திகதியும் திசெம்பர் 31ஆம் திகதியும் அறவிடப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் சாதன வகைக்கிணங்க மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.

- வெளிப்பயிர்ச்செய்கை வேளாண்மையாளர் மூலதன முதலீடு - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் சாதனத்தின் கீழ், உயர்ந்தபட்சம் 36 மாதங்களில் இலங்கை மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.
- உள்ளீட்டு (பருவகால) கடன் திட்டம் - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் சாதனத்தின் கீழ், உயர்ந்தபட்சம் 12 மாதங்களில் இலங்கை மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.
- வருமான உருவாக்க கடன் திட்டம் - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இக்கடன் சாதனத்தின் கீழ், உயர்ந்தபட்சம் 36 மாதங்களில் இலங்கை மத்திய வங்கிக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்

**13. அறிக்கையிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இணைப்பு VIII இல் உள்ளவாறு கடப்பாடுகள், பகிர்ந்தளித்தல் மற்றும் மீள்நிதியிடல் கடன் விபரங்களை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக, செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கான பிரதியொன்றுடன் மாதாந்த அறிக்கையினை இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இணைப்பு IX இல் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்பட்ட துணைக் கடன்களின் செயற்படாக் கடன்களின் நிலையினைக் காலாண்டு அடிப்படையில் அறிவித்தல் வேண்டும்.

14. **கணக்குகளை கணக்காய்வு செய்தல்**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சுழலும் நிதியக் கடன் திட்டங்களின் ஆண்டு நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் அத்தகைய நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்காய்வு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியியல் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

தேவையான வேளையில் தேவையானவாறு சுழலும் நிதிய கடன் திட்டங்கள் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் திருத்துகின்ற உரிமையினை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள
திருமதி. டி.வி.எஸ் தயாவன்ச
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு I (அ): தனிப்பட்ட நன்மைபெறுநர் விண்ணப்பம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்: இலங்கை மத்திய வங்கி நன்மைபெறுநரின் பதிவு இல.: ......

**தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான கடன் பதிவுசெய்தல் விண்ணப்பம் - சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்**

**(சுழலும் நிதியம் ............................................ கடன் திட்டம்)**

கிளையின் பெயர் : மாவட்டம்:

கிளையின் முகவரி :

1. செயற்றிட்டம் :

2. விண்ணப்பதாரி/ தாரிகளின் அந்தஸ்து :

அ. கம்பனியின் தனிப்பட்டவர்/ வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமம் ☐

ஆ. வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமம் ☐

இ. வருமான உருவாக்கம் ☐

3. பங்கேற்கும் கம்பனி/ வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்திகளின் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமத்தின் பெயர்:

4. கம்பனி/ வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்திகளின் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமத்தின் தொலைபேசி/ தொலைநகல் இல. :

5. கம்பனி/ வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்திகளின் அமைப்பு/ வேளாண்மையாளர் குழும பதிவு

அ. சட்ட ரீதியான அதிகாரியின் பெயர் :

ஆ. இலக்கம் :

6. விண்ணப்பதாரி/ தாரிகளின் பெயர் மற்றும் முகவரி :

| பெயர்* | முகவரி | தொடர்பு இலக்கம் | தே.அ.அ./ பதிவு இலக்கம் | பால் |
|---|---|---|---|---|
| i. | | | | |
| ii. (எவரேனும் கூட்டு கடன்பாட்டாளர் இருப்பின்) | | | | |
| iii. (எவரேனும் கூட்டு கடன்பாட்டாளர் இருப்பின்) | | | | |

*கடன்பாட்டாளர்கள் வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமமாக இருக்குமிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமத்தின் தொடர்பான இரண்டு அலுவலர்களின் விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. கடனின் நோக்கம்:

..........................................................................................................................

8. முன்னர் பெறப்பட்ட கடன்கள் அல்லது தற்பொழுது சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயன்முறைப்படுத்தப்பட்டுவரும் கடன்கள் (தேவையாயின் மேலும் நிரல்களை அதிகரித்துக் கொள்ளவும்).

| கடன் திட்டம் | நோக்கம் | தொகை (ரூ.) | குறிப்புக்கள் |
|---|---|---|---|
| அரச, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை மூலதனம் | | | |
| அரச, தனியார் உற்பத்தியாளர் பங்குடமை பருவகாலம் | | | |
| வருமான உருவாக்கம் | | | |

9. செயற்றிட்ட இடம் மற்றும் அமைவிடத்தின் முழுமையான முகவரி:

..........................................................................................................................

10. வியாபாரத்தின்/ சிறுதொழில்முயற்சிகளின் வகை: ..........................................................................................................................

11. கடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்படவுள்ள வியாபாரம்/ சிறுதொழில்முயற்சிகள் பற்றிய சுருக்கமான விபரணம்:

..........................................................................................................................

12 செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு: ரூ. ..........

13. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை: ரூ. ..........

.......... ..........

நன்மைபெறுநரின் பெயர் மற்றும் கையொப்பம் — அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம் மற்றும் அலுவலக இறப்பர் முத்திரை

திகதி: ..........

**இணைப்பு I (ஆ): சுழலும் நிதிய கடன் திட்டம் - சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமைகள் நிகழ்ச்சித்திட்டம்**

**துணைக் கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்**

**(கடன் திட்டத்தின் பெயர்)**

விண்ணப்ப இலக்கம்: ..........

சேரல் : இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை

ஊடாக: சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமைகள் நிகழ்சித்திட்டம் - செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் பிரிவு

பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர்: கம்பனி/ வேளாண்மையாளர் அமைப்பு/ உற்பத்தியாளர் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமத்தின் பெயர்:

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளையின் பெயர்: கடன்பாட்டாளரின் அந்தஸ்து (தனிப்பட்டவர்/ குழுமம்):

| சூ | விண்ணப்பதாரியின் பெயர் | விண்ணப்பதாரியின் முகவரி மற்றும் தொடர்பு இலக்கம் | பால் | தே.அ. அட்டை | கடன் விபரங்கள் | | | இ.ம.வங்கியின் பதிவு இலக்கம்மூ |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செயற்றிட்டத்தின் பெயர் | நோக்கம் | தொகை | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் என்னால்/ வங்கியின் கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டன எனவும் அவை சிறுஉடமையாளர் வேளாண் வியாபார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதியிடப்படுவதற்குத் தகைமையுடையன எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

.......... ..........

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை) — திகதி

* இலங்கை மத்திய வங்கியின் உபயோகத்திற்கு மாத்திரம்

**இணைப்பு II**

**மீள்நிதியிடல் விண்ணப்பம்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ..........

(.......... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

முகவரி:

திகதி:

**மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் -**

**சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான சுழலும் நிதியம் ......... கடன் திட்டம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை

கனவான்களே

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மற்றும் அபிவிருத்தி வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி/ நுண்பாக நிதி நிறுவனங்கள் மற்றும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தப்பட்ட எங்கள் யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் .......... .......... (பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) மேற்குறிப்பிட்ட மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூபா.......... ....... (ரூ..........) கொண்ட கடனைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் 2017.08.08 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. .......... இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் **சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின்** சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகாலம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டத்தின் கீழ் 2018 ........... ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்கும் எங்களுக்குமிடையிலான துணைக் கடன் உடன்படிக்கைக்கும் இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட நீட் திட்டத்தின் கீழ் எங்களால் வழங்கப்பட்ட கடன்களின் கூற்றினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மீள்நிதியிடல் கடனுக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. பின்வருவன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகிறோம். (i) மேலே பந்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மேற்குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் தகைமையுடைய செயற்றிட்டங்களுக்காகத் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. (ii) அத்தகைய கடன்கள் தொடர்பான கடன்பாட்டாளர்களின் கடன்பாட்டு அதிகாரங்களுக்குள் காணப்படுகின்றன. (iii) அத்தகைய கடன்களின் மீள்கொடுப்பனவிற்காகப் பெறப்பட்ட உத்தரவாதங்களைப் பொறுத்தவரை உத்தரவாதிகள் அத்தகைய உத்தரவாதங்களை வழங்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றனர் என்பன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளோம் என்பது பற்றி இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/(கள்) இன் கையொப்பம், பெயர் மற்றும் விபரம்**

**முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு**

**இணைப்பு III: மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம்:**

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ........................

**சுழலும் நிதிய ............................ கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

**(சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்)**

சேரல் : இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை

இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு: ..................................

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : ............................................. கிளை: ........................... மாவட்டம்: ......................

| பதிவு இல. | கடன் பாட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தே.அ.அ இல. | கடன் வகை | கடனின் நோக்கம்* | துணைக் கடன் தொகை | | பகிர்ந் தளிப்புத் திகதி | மீள்நிதியிடல் எதிர்பார்க்கப்படு பனவற்றிற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை | | சலுகைக் காலம் | மீள்கொடுப்பனவு அட்டவணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கடன் சுழற்சி ** | தொகை (ரூ.) | | | | | தவணைகள் | | முதல் தவணைக்குரிய திகதி | இறுதித் தவணைக்கான திகதி |
| | | | | | | | | தவணைகளின் எண். | தொகை (ரூ.) | | எண். | பெறு மதி | | |
| | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | |

இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையிலான மீள்நிதியிடல் உடன்படிக்கையில் இணங்கப்பட்டவாறு, மேலேயுள்ள மீள்கொடுப்பனவு அட்டவணையில் தரப்பட்டுள்ள விதத்தில் வருடாந்தம் இரண்டு தவணைகளில் இலங்கை மத்திய வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனைச் செலுத்த நாம் இத்தால் வாக்குறுதி வழங்குகிறோம்.

............................................. ........................................................................

திகதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

* அரச தனியார் உற்பத்தியாளர் பங்குடமை பெயருடன் சேர்த்து செயற்றிட்ட நோக்கத்தினைக் குறிப்பிடவும்

** 1ஆவது கடன், 2ஆவது கடன், 3ஆவது கடன் எனக் குறிப்பிடவும்

**இணைப்பு IV: வாக்குறுதிச் சான்றிதழ்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

(2018......... திகதியிடப்பட்ட ............ இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

திகதி:

**கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்**

ரூ. .................................................

கோரலின் பேரில் கீழே கையொப்பமிட்டுள்ள ........................................................................................................................................................................................................ (பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி) ஆகிய நாங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அல்லது கட்டளையின்படி கொழும்பில், பெறப்பட்ட பெறுமதியையும் இங்கே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து ஆண்டொன்றிற்கு ......................% வீதத்திலமைந்த அதற்கான வட்டியையும் சேர்த்து ரூபா ................................ ......................................................... (ரூ....................) இனைச் செலுத்த இத்தால் உறுதியளிக்கின்றோம்.

.................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு

தலைமை அலுவலகம்

...............................

(முத்திரை)

1. .......................................................

2. .......................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

சாட்சிகள்

1. ..........................................

2. ..........................................

**இணைப்பு V: வழங்கல் கடிதம்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

(2018......... திகதியிடப்பட்ட ............ இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

திகதி:

**வழங்கல் கடிதம்**

**சேரல்: இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை**

தங்களின் ...................... திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/ ............. இல் குறிப்பிடப்பட்டுள்ள சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான **சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகாலம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்கக் கடன் திட்டம்** என்ற பெயரிலான மீள்நிதியிடல் திட்டத்திற்கு எங்களால் மேற்கொள்ளப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்நிதியிடல் நோக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு ரூபா............................................ (ரூ..............) இனை வழங்க உடன்பட்டுள்ளீர்கள். இத்தால் நாங்கள் தங்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் அதற்கான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தத்தக்க ரூபா................................................ இற்கான (ரூ...............) வாக்குறுதிச் சான்றிதழை வழங்குகின்றோம்.

கொடுப்பனவிற்கான சமர்ப்பித்தலை நாம் இத்தால் வலியுறுத்தாமல் விடுவதுடன் எமது குறிப்பிட்ட வாக்குறுதிச்சான்றிதழ் தொடர்பில் மறுப்பது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை என நாம் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு, தலைமை அலுவலகம்

1. .......................................................

2. .......................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்

**இணைப்பு VI: சாட்டுதல் படிவம்**

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- .........................................................

(2018......... திகதியிடப்பட்ட ............ இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

திகதி:

**நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்***

நாணய விதிச் சட்டத்தின் 88(அ) பிரிவின் நியதிகளில் ..................................................................................................................................................................................................................(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி) ஆகிய நாங்கள் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி எமக்கு

வழங்கப்பட்டுள்ள படுகடனை மீளச்செலுத்துவதற்கான பிணையாக/ மேலும் பிணையமாக வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட கடனை ஆண்டிற்கு ................... வட்டியுடன் ரூபா.........................................(ரூ..........) கொண்ட கடனை மீளச்செலுத்துவதற்கான சாட்டுதலை இத்தால் மேற்கொள்கிறோம்.

அட்டவணை

| படுகடன் தொகை (ரூ.) | கடன்பாட்டாளர் பெயர் மற்றும் முகவரி | திகதி | நொத்தாரிசு |
|---|---|---|---|
| | | | |
| | | | |

...............................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு, தலைமை அலுவலகம்

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பயன்படுத்தப்படுவதற்கு மட்டும்.

**இணைப்பு VII: பகிர்ந்தளிப்புக் கடிதம்**

**அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட மூலதனம், அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்கள் - சிறுஉடமையாளர் உற்பத்தியாளர் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடல்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் :

ஆண்டு மற்றும் மாதம் :

கடன் திட்டம் :

| அரசாங்க தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட செயற்றிட்டத்தின் பெயர் | அந்தஸ்து பதிவு செய்யப்பட்டவை/ பகிர்ந்தளிக்கப்பட்டவை* | நன்மைபெறுநர்களின்/ துணைக் கடன்பாட்டாளர்களின் எண்ணிக்கை | | | மொத்தத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| | | | | | |
| | | | | | |

திகதி:

பதவி மற்றும் கையொப்பம்:

* தயவுசெய்து பதிவுசெய்யப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் தகவல்களைத் தனித்தனியாக அறிக்கையிடவும்

**இணைப்பு VIII**

**பகிர்ந்தளிப்புக் கடிதம்**

(2018......... திகதியிடப்பட்ட ............... இலக்கம் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ்)

வங்கியின் பெயர்:

வங்கியின் குறியீட்டு இல:

கிளையின் பெயர்:

கிளையின் குறியீட்டு இல:

கடனின் பதிவு இல:

திகதி:

பகிர்ந்தளிப்பு:

**சுழலும் நிதியம் ............ கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

விசாரணை இலக்கம்:

1. **கடன்பாட்டாளரின் விபரங்கள்** :
   1.1 கடன்பாட்டாளரின் பெயர் :
   1.2 கடன்பாட்டாளரின் முகவரி :
2. **நன்மைபெறுநர் வேளாண்மை அமைப்பு/ உற்பத்தியின் அமைப்பு/ வேளாண்மையாளர் குழுமமாக இருக்குமிடத்து, தொடர்பான பொறுப்பு வாய்ந்த அதிகாரி:**

2.1 பெயர் :

2.2 முகவரி :

**3. கடனின் விபரங்கள்**

3.1 கடனின் நோக்கம் :

3.2 துணைச் செயற்றிட்டத்தின் அமைவிடம் :

3.3 ஒப்புதலளிக்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை: ஆரம்பத் தொகை ரூ.

அதிகரித்த செலவிற்காக பின்னர் அதிகரிக்கப்பட்ட கடன் ரூ.

மொத்தம் ரூ.

3.4 மூலக் கடன் தொகைக்கு ஒப்புதலளித்த திகதி :

கடன் அதிகரிப்பிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திகதி :

3.5 மீள்நிதியிடல் விண்ணப்பிக்கப்பட்ட தவணைப் பணத்திற்கான மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்:

திகதி: தொகை (ரூ.):

3.6 வட்டி வீதம்:

**4. கடனின் நிலை**

4.1 முன்னர் வழங்கப்பட்ட தொகை மற்றும் இ.ம. வங்கியிலிருந்து கோரப்பட்ட மீள்நிதியிடல் ரூ.

4.2 தற்பொழுது வழங்கப்பட்ட தொகை மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற மீள்நிதியிடல் ரூ.

மொத்தம் ரூ.

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: கிளை முகாமையாளரின் கையொப்பம்

கிளை முகாமையாளரின் பெயர்

பொருத்தமான கூட்டில் புள்ளடி அடையாளத்தினை இடுவதன் மூலம் இது 1ஆவது, 2ஆவது அல்லது எந்தத் தவணைக்குரியது என்பதனை தயவுசெய்து காட்டவும்.

**இணைப்பு IX: செயற்படாக் கடனின் நிலை**

**சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகால மற்றும் வருமான உருவாக்கக் கடன் திட்டம்**
**(சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்)**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்:

........................... இறுதியின் காலாண்டிலுள்ளவாறு ...................... கடன்களின் செயலாற்றம்

(தொகை ரூ. '000)

| மாவட்டம் | .......... இல் உள்ளவாறு மொத்த வெளிநின்ற நிலுவை | | சிறப்பாகக் குறிப்பிடப்படல் | | கீழ்நிலைப் படுத்தப்பட்டது | | ஐயத்திற்குரியது | | இழப்பு | | மொத்த செயற்படாக் கடன் | செயற்படாக் கடன்* (%) | செயற்படாக் கடன் ** (%) | செயற்படாக் கடன் *** (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

* இதே திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாகக் குறிப்பிட்ட மத்திய வங்கி கடன் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாகக் குறிப்பிட்ட இலங்கை மத்திய வங்கியின் கடன் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்

*** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக வங்கியின் செயற்படாக் கடன்கள்

வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூ.மில்.) : ..............................................................................

வங்கியின் மொத்தச் செயற்படாக் கடன்கள் (ரூ.மில்.) : ..............................................................................

**அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 (திருத்தம் - 01)** 2018 திசெம்பர் 05

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/அம்மணி

**சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4 பங்குடமை மூலதனம், 4 பங்குடமை பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலான திருத்தங்கள்**

சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4 பங்குடமை மூலதனம், 4 பங்குடமை பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களில் பங்குபற்றுகின்ற அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கும் 10.04.2018 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 ஆனது இணைப்பு Iஇல் உள்ளவாறு திருத்தியமைக்கப்படுகிறது என அறிவுறுத்தப்படுகிறது.

**கடன் திட்டத்தில் ஏனைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமடையவில்லை.**

திருத்தப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 05.12.2018 முதல் அமுலுக்கு வரும்.

உங்களுடைய வங்கி கிளைகளிலுள்ள குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு திருத்தப்பட்ட உள்ளடக்கங்கள் சம்பந்தமாக அறியத்தரும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி. டி.வி.எஸ். தயாவன்ச

**பணிப்பாளர்/பிரதேச அபிவிருத்தி**

பிரதி: கலாநிதி (திருமதி) யசந்த மாபதுன்ன, செயற்றிட்டப் பணிப்பாளர்,
சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டம்

**இணைப்பு** I

1. சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (4 பங்குடமை நிகழ்ச்சித்திட்டங்கள்) 4 பங்குடமை மூலதனம், 4 பங்குடமை பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **பகுதி 8இல்** குறிப்பிடப்பட்டுள்ள சலுகைக் காலம் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

| **அமைப்பு** | **4 பங்குடமை கடன் திட்டம்** | **4 பங்குடமை பருவகால கடன் திட்டம்** | **இளைஞர் கடன் திட்டம்** |
|---|---|---|---|
| சலுகைக் காலம்* | (i) செயற்றிட்டத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் உயர்ந்த பட்சம் ஆறு (6) மாதங்கள் | (i) (அ) ஒரே தடவையில் மீளச்செலுத்துகை செய்யக்கூடிய துணை கடன்பாட்டாளர்கள் உயர்ந்த பட்சம் பதினெட்டு (18) மாத காலம்<br>(ஆ) மாதாந்த மீளச்செலுத்துகை அடிப்படையில் செலுத்தக்கூடிய துணை கடன்பாட்டாளர்களுக்கு உயர்ந்தபட்சம் ஆறுமாத (6) காலம்<br>(ii) சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ அலகு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனையுடன் குறிப்பிட்ட பங்குபற்றும் நிதி நிறுவனங்களாலும், தேவைப்படும் போது செயற்றிட்ட முகாமைத்துவ அலகினால் மதிப்பீடு செய்யப்பட்ட 4 பங்குடமை செயற்றிட்டத்தில் குறிப்பிட்டவாறு பயிர்களின் முதலாவது விளைச்சலைத் தரும் காலத்தின் வகையின் அடிப்படையிலும் சலுகை காலம் தீர்மானிக்கப்படும்.<br>(iii) இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய அனைத்துமுள்ளடக்கிய கிராமிய கடன்திட்டத்தின் பயிர்களின் பட்டியல் மற்றும் சார்பான சலுகைக் காலங்கள் என்பன இந்த திட்டத்தின் சலுகைக் காலத்தினைத் தீர்மானிப்பதற்கு வழிகாட்டியாக அமையும். (இணைப்பு I (அ) | (i) செயற்றிட்டத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் உயர்ந்த பட்சம் ஆறு (6) மாதங்கள் |

* துணைக் கடன்பாட்டாளர்கள் சலுகைக் காலத்தில் வட்டியினை செலுத்துதல் அவசியம்.

2. சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (4 பங்குடமை நிகழ்ச்சித் திட்டங்கள்) 4 பங்குடமை மூலதனம், 4 பங்குடமை பருவகாலம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **பகுதி 8இல்** குறிப்பிடப்பட்டுள்ள மீள்கொடுப்பனவுக் காலம் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

| அமைப்பு | 4 பங்குடமை கடன் திட்டம் | 4 பங்குடமை பருவகால கடன் திட்டம் | இளைஞர் கடன் திட்டம் |
|---|---|---|---|
| மீள்கொடுப்பனவுக் காலம் | முப்பத்தி ஆறு (36) மாத காலப்பகுதியினை விஞ்சலாகாது | (i) (அ) ஒரே தடவையில் மீளச்செலுத்துகை செய்யக்கூடிய துணை கடன்பாட்டாளர்கள் உயர்ந்த பட்சம் பதினெட்டு (18) மாத காலம்<br>(ஆ) மாதாந்த மீளச்செலுத்துகை அடிப்படையில் செலுத்தக்கூடிய துணை கடன்பாட்டாளர்களுக்குச் சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்சம் முப்பது (30) மாதகாலம்<br>(ii) சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்றிட்ட முகாமைத்துவ அலகு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனையுடன் குறிப்பிட்ட பங்குபற்றும் நிதி நிறுவனங்களாலும், தேவைப்படும் போது செயற்றிட்ட முகாமைத்துவ அலகினால் மதிப்பீடு செய்யப்பட்ட 4 பங்குடமை செயற்றிட்டத்தில் குறிப்பிட்டவாறு பயிர்களின் முதலாவது விளைச்சலைத் தரும் காலத்தின் வகையின் அடிப்படையிலும் மீள்கொடுப்பனவுக் காலம் தீர்மானிக்கப்படும்.<br>iii) இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய அனைத்துமுள்ளடக்கிய கிராமிய கடன்திட்டத்தின் பயிர்களின் பட்டியல் மற்றும் சார்பான சலுகைக் காலங்கள் என்பன இந்த திட்டத்தின் சலுகைக் காலத்தினைத் தீர்மானிப்பதற்கு வழிகாட்டியாக அமையும். (இணைப்பு I (அ)) | அறுபது (60) மாத காலப்பகுதியினை விஞ்சலாகாது |

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எப்/2018/01 (திருத்தம் - 01)** 2018 திசெம்பர் 05

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/அம்மணி

**சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய கடன் திட்டம், சுழலும் நிதிய பருவகால கடன் திட்டம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலான திருத்தங்கள்**

சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய கடன் திட்டம், சுழலும் நிதிய பருவகால கடன் திட்டம், சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டம் மற்றும் இளைஞர் கடன் திட்டங்களில் பங்குபற்றுகின்ற அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கும் 10.04.2018 திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எப்/2018/01 இணைப்பு Iஇல் உள்ளவாறு திருத்தியமைக்கப்படுகிறது என அறிவுறுத்தப்படுகிறது.

**கடன் திட்டத்தில் ஏனைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமடையவில்லை.**

திருத்தப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 05.12.2018 முதல் அமுலுக்கு வரும்.

உங்களுடைய வங்கி கிளைகளிலுள்ள குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு திருத்தப்பட்ட உள்ளடக்கங்கள் சம்பந்தமாக அறியத்தரும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி. டி.வி.எஸ். தயாவன்ச

**பணிப்பாளர்/பிரதேச அபிவிருத்தி**

பிரதி: கலாநிதி (திருமதி) யசந்த மாபதுன்ன, செயற்றிட்டப் பணிப்பாளர்,
சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டம்

**இணைப்பு** I

1. சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழலும் நிதியமூலதனம், சுழலும் நிதிய பருவகாலம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டங்களுக்கான (சுழலும் நிதிய கடன் திட்டங்கள்) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **பகுதி 4 (அ)** ஆனது நீக்கப்பட்டு பின்வருமாறு பிரதியீடு செய்யப்படுதல் வேண்டும்.

   "4 பங்குடமை திட்டத்தின் கீழ் வெளிப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான பருவகாலம்/மூலதன கடன்கள்"

2.1 சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகாலம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **பகுதி 8இல்** குறிப்பிடப்பட்டுள்ள சலுகை காலம் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

| அமைப்பு | சுழலும் நிதியக் கடன் திட்டம் | சுழலும் நிதிய பருவகால கடன் திட்டம் | சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டம் |
|---|---|---|---|
| சலுகைக் காலம்* | (i) செயற்றிட்டத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் உயர்ந்த பட்சம் ஆறு (6) மாதங்கள் | (i) (அ) ஒரே தடவையில் மீளச்செலுத்துகை செய்யக்கூடிய துணை கடன்பாட்டாளர்கள் உயர்ந்த பட்சம் பதினெட்டு (18) மாத காலம்<br>(ஆ) மாதாந்த மீளச்செலுத்துகை அடிப்படையில் செலுத்தக்கூடிய துணை கடன்பாட்டாளர்களுக்கு உயர்ந்தபட்சம் ஆறுமாத (6) காலம்<br>(ii) சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ அலகு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனையுடன் குறிப்பிட்ட பங்குபற்றும் நிதி நிறுவனங்களாலும், தேவைப்படும் போது செயற்றிட்ட முகாமைத்துவ அலகினால் மதிப்பீடு செய்யப்பட்ட 4 பங்குடமை செயற்றிட்டத்தில் குறிப்பிட்டவாறு பயிர்களின் முதலாவது விளைச்சலைத் தரும் காலத்தின் வகையின் அடிப்படையிலும் சலுகை காலம் தீர்மானிக்கப்படும்.<br>(iii) இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய அனைத்துமுள்ளடக்கிய கிராமிய கடன்திட்டத்தின் பயிர்களின் பட்டியல் மற்றும் சார்பான சலுகைக் காலங்கள் என்பன இந்த திட்டத்தின் சலுகைக் காலத்தினைத் தீர்மானிப்பதற்கு வழிகாட்டியாக அமையும். (இணைப்பு I (அ)<br>iv) துணைக் கடன்பாட்டாளர்கள் சலுகைக் காலத்தில் வட்டியினை செலுத்துதல் அவசியம் | (i) செயற்றிட்டத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் உயர்ந்த பட்சம் ஆறு (6) மாதங்கள் |

* துணைக் கடன்பாட்டாளர்கள் சலுகைக் காலத்தில் வட்டியினை செலுத்துதல் அவசியம்.

2.2 சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய மூலதனம், சுழலும் நிதிய பருவகாலம் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் **பகுதி8இல்** குறிப்பிடப்பட்டுள்ள மீள்கொடுப்பனவுக் காலம் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

| அமைப்பு | சுழலும் நிதியக் கடன் திட்டம் | சுழலும் நிதிய பருவகால கடன் திட்டம் | சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டம் |
|---|---|---|---|
| மீள்கொடுப்பனவுக் காலம் | முப்பத்தி ஆறு (36) மாத காலப்பகுதியினை விஞ்சலாகாது | (i) (அ) ஒரே தடவையில் மீளச்செலுத்துகை செய்யக்கூடிய துணை கடன்பாட்டாளர்கள் உயர்ந்த பட்சம் பதினெட்டு (18) மாத காலம்<br>(ஆ) மாதாந்த மீளச்செலுத்துகை அடிப்படையில் செலுத்தக்கூடிய துணை கடன்பாட்டாளர்களுக்குச் சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்சம் முப்பது (30) மாதகாலம்<br>(ii) சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்றிட்ட முகாமைத்துவ அலகு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனையுடன் குறிப்பிட்ட பங்குபற்றும் நிதி நிறுவனங்களாலும், தேவைப்படும் போது செயற்றிட்ட முகாமைத்துவ அலகினால் மதிப்பீடு செய்யப்பட்ட 4 பங்குடமை செயற்றிட்டத்தில் குறிப்பிட்டவாறு பயிர்களின் முதலாவது விளைச்சலைத் தரும் காலத்தின் வகையின் அடிப்படையிலும் மீள்கொடுப்பனவுக் காலம் தீர்மானிக்கப்படும்.<br>iii) இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய அனைத்துமுள்ளடக்கிய கிராமிய கடன்திட்டத்தின் பயிர்களின் பட்டியல் மற்றும் சார்பான சலுகைக் காலங்கள் என்பன இந்த திட்டத்தின் சலுகைக் காலத்தினைத் தீர்மானிப்பதற்கு வழிகாட்டியாக அமையும். (இணைப்பு I (அ)) | செயற்றிட்டத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் உயர்ந்த பட்சம் முப்பத்தி ஆறு (36) மாதங்கள் |

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 01ஆம் இலக்கம்** 2018 சனவரி 16

**நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளின்படி, நாணயச் சபை நிதியியல் வாடிக்கையாளர்களின் உரிமைகளினதும் நலவுரித்துக்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்தில் அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் பணிப்புரைகளை விடுக்கின்றது.

1. ஏற்புடைத்தன்மையும் செயற்பரப்பும்

1.1 ஒவ்வொரு உரிமம் பெற்ற நிதிக் கம்பனியும் இப்பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினைப் பின்பற்றுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இப்பணிப்புரைகளின் குறிக்கோள் யாதெனில் வாடிக்கையாளர் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதும் இத்துறையின் உறுதிப்பாட்டையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்காக ஆரோக்கியமான உறவுமுறைகளைப் வபேணுவதும் வாடிக்கையாளர் நம்பகத்தன்மையினை வலுப்படுத்துவதுமேயாகும்.

1.2 ஒவ்வொரு உரிமம் பெற்ற நிதிக் கம்பனியும் கீழே பணிப்புரை 3இல் குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர் பாதுகாப்பின் குறைந்தபட்ச நியமங்களையும் இப்பணிப்புரையில் இணைக்கப்பட்டுள்ள விபரமான வழிகாட்டல்களையும் பின்பற்றுதல் வேண்டும்.

2. பணிப்பாளர் சபையின் வகிபாகமும் பொறுப்பாண்மையும்

2.1 நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பானது கம்பனி ஆளுகை, கலாச்சாரம் மற்றும் சபையின் உபாயத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் என்பனவற்றில் மிக முக்கியமானதொரு பகுதியாக விளங்குகின்றது.

2.2 சபையானது இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர் பாதுகாப்புத் தொடர்பான குறைந்தபட்ச நியமங்களை அனைத்து ஊழியர்களும் நியமிக்கப்பட்ட முகவர்களும் பின்பற்றுகின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக, சபை, பொருத்தமான கண்காணிப்புப் பொறிமுறை நடைமுறைக்கிடப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3. வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான குறைந்தபட்ச நியமங்கள்

3.1 **வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படையான தன்மை**
வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் சாதனங்கள்/ பணிகள் பற்றி முழுமையான, தெளிவான, பொருள் விளங்கக்கூடிய, துல்லியமான மற்றும் தவறாக வழிநடத்தப்படாத தகவல்கள் வழங்கப்பட வேண்டுமென்பதுடன் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை அவர்கள் எடுப்பதற்கு அவர்களை இயலுமைப்படுத்தும் சாதனங்கள்/ பணிகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அவர்கள் பெறவும் அவற்றை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

3.2 **வாடிக்கையாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு**
வாடிக்கையாளர்கள் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்க அவர்களுக்கு உதவும் விதத்தில் அவர்களின் அறிவினையும் நிதியியல் சாதனங்கள்/ பணிகள் தொடர்பான விளக்கங்களையும் மேம்படுத்தப் பொருத்தமான பொறிமுறைகள் விருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

3.3 **பொறுப்புமிக்க வியாபார நடத்தை**
வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் பொழுது ஊழியர்களும் முகவர்களும் சரியான தேர்ச்சி, கவனிப்பு மற்றும் நுணுக்கம் நிறைந்த கவனிப்புடனும் தொழில்சார் நிபுணத்துவத்துடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

3.4 **முறைப்பாடுகளைக் கையாளல் மற்றும் நிவாரணம்**
வாடிக்கையாளர்கள் முறைப்பாடுகளைச் செய்வதற்கும் நிவாரணப் பொறிமுறைகளைப் பெறுவதற்குமான வசதிகள் கிடைக்கத்தக்கதாகவும் தாங்கக்கூடிய விதத்திலும் சுயாதீனமாகவும் நியாயமானதாகவும் பொறுப்புக்கூறும் விதத்திலும் உரிய நேரத்தில் வினைத்திறனுடனும் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

3.5 **சமத்துவமாகவும் நியாயமாகவும் நடத்துதல்**
அனைத்து வாடிக்கையாளர்களும் நிறுவனத்துடனான அவர்களது தொடர்புகளின் அனைத்துக் கட்டங்களிலும் சமத்துவமாகவும் நேர்மையாகவும் நியாயமாகவும் நடத்தப்படுதல் வேண்டும்.

3.6 **வாடிக்கையாளர்களின் தரவுகளையும் தனிப்பட்ட விபரங்களையும் பாதுகாத்தல்**
அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் வாடிக்கையாளர்களின் தரவுகளையும் தனிப்பட்ட விபரங்களையும் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

4. நடைமுறைப்படுத்தல்

4.1 அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் இப்பணிப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4.2 அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை பின்பற்றுவது தொடர்பாக ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய ஊழியர்களிடமிருந்தும் (அவர்கள் வேலைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர்) நியமிக்கப்பட்ட முகவர்களிடமிருந்தும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

4.3 அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினைத் தமது வெப்தளத்தில் வெளியிட வேண்டுமென்பதுடன் வாடிக்கையாளர்கள் கோருமிடத்து அவர்கள் விரும்பும் மொழியில் அவற்றின் படிகளை வழங்க வேண்டியதுடன் அவசியமான நேரத்தில் அவர்களுக்கு அறிவூட்டவும் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**இணைப்பு**

**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு தொடர்பான விபரமான வழிகாட்டல்கள்**

அறிமுகம்

இது, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் வாடிக்கையாளர்களின் உரிமைகளையும் நலவுரித்துக்களையும் பாதுகாக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பின் குறைந்தபட்ச நியமங்களுடன் இணங்கியொழுகுவதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது.

**1. வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படையான தன்மை**

1.1. வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் சாதனங்கள்/ பணிகள் பற்றி பூரணமான, தெளிவான, பொருள் விளங்கக்கூடிய, துல்லியமான தவறாக வழிநடத்தாத தகவல்களை வழங்குதல் வேண்டும். வழங்கப்படும் தகவல்கள் வாடிக்கையாளர் விரும்பும் மொழிகளில் அதாவது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

**1.2. சாதனம்/ பணிகள் பற்றிய முக்கிய தகவல்கள்**

**1.2.1. விளம்பரங்கள் மேற்கொள்ளப்படும் கட்டம்**

அ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் செய்யப்படும் எந்தவொரு வடிவிலுமான அனைத்து விளம்பரங்களும் வாடிக்கையாளர்களைத் தவறாக வழிநடத்தாத நோக்குடன் வழங்கப்படும் சாதனங்கள்/ பணிகள் தொடர்பில் விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும் உண்மையான தகவல்களைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். வெளியிடப்பட்ட எந்தவொரு விளம்பரம் தொடர்பிலும் கோரிக்கைவிடுக்கும் பட்சத்தில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனி தெளிவுபடுத்தல்களை வழங்குதல் வேண்டும்.

ஆ. மேலும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் பொதுவான மற்றும் குறிப்பிட்ட சாதனம் தொடர்பான விளம்பரப்படுத்தலின் போது இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் விடுக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**1.2.2. ஒப்பந்தத்திற்கு முன்னரான கட்டம்**

அ. ஒவ்வொரு உரிமம் பெற்ற நிதிக் கம்பனியும் அவற்றின் சாதனம்/ பணிகளுக்காக "முக்கியமான விடயங்களைக் கொண்ட ஆவணம்" வடிவிலமைந்த நியமப்படுத்தப்பட்ட ஆவணத்தினை அச்சுவடிவில் அல்லது இலத்திரனியல் வடிவில் அமைந்த இலகுமொழியில் எழுதப்பட்ட ஆவணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் கம்பனி வெப்தளத்திலும் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

ஆ. இவ்வாவணம் கடன் சாதனங்கள் தொடர்பில் பின்வரும் அடிப்படைத் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. சாதனத்தின் தன்மை, வட்டி வீதங்கள், தண்டங்கள், ஏனைய விதிப்புக்கள் மற்றும் கட்டணங்கள், தரகுகள் உட்பட சாதனத்தின்/ பணியின் முக்கிய பண்புகள்.

ii. சாதனங்கள்/ பணிகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்.

iii. முக்கியமான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்.

iv. சாதனம்/ பணிகள் தொடர்பில் ஏற்புடைத்தான சட்ட ஏற்பாடுகள்.

v. முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறை

இ. இவ்வாவணம் வைப்புச் சாதனங்கள் தொடர்பில் பின்வரும் அடிப்படைத் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. ஏதேனும் வசதிகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் உட்பட, வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய நிதியியல் மற்றும் ஏனைய நன்மைகள்.

ii. குறைந்தபட்ச நிலுவைத் தேவைப்பாடுகள், கணக்குகளைத் திறப்பதற்கான கட்டணம், கணக்குகளைப் பேணும் கட்டணம், கணக்குகளை மூடும் கட்டணம் மற்றும் வைப்புக் காப்புறுதிப் பாதுகாப்பின் கிடைப்பனவு.

iii. வாடிக்கையாளர்களினால் திறக்கப்படும் கணக்குகள், மூடப்படும் கணக்குகள், நிதிகளின் மாற்றம் என்பன மீதான ஏதேனும் கட்டுப்பாடுகள் மற்றும் செயற்படாக் கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

ஈ. வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களை ஒப்பந்தங்களைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கக்கூடாது என்பதுடன் சாதனங்கள்/ பணிகள் பற்றி தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ள அவர்களுக்கு நியாயமான காலத்தினையும் வழங்குதல் வேண்டும்.

**1.2.3. ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் கட்டம்**

அ. அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் தொடர்பான சட்டங்கள்/ பணிப்புரைகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, பொருத்தமான விதத்தில் சாதனங்கள்/ பணிகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தல் வேண்டும்.

ஆ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் பின்வருவன உட்பட சாதனங்கள்/ பணிகளின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் பண்புகள் பற்றி வாடிக்கையாளர்களுக்குத் தெளிவாக விளக்குதல் வேண்டும்.

i. வட்டி விதிப்புக்களைக் கணிக்கும் முறை உட்பட வாடிக்கையாளர்களினால் செலுத்தப்படுவதற்குக் கோரப்படும் ஏதேனும் வட்டி வீதங்கள், கட்டணங்கள் மற்றும் தரகுகள் போன்ற பொதுவான விதிப்புக்களின் விபரங்கள்.

ii. முறைப்பாடுகளைப் பெறுவது மற்றும் அவற்றிற்குத் தீர்வுகாணும் பொறிமுறைகளுக்கான உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் நடவடிக்கை முறைகள்.

iii. வாடிக்கையாளர் அவரின்/ அவளின் கடப்பாடுகள் தொடர்பில் ஏதேனும் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் அறவிடல் நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் போது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஏற்படும் செலவுகளை வாடிக்கையாளர்களிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ளுதல்.

iv. வாடிக்கையாளர்களினால் கணக்குகளைத் திறத்தல், கணக்குகளை மூடிவிடுதல், கணக்குகளைப் பேணுதல் (உ-ம்: குறைந்தபட்ச நிலுவை), நிதியங்களின் மாற்றல் என்பன மீதான ஏதேனும் கட்டுப்பாடுகள் மற்றும் செயற்படாக் கடன்கள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகள்.

v. வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்படும் சாதனம்/ பணிகளின் முதிர்ச்சிக்கு முன்னரான மீளப்பெறுகைகள்/ பங்கேற்பினை முடிவுறுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் தொடர்பான வாடிக்கையாளர்களினால் செலுத்தப்பட வேண்டிய தண்டங்கள் மற்றும் நேரகாலத்துடனான தீர்ப்பனவுக் கட்டணங்கள்.

vi. சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அடிமட்ட அளவிற்கு மேலான கொடுக்கல்வாங்கல்கள் என்பன தொடர்பான விதிகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடல்.

vii. அட்டைகள்/ நிதியியல் சாதனங்கள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் பொறுப்புக்கள் களவு போகும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்கள் பின்பற்ற வேண்டிய அறிக்கையிடல் நடவடிக்கை முறை.

viii. வாடிக்கையாளர்களின் தகவல்களைப் பெறுவதற்கு சட்ட ரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட தரப்பினருக்கு வாடிக்கையாளர்களின் தகவல்களை வெளிப்படுத்தல்.

இ. கடன் சாதனங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் வழங்கல் கடிதம்/ சாதனக் கூற்றுக்களை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அவை குறைந்தபட்சம் பின்வரும் அடிப்படைத் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. கடன்பாட்டாளரின் பெயர்.

ii. ஒப்பந்த இலக்கம் (கடன் தொடர்பு இலக்கம்).

iii. வழங்கப்பட்ட தொகை.

iv. வழங்கப்பட்ட திகதி மற்றும் கடனின் காலம்.

v. வட்டி வீதமும் அதன் அடிப்படையும் (பெயரளவு அல்லது தாக்கமுள்ள).

vi. மீள்கொடுப்பனவுக் காலம் மற்றும் தவணைகளின் கால இடைவெளி (நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம் அல்லது வேறு ஏதேனும் அடிப்படை).

vii. வழங்கப்பட்ட பிணையின் விபரங்கள்.

viii. காப்புறுதி, மதிப்பீடு, ஆவணப்படுத்தல், பதிவுசெய்தல் போன்ற மேலதிகக் கட்டணங்களின் பிரிப்பு (ஏற்புடைத்தாயின்).

ix. தாமதமான கொடுப்பனவு காணப்படும் சந்தர்ப்பத்தில் தண்ட வீதம் (ஆண்டிற்கு).

x. வாடிக்கையாளர் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் அறவிடல் நடவடிக்கைகள் (சொத்துக்களை மீள உடமையில் வைத்திருத்தல், செயன்முறைகளுடன் தொடர்புபட்ட செலவுகள், மீள உடமையில் வைத்திருப்பதற்குப் பின்னரான நடவடிக்கைகள், ஏற்புடைத்தான மற்றைய கட்டணங்கள் போன்றவை).

xi. கடன்களை உரிய காலத்திற்கு முன்னர் தீர்ப்பனவு செய்வது தொடர்பில் ஏற்புடைத்தான நிபந்தனைகள்.

xii. நுண்பாக நிதிக் கடன்களைப் பொறுத்தவரையில் கள அலுவலர்கள் குழும உறுப்பினர்களிடம் விஜயம் செய்யும் நாள் மற்றும் நேரம் போன்ற அறவிடல் நடவடிக்கைகள் மற்றும் சேகரிப்பு நிலையங்களின் விபரங்கள் போன்றவற்றை குறித்துரைத்தல் வேண்டும். இயற்கை அனர்த்தங்கள் மற்றும் எதிர்பாரா சம்பவங்களின் காரணமாக ஆரம்பச் சேகரிப்பு அட்டவணையில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது பற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

ஈ. தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்சக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தால் மாத்திரம் கொடுகடன் அட்டைகளுக்கான கூற்றுக்கள் தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்சக் கொடுப்பனவுகளையும் விதிக்கப்பட்ட மொத்த வட்டிக் கொடுப்பனவுகளையும் குறைந்தபட்சக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிராவிடின் மாத்திரம் தாமதக் கொடுப்பனவுக் கட்டணத்தினையும் காட்டுதல் வேண்டும்.

உ. வைப்புச் சாதனங்களைப் பொறுத்தவரையில், அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் ஏற்புடைத்தானவிடத்து தொடர்பான சட்டங்கள்/ பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவையான தகவல்களை வெளிப்படுத்தல் வேண்டும். சேமிப்புப் புத்தகக் கணக்குகள் தவிர்ந்த வாடிக்கையாளரின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிலுவைகள் தொடர்பில் அவர்களினால் விரும்பப்படுகின்ற ஒன்றில் அச்சு அல்லது இலத்திரனியல் முறையில் அவர்களுக்குக் காலாந்தரக் கூற்றுக்களை அனுப்புதல் வேண்டும்.

**1.2.4. கோரிக்கையின் மீது**

கோரிக்கையின் மீது கடன் சாதனங்களுக்காக சாதனக் கூற்றொன்றினை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அது பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

i. அறிக்கையிடுகின்ற காலப்பகுதிக்கான விபரமான கொடுக்கல்வாங்கல் தகவல்கள் (உ-ம்: வாடிக்கையாளர்

கணக்கிற்கான விடயங்கள் அடிப்படையிலான கொடுகடன்கள், வரவுகள் மற்றும் பற்றுக்கள்).

ii. பயனுறு வட்டி வீதம் மற்றும் வட்டி விதிப்பு.

iii. காலப்பகுதிக்காக விதிக்கப்பட்ட கட்டணம்.

iv. தவணைத் திகதி மற்றும் வெளிநின்ற நிலுவை.

1.2.5. பெறப்பட்ட சாதனங்கள்/ பணிகள் மற்றும் அவற்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், விளக்கமளிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அது பற்றி விளங்கிக் கொண்டமை தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய எழுத்து மூலமான உறுதிப்படுத்தலொன்றினை வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1.2.6. சாதனங்கள்/ பணிகள் தொடர்பிலான அனைத்து ஆவணங்களும் பூரணப்படுத்தப்பட்டு வாடிக்கையாளர்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத ஆவணங்களை ஏற்றுக்கொள்ளுவதும் வெற்றுத்தாள்களில்/ ஆவணங்களில் கையொப்பங்களைப் பெறுவதும் தடைசெய்யப்பட்டவையாகும்.

1.2.7. சாதனங்கள்/ பணிகள் மீது இணங்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் ஏதேனும் மாற்றங்களைச் செய்வதாயின் அம்மாற்றங்களைச் செய்வதற்கு முன்னர் வாடிக்கையாளர்களுக்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும்.

1.3. பொதுவான வெளிப்படுத்துகைகள்

அ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபாரத் தலங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

i. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிதித்தொழில் உரிமம்.

ii. உரிமம் பெற்ற நிதிக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் பிந்திய தொகுப்பொன்று.

iii. முக்கியமான மாதிரிப்படுத்தல்களுடன் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியின் கொடுகடன் தரமிடல்.

iv. வழிகாட்டலின் பிரிவு 4.1 இன்படி, வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளுகின்ற ஆளைத் தொடர்பு கொள்வதற்கான முக்கிய தொடர்பு விபரங்கள்.

v. நிதியியல் ஆலாட்சி அதிகாரியைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்.

vi. வியாபார நேரங்கள் மற்றும் விடுமுறை அறிவித்தல்கள்.

ஆ. மேற்குறிப்பிட்டவை உட்பட கம்பனி வெப்தளத்தில் பின்வரும் தகவல்களும் எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

i. அனைத்து வைப்புக்கள் மற்றும் முதலீட்டுச் சாதனங்கள் மீதான தற்போதைய வட்டி வீதங்கள்.

ii. கடன் சாதனங்கள் மீதான தற்போதைய அடிப்படை வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய விதிப்புக்கள் (சாத்தியமானவிடத்து).

iii. வெளிநாட்டு நாணயங்களின் வாங்கும் மற்றும் விற்கும் வீதங்கள் (ஏற்புடைத்தாயின்).

iv. பிரிவு 1.2.2. (அ)இன் கீழான வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள்.

2. வாடிக்கையாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு

2.1. பயனுறு நிதியியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்

அ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனி ஒன்று அதன் சொந்தமான அல்லது கைத்தொழில் சங்கங்களின் பங்கேற்புடன் நிதியியல் சாதனங்கள்/ பணிகளின் மீதான வாடிக்கையாளர் விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காக குறித்துரைக்கப்பட்ட நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும். நிதியியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் இலக்கிடப்பட்ட மக்களின் தேவைகளையும் நிதியியல் அறிவினையும் பூர்த்தி செய்யும் விதத்தில் வடிவமைக்கப்படல் வேண்டும்.

ஆ. நிதியியல் கல்விக் கருவிகள் அச்சிடப்பட்ட சிற்றேடுகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், பயிற்சிக்குரிய கட்புலச் சாதனங்கள் (உ-ம்: நாணய முகாமைத்துவம், படுகடன் முகாமைத்துவம், சேமிப்புக்கள்) ஒன்றிலொன்று வினைத்திறனாற்றும் கடன் கணிப்பிகள், முக்கிய செய்திகள் (உ- ம்: உங்கள் பணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், உங்கள் சாதனங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள், நியதிகளையும் நிபந்தனைகளையும் வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள், உங்கள் கூற்றுக்களைப் பரிசோதித்துப் பாருங்கள், சரியான நேரத்தில் உங்கள் கடன் தவணைப் பணத்தினைச் செலுத்துங்கள், கட்டணங்களையும் விதிப்புக்களையும் விளங்கிக் கொள்ளுங்கள். உங்கள் தனிப்பட்ட அடையாள இலக்கங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்) போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

இ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் சாதனம்/ பணிகள் தொடர்பில் உதாரணமாக நிதித்தொழில் சட்டம், நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம், ஈட்டுச் சட்டம், அடகுபிடித்தல் கட்டளைச் சட்டம் என்பன தொடர்பில் ஏற்புடைத்தான சட்ட ஏற்பாடுகளின் மீது வாடிக்கையாளர்களுக்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் கல்வியூட்டுதல் வேண்டும்.

2.2. நிதியியல் ஒழுக்காற்றுக்களை ஊக்குவித்தல்

வாடிக்கையாளர்களின் குறிப்பாக, பாதிக்கப்படக்கூடிய தொகுதியினரின் இயலாற்றலையும் நிதியியல் அறிவினையும் ஆழமாக்குவதற்காக நிதியியல் கல்வியும் தகவல் ஏற்பாடுகளும் அதிகரிக்கப்படுதல் வேண்டும். மிகையான கடன்பாடுகள், பல்வேறு கடன்பாடுகளின் விளைவுத்தன்மைகள் மற்றும் பிந்திய மீள்கொடுப்பனவுகள் போன்றவை பற்றி குறித்துரைக்கப்பட்ட எச்சரிக்கைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

3. பொறுப்புமிக்க வியாபார நடத்தை

3.1. **வாடிக்கையாளரையும் பொருத்தமான தன்மையினையும் தெரிந்து கொள்ளுதல்:** வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் வாடிக்கையாளர்களின் பொருத்தமான நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் சாதனங்களை வழங்குவதற்காகவும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் நியமிக்கப்பட்ட முகவர்களும் தேவையான மூலவளங்களையும் நடவடிக்கைகளையும் நடைமுறைக்கிடுதல் வேண்டும். இது தொடர்பில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் நியமிக்கப்பட்ட முகவர்களும் பின்வருவன பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

அ. உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்: வாடிக்கையாளருக்குப் பொருத்தமான சாதனங்கள்/ பணிகளை விதந்துரைப்பதற்கு, முன்வைப்பதற்கு அல்லது வழங்குவதற்கு முன்னர் போதுமான தகவல்களைத் திரட்டிப் பதிவுசெய்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு திரட்டப்பட்ட தகவல்களின் மட்டம் வாடிக்கையாளர்களினால் எதிர்பார்க்கப்படும் சாதனம்/ பணிகளின் சிக்கலான தன்மைகளுக்குப் பொருத்தமானவையாக இருத்தல் வேண்டும்.

ஆ. பொருத்தமான தன்மையினை மதிப்பிடல்: உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் அல்லது நியமிக்கப்பட்ட முகவர்கள் சாதனங்கள்/ பணிகள் வாடிக்கையாளர்களின் தேவைகளையும் அவர்களின் குறிக்கோள்களையும் அத்தகைய சாதனங்கள்/ பணிகளுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளை வாடிக்கையாளர்கள் நிதியியல் ரீதியாக தாங்கிக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றார்களா என்பதனையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

இ. மிகையான கடன் சுமைகளைத் தடுத்தல்

i. சாதனத்துடன் இணைந்து காணப்படும் நிதியியல் கடப்பாடுகளை வாடிக்கையாளர்கள் பூர்த்தி செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக புதிய கொடுகடன் சாதனங்களை அல்லது பணிகளை வழங்கும் பொழுது வாடிக்கையாளர்களின் கொடுகடன் நம்பகத்தன்மையினை பொருத்தமான விதத்தில் மதிப்பீடு செய்வதுடன் வாடிக்கையாளர் மீள்கொடுப்பனவு இயலாற்றல் பகுப்பாய்வினையும் பொருத்தமான விதத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ii. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் சபை மற்றும் மூத்த முகாமைத்துவம், வாடிக்கையாளர்களின் மிகையான கடன் சுமையின் இடர்நேர்வு பற்றி அறிந்திருக்க வேண்டியதுடன் கரிசனைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். உயர்ந்தபட்ச படுகடன் தீர்ப்பனவு/ வருமான விகிதம் (உதாரணமாக படுகடன் தீர்ப்பனவிற்கு பிரயோகிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர்களின் செலவிடத்தக்க வருமானத்தின் உயர்ந்தபட்ச சதவீதம்) அடையாளம் காணப்படுதல் வேண்டும்.

iii. வாடிக்கையாளர்களின் தற்போதைய கொடுகடன் நம்பகத்தன்மைக்கு அப்பால் ஏற்படக்கூடிய மிகையான கொடுகடன் இடர்நேர்வுகளைத் தடுக்கும் பொருட்டு இன்னொரு நிதியியல் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஏற்கனவேயுள்ள கடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் புதிய கடன்களை வழங்குவதனை மட்டுப்படுத்தல் வேண்டும்.

iv. மிகையான படுகடன் சுமையினைத் தடுப்பதற்கு ஆதரவளிக்கின்ற கொடுகடன் தகவல் பணியகம் போன்ற கொடுகடன் முகாமைத்துவ முறைமைகளை உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் பயன்படுத்துதல் வேண்டும்.

**3.2. வாடிக்கையாளர்களிடம் தனிப்பட்ட முறையில் விஜயம் செய்தல் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்தல்**

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் ஊழியர்கள் அல்லது முகவர்கள் பின்வருமாறு நடந்து கொள்ளுதல் வேண்டும்;

அ. நியாயமான அறிவித்தலை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களிடம் விஜயம் செய்ய வேண்டியதுடன் அத்தகைய விஜயங்கள் பகல் நேரங்களிலேயே இடம்பெறுதல் வேண்டும்.

ஆ. நோக்கம், விஜயம் செய்த திகதி மற்றும் நேரம் அதற்கு வாடிக்கையாளரின் சுருக்கமான பதிலிறுப்பு என்பனவற்றை உள்ளடக்கிய விஜயம் தொடர்பில் தனியான பதிவேடொன்றினைப் பேணுதல்.

இ. ஏற்கனவேயுள்ள அல்லது வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களுடன் தொலைபேசித் தொடர்புகளை மேற்கொள்ளும் பொழுது உரிய ஆள் அவரின் அல்லது அவளின் பெயரைக் குறிப்பிடுவதன் மூலம் தன்மை அடையாளம் காட்டிக் கொண்டு யாரின் சார்பில் வாடிக்கையாளர் தொடர்பு கொள்கிறாரோ அந்த உரிமம் பெற்ற நிதிக் கம்பனியின் பெயரைக் குறிப்பிட்டு தொடர்பு கொள்வதுடன் தொடர்பின் வர்த்தக நோக்கங்களையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**3.3. ஊழியர்களையும் நியமிக்கப்பட்ட முகவர்களையும் கண்காணித்தல்:** உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், பொருத்தமற்ற வியாபார நடத்தைகளையும் நியாயமற்ற இடர்நேர்வுகள் இடம்பெறுவதனையும் தடுக்கும் பொருட்டு வாடிக்கையாளர்களுடன் நேரடியாக செயற்படுகின்ற ஊழியர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட முகவர்களின் நடத்தைகளை உத்வேகம் மிக்க விதத்திலும் கிரமமான முறையில் கண்காணிக்கும் பொறிமுறையொன்றினை உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் கொண்டிருத்தல் வேண்டும்.

**3.4. ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல்:** உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினதும் நியமிக்கப்பட்ட முகவர்களினதும் ஊழியர்கள் (குறிப்பாக, வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்புகளை மேற்கொள்கின்ற கொடுகடன் அலுவலர்கள், அறவிடல் அலுவலர்கள், சந்தைப்படுத்தல் அலுவலர்கள், முறைப்பாடுகளைக் கையாளும் அலுவலர்கள், வாடிக்கையாளர் பணிப் பிரதிநிதிகள்) பொருத்தமான பயிற்சியையும் தகைமையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**3.5. ஊதியக் கொள்கை**

அ. பொறுப்புமிக்க வியாபார நடத்தைகளை ஊக்குவிப்பதற்காகவும் நியாயமற்ற இடர்நேர்வுகள் இடம்பெறுவதனை ஊக்கமிழக்கச் செய்வதற்காகவும் வாடிக்கையாளர்களுடன் நேரடியாகத் தொடர்புகளைப் பேணுகின்ற ஊழியர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட முகவர்களுக்காக சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஊதியக் கொள்கையொன்று வடிவமைக்கப்படல் வேண்டும்.

ஆ. ஊழியர்களுக்கு யதார்த்த பூர்வமான விற்பனை இலக்குகளை வழங்க வேண்டுமென்பதுடன் அவை அத்தகைய ஊழியர்களின் தனிப்பட்ட இயலாற்றல்களுக்குள் அமைந்தனவாகவும் இருத்தல் வேண்டும்.

இ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் ஊழியர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட முகவர்களின் ஊதியங்கள் விற்பனைச் செயலாற்றத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை என்பதனையும் வாடிக்கையாளர்களின் மிகச் சிறந்த ஈடுபாடுகளுடன் தொடர்பான வாடிக்கையாளர் திருப்தி, கடன் மீள்கொடுப்பனவுச் செயலாற்றம், வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்ளும் தன்மை, ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்/ சிறந்த நடைமுறை வழிகாட்டல்கள் என்பனவற்றிற்கு இணங்கியொழுதல் மற்றும் ஒழுக்கவியல் கோவை போன்ற காரணிகளும் அதனுள் உள்ளடங்கியிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**3.6. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் நியமிக்கப்பட்ட ஊழியர்களினதும் முகவர்களினதும் பொறுப்பாண்மை**

ஊழியர்களும் நியமிக்கப்பட்ட முகவர்களும் பின்வரும் நடைமுறைகளைத் தவிர்த்தல் வேண்டும்:

அ. வாடிக்கையாளர்களைத் தொந்தரவு செய்தல்.

ஆ. கடன் சேகரிப்பு நடைமுறைகளில் துர்ப்பிரயோகங்களைப் பயன்படுத்தல்.

இ. வாடிக்கையாளர்கள் தகவல்களை இன்னொருவருக்கு வெளிப்படுத்தல்.

ஈ. சாதனம்/ பணிகள் பற்றி பொய்யான அல்லது பிழையாக வழிநடத்தக்கூடிய தகவல்களை வழங்குதல்.

உ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் சாதனங்கள்/ பணிகளை வாங்குமாறு அல்லது அவற்றுடன் தொடர்புகளைக் கொண்டிருக்குமாறு வாடிக்கையாளர்கள் மீது அல்லது பொதுமக்களின் மீது வேண்டத்தகாத செல்வாக்குகளைத் திணித்தல்.

ஊ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வெளியே பிணை ஆவணங்களை கையொப்பமிடல். எனினும், நியாயமான சூழ்நிலைகளின் காரணமாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபாரத் தலத்திற்கு வெளியே ஒப்பந்தங்களில் கையொப்பமிட வேண்டிய தேவையொன்று எழுமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

**3.7. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் சாதனங்கள்/ பணிகளின் புறக்கீடுகள்/ இரத்துக்களுக்கான இழப்பீடு**

ஏற்கனவே தொழிற்பாட்டிலுள்ள குறிப்பாக, வைப்புச் சாதனங்களை புறக்கீடு செய்தல் அல்லது முடிவுறுத்தல் செய்வதற்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனியொன்று எதிர்பார்க்கும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்கள் ஏற்கனவேயுள்ள பொறிமுறை மற்றும் இழப்பீட்டுத் திட்டங்களின் கீழ் நியாயமான காலப்பகுதியொன்றில் இழப்பீடுகளைப் பெறுவதற்கான உரிமையினைக் கொண்டிருப்பதுடன் தேவைப்படுமாயின் அத்தகைய புறக்கீடுகள்/ முடிவுறுத்தல்கள் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

**3.8. தண்ட வீதங்களை விதித்தல்**

தண்ட வட்டி வீதத்தின் மீதான கொள்கை, வாடிக்கையாளர்களின் உண்மையான இடர்ப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு படுகடன் தீர்ப்பனவுகளை ஊக்குவிக்கும் பொருட்டு நியாயமானதொரு விதத்தில் ஆளுகை செய்யப்படல் வேண்டும்.

**4. முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் நிவாரணம்**

**4.1. உள்ளக முறைப்பாட்டுக் கையாளல் பொறிமுறை**

அ. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் அதன் வாடிக்கையாளர்களின் மனக்குறைகளையும் முறைப்பாடுகளையும் கவனிக்கின்ற விதத்தில் முறைப்பாட்டுக் கையாளல் கொள்கையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. வாடிக்கையாளர்கள் வெளிவாரி உதவிகளைப் பெறவிரும்புவதற்கு முன்னதாக உள்ளக முறைப்பாட்டுக் கையாளல் செயன்முறையினூடாகத் தீர்வு காண்பதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

இ. வாடிக்கையாளர்களினால் செய்யப்படும் முறைப்பாடுகளைக் கையாளவும் அவை தொடர்பான தீர்வுகளுக்கு வசதியளிப்பதற்குமாக ஒவ்வொரு வியாபாரத் தலத்திலும் பொறுப்புமிக்க அலுவலரொருவரிடம் அப்பொறுப்பினை ஒப்படைத்தல் வேண்டும். அத்தகைய அலுவலரின்/ அலுவலர்களின் பொறுப்பாண்மையில் அதற்கு தீர்வு காணப்படாவிடின் அதற்கு தீர்வு காணப்படும் வரை அதற்கு அடுத்துள்ள உயர் அதிகாரிகளிடம் அடுத்த தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

ஈ. அனைத்து வாடிக்கையாளர்களினதும் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்காக தரவுத்தளமொன்று நிறுவப்பட்டு தரவுத் தளத்திற்குப் பொறுப்பாக ஒரு அலுவலர் நியமிக்கப்பட வேண்டும். அந்த அலுவலரை தீர்வு காணப்படாத முறைப்பாடுகளை காலத்திற்குக் காலம் கம்பனியின் மூத்த முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுவதற்குப் பொறுப்பாக்குதல் வேண்டும். மூத்த முகாமைத்துவம் தீர்வு காணப்படாத விடயத்தின் மீது சரியான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தல் வேண்டும்.

உ. வியாபாரத் தலத்தில் வாடிக்கையாளர்கள் அத்தகைய முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

ஊ. ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளினால் அனுப்பி வைக்கப்படும் வாடிக்கையாளர் முறைப்பாடுகளை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

எ. எந்தவொரு முறைப்பாடுகள் தொடர்பிலும் நியாயமானதொரு குறுகிய காலப்பகுதிக்குள் அது கிடைத்தமை பற்றி எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் முறைப்பாடுகளுக்கு தீர்வு காணும் விதத்தில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியினால் முறைப்பாட்டு நடவடிக்கைகள் தொடரப்படும் என்பது பற்றியும் முறைப்பாடுகளைக் கையாளும் அலுவலர்/ அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்களையும் அறிவித்தல் வேண்டும் (இந்நோக்கத்திற்காக, கம்பனி பொருத்தமான சொற்பதங்களுடன் கூடிய அச்சிடப்பட்ட படிவத்தினை பயன்படுத்தலாம்).

ஏ. முறைப்பாடுகளை வாய்வழியில் பெற்றுக் கொள்வதற்கு அல்லது எழுத்து மூலம் பெற்றுக் கொள்வதற்கு வசதியளித்தல் வேண்டுமென்பதுடன் முறைப்பாடுகளை எழுத்து மூலம் மாத்திரமே செய்வது அவசியமென வற்புறுத்தக்கூடாது.

ஐ. முறைப்பாடுகளைக் கையாளுகின்ற செயன்முறையின் எந்தவொரு கட்டத்திலும் வாடிக்கையாளர்கள் நியாயமற்ற விதத்தில் நடத்தப்படக்கூடாது.

**5. வாடிக்கையாளர்களைச் சமத்துவமான விதத்திலும் நியாயமான விதத்திலும் நடத்துதல்**

**5.1. சமத்துவமாகவும் நியாயமாகவும் நடத்துதல்**

அனைத்து வாடிக்கையாளர்களும் அவர்களது சாதி, சமயம், மொழி, பால், வயது போன்றவற்றினைக் கருத்திற் கொள்ளாது அவர்களது அனைத்துக் கட்டத் தொடர்புகளிலும் சமமாகவும் நியாயமாகவும் நடத்தப்படுதல் வேண்டும்.

**5.2. சிறப்புக் கவனிப்பும் கவனமெடுத்தலும்**

வயது முதிர்ந்த, உடல் ஊனமுற்ற அல்லது குறைந்த நிதியியல் அறிவினைக் கொண்ட வாடிக்கையாளர் போன்றோர் நியாயமான நிதியியல் பணிகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் அவர்களுக்கான வசதிகளைப் பெறும் விதத்தில் சிறப்புக் கவனிப்புக்களைப் பெறுவதற்கு உரித்துடையவராவர்.

**6. வாடிக்கையாளர் தரவு மற்றும் தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்**

**6.1. தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாத்துக் கொள்ளல்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 61ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வாடிக்கையாளர் தரவுகளையும் அந்தரங்க விடயங்களையும் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானதாகும்.

**6.2. கொடுகடன் தகவல் பணியக அறிக்கையிடல் முறைமையும் தரவுகளைப் பகிர்ந்து கொள்ளலும்**

வாடிக்கையாளர்களுக்கு, அவர்கள் தொடர்பான தனிப்பட்ட தரவுகளைக் கொடுகடன் தகவல் பணியகத்துடன் பகிர்ந்து கொள்வது தொடர்பில் அவர்களுக்குப் பொருத்தமான விதத்தில்/ முழுமையாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவர்கள் தொடர்பில் வைத்திருக்கப்படும் தரவுகளின் நோக்கம் மற்றும் நிபந்தனைகள், செயன்முறை மற்றும் பகிர்ந்தளிப்பு என்பன தொடர்பில் இரகசியத்தன்மை விதிகள் பின்பற்றப்படுதலும் வேண்டும்.

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 02ஆம் இலக்கம்** 2018 பெப்புருவரி 8

**உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

கொள்வனவு நோக்கத்திற்காக அல்லது உந்து ஊர்திகளின் பயன்பாட்டிற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. நிதித்தொழில் சட்டத்தின் கீழான அதிகாரமளிப்பு

1.1 நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் நியதிகளில் நிதித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, நாணயச் சபைக்கு, அத்தகைய நிதிக் கம்பனிகள் எந்தவொரு வியாபார அம்சங்கள் தொடர்பிலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதம்

2.1 2018 சனவரி 01ஆம் நாள் தொடக்கம், கொள்வனவு அல்லது ஊர்திகளின் பயன்பாட்டு நோக்கத்திற்காக ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(i) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற பதிவுசெய்யப்படாத ஊர்திகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளைப் பொறுத்தவரையில்

**அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
|---|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஇ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகு பாரவண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 70% | |

(ii) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

3. உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விதிவிலக்கல்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள், சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிக்கு அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்காகச் செய்யப்படும் ஊர்திகளின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு பிரயோகிக்கப்படக்கூடாது. எது எப்படியிருப்பினும், அத்தகைய ஊர்திகளுக்கான நிதியிடல் முதல் பதிவுத் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் எந்தவொரு ஆளுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் மாற்றல் செய்யப்படக்கூடாது.

3.2 இவ்வகையான ஊர்திகளுக்குக் கொடுகடன் வசதிகளை வழங்குகையில் உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் உள்ளக வரையறைகளைக் கொண்டிருக்க வேண்டியதுடன் போதுமானளவு இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

4. ஊர்திகளுக்கான ஏனைய கொடுகடன் வசதிகள்

4.1 மேலேயுள்ள பணிப்புரைகள் 2 மற்றும் 3 இற்கிணங்க வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தவிர, உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக கொடுகடன் வசதிகளை உரிமம்பெற்ற நிதி நிறுவனமொன்று வழங்கக்கூடாது.

5. விளக்கங்கள்

5.1 கொடுகடன் வசதிகள் என்பது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகள் மற்றும் ஊர்திகளின் கொள்வனவு அல்லது ஊர்திகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஏனைய கொடுகடன் வசதிகள் எனப் பொருள்படும்.

5.2 ஊர்தியின் பெறுமதியானது சந்தைப் பெறுமதியாகவிருத்தல் வேண்டும். ஊர்திகளின் விலை மதிப்பீட்டு நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வங்கிகள் பின்வருவனவற்றை பயன்படுத்தலாம்.

(i) புத்தம் புதிய ஊர்திகள் - அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களால் வழங்கப்படும் பெறுமதி

(ii) மறுசீரமைப்புச் செய்யப்பட்ட ஊர்திகள் - சுங்கத்தில் பரிசீலனையில் கொள்ளப்பட்ட பெறுமதி அல்லது விநியோகத்தரினால் வழங்கப்படும் விலைப்பட்டியல்

(iii) பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் - தொழில்சார் விலை மதிப்பீட்டாளர் ஒருவரினால் வழங்கப்படும் பெறுமதி

5.3 விலை மதிப்பீடானது கடன் வசதி வழங்கப்படுகின்ற நேரத்தில் பெறப்பட்டுள்ளது என்பதனையும் அது உண்மையானதும் நியாயமானதுமான பெறுமதியினைத் தருகிறது என்பதனையும் உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் உறுதி செய்தல் வேண்டும்.

5.4 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊர்தித் தொகுதிகள் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊர்திகள் எனப்பொருள்படுதல் வேண்டும்.

5.5 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது சுற்றுலாத் துறைக்கான பணியினை வழங்குவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் அல்லது ஏதேனும் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனி எனப் பொருள்படுதல் வேண்டும்.

5.6 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது பொருள் அல்லது பணிகள் போக்குவரத்து தொழில் நோக்கத்திற்காக ஏதேனும் அரச அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் தொழில் நிறுவனம் எனப் பொருள்படுதல் வேண்டும்.

6. முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல்

6.1 பின்வரும் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க (உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான) நிதிக் கம்பனிகள் பணிப்புரை.

(ii) 2017ஆம் ஆண்டின் 03ஆம் மற்றும் 04ஆம் இலக்க (உந்து ஊர்திகள் மீதான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம் மீதான) நிதிக் கம்பனிகள் சட்டப் பணிப்புரைகள்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 03ஆம் இலக்கம்** 2018 யூன் 6

**மூலதன போதுமை தேவைப்பாடுகள்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், நாணயச் சபையானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கான குறைந்தபட்ச மூலதன போதுமை விகிதத்தினை கீழே தரப்பட்டவாறு தீர்மானித்திருக்கிறது.

1. குறைந்தபட்ச மூலதன போதுமைத் தேவைப்பாடுகள்

1.1 2018 யூலை 01ஆம் நாள் தொடக்கம் ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் எல்லா நேரங்களிலும் கீழே அட்டவணை 1 மற்றும் 2 இல் விபரிக்கப்பட்டவாறு மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பேணுதல் வேண்டும்.

**அட்டவணை 1: ரூ.100 பில்லியனுக்கு குறைவான சொத்துக்களைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்**

| மூலதனக் கூறுகள் | 01.07.2018 | 01.07.2019 | 01.07.2020 | 01.07.2021 |
|---|---|---|---|---|
| அடுக்கு 1 மூலதனம் | 6.00 | 6.50 | 7.00 | 8.50 |
| மொத்த மூலதனம் | 10.00 | 10.50 | 11.00 | 12.50 |

**அட்டவணை 2: ரூ.100 பில்லியனை மற்றும் அதற்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்**

| மூலதனக் கூறுகள் | 01.07.2018 | 01.07.2019 | 01.07.2020 | 01.07.2021 |
|---|---|---|---|---|
| அடுக்கு 1 மூலதனம் | 6.00 | 7.00 | 8.00 | 10.00 |
| மொத்த மூலதனம் | 10.00 | 11.00 | 12.00 | 14.00 |

1.2 மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூலதன போதுமை விகிதங்கள் இங்கேயுள்ள பின்னிணைப்பு அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான மூலதன போதுமை தேவைப்பாடுகள் மீதான கட்டமைப்பில் காட்டப்பட்டுள்ள முறையியல்கள் மற்றும் தேவைப்பாடுகளுக்கிணங்க கணிக்கப்படுதல் வேண்டும்.

2. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல்

2.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் மூலதன போதுமை தேவைப்பாடுகளின் கணிப்புத் தொடர்பான விபரங்களை வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட முறைமையினூடாக, பின்வரும் விதத்தில் பின்னிணைப்பு அட்டவணை II இல் தரப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) மாதாந்தம்: ஒவ்வொரு மாதத்தினதும் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறான நிலைமையினை அறிக்கையிடுவதுடன் அதனை 15 நாட்களுக்குள் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(ii) வருடாந்தம் (கணக்காய்வு) நிதியியல் ஆண்டின் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறான நிலைமையினை அறிக்கையிடுவதுடன் ஒவ்வொரு நிதியியல் ஆண்டும் முடிவடைந்ததன் பின்னர் மூன்று மாதங்களுக்குள் அதனை சமர்ப்பித்தலும் வேண்டும்.

3. இணங்குவிப்பு நிகழாத சந்தர்ப்பத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள்

3.1 மேற்குறிப்பிட்ட பணிப்புரைகளுக்கு உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்கள் இணங்கி நடக்காத சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் பின்வருவனவற்றில் ஏதேனுமொன்று தொடர்பில் அல்லது பலவற்றின் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(i) பங்கிலாபங்களின் பகிர்ந்தளிப்பு மீது அல்லது இலாபங்களை இலங்கைக்கு வெளியில் அனுப்பும் நடவடிக்கைகளின் மீது கட்டுப்பாடுகளை விதித்தல்

(ii) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நியமங்களை மேலும் மேசமடையச்செய்யும் ஏதேனும் வியாபார நடவடிக்கைகளை இடைநிறுத்தல்

3.2 அத்தகைய இணங்கிச்செல்லாமைகள் சீர்செய்யப்படுமிடத்து மேற்குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை பணிப்பாளர் நீக்கிவிடுதல் வேண்டும்.

4. விளக்கங்கள்

4.1 இப்பணிப்புரைகளில்

(i) பிரிவு 1.1 இன் அட்டவணை 1 மற்றும் 2 தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் சொத்துக்களினது பெறுமதி, கிடைக்கத்தக்கதாயிருக்கும் பிந்திய கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ii) “பணிப்பாளர்” என்பதன் பொருள் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப்பொருள்படும்.

5. முன்னைய பணிப்புரையினை இரத்துச்செய்தல்

5.1 2006ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை மற்றும் 2007.03.15ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை என்பன இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

**நாணயச் சபையின் தலைவரும்**

**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இப்பணிப்புரையின் பின்னிணைப்பு அட்டவணை I மற்றும் II என்பன https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Finance_Business_Act_Directions_No_3_of_2018_e.pdf இல் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 04ஆம் இலக்கம்** 2018 யூன் 06

**அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பில் நாணயச் சபை பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. பணிப்புரையின் செயற்பரப்பு

1.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான இப்பணிப்புரைகள் பின்வரும் நோக்கங்களுக்கு ஏற்புடைத்தானவையாக இருத்தல் வேண்டும்.

அ. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளைப் பூர்திசெய்தல் அத்துடன்,

ஆ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டினை தேவைப்படுத்தும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தற்பொழுது இடம்பெற்றுவரும் ஏனைய வியாபாரத் தேவைப்பாடுகள்

2. அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் கொள்கையொன்றினை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்

2.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொருத்தமான முன்மதியுடைய கொள்கைகளும் நடைமுறைகளும் நடைமுறையிலுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2.2 மேலேயுள்ள பணிப்புரை 2.1 இல் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான கொள்கைகளையும் நடைமுறைகளையும் உருவாக்குகையில் ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் பின்வரும் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

அ. கொள்கைகளை வடிவமைத்தல் அவற்றை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் ஏனைய தொடர்பான குழுக்களின் (உ-ம் கொடுகடன் குழு) பொறுப்பாண்மை

ஆ. உள்ளக மற்றும் வெளிவாரி இரண்டினையும் சேர்த்த மதிப்பீட்டாளர் குழுக்களை நியமித்தல்

இ. கீழேயுள்ள பணிப்புரை 4 இற்கு உட்பட்டு, மதிப்பீட்டாளர் குழுவினை (குழுக்களை) நியமிப்பதற்காக தகைமைபெற்ற மதிப்பீட்டாளரை அடையாளம் காணவும் தெரிவுசெய்வதற்குமான நடைமுறைகள்.

ஈ. மதிப்பீட்டு மாதிரியிலிருந்து பெறப்பட்ட அசையாச் சொத்தொன்றின் சந்தை மதிப்புக்களையும் அத்தகைய மதிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட தரவுகளின் நம்பகத்தன்மையையும் துல்லியத் தன்மைகளையும் மதிப்பிடுவதற்கான நடைமுறைகள்

உ. கீழேயுள்ள பணிப்புரை 5 இற்கு உட்பட்டு, விடயம் எதுவோ அதன் அடிப்படையில் அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிரான அசையாச் சொத்துக்கள் தொடர்பில் பெறப்பட்ட/ பெறப்படவுள்ள உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான ஆரம்ப மட்டம்.

ஊ. கீழேயுள்ள பணிப்புரை 6 இற்கு உட்பட்டு மதிப்பீட்டின் கால இடைவெளி

எ. உள்ளக மதிப்பீடுகளுக்கான மதிப்பீட்டு பிரமாணம்

ஏ. கீழேயுள்ள 7 ஆவது பணிப்புரைகளுக்குட்பட்டு சுயாதினம் மற்றும் வெளிப்படுத்துகை

ஐ. கடன்பாட்டாளர்களுக்கான அறிவித்தல்: கடன் உடன்படிக்கையானது பிணையுறுதியாகப் பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் விபரமான விபரணங்களுடன் சேர்த்து மீள் மதிப்பீட்டின் தன்மை மற்றும் கால இடைவெளிகளின் விபரமான விளக்கங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ஒ. வெளிவாரி மதிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவு மற்றும் கட்டண அமைப்பின் நடைமுறைகள்

3. அசையாச் சொத்துக்கள்

3.1 இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக, அசையாச் சொத்து என்பது ஏதேனும் காணி, காணி மற்றும் கட்டடம் அல்லது பின்வருவன உள்ளிட்ட நோக்கங்களுக்காக கையேற்கப்பட்ட அல்லது வைத்திருக்கின்ற ஏதேனும் உரிமைகள் என பொருள்படுதல் வேண்டும்.

அ. தடையுரிமை செய்யப்பட்ட சொத்துக்கள் உட்பட ஏதேனும் உரிமம்பெற் நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் வசதிகளுக்கெதிரான பிணையுறுதியாகப் பெறப்பட்ட காணி, காணி மற்றும் கட்டடம்

ஆ. இலங்கை கணக்கீட்டு நியமம், உதாரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம் 16: சொத்து, பொறி மற்றும் சாதனங்கள் என்பனவற்றிற்கிணங்க, அளவிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபாரத்தினை கொண்டு நடத்தும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கையேற்கப்பட்ட காணி, காணி மற்றும் கட்டடங்கள்.

இ. இலங்கை கணக்கீட்டு நியமம், உதாரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம் 40: முதலீட்டுச் சொத்து என்பதற்கிணங்க அளவிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முதலீடுகளாக கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கையேற்கப்பட்ட காணி, காணி மற்றும் கட்டடங்கள்.

4 மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள்

4.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

அ.1 இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக் அல்லது

ii. அத்தகைய உறுப்பினர் தரத்தில் 5 ஆண்டு அனுபவத்துடன்கூடியதொரு பட்டதாரி உறுப்பினராக் அல்லது

iii. துணை உறுப்பினர் அங்கத்துவத்தினைப் பூர்த்திசெய்ய எடுக்கும் 10 ஆண்டு காலத்திற்குச் சமனான கால அனுபவத்துடன் உறுப்பினராக அனுமதிக்கப்படும் நேரத்தில் துணை உறுப்பினராக இருந்த பட்டதாரி உறுப்பினரொருவர் அல்லது

iv. துணை உறுப்பினர் தரத்தில் 10 ஆண்டு அனுபவத்தினைக் கொண்ட துணை உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும்.

ஆ.2 ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக் அல்லது

ii. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் ஏதேனுமொரு உறுப்பினர் தரத்தில் 3 ஆண்டுகள் அனுபவத்தினைக் கொண்ட வேறு எவரேனும் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

ஆ. அசையாச் சொத்துக்கள் மதிப்பீட்டினை மேற்கொள்கின்ற உள்ளக மதிப்பீட்டாளர்கள் மேலே பணிப்புரை 4.1 அ இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5. உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான குறைந்த அடிப்படை

5.1 அசையாச் சொத்துக்கள் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீடுகளுக்காக பொருத்தமான குறைந்த அடிப்படையொன்றினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

5.2 செயற்படாக் கடன்களைப் பொறுத்தவரையில், வெளிநின்ற மூலதனத் தொகை ரூ.1,000,000 இற்கும் குறைவானதாக அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் மூலதனத்தில் 0.1 சதவீதமாக, இதில் எது குறைவானதோ அதற்கான வசதி/ வசதிகள் தொடர்பில் உள்ளக மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. மதிப்பீடுகளின் கால இடைவெளி

6.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளது கால இடைவெளி பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ. செயற்படாதனவாக விளங்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மூன்றாண்டு பழமைக்குக் கூடுதலானதாக இருக்கக்கூடாது.

ஆ. மேலே பணிப்புரை 3.1ஆ மற்றும் இ இல் குறிப்பிட்டபட்டவாறான அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு பின்வருமாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

i. அத்தகைய அசையாச் சொத்துக்கள் கொண்டிருக்கின்ற சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற ஏதேனும் குறிப்பிடத்தக்க மற்றும் தளம்பல் மாற்றங்களினைப் பொறுத்து வருடாந்தம் அல்லது

ii. குறைந்தபட்சம் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குமொரு முறை

7. சுயாதீனம் மற்றும் வெளிப்படுத்துகை

7.1 ஒவ்வொரு நிதிக் கம்பனியும் வெளிவாரி மதிப்பீட்டாளர்களின் சுயாதீனமான தன்மையினையும் கீழே தரப்பட்டுள்ளவாறான விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் ஆண்டறிக்கையில் அல்லது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் அவை வெளிப்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

அ. அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து எழும் ஏதேனும் அக்கறைகளின் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக வெளிவாரி மதிப்பீட்டாளர் தொடர்பான தரப்பினராக இருக்கக்கூடாது.

ஆ. பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மதிப்பீட்டுக் கொள்கை அசையாச் சொத்துக்களின் அளவீடு மற்றும் அங்கீகாரம் தொடர்பான வெளிப்படுத்துகைகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஆண்டறிக்கையில் அல்லது காணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் இடம்பெறுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின்**
**ஆளுநரும்**

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 05ஆம் இலக்கம்** 2018 யூன் 07

**உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்பட்டது

உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையானது பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது.

3. பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விலக்கல்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள் பின்வருவனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது.

(i) சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனி அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு, எது எவ்வாறிருப்பினும் அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது; அத்துடன்

(ii) நிதி மற்றும் ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதிக் குத்தகை முறையின் கீழ் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்கு.

3.2 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்கும் பொழுது உள்ளக வரையறைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 06ஆம் இலக்கம்** 2018 ஒகத்து 24

**உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்பட்டது

உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையானது பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது.

3. பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விலக்கல்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள் பின்வருவனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது.

(i) சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனி அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு, எது எவ்வாறிருப்பினும் அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது;

(ii) நிதி மற்றும் ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதிக் குத்தகைவிடும் முறையின் கீழ் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்கு; அத்துடன்

(iii) அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தேச சலுகை அடிப்படையிலான குத்தகை வசதியின் கீழ் அரச பணியிலுள்ள கள அலுவலர்களுக்கும் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் உந்து ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு.

3.2 அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்கும் பொழுது உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் உள்ளக வரையறைகளையும் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 07ஆம் இலக்கம்** 2018 செத்தெம்பர் 04

**வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல் தொடர்பான பணிப்புரைகளை நாணயச் சபை விடுத்திருக்கிறது.

1. ஏற்புடைத்தன்மையும் செயற்பரப்பும்

1.1 வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகள் செலவுச் சிக்கனங்களையும் ஏனைய நன்மைகளையும் கொண்டுவரும் என்பதுடன் வெளியிலிருந்து பணிகளை வழங்குகின்ற ஒருவர் பணிகளை வழங்கும் பொழுது இழைக்கின்ற தவறுகளின் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் இடர்நேர்வுத் தோற்றப்பாடு அதிகரிக்கக்கூடும் என்பதுடன் இது கீர்த்திமிக்க தன்மைக்கும், இணங்குவிப்பிற்கும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கும் இட்டுச்செல்லுகின்றது.

1.2 இப்பணிப்புரைகள் நிதியியல் பணிகளை வழங்குவதில் நேரடியாக தொடர்புபடாத அஞ்சல், கூரியர், உணவு வசதிகளை வழங்குதல், வீடுகளைப் பராமரித்தல், சுகாதாரம், பாதுகாப்பு, அச்சிடல் பணிகள் (உ-ம் விண்ணப்பப்படிவம், சிற்றேடுகள், கூற்றுக்கள்) தொடர்பூட்டல், ஒப்பந்த ரீதியிலான ஆட்சேர்ப்பு, தற்காலிக அடிப்படையிலான ஆட்சேர்ப்பு, கொடுப்பனவுப் பட்டியல் மற்றும் செயலகத் தொழிற்பாடுகள் போன்ற பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடைத்தாகமாட்டா.

| | | | |
|---|---|---|---|
| 2. | வெளியாட்களுக்கு வழங்கமுடியாத செயற்பாடுகள்/ தொழிற்பாடுகள் அல்லது நடவடிக்கைகள் | 2.1 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று பின்வருவன தவிர்ந்த அதன் செயற்பாடுகள்/ தொழிற்பாடுகள் அல்லது நடவடிக்கைகளை வெளியாட்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.<br>அ. வைப்புக்களைத் திரட்டும் மற்றும் எடுப்பனவு செய்தல் என்பனவற்றுடன் தொடர்பான பணிகள்<br>ஆ. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முகாமைத்துவம்<br>இ. இணங்குவிப்புத் தொழிற்பாடுகள்<br>ஈ. வாடிக்கையாளர்களை நுணுக்கமாக ஆராய்தல் மற்றும் உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்துகொள்ளும் நடைமுறை<br>உ. திறைசேரி முகாமைத்துவம்<br>ஊ. இடர்நேர்வு முகாமைத்துவம்<br>எ. உபாயத்திட்டமிடல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளுதல்<br>ஏ. கடன்களுக்கு ஒப்புதலளித்தல்<br>ஐ. கீழே தரப்பட்டுள்ள பணிப்புரைகள் 6 இற்கு உட்பட்டு உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகள்<br>ஒ. கீழே தரப்பட்டுள்ள பணிப்புரைகள் 7 இற்கு உட்பட்டு தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான பணிகள்<br>ஓ. கீழே தரப்பட்டுள்ள பணிப்புரைகள் 8 இற்கு உட்பட்டு சந்தைப்படுத்தல் மற்றும் அறவிடல் பணிகள்<br>ஔ. நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் செயற்பாடுகள்/ தொழிற்பாடுகள் |
| 3. | பொதுவான நிபந்தனைகள் | 3.1 | ஒவ்வொரு நிதிக் கம்பனியும் வெளியிலிந்து பணிகளை வழங்குபவர்களுடன் எல்லா நேரங்களிலும் சட்ட ரீதியாக பிணிக்கும் உடன்படிக்கையினை இதனகத்துப்பின்னர் “பணிகளை வெளியாட்களிடம் ஒப்படைக்கும் ஒழுங்குகள்” கொண்டிருத்தல் வேண்டும். |
| | | 3.2 | வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளை அத்தகைய செயற்பாடுகள்/ தொழிற்பாடுகள் அல்லது நடவடிக்கைகளை ஆற்றுவதற்குரிய சிறப்பியல்பு வாய்ந்த மூலவளங்களையும் இயலாற்றலையும் நிபுணத்துவத்தினையும் கொண்டுள்ள பணி வழங்குவோருடன் மாத்திரமே மேற்கொண்டிருத்தல் வேண்டும். |
| | | 3.3 | வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் அல்லது ஊழியர்கள் அத்துடன்/ அல்லது பணிப்பாளரின் அல்லது ஊழியரொருவரின் நெருங்கி உறவினர் கணிசமமான நலவுரித்துக்களைக் கொண்டுள்ள பணி வழங்குநருடன் மேற்கொள்ளலாகாது. |
| | | 3.4 | வெளியிலிருந்து பணிகளை வழங்குபவர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தாய்க் கம்பனியாக அல்லது மற்றுமொரு தொடர்பான கம்பனியாக இருக்கும் பொழுது உரிமம்பெற்ற கம்பனி 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரை அல்லது திருத்தப்பட்டவாறான பணிப்பாளரால் குறித்துரைக்கப்பட்ட “தொடர்பான தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களின்” தொடர்பான ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். |
| 4. | வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஒழுங்குகள் | 4.1 | வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகள் குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்<br>அ. பணிகளின் தரங்கள் உட்பட வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளின் செயற்பரப்பு<br>ஆ. புதுப்பித்தல்/ மீளபேரம் பேசுவது மீது பிரயோகிக்கத்தக்க உடன்படிக்கை மற்றும் நிபந்தனைகளின் காலம்<br>இ. தொடர்புபட்ட தரப்பினரின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்<br>ஈ. உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்கள்<br>உ. இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு<br>ஊ. தடங்கலற்ற வியாபார முகாமைத்துவம்<br>எ. செயலாற்ற மதிப்பீட்டு பொறிமுறை<br>ஏ. வெளியர்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளினைக் கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல்<br>ஐ. கணக்காய்வு மற்றும் பரிசோதனைகள்<br>ஒ. பிணக்குகளுக்கு தீர்வு காணுதல்<br>ஓ. தவறுகளை முடிவுறுத்தல் மற்றும் அதிலிருந்து நேரகாலத்துடன் வெளியேறல்<br>ஔ. துணை ஒப்பந்தங்களைச் செய்தல் |

5. சபை மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் பொறுப்பாண்மை

க. பிரயோகிக்கத்தக்க சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முன்மதியுடைய தேவைப்பாடுகள்

**5.1 ஒப்புதல் மற்றும் காத்திரமான மேற்பார்வை**

அ. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபை (இதனகத்துப் பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மற்றும் மூத்த முகாமைத்துவம் என்பன வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளை மேற்பார்வை செய்வதற்கும் வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைப்பதனால் தோன்றும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் பொறுப்பானவையாகும்.

ஆ. வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளை ஆளுகை செய்வதற்கு சபை வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் கொள்கைக் கட்டமைப்பிற்கு ஒப்புதல் வழங்குதல் வேண்டும். கொள்கையானது குறைந்தபட்சம் கீழேயுள்ள தேவைப்பாடுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

i. வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளிலிருந்து தோற்றக்கூடிய இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் காத்திரமான முகாமைத்துவத்திற்குமான பொறிமுறையொன்று

ii. வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளுக்கு ஒப்புதலளிக்கின்ற சிறப்பு அதிகார சபை

iii. வெளியிலிருந்து பணிகளை வழங்குபவர்களை தெரிவுசெய்வதற்கு பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள்

iv. வெளியாட்களிடம் ஒப்படைக்கப்படவுள்ள ஒவ்வொரு நடவடிக்கை அல்லது செயற்பாடு அல்லது செயன்முறையின் செலவு நன்மைப் பகுப்பாய்வு

v. வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஒழுங்குகளின் கீழ் நடைமுறைப்படுத்தும் ஒப்பந்தப் பொறுப்பினை செயற்படுத்துவதற்கு பணி வழங்குநரின் ஆற்றல், திறன் மற்றும் கட்டணமுறை/ அடிப்படை என்பனவற்றை மதிப்பிடும் நடைமுறை அத்துடன்

vi. வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் அனைத்து ஒழுங்குகளினதும் மீளாய்வு செயன்முறையினை அறிக்கையிடும் செயன்முறை

இ. வெளியிலிருந்து பணிகளை வழங்குபவர்களுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் அனைத்து ஒழுங்குகளும் வெளியிலிருந்து பணிகளை பெற்றுக்கொள்ளும் கொள்கைக் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு சபையின் அல்லது சிறப்பு ஒப்புதலளிக்கும் அதிகார சபையின் ஒப்புதலைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**5.2 நடைமுறைப்படுத்தல்**

சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் கொள்கைக் கட்டமைப்புடன் இசைந்து செல்லும்விதத்தில் வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு மூத்த முகாமைத்துவம் பொறுப்பாக இருக்கிறது.

**5.3 கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு**

அ. சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் கொள்கைக் கட்டமைப்புடன் வெளியிலிருந்து பணிகளை பெற்றுக்கொள்ளும் அனைத்து ஒழுங்குகளும் இணங்கி நடப்பதனை உறுதிப்படுத்துவதற்காக, மூத்த முகாமைத்துவம், ஒன்றில் உள்ளக அலகினால் அல்லது வெளிவாரித் தரப்பினால் கிரமமான இடைவெளிகளில் சுயாதீனமான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

ஆ. மூத்த முகாமைத்துவம், குறைந்தபட்சம் வருடாந்தமாவது வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகளின் காத்திரமான தன்மையினை மதிப்பிடவேண்டும் என்பதுடன் அம்மதிப்பீட்டினது பெறுபேறுகளின் அடிப்படையில் அத்தகைய ஒழுங்கினை தொடர வேண்டுமா என்பதனை தீர்மானித்தலும் வேண்டும்.

6. உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாட்டினை வெளியாட்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்

6.1 கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றுவது தவிர, உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று அதன் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாட்டினை வெளியாட்களுக்கு வழங்கக்கூடாது.

அ. உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று செலவுச் சிக்கனம், மேம்பட்ட வினைத்திறன் மற்றும் மூலவளத் தடைகளை சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்துவது என்பன தொடர்பில் நியாயப்படுத்தக்கூடிய காரணங்களை கொண்டிருக்குமாயின் ரூ.15 பில்லியனுக்குக் குறைவான மொத்தச் சொத்துக்களைக் கொண்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனி அதன் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகள் முழுவதையும் வெளியாட்களிடம் வழங்கலாம்

ஆ. ரூ. 15 பில்லியனுக்குக் கூடுதலான மொத்த சொத்துக்களைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று பணிமனையிலேயே உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமொன்றினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கிளை மற்றும் தகவல் முறைமை கணக்காய்வு மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த கணக்காய்வு பொறுப்புக்களையும் வெளியாட்களுக்கு ஒப்படைக்கலாம்.

6.2 வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்ட கணக்காய்வுப் பொறுப்புக்களில் பொறுப்பாண்மையும் கட்டுப்பாடுகளும் சபையின் கணக்காய்வுக் குழுவின் தலைவரிடமே தொடர்ந்தும் இருத்தல் வேண்டும். சபையின் கணக்காய்வுக் குழு, 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரை அல்லது திருத்தப்பட்டவாறான பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறான ஏற்பாடுகளுடன் இணங்கிச்செல்வதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

6.3 உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிவாரி கணக்காய்வாளர் குழுவிலிருந்து நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரொருவரிடமிருந்து பெற்றக்கொள்ளல் வேண்டும்.

- அ. அத்தகைய கணக்காய்வாளர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தற்போதைய வெளிவாரி கணக்காய்வாளராக இருக்கக்கூடாது
- ஆ. அத்தகைய கணக்காய்வாளர் நிறுவனம் முன்னர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வெளிவாரிக் கணக்காய்வுப் பொறுப்பில் ஈடுபட்டிருந்திருக்குமாயின், அத்தகைய நியமனத்தினை 2 ஆண்டு "பொறுதிக் காலத்தின்" பின்னரே மேற்கொள்ளுதல் வேண்டும்.

6.4 உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை வழங்குபவர் ஏதேனும் முகாமைத்துவப் பணிகளை நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் முகாமைத்துவ உறுப்பினர் அல்லது ஊழியர்களுக்குச் சமமான இயலளவைக்கொண்டவர் என்ற ரீதியில் ஆற்றுதல்கூடாது.

6.5 உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை வழங்குபவர் இரண்டாண்டு காலப்பகுதிக்குள் பணிகளை மேற்கொள்ளவோ அல்லது மறுதலையாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் செயற்பாடுகள்/ தொழிற்பாடுகள் அல்லது நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனைப் பணிகளை வழங்கவோகூடாது.

**7. தகவல், தொழில்நுட்பத் தொழிற்பாடுகளை வெளியாட்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்**

7.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று பின்வரும் செயற்பாடுகள் தவிர்ந்த தகவல் தொழில்நுட்பவியல் செயற்பாடுகளை வெளியாட்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடாது என்பதுடன் வெளியாட்களிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வதனூடாக செலவுச் சிக்கனம் மேம்பட்ட வினைத்திறன் மற்றும் சிறந்த மூலவள இயலாற்றல் என்பனவற்றை பெற்றுக்கொள்ளக்கூடியதாவுமிருத்தல் வேண்டும்

- அ. பிரயோகம்/ முறைமைகளின் அபிவிருத்தி, பரீட்சிப்புக்கள், பேணல் மற்றும் ஆதரவுப் பணிகள்
- ஆ. தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு முகாமைத்துவம், பேணல் மற்றும் ஆதரவுப் பணிகள்
- இ. உதவிப்பீடங்கள்
- ஈ. வலையமைப்பு நிருவாகம்
- உ. அனர்த்த மீட்பு ஆதரவுப் பணிகள்
- ஊ. மையமல்லா வியாபார நடவடிக்கைகளின் தரவுப் பதிவுத் தொழிற்பாடுகள்
- எ. இலத்திரனியல் வங்கித்தொழில் முறைமைகளின் (உ-ம் இணையத்தள வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில், தொலை - வங்கித்தொழில்) அபிவிருத்தி, பேணல் மற்றும் ஆதரவுப் பணிகள்
- ஏ. வெப்தள வசதிகள் மற்றும் பேணல்
- ஐ. கொடுகடன்/ பற்று/ தன்னியக்கக்கூற்றுப் பொறி அட்டை அச்சிடல்
- ஒ. மேலேயுள்ளவை தவிர்ந்த வேறுஏதேனும் செயற்பாடுகள்/ நடவடிக்கைகளை பணிப்பாளரின் முன்னொப்புதலுடன் வெளியாட்களிடம் ஒப்படைக்கலாம்.

**8. சந்தைப்படுத்தல் மற்றும் அறவிடல் செயற்பாடுகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்**

8.1 வாடிக்கையாளர்களுடன் நேரடியாக பணிகளில் ஈடுபடுகின்ற வெளியிலிருந்தான பணிகளை வழங்குகின்றவரின் அலுவலர்கள் அவர்களது பொறுப்புக்களை கவனத்துடனும் முன்மதியுடனும் கையாள்வதற்கும் 2008ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையினதும் (நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு) அல்லது திருத்தப்பட்டவாறான பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகவும் முறையாகப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு உட்பட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனி சந்தைப்படுத்தல் மற்றும் அறவிடல் செயற்பாடுகளை வெளியாட்களிடம் ஒப்படைக்கலாம்.

8.2 வெளியிலிருந்து பணிகளை வழங்குபவர் எவரினதும் நடத்தை தொடர்பில் இலங்கை மத்திய வங்கி ஏதேனும் எழுத்து மூலமான/ வாய் மூலமான முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுமாயின், பணிப்பாளர் மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் வெளியாட்களிடமிருந்து பெறப்படும் அத்தகைய ஒழுங்குகளை இடைநிறுத்துவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கின்றார்.

**9. நடைமுறைப்படுத்தல்**

9.1 இப்பணிப்புரைகள் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து நடைமுறைக்குவருதல் வேண்டும்.

**10. மாற்றத்திற்கு உள்ளாகின்ற ஏற்பாடுகள்**

10.1 உரிமம்பெற்ற நிதியியல் கம்பனியொன்று மேலே 2.1இல் குறிப்பிடப்பட்டுள்ள மைய வியாபார செயற்பாடுகளை/ தொழிற்பாடுகளை அல்லது நடவடிக்கைகளை ஏற்கனவே வெளியாட்களிடம் ஒப்படைத்திருக்குமாயின், வழங்கப்பட்ட ஒப்புதல் இப்பணிப்புரை நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதிக்குள் காலாவதியாதல் வேண்டும்.

11. வெளியாட்களிடமிருந்து பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகள் தொடர்பான பதிவேடு மற்றும் அறிக்கையிடல்

11.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனி வெளியாட்களிடம் ஒப்படைக்கும் பணி தொடர்பான ஒழுங்குகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட பதிவேடொன்றினைப் பேணுதல் வேண்டும்.

11.2 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், அடுத்துவரும் நிதியியல் ஆண்டுப் பகுதியில் வெளியாட்களிடம் ஒப்படைக்கப்படக்கூடிய பணிகளின் ஒழுங்குகள் பற்றிய உத்தேச பட்டியலொன்றினை இணைப்பு 1 இலுள்ள படிவத்தில் பணிப்பாளருக்கு நிதியியல் ஆண்டின் முதல் மாதம் முடிவடைவதற்கு முன்னர் அறிவித்தல் வேண்டும்.

12. விளக்கங்கள்

12.1 **"வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் ஒழுங்குகள்"** என்பது பணி வழங்குநரொருவர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் சார்பில் தொடர்ச்சியான அடிப்படையில் செயற்பாடுகளை/ தொழிற்பாடுகளை ஆற்றுகின்றதொரு ஒழுங்காகும். இந்நடவடிக்கை வழமையாக அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகயினால் மேற்கொள்ளப்படக்கூடியதொன்றாகும்.

12.2 **"பணி வழங்குநர்"** என்பது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தாய்க்கம்பனி அல்லது இன்னொரு தொடர்பான கம்பனியை உள்ளடக்கி, வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒழுங்குகளின் கீழ் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு பணிகளை வழங்குகின்ற ஒரு நிறுவனத்தினைக் குறிப்பதுடன் அனைத்து துணை ஒப்பந்தக்காரர்களையும் உள்ளடக்குகிறது.

12.3 **"துணை ஒப்பந்தக்காரர்"** என்பது வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையினை முழுமையாக அல்லது பகுதியளவில் ஆற்றுவதற்காக பிரதான பணி வழங்குபவருடன் நேரடியாக அல்லது மறைமுகமாக ஒழுங்குகளில் நுழைகின்ற ஒரு நிறுவனத்தனைக் குறிக்கிறது.

12.4 **"பணிப்பாளர்"** என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

12.5 **"நெருங்கிய உறவினர்"** என்பது வாழ்க்கைத் துணைவர் மற்றும் தங்கியிருக்கும் பிள்ளைகளைக் குறிக்கும்.

12.6 **"கணிசமான ஈடுபாடு"** என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவு கொண்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

12.7 **"சொத்துக்கள்"** என்பது பணிப்புரை 6.1இல் குறிப்பிடப்பட்ட, இறுதியாக கிடைக்கத்தக்கதாகவுள்ள கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலுள்ள மொத்தச் சொத்துக்களைக் குறிக்கிறது.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**இணைப்பு I**

**வெளியாட்களிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள**
**செயற்பாடுகள்/ தொழிற்பாடுகள் அல்லது நடவடிக்கைகளின் பட்டியல்** **ஆண்டு ..........**

| வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடு/ தொழிற்பாடு அல்லது நடவடிக்கை | பணிகளை வழங்குகின்றவர்கள் பெயர் | முகவரி | ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி | உடன்படிக்கைக் காலம் | வழங்கப்படத்தக்க/ ஆற்றப்படத்தக்க பணிகள் | செலவு (ஆண்டிற்கு) |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 08ஆம் இலக்கம்** 2018 செத்தெம்பர் 04

**2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்)**
**பணிப்புரை மீதான பணிப்புரைக்களுக்கான திருத்தம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், நாணயச் சபை 2013 யூன் 07ஆம் திகதியிடப்பட்ட 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரையின் 3.1 பணிப்புரையினை நீக்குவதற்காக பின்வரும் பணிப்புரையினை இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கிறது.

1. ஏற்புடைத்தன்மையும் செயற்பரப்பும் — இப்பணிப்புரையானது 2018ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க நிதித்தொழில் சட்ட பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.

2. நீக்குதல் — 2013 யூன் 07ஆம் திகதியிடப்பட்ட 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரையின் பணிப்புரை 3.1 இத்தால் நீக்கப்படுகிறது.

3. நடைமுறைப்படுத்தல் இப்பணிப்புரைகள், இப்பணிப்புரைகளின் திகதியிலிருந்து நடைமுறைக்குவருதல் வேண்டும்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 09ஆம் இலக்கம்** 2018 ஒத்தோபர் 01

**உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி இறக்குமதியினையும் அதன் விளைவாகச் செலாவணி வீதத்தின் மீது தோன்றும் மோசமான தாக்கத்தினையும் கட்டுப்படுத்தும் நோக்குடன், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் 2018 ஒத்தோபர் 1 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டது.

1. பின்வருவன உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 2.1 இற்குப் பதிலீடாக அமையும்.

   உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மறுஅறிவித்தல் வரை அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

   (i) முதற்பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதிக்கு இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத ஊர்திகளைப் பொறுத்தவரை;

**அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
|---|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஈ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகு பாரவண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், வான்கள் மற்றும் கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% | |

   (ii) முதற்பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலம் இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 10ஆம் இலக்கம்** 2018 திசெம்பர் 03

**நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் தொடர்பில் நாணயச் சபை பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. பிரயோகத்தன்மையும் செயற்பரப்பும்

   1.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட நுண்பாக நிதிக்கடன் தொடர்பில் வாடிக்கையாளர்கள் மீது மிக கடுமையான வட்டி வீதம் விதிக்கப்பட்டு வருவதிலிருந்தும் அவர்களை பாதுகாக்கும் குறிக்கோளுடன் நுண்பாக நிதிக் கடன்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதம் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

   1.2 இப்பணிப்புரையானது, இப்பணிப்புரையின் திகதியிலிருந்து வழங்கப்பட்ட அனைத்து நுண்பாக நிதிக் கடன்களுக்கும் ஏற்புடைத்தானதாக இருக்கும்.

2. வட்டியின் உயர்ந்தபட்ச வீதம்

   2.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்கள் மீது மற்றைய அனைத்து விதிப்புக்களும் உட்பட ஆண்டொன்றிற்கு 35 சதவீதத்தினை விஞ்சுகின்ற விதத்தில் விதிப்புக்கள் எதனையும் விதித்தலாகாது.

3. நுண்பாக நிதிக் கடன்களின் வரைவிலக்கணம்

   3.1 நுண்பாக தொழில்முயற்சிகளை உருவாக்குகின்றமை மற்றும் முகாமைப்படுத்துகின்றமைக்கான கடன்கள் உட்பட, வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக தனிப்பட்டவர்களுக்கு/ குழும கடன் வழங்கல் முறைமையின் கீழுள்ள தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.

| | | |
|---|---|---|
| 4. அறிக்கையிடும் தேவைப்பாடுகள் | 4.1 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்களை குறியீடு 1.1.4.12.0.0 - நிதியியல் தகவல் வலையமைப்பிலுள்ள நுண்பாக நிதிக் கடன்கள் (பின்நெட்) கூற்று என்பிடி-எம்எவ்-01-பீஎஸ் ஐந்தொகையின்கீழ் அறிக்கையிடுதல் வேண்டும். |
| 5. விளக்கங்கள் | 5.1 | "நுண்பாக தொழில்முயற்சிகள்" என்பது ரூ.15 மில்லியனுக்குக் குறைவான வருடாந்த மொத்தப் புரள்வினையும் 10 இற்கும் குறைவான ஊழியர்களையும் கொண்டுள்ள தயாரிப்பு மற்றும் பணிகள் துறையிலுள்ள தொழில்முயற்சிகள் எனப் பொருள்படும். (மூலம்: கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் வழங்கப்பட்ட சிறிய, நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு). |

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**சுற்றறிக்கை 2018இன் 01ஆம் இலக்கம்** 2018 மாச்சு 13

கொடுகடன் தரமிடல்

அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் கொடுகடன் தரமிடல் தொடர்பில் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. முக்கியமான இறுதித் திகதிகள் | 1.1 | நிறுவனத்திற்கான கொடுகடன் தரமிடலைப் பெறுவதற்கும் அதன்படி கீழ் கையொப்பமிட்டவருக்கு அறிவிப்பதற்குமாக, இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரொருவருடன் 2018 ஏப்பிறல் 30ஆம் திகதியளவில் உடன்படிக்கையொன்றினை செய்து கொள்ளுதல் வேண்டும். |
| | 1.2 | நிறுவனத்திற்கான கொடுகடன் தரமிடலை, கொடுகடன் தரமிடல் முகவரிடமிருந்து பெற்று 2018 ஒத்தோபர் 01ஆம் நாளவில் பிரசுரித்தல் வேண்டும். |
| 2. கொடுகடன் தரமிடல் முகவர்களின் பட்டியல் | 2.1 | இந்நோக்கத்திற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கொடுகடன் தரமிடல் முகவர்களிளொருவரை தெரிவு செய்யவும்.<br>அ) பிட்ஜ்ரேட்டிங் லங்கா லிமிடெட்<br>ஆ) ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட் |
| | 2.2 | 2.1 இலுள்ள பட்டியலில் ஏதேனும் மாற்றங்கள் இருக்குமாயின் தேவையான நடவடிக்கைகளுக்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் அதுபற்றி அறிவிப்பார். |
| 3. ஏனைய நிபந்தனைகள் | 3.1 | 2018 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களையும் படுகடன்களையும் திரட்டுவதற்கான அனைத்து விளம்பரங்களிலும் நிறுவனத்தின் வெப்தளத்திலும் பிரசுரிக்கப்படும் நிதியியல் கூற்றுக்களிலும் வியாபாரத் தலங்களிலும் கொடுகடன் தரமிடல் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| | 3.2 | கொடுகடன் தரமிடல் குறைந்தபட்சம் ஆண்டு தோறும் இற்றைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் தரமிடல் அறிக்கையினை அறிக்கைத் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தலும் வேண்டும். |

டபிள்யு. ரணவீரா
**பதில் பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்**
**மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

**நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டப் பணிப்புரைகள் 2018 இலக்கம் 01** 2018 சனவரி 22

**நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளின்படி, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதியியல் வாடிக்கையாளர்களின் உரிமைகளினதும் நலவுரித்துக்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்தில் அனைத்துச் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் பணிப்புரைகளை விடுத்திருக்கின்றார்.

| | | |
|---|---|---|
| 1. ஏற்புடைத்தன்மையும் செயற்பரப்பும் | 1.1 | ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் இப்பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினைப் பின்பற்றுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இப்பணிப்புரைகளின் குறிக்கோள் யாதெனில் வாடிக்கையாளர் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதும் இத்துறையின் உறுதிப்பாட்டையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்காக ஆரோக்கியமான உறவுமுறைகளைப் பேணுவதும் வாடிக்கையாளர் நம்பகத்தன்மையினை வலுப்படுத்துவதுமேயாகும். |

1.2 ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் கீழே பணிப்புரை 3இல் குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர் பாதுகாப்பின் குறைந்தபட்ச நியமங்களையும் இப்பணிப்புரையில் இணைக்கப்பட்டுள்ள விபரமான வழிகாட்டல்களையும் பின்பற்றுதல் வேண்டும்.

2. பணிப்பாளர் சபையின் வகிபாகமும் பொறுப்பாண்மையும்

2.1 நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பானது கம்பனி ஆளுகை, கலாச்சாரம் மற்றும் சபையின் உபாயத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் என்பனவற்றில் மிக முக்கியமானதொரு பகுதியாக விளங்குகின்றது.

2.2 சபையானது இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர் பாதுகாப்புத் தொடர்பான குறைந்தபட்ச நியமங்களை அனைத்து ஊழியர்களும் நியமிக்கப்பட்ட முகவர்களும் பின்பற்றுகின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக, சபை, பொருத்தமான கண்காணிப்புப் பொறிமுறை நடைமுறைக்கிடப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3. வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான குறைந்தபட்ச நியமங்கள்

3.1 **வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படையான தன்மை**
வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் சாதனங்கள்/ பணிகள் பற்றி முழுமையான, தெளிவான, பொருள் விளங்கக்கூடிய, துல்லியமான மற்றும் தவறாக வழிநடத்தப்படாத தகவல்கள் வழங்கப்பட வேண்டுமென்பதுடன் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை அவர்கள் எடுப்பதற்கு அவர்களை இயலுமைப்படுத்தும் சாதனங்கள்/ பணிகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அவர்கள் பெறவும் அவற்றை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

3.2 **வாடிக்கையாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு**
வாடிக்கையாளர்கள் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்க அவர்களுக்கு உதவும் விதத்தில் அவர்களின் அறிவினையும் நிதியியல் சாதனங்கள்/ பணிகள் தொடர்பான விளக்கங்களையும் மேம்படுத்தப் பொருத்தமான பொறிமுறைகள் விருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

3.3 **பொறுப்புமிக்க வியாபார நடத்தை**
வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் பொழுது ஊழியர்களும் முகவர்களும் சரியான தேர்ச்சி, கவனிப்பு மற்றும் நுணுக்கம் நிறைந்த கவனிப்புடனும் தொழில்சார் நிபுணத்துவத்துடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

3.4 **முறைப்பாடுகளைக் கையாளல் மற்றும் நிவாரணம்**
வாடிக்கையாளர்கள் முறைப்பாடுகளைச் செய்வதற்கும் நிவாரணப் பொறிமுறைகளைப் பெறுவதற்குமான வசதிகள் கிடைக்கத்தக்கதாகவும் தாங்கக்கூடிய விதத்திலும் சுயாதீனமாகவும் நியாயமானதாகவும் பொறுப்புக்கூறும் விதத்திலும் உரிய நேரத்தில் வினைத்திறனுடனும் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

3.5 **சமத்துவமாகவும் நியாயமாகவும் நடத்துதல்**
அனைத்து வாடிக்கையாளர்களும் நிறுவனத்துடனான அவர்களது தொடர்புகளின் அனைத்துக் கட்டங்களிலும் சமத்துவமாகவும் நேர்மையாகவும் நியாயமாகவும் நடத்தப்படுதல் வேண்டும்.

3.6 **வாடிக்கையாளர்களின் தரவுகளையும் தனிப்பட்ட விபரங்களையும் பாதுகாத்தல்**
அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் வாடிக்கையாளர்களின் தரவுகளையும் தனிப்பட்ட விபரங்களையும் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

4. நடைமுறைப்படுத்தல்

4.1 அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் இப்பணிப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4.2 அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை பின்பற்றுவது தொடர்பாக ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய ஊழியர்களிடமிருந்தும் (அவர்கள் வேலைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர்) நியமிக்கப்பட்ட முகவர்களிடமிருந்தும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

4.3 அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினைத் தமது வெப்தளத்தில் வெளியிட வேண்டுமென்பதுடன் வாடிக்கையாளர்கள் கோருமிடத்து அவர்கள் விரும்பும் மொழியில் அவற்றின் படிகளை வழங்க வேண்டியதுடன் அவசியமான நேரத்தில் அவர்களுக்கு அறிவூட்டவும் வேண்டும்.

டபிள்யு. ரணவீர
**பதில் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு**

**சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு தொடர்பான விபரமான வழிகாட்டல்கள்**

**அறிமுகம்**

இது சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வாடிக்கையாளர்களின் உரிமைகளையும் நலவுரித்துக்களையும் பாதுகாக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பின் குறைந்தபட்ச நியமங்களுடன் இணங்கியொழுகுவதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது.

1. வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படையான தன்மை

1.1. வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் சாதனங்கள்/ பணிகள் பற்றி பூரணமான, தெளிவான, பொருள் விளங்கக்கூடிய, துல்லியமான தவறாக வழிநடத்தாத தகவல்களை வழங்குதல் வேண்டும். வழங்கப்படும் தகவல்கள் வாடிக்கையாளர் விரும்பும் மொழிகளில் அதாவது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

1.2. சாதனம்/ பணிகள் பற்றிய முக்கிய தகவல்கள்

1.2.1. விளம்பரங்கள் மேற்கொள்ளப்படும் கட்டம்

அ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் செய்யப்படும் எந்தவொரு வடிவிலுமான அனைத்து விளம்பரங்களும் வாடிக்கையாளர்களைத் தவறாக வழிநடத்தாத நோக்குடன் வழங்கப்படும் சாதனங்கள்/ பணிகள் தொடர்பில் விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும் உண்மையான தகவல்களைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். வெளியிடப்பட்ட எந்தவொரு விளம்பரம் தொடர்பிலும் கோரிக்கைவிடுக்கும் பட்சத்தில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி தெளிவுபடுத்தல்களை வழங்குதல் வேண்டும்.

ஆ. மேலும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் பொதுவான மற்றும் குறிப்பிட்ட சாதனம் தொடர்பான விளம்பரப்படுத்தலின் போது இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் விடுக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

1.2.2. ஒப்பந்தத்திற்கு முன்னரான கட்டம்

அ. ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் அவற்றின் சாதனம்/ பணிகளுக்காக "முக்கியமான விடயங்களைக் கொண்ட ஆவணம்" வடிவிலமைந்த நியமப்படுத்தப்பட்ட ஆவணத்தினை அச்சுவடிவில் அல்லது இலத்திரனியல் வடிவில் அமைந்த இலகுமொழியில் எழுதப்பட்ட ஆவணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் கம்பனி வெப்தளத்திலும் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

ஆ. இவ்வாவணம் கடன் சாதனங்கள் தொடர்பில் பின்வரும் அடிப்படைத் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. சாதனத்தின் தன்மை, வட்டி வீதங்கள், தண்டங்கள், ஏனைய விதிப்புக்கள் மற்றும் கட்டணங்கள், தரகுகள் உட்பட சாதனத்தின்/ பணியின் முக்கிய பண்புகள்.

ii. சாதனங்கள்/ பணிகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்.

iii. முக்கியமான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்.

iv. சாதனம்/ பணிகள் தொடர்பில் ஏற்புடைத்தான சட்ட ஏற்பாடுகள்.

v. முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறை

இ. இவ்வாவணம் படுகடன் சாதனங்கள் தொடர்பில் பின்வரும் அடிப்படைத் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. ஏதேனும் வசதிகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் உட்பட, வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய நிதியியல் மற்றும் ஏனைய நன்மைகள்.

ii. நேரகாலத்துடனான மீட்பு போன்றவை மீதான நிபந்தனைகள் போன்ற படுகடன் சாதனங்கள் தொடர்பான ஏனைய ஏற்புடைத்தான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்.

ஈ. வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களை ஒப்பந்தங்களைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கக்கூடாது என்பதுடன் சாதனங்கள்/ பணிகள் பற்றி தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ள அவர்களுக்கு நியாயமான காலத்தினையும் வழங்குதல் வேண்டும்.

1.2.3. ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் கட்டம்

அ. அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் தொடர்பான சட்டங்கள்/ பணிப்புரைகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, பொருத்தமான விதத்தில் சாதனங்கள்/ பணிகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தல் வேண்டும்.

ஆ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் பின்வருவன உட்பட சாதனங்கள்/ பணிகளின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் பண்புகள் பற்றி வாடிக்கையாளர்களுக்குத் தெளிவாக விளக்குதல் வேண்டும்.

i. வட்டி விதிப்புக்களைக் கணிக்கும் முறை உட்பட வாடிக்கையாளர்களினால் செலுத்தப்படுவதற்குக் கோரப்படும் ஏதேனும் வட்டி வீதங்கள், கட்டணங்கள் மற்றும் தரகுகள் போன்ற பொதுவான விதிப்புக்களின் விபரங்கள்.

ii. முறைப்பாடுகளைப் பெறுவது மற்றும் அவற்றிற்குத் தீர்வுகாணும் பொறிமுறைகளுக்கான சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் நடவடிக்கை முறைகள்.

iii. வாடிக்கையாளர் அவரின்/ அவளின் கடப்பாடுகள் தொடர்பில் ஏதேனும் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் அறவிடல் நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் போது சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு ஏற்படும் செலவுகளை வாடிக்கையாளர்களிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ளுதல்.

iv. படுகடன் சாதனங்களின் நேரகாலத்துடனான மீட்பு போன்ற முதலீடுகள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்.

v. வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்படும் சாதனம்/ பணிகளில் முதிர்ச்சிக்கு முன்னரான மீளப்பெறுகைகள்/ பங்கேற்பினை முடிவுறுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் தொடர்பான வாடிக்கையாளர்களினால் செலுத்தப்பட வேண்டிய தண்டங்கள் மற்றும் நேரகாலத்துடனான தீர்ப்பனவுக் கட்டணங்கள்.

vi. சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அடிமட்ட அளவிற்கு மேலான கொடுக்கல்வாங்கல்கள் என்பன தொடர்பான விதிகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல்.

vii. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் நிதியியல் சாதனங்கள் மற்றும் பொறுப்புக்கள் காணாமல் போகும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்கள் பின்பற்ற வேண்டிய அறிக்கையிடல் வழிமுறைகள்.

viii. வாடிக்கையாளர்களின் தகவல்களைப் பெறுவதற்கு சட்ட ரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட தரப்பினருக்கு வாடிக்கையாளர்களின் தகவல்களை வெளிப்படுத்தல்.

இ. கடன் சாதனங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் வழங்கல் கடிதம்/ சாதனக் கூற்றுக்களை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அவை குறைந்தபட்சம் பின்வரும் அடிப்படைத் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. கடன்பாட்டாளரின் பெயர்.

ii. ஒப்பந்த இலக்கம் (கடன் தொடர்பு இலக்கம்).

iii. வழங்கப்பட்ட தொகை.

iv. வழங்கப்பட்ட திகதி மற்றும் கடனின் காலம்.

v. வட்டி வீதமும் அதன் அடிப்படையும் (பெயரளவு அல்லது தாக்கமுள்ள).

vi. மீள்கொடுப்பனவுக் காலம் மற்றும் தவணைகளின் கால இடைவெளி (நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம் அல்லது வேறு ஏதேனும் அடிப்படை).

vii. வழங்கப்பட்ட பிணையின் விபரங்கள்.

viii. காப்புறுதி, மதிப்பீடு, ஆவணப்படுத்தல், பதிவுசெய்தல் போன்ற மேலதிகக் கட்டணங்களின் பிரிப்பு (ஏற்புடைத்தாயின்).

ix. தாமதமான கொடுப்பனவு காணப்படும் சந்தர்ப்பத்தில் தண்ட வீதம் (ஆண்டிற்கு).

x. வாடிக்கையாளர் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் அறவிடல் நடவடிக்கைகள். (சொத்துக்களை மீள உடமையில் வைத்திருத்தல், செயன்முறைகளுடன் தொடர்புபட்ட செலவுகள், மீள உடமையில் வைத்திருப்பதற்குப் பின்னரான நடவடிக்கைகள், ஏற்புடைத்தான மற்றைய கட்டணங்கள் போன்றவை).

xi. கடன்களை உரிய காலத்திற்கு முன்னர் தீர்ப்பனவு செய்வது தொடர்பில் ஏற்புடைத்தான நிபந்தனைகள்.

xii. நுண்பாக நிதிக் கடன்களைப் பொறுத்தவரையில் கள அலுவலர்கள் குழும உறுப்பினர்களிடம் விஜயம் செய்யும் நாள் மற்றும் நேரம் போன்ற அறவிடல் நடவடிக்கைகள் மற்றும் சேகரிப்பு நிலையங்களின் விபரங்கள் போன்றவற்றை குறித்துரைத்தல் வேண்டும். இயற்கை அனர்த்தங்கள் மற்றும் எதிர்பாரா சம்பவங்களின் காரணமாக ஆரம்பச் சேகரிப்பு அட்டவணையில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது பற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

ஈ. படுகடன் சாதனங்களைப் பொறுத்தவரையில், அனைத்துச் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் ஏற்புடைத்தானவிடத்து தொடர்பான சட்டங்கள்/ பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தல் வேண்டும்.

**1.2.4. கோரிக்கையின் மீது**

கோரிக்கையின் மீது கடன் சாதனங்களுக்காக சாதனக் கூற்றொன்றினை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அது பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

i. அறிக்கையிடுகின்ற காலப்பகுதிக்கான விபரமான கொடுக்கல்வாங்கல் தகவல்கள் (உ-ம்: வாடிக்கையாளர் கணக்கிற்கான விடயங்கள் அடிப்படையிலான கொடுகடன்கள், வரவுகள் மற்றும் பற்றுக்கள்).

ii. பயனுறு வட்டி வீதம் மற்றும் காலப்பகுதிக்காக விதிக்கப்பட்ட வட்டி விதிப்பு.

iii. காலப்பகுதிக்காக விதிக்கப்பட்ட கட்டணம்.

iv. தவணைத் திகதி மற்றும் வெளிநின்ற நிலுவை.

1.2.5. பெறப்பட்ட சாதனங்கள்/ பணிகள் மற்றும் அவற்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், விளக்கமளிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அது பற்றி விளங்கிக் கொண்டமை தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய எழுத்து மூலமான உறுதிப்படுத்தலொன்றினை வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1.2.6. சாதனங்கள்/ பணிகள் தொடர்பிலான அனைத்து ஆவணங்களும் பூரணப்படுத்தப்பட்டு வாடிக்கையாளர்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத ஆவணங்களை ஏற்றுக்கொள்ளுவதும் வெற்றுத்தாள்களில்/ ஆவணங்களில் கையொப்பங்களைப் பெறுவதும் தடைசெய்யப்பட்டவையாகும்.

1.2.7. சாதனங்கள்/ பணிகள் மீது இணங்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் ஏதேனும் மாற்றங்களைச் செய்வதாயின் அம்மாற்றங்களைச் செய்வதற்கு முன்னர் வாடிக்கையாளர்களுக்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும்.

**1.3. பொதுவான வெளிப்படுத்துகைகள்**

அ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வியாபாரத் தலங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

i. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் உரிமங்கள்.

ii. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் பிந்திய தொகுப்பொன்று.

iii. முக்கியமான மாதிரிப்படுத்தல்களுடன் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் கொடுகடன் தரமிடல்.

iv. வழிகாட்டலின் பிரிவு 4.1 இன்படி, வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளுகின்ற ஆளைத் தொடர்பு கொள்வதற்கான முக்கிய தொடர்பு விபரங்கள்.

v. நிதியியல் ஆலாட்சி அதிகாரியைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்.

vi. வியாபார நேரங்கள் மற்றும் விடுமுறை அறிவித்தல்கள்.

ஆ. மேற்குறிப்பிட்டவை உட்பட கம்பனி வெப்தளத்தில் பின்வரும் தகவல்களும் எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

i. கடன் சாதனங்கள் மீதான தற்போதைய அடிப்படை வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய விதிப்புக்கள் (சாத்தியமானவிடத்து).

ii. பிரிவு 1.2.2. (அ)இன் கீழான வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள்.

2. வாடிக்கையாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு

2.1. பயனுறு நிதியியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்

அ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி ஒன்று அதன் சொந்தமான அல்லது கைத்தொழில் சங்கங்களின் பங்குடமையுடன் நிதியியல் சாதனங்கள்/ பணிகளின் மீதான வாடிக்கையாளர் விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காக குறித்துரைக்கப்பட்ட நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும். நிதியியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் இலக்கிடப்பட்ட மக்களின் தேவைகளையும் நிதியியல் அறிவினையும் பூர்த்தி செய்யும் விதத்தில் வடிவமைக்கப்படல் வேண்டும்.

ஆ. நிதியியல் கல்விக் கருவிகள் அச்சிடப்பட்ட சிற்றேடுகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், பயிற்சிக்குரிய கட்புலச் சாதனங்கள் (உ-ம்: நாணய முகாமைத்துவம், படுகடன் முகாமைத்துவம், சேமிப்புக்கள்) ஒன்றிலொன்று வினைத்திறனாற்றும் கடன் கணிப்பிகள், முக்கிய செய்திகள் (உ-ம்: உங்கள் பணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், உங்கள் சாதனங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள், நியதிகளையும் நிபந்தனைகளையும் வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள், உங்கள் கூற்றுக்களைப் பரிசோதித்துப் பாருங்கள், சரியான நேரத்தில் உங்கள் கடன் தவணைப் பணத்தினைச் செலுத்துங்கள், கட்டணங்களையும் விதிப்புக்களையும் விளங்கிக் கொள்ளுங்கள். உங்கள் தனிப்பட்ட அடையாள இலக்கங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்) போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

இ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் சாதனம்/ பணிகள் தொடர்பில் உதாரணமாக நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம், ஈட்டுச் சட்டம், அடகுபிடித்தல் கட்டளைச் சட்டம் என்பன தொடர்பில் ஏற்புடைத்தான சட்ட ஏற்பாடுகளின் மீது வாடிக்கையாளர்களுக்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் கல்வியூட்டுதல் வேண்டும்.

2.2. நிதியியல் ஒழுக்காற்றுக்களை ஊக்குவித்தல்

வாடிக்கையாளர்களின் குறிப்பாக, பாதிக்கப்படக்கூடிய தொகுதியினரின் இயலாற்றலையும் நிதியியல் அறிவினையும் ஆழமாக்குவதற்காக நிதியியல் கல்வியும் தகவல் ஏற்பாடுகளும் அதிகரிக்கப்படுதல் வேண்டும். மிகையான கடன்பாடுகள், பல்வேறு கடன்பாடுகளின் விளைவுத்தன்மைகள் மற்றும் பிந்திய மீள்கொடுப்பனவுகள் போன்றவை பற்றி குறித்துரைக்கப்பட்ட எச்சரிக்கைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

3. பொறுப்புமிக்க வியாபார நடத்தை

3.1. **வாடிக்கையாளரையும் பொருத்தமான தன்மையினையும் தெரிந்து கொள்ளுதல்:** வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் வாடிக்கையாளர்களின் பொருத்தமான நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் சாதனங்களை வழங்குவதற்காகவும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் நியமிக்கப்பட்ட முகவர்களும் தேவையான மூலவளங்களையும் நடவடிக்கைகளையும் நடைமுறைக்கிடுதல் வேண்டும். இது தொடர்பில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் நியமிக்கப்பட்ட முகவர்களும் பின்வருவன பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

அ. **உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்:** வாடிக்கையாளருக்குப் பொருத்தமான சாதனங்கள்/ பணிகளை விதந்துரைப்பதற்கு, முன்வைப்பதற்கு அல்லது வழங்குவதற்கு முன்னர் போதுமான தகவல்களைத் திரட்டிப் பதிவுசெய்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு திரட்டப்பட்ட தகவல்களின் மட்டம் வாடிக்கையாளர்களினால் எதிர்பார்க்கப்படும் சாதனம்/ பணிகளின் சிக்கலான தன்மைகளுக்குப் பொருத்தமானவையாக இருத்தல் வேண்டும்.

ஆ. **பொருத்தமான தன்மையினை மதிப்பிடல்:** சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் அல்லது நியமிக்கப்பட்ட முகவர்கள் சாதனங்கள்/ பணிகள் வாடிக்கையாளர்களின் தேவைகளையும் அவர்களின் குறிக்கோள்களையும் அத்தகைய சாதனங்கள்/ பணிகளுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளை வாடிக்கையாளர்கள் நிதியியல் ரீதியாக தாங்கிக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றார்களா என்பதனையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

இ. **மிகையான கடன் சுமைகளைத் தடுத்தல்**

i. சாதனத்துடன் இணைந்து காணப்படும் நிதியியல் கடப்பாடுகளை வாடிக்கையாளர்கள் பூர்த்தி செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக புதிய கொடுகடன் சாதனங்களை அல்லது பணிகளை வழங்கும் பொழுது வாடிக்கையாளர்களின் கொடுகடன் நம்பகத்தன்மையினை பொருத்தமான விதத்தில் மதிப்பீடு செய்வதுடன் வாடிக்கையாளர் மீள்கொடுப்பனவு இயலாற்றல் பகுப்பாய்வினையும் பொருத்தமான விதத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ii. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் சபை மற்றும் மூத்த முகாமைத்துவம், வாடிக்கையாளர்களின் மிகையான கடன் சுமையின் இடர்நேர்வு பற்றி அறிந்திருக்க வேண்டியதுடன் கரிசனைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். உயர்ந்தபட்ச படுகடன் தீர்ப்பனவு/ வருமான விகிதம் (உதாரணமாக படுகடன் தீர்ப்பனவிற்கு பிரயோகிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர்களின் செலவிடத்தக்க வருமானத்தின் உயர்ந்தபட்ச சதவீதம்) அடையாளம் காணப்படுதல் வேண்டும்.

iii. வாடிக்கையாளர்களின் தற்போதைய கொடுகடன் நம்பகத்தன்மைக்கு அப்பால் ஏற்படக்கூடிய மிகையான கொடுகடன் இடர்நேர்வுகளைத் தடுக்கும் பொருட்டு இன்னொரு நிதியியல் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஏற்கனவேயுள்ள கடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் புதிய கடன்களை வழங்குவதனை மட்டுப்படுத்தல் வேண்டும்.

iv. மிகையான படுகடன் சுமையினைத் தடுப்பதற்கு ஆதரவளிக்கின்ற கொடுகடன் தகவல் பணியகம் போன்ற கொடுகடன் முகாமைத்துவ முறைமைகளை சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் பயன்படுத்துதல் வேண்டும்.

**3.2. வாடிக்கையாளர்களிடம் தனிப்பட்ட முறையில் விஜயம் செய்தல் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்தல்**

சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் ஊழியர்கள் அல்லது முகவர்கள் பின்வருமாறு நடந்து கொள்ளுதல் வேண்டும்;

அ. நியாயமான அறிவித்தலை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களிடம் விஜயம் செய்ய வேண்டியதுடன் அத்தகைய விஜயங்கள் பகல் நேரங்களிலேயே இடம்பெறுதல் வேண்டும்.

ஆ. நோக்கம், விஜயம் செய்த திகதி மற்றும் நேரம் அதற்கு வாடிக்கையாளரின் சுருக்கமான பதிலிறுப்பு என்பனவற்றை உள்ளடக்கிய விஜயம் தொடர்பில் தனியான பதிவேடொன்றினைப் பேணுதல்.

இ. ஏற்கனவேயுள்ள அல்லது வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களுடன் தொலைபேசித் தொடர்புகளை மேற்கொள்ளும் பொழுது உரிய ஆள் அவரின் அல்லது அவளின் பெயரைக் குறிப்பிடுவதன் மூலம் தன்மை அடையாளம் காட்டிக் கொண்டு யாரின் சார்பில் வாடிக்கையாளர் தொடர்பு கொள்கிறாரோ அந்த சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் பெயரைக் குறிப்பிட்டு தொடர்பு கொள்வதுடன் தொடர்பின் வர்த்தக நோக்கங்களையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**3.3. ஊழியர்களையும் நியமிக்கப்பட்ட முகவர்களையும் கண்காணித்தல்:** சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், பொருத்தமற்ற வியாபார நடத்தைகளையும் நியாயமற்ற இடர்நேர்வுகள் இடம்பெறுவதனையும் தடுக்கும் பொருட்டு வாடிக்கையாளர்களுடன் நேரடியாக செயற்படுகின்ற ஊழியர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட முகவர்களின் நடத்தைகளை உத்வேகம் மிக்க விதத்திலும் கிரமமான முறையிலும் கண்காணிக்கும் பொறிமுறையொன்றினை சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் கொண்டிருத்தல் வேண்டும்.

**3.4. ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல்:** சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் நியமிக்கப்பட்ட முகவர்களினதும் ஊழியர்கள் (குறிப்பாக, வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்புகளை மேற்கொள்கின்ற கொடுகடன் அலுவலர்கள், அறவிடல் அலுவலர்கள், சந்தைப்படுத்தல் அலுவலர்கள், முறைப்பாடுகளைக் கையாளும் அலுவலர்கள், வாடிக்கையாளர் பணிப் பிரதிநிதிகள்) பொருத்தமான பயிற்சியையும் தகைமையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**3.5. ஊதியக் கொள்கை**

அ. பொறுப்புமிக்க வியாபார நடத்தைகளை ஊக்குவிப்பதற்காகவும் நியாயமற்ற இடர்நேர்வுகள் இடம்பெறுவதனை ஊக்கமிழக்கச் செய்வதற்காகவும் வாடிக்கையாளர்களுடன் நேரடியாகத் தொடர்புகளைப் பேணுகின்ற ஊழியர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட முகவர்களுக்காக சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஊதியக் கொள்கையொன்று வடிவமைக்கப்படல் வேண்டும்.

ஆ. ஊழியர்களுக்கு யதார்த்த பூர்வமான விற்பனை இலக்குகளை வழங்க வேண்டுமென்பதுடன் அவை அத்தகைய ஊழியர்களின் தனிப்பட்ட இயலாற்றல்களுக்குள் அமைந்தனவாகவும் இருத்தல் வேண்டும்.

இ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் ஊழியர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட முகவர்களின் ஊதியங்கள் விற்பனைச் செயலாற்றத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை என்பதனையும் வாடிக்கையாளர்களின் மிகச் சிறந்த ஈடுபாடுகளுடன் தொடர்பான வாடிக்கையாளர் திருப்தி, கடன் மீள்கொடுப்பனவுச் செயலாற்றம், வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்ளும் தன்மை, ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்/ சிறந்த நடைமுறை வழிகாட்டல்கள் என்பனவற்றிற்கு இணங்கியொழுதல் மற்றும் ஒழுக்கவியல் கோவை போன்ற காரணிகளும் அதனுள் உள்ளடங்கியிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**3.6. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் நியமிக்கப்பட்ட ஊழியர்களினதும் முகவர்களினதும் பொறுப்பாண்மை**

ஊழியர்களும் நியமிக்கப்பட்ட முகவர்களும் பின்வரும் நடைமுறைகளைத் தவிர்த்தல் வேண்டும்:

அ. வாடிக்கையாளர்களைத் தொந்தரவு செய்தல்.

ஆ. கடன் சேகரிப்பு நடைமுறைகளில் துர்ப்பிரயோகங்களைப் பயன்படுத்தல்.

இ. வாடிக்கையாளர்கள் தகவல்களை இன்னொருவருக்கு வெளிப்படுத்தல்.

ஈ. சாதனம்/ பணிகள் பற்றி பொய்யான அல்லது பிழையாக வழிநடத்தக்கூடிய தகவல்களை வழங்குதல்.

உ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் சாதனங்கள்/ பணிகளை வாங்குமாறு அல்லது அவற்றுடன் தொடர்புகளைக் கொண்டிருக்குமாறு வாடிக்கையாளர்கள் மீது அல்லது பொதுமக்களின் மீது வேண்டத்தகாத செல்வாக்குகளைத் திணித்தல்.

ஊ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு வெளியே பிணை ஆவணங்களை கையொப்பமிடல். எனினும், நியாயமான சூழ்நிலைகளின் காரணமாக சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வியாபாரத் தலத்திற்கு வெளியே ஒப்பந்தங்களில் கையொப்பமிட வேண்டிய தேவையொன்று எழுமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

**3.7. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் சாதனங்கள்/ பணிகளின் புறக்கீடுகள்/ இரத்துக்களுக்கான இழப்பீடு**

ஏற்கனவே தொழிற்பாட்டிலுள்ள குறிப்பாக, வைப்புச் சாதனங்களை புறக்கீடு செய்தல் அல்லது முடிவுறுத்தல் செய்வதற்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்று எதிர்பார்க்கும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்கள் ஏற்கனவேயுள்ள பொறிமுறை மற்றும் இழப்பீட்டுத் திட்டங்களின் கீழ் நியாயமான காலப்பகுதியொன்றில் இழப்பீடுகளைப் பெறுவதற்கான உரிமையினைக் கொண்டிருப்பதுடன் தேவைப்படுமாயின் அத்தகைய புறக்கீடுகள்/ முடிவுறுத்தல்கள் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

**3.8. தண்ட வீதங்களை விதித்தல்**

தண்ட வட்டி வீதத்தின் மீதான கொள்கை, வாடிக்கையாளர்களின் உண்மையான இடர்ப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு படுகடன் தீர்ப்பனவுகளை ஊக்குவிக்கும் பொருட்டு நியாயமானதொரு விதத்தில் ஆளுகை செய்யப்படல் வேண்டும்.

4. முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் நிவாரணம்

**4.1. உள்ளக முறைப்பாட்டுக் கையாளல் பொறிமுறை**

அ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் அதன் வாடிக்கையாளர்களின் மனக்குறைகளையும் முறைப்பாடுகளையும் கவனிக்கின்ற விதத்தில் முறைப்பாட்டுக் கையாளல் கொள்கையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. வாடிக்கையாளர்கள் வெளிவாரி உதவிகளைப் பெறவிரும்புவதற்கு முன்னதாக உள்ளக முறைப்பாட்டுக் கையாளல் செயன்முறையினூடாகத் தீர்வு காண்பதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

இ. வாடிக்கையாளர்களினால் செய்யப்படும் முறைப்பாடுகளைக் கையாளவும் அவை தொடர்பான தீர்வுகளுக்கு வசதியளிப்பதற்குமாக

ஒவ்வொரு வியாபாரத் தலத்திலும் பொறுப்புமிக்க அலுவலரொருவரிடம் அப்பொறுப்பினை ஒப்படைத்தல் வேண்டும். அத்தகைய அலுவலரின்/ அலுவலர்களின் பொறுப்பாண்மையில் அதற்கு தீர்வு காணப்படாவிடின் அதற்கு தீர்வு காணப்படும் வரை அதற்கு அடுத்துள்ள உயர் அதிகாரிகளிடம் அடுத்த தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

ஈ. அனைத்து வாடிக்கையாளர்களினதும் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்காக தரவுத்தளமொன்று நிறுவப்பட்டு தரவுத் தளத்திற்குப் பொறுப்பாக ஒரு அலுவலர் நியமிக்கப்பட வேண்டும். அந்த அலுவலரை தீர்வு காணப்படாத முறைப்பாடுகளை காலத்திற்குக் காலம் கம்பனியின் மூத்த முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுவதற்குப் பொறுப்பாக்குதல் வேண்டும். மூத்த முகாமைத்துவம் தீர்வு காணப்படாத விடயத்தின் மீது சரியான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தல் வேண்டும்.

உ. வியாபாரத் தலத்தில் வாடிக்கையாளர்கள் அத்தகைய முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

ஊ. ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளினால் அனுப்பி வைக்கப்படும் வாடிக்கையாளர் முறைப்பாடுகளை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

எ. எந்தவொரு முறைப்பாடுகள் தொடர்பிலும் நியாயமானதொரு குறுகிய காலப்பகுதிக்குள் அது கிடைத்தமை பற்றி எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் முறைப்பாடுகளுக்கு தீர்வு காணும் விதத்தில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியினால் முறைப்பாட்டு நடவடிக்கைகள் தொடரப்படும் என்பது பற்றியும் முறைப்பாடுகளைக் கையாளும் அலுவலர்/ அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்களையும் அறிவித்தல் வேண்டும் (இந்நோக்கத்திற்காக, கம்பனி பொருத்தமான சொற்பதங்களுடன் கூடிய அச்சிடப்பட்ட படிவத்தினை பயன்படுத்தலாம்).

ஏ. முறைப்பாடுகளை வாய்வழியில் பெற்றுக் கொள்வதற்கு அல்லது எழுத்து மூலம் பெற்றுக் கொள்வதற்கு வசதியளித்தல் வேண்டுமென்பதுடன் முறைப்பாடுகளை எழுத்து மூலம் மாத்திரமே செய்வது அவசியமென வற்புறுத்தக்கூடாது.

ஐ. முறைப்பாடுகளைக் கையாளுகின்ற செயன்முறையின் எந்தவொரு கட்டத்திலும் வாடிக்கையாளர்கள் நியாயமற்ற விதத்தில் நடத்தப்படக்கூடாது.

**5. வாடிக்கையாளர்களைச் சமத்துவமாகவும் நியாயமான விதத்திலும் நடத்துதல்**

**5.1. சமத்துவமாகவும் நியாயமாகவும் நடத்துதல்**

அனைத்து வாடிக்கையாளர்களும் அவர்களது சாதி, சமயம், மொழி, பால், வயது போன்றவற்றினைக் கருத்திற் கொள்ளாது அவர்களது அனைத்துக் கட்டத் தொடர்புகளிலும் சமமாகவும் நியாயமாகவும் நடத்தப்படுதல் வேண்டும்.

**5.2. சிறப்புக் கவனிப்பும் கவனமெடுத்தலும்**

வயது முதிர்ந்த, உடல் ஊனமுற்ற அல்லது குறைந்த நிதியியல் அறிவினைக் கொண்ட வாடிக்கையாளர் போன்றோர் நியாயமான நிதியியல் பணிகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் அவர்களுக்கான வசதிகளைப் பெறும் விதத்தில் சிறப்புக் கவனிப்புக்களைப் பெறுவதற்கு உரித்துடையவராவர்.

**6. வாடிக்கையாளர் தரவு மற்றும் தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்**

**6.1. தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாத்துக் கொள்ளல்**

அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் ஏற்புடைத்தான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வாடிக்கையாளர் தரவுகளையும் தனிப்பட்ட விடயங்களையும் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானதாகும்.

**6.2. கொடுகடன் தகவல் பணியக அறிக்கையிடல் முறைமையும் தரவுகளைப் பகிர்ந்து கொள்ளலும்**

வாடிக்கையாளர்களுக்கு, அவர்கள் தொடர்பான தனிப்பட்ட தரவுகளைக் கொடுகடன் தகவல் பணியகத்துடன் பகிர்ந்து கொள்வது தொடர்பில் அவர்களுக்குப் பொருத்தமான விதத்தில்/ முழுமையாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவர்கள் தொடர்பில் வைத்திருக்கப்படும் தரவுகளின் நோக்கம் மற்றும் நிபந்தனைகள், செயன்முறை மற்றும் பகிர்ந்தளிப்பு என்பன தொடர்பில் இரகசியத்தன்மை விதிகள் பின்பற்றப்படுதலும் வேண்டும்.

**நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 02ஆம் இலக்கம்** 2018 பெப்புருவரி 8

**உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுவிக்கப்படுகின்றது.

கொள்வனவு நோக்கத்திற்காக அல்லது உந்து ஊர்திகளின் பயன்பாட்டிற்காக சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறார்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழான அதிகாரமளிப்பு | 1.1 | நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின் நியதிகளில் நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் பிரிவு 3இன் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பகிரங்கக் கம்பனிகளாகவுள்ள பதிவுசெய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்குப் பொதுவான பணிப்புரைகளை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். |
| 2. | உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதம் | 2.1 | 2018 சனவரி 01ஆம் நாள் தொடக்கம், கொள்வனவு அல்லது ஊர்திகளின் பயன்பாட்டு நோக்கத்திற்காக ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியினராலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது. |

(i) முதல் பதவின் பின்னா் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற பதிவுசெய்யப்படாத ஊர்திகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளைப் பொறுத்தவரையில்

| அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம் | | | |
|---|---|---|---|
| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஇ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகு பாரவண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 70% | |

(ii) முதல் பதிவின் பின்னா் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடா்பில் 70 சதவீதம்.

3. உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விதிவிலக்கல்கள்

3.1 மேலேயுள்ள, பணிப்புரை 2இன் வரையறைகள், சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிக்கு அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்காகச் செய்யப்படும் ஊர்திகளின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு பிரயோகிக்கப்படகூடாது. எது எப்படியிருப்பினும், அத்தகைய ஊர்திகளுக்கான நிதியிடல் முதல் பதிவுத் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் எந்தவொரு ஆளுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் மாற்றல் செய்யப்படக்கூடாது.

3.2 இவ்வகையான ஊர்திகளுக்குக் கொடுகடன் வசதிகளை வழங்குகையில் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உள்ளக வரையறைகளைக் கொண்டிருக்க வேண்டியதுடன் போதுமானளவு இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

4. ஊர்திகளுக்கான ஏனைய கொடுகடன் வசதிகள்

4.1 மேலேயுள்ள பணிப்புரைகள் 2 மற்றும் 3 இற்கிணங்க வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தவிர உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக கொடுகடன் வசதிகளை சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்று வழங்கக்கூடாது.

5. விளக்கங்கள்

5.1 கொடுகடன் வசதிகள் என்பது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகள் மற்றும் ஊர்திகளின் கொள்வனவு அல்லது ஊர்திகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஏனைய கொடுகடன் வசதிகள் எனப் பொருள்படும்.

5.2 ஊர்தியின் பெறுமதியானது சந்தைப் பெறுமதியாகவிருத்தல் வேண்டும். ஊர்திகளின் விலை மதிப்பீட்டு நோக்கத்திற்காக சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் பின்வருவனவற்றை பயன்படுத்தலாம்.

(i) புத்தம் புதிய ஊர்திகள் - அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களால் வழங்கப்படும் பெறுமதி

(ii) மறுசீரமைப்புச் செய்யப்பட்ட ஊர்திகள் - சுங்கத்தில் பரிசீலனையில் கொள்ளப்பட்ட பெறுமதி அல்லது விநியோகத்தரினால் வழங்கப்படும் விலைப்பட்டியல்

(iii) பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் - தொழில்சார் விலை மதிப்பீட்டாளா் ஒருவரினால் வழங்கப்படும் பெறுமதி

5.3 விலை மதிப்பீடானது கடன் வசதி வழங்கப்படுகின்ற நேரத்தில் பெறப்பட்டுள்ளது என்பதனையும் அது உண்மையானதும் நியாயமானதுமான பெறுமதியினைத் தருகிறது என்பதனையும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உறுதி செய்தல் வேண்டும்.

5.4 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊர்தித் தொகுதிகள் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊர்திகள் எனப்பொருள்படுதல் வேண்டும்.

5.5 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது சுற்றுலாத் துறைக்கான பணியினை வழங்குவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் அல்லது ஏதேனும் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனி எனப் பொருள்படுதல் வேண்டும்.

5.6 3.1ஆம் பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ள கம்பனி என்பது பொருள் அல்லது பணிகள் போக்குவரத்து தொழில் நோக்கத்திற்காக ஏதேனும் அரச அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் தொழில் நிறுவனம் எனப் பொருள்படுதல் வேண்டும்.

6. முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல்

6.1 பின்வரும் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க (உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான) நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்.

(ii) 2017ஆம் ஆண்டின் 02ஆம் மற்றும் 03ஆம் இலக்க (உந்து ஊர்திகள் மீதான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம் மீதான) நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்.

டபிள்யு. ரணவீர
**பதில் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 03ஆம் இலக்கம்** 2018 யூன் 6

**மூலதன போதுமை தேவைப்பாடுகள்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்பட்டது

வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சிறப்பியல்புவாய்ந்த நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான குறைந்தபட்ச மூலதன போதுமை விகிதத்தினை கீழே தரப்பட்டவாறு தீர்மானித்திருக்கிறார்.

1. நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழான அதிகாரமளிப்பு

1.1 நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின் நியதிகளில், நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பீடு செய்யப்பட்ட பகிரங்கக் கம்பனிகளாக விளங்குகின்ற பதிவுசெய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடுகின்ற நிறுவனங்களுக்கு (இதனகத்துப்பின்னர் "சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்" எனக் குறிப்பிடப்படுகின்றன) பொதுவான பணிப்புரைகளை விடுப்பதற்கு பணிப்பாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2. குறைந்தபட்ச மூலதன போதுமைத் தேவைப்பாடுகள்

2.1 2018 யூலை 01ஆம் நாள் தொடக்கம் ஒவ்வொரு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் எல்லா நேரங்களிலும் கீழே அட்டவணை 1 மற்றும் 2 இல் விபரிக்கப்பட்டவாறு மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பேணுதல் வேண்டும்.

**அட்டவணை 1 - ரூ.100 பில்லியனுக்கு குறைவான சொத்துக்களைக் கொண்டுள்ள நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

| மூலதனக் கூறுகள் | 01.07.2018 | 01.07.2019 | 01.07.2020 | 01.07.2021 |
|---|---|---|---|---|
| 6.00 | 6.50 | 7.00 | 8.50 | 90% |
| 10.00 | 10.50 | 11.00 | 12.50 | 50% |

**அட்டவணை 2 - ரூ.100 பில்லியனை மற்றும் அதற்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்டுள்ள நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

| மூலதனக் கூறுகள் | 01.07.2018 | 01.07.2019 | 01.07.2020 | 01.07.2021 |
|---|---|---|---|---|
| அடுக்கு 1 மூலதனம் | 6.00 | 7.00 | 8.00 | 10.00 |
| மொத்த மூலதனம் | 10.00 | 11.00 | 12.00 | 14.00 |

2.2 மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூலதன போதுமை விகிதங்கள் இங்கேயுள்ள பின்னிணைப்பு அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான மூலதன போதுமை தேவைப்பாடுகள் மீதான கட்டமைப்பில் காட்டப்பட்டுள்ள முறையியல்கள் மற்றும் தேவைப்பாடுகளுக்கிணங்க கணிக்கப்படுதல் வேண்டும்.

3. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல்

3.1 ஒவ்வொரு நிதி குத்தகைக்குவிடும் கம்பனியும் மூலதன போதுமை தேவைப்பாடுகளின் கணிப்புத் தொடர்பான விபரங்களை பின்னிணைப்பு அட்டவணை II இல் தரப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையிடும் படிவங்கள் ஒவ்வொரு மாதத்தினதும் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறான நிலைமையினை அறிக்கையிடுவதுடன் அதனை வெப்பினை அடிப்படையாகக் கொண்ட முறைமையூடாக 15 நாட்களுக்குள் சமர்ப்பித்தலும் வேண்டும்.

4. இணங்குவிப்பு நிகழாத சந்தர்ப்பத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள்

4.1 மேற்குறிப்பிட்ட பணிப்புரைகளுக்கு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்று இணங்கி நடக்காத சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் பின்வருவனவற்றில் ஏதேனுமொன்று தொடர்பில் அல்லது பலவற்றின் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(i) பங்கிலாபங்களின் பகிர்ந்தளிப்பு மீது அல்லது இலாபங்களை இலங்கைக்கு வெளியில் அனுப்பும் நடவடிக்கைகளின் மீது கட்டுப்பாடுகளை விதித்தல்

(ii) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நியமங்களை மேலும் மோசமடையச்செய்யும் ஏதேனும் வியாபார நடவடிக்கைகளை இடைநிறுத்தல்

4.2 அத்தகைய இணங்கிச்செல்லாமைகள் சீர்செய்யப்படுமிடத்து மேற்குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை பணிப்பாளர் நீக்கிவிடுதல் வேண்டும்.

5. விளக்கங்கள்

5.1 இப்பணிப்புரைகளில்

(i) பிரிவு 2.1 இன் அட்டவணை 1 மற்றும் 2 தொடர்பில் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்றின் சொத்துக்களினது பெறுமதி, கிடைக்கத்தக்கதாயிருக்கும் பிந்திய கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ii) "பணிப்பாளர்" என்பதன் பொருள் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப்பொருள்படும்.

6. முன்னைய பணிப்புரையினை இரத்துச்செய்தல்

6.1 2011ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் (மூலதன போதுமை விகிதம்) பணிப்புரை இரத்துச்செய்யப்படுகின்றது.

டபிள்யு. ரணவீர

**பதில் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

அடிக்குறிப்பு: இப்பணிப்புரையின் பின்னிணைப்பு அட்டவணை I மற்றும் II என்பன https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Finance_Leasing_Act_Directions_No_3_of_2018_e.pdf இல் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

**நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 04ஆம் இலக்கம்** 2018 யூன் 06

**அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் (இதனகத்துப்பின்னர் பணிப்பாளர் என குறிப்பீடு செய்யப்படும்) சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பில் கீழே உள்ளவாறு பணிப்புரைகளை விடுத்திருக்கிறார்.

1. நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழான அதிகாரமளிப்பு

1.1 நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின் நியதிகளில், பணிப்பாளர், நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி(இ) இல் குறிப்பிடப்பட்டிருக்கும் பகிரங்கக் கம்பனிகளாகவுள்ள பதிவுசெய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கு (இதனகத்துப்பின்னர் "சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்" என குறிப்பிடப்படும்) பொதுவான பணிப்புரைகளை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார்.

2. பணிப்புரையின் செயற்பரப்பு

2.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான இப்பணிப்புரைகள் பின்வரும் நோக்கங்களுக்கு ஏற்புடைத்தானவையாக இருத்தல் வேண்டும்.

அ. 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்தல் அத்துடன்,

ஆ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டினை தேவைப்படுத்தும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் தற்பொழுது இடம்பெற்றுவரும் ஏனைய வியாபாரத் தேவைப்பாடுகள்

3. அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் கொள்கையொன்றினை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்

3.1 ஒவ்வொரு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொருத்தமான முன்மதியுடைய கொள்கைகளும் நடைமுறைகளும் நடைமுறையிலுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

3.2 மேலேயுள்ள பணிப்புரை 2.1 இல் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான கொள்கைகளையும் நடைமுறைகளையும் உருவாக்குகையில் ஒவ்வொரு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் பின்வரும் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

அ. கொள்கைகளை வடிவமைத்தல் அவற்றை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் ஏனைய தொடர்பான குழுக்களின் (உ-ம் கொடுகடன் குழு) பொறுப்பாண்மை

ஆ. உள்ளக மற்றும் வெளிவாரி இரண்டினையும் சேர்த்த மதிப்பீட்டாளர் குழுக்களை நியமித்தல்

இ. கீழேயுள்ள பணிப்புரை 5 இற்கு உட்பட்டு, மதிப்பீட்டாளர் குழுவினை (குழுக்களை) நியமிப்பதற்காக தகைமைபெற்ற மதிப்பீட்டாளரை அடையாளம் காணவும் தெரிவுசெய்வதற்குமான நடைமுறைகள்.

ஈ. மதிப்பீட்டு மாதிரியிலிருந்து பெறப்பட்ட அசையாச் சொத்தொன்றின் சந்தை மதிப்புக்களையும் அத்தகைய மதிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட தரவுகளின் நம்பகத்தன்மையையும் துல்லியத் தன்மைகளையும் மதிப்பிடுவதற்கான நடைமுறைகள்

உ. கீழேயுள்ள பணிப்புரை 6 இற்கு உட்பட்டு, விடயம் எதுவோ அதன் அடிப்படையில் அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிரான அசையாச் சொத்துக்கள் தொடர்பில் பெறப்பட்ட/ பெறப்படவுள்ள உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான ஆரம்ப மட்டம்.

ஊ. கீழேயுள்ள பணிப்புரை 7 இற்கு உட்பட்டு மதிப்பீட்டின் கால இடைவெளி

எ. உள்ளக மதிப்பீடுகளுக்கான மதிப்பீட்டு பிரமாணம்

ஏ. கீழேயுள்ள 8 ஆவது பணிப்புரைகளுக்குட்பட்டு சுயாதினம் மற்றும் வெளிப்படுத்துகை

ஐ. கடன்பாட்டாளர்களுக்கான அறிவித்தல்: கடன் உடன்படிக்கையானது பிணையுறுதியாகப் பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் விபரமான விபரணங்களுடன் சேர்த்து மீள் மதிப்பீட்டின் தன்மை மற்றும் கால இடைவெளிகளின் விபரமான விளக்கங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ஒ. வெளிவாரி மதிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவு மற்றும் கட்டண அமைப்பின் நடைமுறைகள்

4. அசையாச் சொத்துக்கள்

4.1 இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக, அசையாச் சொத்து என்பது ஏதேனும் காணி, காணி மற்றும் கட்டடம் அல்லது பின்வருவன உள்ளிட்ட நோக்கங்களுக்காக கையேற்கப்பட்ட அல்லது வைத்திருக்கின்ற ஏதேனும் உரிமைகள் என பொருள்படுதல் வேண்டும்.

அ. தடையுரிமை செய்யப்பட்ட சொத்துக்கள் உட்பட ஏதேனும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் வசதிகளுக்கெதிரான பிணையுறுதியாகப் பெறப்பட்ட காணி, காணி மற்றும் கட்டடம்

ஆ. இலங்கை கணக்கீட்டு நியமம், உதாரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம் 16: சொத்து, பொறி மற்றும் சாதனங்கள் என்பனவற்றிற்கிணங்க, அளவிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வியாபாரத்தினை கொண்டு நடத்தும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கையேற்கப்பட்ட காணி, காணி மற்றும் கட்டடங்கள்.

இ. இலங்கை கணக்கீட்டு நியமம், உதாரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம் 40: முதலீட்டுச் சொத்து என்பதற்கிணங்க அளவிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் முதலீடுகளாக கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கையேற்கப்பட்ட காணி, காணி மற்றும் கட்டடங்கள்.

5 மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள்

5.1 ஒவ்வொரு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

அ.1 இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக் அல்லது

ii. அத்தகைய உறுப்பினர் தரத்தில் 5 ஆண்டு அனுபவத்துடன்கூடியதொரு பட்டதாரி உறுப்பினராக் அல்லது

iii. துணை உறுப்பினர் அங்கத்துவத்தினைப் பூர்த்திசெய்ய எடுக்கும் 10 ஆண்டு காலத்திற்குச் சமனான கால அனுபவத்துடன் உறுப்பினராக அனுமதிக்கப்படும் நேரத்தில் துணை உறுப்பினராக இருந்த பட்டதாரி உறுப்பினரொருவர் அல்லது

iv. துணை உறுப்பினர் தரத்தில் 10 ஆண்டு அனுபவத்தினைக் கொண்ட துணை உறுப்பினரொருவராக் இருத்தல் வேண்டும்.

அ.2 ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக அல்லது

ii. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவனத்தின் ஏதேனுமொரு உறுப்பினர் தரத்தில் 3 ஆண்டுகள் அனுபவத்தினைக் கொண்ட வேறு எவரேனும் உறுப்பினராக் இருத்தல் வேண்டும்.

ஆ. அசையாச் சொத்துக்கள் மதிப்பீட்டினை மேற்கொள்கின்ற உள்ளக மதிப்பீட்டாளர்கள் மேலே பணிப்புரை 5.1 அ இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

6. உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான ஆரம்ப அடிப்படை

6.1 அசையாச் சொத்துக்கள் தொடர்பில் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்று உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீடுகளுக்காக பொருத்தமான ஆரம்ப அடிப்படையொன்றினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

6.2 செயற்படாக் கடன்களைப் பொறுத்தவரையில், வெளிநின்ற மூலதனத் தொகை ரூ.1,000,000 இற்கும் குறைவானதாக அல்லது சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் மூலதனத்தில் 0.1 சதவீதமாக, இதில் எது குறைவானதோ அதற்கான வசதி/ வசதிகள் தொடர்பில் உள்ளக மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

7. மதிப்பீடுகளின் கால இடைவெளி

7.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளது கால இடைவெளி பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ. செயற்படாதனவாக விளங்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மூன்றாண்டு பழமைக்கும் கூடுதலானதாக இருக்கக்கூடாது.

ஆ. மேலே பணிப்புரை 4.1ஆ மற்றும் இ இல் குறிப்பிட்டபட்டவாறான அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு பின்வருமாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

i. அத்தகைய அசையாச் சொத்துக்கள் கொண்டிருக்கின்ற சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற ஏதேனும் குறிப்பிடத்தக்க மற்றும் தளம்பல் மாற்றங்களினைப் பொறுத்து வருடாந்தம் அல்லது

ii. குறைந்தபட்சம் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குமொரு முறை.

8. சுயாதீனம் மற்றும் வெளிப்படுத்துகை

8.1 ஒவ்வொரு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் வெளிவாரி மதிப்பீட்டாளர்களின் சுயாதீனமான தன்மையினையும் கீழே தரப்பட்டுள்ளவாறான விதத்தில் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் ஆண்டறிக்கையில் அல்லது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் அவை வெளிப்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

அ. அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து எழும் ஏதேனும் அக்கறைகளின் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக வெளிவாரி மதிப்பீட்டாளர் தொடர்பான தரப்பினராக இருக்கக்கூடாது.

ஆ. பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மதிப்பீட்டுக் கொள்கை அசையாச் சொத்துக்களின் அளவீடு மற்றும் அங்கீகாரம் தொடர்பான வெளிப்படுத்துகைகள் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் ஆண்டறிக்கையில் அல்லது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் இடம்பெறுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

டபிள்யு. ரணவீர
**பதில் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 05ஆம் இலக்கம்** 2018 யூன் 07

**உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படுகிறது.

உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரையானது பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது.

3. பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விலக்கல்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள் பின்வருவனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது.

(i) சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனி அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு, எது எவ்வாறிருப்பினும் அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது; அத்துடன்

(ii) நிதி மற்றும் ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதிக் குத்தகை முறையின் கீழ் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்கு.

3.2 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்கும் பொழுது உள்ளக வரையறைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

டபிள்யு. ரணவீர
**பதில் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 06ஆம் இலக்கம்** 2018 ஒகத்து 24

**உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படுகிறது.

உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையானது பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது.

3. பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விலக்கல்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள் பின்வருவனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது.

(i) சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனி அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு, எது எவ்வாறிருப்பினும் அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது;

(ii) நிதி மற்றும் ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதி குத்தகைவிடும் முறையின் கீழ் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்கு; அத்துடன்

(iii) அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தேச சலுகை அடிப்படையிலான குத்தகை வசதியின் கீழ் அரச பணியிலுள்ள கள அலுவலர்களுக்கும் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் உந்து ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு.

3.2 அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்கும் பொழுது சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உள்ளக வரையறைகளையும் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

டபிள்யு. ரணவீர
**பதில் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**நிதிகுத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 07ஆம் இலக்கம்** 2018 ஒத்தோபர் 01

**உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி இறக்குமதியினையும் அதன் விளைவாகச் செலாவணி வீதத்தின் மீது தோன்றும் மோசமான தாக்கத்தினையும் கட்டுப்படுத்தும் நோக்குடன், நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகள் 2018 ஒத்தோபர் 1 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டது.

1. பின்வருவன உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 2.1 இற்குப் பதிலீடாக அமையும்.

உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக ஒவ்வொரு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மறுஅறிவித்தல் வரை அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(i) முதற்பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதிக்கு இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத ஊர்திகளைப் பொறுத்தவரை;

| அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம் | | | |
|---|---|---|---|
| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஈ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகு பாரவண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், வான்கள் மற்றும் கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% | |

(ii) முதற்பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலம் இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

டபிள்யு. ரணவீர
**பதில் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 08ஆம் இலக்கம்** 2018 திசெம்பர் 03

**நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் நுண்பாக நிதிக் கம்பனிகள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் தொடர்பில் பணிப்புரைகளை விடுத்திருக்கிறார்.

1. பிரயோகத்தன்மையும் செயற்பரப்பும்

1.1 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட நுண்பாக நிதிக்கடன் தொடர்பில் வாடிக்கையாளர்கள் மீது மிக கடுமையான வட்டி வீதம் விதிக்கப்பட்டு வருவதிலிருந்தும் அவர்களை பாதுகாக்கும் குறிக்கோளுடன் மத்திய வங்கி நுண்பாக நிதிக் கடன்கள் மீதான வட்டியின் மீது உயர்ந்தபட்ச வீதமொன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

1.2 இப்பணிப்புரையானது, இப்பணிப்புரையின் திகதியிலிருந்து வழங்கப்பட்ட அனைத்து நுண்பாக நிதிக் கடன்களுக்கும் ஏற்புடையதானதாக இருக்கும்.

2. வட்டியின் உயர்ந்தபட்ச வீதம்

2.1 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்கள் மீது மற்றைய அனைத்து விதிப்புக்களும் உட்பட ஆண்டொன்றிற்கு 35 சதவீதத்தினை விஞ்சுகின்ற விதத்தில் விதிப்புக்கள் எதனையும் விதித்தலாகாது.

3. நுண்பாக நிதிக் கடன்களின் வரைவிலக்கணம்

3.1 நுண்பாக தொழில்முயற்சிகளை உருவாக்குகின்றமை மற்றும் முகாமைப்படுத்துகின்றமைக்கான கடன்கள் உட்பட, வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக தனிப்பட்டவர்களுக்கு/ குழும கடன் வழங்கல் முறைமையின் கீழ் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.

4. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்

4.1 சிறப்பியல்புவாய்ந்த நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகள், நுண்பாக நிதிக் கடன்களை, குறியீடு 3.1.4.9.0.0 - நிதியியல் தகவல் வலையமைப்பிலுள்ள நுண்பாக நிதிக் கடன்கள் (பின்நெட்) கூற்று என்பீஎல்-எம்எவ்-03-பீஎஸ் ஐந்தொகையின்கீழ் அறிக்கையிடுதல் வேண்டும்.

5. விளக்கங்கள்

5.1 “நுண்பாக தொழில்முயற்சிகள்” என்பது ரூ.15 மில்லியனுக்குக் குறைவான வருடாந்த மொத்தப் புரள்வினையும் 10 இற்கும் குறைவான ஊழியர்களையும் கொண்டுள்ள தயாரிப்பு மற்றும் பணிகள் துறையிலுள்ள தொழில்முயற்சிகள் எனப் பொருள்படும். (மூலம்: கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் வழங்கப்பட்ட சிறிய, நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு).

டபிள்யு. ரணவீர
**பதில் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**